# நீயாகிட வந்தேன்

தமிழ் நிவேதா



## ...ுரை

மிகச் சிறந்த நூல்
...வெளியிட்டு வரும்
... தனது நாவலும்
...ற தணியாத ஆசை
...அவர்கள் எங்களை
...ா. அவர்களது தணி
...ல், முயற்சி இவை

...இவரது 'நீயாகிட
...ாவலை உங்களுக்

..., சிறந்த எழுத்து
...ந்த்துக்கள், இவை
... கவரும். நல்ல
...ச்சியிலே படித்து
...ழுதுங்கள். எங்கள்

**...தயம் அருணன்**

# நீயாகிட வந்தேன்

## 1

பிரகாசம் மருத்துவமனை.

நியான் விளக்கின் வெளிச்சத்தில் கம்பீரமாய் நின்றது. அந்த பெரிய மருத்துவமனையின் நீண்ட காரிடாரில் இரவின் நிசப்தத்தில் ஒரே சீரான காலடி ஓசை மெல்லிய லயமாக ஒலித்தது. இரண்டாம் எண் அறையில் பாதி தூக்கத்தில் இருந்த பங்கஜத்தம்மாள் 'டாக்டர், சுதி இப்பதான் நைட் வார்டு ரவுண்ட்ஸ் வர்றாங்க போலிருக்கு' என யோசித்தபடி விட்ட தூக்கத்தை பிடிக்க முயற்சித்தாள். வராண்டாவின் கோடியில் வாய்க்குள் வெற்றிலையுடன் சேர்த்து ஊர் கதைகளையும் மென்று கொண்டிருந்த ஆயாக்கள் இருவரும் ''டாக்டர் வந்துட்டாங்க'' என்றபடி பிரிந்து போய் தம்

வேலையை கவனித்தனர். தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு பிழைக்க வைக்கப்பட்டிருந்த அந்த கல்லூரி மாணவனின் படுக்கையை இதமான தென்றல் கடந்தது. பாதி கண் மூடி தென்றலின் குளுமையை உணர்ந்து 'ஹாய் சுதி' என்றான் குரல் எழும்பாமல். ஜெனரல் வார்டில் நர்ஸ் வசுமதியிடமிருந்து டி.பி.க்கான மாத்திரையை வாங்கிக் கொண்டிருந்த கிழவர் "என்ன டாக்டரம்மா. இன்னிக்கு நீங்க வர தாமசம் போலிருக்கு!" என பிடுங்கியது போக மிச்சமிருந்த அத்தனை பற்களையும் காட்டினார்.

"எப்படியிருக்கீங்க தாத்தா? என்ன சாப்பிட்டீங்க இன்னிக்கு?" என்று சிரித்தபடி அருகில் அமர்ந்து அவரது அன்றைய டெம்ப்ரேச்சர், இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு குறிக்கப்பட்ட தாளை புரட்டினாள் சுதி.

அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்த ராமு கிழவருக்கு இரண்டு மகன்கள். இருவரும் வெளியூர்களில் இருக்கிறார்கள். படிப்பு முடித்து வேலை கிடைத்து திருமணமும் முடிந்தவுடன் அப்பாவிற்கான தேவை தீர்ந்து விட்டது. என்றாவது நினைவு வரும்போது பாடுபட்டு வளர்த்த தந்தைக்கு மணியார்டர் மூலம் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு தீர்ந்து விடும். சுதியை பார்க்கிற போதெல்லாம் டாக்டர் நோயாளி என்ற உறவைத் தாண்டி சொந்த பேத்தியை பார்க்கிற பாசம் ஏற்படும் கிழவருக்கு. தினமும் எவ்வளவு நேரமானாலும் சுதி ரவுண்ட்ஸ் வரும் வரை விழித்திருந்து ஓரிரு வார்த்தைகளாவது பேசாமல் தூங்க மாட்டார்.

"தாத்தா உங்க பி.பி. ஷுகர் நார்மல். சிஸ்டர் இப்ப ஒரு ஊசி போடுவாங்க. அடம்பிடிக்காம போட்டுட்டு தூங்குங்க. சீக்கிரம் குணமாகி வீட்டுக்குப் போயிடலாம் சரியா?"

சிரித்தபடியே அடுத்த நோயாளிகளை கவனிக்கப் போனாள் சுதி. அவளைப் பார்த்ததும் நோயையும் மீறி மலர்ந்த முகங்களை காண வழக்கம் போலவே ஆச்சரியமாக இருந்தது



வசுமதிக்கு. சுதி அந்த மருத்துவமனையின் சிறந்த டாக்டர்களுள் ஒருத்தி. பெயரைப் போலவே மிக இனிமையானவள். மாநிறம். சுருண்ட முடி. அகன்ற பெரிய கண்கள். உடன் பிறந்த சிரிப்பு பார்த்தவுடன் எல்லோரையும் வசீகரிக்கும். எளிதில் கோபப்படாத குணம். கோபத்தைகூட கடினமான சிரிப்பால் வெளிப்படுத்தும் விதம். என சுதியிடம் பழகியவர்கள் யாரும் எளிதில் கவரப்படுவார்கள். படிக்கும்போதே பள்ளித் தோழிகள் அடிக்கடி கிண்டல் செய்யும் விஷயம் சுதியின் சிரிப்பு தான். 'எல்லாக் குழந்தைகளும் அழுதுட்டே தான் பிறக்கும். நம்ம சுதி மட்டும் சிரிச்சிட்டே பிறந்து பிரசவம் பார்த்த டாக்டரையே பயத்தில் அழ வெச்சிருப்பா' என்பார்கள்.

பண்பான அப்பா, அதிர்ந்து பேசாத அம்மா, வீட்டிற்கு ஒரே பெண் என்பதால் விரைந்து நிறைவேற்றப்பட்ட விருப்பங்கள், அமைதியான வீடு, விருப்பமான வேலை இவைதான் தன் சிரிப்பின் ரகசியம் என்று தோன்றும் சுதிக்கு.

நோயாளிகளை பார்த்து முடித்து, தன் அறையில் அமர்ந்து குறிப்புகள் எழுதத் தொடங்கிய சுதி வசுமதியை கூப்பிட்டாள்.

"எஸ் டாக்டர்."

"வசுமதி நேற்று நான் கிளம்பும்போது ஒரு சின்ன பையன் சைக்கிளில் காலை விட்டுக் கொண்டதாக வந்தார்களே, அந்த பேஷண்டுக்கு தையல் போட்டார்களா? டாக்டர் சுகுமார் டியூட்டியில் இருந்தாரா? யார் அட்டெண்ட் செய்தார்கள்!"

"டாக்டர் நீங்க போனவுடனே அவங்களும் போய்ட்டாங்க."

"ஏன் டிரஸ்சிங் மட்டும் போதும்னு சொல்லிட்டாங்களா?"

"இல்ல டாக்டர் சீனியர் அந்த பையனுக்கு ப்ளட், யூரின், ஸ்கேன் டெஸ்ட் எல்லாம் எடுக்கச் சொன்னார். அவர்களிடம் பணம் இல்லை போலிருக்கு. போய்விட்டாங்க."

"சரி நீ போ வசுமதி" என்ற சுதி, 'அந்த பையனுக்கு தோல் லேசாய் பிய்ந்திருந்தது. இரண்டு தையல் போட்டால்

போதுமே. எதற்கு ஸ்கேன் எடுக்கச் சொல்லணும்.' என தனக்குள் பேசியபடி தலைமை டாக்டரின் அறைக்கதவை மெதுவாய் தட்டினாள். அந்த மருத்துவ மனையின் தலைமை மருத்துவர் சுகுமார் வீட்டிலிருந்து வந்திருந்த உணவை வேகமாய் காலி செய்து கொண்டிருந்தார். திரும்பி சுதியைப் பார்த்து "எஸ்" என்றார் வாயை நாப்கினால் துடைத்தபடி,

"ஸார் நேத்து நான் வீட்டிற்கு கிளம்பிப் போகும்போது வந்த ஒரு பேஷண்ட்டுக்கு காலில் தையல் போடச் சொல்லி குறிப்பு அனுப்பிவிட்டுக் கிளம்பினேன். அந்தப் பையனுக்கு எலும்பில் அடியோ, வேறு எங்கும் வலியோ, வீக்கமோ கூட இல்லை. ஆனா நீங்க ஸ்கேன் பண்ணச் சொன்னதாய்..." முடிக்கும் முன் சீறினார் சுகுமார்.

"சுதி நா உன்னோட சீனியர். என்னையே கேள்வி கேக்கிறியா? ட்ரீட்மெண்ட் எப்படி செய்யறதுன்னு எனக்கு சொல்லித் தரயா?"

"ஸார் நா எதுவும் தப்பா கேக்கலையே! நான் அட்டெண்ட் பண்ணிய ஒரு நோயாளியை பற்றிய விபரம் தெரிந்து கொள்வதில் எனக்கு இருக்கும் ஆர்வம் நியாயமானதில்லையா ஸார்?"

"ஓ.கே. உனக்கு விபரம் சொல்கிறேன் கேள். இந்த மருத்துவமனையில் வேலை பார்க்கும் மருத்துவர்கள், மற்ற ஊழியர்கள் அனைவருக்கும் நீ உட்பட நல்ல சம்பளம் தரப்படுகிறது. இந்த மருத்துவமனையை விரிவுப் படுத்த கட்டப்படும் கட்டிடங்கள், மருத்துவக் கருவிகள் அனைத்தும் லோனில்தான் வாங்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஊசி போட்டு விட்டு பத்து ரூபாயை வாங்கிக் கொண்டிருந்தால் மருத்துவ மனை நிர்வாகம் எப்படி செயல்படும்? கடனை எப்படி அடைக்க முடியும்?"

"பக்கா வியாபாரி மாதிரி பேசுகிறீர்களே ஸார்?"



"சரிம்மா நான் இலவசமா மருத்துவ சேவை செய்கிறேன். என் வீடு கட்ட இருபது லட்சம் லோன் வாங்கியிருக்கிறேன். அந்த லோனை அரசாங்கம் எனக்குத் தள்ளுபடி பண்ணுமா? உனக்கு கமிட்மெண்ஸ் எதுவும் கிடையாது. பொழுதுபோக சேவை செய்யலாம். சேவையைப் பற்றி பேசலாம். எங்களைப் போல மளிகை; குழந்தைகளின் படிப்பு, கரண்ட் பில், போன் பில், வேலையாள் போக்குவரத்து என தேவைகளே வாழ்க்கையாகி போனவர்களுக்கு சேவையைப் பற்றி நினைக்கக் கூட நேரமில்லை. போ, போய் வேலையைப் பார்" என்றபடி சுகுமார் எழுந்தார்.

திரும்பி வந்த சுதி ஐ.சி.யு.வில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நோயாளிக்கு சிகிச்சை அளித்தபோதும், வலியில் கத்திக் கொண்டிருந்த அப்பெண்டிஸ் நோயாளிக்கு மருந்து கொடுக்கும் போதும் மனசு சுகுமாரின் வார்த்தைகளையே சுற்றிச் சுற்றி வந்தது. அரசாங்க மருத்துவமனைகள் ஏழைகளின் தேவைகளை முழுதாய் தீர்க்க முடியாமலும், சுத்தமாய் பராமரிக்கப்படாமலும் . இருக்கிற பட்சத்தில் ஒவ்வொரு தனியார் மருத்துவமனைகளும் தன்னை நாடி வரும் ஒரு சில நோயாளிகளுக்காவது இலவசமாக சிகிச்சை செய்யலாம். நம்முடன் பயின்ற மருத்துவர்கள் முன்வந்தால் நாமே ஒரு இலவச மருத்துவ மனையை தொடங்கலாம். கண்டிப்பாய் தொடங்க வேண்டும். கோடிக்கணக்கானோர் பிறந்து மடியும் பூமியில் நான் வாழ்ந்ததற்கு எதையாவது விட்டுச் செல்ல வேண்டும். சுதியின் லட்சியம் வடிவம் பெறும் சமயத்தில் ஐ.சி.யு.விலிருந்த நர்ஸ் வேகமாக வந்தாள்.

"டாக்டர், அந்த ஹார்ட் பேஷண்ட் பல்ஸ் ரேட் குறைந்து கொண்டே வருகிறது."

முப்பத்தி எட்டு வயதே ஆகியிருந்த அவனுக்கு இதுதான் முதல் அட்டாக். இன்டர்காமில் கார்டியாலஜிஸ்ட்டை

அழைத்து ஐ.சி.யு.விற்கு வரச் சொல்லி தகவல் சொல்லிவிட்டு சுதி கடைசி நேர பிரயத்தனங்களில் இறங்கினாள். ஐந்தே நிமிடங்களில் அவள் முயற்சி தோல்வியடைய சத்தமின்றி அவன் உயிர் பிரிந்தது. அவனுடைய மனைவியும், நான்கு வயது குழந்தையும் வெளியே காத்திருந்தார்கள். சுதி உள்ளே வரும்போது, 'நீங்கதான் எப்படியாவது எங்க வீட்டுக்காரரை காப்பாத்தணும்' என அவன் மனைவி கையெடுத்துக் கும்பிட்டாள். இப்போது அவள் முகம் பார்த்துச் சொல்ல வேண்டும்.

உன் கணவன் இறந்துவிட்டான் என்று சொல்ல வேண்டும். அவள் உடைந்து போவதை பார்க்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை. ஒரு நோயாளி இறந்த தகவலை சட்டப்படி மருத்துவர்தான் தெரிவிக்க வேண்டும். சுதி தயங்கிக் கொண்டிருக்கும்போதே சுகுமார் வந்தார். "பார்மலிட்டீஸ் எல்லாம் முடிச்சிட்டீங்களா சுதி? அவங்க மனைவிகிட்ட கையெழுத்து வாங்கியாச்சில்ல?"

சுதி பதில் சொல்வதற்குள் அட்மினிஸ்டேட்டர் எட்வர்ட் உள்ளே வந்தான். கதவைத் திறந்ததும் கேட்ட கதறல் சப்தம் செய்தி தெரியும் என்றது.

"ஸார் அவங்ககிட்ட வண்டி எதுவும் இல்லையாம். நம்ம ஆம்புலன்ஸைதான் அனுப்பணும்" என்றான்.

"பில் செட்டில் பண்ணிட்டாங்களா எட்வர்ட்?"

"ஆச்சு ஸார்."

"அப்ப அனுப்பி வெச்சுடு. ரொம்ப சத்தம் போட்டு மத்த பேஷண்ட்டுக்கு தொல்லை கொடுக்கப் போறாங்க. சீக்கிரமா அனுப்பப் பாரு."

"ஆம்புலன்ஸ் டிரைவர் சாப்பிடப் போயிருக்கான். வந்ததும் போயிடுவாங்க. சுகுமார் திரும்பிப் போகவும், எட்வர்ட் வெளியே போய் 'ரொம்ப சத்தம் போடாதீங்க' என்று



அதட்டலாய் சொல்லிவிட்டுப் போனான். இறந்த உடலை மருத்துவமனை ஊழியர் பேக் பண்ணுவதைப் பார்த்துக் கொண்டிருந்த சுதிக்கு சோகம், கவலை என்ற வார்த்தைகளும் பொருள் ஒன்றில்லை என்று தோன்றியது.

வெளியே நிற்கும் பெண்ணுக்கு இருபத்தி ஐந்து வயதில் கணவனை இழந்த துக்கம். சுகுமாருக்கு மருத்துவமனைக்கு பில் கட்டியாகி விட்டதா என்ற கவலை, ஆம்புலன்ஸ் டிரைவருக்கு அவனது பசி முக்கியம். தன்னை பாதிக்கக் கூடியது எதுவோ அதுதான் துக்கம். அதுதான் கவலை. பக்கத்து வீட்டிற்குள் எந்தத் திருடன் நுழைந்தால் எனக்கென்ன? என் வீட்டு கதவைத் தட்டாதவரை எனக்கு கவலையில்லை என்ற போக்கு.

* * *

லானில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த ஹிண்டு பேப்
பரை மடித்து வைத்தார் விஸ்வநாதன். இருட்டத் தொடங்கி
யிருந்தது. அருகிலிருந்த மைதானத்தில் கிரிக்கெட் விளை
யாட்டு முடிந்து போய் பசங்கள் சலசலத்தபடி வீடு திரும்பிக்
கொண்டிருந்தனர். வாட்ச்மேனின் டியூட்டி முடிந்து போய்
இரவு பணிக்கு வரும் கூர்க்கா வந்திருந்தான். தோட்டத்து
மரங்களில் பறவைகளின் கிலாகிலா சத்தம் நின்று
போயிருந்தது. வீட்டிற்குள்ளே இருந்து மணிசத்தமும், சா
பிராணி வாசமும் வந்தது. சரஸ்வதி பூஜை செய்து கொண்
டிருக்கிறாள் போலும். ஸி.டி.யில் பாலாஜி பஞ்சரத்னமாலை
ஒலித்துக் கொண்டிருந்தது. கண் தானாக மூடியது விஸ்வ
நாதனுக்கு. 'குறை ஒன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா
என எம்.எஸ். உருகும்போது தானும் உருகி ஒன்றுமே இ
லாமல் கரைந்து போவது போலிருந்தது. கண்ணீர் தா
தாரையாக வழிந்தது.

சில நிமிடங்களில் பாட்டு முடிந்து கற்பூர ஹாரத்தி
மணம் காற்றை நிறைத்தது. தலைக்குப் பின்னால் கைக
கோர்த்து சாய்வாக அமர்ந்த விஸ்வநாதனுக்கு ஐம்ப
வயதிற்கு பிறகுதான் ஒரு மனிதன் வாழ்க்கையை முழு

யாக அனுபவிக்க முடியும் என்று தோன்றியது. காலையில் நிதானமாய் எழுந்து டிகிரி காபியை சொட்டு விடாமல் குடிக்க முடிகிறது. டி.வி.யின் அனைத்து சேனல்களையும் மாறி மாறிப் பார்த்து சீரியலில் அழுது கொண்டே இருக்கும் பெண்களைப் பார்த்துப் பரிதாபப் பட முடிகிறது. என்ன சமைக்கலாம் என தினம் யோசிக்கும மனைவியுடன் கூட சேர்ந்து மெனு தயாரிக்க முடிகிறது. கூடவே அவள் சொல்லும் பக்கத்து வீடு, எதிர் வீடு சமாச்சாரங்களை காது கொடுத்து கேட்க முடிகிறது. தோட்டக்காரனுடன் சேர்ந்து விதை விதைத்து, உரம் போட்டு செடி மொட்டு விட்டதும் பரவசமடைய முடிகிறது. மாலையில் பால்ய நண்பனுடன் சேர்ந்து பழைய கதைகள் பேசியபடி ஒரு வாக்கிங் போய் விட்டு வீடு வந்து இப்படி லானில் அமர்ந்து இசையில் கரைந்து போவதற்கு ஐம்பது வயதாவது ஆகியிருக்க வேண்டும். மூன்று சகோதரிகளுக்கு அண்ணனான தகப்பனில்லாத குடும்பத்தின் பொறுப்பை ஏற்று அவர்களுக்கு திருமணம் முடித்து அனுப்பும்போது விஸ்வநாதனுக்கு வயது முப்பத்தி நாலு. அதன் பிறகு சரஸ்வதியை மணந்து கொண்டாலும் புதிதாய் தொடங்கியிருந்த பேப்பர் தொழில் அவளுக்கும் முன்பே அவரை ஆக்ரமித்துக் கொண்டது. பாதி நாள் தட்டில் என்ன விழுந்தது என்று கூட தெரியாமல் சாப்பிட்டு விட்டு, பர்ஸ் எடுக்கக் கூட மறந்து போய் பஸ்சுக்கு ஓடுவார். ஒரே குழந்தையுடன் செலவிட நேரமின்றி அது தூங்கிக் கொண்டிருக்கும்போதே கிளம்பி, இரவு தூங்கிய பின்னரே திரும்பி வருவதுமாக பொருளாதார வேட்டையாடிக் கொண்டிருந்தார். வேட்டையில் ஜெயித்து கணிசமான பொருளுடன் வீட்டில் அமரும்போது தலை வெண்மையாகி விட்டிருந்தது. பேண்ட் வேஷ்டியாகி, பெண் தோழியாகி விட்டிருந்தாள்.

''என்னங்க.''

சரஸ்வதியின் குரலில் சற்றே நினைவு கலைந்தவராய் திரும்பிப் பார்த்தார். காபியுடன் சரஸ்வதி நின்று கொண்



டிருந்தாள். வாங்கி ஒரு வாய் பருகியவர் கேட்டார் ''சுதிக்கு இன்னிக்கும் நைட் டியூட்டியா சரஸ்வதி?''

''இல்லைங்க. இப்ப வீட்லதான் இருக்கா. அவ ப்ரண்ட் மாலதி வீட்டுக்கு போய்ட்டு லைப்ரரிக்கு போய் புக்ஸ் எடுத்துட்டு இப்பதான் வந்தா. கூப்பிடவா?''

''இரு. நானே வரேன்'' மெல்ல எழுந்தார்.

உள்ளே சோபாவில் காலை மடித்து அமர்ந்து டி.வி.யில் மூழ்கியிருந்த சுதி திரும்பிப் பார்த்து ''வாங்கப்பா'' என்றாள்.

''என்ன படம்மா?''

''டாவின்ஸி கோட்.''

''படம் எப்படிம்மா இருக்கு?''

''பரபரப்பா இருக்கு. ஏம்ப்பா இந்த படத்துக்கு எதுக்கு இத்தனை காண்ட்ரவர்ஸி? இந்து சமயத்தில் கடவுளுக்கு மனைவி குழந்தைகள் உண்டு. முஸ்லீம் மதத்திலும் முகம்மது நபி குடும்பஸ்தர்தான். புத்தர் கூட குடும்ப வாழ்க்கையை வாழ்ந்துவிட்டுத் தானே துறவியானார். அதற்காக அந்த மதங்கள் குறைவாக மதிப்பிடப் படுகின்றனவா என்ன? மனைவியோடு இருக்கும் கடவுளை ஏற்றுக் கொள்வதுதானே வழக்கத்தில் இருக்கிறது. ஒருவேளை கிறிஸ்துவுக்கு மனைவி இருந்திருந்தால் அதில் என்ன தவறு?

'மதம்ங்கறது எத்தனையோ நூற்றாண்டுகளா இருந்துட்டு வர்ற விஷயம். நாம அதைப் பற்றி விமர்சனம் பண்றது சரியா இருக்காது சுதி. இந்தப் படம் மனிதர்களின் சுயநலம் பற்றிய படம்னு வேணா எடுத்துக்கலாம். மனிதர்கள் சுயநலத்தால் யேசுவை கொன்றார்கள். மத குருமார்களின் சுயநலத்தால் அவர் மனைவியை மறைத்தார்கள் என்று சொல்கிற படம். இதில் வரும் சம்பவங்கள் பெரும்பாலானவர்கள் எதிர்க்கிற மாதிரி உண்மையில்லாமல் இருக்கலாம். ஆனால் மனிதன் பிறந்ததிலிருந்து சுயநலமும் பிறந்தது. அது மட்டும் உண்மை.''

"நீங்க சொல்றது ஹன்ட்ரட் பர்ஸன்ட் நிஜம்ப்பா. நேற்று மாலை நான் வீட்டுக்கு கிளம்பும் சமயம் ஒரு சின்ன பையனை அழைத்து வந்தார்கள். இரவு சம்பவத்தை விவரித்தாள் சுதி. டாக்டர் சுகுமார் சொன்னதை என்னால தாங்கிக்கவே முடிய லப்பா. கத்தி கைல இருக்கறதால கசாப்பு கடைக்காரனும் டாக்டரும் ஒண்ணாயிட முடியுமாப்பா? சுகுமார் மாதிரி ஆளுங்க கறிவெட்ட போனா காசு கம்மிங்கறதால படிக்க வந்தவங்க. ஒரு உயிரை உருவாக்க மனிதனால் முடியாது. ஆனால் காப்பாற்ற மருத்துவரால் முடியும். அதனால் ஒவ் வொரு மருத்துவரும் கடவுளின் அவதாரம் இல்லையா? காசுக்காக கடவுளே தப்பு செய்யலாமா?" பொருமும் மகளை புன்னகையுடன் பார்த்தார் விஸ்வநாதன்.

"அவரைச் சொல்லி தப்பில்லை சுதி. பெரும்பாலான மருத்துவமனைகளில் நடக்கிற சம்பவம்தான் இது. தப்பு எங்கிருந்து தொடங்குதுன்னு யோசிச்சியா சுதி? ஒரு டாக்டர் தான் படிக்க செலவு செய்த பெரும் தொகையை நோயாளி களிடமிருந்து வசூல் பண்ண விழைகிறார். ஒரு மருத்துவ கல்லூரி உரிமையாளர் கல்லூரிக்கு அனுமதி வாங்க கட்டிடம் கட்ட செலவு செய்த பணத்தை மாணவர்களிடம் சம்பாதிக்க முயற்சி செய்கிறார். நம் நாட்டில் ஒரு மாணவன் கல்லூரியில் என்ன பாடத்தை எடுத்து படிக்க வேண்டும் என்பதை அவனது அறிவோ, ஆர்வமோ தீர்மானிப்பதில்லை. குடும்ப பொருளாதாரம்தான் தீர்மானிக்கிறது. டாக்டருக்கும், வக் கீலுக்கும், டீச்சருக்கும் ஒரே மாதிரி சம்பளம் அல்லது வருமானம் வந்தால் படிப்பு இத்தனை போட்டியானதாய் இருக்காது. கவுன்சிலிங்கில் இத்தனை கூட்டம் நிற்காது."

அப்பா சொன்னதின் உண்மை மனதைத் தொட ஒரு நிமிடம் மௌனமானாள் சுதி.

"காலையில் மாலதி வீட்டுக்குப் போயிருந்த போலி ருக்கே?" என்றார் விஸ்வநாதன்.



"ஆமாப்பா. மாலதி ஒரு விஷயம் சொன்னா. அவங்க சித்தப்பா ஆதரவற்ற முதியோர்களுக்காக ஒரு காப்பகம் நடத்திட்டு வர்றார் தெரியுமாப்பா?"

"தெரியுமே. அவர் பெயர் கோபால். இந்தப் பணியில் முழு மையா கவனம் செலுத்துவதற்காகவே கல்யாணம் கூட பண்ணிக்கலைன்னு சொல்வாங்க."

"அவரேதாம்ப்பா. அவருடைய சாந்தி இல்லத்தில் இருக்கும் முதியவர்களுக்கு மருத்துவம் பார்க்க அவர்களுக்கு ஒரு டாக்டர் வேண்டும். முழுக்க இலவசமாகவே செயல் படும் நிறுவனமாய் இருப்பதால் சம்பளம் அதிகமாய் தர முடியாது. சேவை மனப்பான்மை உள்ளவர்கள் செய்யலாம் என்று மாலதி பேச்சுவாக்கில் சொன்னாள். அதனால நான் என் வேலை நேரம் போக முடிந்த போது அங்கு வேலை செய்ய லாம்னு இருக்கேன். காலேஜ்ல எங்க செட்ல கிரின்னு ஒருத் தன் இருப்பானே. உயரமா, கண்ணாடி போட்டுகிட்டு. அவன் கூட அங்க ப்ரீ சர்வீஸ் செய்யறான்."

"அட. அந்த பையனா! அவனோட அண்ணன் கல்யாணத் துக்கு நீயும் நானும் ஹைதராபாத் போனமில்ல! காலேஜ் சேர்ந்த புதுசுல உங்க லெக்சரரையே சைட் அடிச்சி மாட் டினவன்தானே!"

கடகடவெனச் சிரித்தாள். சுதி "அநியாயத்துக்கு ஞாபக சக்திப்பா உங்களுக்கு."

"மறக்க முடியுமாம்மா? எக்ஸாம் டைம்ல கம்பைன் ஸ்டடி பண்றேன், நியூ இயர் பார்ட்டி கொடுக்கறேன்னு உன் பிரண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து வீட்டையே ரெண்டு பண்ணு வாங்களே! வேலை கிடைத்து ஆளுக்கு ஒரு பக்கமாய் போனதும் இப்ப சரியா பார்க்கக் கூட முடியல. கண்டிப்பா ஒரு நாளைக்கு கிரியை கூட்டிட்டு வா."

"சரிப்பா."

"நீ சாந்தி இல்லம் போறப்ப, நான் வீட்ல இருந்தா ஒரு வார்த்தை சொல்லிட்டு போ. நானும் வரேன். எதோ என்னால் முடிந்த அங்கிருப்பவர்களுக்கு தேவைப்படும். சின்ன சின்ன உதவிகள் செய்யலாமில்லையா?"

"ஓ.கே. டன்."

"சாப்பிட வரலியா ரெண்டு பேரும்?" என்று சரஸ்வதி வந்ததும் எழுந்தார்கள்.

"இன்னிக்கும் இட்லியாம்மா?" என்றாள், ஹாட்பேக்கை திறந்த சுதி.

விஸ்வநாதனின் தட்டில் இரண்டு இட்லிகள் வைத்து சட்னி சாம்பார் ஊற்றிய சரஸ்வதி "வேற என்னடீ செய்யறது? சப்பாத்தி செஞ்சால் இன்னிக்கும் சப்பாத்தியாங்கிறது. பொங்கல் செய்யறபோது நெய் வேண்டாம்ங்கிறது. பூரி கிழங்கு செய்தால் ஐயோ, எண்ணெய் ஆகாது. இடியாப்பம் பிடிக்காது. உப்புமாவை பார்க்கவே ஆகாது, வேறு என்னதான் செய்வது?" என படபடத்தாள்.

"நான், பன்னீர் பட்டர் மசாலா, நூடுல்ஸ், பாலக் பனீர், மலாய் கோப்தா, ப்ரைடு ரைஸ் இன்னும் எத்தனை ஐட்டம்ஸ் இருக்கு தெரியுமா சாப்பாட்டில்? சட்னி சாம்பாரை தவிர எதுவும் தெரியாது உனக்கு. பாவம் உங்க மேலயும் தப்பில்லம்மா. அப்பா கொஞ்சம் மார்டனான பொண்ணா பாத்து கல்யாணம் பண்ணியிருக்கலாம்."

சிரிப்பில் புரை ஏறியது விஸ்வநாதனுக்கு. "எனக்கு என் பெண்ணோட விருப்பம்தான் முக்கியம். உனக்கும் விதம் விதமா சமைச்சி போட இப்பவே ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க நான் ரெடி. நீ சொல்லுமா?"

"ஆமா பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடினானாம். பொண்ணுக்கு காலா காலத்தில் கல்யாணம் பண்றதை விட்டுட்டு கிழவனுக்கு கல்யாண ஆசை வந்திடிச்சா?" சரஸ்வதி நொடித்தாள்.



"கவலைப்படாதீங்க மிஸஸ் விஸ்வநாதன். நான் எதுக்கு இருக்கேனாம்? எங்கப்பா உன்னைக் கைவிட மாட்டார். எங்கம்மாவுக்கு யாராவது துரோகம் பண்ண முடியுமா?" என்ற சுதி சிரித்தபடி அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டு, "குட் நைட்" சொல்லி மேலே போனாள்.

சுதியின் தலை மறைந்ததும் விஸ்வநாதனை பிடித்துக் கொண்டாள் சரஸ்வதி. "ஏங்க நீங்க செய்யறது உங்களுக்கே நல்லா இருக்கா?"

"எது சரஸ்வதி கல்யாண விஷயமா? கவலைப்படாதேம்மா. எத்தனை பேர் வந்தாலும் நீதான் முதல். சரியா?"

"சே! நீங்களும், உங்க கிண்டலும் சகிக்கலை. இந்த சுதி ஆஸ்பத்திரியில நைட் டியூட்டி, பகல் டியூட்டின்னு பாத்துட்டு வரும்போதே களைச்சி போய் வருவா. ஒரே பொண்ணு. எதுக்கு இப்படி கஷ்டப்படணும் கேட்டா அவ விருப்பம். லட்சியம்னு சொல்லி என்னோட வாயை அடைச்சிங்க.

அவ வயசுதானே ஆகுது எங்கக்கா பெண் நந்தினிக்கு போய்ப் பாருங்க. எப்பவும் விதவிதமா டிரஸ் பண்ணிக்கறா. அவங்கம்மா செஞ்சு வெச்சிருக்கிற நகை பத்தாதுன்னு தினமும் எதையாவது வாங்கித் தரச் சொல்லி கேப்பா. பரத நாட்டியம் கத்துக்கறா. கர்நாடக சங்கீதம் அருமையா பாடறா. விதவிதமா சமைக்கிறா. துள்ளலும் துடிப்புமா சிட்டுக்குருவி மாதிரி வீட்டையே எப்படி சுத்தி வரா தெரியுமா? நம் பொண்ணு எப்படியிருக்கா பாருங்களேன். காட்டன் சுடிதார். கடுகு சைசில தோடு, ஆஸ்பத்திரி விட்டா லைப்ரரி. வீட்டிலிருந்தாலும் புத்தகம் அல்லது கம்ப்யூட்டர் கூடத்தான் இருப்பா. ஒரு நாள் கிழமைன்னா விளக்கேத்தி ஒரு சுலோகம் சொல்லக் கூடத் தெரியாது. தண்ணி குடிக்கக் கூட சமையல் கட்டுக்கு வர மாட்டா. இப்ப இலவச சேவை செய்ய போறேங்கறா. நீங்களும் கூட போறேங்கிறீங்க. இல்லாதவங்களுக்கு செய்யறது தப்புன்னு சொல்லல. ஆனா எனக்கும் உங்க

ரெண்டு பேரையும் விட்டா யார் இருக்கா?'' கலங்கிய கண்களை முந்தானையில் துடைத்துக் கொண்டாள் சரஸ்வதி.

''என்ன சரஸ்வதி, என்ன வேணும் உனக்கு? இப்ப எதுக்கு நீ இப்படி கலங்கிப் போற?'' விஸ்வநாதன் பதறிப் போனார்.

''எனக்கு என்னங்க வேணும்? எல்லோரையும் போல என் பொண்ணுக்கும் காலா காலத்துல கல்யாணம் நடந்து குடும்பம் தழைக்கணும். நீங்கதான் நான் சொல்றதை காதுலயே போட்டுக்க மாட்டேங்கிறீங்க?''

''அவ பதிலே சொல்ல மாட்டேங்கிறாளே சரஸ்வதி?''

''அவ சொல்றது இருக்கட்டும். நீங்களே அவ கல்யாணம் பத்தி நினைக்க மாட்டேங்கிறீங்க.''

டைனிங் டேபிள் மீது வைத்திருந்த தன் செல்போனை எடுப்பதற்காக கீழே வந்த சுதி, சேரில் அமர்ந்து அன்றைய மெஸேஜ்களை பார்க்கத் தொடங்கினாள். ஹாலில் விஸ்வ நாதன் பேசுவது தெளிவாய் காதில் விழுந்தது.

''நானா சுதி கல்யாணத்தை பத்தி நினைக்கறதில்லை சரஸ்வதி? இந்த ரெண்டு வருஷமா எனக்கு அதைத் தவிர வேறு நினைவே இல்லை. எந்தக் கல்யாணத்துக்குப் போனாலும் சரி மனக்கண்ணில் சுதி கல்யாணத்தைப் பற்றி கற்பனை செய்யாமல் இருந்ததே இல்லை. நமக்கும் ஒரே பொண்ணோட போச்சு. சுதிக்காவது இரண்டு மூன்று குழந்தைகள் பிறக்கணும். அதுங்க யூரின் போய் என் வேஷ்டி நனையணும். ராத்திரி நெஞ்சு மேல படுக்க வெச்சிகிட்டு ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தானாம்னு கதை சொல்லணும். தோட்டத்துப் பூவையெல்லாம் அதுங்க பிச்சிப் போடும்போது வேண்டான்டா செல்லம்னு கெஞ்சணும். வீடு பூரா ஓடி கையில் பட்டதை அதுங்க தட்டி விடும்போது விழுந்துடா தீங்கடான்னு கூடவே ஓடி மூச்சு வாங்கணும். சுதி வளரும்



போது நான் நழுவ விட்ட பிள்ளை சுகத்தை எல்லாம் பேரக் குழந்தைகள் மூலம்தான் நிறைவேத்திக்கணும். தினமும் கடவுளிடம் இதைத்தான் வேண்டிக்கிறேன்.''

அதிசயமாய் மோவாயில் விரலை வைத்தாள் சரஸ்வதி. ''இத்தனை ஆசை வைத்திருப்பவர் பெண்ணை இரண்டு அதட்டல் போட்டு வழிக்குக் கொண்டு வர வேண்டியது தானே!''

''அப்படி அதட்டக் கூடிய பெண்ணில்ல, என் பெண். சராசரி பெண் இல்லை அவள். உன் அக்கா பெண் நந்தி னியை சொன்னாயே, அவளைப் போல பிறந்ததிலிருந்து, சமைப்பதற்காகவும், திருமணம் செய்யவும், பிள்ளை பெறுவ தற்கும் மட்டுமே கத்து கொடுத்து வளர்க்கப்பட்டவள் அல்ல. நீயே யோசித்துப் பார் சரஸ்வதி. வீட்டில் எந்த விஷயத் தையாவது அவளிடம் கலந்து பேசாமல் நாம் செய்த துண்டா? சமயங்களில் என்னையே அதட்டி கூட சில விஷ யங்களை சுமுகமாக கையாண்டிருக்கிறாள். அவளுடைய புரோகிரஸ் ரிப்போர்ட்டிலும், அப்ளிகேஷன் பாரத்திலும் கையெழுத்து போட்டது மட்டும்தான் என் வேலை. படிப் பையும் கல்லூரியையும் அவள் தானே தேர்ந்தெடுத்தாள். அவளுடைய நண்பர்கள், வேலை, உடைகள், பேச்சு, நடவடிக்கை எதிலாவது குறையையோ, கண்ணிய குறை வையோ கண்டிருக்கிறாயா நீ? தெளிவான நோக்கமும், நோக் கத்தை அடைய நேர்மையான செயல்பாடுகளும் கொண்ட தீர்க்கமான பெண். அவளுடைய மற்ற விஷயங்கள் போலவே திருமண விஷயத்திலும் அவள் முடிவிற்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.'' விஸ்வநாதனின் ஆணித் தரமான பேச்சு சுதியை சற்றே அசைத்துப் பார்த்தது. என் மேல் எவ்வளவு மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். இதுவரை நான் எடுக்கும் முடிவுகளை செயல்படுத்த உதவும் கருவியாகத்தான் அம்மாவும் அப்பாவும் இருந்திருக்கிறார்கள்.

ஆனால் மகளின் திருமண விஷயத்தில் பெற்றோரை மிஞ்சிய உரிமை யாருக்கும் கிடையாது. அம்மா சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. எனக்காகவே வாழும் அவர்களுக்கு நான் செய்யும் நன்றிக் கடன் திருமண விஷயத்தை முழுக்க அவர்கள் பொறுப்பில் விடுவதாகத் தான் இருக்கும். ஆனால் எனது லட்சியம்! மருத்துவத் துறையில் நான் செய்ய நினைக்கும் சாதனைகள்! யோசித்தபடியே சத்தமின்றி தன் அறைக்குச் சென்றாள் சுதி. என்னதான் அப்பாவுக்கு அம்மாவிற்காக என்றாலும் இந்த மனம் திருமணத்திற்கு தயாரில்லை என்கிறதே. ஒருவேளை தனியாய் சுதந்திரமாய் வளர்ந்ததினால் இன்னொருவனுக்கு வாழ்வில் இடம் தர கடினமாய் இருக்கிறதா நமக்கு? புரண்டு படுத்தாள் சுதி. அந்த இலவச மருத்துவமனை மட்டும் செயல்பட ஆரம்பித்தால் போதும் அப்பாவுக்கு 'எஸ்' சொல்லி சந்தோஷப் படுத்தலாம். மெதுவாய் தூங்கிப் போனாள்.

## 2

டி.வி.யில் தலைப்பு செய்திகள் ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளை கோட்டை அயர்ன் பண்ணியபடியே மணியை பார்த்தான் ரவி. எட்டு நாற்பது. கீழே மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு நடந்து போய் பஸ்ஸை பிடித்தால் ஒன்பது நாற்பதற்குள் மருத்துவமனைக்குள் போய்விடலாம். ஸ்டெதஸ்கோப்பை மடித்து கோட்டில் வைத்துவிட்டு, பர்ஸை பாண்ட் பாக்கெட்டில் சொருகினான். அலமாரியை திறந்தான். பெரும்பான்மை இடங்களை புத்தகங்களை ஆக்ரமித்திருக்க, சலவை செய்யப்பட்ட துணிகள் ஹேங்கர்களில் அணிவகுத்தன. ஸ்டிக்கர்கள், பைல்கள், பேனா, குண்டூசி வரை அதனதன் இடத்தில் இருக்க, கொரியர் பண்ண வேண்டிய கவரை எடுத்துக் கொண்டு கதவை பூட்டினான். கோடம்பாக்கம் மேம்பாலத்திற்கு கீழேயுள்ள சிறிய தெருக்களில் ஒன்றில் ரவியும் அவனுடன் இன்னொரு நபரும் அந்த சிறிய அறையை பகிர்ந்து கொண்டிருந்தனர்.



பிரகாசம் மருத்துவமனையின் நரம்பியல் நிபுணனான ரவிக்கு தாயுடன் ஒரு தங்கையும் தம்பியும் ஊரில் இருந்தனர். அவன் படிக்கும்போது அப்பா உயிருடன் இருந்தார். தன் ஆசைப்படி மகனை டாக்டராக்கி, அவனது ஆசைப்படி நரம்பியல் நிபுணனாகவும் ஆக்கிவிட்ட திருப்தியில் போய் சேர்ந்து விட்டார். இப்போது அப்பாவின் ஸ்தானத்திற்கு வந்துவிட்ட ரவி, தங்கையின் திருமண பொறுப்பையும், தம்பியின் படிப்பையும் இயல்பாய் ஏற்றுக் கொண்டான். அவன் வேலைக்கு ஏற்ற நிதானமும், கண்ணியமும், நடத்தையில் ஒரு ஒழுங்கும் தெரியும். ஒவ்வொரு பைசாவையும் யோசித்து செலவழிப்பவன். படுக்கையின் சுருக்கங்களை சரி செய்த ரவி, ஷூவுக்குள் காலை நுழைத்தபடி 'குமார் வரேண்டா' என குரல் கொடுத்தான்.

பதிலே இல்லை. கட்டிலை சுற்றிலும் முந்தின நாள் டீ குடித்த டம்ளர்கள், சாப்பிட்ட தட்டுகள் காய்ந்து கிடக்க, செய்தித்தாள்கள் கும்பலாய் ஒரு பக்கம் குவிந்திருந்தது. பேன் காற்றில் பறந்த சிகரெட் சாம்பல்களுக்கு நடுவே அலங்கோலமாய் படுத்துக் கிடந்தான் குமார். வழக்கம் போல அவனுடன் அறையை பகிர்ந்து கொள்ள நேரிட்டதற்கான வருத்தத்துடனேயே கிளம்பிப் போனான் ரவி.

* * *

மருத்துவமனையின் உள்ளே நுழையும் போதே வெளி நோயாளிகளின் நீண்ட வரிசை ரவியை வரவேற்றது. மதியம் செய்ய வேண்டிய ஒரு அறுவை சிகிச்சைக்கு நோயாளியை தயார் செய்ய வேண்டியிருந்தது. உள் நோயாளிகள் ரவுண்ட்ஸ் முடிந்ததும் அவுட் பேஷண்ட்ஸை கவனிக்கும் அறையில் அமர்ந்தான். கடைசி நோயாளி வரை பார்த்து விட்டு எழுந்திருக்கும்போது மணி நான்கு. ஆபரேஷனுக்கு நேரமாகி விட்டது. வேகமாக மாடியேறி வந்தபோது தியேட்டர் வாசலில் சுகுமார் கோபத்துடன் காத்திருந்தார்.

''மணி என்ன தெரியுமா மிஸ்டர் ரவி?''

"நான்கு ஸார்."

"மூன்று ஐம்பதுக்கு ஆபரேஷன் பிக்ஸ் பண்ணியிருந் தோம். யூனிட் முழுக்க உங்களுக்காக காத்திருக்கணுமா ரவி?"

"ஸாரி ஸார். ஓ.பி. முடிய லேட்டாயிடுச்சி."

"காரணம் எதுவா வேணும்னாலும் இருக்கலாம். ஒரு டாக்டருக்கும் நேரம் என்பது எவ்வளவு முக்கியம் என்று கூடத் தெரியாமலா படிச்சி முடிச்சிட்டு வந்தீங்க."

"அகெய்ன் ஸாரி ஸார்."

"எல்லாத்துக்கும் ஒரு ஸாரி. மனசில உணராம சொல் லப்படுகிற வார்த்தைகளுக்கு பொருளே இல்லை தெரி யுமா?" ஜூனியர் டாக்டர்களும் நர்சுகளும் சுவாரஸ்யமாய் வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தனர். "உங்களுக்கு பொறுப் புணர்வு இல்லை. செய்கிற வேலையில் அக்கறை இல்லை. சீனியர்களிடம் மரியாதை இல்லை" என பேசிப் பேசி பத்து நிமிட தாமதத்திற்கு மேலும் பதினைந்து நிமிடங்களை வீணடித்த சுகுமாரை எரிச்சலுடன் மனதிற்குள் கறுவினான் ரவி. ஒரு வழியாக ஆபரேஷன் முடிந்து, காத்திருந்த உற வினர்களிடம் 'இன்னும் இருபத்தி நாலு மணி நேரம் கழித்து தான் எதையும் சொல்ல முடியும்' என்ற வழக்கமான நடை முறையை சொல்லிவிட்டு கேண்டீனில் போய் அமர்ந்த போது மணி ஆறு. மதியம் சாப்பிடாமலே கழிந்திருக்கிறது என்பது அப்போதுதான் உறைத்தது.

மருத்துவர்களுக்கு மட்டும் ஒரு நாள் என்பது மணிகளால் கணக்கிடப்படாமல் நிமிடங்களாலேயே கழிகிறது போலும். தோசைக்கு சொல்லிவிட்டு வந்து கார்னர் டேபிளில் அமர்ந்து ஒரு டம்ளர் நீரை குடித்தபோது ஆயாசமாக இருந்தது. சில நிமிடங்களில் தோசை சட்டினி, சாம்பார் கிண்ணங்களுடன் வந்தது. சாப்பிடப் போகும்போது தட்டை இழுத்துக் கொண் டார்கள் யாரோ.



எரிச்சலுடன் நிமிர்ந்து பார்த்தான். "நீ வேற தோசை வாங் கிக்கோ" என்றபடி சுதி எதிரே அமர்ந்து சாப்பிடத் தொடங் கினாள். சிரித்தபடி மற்றொரு தோசைக்கு சொல்லி விட்டு வந்தான்.

"என்ன ரவி, சீனியர் இன்னிக்கு உங்கிட்ட ரொம்ப கொஞ்சிட்டு இருந்தார் போலிருக்கே!"

"ஏன் சொல்ல மாட்ட? நீ மாட்டியிருந்தா தெரிஞ்சிருக்கும். மாட்டினது நானில்ல? ஏன் சுதி, பத்து நிமிஷம் லேட்டா வந்ததுக்கு கத்தி கத்தியே பதினைஞ்சு நிமிஷத்தை வேஸ்ட் பண்ற ஆளை நீ பாத்திருக்கயா? நான் என்ன ஜாலியா ஊர் சுத்திட்டா வரேன்? காத்திருக்கிற பேஷண்ட் அத்தனை பேரை யும் பாத்துட்டு வர பத்து நிமிஷம் கூட குறைய ஆகத்தானே செய்யும்! ஜூனியர்ஸ் எல்லாம் என்னையே பாக்க ஆரம் பிச்சிட்டாங்க தெரியுமா? ரொம்ப அவமானமாப் போச்சு சுதி. ஏன்தான் இவர்கிட்ட வந்து மாட்டினமோன்னு ஆயிடிச்சி" வெறுப்புடன் கர்ச்சீப்பால் முகத்தை துடைத்தான் ரவி.

"சீனியர் உன்னை மட்டுமல்ல, எல்லாரையும்தான் கத்து கிறார். நேத்துகூட நான் அவர்கிட்ட வாங்கிக் கட்டிக்கிட்டேன். உனக்கும் சீனியருக்கும் தனிப்பட்ட விரோதமா என்ன? உன்னை மட்டும் கத்துவதற்கு? நீ சீனியர் லெவலுக்கு வரும் வரை கிடைக்கிற எல்லா அனுபவங்களும் உனக்கு பாடம்தான் ரவி. இன்னிக்கு நீ சீனியர்கிட்டயிருந்து கத்துக் கிட்ட லெசன் என்ன! நேரம் தவறாமை. கரெக்டா?"

"ஏதேது நீ கூட சீனியருக்கு ரொம்ப சப்போர்ட் பண்ண ஆரம்பிச்சிட்ட?"

"நான் ஏன் பண்ண மாட்டேன்? அவருடைய பண ஆசைதான் எனக்கு பிடிக்காதே தவிர, அவருடைய திறமை யிலும் சின்சியாரிட்டியிலும் பெரிய மரியாதையே உண்டு. பலவீனமில்லாத மனிதர்கள் யார்? சீனியரின் பலவீனம் பணம்.

''பணத்தை மனிதனின் பலவீனம் என்று சொல்கிற முதல் ஆள் நீதான். மனிதனின் பெரிய பலமே பணம் என்றுதான் சொல்லுவார்கள்.

''நம்மைத் தேடி ஒரு பொருள் வருகிறவரை நமக்கு பலம் தான். எப்போது நாம் அதைத் தேடி ஓட ஆரம்பிக்கிறோமோ அது நமக்கு பலவீனம்.

''உனக்கு சீனியரே பரவாயில்லம்மா, ஆளை விடு'' சிரித்தபடி காபிக்கு ஆர்டர் கொடுத்தான் ரவி.

மருத்துவக் கல்லூரியில் சுதிக்கு இரண்டு வருடம் சீனியர் ரவி. சாதாரணமாய் பேசத் தொடங்கியதில் ஏற்பட்ட நட்பு பாலமாய் நீண்டு இரு குடும்பத்துப் பெரியவர்களையும் இணைத்து, குடும்ப நண்பர்களாக்கியது. சுகமோ துக்கமோ இரு குடும்பங்களும் ஒருவருக்கொருவர் துணை நிற்கும் அளவு நெருக்கமாயினர். ரவியின் அப்பா இறந்த போது விஸ்வநாதனும், சரஸ்வதியும் பத்து நாட்கள் ரவியின் ஊரில் வந்து தங்கி இழப்பை பெரிய அளவில் உணராமல் அரணாய் நின்று காத்தனர். ரவி அம்மாவைப் பார்க்க ஊருக்குப் போய் விட்டு வரும் போதெல்லாம் முறுக்கு, சீடை, அதிரசம் என்று பெரிய தூக்குடன் வீட்டிற்கு வருவான். சுதிக்கு அம்மா அனுப்பினாங்க என்றபடி. ரவியின் அம்மா பொதுவாய் அதிகம் பேசாதவள். அன்பை தெரிவிக்க வார்த்தைகளோ, செய்கைகளோ இல்லாமல் அதிரசத்திலும் முறுக்கிலும் காட்ட சிலருக்கு மட்டுமே முடிகிறது என்று தோன்றும் சுதிக்கு. தங்கைக்கு திருமணம் முடித்து, தம்பி வேலைக்குப் போன பிறகு ரவி சற்று மூச்சு விட இன்னும் சில வருடங் களாவது ஆகும்.

''சுதி, என்ன பெரிய யோசனையில இருக்க?''

''உன்னை பத்திதான் யோசிச்சிட்டு இருந்தேன். நீ செட்டிலாக இன்னும் மூணு, நாலு வருடமாவது ஆகாது?''



''அதற்கு மேலேயே ஆனாலும் ஆகும். நான் என்ன உன்னை மாதிரி பிறக்கும் போதே சில்வர் ஸ்பூனோட பிறந்தவனா?''

''நல்லவேளை பிறந்திருந்தா, அந்த ஸ்பூனையே வித்து காசாக்கியிருப்ப!''

இருவரும் சிரித்து முடித்ததும் ரவி கேட்டான். ''உன்னை பாத்து இரண்டு வாரம் இருக்கும் இல்ல சுதி?''

''ஆமாடா, இரண்டு பேருக்கும் டியூட்டி மாறி மாறி வந்தது. ஸண்டே நீ வீட்டிற்கு வந்தபோது நான் சாந்தி இல்லம் போயிருந்தேன் ரவி. என் ப்ரண்ட் மாலதி சொன்னான்னுதான் போனேன். ஆனா அங்கிருப்பவர்களை பார்க்க ரொம்ப பாவமாய் இருக்கு தெரியுமா? மாலதியோட சித்தப்பா மிகுந்த போராட்டத்துக்கு நடுவில் இந்த இல்லத்தை நடத்திட்டு வர்றார். அதுக்காக கல்யாணமே கூட பண்ணிக்கல. அதுக் கும் ஒரு மனசு வேணுமில்லையா ரவி?''

''உண்மைதான் சுதி. எல்லோருமே பிறக்கிறோம். தியாகிகள் மட்டும்தான் வாழ்கிறார்கள்'' என்றான் ரவி.

''அப்புறம் பொங்கலுக்கு ஊருக்குப் போகப் போறியா? உன் தங்கைக்கு அந்த திருச்சி வரன் என்னவாயிற்று?''

''பரஸ்பரம் பிடிச்சிருக்கு சுதி. லௌகீக விஷயங்களில் தயங்கி நிற்கிறது. என் தங்கை எவ்வளவு நல்லா படிப்பா? யுனிவர்சிடி ரேங்க் ஹோல்டர். படிப்பு முடியும் வரை ஸ்கா லர்சிப்லயே படிச்சவ. கல்லூரி பேராசிரியை. அவளைக் கூட பொருளையும் பணத்தை பார்த்துதானே எடை போடறாங்க? அதுதான் ஆச்சரியமா இருக்கு.''

''இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு ரவி? உன் தங்கை அறிவாளிதான். புத்திசாலிதான். ஒத்துக்கறேன். அவ பேரா சிரியை ஆனது எதற்காக? மிகச் சிறந்த மாணவர்களை உரு வாக்கி, அவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக்கி, உலக

அரங்கில் இந்தியாவின் புகழை உயர்த்துவதற்கா? பணம் சம்பாதிக்க அவள் தேர்ந்தெடுத்த வழி ஆசிரியை தொழில். அவ்வளவுதான். அவ்வளவு பெரிய புத்திசாலியே பணம் சம்பாதிக்க அறிவை விற்கும்போது, அவளைப் பார்க்க வருபவனும், பணத்துக்காக தன்னை விற்றுக் கொள்பவனா கத்தானே இருப்பான்? அறிவுக்காக கல்வி. திறமைக்காக வேலை என்பது பெண்களின் லட்சியமானால் திருமணம் இரண்டாம் கட்டத்துக்கு தள்ளப்பட்டு விடும். பெண்ணின் வெளிப்படுத்தப்பட்ட ஆளுமையை முழுதாய் ஏற்கும் ஆணுக்குள் ஈகோ இருக்காது. எதிர்பார்ப்பு இருக்காது. வன்முறை இருக்காது. திருமணங்கள் நடத்தி வைக்கப் படாமல் தானாய் நடக்கும்."

புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் ரவி. கல்லூரி நாட்களிலிருந்து அவன் அறிந்த சுதி இவள்தான். மனதில் தோன்றியதை வெளிப்படையாய் பேசுபவள். எதிரிக்கு வலிக்காமல் குட்டத் தெரிந்தவள். தவறு செய்தால் உடனே ஒத்துக் கொண்டு மன்னிப்பு கேட்பவள். இதனாலெல்லாம் அவர்களது நட்பு வட்டத்தில் சுதிக்கு தனிப்பட்ட நட்சத்திர அந்தஸ்து உண்டு.

பேரர் பில்லுடன் வரவே எழுந்தார்கள்.

''இப்ப நேரா வீட்டிற்குத்தான் போகிறேன். நீ வறியா ரவி?''

''அடிப்பாவி உருப்படுவியா நீ?''

''ஏண்டா. என்னாச்சு?''

''இதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா? ஐம்பது ரூபா அநியாயமா என்னை வேஸ்ட் பண்ண வெச்சிட்டியே!''

''அப்பப்ப வேஸ்ட் பண்ணனும் ரவி. பாவம் நம்மை நம்பித்தானே இந்த கேண்டீன் நடக்குது. உன் பர்சும் ரொம்ப திணறிட்டு இருக்கு. உன்னோட வெயிட்டைத் தான் குறைக்க முடியல. அட்லீஸ்ட் உன் பர்ஸ் வெயிட்டையாவது குறைக்கலாமே!''



''பேச மாட்டியா பின்ன? பில்லை என் தலையில இல்லை கட்டின?''

''படிக்கிறப்ப எல்லாம் என்னை மாதிரி டேஸ்காலர் பிரண்ட்ஸ் சாப்பாட்டை அவங்க சாப்பிட விடாம ஓசியில அடிச்சே. உடம்பை டெவலப் பண்ணின. அட்லீஸ்ட் சம்பாதிக்கும் போதாவது அஞ்சி பத்து செலவு செய்யலாம். தப்பில்ல.'' ஒருவரை ஒருவர் வாரியபடியே சுதியின் வீடு வந்தனர்.

* * *

''என்னப்பா ரவி, இப்படி இளைச்சிப் போயிட்ட?'' என்று சரஸ்வதி வரவேற்றாள்.

''யாரு, ரவியா? இளைச்சிட்டானா? இப்பவே இளைச்சிருக்கான்னா! ரவி இதுக்கு முந்தி அவ்வளவு கேவலமாவா இருந்த?'' அம்மாவுக்கும் ரவிக்கும் இடையில் வந்து உட்கார்ந்தாள் சுதி. ''ஒரு விஷயம் கரெக்டா தெரியணும் எனக்கு. இப்ப அம்மா கண்ணுக்கு கண்ணாடி வாங்கணுமா? இல்ல ரவிக்கு வெயிட் பாக்கற மிஷின் வேணுமா?''

''யாருக்கும் எதுவும் வேண்டாம். நீ போடீ. வந்திருக்கிற பிள்ளைகிட்ட பேச விடாம'' விரட்டினாள் சரஸ்வதி.

''நான் முகம் கழுவ போறேன். நல்லா காபியா போட்டுக் கொடுத்து அவன் உடம்பை கொஞ்சமாவது தேத்த முடியுதான்னு பார்'' என்றபடி சுதி படியேறி போனாள்.

டேபிள் மீதிருந்த ஆப்பிள்களில் ஒன்றை எடுத்து சுவாதீனமாய் கடித்தபடி,

''அப்புறம், என்ன விஷயம் சொல்லுங்கம்மா?'' என்றான் ரவி.

''ஊருக்குப் போயிருந்தியா ரவி? அம்மா, வந்தனா எல்லாம் எப்படி இருக்காங்க? தம்பி இந்த வருடம் காலேஜ் போயிருக்கான் இல்ல. என்ன படிப்பு படிக்கிறான்?''

"அவன் எஞ்சினியரிங்தான் சேர்ந்திருக்கிறான். நல்ல வேளை அவனுக்காவது திருச்சியிலேயே கிடைத்தது. அம்மா கூட இருக்கிற மாதிரி. வந்தனாவுக்கு பார்த்த அந்த ஆடிட்டர் மாப்பிள்ளையுடன் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது?"

"என்னவோப்பா, வந்தனாவுக்காவது சீக்கிரம் கல்யாணமானா உங்க அம்மாவுக்கு பெரிய பாரம் குறையும்." மிக்ஸரையும், பக்கோடாவையும் ஒரு தட்டில் வைத்துக் கொடுத்த சரஸ்வதி காபி போட உள்ளே போனாள். மிக்ஸர் தட்டுடன் பின்னாடியே போன ரவி, "நான் போடறேம்மா. நீங்க போங்க. பயப்படாதீங்க. சுமாரா போடுவேன்" சிரித்தபடி கெட்டிலில் நீரை ஊற்றி அடுப்பில் வைத்து விட்டு ப்ரிஜ்ஜிலிருந்து பாலை எடுத்துக் காய்ச்சினான்.

அமைதியாய் நின்று வேடிக்கை பார்த்த சரஸ்வதியிடம் "என்னம்மா மௌனமாயிட்டீங்க? எப்படி குடிக்கறதுன்னு இப்பவே பயம் வந்துடிச்சசா?" என்றான்.

"போடா நீ வேற. நான் என் பொண்ணை பத்தி கவலைப் பட்டுட்டு இருக்கேன்."

பொங்கிய பாலை அணைத்துவிட்டு திரும்பினான் ரவி. "ஜோக் அடிக்கிறீங்களா அம்மா? நினைச்சி கவலைப் படற மாதிரி பொண்ணையா பெத்து வெச்சிருக்கீங்க? நீங்க வருத்தப்படற மாதிரி சுதி நடந்துக்கறான்னு என்னால நம்பவே முடியல?"

"நீ அவ ப்ரண்ட்தானே, அப்படித்தான் பேசுவ!"

"சேச்சே! என்னம்மா, நான் உங்களுக்கும் மகன் மாதிரித் தானே! என்னை பத்தி உங்களுக்கு தெரியாதா? உங்களை நான் புரிஞ்சிக்க மாட்டேனா? சொல்லுங்கம்மா?"

"ரவி, நீயே சொல். வந்தனாவுக்கு வரன் அமையலேன்னு உங்கம்மா எவ்வளவு வருத்தப்படறாங்க? அந்த வருத்தம்



எனக்கு மட்டும் இருக்காதாப்பா? நான் என்ன மூணு, நாலா பெத்து வெச்சிருக்கேன்? ஒரு பொண்ணுக்கு இல்லாட்டி, இன்னொரு பெண்ணுக்கு செஞ்சி பாக்க? இருக்கறது கறி வேப்பிலை கொத்து மாதிரி ஒண்ணே ஒண்ணு. அவளுக்கு காலா காலத்தில் கல்யாணம் நடந்து, நாங்க நல்லா இருக்கும் போதே பேரன் பேத்தின்னு பார்க்கணும்னு ஆசை இருக்காதாப்பா? நாளைக்கே எங்களுக்கு ஏதாவது ஆயிட்டா இவளுக்குன்னு யார் இருக்கா? எப்ப வேணாலும் படிக்கலாம். வேலை பார்க்கலாம். கல்யாணம் மட்டும் அந்தந்த வயசில செஞ்சா தானே நல்லா இருக்கும். இவ நினைச்சதை எல்லாம் முடிச்சிட்டு கல்யாணத்துக்கு ரெடியாகும்போது முப்பது வயசுக்கு மேல் ஆயிடும். அந்த வயசில நாம எதிர்பார்க்கிற மாதிரி மாப்பிள்ளை கிடைக்குமா? ஒரு விடோயரோ, டைவர்ஸியே தான் கிடைப்பார்கள். முப்பத்தைந்து வயதில் பிள்ளை பெற்றால் அவன் பெரியவனாகும் போது மகனா, பேரனா என்றுதான் தோன்றும். பிள்ளைக்கு ஓடியாடி செய்ய வேண்டிய சமயத்தில் இவள் உடம்பு தளர்ந்து உட்கார்ந்து விடுவாள். அதைப் பார்க்க நாங்க இருப்பமோ இல்லையோ தெரியல. அவங்கப்பாவுக்கு மகள் வார்த்தை வேதவாக்கு. ஊரில்லாத அதிசயப் பெண் என்று மாய்ந்து போகிறார். எப் படிப்பட்டவளாக இருந்தாலும் அவளும் ஒரு மனுஷி தானே! சராசரி பெண்ணுக்குள்ள வாழ்வு அவளுக்கும் அமையணும்னு உனக்காவது புரியுதா ரவி?"

"என்னம்மா இது, நீங்களா ஏன் எதையாவது நினைச்சிட்டு கவலைப்பட்டு இருக்கீங்க? உங்க பொண்ணை பத்தி உங்களுக்குத் தெரியாதா? உங்க வார்த்தையை மீறுவாளா? நான் அவளுக்கு எடுத்துச் சொல்கிறேன். அமைதியா இருங்க" என்றபடி சரஸ்வதியின் தோளைப் பற்றினான் ரவி.

கார் சாவியைக் கையில் சுழற்றியபடி இரண்டு படிக்கு ஒரு காலாக தாவி வந்தாள் சுதி. "என்னடா ரவி, அம்மாவைப்

பிடிச்சி, எதுக்கு ஐஸ் வெச்சிட்டு இருக்கற? இன்னொரு முறுக்கு கூட கேட்டா தரப் போறாங்க. அதுக்கு ஓவர் சீன் காமிக்கற?''

''இப்பதான வந்த. அதுக்குள்ள எங்கடீ கிளம்பிட்ட?'' என்றாள் சரஸ்வதி.

''மாலதிக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்குதும்மா. மாப்பிள்ளை யார் தெரியுமா? நீ சொன்னா ஆச்சரியப் படுவ. சின்ன வயசுல அவகூட எப்பவும் மல்லுக்கு நிற்பானே அந்த கதிரவன்தான். என்னால நம்பவே முடியல. அடுத்த மாதம் கல்யாணமாம். கதிரவனை கரிக்கட்டை, அமாவாசை, கருவாயன்னெல்லாம் எப்படி கிண்டல் பண்ணுவா? எப்படி ஒத்துக்கிட்டான்னு தெரியலையே!'' தோழியின் திருமணம் பற்றி சுதி ஆர்வமாய் விளக்கினாள்.

''உன்னை மாதிரி இல்லாம ரொம்ப நல்ல பெண்ணாயிருக்கா மாலதி. அதனாலதான் அம்மா அப்பா பேச்சை கேட்டுகிட்டா போலிருக்கு.''

''சும்மா சொல்லக் கூடாதும்மா. கொஞ்சம் சந்து கிடைச்சாலும் சரி சிந்து பாடறதில உனக்கு நிகர் யாருமே இல்ல. வரேம்மா. வரேன் ரவி.''

''ஏய் இரு இரு. என்னை வழியில் டிராப் பண்ணிட்டு போ'' என்றபடி சரஸ்வதி கொடுத்த ஸ்வீட் டப்பாவுடன் கிளம்பினான் ரவி.

''அப்பா இப்ப வந்துடுவார் ரவி. நீ அம்மா கிட்ட பேசிட்டு இரு. டயர்டா இருந்தா அப்பா ரூம்ல கொஞ்சம் தூங்கு. நைட் டின்னர் சாப்பிட்டு விட்டுப் போகலாம். நாளைக்கு எனக்கு ஆப்தான். உனக்கும் நாளை நைட் டியூட்டிதானே! அப்பா ஏதாவது மூவி போகலாம். நைட் ஷோ. நாம எல்லோரும் சேர்ந்து படம் பாத்து கொஞ்ச நாளாயிடிச்சி இல்ல?''

''அடுத்த வாரம் வருகிறேன் சுதி. இன்னிக்கு கொஞ்சம் வேலையிருக்கு. அம்மா வரேம்மா'' என்றபடி முன் பக்கக் கதவை திறந்து அமர்ந்தான் ரவி.



''அப்பாகிட்ட சொல்லிடும்மா. நான் வர லேட்டாகும்'' என்றபடி சாவியைத் திருப்பினாள் சுதி. கார் மெதுவாய் கேட்டை விட்டு வெளியே வந்ததும் சி.டி.யை ஆன் பண்ணினாள். மெதுவாய் ஒலித்த புல்லாங்குழல் இசையும் இதமான ஏசியும் மனதை அமைதிப்படுத்தியது. மெதுவாய் கண் மூடி பின்னால் சாய்ந்தான் ரவி. கார் மத்திய கைலாஷ் சிக்னலில் தயங்கி அடையாறு பாலம் தாண்டி திருவான்மியூர் சாலையில் சிறிது தூரம் சென்றதும்,

''தூக்கமா ரவி?'' என்றாள் சுதி.

''மாலதி வீட்டிற்கு அருகே வந்து விட்டோம். உள்ளே வந்து ஒரு 'ஹலோ' சொல்றியா?''

''அப்புறமா ஒரு நாள் வரேன். காரை இந்த லெப்டில் திருப்பி மரத்தடியில் நிறுத்து'' என்றபடி திரும்பி சுதியைப் பார்த்து அமர்ந்தான் ரவி.

''என்ன விஷயம் ரவி? பெரிய பில்டப் குடுக்கற? கோடம்பாக்கம் போயிருக்க வேண்டியவன், வழியில் இறங்கிக்கறேன்னு எங்கூட திருவான்மியூர் வந்திருக்க. மாலதி வீட்டுக்கும் வரமாட்டேங்கற. அப்படி என்ன பெரிய சஸ்பென்ஸ் நமக்குள்ள?''

''சஸ்பென்ஸ் எல்லாம் இல்ல. உங்கூட பேசிட்டே வந்து வழியில் பஸ் ஸ்டாப்பில் எங்காவது இறங்கிக்கலாம்னுதான் வந்தேன். இந்த ரோட்ல மியூசிக் கேட்டபடி சவாரி செய்கிற சுகத்தை ஏன் இழக்கணும்னு தோணிச்சி. அமைதியா இருந்துட்டேன்.''

''இப்படி ஒரு அழகான பெண்ணுடன் அருகே அமர்ந்து செல்லும் பாக்கியம் யாருக்கு கிடைக்கும்?''

''அழகான பெண்ணா, அது யார்?'' கண்ணாடியை கீழே இறக்கி சுற்றிலும் தேடினான் ரவி.

"ஓ.சி.யில சவாரி வந்ததுமில்லாம என்னைப் பக்கத்துல வெச்சிகிட்டு இந்தக் கேள்வி கேட்க உனக்கு எவ்வளவு திமிர் இருக்கணும்?"

"ஸாரி சுதி இந்த அழகானங்கிற வார்த்தையில கொஞ்சம் குழம்பிட்டேன்."

"ரொம்ப குழம்பாத ரவி. தமிழ் அகராதியை எடுத்துப் பார். அழகு என்ற வார்த்தைக்கு சுதி என்று பொருள் எழுதியிருக்கும்."

"ஐயோ சுதி வேண்டாம். விட்டுடு, வலிக்குது."

இருவரும் சிரித்து முடித்ததும் சுதி கேட்டாள். "சொல்லுடா என்ன விஷயம்?"

"எனக்கு ஒரு விஷயம் தெரியணும். டாக்டர் சுதி பிரகாசம் மருத்துவமனையில் மருத்துவர். ஆராய்ச்சி மேற்படிப்பு மாணவி வேறு. சாந்தி இல்லத்தின் சமூக சேவகி. அடுத்து என்ன செய்யப் போறாங்கன்னு தெரியணும்."

"என்ன திடீர்னு பத்திரிகையாளரா ஆய்ட்ட?"

"சும்மாதான் கேட்கிறேன் சொல்லேன்."

"ஏற்கனவே உங்கிட்ட சொன்னதுதான். ஒரு இலவச மருத்துவமனை தொடங்கணும் ரவி. ஒரு டிரஸ்ட் பார்ம் பண்ணி நம்முடன் படித்தவர்களில் ஆர்வம் உள்ளவர்களை மெம்பராக சேர்த்துக் கொள்ளலாம். இதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை, மூட்டு மாற்று சிகிச்சை போன்ற அதிக செலவாகக் கூடிய சிகிச்சைகள் எல்லாம் ஏழைகளுக்கு இலவசமாகக் கிடைக்கும்படி செய்யலாம். நரம்பியல், குழந்தை மருத்துவம், எலும்பியல் என அந்தந்த துறைகளில் சிறப்பு தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் பணம் பெறாமல் ஒரு மணி நேரம் உழைத்தால் போதும். எத்தனையோ ஏழைகள் பயன் பெறுவார்கள். டிரஸ்ட் மெம்பர்கள் எல்லோரும் மாதத்தில் ஒரு நாள் தங்கள் வருமானத்தை தந்தால் போதும்.



மருத்துவக் கருவிகள், மருத்துவமனைக்கு தேவையான சாமான்கள் எல்லாம் வாங்கி விடலாம். அதற்கான முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறேன்."

"குட் உன்னுடைய முயற்சி எதுவாய் இருந்தாலும் அஸ் எ ப்ரண்ட். நானும் உறுதுணையாய் இருப்பேன். இது விஷயமாய் எந்த உதவி என்றாலும் எங்கிட்ட தயங்காம கேட்கணும் சரியா சுதி?"

"சொல்லணுமா ரவி? எனக்கு ஒரு தேவையோ, உதவியோ வேண்டுமென்றால் நா வேற யார்கிட்ட கேட்கப் போறேன்?"

"கோல்டன் வேர்ட்ஸ். இதை இந்த வார்த்தையை எப்பவும் நினைவு வெச்சிக்கோ. சரி இப்ப சொல்லு. திருமணம் உன் லட்சியத்தை அடைய தடையா இருக்கும்னு நினைக்கிறியா?"

"நிச்சயமா இல்ல. எத்தனையோ பெண்கள் திருமணமான பிறகு கலெக்டராகவும், ஐ.பி.எஸ். ஆகவும், ஏன் நம்ம ஜனாதிபதியாவும் ஆகியிருக்காங்களே. ஏன் சுனிதா வில்லியம்ஸ் கூட கல்யாணம் ஆனவங்க தானே! சாதிக்க நினைக்கறவங்களுக்கு எதுவுமே தடை இல்லைன்னுதான் நினைக்கிறேன்."

"இவ்வளவு தெளிவா இருக்கிற நீ ஏன் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கிற?"

"நான் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லலியே. இப்ப விருப்பம் இல்லைன்னுதான் சொல்றேன். என்னை என்ன பெண் சாமியார்னு நினைச்சியா?"

"நா இல்ல, நிறையப் பேர் உன்னை அப்படித்தான் நினைக்கறாங்க. முக்கியமா உங்க அம்மா அப்பா."

"அம்மா உங்கிட்ட ஆரம்பிச்சிட்டாங்களா? என்னை நேரடியா வற்புறுத்த முடியாம உன்னை தூது அனுப்பியிருக்காங்களா? எதுக்கு இவ்வளவு அவசரப் படறாங்க ரவி?

எனக்கென்னவோ செட்டிலாவதற்கான நேரம் இது இல்லைன்னு தோணுது."

"எப்பவாயிருந்தாலும் நீ கல்யாணம் செய்துட்டு செட்டில் ஆகத்தானே போற. அதை அவங்க விருப்பப்படி இப்பவே செய்துகிட்டா என்ன? நீயே சொன்ன மாதிரி திருமணம் உனது முயற்சிகளுக்கு தடைக்கல்லாக இல்லாத பட்சத்தில் அது எப்போ நடந்தால் என்ன? நீ யாரையாவது காதலிச்சா கூட அதை அவங்க ஏத்துக்க ரெடி. அப்படி யாரையாவது காதலிக்கிறியா என்ன. எனக்குக் கூடத் தெரியாம?"

"நான் காதலிக்கிறேனா?" விழுந்து விழுந்து சிரித்தாள் சுதி.

"போதும் சுதி. அரை மணி நேரமா ஒரு மனுஷன் தொண்டை காய கத்திட்டு இருக்கேன். சிரிப்பு வேற வருதா உனக்கு?" அருகிலிருந்த காலியான வாட்டர் பாட்டிலை தூக்கி அவள் மீது வீசினான் ரவி.

"பின்ன என்னடா, ஜோக்கடிச்சா சிரிப்பு வராதா? நான் போய் யாரை லவ் பண்ணுவேன்? நான் பழகுகிற ஆண்கள் எல்லாம் உன்னை மாதிரி ப்ரண்டா இருக்காங்க. அல்லது உடன்பிறவா சகோதரனா மாறிடறாங்க. எந்த இளிச்ச வாயனும் ஐ லவ் யூன்னு கூட சொல்ல மாட்டேங்கிறான். அப்புறம் நான் யாரை லவ் பண்ணுவதாம்?"

"உன்னிடம் யாரும் எளிதில் பேசிட முடியாத ஒரு கம்பீரம் தெரிகிறது சுதி. அதனால்தான் யாரும் லவ்வென்று உன் பின்னால் சுத்தியதில்லை. அப்ப, அம்மா பார்க்கிற மாப்பிள்ளைக்கு சம்மதம்னு சொல்லிடட்டுமா?"

"நீ ஏன் ரவி. அவங்களை விட அவசரப்படற?"

"ஏன்னா கல்யாண வயதில் இன்னும் கல்யாணமாகாத தங்கையுள்ளவன், சுதி ஒரு நண்பனோ, சகோதரனோ வாழ்க்கை முழுவதும் கூட வர முடியாது என்பதை உணர்ந்தவன்."



மகளின் ஆண் நண்பர்கள் ஆட்சேபிப்பதில்லை போலும். இந்த பெண் பல சமயம் இந்நேரத்திற்கு நிறைய ஆண் நண்பனுடன் வீட்டிற்குள் செல்வதை குமார் பார்த்திருக்கிறான். அவள் பெற்றோர்களின் குரலை அமுக்கி இவர்களது சிரிப்பு சத்தமே பலமாய் கேட்கும்.

ஒரு டீ குடிக்க வேண்டும் போலிருந்தது. சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு கீழே இறங்கி வந்தான். தெரு முனையிலிருந்த டீ கடையில் நாயர் பாய்லரை தேய்த்து கழுவிக் கொண்டிருந்தார்.

"நாயர், ஒரு டீ கிடைக்குமா?"

"கடை அடைச்சாச்சே தம்பி! பால் எல்லாம் காலியாச்சே!"

ரோட்டை கடந்து பாலம் ஏறி இறங்கி வலதுபுறம் உஸ்மான் ரோட்டில் திரும்பியதும் ஒரு டீக்கடை கண்ணில் பட்டது. சாலைப் பணி செய்வோர் இருவர் பேப்பர் கப்புகளில் டீயை உறிஞ்சியபடி அமர்ந்திருந்தனர். குமார் ஒரு டீயை வாங்கி ஒதுங்கி அமர்ந்து நிதானமாய் குடித்துவிட்டு திரும்பி வரும் போது மசூதியில் காலை நேர தொழுகைக்கு ஓதும் ஒலி ஆரம்பித்தது. மறுபடி பால்கனியில் கால் நீட்டி அமர்ந்து ஒரு சிகரெட்டை பற்ற வைத்து இழுத்தபடி கண்ணை மூடினான்.

யாரோ உலுக்கும் சத்தம் கேட்டு கண்ணைத் திறந்தான் குமார். காலை வெய்யில் சுள்ளென்று முகத்தைத் தாக்கியது. எதிரே ரவி நின்று கொண்டிருந்தான். "உடம்பு எதும் சரியில்லையா குமார்? இங்க வந்து படுத்துக் கிடக்கற?" என கையை பிடித்து நாடி பார்த்தான்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லப்பா. நைட் தூக்கம் வரலேன்னு இங்க வந்து உட்கார்ந்தேன். அப்படியே தூங்கிட்டேன் போலிருக்கு."

"மார்கழி மாத குளிர் கூட உறைக்காம அப்படி என்ன

''போகலை ரவி. வேலையை விட்டுட்டேன். வேறு
வேலை பார்க்கலாம்னு இருக்கேன்.''
ஆறு மாதத்திற்கொரு முறை இந்த வசனத்தை கேட்டுப்
பழக்கப்பட்டவன் ரவி. குமார் அதிக பட்சம் ஆறு மாதம் ஒரு
இடத்தில் வேலை செய்வதும், ஆறு மாதம் வேலை தேடுவது
மாய் இருப்பான். ராஜாக்கள் நம் நாட்டை ஆண்ட காலத்தில்
குமாரின் தாத்தாவுக்கு தாத்தா ஒரு ஜமீன்தாராய் இருந்தார்.
நாடு சுதந்திரம் அடைந்த இத்தனை வருடங்களில் பெரிய
பெரிய அரச வம்சத்தின் வாரிசுகளே வேலைத் தேடி வெளியே
கிளம்பின போதும் குமாரின் அப்பா ரகுநாத பூபதி தொலைந்து
போன தன் பரம்பரை பெருமையை புதுப்பிப்பதில் மும்முர
மாய் இருந்தார். பழம் பெருமையில் ஊறி உள்ளூரிலாவது
கொடியேற்ற நினைக்கும் அப்பாவுக்கும் பொறுப்பற்ற
அம்மாவுக்கும் ஒரே மகனாகப் பிறந்த குமார் உடன் பிறந்தவர்
யாருமின்றி இளமைப் பருவம் முழுவதும் விடுதியிலேயே
கழித்தான். விபரம் தெரிந்ததிலிருந்தே காலையில் அவனை
எழுப்புவது அம்மாவின் குரல் அல்ல. விடுதியின் மணி
யோசைதான். மணி சத்தம் கேட்டே படித்து, சாப்பிட்டு தூங்கி
இயந்திரத் தனமாய் வளர்ந்தவனுக்கு வாழ்க்கையில் பெரி
தாய் பிடிப்பு ஏற்படாமல் போனது.

குமாரின் அம்மா சொர்ணலட்சுமி பெயருக்கேற்றாற் போல்
தங்கமும் வைரமுமாய் அலங்கரித்துக் கொண்டு கல்யாணம்,
பண்டிகை, காது குத்து என ஒவ்வொரு விசேஷமாய் போய்க்
கொண்டிருப்பாள். கணவனிடமோ பெற்ற மகனிடமோ கூட
அன்பை பெற்றோ, திருப்பி செலுத்தியோ அறியாதவள். ஒரு
நல்ல குடும்பத்திற்கு தேவையானது அரண்மனை போன்ற
வீடும், நல்ல சமையல், வேலையாட்களும், காரும், நகையும்
தான் என்ற கருத்துள்ளவள். கணவன் பல நாட்கள் வீட்டிற்கு
வராமல் வெளியூர் போகிறேன் என சத்தினாலும் சரி, மகன்
ஒரு போன் கூட செய்யாமல் தன்னைப் பார்க்க வராமல்
இருந்தாலும் சரி கவலையே படாதவள் சொர்ணலட்சுமி.



சமையல் ஆள் ஒரு நாள் விடுமுறை எடுத்தாலோ, விருந்
துக்கு போன இடத்தில் தன் வைர நெக்லஸ் பற்றி யாரும்
விசாரிக்கா விட்டாலோ இரவு தூக்கமின்றி தவிப்பாள். குமார்
கல்லூரியில் படிக்கும்போது அவன் தாத்தா இறந்து போகவே,
அவர் குமாரின் மீது போட்டு விட்டுப் போன அவரது பணத்தி
லிருந்து மாதம் ஒரு தொகை அவனது செலவுக்காக வர ஆரம்
பித்தது. குமார் வேதியியலில் முதிர்நிலை பட்டப்படிப்பில்
கோல்டு மெடல் வாங்கினான். மேற்கொண்டு டாக்டரேட்
பண்ணுவதற்கான உதவித் தொகையுடன் அவன் படித்த
கல்லூரியிலேயே பேராசிரியராக வேலை கிடைத்தது. மூன்று
மாதத்திற்கு மேல் அவனால் அங்கு வேலை செய்ய முடிய
வில்லை. அவனுக்கு கேட்காமலே கிடைக்கப்பட்ட வசதி
களால் இறகுகள் இல்லாத பறவை போல, குறிக்கோள் அற்ற
மனிதனாகிப் போனான்.

முகம் கழுவி வந்தவனிடம் ''சாப்பிடப் போகலாமா
குமார்?'' என்றான் ரவி.

அறையின் கதவை வெளிப்புறம் தாழிட்டுவிட்டு இரு
வரும் கீழே இறங்கினர். அண்ணாச்சி மெஸ்ஸிற்குள் நுழை
யும்போது அண்ணாச்சியின் பெண் கல்லூரிக்கு கிளம்பி
வெளியே வந்தாள்.

குமாரை பார்வையாலேயே விழுங்கியபடி தயங்கி நின்
றாள். குமார் தலையை குனிந்தபடி உள்ளே போக பின்னா
லேயே வந்த ரவி அவளது பார்வை வட்டத்தில் விழுந்த
தாகவே தெரியவில்லை. 'டிபன் பாக்ஸ் எங்கே, புக்ஸ் எங்கே'
என தேவையில்லாமல் வீட்டிற்கும் கடைக்குமாய் குமாரைப்
பார்த்தபடியே அலைந்தவள், கல்லூரி பஸ் ஹாரன் அடிக்கவே
ஒரு வழியாய் கிளம்பிப் போனாள்.

''குமார் அண்ணாச்சி பொண்ணு விட்டா உன்னை
கடத்திட்டே போயிடும் போலிருக்கேப்பா. எப்படி போகவே
மனசில்லாம திரும்பி திரும்பி பார்த்துட்டே போகுது பார்.

உன் கூட வந்தா இதுதான் தொல்லை. என்னை மாதிரி சுமாரான ஆளுங்களை எல்லாம் பொண்ணுங்க மனுஷனாவே மதிக்காது. உன்னை மட்டும் கடவுள் இவ்வளவு ஹேண்ட்சம்மா படைச்சி அதுவும் என் ரூம்லயே இருக்க வெச்சிருக்கார் பாரேன்.''

பதிலுக்கு அலட்சியமாய் தலையை கோதின குமாருக்கு பளீரென்ற நிறம். திருத்தமான முகம். அழகான விளம்பர பற்கள், செதுக்கிய உடற்கட்டு. அடர்ந்த புருவங்களும், கூரான நாசியும் உண்மையாலுமே ராஜ பரம்பரை என சாட்சி சொன்னது.

''அந்த பொண்ணு எதையாவது மறந்துட்டு தேடிப் பாத்துட்டுப் போயிருக்கும் ரவி?'' என்றான் குமார்.

''நிச்சயமா இல்ல குமார். நீ திரும்பி பாக்க மாட்டியான்னு உன்னையே தான் பாத்துட்டு நின்னுச்சி.''

''சரி என்னையேதான் பார்த்தா, அதனால என்ன? நீ கூடத் தான் தினமும் என்னை பாக்கற. நம்ம டீக்கடை பையன், லாண்டிரி கடைக்காரர், இந்த மெஸ்ல வேலை செய்யற ஆட்கள் அவ்வளவு ஏன் நம்ம தெரு முனை பிச்சைக்காரன் கூட நான் தெருவில் கால் வைக்கும்போதே நாலு காசு விழாதான்னு என்னையே பாக்கறான். அதுக்கெல்லாம் கூட விசேஷ அர்த்தம் சொல்லுவியா என்ன?''

''அடப்பாவி உனக்கு பிச்சைக்காரன் பாக்கறதுக்கும் ஒரு வயசுப் பொண்ணு சைட் அடிக்கறதுக்கும் வித்தியாசம் தெரியலையா?''

''ஸைட்ங்கறது எல்லாம் சினிமாத்தனமான வார்த்தை. பதினைந்து, பதினாறு வயது விடலைகள் பயன்படுத்தற வார்த்தை. நீ ஒரு டாக்டர். அந்த மாதிரி பேசலாமா? உனக்கே சரியாத் தோணுதா இது?''

குமார் பேசிய விதத்தில் எரிச்சலானான் ரவி. மணமாகாத இளைஞர்களுக்குள் சகஜமாய் பேசப்படும் கிண்டல்தான்



இது. ஒரு கேலியை ஜாலியாய் ரசிக்கலாம். பதிலுக்கு கிண்டல் செய்யலாம். அல்லது அமைதியான சிரிப்பின் மூலம் அங்கீகரிக்கலாம். இவை எதுவுமில்லாமல் தன் மீதே குற்றமாக திருப்பிவிட்ட குமாரை எதுவும் பேச இயலாமல் 'வரேண்டா' என கிளம்பினான் ரவி.

அந்த வயதுக்குரிய இயல்பான ஆசாபாசம், பரபரப்பு, உரத்த சிரிப்பு. குளியலறையில் பாட்டு, கண்ணாடி முன் நின்று விசிலடித்தபடி தலை வாருவது. டிரிம்மாக டிரஸ் செய்து கொண்டு தன் கம்பீரத்தில் தானே மெல்லிய கர்வம் கொள்வது. இப்படி ஒரு இளைஞனுக்குள்ள எந்த செய்கையுமே இல்லாதவனுக்கு மருத்துவத்தில் என்ன பெயர் என சிந்தித்தபடியே நடந்தான் ரவி. இவனைப் போல் ஒருவனை மணம் செய்து கொள்பவள் வாழ்வில் எப்படி சுகப்பட முடியும்? பரிதாபப்பட்டவாறே பஸ்ஸில் ஏறி மருத்துவமனைக்கு டிக்கெட் எடுத்தான்.

குமாருக்கு போரடித்தது. மேன்சன் அமைதியாக இருந்தது. வேலைக்கு கிளம்பியவர்கள் போக வீட்டிலுள்ள பெண்கள் மெகா சீரியலில் மூழ்கியிருந்தனர். நாளையிலிருந்து திரும்ப வேலை தேடும் படலத்தைத் தொடங்க வேண்டும். எத்தனை வேலைகள்! எத்தனை கம்பெனிகள்! எத்தனை அனுபவங்கள்! இதுவரைக்கும், யாருக்கும் பதில் சொல்லாமல் தன்னிச்சையாய் வளர்ந்த சுபாவம் யாரிடமும் அடங்கி வேலை செய்ய மறுத்தது. சொந்தமாய் தொழில் தொடங்கவும் அப்பா பணம் தரத் தயாராயில்லை. ''தொழில் நடத்துவது எதற்கு? பணம் இல்லாதவர்கள் சம்பாதிப்பதற்கு. ரகுநாத பூபதியின் மகன் வேலை பார்த்தோ, தொழில் செய்தோ சம்பாதிக்க வேண்டிய அவசியம் என்ன, என்ற மிதப்பில் இருந்தார். தினமும் டிரைவர் காரோட்ட, அழகழகாய் உடையணிந்து கொண்டு, வேலையாட்கள் புடைசூழ உலா வந்து குடும்ப கவுரவத்தை நிலை நாட்டாமல், ஊர் விட்டு ஊர்

போய் ஒரு சின்ன அறையில் ஒட்டிக் கொண்டு தன்
அந்தஸ்தை பாழ் பண்ணுவதாக மகன் மேல் பெரிய கோபமே
உண்டு அவருக்கு. அப்படிப்பட்டவர் தொழில் தொடங்க
பணம் தருவார் என்பதை நினைத்துக் கூட பார்க்க முடியாது.
என்ன செய்யலாம். இப்போது, என்று மணியை பார்த்தான்
குமார். பனிரெண்டு. பகல் காட்சிக்கு கூடப் போக முடியாது.
பேசுவதற்கு யாரும் இல்லை. சிறு வயதிலிருந்தே ஏனோ
நண்பர்கள் என்று யாருமே இல்லை. எவருடனும் மூணு
மாதம் பழகினால் அலுப்பு தட்டி விடுகிறது. ரவி எதையும்
துருவும் சுபாவம் இல்லாதவன். எனவே இந்த அறையில் ஒரு
வருடத்திற்கு மேல் ஒட்டியாகிவிட்டது. தடதடவென
நாலைந்து பேர் படியேறும் காலடி ஓசை கேட்டது. பக்கத்து
அறைக் கதவு படாரென திறக்கப்பட்டது. சுரேஷாகத்தான்
இருக்கும். அவன்தான் இப்படி அடிக்கடி நண்பர்களுடன்
வந்து அறையை அதிர வைப்பான். இன்னும் கொஞ்ச நேரத்
துக்கு உரக்க கத்தும் ஒலியும், ஸ்டீரியோ சத்தமும், பாட்டும்
டான்சும், பிரியாணியுமாய் அறை அமர்க்களப்படும். உட்கார
முடியாத குமார் அகப்பட்ட சட்டையை எடுத்து மாட்டிக்
கொண்டு வெளியே கிளம்பினான். பக்கத்து அறையை
கடக்கும்போது பாதி திறந்திருந்த கதவின் வழியே சுரேஷின்
''ஹேய் குமார் கம் அன் ஜாயின்ட் வித் மீ'' என்ற குரல்
கத்தலாகக் கடந்தது.

* * *

**க**ன்னிமாரா லைப்ரரியில் எடுத்த புத்தகத்தை கொடுத்து விட்டு. அதன் புல் வெளியில் நேரத்தை செலவழித்து விட்டு அறைக்கு வந்தபோது ரவி டியூட்டி முடிந்து வந்திருந்தான். ''குமார் ஒன் குட் நியூஸ் பார் யு'' என்றான் உற்சாகத்துடன்.

''எங்க ஹாஸ்பிட்டல்ல மேனேஜ்மென்ட் செக்ஷன்ல ஒரு வேகண்ட் இருக்கு. உனக்கு ஜாப் சூட்டபிளா இருக்கும்னு நினைக்கிறேன். நீ எங்க எம்.டி.யை வந்து பாரேன். நானும் சொல்லி வைக்கிறேன்.''



''ஓ.கே. நாளைக்கு பார்க்கலாம்'' என்றபடி ஒரு சிகரெட்டை பற்ற வைத்தான். கட்டிலை சுற்றிலும் இறைந்து கிடந்த சிகரெட் துண்டுகளையும், உதறிப் போட்ட பெட்ஷீட்டையும், மூலைக்கொன்றாய் கிடந்த செருப்புகளையும் ரவி ஒழுங்கு பண்ணுவதை கவனிக்காமல் தனக்குள் மூழ்கிப் போனான்.

அவனைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி இந்த மூளைக்குள் குடையும் விஷயம் என்ன என்று கேட்கத் தோன்றியது ரவிக்கு. டிரிங்ஸோ, போதை மருந்துகளோ தொட்டுக் கூட பார்க்காத இவன் எப்போதும் எந்த உலகில் சஞ்சரிக்கிறான்? பொதுவாய் அதிகம் பேசாதவர்கள் கூச்ச சுபாவம் உள்ளவர்களாய் இருப்பார்கள். அல்லது மிகுந்த அறிவாளியாய் இருப்பார்கள். பேசும் முன் நிறைய யோசித்து, தீர்க்கமாய் முடிவெடுத்து அதை அழுத்தமாய் வெளிப்படுத்துவார்கள். எதிலும் பிடிப்பின்றி இருப்பவர்கள் ஞானியாகவோ அல்லது பைத்தியக்காரனாவோ இருக்க வேண்டும். இதில் எந்த ரகத்திலும் சேர்க்க முடியாத தனி விதம் இவன். அறையை சுத்தப்படுத்தி, குளித்து விட்டு வந்து கம்ப்யூட்டரை ஆன் செய்தான் ரவி. புதிதாக பரவிக் கொண்டிருக்கும் ஒரு விஷக் காய்ச்சலை பற்றிய தகவல்களை பதியத் தொடங்கினான். தகவல்கள் சிலவற்றை பிரிண்ட் அவுட் எடுக்கும்போது குமார் வெளியே கிளம்புவது தெரிந்தது.

''குமார் சாப்பிடவா போகிறாய்?''

''ம்.''

''எனக்கு வேலை இப்போ முடியாது போலிருக்கு. நீ சாப்பிட்டு விட்டு வரும்போது எனக்கு வாங்கிட்டு வந்திடறயா?'' தலையை ஆட்டி விட்டு வெளியே சென்றான் குமார். அடுத்த ஒரு மணி நேரத்தில் ரவியின் வேலை முடியவே பேப்பர்களை வரிசையாக அடுக்கி பைல் பண்ணினான். பசி வயிற்றை கிள்ளியது. குமாரை வேறு காணோம்!

மேலும் அரைமணி நேரம் கழித்துதான் குமார் வந்தான். வந்தவன் எதுவும் பேசாமல் கட்டிலில் படுத்து பெட்ஷீட்டை கழுத்து வரை இழுத்துப் போர்த்தினான்.

“குமார் எனக்கு சாப்பாடு வாங்கிட்டு வரலயா?”

“சாப்பாடு சொன்னியா என்ன? மறந்துட்டேன்” என்றபடி திரும்பிப் படுத்து தூங்கத் தொடங்கினான்.

இரவு பதினொன்றாகியது. நாம் வாங்கி வரும் உணவுக்கு அறையில் ஒருவன் காத்திருப்பான் என்ற நினைவோ, “ஸாரி மறந்துட்டேன்” என்ற வருத்தமோ, “அடடே மறந்தாச்சே! இப்ப போய் எந்த கடையாவது திறந்திருக்கான்னு பாக்க லாமா! அல்லது பிஸ்கட் சாப்பிடறயா?” என்ற சக நண்பனின் அக்கறையோ இன்றி நிம்மதியாய் தூங்குபவனை விக்கித்துப் போய் பார்த்தான் ரவி. வெகு நேரம் தூக்கமின்றி புரண்டவன் ‘சரி இவன் சுபாவமே இப்படித்தான்’ என காலையில் எழும் போது சமாதானமாகி இருந்தான். காலையில் கிளம்பும்போது குமாரை எழுப்பி, ‘குமார் இன்னிக்கு மதியம் நான் பிஸி. அதனால காலையில பனிரெண்டு மணிக்குள் வந்தால் உன் வேலை விஷயமாய் டைரக்டரை பார்க்கலாம்” என்று சொல்லி விட்டுப் போனான். தலையாட்டிய குமார் அவன் போனதும் குப்புறப் படுத்துத் தூங்கத் தொடங்கினான்.

மதியம் எழுந்த குமாருக்கு ஊருக்கு போனால் என்ன என்று தோன்றியது. என்ன செய்வது? இங்கிருந்து மட்டும் என்ன செய்கிறோம்?

சரி ரூமில் அடைந்து கிடப்பதற்கு எங்கிருந்தால் என்ன என்றும் தோன்றவே பர்ஸை எடுத்து டிக்கெட்டிற்கு பணம் இருக்கிறதா என்று பார்த்தான். இருந்தது. நாலு செட் உடைகளை மட்டும் எடுத்துக் கொண்டு அறையை பூட்டக் கூட தோன்றாமல் நடந்து போய் ஆட்டோ பிடித்தான். எதிரில் வந்த டீக்கடைப் பையன் “என்ன அண்ணே, திடு திப்னு



ஊருக்குக் கிளம்பிட்டீங்க? எதுவும் முக்கியமான விஷயமா?” என்றபடி ஆட்டோ அருகில் வந்ததை கண்டுகொள்ளாமல் டிரைவரிடம் “சென்ட்ரல் போப்பா” என்றபடி பின்னால் சாய்ந்து அமர்ந்தான்.

# 4

சரஸ்வதி சமையலறைக்கும் வாசலுக்குமாய் ஓடிக் கொண்டிருந்தாள். பாலம்மா கடுகு தாளிப்பதும், தேங்காயை தூவுவதுமாய் சமையலின் இறுதிக் கட்ட வேலைகளில் இருந்தாள். தன் அறையில் அமர்ந்து தண்டுவடத்தில் ஏற்படும் கட்டி பற்றிய வெளிநாட்டு அறிஞரின் கட்டுரையை படித்துக் கொண்டிருந்த சுதிக்கு தலையை வலித்தது. புக் மார்க் வைத்து புத்தகத்தை மூடி அலமாரியில் வைத்து விட்டு இறங்கி கீழே வந்தாள். வீடு பரபரப்பாக இருந்தது. அப்பா வெளியூர் போவதாக இரண்டு நாள் முன்பு பேச்சு வாக்கில் சொல்லியிருந்தார். இன்று கிளம்புகிறார் போலும். கிளம்பத் தயாராக உடுத்தியிருந்த விஸ்வநாதன் கத்திக் கொண்டிருந் தார். “வெளியூர் போக நாலு செட் துணி, டாய்லெட் செட், டவல். இதை எடுத்து வைக்க எத்தனை நேரமாகும்? கிளம்பிய பிறகு பார்த்தால் இரண்டு செட் டிரஸ் தான் இருக்கு. கப்போர்டிலிருக்கிற அத்தனை துணிகள்ல இரண்டு செட்தான் கிடைச்சுதா? இத்தனை பேர் இருந்தும் இந்த சின்ன வேலை செய்ய முடியலேன்னா, வீட்ல எல்லோரும் எதுக்கு இருக்கீங்க?”

விஸ்வநாதனுக்கு எல்லாம் பர்பெக்ட்டாக இருக்க வேண் டும் என்று எதிர்பார்ப்பார். சாதாரணமாய் ஜாலியாய் பேசும் அவருக்கு கோபம் வரும் சமயங்களில் வீட்டிலிருப்பவர்கள் பயந்து போவார்கள்.

“டிரை கிளீனரிடமிருந்து துணி வருவதற்காகத்தான் காத்திருந்தேன். இதோ துணி வந்து பெட்டியில அடுக்கியாச்சு. சாப்பிட வாங்க” என்றாள் சரஸ்வதி.

"நேரமாச்சு, நா வெளியே சாப்பிட்டுக்கறேன்." கையிலிருந்த பேப்பரை டேபிள் மேல் விசிறிப் போட்டார் விஸ்வநாதன்.

"டைனிங் டேபிள் மேல சாப்பாடு எல்லாம் எடுத்து வெச்சாச்சு. தயவு செய்து வந்து சாப்பிட்டு விட்டுப் போங்க. நீங்க கோபமா போனா எங்களால ஒரு வாய் சாப்பிட முடியுமா? வாங்க வந்து சாப்பிடுங்க."

கெஞ்சிக் கூப்பிட்ட சரஸ்வதிக்கு பதில் சொல்லாமல் "ஏய் வண்டியை எடு" என டிரைவரிடம் அதட்டல் போட்டார் விஸ்வநாதன். கண் கலங்கிப் போயிற்று சரஸ்வதிக்கு.

வேகமாய் வாசற்படியை தாண்டிச் செல்லும் விஸ்வநாதனின் எதிரில் வந்து நின்றாள் சுதி.

"என்னப்பா, ரொம்ப அவசரமா கிளம்பிட்டிருக்கீங்க. எங்கிட்ட கூட சொல்லாம?" அவரது கையைப் பற்றி விரல்களை கோர்த்துக் கொண்டாள்.

ரோஜா நிற சுடிதாரில், ஷாம்பு குளியலில் முடி பளபளக்க, புன்னகையின் ஒளி முகத்தில் வீச எதிரே நிற்கிற மகளைப் பார்த்ததும், தோட்டத்தில் அப்போது தான் மலர்ந்த பூ ஒன்று வீட்டிற்குள் வந்து நிற்கிற மாதிரி இருந்தது விஸ்வநாதனுக்கு. தன்னையறியாமல் முகம் மலர்ந்தது.

"நாலு நாளைக்கு மினிஸ்டர் மருதநாயகம் கூட ஒரு புரோகிராம் சுதி."

"உங்களுக்கு மினிஸ்டர் கிட்ட என்னப்பா வேலை?"

"உனக்குத் தெரியாதா சுதி? நமக்கு சொந்தம் அவர். எங்க அத்தை பேரனோட, மனைவியோட சித்தப்பாதானே மினிஸ்டர்."

"ரொம்ப நெருங்கின சொந்தமா இருக்கேப்பா." அவர் கைகளைப் பற்றி பேசியவாறே இருவரும் டைனிங் டேபிளில் சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தனர். அப்பாவிற்கு ஒரு



பிளேட்டை எடுத்து வைத்து கொஞ்சம் சாதமும், சாம்பாரும் விட்டாள் சுதி.

"சுதி நீ சாப்டியாடா?"

"உங்க ஒய்ப் என்னை எங்கப்பா கவனிக்கறாங்க? சாமி கும்பிட்டது போக நேரம் இருந்தாத்தான் சமைக்கறாங்க. பாருங்கப்பா. நான் எப்படி இளைச்சிப் போயிட்டேன்?" செல்லமாய் சிணுங்கினாள் சுதி.

"அவளுக்கு வயசாயிடிச்சும்மா. அப்படித்தான் இருப்பா. நீ சொல்லுமா. உனக்கு என்ன வேணுமோ நா செஞ்சி தரேன்" பிசைந்த சாதத்தை மகளுக்கு ஊட்டியவாறே மனைவியை வம்புக்கு இழுத்தார் விஸ்வநாதன்.

"அஞ்சு நிமிஷம் நேரமானதுக்கு அப்படி குதிச்சீங்க. இப்ப அரை மணி நேரம் மகளோட கொஞ்சறதுக்கு மட்டும் நேரமாகலியா? உங்க மினிஸ்டர் இப்ப மட்டும் காத்திருப்பாரா?" என்றாள் சரஸ்வதி கிண்டலாய்.

"காத்திருக்காட்டி போகட்டும். மினிஸ்டர் என்ன, கடவுளே வந்தாலும் என் மகளுக்கு பிறகுதான் எனக்கு. உனக்கு வேணும்னா நீயும் கூட உட்கார்ந்து ஊட்டி விடு. எங்களை பாத்து எதுக்குப் பொறாமைப் படற?"

"யாரு, எனக்கு பொறாமையா? நல்லா ஊட்டுங்க. நாளைக்கு கல்யாணமாகி புருஷன் வந்தப்புறம் அவனையும் கூட உட்கார வெச்சி ஊட்டி விடுங்க."

"ஊட்டினா என்ன? எனக்கு ஆம்பிள்ளை பிள்ளை இல்லாததற்கு அவனையே இன்னொரு மகனா நினைச்சிட்டுப் போறேன். என்னடா சுதி. நான் சொல்றது சரிதானே!"

"எல்லாம் சரிதாம்பா. ஆனா எங்க வீட்டுக்காரரை நீங்க ரெண்டு பேரும் அவன் இவன்னு மரியாதையில்லாம பேசறதுதான் சரியில்ல" என்றாள் சுதி குறும்புடன்.

"அடிப்பாவி கல்யாணம்னாலே காத தூரம் ஓடறா. வராத புருஷனை அடான்னு சொல்லக் கூடாதாம். கொழுப்பை

பாத்தியா? சரஸ்வதி செல்லமாய் அடிக்கக் கையை ஓங்க, சுதி அந்தக் கையை பற்றி விஸ்வநாதனின் முதுகில் மெதுவாய் தட்டினாள். "அம்மா அடிக்கணும்னு ஆசையா இருந்தா, உம் புருஷனை அடிச்சிக்கோ. என்னை விட்டுடு" என எழுந்து உள்ளே ஓடினாள்.

பெரிதாய் சிரித்தபடி விஸ்வநாதன் விடைபெற்றுச் செல்லவும் சரஸ்வதிக்கு அப்பாடி என்றிருந்தது.

"ஐயாவுக்கு வந்த கோபமெல்லாம் பாப்பாவைப் பார்த்தும் போன இடம் தெரியலயே" பாலம்மா முகவாயில் விரலை வைத்து வியந்தாள்.

"என்ன இருந்தாலும் அவர் பெண்ணில்லையா?" என்றாள் சரஸ்வதி லேசான பெருமையுடன். "அந்தக் காலத்துல என் மாமியாருக்கே அடங்காதவர். எல்லாரையும் அதிகாரம் பண்ணியவர். இப்ப மககிட்ட பெட்டி பாம்பா அடங்கிப் போறார்."

* * *

மாலை லானில் அமர்ந்து பூக்களை தொடுத்துக் கொண்டிருந்தாள் சரஸ்வதி. வெளியே செல்லத் தயாராய் கிளம்பி வந்த சுதியைக் கூப்பிட்டாள்.

"அன்னம்மா."

"சுதி வடபழனி முருகன் கோவில்ல உன் பெயர்ல ஒரு அர்ச்சனை செய்யச் சொல்லி பூஜைக்கும் கொடுத்திருக்கேன். வர்றியா போயிட்டு வந்திடலாம்?"

"மாலதி வீட்டுக்குப் போறேம்மா. கல்யாணத்துக்கு இன்னும் நாலு நாள் தானே இருக்கு. நான் போய் கொஞ்சம் கல்யாண வேலை எல்லாம் பார்க்கணும்.

எங்க ப்ரெண்ட்ஸ் இன்னும் இரண்டு பேரை கூப்பிட வேண்டியிருக்கு.

நானும் அவளும்தான் போகணும். முகூர்த்தம், நலங்கு, ரிசப்ஷனுக்கு எடுத்த டிரஸ் எல்லாம் பிட்டிங் பாக்கணும்.



நைட் லேட்டாதான் திரும்பி வருவேன். நாளை ஆஸ்பத்திரியிலிருந்து அப்படியே மாலதி வீட்டுக்குப் போயிடுவேன். நீங்க நாளன்னிக்கு கல்யாணத்துக்கு வரும்போது எனக்கு பட்டுப் புடவை எல்லாம் எடுத்துட்டு வந்துடுங்க சரியா?"

"நீ அங்க போறதப் பத்தி இல்ல. ஆனா கோயிலுக்கு வந்துட்டு அங்கிருந்து அப்படியே மாலதி வீட்டுக்குப் போயிடு."

"ஏம்மா வீட்டுலயே முருகனை வெச்சு தினமும் பூஜையும் நைவேத்தியமுமா பண்ற. மறுபடி கோவில்லயும் பூஜையா? பாத்துமா, உன் அதிகப்படி உபசாரத்தில் திணறி முருகன் நீ என்ன கேட்டேன்னே மறந்துடப் போறார்."

"ஏன் சுதி கோவிலுக்குப் போறதும் சாமி கும்பிடறதும் உனக்கு வேடிக்கையா போயிடிச்சா?" வேதனையுடன் கேட்டாள் சரஸ்வதி.

சரஸ்வதி அமர்ந்திருந்த கல் பெஞ்சின் கீழே அமர்ந்து சரஸ்வதியின் மடியில் தலை வைத்து இடுப்பைக் கட்டிக் கொண்டாள் சுதி.

"விடுடீ என்ன இது? எத்தனை தடவை சொல்றது சின்ன குழந்தை மாதிரி நடந்துக்காதேன்னு."

"சரிம்மா நான் சின்ன பொண்ணில்ல. என்னை உன் தோழியா நினைச்சிக்கோ. நா கேக்கறதுக்கு உண்மையை சொல்லணும். சொல்லுவியா?"

"அப்படி என்ன கேட்கப் போற எங்கிட்ட? கேளேன்!"

"அம்மா உனக்கு இந்த வீட்ல எந்தக் குறையும் இல்ல. எனக்குத் தெரியும். ஆனா மன நிறைவோட இருக்கியா? உன் மனசில ஒரு பயமோ, இதுவரை வெளியே சொல்லாத எதிர்பார்ப்போ இருக்கா? நானோ, அப்பாவோ நடந்துக்குற முறையில அதிருப்தியடைகிறாயா? அப்பா கிட்ட என்னதான் அன்பு இருந்தாலும் மரியாதையா எட்டி நின்று பேசியே

பழக்கப்பட்டவ. அவரது பலவீனங்களின் வடிகால் நீதான். அப்பா பிரச்சனைகளைத் தவிர்க்க அவங்க வீட்டு ஆட்களிடமும், பிரியம் காரணமா எங்கிட்டயும் காட்டாத கோபத்தை எல்லாம் உங்கிட்ட தான் காண்பிப்பார். அதே கோபத்தைத் திருப்பி எங்கிட்டயோ, வேலையாட்கள் கிட்டயோ காட்டி குடும்பத்தைப் போர்க்களமாக்காமல் முருகன் கிட்ட ஓடிப் போயிடற சரியா? நீ ஆசைப்படற மாதிரி என்னால சமையல், கோலம்னு வீட்ல இருக்க முடியல. தோளுக்கு மேல் வளர்ந்த பொண்ணை இரண்டு அதட்டல் போட்டுப் பணிய வைக்கவும் முடியல. சோ.முருகனை கெட்டியா புடிச்சிகிட்ட. விட்டுட்டா விழுந்துடுவோம்கற பயம். அம்மா உனக்குத் தெரியுமா இந்த பயம்தான் பக்திக்கு அடிப்படையான விஷயம். கஷ்டம் வரும்போது தாங்க முடியாத பயம். பாவம் செய்யும் போது அதன் பலனை சுமக்க முடியாத பயத்தில் காணிக்கை லஞ்சம். சந்தோஷம் வரும்போது அது நிலைக்க வேண்டுமே என்ற பயத்தால் பக்தி. மனிதர்கள் எப்போதுமே ஒரு விசயத்தை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். எப்போதும் எளிமைதான் தெய்வம். தூய்மையும் இயற்கை அழகும்தான் வழிபாட்டின் முதல்நிலை. வசதிகள் பெருகும்போது அவனால் சுயக் கட்டுப்பாடு முடியாதபோது கட்டுப்படுத்த ஒரு அமைப்பு தேவைப்பட்டது. சக மனிதன் சொன்னால் ஏற்றுக் கொள்வானா மனிதன்? எனவே இயற்கை வழிபாடு மாற்றமடைந்து கடவுளை உருவாக்கி, அவருக்கு உருவம் கொடுத்து, அதை பற்றிய பல கதைகளை உண்டு பண்ணி மனிதனை மனிதனே கட்டுப்படுத்தத் தொடங்கினான். பயப்படுத்தத் தொடங்கினான். இது கடவுள் வழிபாட்டின் இரண்டாம் நிலை.

நாகரீகத்திற்கும் அவரவர் கற்பனை திறனுக்கும் தகுந்த மாதிரி இந்த நிலையும் மாற்றமடைந்து இன்று கடவுளுக்கும் மனிதனைப் போலவே குடும்பம், குழந்தைகள், பிரச்சனைகள் எல்லாம் வந்து விட்டது.''



''அப்ப கோயிலுக்கே போகக் கூடாது. கடவுள் இல்லைங்கிறியா சுதி?''

''அப்படிச் சொல்லலம்மா. நான் இந்த இடத்தில் தான் இருப்பேன். தினமும் என்னை வந்து வணங்கினால்தான் உனக்கு அருள் தருவேன் என்று எந்தக் கடவுளும் சொல்லவில்லை என்கிறேன். கடமையையும், தர்மத்தையும் பலனை எதிர்பார்க்காமல் செய் என்றுதான் கடவுளால் சொல்லப்பட்டதாக கூறப்படும் வேதங்கள் சொல்கின்றன. அதனால் யார் மீதும் துவேஷமின்றி நம் வேலையை செய்தாலே போதும்.

என்னிடம் வரும் ஒவ்வொரு நோயாளிகள் முகத்திலும் நான் கடவுளை காண்கிறேன். அவர்களுக்குச் செய்யும் சேவையை கடவுள் பணியாகவே நினைக்கிறேன். அவர்களும் நோய் குணமாகி போகும்போது மருத்துவரை கடவுளின் பிரதிநிதியாகவே கருதுகிறார்கள். ஒரு நோயாளிக்கும் மருத்துவருக்கும் உள்ள உறவை விட மேம்பட்டதா, கடவுளுக்கும் பக்தைக்கும் உள்ள உறவு? உன் பாஷையில் சொன்னால் கடவுளே மருந்தீஸ்வரராக பிணி தீர்க்கவில்லையா என்ன?''

பதில் பேசாது மகளின் தலையை வருடினாள் சரஸ்வதி.

''அம்மா, எங்கும் எல்லா இடத்திலும் இருக்கும் கடவுள் எனக்குள்ளும் உனக்குள்ளும், எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறார். எனவே கடவுளை உயிர்களிடத்தே தேடு என்றுதான் சொல்கிறேன்.''

வாய் திறவாது மகள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த சரஸ்வதி பிரமிப்புடன் சொன்னாள். ''நீ ரொம்ப படிச்சவ சுதி. மதம், மனோதத்துவம் எல்லாம் பேசற. நீ சொல்றதுல எனக்கு நிறைய விஷயம் புரியக் கூடச் செய்யாது. எங்க காலத்துல படிப்பறிவில்லாத அம்மாவும், பள்ளி இறுதி வரை படித்த அப்பாவும் எந்தத் தப்பு செஞ்சாலும் சாமி கண்ணை

குத்திடும்னு சொல்லித்தான் வளர்த்தாங்க. வீட்ல அப்பா அறை, தாத்தா ரூம், அண்ணன் ரூம்ங்கற மாதிரி சாமிக்கும் பூஜை அறை ஒண்ணு கொடுத்திருப்போம். நாம விதம் விதமா சாப்பிடற மாதிரி அவருக்கும் தினம் நைவேத்தியம் பண்ணுவோம். விசேஷ நாட்கள்ல நாம புதுசு கட்டற தில்லையா. அது மாதிரி சாமிக்கும் புது உடை, நகையலங் காரம், பூ மாலை, ஊஞ்சல் எல்லாம் நடக்கும். நீ மனுஷங்க கிட்ட தெய்வத்தை பார்க்கறதா சொல்ற. நா தெய்வத்தையே மனுஷனா பார்க்க பழகிகிட்டவ. கடவுளை அவன் இவன்னு பேசறதும், சோதனை வரும்போது அவன் கூட சண்டை போடறதும் திட்டறதும் அதனாலதான்.''

''வாவ்!'' படபடவென கைத்தட்டினாள் சுதி. ''அம்மா நான் நினைச்ச மாதிரி நீ சாதாரண ஆள் இல்ல. எவ்வளவு அழகா விளக்கம் சொன்ன? உனக்குள்ள இன்னொரு ஆள் இருக்கு நிச்சயமா.''

''அம்மா, நான் வீட்டுக்கு கிளம்பட்டுமா?'' என்றபடி அங்கே வந்தாள் பாலம்மா.

''கோயிலுக்கு நீ வர்றியா இல்லையா?'' என்றாள் சரஸ்வதி.

''வரேம்மா. வீட்டுக்குப் போய் இந்த சாப்பாட்டைக் கொடுத்துட்டு புடவை மாத்திட்டு அரை மணியில வந்துட றேன்.''

''எதுக்கு பாலம்மா புடவை மாத்தற? இந்தப் புடவையி லேயே எவ்வளவு அழகா இருக்க! இன்னும் புடவை வேறு மாத்திட்டு வந்தா, உங்கம்மா கூட வந்த அந்த ஹீரோயின் எந்த படத்துல வர்றாங்கன்னு எல்லோரும் என்னை கேக்கப் போறாங்க. தேவையா இது?'' என்றபடி பாலம்மாவின் தோளை அணைத்தாள் சுதி.

''விடு பாப்பா, என்னைய கட்டிப் பிடிச்சிட்டு. என்ன கூத்து இது'' என சிணுங்கினாள் பாலம்மா.



''அட, வெக்கத்தைப் பாரேன்'' என கன்னத்தைக் கிள்ளி விட்டு எழுந்தோடிய சுதியை நெற்றியை வழித்து திருஷ்டி கழித்தாள் பாலம்மா.

* * *

சுதி மாலதியின் வீடு போய் சேர்ந்தபோது வீட்டில் கல் யாண களை கட்டியிருந்தது. சுதியும் மாலாவும் சிறு வயதி லிருந்து ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படித்தவர்கள். எதிர் எதிர் வீடு வேறு. வேறு கல்லூரிக்குப் போனாள். சுதி மருத் துவக் கல்லூரியில் சேர்ந்ததும் வேறு வீடு கட்டிக் கொண்டு விஸ்வநாதனும் இடம் மாறினார். என்றாலும் நட்பு மட்டும் என்றும் மாறாமல் தொடர்ந்தது.

உள்ளே நுழையும் போதே மாலதியின் அப்பா கணபதி எதிரில் வந்தார்.

''வாம்மா சுதி, உன்னை ஒரு பத்து நாள் நம்ம வீட்ல தங்கணும்னு சொன்னேனா இல்லியா? நீங்க ரெண்டு பேரும் கல்யாணமாகி போன பிறகு இந்த மாதிரி எல்லோரும் சேர்ந்து இருக்கக் கூடிய சந்தர்ப்பம் அமையுமோ இல்லையா? பெண் குழந்தைகள் மேல என்னதான் பாசத்தைக் கொட்டி வளர்த் தாலும் கல்யாணமானதும் அவ வேற ஆளத்தானே போயி டறா? நினைச்சா கூட்டி வந்து வெச்சுக்க முடியுமா?'' குரல் தழுதழுத்தது அவருக்கு.

''ஏன் மாமா அப்படிச் சொல்றீங்க? கல்யாணம் ஆய்ட்டா மட்டும் நாங்க உங்க சுதி, மாலதி இல்லையா என்ன? பெத்தவங்க ரத்தத்திலும், இத்தனை வருட வளர்ப்பிலும் உருவான பந்தத்தை எங்கிருந்தோ வந்த சொந்தம் ஒரே நாளில் வெட்டிவிட முடியுமா என்ன? சொல்லப் போனா இப்ப இருக்கறத விட கல்யாணமானா எங்களுக்கு பொறுப்பு வரும். உங்களை இன்னும் அக்கறையா கவனிச்சிக்க முடியும்.''

''எல்லாம் இப்ப சொல்வீங்க. கல்யாணமான பிறகு அப்ப வாவது மாமாவாவது'' என்று கிண்டலாய் சிரித்தார் கணபதி.

பதில் பேச வாயெடுக்கும் முன் உள்ளேயிருந்து ஓடி வந்த மாலதியின் தம்பி கணேஷ் சுதியின் துப்பட்டாவை பற்றி இழுத்தான்.

''சுதி அக்கா. இந்த பிசாசு கிட்டயிருந்து என்னைக் காப் பாத்து. மாலதிக்கு பிறகு எட்டு ஆண்டுகள் கழித்துப் பிறந்தவன். மாலதி கையில் ஸ்கேலுடன் துரத்த வீட்டைச் சுற்றி ஓடினான்.

''மாலதி என்ன இது? நீ கூட சின்னக் குழந்தை மாதிரி சண்டை போட்டுகிட்டு. அதுவும் கல்யாண சமயத்தில்.''

''நீயே வந்து பார் சுதி. என்ன செஞ்சிருக்கான்னு. டிராயிங் பண்ணுகிறேன்.''

''ஆயில் பெயிண்டிங் பண்ணுகிறேன் என்று சொல்லிக் கொண்டு என் நெய்ல் பாலிஷையும் ஐ லைனரையும் கலந்து வைத்திருக்கிறான். பேன் கேக்கில் ரூஜை குழைத்து எல்லா வற்றையும் வேஸ்ட் பண்ணியிருக்கிறான்.''

''ஏண்டா கணேஷ் அப்படிப் பண்ணின? அக்காவுக்கு என்ன புராடக்ட், எந்த நிறம் பொருந்தும்னு பாத்துப் பாத்து வாங்கியது தெரியுமா?'' அவன் தலையில் வலிக்காமல் குட்டினாள் சுதி.

''நா நல்லதுக்குத்தான் சுதிக்கா செஞ்சேன். இதெல்லாம் யூஸ் பண்ணாம இருந்தாலாவது கல்யாணத்துல இவ அழகா இருக்காளான்னு பார்க்கலாம்னு செஞ்சேன்.''

சுதி அடக்கமாட்டாமல் சிரிக்க, ''உள்ளதான வருவ. வா பேசிக்கிறேன்'' என்றபடி சுதியை இழுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள் மாலதி.

''மாலு நான் என் டிரஸ் டிரையல் பார்க்கப் போகிறேன். நீயும் வருகிறாயா?'' என்றபடி உள்ளே வந்தான் கல்யாண மாப்பிள்ளை கதிரவன். ''ஹாய் சுதி. நீயும் வா போகலாம்'' என்றான்.



''நான் வரலப்பா'' என்றாள் மாலதி. ''இவன் கலருக்கும் அந்த கறுப்பு கோட்டுக்கும் எப்படிப் பொருந்தும்னு பாக்க இப்பவே வரணுமாக்கும்? ஏதோ கல்யாணத்தன்னிக்கு ஒரு நாள்னா சகிச்சிக்கலாம்.''

''அப்படி யார் உன்னை சகிச்சிக்க சொன்னாங்களாம். பிடிக்கலைன்னா இப்ப கூட வேண்டாம்னு சொல்லிடு. அட்லீஸ்ட் நானாவது தப்பித்து கொள்வேன்.''

''வேண்டாம்னு சொல்லிடுவேன். ஆனா இந்த மூஞ்சியை வேற யார் கட்டுவா? யாருமே பொண்ணு குடுக்க மாட்டேங் கறாங்க. என் பையனை கட்டிக்க உன்னைத் தவிர ஆளில் லைன்னு உங்கம்மா, அப்பா வந்து கெஞ்சினாங்க. போனாப் போகுது, ஏதோ சொந்தமாச்சேன்னு இந்த தியாகத்தை செய்கிறேன்.''

''ஆமா நீ பெரிய அழகி. ஐஸ்வர்யாராய் தங்கச்சி. போடீங்...''

''நீ போடா கருப்பா.''

''அத்தை'' கத்தினான் கதிரவன். ''உங்க பொண்ணைப் பாருங்க. கட்டிக்கப் போறவங்கிற மரியாதை இல்லாம வாடா போடான்னு பேசறா. யாராவது கேட்டா பொண்ணை இப்படி வளர்த்து வெச்சிருக்கீங்கன்னு உங்களைத்தான் தப்பா பேசுவாங்க.''

குரல் கேட்டு வந்த மாலதியின் அம்மா திடுக்கிட்டாள். ''என்னடீ கட்டிக்கப் போறவ கிட்ட மரியாதை இல்லாம இப்படியா பேசுவாங்க? கல்யாண பொண்ணா சமத்தா போய் உட்காரேன். சுதியும் உன்னை மாதிரி பொண்ணு தானே. அவ எப்படியிருக்கா பாரேன்!''

கண்ணை கசக்கியபடி சோபாவில் போய் அமர்ந்தாள் மாலதி.

''கதிர் அண்ணா நீங்க ரொம்ப மோசம். கல்யாண பெண்ணை இப்படியா அழ வெப்பாங்க?'' சுதி சிபாரிசுக்கு வந்தாள்.

"சுதி உனக்குத் தெரியுமா? என் மாலதி சிரித்தால் மட்டுமல்ல. கோபப்பட்டாலும் அழுதாலும் கூட அழகுதான்?" அருகே அமர்ந்து கதிரவன் அவளை சமாதானப் படுத்தத் தொடங்கினான். சிரித்தபடியே மாலதியின் அம்மாவிற்கு உதவி செய்யப் போனாள் சுதி.

கதிரவன் மாலதிக்கு தூரத்து சொந்தம்தான். சுதிக்கும் மாலதிக்கும் சிறு வயது விளையாட்டு தோழனும் கூட. நல்ல கறுப்பு நிறமும், உயரமும், உடற்கட்டுமாய் இருப்பான். பளீரென்ற வெள்ளை சிரிப்பு அந்த முகத்திற்கே தனி களையைக் கொடுக்கும். சிறு வயது முதலே மாலதியை சீண்டினாலும், சிரிக்க வைத்தாலும் அவளிடம் கொண்டுள்ள பாசம் தெளிவாய் தெரியும்.

கருப்பண்ணசாமி, கருவாயன் என்றெல்லாம் அவனை வெறுப்பேற்றும் மாலா மிகுந்த பிரியத்துடன்தான் திருமணத்திற்கு சம்மதித்தாள். வெள்ளை வெளேரென நிறமும் அழகியுமான மாலா, 'நீயும் உன் கணவரும் ஆளுக்கொரு துருவம்' போலிருக்கிறீர்கள் என்று மற்ற தோழிகள் கிண்டல் செய்தபோது, 'எதிர் எதிர் துருவங்கள் தான் ஒன்றை ஒன்று ஈர்க்கும்' என பதில் கொடுத்தாள். எல்லா விதத்திலும் அவளுக்குப் பொருத்தமாய் கதிரவனை தவிர யாருமே இருக்க முடியாது என்று தோன்றியது சுதிக்கு. கணேஷுடன் அவன் அடிக்கும் லூட்டியும், மாலதியின் அம்மாவுக்கு சமையலில் உதவி செய்வதாகக் கூறி அடிக்கும் லூட்டியும் பார்க்க தமாஷாக இருந்தது. இரவு சாப்பிடும்போது சுதியிடம் ஒரு பட்டுப் புடவையை கொடுத்தான் கதிரவன்.

"கல்யாணத்துக்கு, இந்த அண்ணனின் பரிசு சுதி. ப்ரண்டுதானேன்னு மாலதிகிட்ட காட்டிடாதே. ஏன்னா புடவைன்னாலே பொம்பளைங்களுக்கு பொறாமை வந்துடும்."

"ஏன் ஆண்கள் மட்டும் தேடித் தேடி டிரஸ் வாங்கறதில்லையா? நீங்க மட்டும் பழசையேவா போடறீங்க? என்ன சுதி நான் சொல்றது?" என்றாள் மாலதி.



"என்னை ஏம்ப்பா கேட்கற? என்ன இருந்தாலும் நான் எங்கண்ணன் கட்சிதான்" என்று சுதி கையைத் தூக்க கதிரின் 'ஹோ'வென்ற கூச்சலில் வீடு கலகலத்தது. திருமணத்திற்காக மருத்துவமனைக்கு மூன்று நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டாள் சுதி. வீட்டைக் கட்டிப் பார். கல்யாணம் பண்ணிப் பார் என்ற வார்த்தை உண்மைதான் போலும். அத்தனை பேருக்கும் நிற்க நேரமில்லாமல் வேலை இருந்தது. தனித்தே பிறந்த சுதிக்கு வீடு நிறைய ஆட்களும், பேச்சும் சிரிப்புமாய் வேலை செய்வது ரொம்பவே பிடித்திருந்தது. பீரோ சாவியை சுதியின் கையில் கொடுத்தார் கணபதி. "பேங்க் லாக்கரிலிருந்து எடுத்து வந்த நகையெல்லாம் பீரோவில்தான் இருக்கு சுதி. மாலதிக்கு அலங்காரம் பண்ணும் போது எடுத்துக் கொடுத்து, மறுபடி பத்திரமா எண்ணி வாங்கி வைம்மா. எங்கையில இருபதாயிரம் இருக்கு. அலமாரியில ஐம்பதாயிரம் இருக்கு. ஒரு நோட்ல எழுதிக்க. மளிகைக் கடை ஆள், காய்கறிக்காரர், பால் காசு கொடுக்கணும். நான் மண்டபத்துக்குப் போகிறேன். நீ அவங்களுக்குப் பணத்தைக் கொடுத்துட்டு பில் வாங்கிக்கோ. டிரைவர் கிட்ட கார் டேங்கை நிரப்பச் சொல்லி பணம் கொடுத்திடு. ஏ.டி.எம். கார்டு எங்கிட்ட இருக்கு. எதுக்காவது பணம் பத்தலைன்னா சொல்லு எடுத்துத் தரேன். அப்புறம் ரொம்ப முக்கியமான விஷயம் ஒண்ணு. எங்கம்மா ஊரிலிருந்து வந்துட்டாங்க இல்ல. எங்கம்மாவும் உங்க அத்தையும் அதான் மாலதியோட அம்மாதான் அடிக்கடி முட்டிக்குவாங்க. அவங்களை சரிக்கட்டி நல்ல நேரத்தில் எல்லோரையும் மண்டபத்துக்கு கூட்டிட்டு வந்துடும்மா" என்றார்.

"அப்பா சுதியை என்கூட ஜாலியா இருக்கலாம்னு வரச் சொன்னேன். நீங்க அவளை வேலைக்காரி ஆக்கிடுவீங்க போலிருக்கே!" கடுகடுத்தாள் மாலதி. அடிபட்டுப் போனவராய் பார்த்தார் கணபதி. "என்ன மாலதி, என்னைப் போய் இந்த வார்த்தை சொல்லிட்ட? சுதியோட படிப்பு, குடும்ப

அந்தஸ்து தெரியாதவனா நான்? சின்னதிலிருந்து ஒன்றாகவே பழகி வந்ததில் மனசளவில் எனக்கு சுதியும் உன்னைப் போலத்தான். பண பொறுப்பு வீட்டு மனிதர்களிடம்தானே ஒப்படைக்க முடியும்? அதனாலதான் சுதிகிட்ட பீரோ சாவியை கொடுத்தேன். மத்தபடி இதுல தப்பா..." முடிக்கும் முன் குறுக்கிட்டாள் சுதி. "இவ கிடக்கிறா மாமா. நீங்க போய் வேலையை கவனிங்க. நான் இங்க வந்ததே அத்தைக்கும் உங்களுக்கும் உதவி செய்யத்தான் சின்ன குழந்தையிலிருந்து என்னைத் தூக்கி விளையாடி மாலதியோட சேர்த்து சாப்பாடும் போட்டிருக்கீங்க. எங்கிட்ட உங்களுக்கு இல்லாத உரிமையா? கதிர் அண்ணா கொடுக்கிற இடம் போலும். இவளுக்கு வாய் நீண்டு கொண்டே போகிறது. தோழியைக் கடிந்தபடி வெளியேயிருந்து வந்த பூக்காரியின் குரலுக்கு பதில் சொல்லப் போனாள் சுதி.

"ஒருத்தர் கிட்ட பணம் இருக்கான்னு அவங்க பகட்டைப் பார்த்தே சொல்லிடலாம். குணம் இருக்கான்னு சுதியைப் பார்த்துத்தான் தெரிஞ்சுக்கணும்" என்று மாலதியிடம் சொல்லியபடி மண்டபத்துக்குக் கிளம்பினார் கணபதி. கல்யாணம் சிறப்பாக நடந்தது. யாருக்கும் எந்தக் குறையோ முணுமுணுப்போ இல்லாமல் திட்டமிட்டபடி சீராக நடந்து முடிந்தது. பட்டுப் புடவைய்ும், நகையுமாய் வளைய வந்து மேற்பார்வை செய்து கொண்டிருந்த மகனைப் பார்த்து சரஸ்வதியே அசந்து போனாள்.

"ஒரு நியூஸ் பேப்பரை கூட வீட்டில் அடுக்கி வைக்காதவள், இதுவரை நம் வீட்டு செலவு எவ்வளவு ஒரு மாதத்திற்கு என்றுகூட கேட்டதில்லை.

ஒரு கல்யாணத்தையே பொறுப்பாய் பார்க்கிறாளே!" விஸ்வநாதனிடம் சொல்லி ஆச்சரியப்பட்டாள்.

"சந்தர்ப்பமும் சூழ்நிலையும் மனிதர்களுக்கு எல்லாவற்றையும் தானாகவே கற்றுக் கொடுத்து விடுகிறது" என்றார் விஸ்வநாதன்.



"சுதிக்கு சீக்கிரம் பாக்கணுங்க" என்றாள் சரஸ்வதி.

"இப்பதானே பச்சைக் கொடி காட்டியிருக்கா. இனி மாப்பிள்ளை தேடும் படலம்தான்" என்றார் விஸ்வநாதன்.

சுதி மாலதியின் அழைப்பின் பேரில் வந்திருந்த ரவி, திரும்பி போகும்போது, சுதி அடுத்தது உன் கல்யாணத்துக்குத்தான் நான் வருவேன்" என்றான்.

"அம்மா சும்மாயிருந்தாலும் நீ இருக்க மாட்ட போலிருக்கே! கிளம்புடா முதலில்" என்றாள் சுதி.

மண்டபத்திலிருந்து வீட்டிற்கு வந்த பிறகு கணபதியிடம் நகைகளையும், மீதி பணம், பீரோ சாவியையும் ஒப்படைத்துவிட்டு, மாலதியும் விடை பெற்றுக் கொண்டு தாமதமாக சுதி வீடு திரும்பினாள். இரவு சாப்பாட்டைக்கூட மறுத்து சரஸ்வதி பாலுடன் வரும்முன் அசதியில் தூங்கப் போனாள்.

மாலதியும் கதிரவனும் அடுத்த நாளே கொடைக்கானலுக்கு ஹனிமூன் போவதாக போனில் தெரிவித்தனர். வாழ்த்துக்களை சொல்லிவிட்டு வழக்கமான வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுதி. பத்து நாட்கள் கழித்து கணவனுடன் டெல்லி கிளம்பிய மாலதி சொல்லிக் கொண்டு போக வந்தாள்.

மணமக்கள் விஸ்வநாதன் மற்றும் சரஸ்வதியின் காலில் விழுந்து வணங்கினர். சுதியைக் கட்டிக் கொண்ட மாலதிக்கு பேச்சு வராமல் அழுகை கேவலாக வெளிப்பட்டது. கண்களில் நீர் வழிய கதிரவனைப் பார்த்த சுதி. "கதிர் அண்ணா உங்களுக்கு தெரியுமில்லையா? எங்களுக்கு விபரம் தெரிந்த நாளாய் நாங்க சேர்ந்தாற் போல ஒரு வாரம் பார்த்துக்காம இருந்தது கிடையாது. இப்ப ஒரேயடியாய் எங்களை விட்டுப் போகிறாள். அண்ணா, மாலதி எனக்கு இனி தோழி மட்டுமல்ல. அண்ணியும் கூட. எங்கண்ணியை சந்தோஷமா வெச்சிக்குங்க." என்றாள்.

ஒரு கூட்டு பறவையாய் சிறகடித்த இருவரில் ஒருவர் மட்டும் தனித்து நிற்பதைக் கண்ட சரஸ்வதிக்கு கண் கலங்கியது. ''அம்மா அவங்கதான் சின்ன பொண்ணுங்க. அவங்களுக்கு அட்வைஸ் பண்றதை விட்டுட்டு நீங்களும் கலங்கினா எப்படி?'' என்றான் கதிரவன்.

''மாலதி நீ அப்படி எங்க போயிடப் போற? சுதி ஒரு போன் பண்ணினா நான் கொண்டு வந்து விட்டுட்டுப் போகப் போறேன். நீ பாக்கணும்னால் சுதி நம்ம வீட்டிற்கு வந்துட்டுப் போறா? டெல்லி என்ன வெளிநாட்டிலா இருக்கு? வேணும்னா மாதம் ஒரு முறை வந்துட்டுப் போகலாம் சரியா?''

''சுதி உன் தோழி முதன் முதலாய் வாழ்வைத் தொடங்கப் போகும்போது சந்தோஷமாய் வாழ்த்தி அனுப்பாமல் இப்படி அழுது கொண்டே வா அனுப்பி வைப்பார்கள்? உனக்குக் கூட ஒருவர் புத்தி சொல்லணுமா என்ன?'' இருவரிடம் மாறி மாறி கதிரவன் சொன்ன வார்த்தைகளில் இருவரும் தெளிவு பெறவே புன்னகையுடன் விடை பெற்றனர். புதுமணத் தம்பதிகள்.

# 5

''ஐயா தவிசு வந்திருக்கேன்'' அறைக்கதவு மெதுவாகத் தட்டப்பட்டது.

கதவைத் திறந்த குமார் ''என்ன தவிசு'' என்றான் சற்றே எரிச்சலுடன்.

''இன்னும் சாப்பிட வர்லயே நீங்க?''

''காலையில லேட்டா சாப்பிட்டேன். இப்ப பசிக்கல.''

தலையை சொறிந்தார் தவிசு. ''எல்லோரும் சாப்பிட்டாச்சு. ங்கதான் பாக்கி. இரவு சாப்பாட்டுக்கு விருந்தாளிங்க வராங் ன்னு அம்மா சொன்னாங்க. மாவு வேறு அரைக்கணும்.



'அதுக்காக நான் நினைச்ச நேரம் கொட்டிக்க முடியுமா? கொண்டு போய் குப்பையில வேணும்னா கொட்டு' என சொல்லத் துடித்த வார்த்தைகளை உள்ளுக்குள் அடக்கினான். வேலைக்காரனை கூட இங்கே அதட்ட முடியாது தான். ஏதாவது சொல்லப் போக, 'குமார் என்னைத் திட்டுகிறான். நான் வேலையை விட்டு போகிறேன்' என சீன் காட்டினால் அப்பா குமாரைத்தான் அதட்டுவார். எனவே ''அம்மா இல்லையா?'' என்றான் குமார்.

''அம்மா இரவு விருந்துக்கு சிலரை அழைக்கறதுக்காக வெளியே போய் இருக்காங்க.''

'விருந்தும் கேளிக்கையும் இந்த வீட்டில் எப்போதும் நடக்கத்தான் செய்கிறது. ஆனால் ரொம்ப நாள் கழித்து ஊரிலிருந்து வந்திருக்கும் பிள்ளையிடம் 'எப்படிப்பா இருக்க?' என்று கேட்காமல். அருகிருந்து பரிமாற, அம்மாவுக்கே தோணாத போது சமையல்காரரைக் குறைப்பட்டு என்ன பயன்?'

''சரி நீ சாப்பாட்டை டேபிள் மீது முடி வெச்சுட்டு போய் உன் வேலையைப் பார். நான் பசிக்கறப்ப போட்டுக்கறேன்'' என்றான் குமார்.

தலையாட்டி விட்டுச் செல்லும் தவிசை கூப்பிட்ட குமார் ''ஆமாம் தவிசு டின்னருக்கு யார் வரப் போறாங்க?'' என்றான்.

''யாரோ மந்திரி வரப்போறதா சொன்னாங்க. உங்க சொந்தக்காரர் ஒருவர் மந்திரியுடன் சென்னையிலிருந்து வர்றாராம். அப்புறம் வழக்கமா வர்ற அல்லக் கைகள். இங்கேயுள்ள சொந்த பந்தத்திலிருந்து கொஞ்சம் பேர் எல்லாம் சேர்ந்து ஐம்பது பேருக்கு ரெடி பண்ணச் சொல்லியிருக்காங்க. உதவிக்கு ஒரு ஆள் கூட கேட்டா பதிலே சொல்ல மாட்டேங்கறாங்க. வேலை முதுகை முறிக்கிறது எனக்கு'' என சலித்தபடியே போனார்.

வீட்டின் வெறுமை மனதை மருட்டியது. வெளியே கிளம்பிப் போய் ஒரு தியேட்டரில் அமர்ந்து, ஏதோ ஒரு

தலையை வலித்தது. மதியம் சாப்பிடாத வயிறு கத்தியதில்
ஒரு டீயாவது குடிக்க வேண்டும் என்றிருந்தது. தியேட்டர்
வாசலில் இருந்த டீக்கடையில் அமர்ந்து ஒரு சிகரெட்டை
யும் டீயையும் குடித்து முடித்து விட்டு வந்து சேர்ந்தபோது
வீடு களை கட்டியிருந்தது. வீட்டின் அனைத்து விளக்கு
களும் எரியவிடப் பட்டிருக்க. இருட்டத் தொடங்கியிருக்கும்
அந்த நேரத்தில் மாளிகை பிரம்மாண்டமாய் ஜொலித்தது.
வெளியே இவ்வளவு அழகாய் இருக்கும் இந்த வீட்டிற்கு
உள்ளே மட்டும் ஏன் சூன்யமாக தெரிகிறது? குமார் உள்ளே
நுழைந்ததும் ரூம் ஸ்பிரேயரும், பூக்களின் நறுமணமும்,
நெய் வாசனையும் காற்றில் மிதந்து வந்தது. அத்தரின் மணம்
வீச, அப்பா ஒரு சின்ன தலையசைப்புடன் அவனைக் கடந்து
போனார். வந்த பத்து நாளில் அவரை இப்போதுதான்
நேருக்கு நேர் பார்க்கிறான். நலம் விசாரிக்கக் கூட தோன்ற
வில்லை இருவருக்கும். பட்டுபுடவை சரசரக்க. வைரநெக்
லஸ் மின்ன வந்தாள் சொர்ணலட்சுமி.

"நீயென்ன இங்கேயே நின்னுட்டு இருக்க? மேல போய்
சீக்கிரம் ரெடியாகி கீழே வா. உனக்கு கோட், சூட், டை எல்
லாம் எடுத்து பெட் மேல வெச்சிருக்கேன்" என்றபடி கொண்
டையைச் சுற்றி நெருக்கமாய் கட்டப்பட்ட மல்லிகைப்
பூக்களைச் சுற்றி பின் குத்தினாள். தன் அறையில் குளித்து
விட்டு தலையை துவட்டியபடியே பார்த்தான் குமார்.
படுக்கை மேல் சாக்லேட் நிற கோட்டும், க்ரீம் கலர் சட்டை
யும், பொருத்தமான காலணிகள், வாட்ச், வைர பிரேஸ்லெட்
எல்லாம் எடுத்து வைக்கப்பட்டிருந்தது.

சட்டென்று எல்லாவற்றையும் விசிறியடிக்க வேண்டும்
போலிருந்தது குமாருக்கு. இந்த வைர நகைகளை எல்லாம்
கல்லைத் தூக்கிப் போட்டு உடைத்து சாப்பாட்டை எல்லாம்
தெருவில் புழுதியில் கொட்டி, புது உடைகளை கிழித்து,
பிரகாசமாய் எரியும் விளக்குகளை உடைத்து, அம்மாவையும்



அப்பாவையும் கூப்பிட்டு கன்னத்தில் பளாரென்று அறைந்
தால் எப்படியிருக்கும்? என்ன செய்வார்கள்?

ரகுநாதபூபதி எதுவுமே பேசமாட்டார். குமாரைப் பிடித்து
வெளியே தள்ளி கதவைச் சாத்தி விடுவார். இறைந்து
கிடக்கிற பொருட்களை சுத்தம் செய்யவும், கிழிந்த உடை
களுக்கு புதிது வாங்கவும் ஆட்களை ஏவுவார். அம்மா சினிமா
அம்மா போல் மகன் பின்னாலேயே ஓடி வந்து அழாமல்
தூணை பிடித்தபடி நடப்பதை அமைதியாய் வேடிக்கைப்
பார்ப்பாள். அத்துடன் தனக்கு ஒரு மகன் இருப்பதை மறந்து
விட்டு அப்பா பழையபடி அவரது வேலையைப் பார்க்கத்
தொடங்கி விடுவார். வாரிசு என்பது தன் ஆண்மையின் அடை
யாளச் சின்னமாக கருதுபவர் அவர். எனவே வீட்டை விட்டு
போனால் தன் கிரீடத்தில் ஒரு கல் விழுந்ததாகத் தான் நினைப்
பாரே தவிர தலையே போனதாக வருத்தப்பட மாட்டார்.

இரண்டாம் முறையாக கதவு தட்டப்படவே அவசரமாக
உடையணிந்து உணவுத் திருவிழாவே நடந்து கொண்
டிருந்தது. சைனீஸ், இந்தியன், அசைவம், இவற்றில் பாதி
கூட காலியாகப் போவதில்லை. சென்னையில் சமயங்களில்
டீ குடிக்கக் கூட ரவியிடம் கடன் வாங்கியது நினைவு வந்தது
குமாருக்கு.

கதர் வேஷ்டிகள், கரை வேஷ்டிகள். ஸபாரி சூட்கள் என
குழுமியிருந்த கூட்டத்தில் குமாரை அழைத்து அறிமுகப்
படுத்தினார் ரகுநாதபூபதி. இவர்தான் இந்த ஜமீன் வம்சத்தின்
அடுத்த வாரிசு வசந்தகுமார். அவனுடன் கை குலுக்கிய
மந்திரி மருதநாயகம் "என்னை அறிமுகப் படுத்திக்க அவ
சியம் இல்லை. இதோ இவரை தெரிந்து கொள். எனக்கு
நெருங்கிய நண்பர். ஒரு வகையில் உறவினரும் கூட.
மிஸ்டர் விஸ்வநாதன். சென்னையில் தொழிலதிபர்."

"வணக்கம்" என்று மரியாதையுடன் சிரித்த குமாரை
வைத்த கண் எடுக்காமல் பார்த்தார் விஸ்வநாதன். அடர்ந்த

நிற உடை வெளிப்படுத்திய நிறமும் ஆறடி உயரமும், பரம்பரை பணம் வெளிப்படுத்திய கம்பீரமுமாய் குமார் அவர் கண்களுக்கு ஒரு முழுமையான ஆண் மகனாக தோன்றினான்.

மனதில் தன்னையறியாமல் சுதியின் அருகே நிறுத்திப் பார்த்தார்.

"தம்பி, இப்ப என்ன பண்ணிட்டு இருக்கீங்க?" என்றார் அவன் கைகளை குலுக்கியபடி.

குமார் பதில் சொல்லும்முன் முந்திக் கொண்ட ரகுநாத பூபதி "கல்லூரிப் படிப்பை கோல்டு மெடலுடன் முடித்து விட்டு வந்தான். மேல்படிப்புக்கு அமெரிக்கா போகப் போறான். அரண்மனை மாதிரி வீட்டையும், சொத்து சுகத்தையும் விட்டுட்டு எதுக்கு கண் காணாத தூரத்திற்குப் போகணும்னு அவங்கம்மாவுக்கு கவலை. நான்தான் சொன்னேன். கல்யாணம் பண்ணி மருமகளையும் கூட அனுப்பி வெச்சிடலாம்னு. ஏதோ சின்னஞ்சிறுசுக கொஞ்ச நாள் போய் வெளிநாடு எல்லாம் சுத்திட்டு வரட்டும். வந்த பிறகு இருக்கவே இருக்கு நம்ம ஜமீன். என்ன சொல்றீங்க?" என்றார் ரகுநாதன்.

"உண்மைதான்" என்று தலையை ஆட்டினார் விஸ்வநாதன்.

சென்னையில் ஒரு ஒண்டு குடித்தன அறை. மாதத்தில் பாதி நாள் வேலை இல்லை. இந்த நிமிடம் பாக்கெட்டில் பத்து ரூபாய் இல்லை. இதுதான் இந்த ஜமீனின் நிலை. நானா அமெரிக்கா போகப் போகிறேன்? அப்பா ஒரேயடியாக போட்ட போட்டில் அசந்து போய் நின்றான் குமார். சொர்ண லட்சுமி தன் பங்குக்கு குமாரை அழைத்துப் போய் சொந்த பந்தங்களிடம் அறிமுகப்படுத்தத் தொடங்கினாள்.

சீருடை அணிந்த பணியாளர்கள் குறிப்பறிந்து பரிமாற ரகுநாத பூபதியின் கனிவான உபசரிப்பில் விருந்து கோலாகலமாக நடந்தது. பீடாவை சுவைத்தபடி கிளம்பியவர்களை வழியனுப்ப வாயில்வரை சென்ற ரகுநாத பூபதியின் கைகளைப்



பற்றிக் கொண்டார் மருத நாயகம், "பூபதி, உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்."

"சொல்லுங்க மருது."

"இங்க வந்து குமாரை பாத்தப்புறம் எனக்கு ஒரு விஷயம் மனசில படுது. நம்ம விஸ்வநாதனுக்கு ஒரு பெண் இருக்கா. ராணி மாதிரி. ஒத்த பொண்ணு. டாக்டரா இருக்கா. குமாருக்கும் அவளுக்கும் ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு தோணுது. பணம். அழகு. அந்தஸ்து எல்லாத்திலும் கூட ரெண்டு குடும்பமும் ஒருத்தருக்கொருத்தர் விட்டவங்க இல்ல. என்ன சொல்றீங்க?"

ஆண் வாரிசு இல்லாத குடும்பம், முக்கியமாய் பணக்காரர்கள். சொத்து முழுவதும் ஒரே பெண்ணிற்கு தான். ரகுநாத பூபதி தேன் குடித்த நரியானார்.

"நீங்களே சொல்லும்போது நான் வேற என்ன சொல்லப் போறேன்? எனக்கு சம்மதம்தான். ப்ராப்தி இருந்தால் நடக்கட்டும்" என்றார் பெருந்தன்மையாய்.

"அப்ப நல்ல நாள் பார்த்து குமாரை கூட்டிட்டுப் போய் ஒரு முறை பெண்ணை பாத்துட்டு வந்துடுங்க." என்றார் மருதநாயகம்.

"அதெல்லாம் எதுவும் தேவையில்லை. தீர்மானமாக மறுத்தார் ரகுநாதபூபதி. நீங்க என்ன எங்க கெடுதலுக்கா சொல்லப் போறீங்க? உங்க வார்த்தையே போதும்."

"இருந்தாலும் பையன் பெண்ணைப் பார்க்க பிரியப் படுவான் இல்லையா?"

"நிச்சயமா மாட்டான். நான் பெருமையா சொல்றேன்னு நினைக்காதீங்க மருது. என் பையன் அந்த ஸ்ரீராம சந்திரன் மாதிரி. அப்பா கிழிச்ச கோட்டை தாண்டாதவன். எந்த கெட்ட பழக்கமும் இல்லாதவன். என் வார்த்தையே போதும். எனக்கு விஸ்வநாதனை ரொம்பப் பிடிச்சிப் போச்சு. அதுவும் நீங்க

சொன்ன சம்பந்தம் வேற. அதனால நாங்க யாரும் பெண்ணை பார்க்கணும்னு அவசியம் இல்ல. மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பார்க்கலாம்.''

ரகுநாத பூபதி மருதநாயகத்தின் வார்த்தையை வேத வாக்காக எடுத்துக் கொண்டவராக கூறிய விதத்தில் மருதநாயகம் மகிழ்ந்து போனார்.

''என்ன விஸ்வநாதன். எதுவுமே பேசாம இருந்தா எப்படி?'' என்றார் விஸ்வநாதனின் தோளில் தட்டி.

''பெண்ணை பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். சுதி மாப்பிள்ளையை பார்த்து அவளுக்குப் பிடிக்க வேண்டும். அவளுக்குப் பிடிச்சிப் போச்சுனா நானோ, சரஸ்வதியோ ஆட்சேபிக்க மாட்டோம். எனக்கு குமாரை பிடித்திருக்கிறதுதான். ஆனால் சுதியின் சம்மதம் தான் முக்கியம்'' என்றார் விஸ்வநாதன்.

''பெண் பையனை பார்க்க விரும்பினால் பார்க்கட்டுமே'' என்றார் ரகுநாத பூபதி.

சரஸ்வதிக்கு கண்டிப்பாய் பிடித்து விடும். படிப்பு, அழகு எதிலும் குறையில்லை. எனவே சுதிக்கும் பிடித்துதான் ஆக வேண்டும். மகளுக்கு வந்த இடத்தில் இப்படி மாப்பிள்ளை கிடைப்பான் என்று நினைத்தே பார்க்கவில்லை. மருதநாயகம் வற்புறுத்தி அழைத்து வந்ததே இந்த அறிமுகத்திற்காகத்தான் இருக்க வேண்டும். யோசனைகளில் ஆழ்ந்து போனார் விஸ்வநாதன்.

ஒரு கையால் விஸ்வநாதனை பற்றியபடி மறு கையால் ரகுநாதபூபதியின் கரங்களைப் பற்றிய மருத நாயகம் இருவர் கரங்களையும் இணைத்தார். ''நம் உறவு முறையில் முக்கிய புள்ளிகளான நீங்கள் இருவரும் இணைய வேண்டும். பொது வாழ்க்கையில் இருக்கும் எனக்கு இரண்டு பெரிய கரங்களின்



இருவரும் கை குலுக்கிக் கொண்டனர். பிரியா விடை பெற்று விஸ்வநாதனுடன் கிளம்பினார் மருதநாயகம்.

வீட்டின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப் பட்டிருந்தன. ஹாலில் நீல நிற விளக்கு ஒளி வீசியது. விருந்தினர் திரும்பிப் போன பின் வேலையாட்களும் கூட தூங்கப் போயிருந்தனர். தன் அறைக்குப் போக கிளம்பிய குமாரை சொர்ணலட்சுமி கூப்பிட்டாள்.

''என்னம்மா?''

''நீ போட்டிருக்கிற வைர மோதிரம், பிரேஸ்லெட்டை எல்லாம் அப்பா வாங்கிட்டு வரச் சொன்னார். பீரோவை பூட்டணுமாம்.''

எடுத்து வைக்கும் டிரஸ்ஸையும், நகைகளையும் அணிந்து வந்து விருந்தினர் முன்னால் கீ கொடுத்த பொம்மை போல் நடமாடுவதும், அவர்கள் போன பிறகு திரையை இழுத்து விட்டதும் உள்ளே நாடகத்தின் அடுத்த காட்சிக்கு உடையை மாற்றுவது போல் மாற்றுவதும். சே! ஷோகேஸ் பொம்மையாய் இன்னும் எத்தனை நாள் இந்த கண்ணாடி பெட்டிக்குள் நிற்பது?

பதில் பேசாது கழற்றிக் கொடுத்தான் குமார்.

வார்த்தைக்கு வார்த்தை ஜமீன் என்று சொல்லிக் கொண்டு, பெட்டி நிறைய பணமும் நகையுமாய் பூட்டி வைத்திருக்கும் அப்பா இன்னும் எத்தனை வருஷம் வாழப் போகிறார்? இறந்த பிறகு சட்டம் எனக்கு கொடுப்பதை உயிரோடு இருக்கும்போது அவரே கொடுத்தால் என்ன? ஏன் எனக்கு மட்டும் வீடு என்பது தங்கக் கூண்டாகவும், வேலை என்பது கையில் மாட்டிய விலங்காகவும், வருமானம் எட்டாக் கனியாகவும் இருக்கிறது. இரவெல்லாம் தூங்காத குமாருக்கு காலையில் விடியும்போதே கண்ணெல்லாம் நெருப்பாய்

திருக்கவே முடியவில்லை. ஏ.சி.யின் குளிர் உடம்பு எலும்பை ஊடுருவிச் சென்றது.

யாராவது ஸ்விட்சை ஆப் செய்து விட்டு கம்பளி எடுத்து போர்த்தி விட்டால் நன்றாக இருக்கும். பசியில்லாத நேரங் களில் எல்லாம் வந்து சாப்பிடச் சொல்லி தொல்லை கொடுக்கும் தவிசுவாவது இப்போது வந்தால் பரவாயில்லை. சிறிது நேரம் சமாளித்துப் பார்த்தவனால் முடியாமல் தலை வலி மண்டையை பிளந்தது. கட்டிலுக்கு அருகிலிருந்த டீபாயின் மேலிருந்த செல்போனை எட்டி எடுத்தான். கீழே ஹாலிலுள்ள போனுக்கு டயல் செய்தான். முழுதாய் ஒரு ரிங் போய் முடிந்த பிறகு ரகுநாத பூபதி போனை எடுத்தார்.

"நான் குமார் பேசுகிறேன்" என்ற குரலைக் கேட்டதும் திரும்பி மனைவியைப் பார்த்தார். "துரை இன்னும் தூங்கி எழுந்திருக்கலையா? கீழே இறங்கி வந்து காபிகூட குடிக்க முடியாதா? பெட் காபிக்கு ஒரு போன் காலை வேஸ்ட் பண்றான்" என்றபடியே ரிசீவரை கீழே வைத்துவிட்டு, "ஏய் கணக்குப் பிள்ளை அந்த தேங்காய் வியாபாரிகிட்ட காசு வாங்கிட்டு வந்தியா? களத்துல கிடக்கிற நெல்லை அள்ளி மச்சுல கொட்டுங்க." என ஆட்களை விரட்டியபடியே வெளியே போனார்.

'என்ன விஷயம் என்று கேட்கக் கூட சிரத்தையில்லாமல் என்ன மனிதர் இவர்!' மனதிற்குள்ளேயே திட்டினான் குமார். படியில் யாரோ ஏறி வரும் காலடி ஓசை கேட்டது. கதவு தட்டப்படுவதற்காக குமார் காத்திருந்தான். காலடி ஓசை கதவை கடந்து மெதுவாய் தேய்ந்து மறைந்தது. லேசாய் வயிற்றை புரட்டியது. இனி காத்திருப்பதில் பயன் இல்லை. நாமாகத்தான் எழுந்து போக வேண்டும். ஜுரத்தில் நடுங்கிய கால்களை அழுத்தமாய் ஊன்றி எழுந்த குமார் ஒரு சால் வையை எடுத்து சுற்றிக் கொண்டான். படிக்கு ஒரு காலாய் வைத்து மெதுவாய் கீழே வந்தவன், அதற்கு மேல் முடியாமல்



கடைசிப் படியில் அமர்ந்தான். குமட்டிக் கொண்டு வரவே, எழுந்து பாத்ரூமுக்கு ஓடவும் அவகாசமின்றி அங்கேயே வாந்தி எடுத்தான். சத்தம் கேட்டு சொர்ணமும் வேலையாட் களும் எட்டிப் பார்த்தனர்.

"என்னாச்சுடா, இங்கயே வாந்தி எடுத்து வெச்சுருக்க?" என்ற சொர்ணலட்சுமி ரத்தமாய் சிவந்திருந்த விழிகளைப் பார்த் ததும் "ராத்திரி தண்ணி போட்டியா?" என்றாள். இதுவரை மதுவை கையாலும் தொடாத குமாருக்கு ஆத்திரம் வந்தது. "நான் தண்ணி போட்டதை நீ பாத்தியாம்மா?" என்றான்.

"பாக்கலைன்னா தெரியாதா? விடிஞ்சு இவ்வளவு நேரம் கழிச்சி கீழே இறங்கி வர்ற. கை கால் நிலை கொள்ளல. நடு வீட்ல வாந்தி எடுக்கற. நல்லவேளை இன்னும் உங்கப்பா கண்ணுல படல. இந்த அசிங்கத்தை எல்லாம் சென்னையி லேயே வெச்சுக்கக் கூடாதா? இப்ப வேலையாட்கள் எல்லாம் பாத்துட்டாங்க. அவங்க போய் வெளியே சொன்னால் நாளைக்கு நாம் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா?"

"போதும் நிறுத்தும்மா. சும்மா பேசிட்டே போகாதே. தண்ணி போட்டா மட்டும்தான் தடுமாறுவாங்களா? காய்ச்சல் வந்தா வாந்தி வராதா? எனக்கு விடியற்காலையிலேயே நல்ல ஜுரம். நீங்க யாரும் மேல வந்து எட்டிக் கூட பாக்கல. நானா தாங்க முடியாம இறங்கி வந்தா, என்ன ஏதுன்னு கேட்கறதை விட்டு கூசாம பழி போடற? மத்தவங்க என்னைப் பற்றி தப்பா சொன்னா கூட எம் பையன் அப்படியெல்லாம் இல்லைன்னு சண்டை போடறதை விட்டுட்டு நீயே தப்பா பேசறயே! சே! நீயெல்லாம் ஒரு அம்மாவா?"

"என்னடா வாய் ரொம்ப நீளுது. காய்ச்சல் வந்தா டாக்டர் கிட்ட போய் காட்டணும். மருந்து மாத்திரை சாப்பிடணும். அதை விட்டுட்டு இப்படியா வீட்ல வாந்தி எடுத்து ரத்தினக் கம்பளத்தை பாழ் பண்ணுவாங்க. சரி, சரி, ஒரு ஆட்டோல போய் டாக்டரை உடனே பாத்துட்டு வந்துடு. இன்னிக்கு

நாயிற்றுக்கிழமை. அவர் அரை நாளுடன் கிளினிக்கை மூடிட்டு கிளம்பிடுவார்.''

குமார் மெதுவாய் நடந்து வாசலில் நின்று கொண்டிருந்த இரண்டு கார்களையும் கடந்து போய் ஆட்டோ தேடினான். அங்கிருந்த கண்கள் ரகுநாத பூபதியின் பிரத்தியேக உபயோகத்திற்கு மட்டுமே. அவருடன் போனால் மட்டுமே மகனோ, மனைவியோ கார் சவாரியை அனுபவிக்க முடியும். தங்களது தனிப்பட்ட தேவைகளுக்கு வீட்டிலுள்ளவர்கள் கால்களையும் ஆட்டோக்களையுமே நம்ப வேண்டும்.

பாக்கெட்டிலிருந்த பர்ஸை பிரித்தான் குமார். ஆட்டோவிற்கு கொடுக்க டாக்டருக்கு, மருந்து வாங்க இருநூறு ரூபாயாவது வேண்டும். திரும்ப வீட்டிற்கு வந்தான்.

''அதுக்குள்ளயா டாக்டர்கிட்ட போயிட்டு வந்துட்ட?'' என்றாள் சொர்ணலட்சுமி.

''பணம் எங்கிட்ட குறைவாதான் இருக்கு. உங்கிட்ட ஒரு இருநூறு ரூபா இருக்குமா? அடுத்த வாரம் என்னோட பணம் வந்ததும் குடுத்துடறேன்.'' என்றான் குமார்.

''உனக்குத் தெரியாதா குமார்? உங்கப்பா எங்கிட்ட என் றிக்காவது இந்தா உன் செலவுக்குன்னு பணத்தை கண்ணுல காமிச்சிருக்காறா? விருந்து வேடிக்கைன்னு பெருமைக்கு செலவு செய்வாரே தவிர ஒரு பத்து பைசா கையில கொடுப்பாரா? ஹூம் என்ன பாவம் செஞ்சேனோ இந்த மனுஷன் கிட்ட வந்து மாட்டிக்கிட்டேன். நம்ம தவிசு கூட சம்பளம் வாங்கினதும் பொண்டாட்டி கையிலதான் கொண்டு போய் கொடுக்கிறார். பணம் பணம்னு பேயா அலையற இந்த மனுஷனை கட்டிக்கிட்டு நான் வேலைக்காரியையும் விட கேவலமா போயிட்டேன். ஒரு நாள் கிழமைன்னாலும் சரி. நாய் நொடி வந்தாலும் சரி பத்து தரம் பணம் கேட்டாலும் பதிலே பேச மாட்டார். யாரிடம் சொல்லி என்ன? பொறந்த குணத்தை மாத்தவா முடியும்?'' கண்ணைக் கசக்கினாள் சொர்ணலட்சுமி.



புருஷனுக்குத் தெரியாமல் தேங்காயும் மாங்காயும் எடுத்து விற்று, கொஞ்சம் கொஞ்சமாய் பண்ணையாட்களுக்கே அவள் வட்டிக்கு விட்டிருப்பது குமாருக்குத் தெரியும். சமையல் ஆட்கள் இல்லாத சமயம் சொந்த வீட்டிலேயே சாமான் திருடி அருகிலுள்ள மளிகை கடையில் விற்பாள். குமார் வரும்போது கவனக் குறைவாய் வைத்துட்டு போய்விடும் வாட்ச், செல்போன்கள் கூட அடுத்த முறை வருவதற்குள் பணமாகி விடும். அவ்வளவு பெரிய மாளிகையின் சொந்தக்காரி. ஊரிலேயே பெரிய குடும்பத்தின் தலைவி, கண்ணில் பட்டவை எல்லாம் கணவனுக்குத் தெரியாமல் காசாக்கத் தெரிந்திருந்தாள்.

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் மட்டுமே தருவேன். அதற்கு மேல் பணமோ பாசமோ என்னிடம் எதிர்பார்க்கக் கூடாது என்ற ரகுநாத பூபதியின் கட்டுப்பாடான நடத்தை சொந்த வீட்டிலேயே தப்பு பண்ணுமளவு அவளை மாற்றியிருந்தது. பணம் இல்லாத வறுமையில் கூட பாசமாவது தாராளமாகக் கிடைத்தால் அதையே பற்றுக்கோடாகக் கொண்டு நிறைய பெண்கள் வாழ்ந்து முடித்து விடுகிறார்கள். பொருளாதார சுதந்திரம் இல்லாத அந்தக் காலத்தில் கூட பெண்கள் கணவனின் கடைக்கண் பார்வையை கொண்டே காலத்தைக் கழித்தார்கள். அன்பான ஒரு வார்த்தைக்கே பஞ்சமாகிப் போன ரகுநாத பூபதியிடம் அவள் எதைத்தான் எதிர்பார்க்க முடியும்? திருமணமான முப்பது வருடங்களில் சொர்ணலட்சுமி ஒரு நாளும் கணவனின் அருகே அமர்ந்து அரட்டை அடித்ததில்லை. உனக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என்று யாரும் அவளைக் கேட்டதில்லை.

இந்த விஷயம் நீ செய்தாக வேண்டும் என்றுதான் கட்டளை வருமே தவிர செய்ய முடியுமா? என்று கேட்க மாட்டார்கள். அன்பைப் பெற்று அறியாததால் அன்பு செலுத்து

வது அவசியம் என்று அவளுக்குத் தெரியவில்லை. விசித்திரமான குடும்ப சூழ்நிலையில் வளர்ந்த குமாரின் குணமும் வித்தியாசமாக மாறிப் போனதை அந்த வீட்டில் யாரும் உணரக் கூட இல்லை. மகன் தன்னிடம் ஒட்டாத போது 'அப்பா மாதிரி' என அலட்டிக் கொள்ளாமல் ஏற்றுக் கொண்டாள். தன் பிற்காலத்துக்கு கணவனோ, மகனோ அனுசரணையாய் இருக்க மாட்டார்கள் என்ற தற்காப்பு உணர்வு மேலோங்கியது. பணம்தான் தனக்கு ஒரே பாது காப்பு என்ற எண்ணம் தலை தூக்கியது. பெற்ற மகளுக்கு ஒன்று என்ற போதிலும் அந்த பணத்தை இழக்க அவர் தயாராக இல்லை.

மருந்து கடையில் கேட்டு காய்ச்சலுக்கான மாத்திரையை விழுங்கிவிட்டு குமார் மாலைவரை தூங்கி எழுந்த போது தலை பாரம் இறங்கியிருந்தது. தவிசு ரசத்தை கரைத்து டேபிளின் மீது வைத்து விட்டுப் போயிருந்தார். முகம் கழுவி விட்டு வந்து சாதத்துடன் சேர்த்து குடித்தவன். இன்னும் லேசாய் உடல் வெதுவெதுப்பாய் இருக்கவே மறுபடி மாத் திரையை போட்டுக் கொண்டு சேரில் அமர்ந்தான்.

பேசாமல் சென்னைக்குக் கிளம்பி விட்டால் என்ன என்றிருந்தது. கிளம்புவதென்றால் ரயிலுக்கு முதலில் பணம் வேண்டும். மறுபடி வேலை கிடைத்து சம்பளம் வாங்கும் வரை செலவுக்கும் பணம் வேண்டும். அது இருந்தால்தான் கிளம்ப முடியும். தாத்தா வைத்து விட்டுப் போயிருக்கும் வட்டித் தொகை சமயங்களில் இப்படித்தான் போதாமல் போய் விடுகிறது. இங்கே இருந்தால் சாப்பாடும், அறை வாடகையும் மிச்சம். ஆனால் மற்ற செலவுகளுக்கு யாரும் கடன் கூட கொடுக்க மாட்டார்கள். இந்த வீட்டில் சாவது என்று முடிவெடுத்தால் கூட அவரவர் சொந்த பணத்தில்தான் மருந்து வாங்கி சாக வேண்டும்.

இந்த வீட்டை விட்டு, இந்த சுயநல கும்பலை விட்டு, இந்த ஊரை விட்டு எங்காவது போக வேண்டும். என்னைத்



தேவைப்படாதவர்களுக்கு நானும் தேவையில்லை. போய் விட வேண்டும். எங்கே போவது? போய் என்ன செய்வது? வேலை வேட்டையாடி, கிடைக்கிற சம்பளத்தில் பட்ஜெட் போட்டு செலவு பண்ணி, ஒரு ப்ரமோஷனுக்காக ஆண்டு கணக்கில் நாயாய் உழைத்து, தாமதமாய் போனால் பணிவாய் மன்னிப்பு கேட்டு.. 'ஹக்...' யாரால் முடியும் அதெல்லாம்? பார்க்கலாம். ஏதாவது லாட்டரி அடித்தால்தான் உண்டு. நினைத்தபடியே உறங்கிப் போனான்.

ஒரு வாரம் கழித்து உண்மையாலுமே லாட்டரி அடித்தது குமாருக்கு.

ஒரு வார காய்ச்சலில் தளர்ந்து போன குமாருக்கு அன்று தான் உடம்பு சற்று தேறியிருந்தது. ஒரே வீட்டிலிருக்கும் அப்பாவையும் பார்த்து ஒரு வாரம் ஆகியிருந்தது. "எப்படி யிருக்கிறாய்?" என விசாரித்தால் கைப் பணத்துக்கு ஆபத்து வந்துவிடும் என்ற பயத்தில் அம்மா கூட எட்டியே பார்க்க வில்லை. சூடான நீரில் குளித்து விட்டு சமையலறைக்கு வந்தான் குமார்.

காய்ச்சல் கண்ட வாய் கசந்து வழிந்தது. நன்றாக ஏதாவது சாப்பிட வேண்டும் போலிருந்தது.

"தவிசு, என்ன சமையல் இன்னிக்கு?" என்றபடி டேபி ளில் அமர்ந்தான்.

"சாதம், கெட்டி பருப்பு, அவரைக்காய் பொரியல், புளி ரசம்."

"சே! காரசாரமாய் ஏதாவது செய்ய மாட்டீங்களா?"

"அப்பாவுக்கு வாய்வு இருக்கறதால கிழங்கு வகைகள் ஆகாது. சர்க்கரை இருப்பதால் இங்கிலீஷ் காய்கறிகளும் ஆகாது. காரக் குழம்பு, புளிக்குழம்பு எல்லாம் பிடிக்காது. என்னை என்ன செய்யச் சொல்றீங்க?" என்றாள் தவிசு.

இது வீடில்லை. தனி மனிதனுக்காக நடத்தப்படும் ஹோட்டல். இங்கு எதையும் எதிர்பார்க்காமல் இருப்பதுதான்

புத்திசாலித்தனம். பதில் பேசாது ரசமும் ஊறுகாயும் வைத்து சாப்பிடும் குமாரைப் பார்க்க தவிசுக்கே பாவமாக இருந்தது. காய்ச்சலாக கிடந்து தினமும் ரசம்தான் சாப்பிட்டான். குணமான பிறகாவது நல்ல சாப்பாடு சாப்பிடலேன்னா எப்படி தெம்பிருக்கும்? இந்த அம்மாவுக்காவது தெரியணும். நாம சொன்னதைத்தானே சமைக்க முடியும். நேத்து கலெக்டர் வந்தப்ப கூட இருபது வகை பரிமாறினாங்க. நானே பனிரெண்டு ஐட்டம் ரெடி பண்ணினேன். காலையிலதான் மிச்சத்தை வெளியே கொட்டிவிட்டு பாத்திரத்தைத் துலக்கப் போட்டேன். வீட்டுக்கு ஒரே பையன். வாய்க்குப் பிடிச்ச மாதிரி செஞ்சி போட்டா என்ன? ஒருநாள் செய்த செலவை ஈடுகட்ட பத்து நாள் பழையது சாப்பிடுவதில் என்ன சிக்கனம் இருக்கிறது? தனக்குள் நொந்து கொண்டாள்.

சாப்பிட்டு விட்டு குமார் ஹாலுக்குப் போன போது சொர்ணலட்சுமி எதிரே வந்தாள். ''உன்னைப் பார்க்கத்தான் மேலே போய் தேடிட்டு வந்தேன். நீ இங்க இருக்க. அப்பா உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லச் சொன்னார்.''

''ஓ அப்பாவிற்கு நான் வீட்டில்தான் இருக்கிறேன் என்று தெரியுமா?'' என்றான் கேலியாக.

அதன் பொருளை புரிந்து கொள்ளாமல் ''தெரியுமே! அப்பா சொன்னார். இப்ப நீ சென்னைக்கு எல்லாம் போக வேண்டாம் என்று.''

''ஏன் இங்கேயே ஏதாவது தொழில் தொடங்கப் போகி றோமா?''

''அதெல்லாம் இல்லை. உனக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணியிருப்பதாகச் சொன்னார்.''

''எனக்கு கல்யாணமா? அதென்ன திடீர்னு வந்து சொல் றீங்க? மரத்திலிருந்து தேங்காய் பறிக்கற மாதிரி, பொண்ணை யும் பறிச்சிட்டு வந்திருக்கீங்களா என்ன?''



''தேங்காயும் இல்ல, மாங்காயும் இல்ல. அன்னிக்கு மினிஸ்டர் மருதநாயகம் நம்ம வீட்டுக்கு வந்தப்ப, அவர்கூட வந்தாரே உயரமா, கண்ணாடி போட்டுகிட்டு. விஸ்வநாதன்னு. அவருடைய பெண்ணாம். ஒரே பெண். ஏகப்பட்ட சொத் துக்கு தனி வாரிசு. பெண் டாக்டராம். அப்பாவை எதிர்பார்க் காம அவளே சம்பாதிக்கிறாளாம். பெரிய வீடாம். அப்பா சென்னையில் தெரிந்தவர்களிடம் விசாரித்திருக்கிறார். அவ ருக்கு ரொம்பப் பிடித்து விட்டது. இன்னும் நாப்பது நாளில் கல்யாணம். மண்டபத்துக்கு அட்வான்ஸ் கொடுத்தாகி விட்டது.

''என்னம்மா விளையாடறியா? கல்யாணமெல்லாம் இப்படி மேஜிக் மாதிரியா நடக்கும்? நான் அவங்களைப் பார்க்க வேண்டாமா? அவங்களுக்கு என்னைப் புடிக்க வேண்டாமா?''

''அப்பா மருதநாயகம் முன்னிலையில் என் பையன் நான் சொன்ன வார்த்தையை மீறாதவன் என்று சொல்லி விட்டார். எனவே இப்ப அதை மாற்ற முடியாது. இப்ப போய் பையன் பெண்ணை பார்க்கணுமாம்னு கேட்க முடியாது. எல்லாம் விசாரிச்சாச்சு. பொண்ணு மாநிறமா இருந்தாலும் களையா லட்சணமா இருக்காம். அவங்கப்பாவுக்கு பொண்ணுன்னா உயிராம். பொண்ணும் அப்பா கிழிச்ச கோட்டை தாண்டவே தாண்டாதாம். அவங்கப்பா உன்னை பத்தி சொன்னதும் நீங்க சொன்னா சரின்னு சொல்லிடிச்சாம். அவங்கம்மாவுக்கும் உன் போட்டோ பாத்தே புடிச்சிப் போச்சாம். இதுக்கு மேல என்ன வேணும்னு அப்பா போன்ல பேசி நாள் குறிச்சிட்டார்.''

''எனக்கு! எங்கிட்ட யாராவது போட்டோ காட்டினீங்களா? பெண் பார்க்கக் கூப்பிட்டீங்களா? ஒரு வேளை அந்தப் பொண்ணைப் பிடிக்கலைன்னா?''

குமார் பேசிக் கொண்டிருக்கும் போதே ரகுநாதபூபதி உள்ளே வந்தார்.

அவரைப் பார்த்ததும் சொர்ணம் உள்ளே ஓடி வெள்ளி சொம்பில் நீருடன் வந்தார். ஒரு வாய் தண்ணீரைக்

குடித்தவர் குமாரிடம் திரும்பி, ''அப்படி ஒரு வேளை
உனக்குப் பெண்ணைப் பிடிக்கலைன்னா அப்படியே
எங்காவது போயிடு. எனக்கு பிறகுகூட பணம் காசுன்னு வீட்ல
கால் வைக்க முடியாதபடி பண்ணிடுவேன்'' என வழக்கமாய்
அப்பாக்கள் பேசும் வசனத்தை பேசினார். எட்டிப் பார்த்த
கணக்குப் பிள்ளையிடம் ''ஏய் கணக்கு. பத்திரிகை மாடல்
அனுப்பறேன்னு பிரிண்டிங் பிரஸ்ல சொன்னானே, அனுப்
பிட்டானா?'' என விசாரித்தபடி எழுந்து போனார்.

உள்ளே போன குமாரின் பின்னால் வந்தாள் சொர்ண
லட்சுமி.

''குமார் நான் அப்பாவுக்கு சப்போர்ட் பண்ணல. உனக்கு
அறிவுரையும் சொல்லல. ஆனா எனக்கு மனசுல நல்ல
துன்னு பட்ட ஒரு விஷயத்தை சொல்லட்டுமா?''

அம்மாவை ஆச்சரியமாக பார்த்தான் குமார். ''அப்படி
யெல்லாம் பட்டுக்க மாட்டியே நீ? சொல்லு பார்க்கலாம்.''

''குமார், உனக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. நினைத்துப்
பாரேன். உனக்கோ உருப்படியான வேலையோ, வரு
மானமோ இல்லை. உங்கப்பா அவர் உயிரோட இருக்கிற
வரை நமக்கு பத்து பைசா கொடுக்க மாட்டார். அவர்
தெரிஞ்சோ தெரியாமலோ உனக்கு வாழ்க்கையில் செய்
திருக்கிற நல்ல காரியம் இந்த பெண்ணை பேசி முடித்
ததுதான். பெண்ணின் அப்பா வசதியானவர். உனக்கு தொழி
லுக்கு வேண்டிய ஏற்பாட்டை அவரே செய்வார். அப்படிச்
செய்யாட்டி கூட பொண்ணு சம்பாதிக்கிறா. யாரையும்
எதிர்பார்க்க வேண்டியிருக்காம மாசமானா அவ சம்பளம் உன்
கைக்கு வந்துடும். யோசிச்சி பார். உனக்கேப் புரியும்.''

"பிச்சைக்காரர்களுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமையில்லை."
குமாருக்கு எப்போதோ படித்த பொன்மொழி நினைவுக்கு
வந்தது. அவனைப் பொறுத்தவரை அது உண்மைதான்.



விடுபடும் சந்தர்ப்பம் இத் திருமணத்தின் மூலமாய் கிடைக்
கும்போது அதை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?
தெரிந்தோ தெரியாமலோ அம்மா ஒரு நல்ல யோசனை
சொல்லியிருக்கிறாள். அதை அப்படியே பிடித்துக் கொண்
டால் நான் தப்பித்துக் கொள்ளலாம்.

அதற்கு மேல் எதுவும் யோசிக்காமல் அம்மாவிடம் தலை
யாட்டினான்.

* * *

காலண்டரில் தேதியைக் கிழித்தாள் சுதி. அப்பா ஊருக்
குப் போய் இன்றுடன் மூன்று நாட்கள் ஆகி விட்டது. நாளை
தான் வருகிறார். தினமும் போன் செய்து கொண்டுதான்
இருக்கிறார். ஆனாலும் அவரில்லாமல் வீடு வெறிச்சோடி
கிடக்கிறது. சமீபத்தில் ஒரு மைல்ட் அட்டாக் வந்து குண
மானதிலிருந்து அப்பாவை வெளியூரில் தங்க அவர்கள்
அனுமதிப்பதேயில்லை.

இப்பவும் ''மருத நாயகம் ரொம்ப வற்புறுத்தறார் சுதி.
சொந்தம்ங்கிறதுக்காக இல்லைன்னாலும் அவர் மந்திரி
பதவிக்காவது மரியாதை கொடுக்கணுமே! நானும் இப்ப
வெல்லாம் எங்கேயும் போறதில்லையா. எனக்கு டூர் போகிற
மாதிரி ஒரு சேன்ஜ்சாக இருக்கும்'' என சமாதானப் படுத்தி
விட்டுதான் கிளம்பினார். அம்மா என்னதான் பார்த்துப் பார்த்து
கவனித்தாலும் அப்பா இல்லாத குறை தெரியத்தான் செய்
கிறது. மனதிலுள்ளதை அவரிடம் கொட்டுவதைப் போல
மற்றவர்களிடம் சொல்ல முடிவதில்லை. ஜன்னல் கம்பி
களைப் பிடித்தபடி வெளியே பார்த்தாள். கேட்டுக்கு அருகே
காவலாளிடம் பேசியபடி பாலம்மாவின் மகன் நின்று கொண்
டிருந்தான். பனிரெண்டாம் வகுப்பு படிக்கிறான். நல்ல
பையன். ஐந்தாவதோடு படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்
குப் போய்க் கொண்டிருந்தவனை அப்பாதான் அழைத்து
அறிவுரை கூறி மேற் கொண்டு படிக்க வைக்கிறார். ஒவ்
வொரு தேர்விலும் வகுப்பில் முதலாவதாக வருவான்.

"அவன்தான் என்னைய உட்கார வெச்சி சோறு போடப் போகிறான்" என பாலம்மா ரொம்பப் பெருமையாகச் சொல்வாள். "அவன் உன்னை உட்கார வெச்சிகிட்டா எங்களுக்கு யார் சோறு போடுவா?" என சுதி கிண்டல் செய்தால், "உன்னை விட்டு நான் போவேனா கண்ணு!" என சுதியின் முகவாயை தொட்டு முத்தமிடுவாள்.

சுதியைப் பார்த்ததும் "அக்கா வணக்கம்க்கா அம்மாவை பார்க்க வந்தேன்" என்றான் பாலம்மாவின் மகன் வெங்கடேசன்.

"நீ எப்படிப்பா இருக்க? இந்த வருடம் ஸ்கூல் முடிஞ்சிடும். மேற்கொண்டு என்ன படிக்கப் போற?"

"உங்க மாதிரி டாக்டர் ஆகப் போகிறேன். நீங்கதான்க்கா என் ரோல் மாடல்."

"வெரிகுட்" என சிரிப்புடன் அவன் தோளைத் தட்டினாள் சுதி. "டாக்டர் ஆனா பத்தாது. பெஸ்ட் டாக்டர் ஆகணும். எந்த வேலையைச் செய்தாலும் நூறு சதவீதம் அர்ப்பணிப்போட அதைச் செய்யணும். நம்ம கடமையை ஒழுங்கா செஞ்சா நாம யாருக்கும் பயப்படத் தேவையில்லை. எதற்காகவும் எங்கேயும் சலுகையை எதிர்பார்த்து கைகட்டி நிற்க வேண்டியதில்லை. சரியா?"

"சரிக்கா" என்றான் வெங்கடேசன் பணிவுடன்.

"உங்கம்மா உள்ளே இருப்பாங்க. போய் பாத்துட்டு சாப்பிட்டு விட்டு போ" என்றபடி கிளம்பினாள் சுதி.

## 6

அன்று எமர்ஜென்ஸி வார்டில் டியூட்டி போட்டிருந்தார்கள் சுதிக்கு. ஒவ்வொரு நிமிடமும் கவனம் தேவைப்படும் வார்டு அது. ஆபத்தான நிலையில் இருப்பவர்களே அனுமதிக்கப்பட்டிருக்கும் வார்டு என்பதால் எல்லா மருத்துவருக்குமே தனிப்பட்ட கவனம் இருக்கும். ஆபரேஷன் தியேட்டரி



லிருந்து ஐ.சி.யு.விற்கு மாற்றப்பட்ட ஒரு நோயாளிக்கு சலைனும், ப்ளட்டும் ஏற்றிக் கொண்டிருந்தபோது அவசரமாய் ஒரு ஆளை ஸ்டெக்ரச்சரில் கொண்டு வந்தார்கள். வயிற்றை சுற்றி கட்டு போடப்பட்டிருந்தது. சுற்றியிருந்த வெள்ளைப் போர்வை ரத்தத்தால் சிவப்பாக நிறம் மாறியிருந்தது. அதிகப்படி ரத்த இழப்பால் நோயாளி நினைவு தப்பியிருந்தான்.

இருபது வயதுதான் இருக்கும். இரத்தத்தை துடைத்து காயத்தை கவனித்த சுதிக்கு அது கத்தியால் குத்தப்பட்ட காயம் என்பது புரிந்தது. கத்தி ஆழமாய் இறங்கியிருந்ததில் விலா எலும்புகள் முறிந்திருந்தன. ஜூனியர் டாக்டர்கள் இருவர் முதற்கட்ட சிகிச்சைகளில் இறங்கியிருக்க, ஆக்ஸிஜன் பொருத்த ஏற்பாடு செய்துவிட்டு சுதி அறுவை சிகிச்சை நிபுணருக்கு தகவல் சொன்னாள். வார்டிலேயே இருந்த சர்ஜன் கனகசபை விரைந்து வந்து நோயாளியை கவனிக்கத் தொடங்கவும் சுதி அறைக்கு வெளியே வந்தாள். பேஷண்ட் கூட வந்தவர்கள் யார் என வார்டு பாயை விசாரித்தாள். அவன் கைகாட்டிய இடத்தில் இரண்டு பேர் நின்று கொண்டிருந்தனர். இளைஞர்கள்தான். ஒருவன் பூனை கண்ணும் குறுந்தாடியுமாய் அலட்சியமான பார்வை பார்த்தான். இன்னொருவன் நல்ல கறுப்பில் வாட்டசாட்டமாய் பாக்கெட்டில் கையை விட்ட படி, "என்ன விஷயம்?" என்றான்.

"பேஷண்டுக்கு நீங்க என்ன உறவு?" என்றாள் சுதி.

"நண்பர்கள்" ஒரே வார்த்தையில் பதில் வந்தது.

"அவங்க அம்மா, அப்பா, உறவினர்கள் யாரும் கூட வரலயா?"

"அவன் அநாதை. அத்துடன் உறவினர் புடைசூழ வர இது கல்யாண வீடா என்ன?"

நோயாளி உயிருக்குப் போராடும் நிலையில் விளையாட்டாக பேசுவதென்றால் அது சம்பந்தப்படாதவர்களால்தான்

முடியும். காயம் பட்டிருப்பவனுக்கும் இவர்களுக்கும் நிச்சய மாக நட்பு இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

"பேஷண்ட்டுக்கு காயம் எப்படி ஏற்பட்டது?" என்றாள் சுதி.

"எங்களுக்குத் தெரியாது" என்றான் தாடிக்காரன்.

"தெரிந்தால்தான் நாங்க மேற்கொண்டு சிகிச்சை செய்ய முடியும்."

"நாங்க ரூமுக்குப் போனபோது இவன் கீழே விழுந்து கிடந்தான். இந்த ஹாஸ்பிட்டல் பக்கமா இருக்கறதால தூக்கிட்டு வந்தோம். எங்களுக்கு வேறு எதுவும் தெரியாது" என்றான் இன்னொருவன்.

"நோயாளியை யாரோ கத்தியால் குத்தியிருக்கிறார்கள். கத்தி ஆழமாய் இறங்கியிருக்கிறது. இது கொலை கேஸ். நான் போலீசுக்கு இன்பார்ம் பண்ண வேண்டும்."

இருவரின் முகமும் கடுமையாக மாறியது. "டாக்டர் நோயாளிக்கு சிகிச்சை செய்ய வேண்டியது உங்க கடமை. அதை மட்டும் செய்யுங்க.. பணம் எவ்வளவு வேணுமோ கேட்டு வாங்கிக்குங்க. மத்ததெல்லாம் உங்களுக்குத் தேவையில்லாதது."

"டாக்டரின் கடமை நோயாளிக்கு சிகிச்சை அளிப்பது மட்டுமல்ல, குற்றங்களையும், விபத்துகளையும் காவல் துறைக்கு தெரிவிக்க வேண்டிய சமுதாயப் பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது. முதலில் இந்த அட்மிஷன் பாரத்தை நிரப்புங்கள்" என பார்மை அவர்களிடம் கொடுத்தாள் சுதி.

நோயாளியின் பெயர், முகவரி, அட்மிஷன் செய்பவர் பற்றிய தகவல்கள் அதில் கோரப்பட்டிருக்க இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி தயங்கி நின்றனர்.

ஐ.சி.யு.வின் கதவைத் திறந்தபடி வேகமாக வந்த நர்ஸ் வசுமதி, "டாக்டர் இப்ப வந்த பேஷண்ட்டுக்கு பிட்ஸ் வந்துவிட்டது" என்றாள். அவளுடன் வேகமாக உள்ளே போனாள் சுதி. அந்த இளைஞனின் உடல் தூக்கி தூக்கிப் போட்டது. இரண்டு முறை கழுத்தை இடதும் வலதுமாய் திருப்பியவன் சடாரென அடங்கினான். சுதி மனம் கனக்க வெளியே வந்தாள்.

இருபது வயது சாகும் வயதா? கத்தியால் குத்தப்படும் அளவுக்கு என்ன தவறு செய்தான்? எந்த வன்முறையில் ஈடுபட்டான்? யோசித்தபடி கதவைத் திறந்து பார்த்தபோது வராண்டா காலியாக இருந்தது. கூட வந்த இருவரும் சொல்லாமல் ஓடி விட்டிருந்தனர். செக்யூரிட்டிகளை அழைத்துத் தேடச் சொன்னாள். மருத்துவமனை முழுவதும் தேடியவர்கள் எங்கும் இல்லை என திரும்பி வந்தார்கள். மருத்துவமனை வாசலில் கேண்டீன் நடத்தும் நாயர் மட்டும் கறுப்பாய் ஒரு ஆளும், அவனுடன் தாடி வைத்த ஒருவனும் வேகமாய் மருத்துமவனை உள்ளேயிருந்து வந்து ஆட்டோவில் ஏறிப் போனதாக சொன்னார். எட்வர்ட் வந்து "டெட் பாடியை என்ன செய்வது மேடம்?" என்று கேட்டான்.

"வேறு என்ன செய்வது? போலீசுக்கு இன்பார்ம் பண்ண வேண்டியதுதான்."

"மேடம் சீனியர் வேற ஊர்ல இல்லை. ஏதாவது பிரச்சினை வந்துடாதே?" எட்வர்ட் தயங்கினார்.

"நம்ம கடமையைத்தானே செய்கிறோம். இதுல பிரச்சனை எங்கிருந்து வரும்?" என்ற சுதி போலீசுக்கு போன் செய்தாள்.

காவல் துறையினர் வந்ததும் வழக்கமான விசாரணையில் ஈடுபட்டனர். லக்னோவில் நடந்த டாக்டர்கள் கான்பரன்ஸை முடித்துக் கொண்டு ஒரு நாள் முன்னதாகவே வந்து விட்ட சுகுமார் உடனே மருத்துவமனைக்கு வந்தார். மருத்துவமனை வாசலில் நிற்கும் போலீஸ் ஜீப்பையும், காக்கி சீருடைகளையும் கண்டு திடுக்கிட்டார். வேகமாய் உள்ளே விரைந்தார். இன்ஸ்பெக்டரின் கேள்விகளுக்கு பதில் சொல்லிக்

கொண்டிருந்த சுதி. அவரைப் பார்த்ததும் "குட் ஈவினிங் ஸார்" என்றார்.

"ஐ திங் திஸ் இஸ் வெரி பேட் ஈவினிங் சுதி. வாட்ஸ் கோயிங் ஆன் ஹியர்?"

போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு சுகுமாரை அறிமுகப் படுத்திய சுதி. அவரிடம் நடந்தவற்றை சுருக்கமாகக் கூறினாள். சுகுமாரிடம் சில கேள்விகளைக் கேட்ட பின்னர்,

சுகுமாரின் வற்புறுத்தலின் பேரில் டெட்பாடியை அப்போதே அரசு மருத்துவமனை மார்ச்சுவரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர். அங்கிருந்த நர்ஸ்கள், வார்டுபாய், ஆயாக்கள், வாட்ச்மேன், நாயர் என ஒருவர் விடாமல் எல்லோரிடமும் துருவித் துருவி கேள்வி கேட்டனர். மீண்டும் வருவோம் என்ற அறிவிப்புடன் அவர்கள் புறப்பட்டுச் சென்றதும் சுகுமார் மிகுந்த கோபத்துடன் சுதியைப் பார்த்தார்.

"மூன்று நாட்கள் நான் ஊரில் இல்லை என்றதும் மருத்துவமனை நடக்கும் லட்சணம் இதுதானா?"

"ஸார் நான் என் கடமையைத்தான் செய்தேன்."

"எது உன் கடமைன்னு. உன்னை விட மூத்த டாக்டர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களை கேட்டுப் பார். ஒரு நோயாளி மருத்துவமனைக்கு வந்ததும் அட்மிஷன் போட்டு அட்வான்ஸ் பணம் கட்டிய பிறகுதானே சிகிச்சை ஆரம்பிக்கணும்? நோயாளி இறந்து போனால் செலுத்திய அட்வான்ஸ் தொகைக்குமேல் மருத்துவமனை பில் இருந்தால் அதை செலுத்தி விட்டுத்தான் பாடியை வாங்கிப் போக வேண்டும் என்பது நடைமுறை. உன்னை யார் பணம் கட்டும் முன்னே நோயாளிக்கு சிகிச்சை ஆரம்பிக்கச் சொன்னது? இப்ப இந்த பேஷண்ட் யாருன்னு தெரியாம, மருந்துகள் ஆக்ஸிஜனுடன் சர்ஸனும் அட்டென்ட் பண்ணியிருக்கிறார். அத்துடன் ஐ.சி.யூ. வாடகை, எவ்வளவு உபகரணங்களை உபயோகப்



படுத்தி இருக்கிறீர்கள். இப்ப அந்த செலவை எல்லாம் நாம யார் கிட்ட வாங்கறது?"

"ஸார் ஒரு நோயாளியின் கடைசி நிமிடங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பது உங்களுக்குத் தெரியாததில்லை. எங்களுக்கு சொல்லிக் கொடுத்தவரே நீங்கள் தான். எனவே நோயாளியின் உயிரை காப்பது மட்டுமே எல்லாவற்றிலும் முக்கியமானதாய் பட உடனே சிகிச்சை தொடங்கிவிட்டோம். கத்தி குத்து காயம் ஏற்பட்டிருந்தது. எனவே போலீசுக்கும் சொல்ல வேண்டியதாகி விட்டது."

"இந்த மாதிரி சிக்கலான கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொட்டத் தயாராக இருப்பார்கள். அந்த சந்தர்ப்பத்தை உபயோகப் படுத்திக் கொள்ளத் தெரியாமல் போலீசை இழுத்து விட்டு மருத்துவமனை பெயரை கெடுத்ததும் இல்லாமல் மருந்துகளை இலவசமாகப் பயன்படுத்தி மருத்துவமனைக்கு நஷ்டத்தையும் ஏற்படுத்தியிருக்கிறாய். வருகிறவர்களுக்கு எல்லாம் இலவசமாகத் தர அரசு மருத்துவமனையா இது? ஒரு டாக்டர்களுக்கு நோயாளிகள் மீது மட்டும் அக்கறை இருந்தால் போதாது. மருத்துவமனை நிர்வாகத்தின் மீதும் அதே அக்கறை இருக்க வேண்டும். இதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு நான்தான் நிர்வாகத்திற்கு பதில் சொல்ல வேண்டும். உன்னிடமிருந்து இப்படியொரு நடவடிக்கையை நான் எதிர்பார்க்கவேயில்லை." கோபமாகப் படபடத்தார் சுகுமார்.

"ஸார் என் நிலையில் நியாயமாய் ஒரு மருத்துவர் செய்ய வேண்டியதைத்தான் நான் செய்தேன். என்னால் மருத்துவமனைக்கு ஏற்பட்ட செலவுகளை வேண்டுமானால் நானே ஏற்றுக் கொள்கிறேன். நஷ்டத்தை நிச்சயமாக ஏற்படுத்த மாட்டேன். ஆனால் கொலை முயற்சி அல்லது தற்கொலை முயற்சியாக இருந்தால் கூட அதைப்பற்றி காவல் துறைக்கு தகவல் தெரிவிப்பது நமது கடமை. தெரிவிக்காமல் இருப்

பது குற்றவாளிக்கு நாமே துணை போனதாகத் தான் பொருள். என்னால் குற்றத்திற்கு துணை போக முடியாது. எனவே இது சம்பந்தமாக நிர்வாகம் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இப்போது என் டியூட்டி முடிந்தது. சாந்தி இல்லம் போகணும். இப்போதே கிளம் பணும். வருகிறேன் ஸார்'' என்று கிளம்பினாள் சுதி.

எந்தவித தயக்கமோ, பதட்டமோ இன்றி அழுத்தமாய் பதில் அளித்துவிட்டு வழக்கமான புன்னகையுடன் செல்லும் அவளை வியப்புடன் பார்த்தார் சுகுமார்.

## 7

பணம் எவ்வளவுதான் இருந்தாலும் சராசரி பெண் களுக்கு இவ்வளவு தன்னம்பிக்கை இருக்குமோ என்பது சந்தேகம்தான். அறிவும் திறமையும் பெண்களை மனோ தைரியம் மிக்கவர்களாய் மாற்றி விடுகிறது போலும். சுதி சாந்தி இல்லத்திலிருந்து வீட்டிற்கு வரும்போது வீட்டில் ரவி காத்திருந்தான். ''சுதி மருத்துவமனையில் ஏதோ பிரச்சனை போலிருக்கே!''

''சீனியர் ரொம்பக் கத்தினாரா?'' என்றான் சற்றே கவலை யுடன் நடந்ததை சொன்ன சுதி, ''நியாயமா நடந்துக்கும் போது, அதை தப்பு சொன்னா என்ன செய்வது! நீயே சொல்லு ரவி!'' என்றாள்.

''நம்ம சீனியர் தப்பு சொல்றதைப் பத்தி நான் கவலையே படல. வழக்கம் போல கத்திவிட்டு மறந்து விடுவார். ஆனால் நீ காவல் துறையில் புகார் கொடுத்திருக்கிறாயே இரண்டு பேர் மீது. அவர்கள் யார்? எந்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்களால் உனக்கு ஏதாவது பிரச்சனை வருமா என்பதுதான் கவலையாக இருக்கிறது.''

''விடு ரவி. ஒவ்வொண்ணா யோசிச்சி கவலைப் பட் டுட்டு இருந்தா மனுஷன் உலகத்தில் வாழ முடியுமா? நடப் பது நடக்கட்டும் விடு. இன்னிக்கு உனக்கு நைட் டியூட்டி யாச்சே! என்ன பங்க் பண்ணிட்டியா?''



''இல்ல சுதி பர்மிஷன் போட்டிருக்கேன். உன்னை பாத் துட்டுப் போகலாம்னு வந்தேன். கிளம்பறேன்'' என்றான் ரவி.

''எனக்காகன்னு ஏண்டா ரீல் விடற? அம்மா சமையலுக்கு நாக்கு ஊறியிருக்கும். சரி நான் எதுவுமே கண்டுக்கவேயில லப்பா. இப்படியே மேல ஓடிப் போயிடறேன். நீ உள்ள போய் வந்த வேலையை கவனி'' என அவனை கிண்டலடித்த சுதி, உள்ளே குரல் கொடுத்தாள். ''அம்மா, இன்னிக்கு நிறைய பணியாரம் மீதியாயிடிச்சி. குப்பைலதான் போடணும்னு சொன்னியே. குப்பையில கொட்ட வேண்டாம். இதோ ஒரு ஆள் வந்தாச்சு, அவன் தொப்பைல கொட்டு.''

கலகலவெனச் சிரித்தபடி மேலே செல்பவளை புன் னகையுடன் பார்த்தவாறே கிளம்பினான் ரவி.

* * *

மறுநாள் காலையிலேயே வந்துவிட்டார் விஸ்வநாதன். அப்பாவைப் பார்த்ததும் ஓடிப்போய் அவர் கைகளை பிடித்துக் கொண்டாள் சுதி.

வாஞ்சையுடன் மகளின் தோளை பற்றிய விஸ்வநாதன் ''என்னடா இளைச்சிட்ட?'' என்றார்.

''நாலு நாளில் நாப்பது கிலோ குறைஞ்சிட்டேன் இல்ல!'' சிரித்தாள் சுதி.

அப்பாவின் தோளில் சலுகையுடன் சாய்ந்தவாறே உள்ளே வந்தவள்,

''இனிமே இப்படி போகாதீங்கப்பா. எங்கயாவது போக வேணும் என்றால் காலையில் போயிட்டு நைட் வீடு திரும்பற மாதிரி போங்க. நீங்க இல்லாம வீடே நல்லாயில்ல'' என்று சிணுங்கினாள்.

புன் சிரிப்புடன் மகளைப் பார்த்த விஸ்வநாதன் ''நான் இனிமே போகலைன்னாலும் நீ எங்களை எல்லாம் விட்டுட்டு இன்னொரு வீட்டுக்குப் போகத்தானே போகிறாய்?'' என்றார்.

''அது அப்ப பேசிக்கலாம். இப்ப வந்து உட்கார்ந்து சாப் பிடுங்க முதலில்.''

"நான் இன்னும் குளிக்கவே இல்லையேம்மா!"
"எல்லாம் மெதுவா குளிச்சிக்கலாம். நான் இப்ப சாப்பிடப்
போகிறேன். எங்கூட உட்கார்ந்து சாப்பிடுங்க" என்ற சுதி.
"அம்மா எங்கப்பாவுக்கு சீக்கிரமா டிபன் எடுத்து வை" என
சரஸ்வதியை விரட்டினாள்.

இருவருக்கும் தட்டை எடுத்து வைத்து பரிமாறியபடி
"உங்கப்பா வந்தாச்சு இல்ல. இனி உன் அதிகாரம் தூள்
பறக்கத்தான் செய்யும்" என்றாள்,
சரஸ்வதி மகளைச் செல்லமாய் குறைபட்டபடி.
மேலும் சிறிது நேரம் கலகலத்து விட்டு சுதி கிளம்பிச்
சென்றதும்,
"சரசு உனக்கு ஒரு குட் நியூஸ்" என்றார் விஸ்வநாதன்.
"எனக்கா? என்ன நியூஸ்" என்றாள் சரஸ்வதி ஆர்வமாய்.
சட்டை பாக்கெட்டிலிருந்து ஒரு போட்டோவை எடுத்துக்
காட்டினார் விஸ்வநாதன். வாங்கி திருப்பி திருப்பிப் பார்த்த
சரஸ்வதி "என்னங்க இது சினிமா நடிகர்கள் போட்டோவை
எல்லாம் எப்ப இருந்து பாக்கெட்டில் வச்சிக்க ஆரம்பிச்சீங்க"
என்றாள்.
"போடி, நீயும் உன் சினிமாவும்! இது சினிமா நடிக
னில்லை. நம்ம சுதிக்கு பார்த்திருக்கற மாப்பிள்ளை."

பேசவே வாய் வரவில்லை சரஸ்வதிக்கு. "என்ன இது
அதிசயமா இல்ல இருக்கு! நீங்க மாப்பிள்ளை பார்க்கத்தான்
போறீங்கன்னு எங்கிட்ட கூட சொல்லவேயில்லையே!"

"எனக்கே சரியா தெரியாது சரஸ்வதி. அமைச்சர் மருத
நாயகம் மனசுக்குள் இப்படியொரு எண்ணம் இருந்திருக்கும்
போலிருக்கு. அவருக்கு வேண்டிய பையன்தான். அங்க
போய் பையனைப் பாக்கும்போது எனக்கே தோணுச்சி. நம்ம
சுதிக்குப் பொருத்தமா இருக்குமேன்னு பையன் பெயர்
வசந்தகுமார். குமார்னு கூப்பிடறாங்க. நீ போட்டோல



பாத்ததை விட நேர்ல ரொம்ப நல்லா இருக்கான். சுதி
மாதிரியே வீட்டுக்கு ஒரே பையன். எக்கச்சக்க பணம். நல்ல
பாரம்பரியமான குடும்பம். அவங்கப்பா பெண்ணை கூடப்
பார்க்காம மருத நாயகம் நம்மைப் பற்றி சொன்னவுடனேயே
சரின்னு சொல்லிட்டார். பையனும் அப்பா சொல் பேச்சு
தட்டாத புள்ளையாம். எப்படி தேடிப் பார்த்தாலும் எனக்கு
குறைன்னு எதுவுமே தென்படல."
"பையன் என்ன வேலை பாக்கறாப்ல?" என்றாள் சரஸ்வதி.
"பையன் அமெரிக்கா போற எண்ணத்துல இருக்காம்.
அவங்கப்பாதான் முதலில் கல்யாணம். பிறகு தான்
வெளிநாடு என்று சொல்லியிருக்காராம். வரும்போது மருத
நாயகம் எங்கிட்ட ஒரு விஷயம் சொன்னார்.
"மாப்பிள்ளையை சரிகட்டி சென்னையிலே இருக்க
வெச்சுடலாம். உனக்கும் உள்ளூர்லயே பொண்ணை பாத்துக்
கலாம் என்று. எனக்கும் அதுதான் சரின்னு தோணுது. அவங்
கப்பாவிடம் பண்ணையிலும் தேங்காய் மண்டியிலும் இரு
நூறு பேர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். வீடு, கடை
கள், தோட்டம் என ஒரு ஊரே இருக்கு. இவ்வளவு சொத்து
வைத்திருப்பவர்கள் என்ன வேலை செய்தால்தான் என்ன?"
"எவ்வளவு பணம் இருந்தா கூட நமக்கு என்னங்க?
நம்மகிட்ட இல்லாததா? மனுஷங்கதானே முக்கியம்."
"அதுவும் விசாரித்தேன் சரஸ்வதி. பணத்தை மட்டும்
அழகை மட்டும் பாத்து நான் மயங்கிடலை. ரொம்ப அமைதி
யான பையனாம். தண்ணி போடறது, நண்பர்கள் கூட
சுத்தறதுன்னு எந்த கெட்ட பழக்கமும் இல்லையாம். அப்பா
எதிரில் நின்று கூட பேசாதாம். அவ்வளவு மரியாதை. தம்பி
வீட்ல இருக்கறதே தெரியாதுன்னு அவங்க வேலைக்காரங்
களே பேசிக்கறாங்க. அவ்வளவு ஏன், என் பார்வையிலேயே
ரொம்ப அமைதியா, நிதானமான பையனாத்தான் தெரிஞ்
சான். இந்தக் காலத்துல இப்படி ஒரு பையன் எங்க கிடைப்
பான் சொல்லு?" என்றார் விஸ்வநாதன்.

''உங்க பொண்ணு இன்னமும் என்ன சொல்வாளோ தெரியலையே!'' என்றாள் சரஸ்வதி சற்றே வாடின முகத்துடன்.

''அதான் என் பொண்ணுன்னு சொல்லிட்டியே, நான் பாத்துக்கறேன் விடு'' என்றார் விஸ்வநாதன் நம்பிக்கையுடன்.

# 8

சுதி மருத்துவமனையின் உள்ளே நுழைந்தவுடன் ''குட் மார்னிங் டாக்டர்.'' என புன்னகைத்தாள் ரிசப்ஷனிஸ்ட் ஷீலா. ''இன்னிக்கு ஈவ்னிங் போர்டு ஆப் டைரக்டர்ஸ் மீட்டிங் இருக்கு. நீங்களும் இருந்தாகணும்னு சீனியர் சொல்லச் சொன்னார். எனி திங் ஸீரியஸ் மேடம்'' என்றாள் சற்றே கவலையாய்.

''நத்திங்... தேங்க் யூ பார் யுவர் இன்பர்மேஷன். உன் மாமியாருக்கு இப்போது பரவாயில்லையா?''

''நன்றாக இருக்கிறாள். நீங்க கொடுத்த மருந்துகளில் கால் வீக்கம் நன்றாக குணமடைந்து விட்டது'' என்றாள் ஷீலா நன்றியுடன். மருத்துவமனைக்குச் சென்றிருந்தால் அவள் மாமியாருக்கு பரிசோதனைகளிலேயே பெரிய தொகை செல வாகியிருக்கும். எதேச்சையாக ஷீலா மூலம் கேள்விப்பட்ட சுதி, ஷீலாவின் வீட்டிற்கே போய் அவள் மாமியாரை பார்த்து வெறும் சதைப் பிடிப்பு என்று சொல்லி சிகிச்சை அளித்ததில் அவள் மாமியார் நன்றாகி விட்டாள். ஷீலாவின் மாதாந்திர பட்ஜெட்டில் பெரிய துண்டு விழாமல், அதை சரிகட்ட சில மாதங்களேனும் போராடத் தேவையின்றி ஷீலா தப்பித்தாள். ஷீலாவிடம் ஒரு தலையசைப்புடன் வார்டுக்குள் சென்றபோது அப்பா போன் செய்தார்.

''உன்னைத் தேடி வீட்டிற்கு போலீஸ் வந்தது சுதி. என்ன விஷயம்?'' என்றார் கவலையாக.

''இது ஹாஸ்பிடல் விஷயம்ப்பா. சும்மா ஒரு விசாரணைக் காக வந்திருப்பார்கள். நீங்க எதுவும் குழப்பிக்காதீங்க. நான் வீட்டுக்கு வந்து விபரம் சொல்கிறேன்.'' என்றபடி செல்லை



அணைத்தாள். உள் நோயாளிகளை பார்த்து முடித்து விட்டு வந்தபோது இன்ஸ்பெக்டரும், இரண்டு கான்ஸ்டபிள்களும் மருத்துவமனைக்கே வந்தார்கள்.

''வேலை நேரத்துல உங்களை டிஸ்டர்ப் பண்ண வேண் டான்னுதான் வீட்டுக்குப் போயிருந்தோம். பட் நீங்க அதுக்குள்ள கிளம்பி வந்துட்டீங்க'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''பரவாயில்லை சொல்லுங்க?'' என்றாள் சுதி.

''நீங்க சொன்ன அடையாளங்கள் உள்ள ஒருவனை கைது செய்திருக்கிறோம். நீங்க வந்து அடையாளம் காட்ட முடியுமா?''

''ஷ்யூர்'' என்ற சுதி மருத்துவமனை மேலாளரிடம் தகவல் சொல்லிவிட்டு அவருடன் ஜீப்பில் கிளம்பிப் போனாள். அங்கே ஒரு அறையில் வரிசையாய் ஐந்து பேர் நிற்க வைக்கப் பட்டிருக்க மூன்றாவதாய் கறுப்பாய், வாட்ட சாட்டமாய் அன்று தாடிக்காரனுடன் வந்தவன் நின்று கொண்டிருந்தான். சுதி நேரடியாய் அவர்களை அடையாளம் காட்ட அவர் அனுமதிக்கவில்லை. ''இவர்கள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த வர்கள். ஏற்கனவே போலீசாரால் தேடப்பட்டு வருபவர்கள். இப்போதுதான் சிக்கியிருக்கிறார்கள். நீங்க திருமணமாகாத இளம் பெண். இவர்கள் கூட்டத்தால் உங்களுக்கு ஆபத்து வரலாம். எனவே அவர்கள் உங்களைப் பார்க்காதவாறு அங் கிருந்தே கண்டியுங்கள்'' என்றார்.

சுதி அவனை அடையாளம் காட்டி அவன்தான் என உறு திப்படுத்தியதும் ''இவனுடைய கூட்டாளி அந்த தாடிக்காரன் இன்னும் கிடைக்கவில்லை. இறந்தவனுக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்பு என்று இனிமேல்தான் விசாரிக்க வேண்டும். எனிவே உங்க ஒத்துழைப்புக்கு நன்றி மேடம்'' என்றபடி இன்ஸ்பெக்டர் வழியனுப்பி வைத்தார்.

திரும்ப மருத்துவமனைக்கு வந்த சுதிக்கு மீட்டிங் ஹாலுக்கு வரச்சொல்லி தகவல் வந்தது. கூலரில் ஒரு டம்ளர் நீரை

பிடித்து குடித்த சுதி லிப்டில் ஏறி மூன்றாவது ப்ளோரிலிருந்த மீட்டிங் ஹாலுக்குச் சென்றாள். கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்ததும் யு வடிவ மேஜையின் நடுவில் சேர் மேனும் சுற்றிலும் டைரக்டர்கள் ஐந்து பேரும் அமர்ந் திருந்தது கண்ணில் பட்டது. சுகுமார் வலது ஓரமாய் அமர்ந் திருந்தார். சுதி அனைவரும் பொதுவாய் ஒரு வணக்கம் சொல்லிவிட்டு சுகுமாரின் எதிரே உட்கார்ந்தாள். சேர்மனுக்கு அருகே உட்கார்ந்திருந்த ஒரு டைரக்டர் கேட்டார்.

"மிஸ் சுதி நீங்க ஒரு குற்றவாளிக்கு பணம் பெறாமல் சிகிச்சை அளித்து மருத்துவ உபகரணங்களை தவறாகப் பயன்படுத்தி இருக்கிறீர்கள். காவல் துறைக்கு தகவல் கொடுத்து மருத்துவமனையின் பெயரையும் தவறான முறையில் வெளியே பேசப்படுவதற்கும் காரணமாகியிருக் கிறீர்கள் என்பது உங்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு. இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?"

சுதி புன்னகையுடன் எழுந்து நின்றாள். "முதலாவதாக அந்த நோயாளி குற்றவாளி என்பது எனக்குத் தெரியாது. உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிக்கு வழக்க மாகச் செய்யப்படும் சிகிச்சையைத்தான் நான் செய்தேன். அதற்காக மருத்துவமனைக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதை ஏற்க நான் தயாராக இருக்கிறேன். இப்போது நான் காவல் நிலையத்திலிருந்துதான் வருகிறேன். நோயாளியுடன் வந்தவர்களில் ஒருவனைப் பிடித்து விட்டார்கள். இவர்கள் எல்லோருமே ஒரு கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள். பல நாட்களாக தேடப்பட்டு வருபவர்கள். நாம் தகவல் சொல்லா விட்டால் கூட போலீசின் தீவிர விசாரணையில் இறந்தவன் குற்றவாளி என்பதால் அவன் இங்கேதான் இறந்தான் என்பது தெரிய வரும். ஏன் தகவல் தெரிவிக்கவில்லை என்ற கேள்வி வரும். அந்த பிரச்சனைகளை சமாளிப்பதை விட முன் கூட்டியே தகவல் தெரிவிப்பது காவல் துறையிடம் நம் மருத்துவமனைக்கு நட்புறவை ஏற்படுத்திக் கொடுக்கும்."



சுதி பதில் சொல்லி முடித்ததும் சற்று நேரம் அமைதி நிலவியது.

டைரக்டர்கள் ஒருவருக்கொருவர் மெலிதான குரலில் பேசிக் கொள்ள சுதி அமைதியாய் அமர்ந்திருந்தாள்.

இறுதியாய் சேர்மன் கேட்டார் "மிஸ் சுதி இப்போது நாங்கள் உங்களை இந்த மருத்துவமனையிலிருந்து விலக்கி னால் உங்களது ரியாக்ஷன் என்னவாக இருக்கும்?"

"நோ ரியாக்ஷன் ஸார்" சீரான பற்கள் தெரியச் சிரித்தாள் சுதி. "எப்பவுமே நல்ல மருத்துவர்கள் கிடைப்பதுதான் கடினமே தவிர நோயாளிகள் எங்கும் இருக்கிறார்கள். நான் வெளி யேறினால் மருத்துவமனை தன் நல்ல மருத்துவர்களில் ஒருவரை தற்காலிகமாக இழக்கலாம். என்னைப் பொறுத்த வரை நான் செய்யத் திட்டமிட்டிருக்கிற என் லட்சியத்தை நிறைவேற்ற இதை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்வேன்."

"அந்த சந்தர்ப்பத்தை உங்களுக்கு தர்றதா இல்லை மிஸ் சுதி" என்றார் சேர்மன் புன்னகையுடன். "உங்க வழக்கமான வேலையை நீங்க பார்க்கலாம். ஏதாவது முக்கியமான விஷ யங்களுக்கு கண்டிப்பாய் மிஸ்டர் சுகுமாரை கேட்டுக் கொள்ளுங்கள்."

"தேங்க்யூ ஸார்" என்றபடி கிளம்பிப் போனாள் சுதி.

அடுத்தபடியாக மருத்துவமனைக்கு சில உபகரணங்கள் வாங்குவது சம்பந்தமாக அவர்களது விவாதம் தொடர்ந்தது. டைரக்டர்கள் தொடர்ந்து கேட்ட சந்தேகங்களுக்கும், கேள்வி களுக்கும் பொறுமையாய் பதில் அளித்தார் சுகுமார். சேர்மன் கிளம்பும்போது கேட்ட ஆடிட்டர் ரிப்போர்ட்டை எடுத்துக் கொடுத்தவர் மெதுவாய் சொன்னார். "ஸார் சுதி ரொம்ப நல்ல பெண்தான். யார் கிட்ட எப்படி பேசணும்னு பக்குவம் இல்லை. சின்ன வயசு. நீங்க அவ மேல கோபமா எதுவும்..."

சுகுமாரின் தோள்களைத் தட்டினார் சேர்மன். "உங்க ஜூனியருக்காக நீங்க இப்படி பரிந்து பேச வேண்டியதே

இல்லை மிஸ்டர் சுகுமார். ஐ நோ ஷீ இஸ் ஸ்மார்ட். மேனேஜ்மென்ட் கிட்ட கொஞ்சம் அபிமானம் வேண்டும். அதை நீங்கதான் புரிய வைக்கணும்'' என்றபடி விடை பெற்றார்.

## 9

வீட்டிற்கு வந்ததும் குளித்துவிட்டு தலையை துவட்டியபடியே விஸ்வநாதன் அருகில் வந்து அமர்ந்தாள் சுதி.

“இந்த குளிர்காலத்தில் மாலையில் எதுக்கும்மா தலைக்கு குளிச்ச?'' என்றார் விஸ்வநாதன்.

சரஸ்வதி ஒரு டிரையரை எடுத்து வந்து சுதியின் தலையை காய வைத்து ரப்பர் பேண்ட்டை மாட்டினாள். அம்மாவிடம் தலையைக் கொடுத்த சுதி விஸ்வநாதனிடம் நான்கு நாட்களாய் நடந்த விஷயங்களைச் சொல்லி முடித்தாள். கவனமாய் கேட்டிருந்தவர், “பிரச்சினை ஒண்ணும் வராதே சுதி?'' என்றார்.

“குற்றவாளிகளில் ஒருத்தனை பிடிச்சிட்டாங்கப்பா. அவனைக் கொண்டே இன்னொருவனையும் பிடித்து விடுவார்கள். நான் நடந்ததை நடந்தபடி சொன்னேன். சொன்னது நானா என்பதை அவன் அறிந்து கொள்ள முடியாதபடிதான் போலீஸ் அடையாளம் காட்டச் சொன்னார்கள்.''

“நீ வந்ததும் ஒரு நல்ல விஷயம் பேசணும்னு நான் காத்திருந்தேன். அதற்குள் இதைப் பேச வேண்டியதாகி விட்டது.''

“என்ன அவ்வளவு நல்ல விஷயம்? சொல்லுங்கப்பா.''

“நீ ரவிகிட்ட கல்யாணத்துக்கு பச்சை கொடி காட்டியதா சொன்னான். அதில் இப்ப எந்த மாற்றமும் இல்லையே!''

“என்னப்பா உங்களுக்கு திடீர் சந்தேகம்?''

“ஏன்னா உனக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கேம்மா. அம்மாவுக்கும் எனக்கும் ரொம்பப் பிடித்திருக்கிறது. சொந்த பந்தத்திலும் விசாரித்து விட்டேன். நமக்கு எல்லா விதத்



திலும் ஏற்ற குடும்பம். பையன் ரொம்ப அழகா இருக்கான். நம்ம மருதநாயகம்தான் அறிமுகப்படுத்தி வைத்தார். அவங்கப்பா என்னைப் பார்த்தே கல்யாணத்துக்கு சரின்னு சொல்லிட்டார். பையனும் அப்பா சொன்னா சரின்னு சொல்லிட்டானாம். பொண்ணைக் கூட பார்க்க வேண்டியதில்லை என்கிறார்கள். உன் பதிலுக்காகத்தான் நானும் அம்மாவும் காத்திருக்கிறோம். நீ பார்த்து முடிவு சொல்லிவிட்டால் மேற்கொண்டு ஏற்பாடு செய்யலாம்'' கடைசி வாக்கியத்தைச் சொல்லும்போது விஸ்வநாதனின் குரல் வழக்கத்துக்கு மாறாக தழைந்து ஒலித்தது. மகளிடம் ஏதோ யாசிக்க நேர்ந்தாற் போல.

அந்த குரல் சுதியை என்னவோ பண்ணியது. அப்பா இவ்வளவு சீக்கிரத்தில் ஒரு மாப்பிள்ளையை பிடித்து வருவார் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. வரன் தேடி, ஜாதகம் பார்த்து, குடும்பம் பார்த்து எல்லாம் ஒத்து வந்து செய்வதற்கு ஒரு வருடமாவது ஆகும் என்று நினைத்தாள். ரவியின் தங்கைக்கு இரண்டு வருடமாக மாப்பிள்ளை பார்க்கிறார்கள். அவளுக்கு கிடைக்காத மாப்பிள்ளை எனக்கு மட்டும் தேடாமலேயே எப்படி கிடைத்தான்? விஸ்வநாதனின் ஒரே பெண் என்பதாலா? திட்டமிட்டே எந்த ஒரு செயலையும் செய்து பழக்கப்பட்ட சுதி திடீரென எதிர்பாராத திசையில் தன் வாழ்க்கை திருப்பப் படுவதாய் உணர்ந்தாள்.

“என்னடா சுதி, மாப்பிள்ளையை பாத்துட்டு பிடிச்சிருக்கா, இல்லையான்னு யோசிச்சா பரவாயில்லை. நீ பாக்காமயே இத்தனை யோசிக்கற? இந்த அப்பா எங்கியோ கொண்டு போய் தள்ளிடுவான் போல இருக்கேன்னு தோணுதா?''

அந்த நேரத்தில் முடிவெடுத்தாள் சுதி. பெற்றோர் விருப்பத்திற்காக திருமணம் என முடிவெடுத்த பின் மணமகனும் முழுக்க முழுக்க அவர்களது தேர்வாகவே இருக்கட்டுமே! அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இவ்வளவு தூரம் பிடித்துப்

போன பின், அவன் யாராக இருந்தாலும் சரி கட்டி வாழ்வது தான் நான் அவர்களுக்குச் செய்யும் கடமை. எனவே விஸ்வநாதனிடம் "ஏம்பா நீங்களா இப்படி யோசிக்கிறீங்க? மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. உங்களுக்கு ஓ.கே.ன்னா எனக்கும் ஓ.கே.தான்."

"சுதி நீ ஏதும் வெறுப்புல பேசலியே?"

"அதெல்லாம் இல்லப்பா. உங்க வார்த்தைக்கு மறு வார்த்தையே கிடையாது எங்கிட்ட. நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லையாப்பா?"

சடாரென முகம் மலர்ந்தது விஸ்வநாதனுக்கு. பாக்கெட்டிலிருந்து போட்டோவை எடுத்தார் விஸ்வநாதன். "இந்தாம்மா, போட்டோவை பாரு."

"சரிப்பா கொடுங்க" என்று வாங்கி அருகிலிருந்த புத்தகத்தில் வைத்தாள் சுதி. தன் எதிரே போட்டோவைப் பார்க்க கூச்சப் படுவதாக நினைத்த விஸ்வநாதன் சந்தோஷமான செய்தியை உடனே தெரிவிக்க மனைவியை தேடிப் போனார். புத்தகத்தில் போட்டோவை வைத்த சுதி டெலிபோனின் அழைப்புக்கு பதில் சொல்லப் போனவள், அத்துடன் அதை மறந்து போனாள்.

இரண்டு பக்கமும் கல்யாண ஏற்பாடுகள் ஜரூராய் நடந்தன. குமாரும் சரி சுதியும் சரி அப்பாக்களிடம் தலையாட்டி விட்டு அமைதியாக இருந்தனர். ஒருவரை ஒருவர் பார்க்க வேண்டுமென்றோ, பேச வேண்டுமென்றோ இருவருக்கும் தோன்றவேயில்லை. தங்களுக்கு நடக்கும் நிகழ்ச்சிகளை ஒரு பார்வையாளராய் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் அதற்கான காரணங்கள் தான் முற்றிலும் வேறாக இருந்தது. சுதி தன் அப்பா மேலுள்ள அளவு கடந்த நம்பிக்கையிலும் பாசத்திலும் திருமணத்திற்கு சம்மதித்து, தங்களது குடும்பத்தில் புதிதாக ஒரு பந்தத்தை இணைத்துக் கொள்ள நினைத்தாள்.



குமாரோ தன் அப்பா மீதிருந்த அளவு கடந்த வெறுப்பினால் அவரிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் ஒரு வாய்ப்பாக இந்த திருமணத்தை பயன்படுத்திக் கொள்ள நினைத்தான்.

வழக்கம் போல் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு எந்த பரபரப்புமின்றி இருந்த சுதியை சரஸ்வதி கவலையுடன் பார்த்தாள்.

"சுதி மாப்பிள்ளையை வருகிற ஞாயிற்றுக்கிழமை நேரில் வரச் சொல்லி விடலாமா?"

"எதுக்கும்மா?"

"எதுக்கும் நீ ஒரு முறை நேரில் பார்த்துக் கொண்டால் நல்லது. பேசிப் பார்த்து உனக்கும் பிடிக்க வேண்டாமா?"

"இப்ப எனக்குப் பிடிக்கலைன்னு யார் சொன்னது?"

"பாக்காம எப்படி பிடிக்கும் உனக்கு?"

"நீயெல்லாம் அப்பாவை பார்த்தா கல்யாணம் பண்ணிகிட்ட?"

"எங்க காலம் வேற. அந்தக் காலத்து பொண்ணா நீ? பெத்தவ எனக்குத் தெரியாதா? கல்யாண பொண்ணுக்கு உள்ள களையே உன் முகத்துல தெரியலையே? புடவை, நகைன்னு கல்யாண ஏற்பாடுகள் எதிலுமே ஆர்வம் இல்லாம இருக்க. மாலதி கல்யாணத்தப்ப இப்படியா இருந்த? எவ்வளவு பிரியத்தோட எல்லாத்தையும் முன்னாடி நின்னு செஞ்ச?" சரஸ்வதி ஆதங்கத்துடன் கேட்டாள்.

அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் சுதி. "நான் என்ன பதினெட்டு வயது டீன்ஏஜ் பெண்ணா? அல்லது சினிமா கதாநாயகியா? கல்யாணம் என்றதும் கனவு கண்டு டூயட் பாடுவதற்கு. நான் ஒரு டாக்டர். திருமணம், தாய்மை, பிரசவம் எல்லாவற்றையும் நடைமுறையில் தினசரி பார்ப்பவள். இதில் புதிதாக பரபரப்படைய என்ன இருக்கிறது? மாலதிக்கு நெருங்கிய உறவில் உதவிக்கு யாரும் இல்லை.

எனவே நான் போய் பொறுப்பேற்று செய்ய வேண்டி
யிருந்தது. நம் வீட்டில் அப்படியா? எத்தனை பேர் ஓடி ஓடி
வேலை பார்க்கிறீர்கள்? அப்பாவோட ஆபீஸ் ஸ்டாப்ஸ்
அத்தோட உன் வழி, அப்பா வழி உறவுகள் வேறு. பாலம்மா
வும் அவள் பையனும் வேறு இந்தக் கல்யாண பேச்சு
தொடங்கியதிலிருந்து நம் வீட்டிலேயே கிடக்கிறார்கள்.
இதில் நான் செய்ய என்ன இருக்கிறது?''

''சரிடீ. மாப்பிள்ளை வீட்டிலிருந்து பரிச புடவை. நலுங்கு,
முகூர்த்த புடவை நகைகள் எல்லாம் வந்திருக்கிறது. அதை
யாவது வந்து பார்.''

''நான் என்னிக்கு புடவையும் நகையும் பாத்து வாங்கி
யிருக்கேன். எப்பவும் நீதான வாங்குவ? ஜீன்ஸ் சுடிதார்ன்னா
தெரியும். புடவை பத்தி என்ன தெரியும்? என்னுடைய
ஆராய்ச்சி படிப்பு சம்பந்தமா ஒரு புரபஸரை பாக்கப் போக
ணும். இன்னும் அரை மணி நேரத்தில் நான் அங்கிருக்
கலைன்னா, அவர் கிளம்பி விடுவார். நேரமாச்சும்மா. பை''
பேசியபடியே காரை நோக்கி ஓடினாள் சுதி.

சிலையாய் நின்ற இடத்திலேயே நின்றிருந்தாள் சரஸ்வதி.
''என்ன சரஸ்வதி இங்க நிக்கற?'' என்றபடி வந்தார் விஸ்வ
நாதன்.

''இன்னும் பத்து நாளில் கல்யாணம். இந்த பொண்ணு
எதிலும் இப்படி ஒட்டாம இருக்கே! இன்னும் வேலை, மேற்
படிப்புன்னு வேற சொல்றா. கல்யாண பொண்ணா வீட்ல
இருக்க மாட்டேங்கறாளே!'' என்றாள் கவலையுடன்.

''நீ ஏன் சரஸ்வதி கவலைப்படற? இது நம்ம காலம்
இல்லை. நம்ம காலத்தில் பெண்ணை பெற்றவுடனே அவளை
திருமணத்திற்காகவே வளர்ப்பார்கள். சமையல், கை
வேலைன்னு சொல்லிக் கொடுத்து பிறந்ததிலிருந்தே திரு
மணத்திற்கு தயார்ப் படுத்துவார்கள். கணவன் சரியாய்
அமையவில்லை எனில் அத்துடன் அவள் வாழ்க்கை



முடிந்தது. கணவன் இறந்து விட்டாலோ பூமியிலேயே
அவள் நரகத்தை அனுபவிக்க வேண்டும்.

ஆனால் இந்த கால பெண்களுக்கு திருமணம் என்பது
வாழ்வில் ஒரு அங்கம். அது கெட்டுப் போனால் அங்க ஹீனம்
தான். ஆனால் அதுவே வாழ்க்கை அல்ல. திருமணம் எந்த
விதத்திலும் அவர்களது வாழ்வை பாதிக்காமல் பார்த்துக்
கொள்கிறார்கள். இந்த தலைமுறை கணவனும் மனைவியும்
ஆளப்படுவதோ அடங்கிப் போவதோ இல்லாமல் இறுதி
வரை நல்ல நண்பர்களாக இருக்கிறார்கள். வேலைகளைப்
பகிர்ந்து கொள்கிறார்கள். பரஸ்பரம் புரிந்து கொள்ளுதல்
இருப்பதால் அவர்களது படிப்போ, வேலையோ பாதிக்காமல்
பார்த்துக் கொள்கிறார்கள். நல்ல பக்குவப்பட்ட தலைமுறை
இது. சுதி இந்த காலப் பெண். அதுவும் என்னுடைய பெண்.
அவளை பற்றிக் கவலைப்படாமல் போய் வேலையைப் பார்''
என்றார் விஸ்வநாதன்.

# 10

கையிலுள்ள அழைப்பிதழை மறுபடியும் பார்த்தான் ரவி.
எத்தனை முறை பார்த்தாலும் நம்ப முடியாத வியப்பையே
தந்தன அதிலுள்ள எழுத்துக்கள். வசந்தகுமார் வெட்ஸ் சுதி.
என்ற எழுத்துக்களை விரல்களால் தடவிப் பார்த்தான்.

''படிக்கத் தெரியலையா ரவி! நான் வேணா படிச்சி சொல்
லவா?'' என்றாள் சுதி.

பதில் பேசாது நிமிர்ந்து பார்த்தான் ரவி. ''என்னடா பார்க்கிற?''

''இல்ல இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு பாக்க
றேன். ஒரு மாசம் முன்னாடி வரைக்கும் யாரோ கல்யாணம்
ணாலே காத தூரம் ஓடிட்டு இருந்தாங்க. நான் அவங்களை
துரத்தி பிடிச்சி கஷ்டப்பட்டு சம்மதிக்க வெச்சேன். சம்
மதிக்க வெச்ச எங்கிட்ட கூட ஒரு வார்த்தை சொல்லாம மாப்
பிள்ளை பார்த்து, முடிவு பண்ணி, பத்திரிகை அடிச்சு, கல்
யாணத்துக்கு கூப்பிடறாங்கன்னா அந்த நன்றி கெட்டவங்
களை என்ன செய்யலாம்? நீ சொல்லு சுதி.''

"ம்... ம்... என்ன செய்யலாம்?" வெகுவாக யோசித்தாள் சுதி. "நாலு நாள் முன்னாடியே கிளம்பி கல்யாணத்துக்குப் போய் அசத்திடலாம். எப்படி என் ஐடியா?" சிரித்தாள் சுதி.

"நீ கூட இவ்வளவு அழுத்தமா சுதி? என்னால் நம்பவே முடியல. ஒரு வார்த்தை கல்யாணம்னு எங்கிட்ட சொல்லலியே நீ!" என்றான் ஆற்றாமையுடன்.

"ஏன் ரவி பெரிய வார்த்தையைப் பயன்படுத்துகிறாய்? என்னைப் பெண் பார்க்க வந்திருந்தால் உங்கிட்ட சொல்லாம இருப்பேனா? உனக்கு ஒரு உண்மையைச் சொல்கிறேன் கேள். இதுவரை நான் மாப்பிள்ளையை பார்க்கவேயில்லை. அம்மா கூட போட்டோவில்தான் பார்த்திருக்கிறார்கள். மாப்பிள்ளையும் என்னைப் பார்க்க வேண்டும் என்று சொல்லவே இல்லையாம். ஆச்சரியமா இருக்கு இல்ல."

"இதுல என்ன ஆச்சரியம் சுதி? உன்னோட குணமும் உங்கப்பாவோட பணமும் தெரியாதவர்கள் யாராவது உண்டா என்ன? உன்னை விரும்பாம யார் இருக்க முடியும்! ஆனா நீ எப்படி மாப்பிள்ளையைப் பாக்காம ஒத்துகிட்ட? யாரையும் பார்த்த நிமிடத்தில் எடைபோடக் கூடியவள். தனக்கு வரப் போகிற கணவனை, அவன் குண நலன்களை தெரிந்து கொள்ள முற்படாதது ஏன்?"

"ஏன்னா எனக்கு எங்கப்பா மேலிருக்கிற அதீத நம்பிக்கையை நிரூபிக்க வேண்டியிருந்தது. என்னைப் பற்றி தினமும் அவர்கள் படும் கற்பனைப் பயங்களைப் போக்க வேண்டியிருந்தது" என்றாள் சுதி.

"இது திருமணம் சுதி. ஒரு திருமணம் என்பது கணவன் மனைவியாகப் போகிறவர்களில் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில்தான் நடக்க வேண்டுமே தவிர அம்மாவிற்கு அப்பாவிற்கு. அவர்கள் நம்பிக்கைக்கு என்பதெல்லாம் சரிவராது. பெற்றோர் கைப் பிடித்து மட்டுமே தருவார்கள். பிடித்த கையை விடாமல் வாழ்நாள் முழுவதும் போக வேண்டியவள் நீ மட்டும்தான்."



"நல்லதே நினைப்போம் ரவி. நல்லது நடக்கும்."

"என்ன ஒரே தத்துவமா இருக்கு."

"ரவி நான் பார்க்காத ஒரே காரணத்தால் அவர் தப்பானவர் ஆயிடப் போறாரா? இல்ல பார்த்ததும் நல்லவரா மாறிடப் போறாரா? அரேஜ்டு மேரேஜ்களில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது என்பது வெறும் சம்பிரதாயம் மட்டுமே. பார்க்கிற பேசுகிற சில நிமிடங்களில் ஒருவரை ஒருவர் என்ன தெரிந்து கொள்ள முடியும்? எனக்கு அந்த சம்பிரதாயம் நடக்கவில்லையே தவிர கல்யாணம் வழக்கமான கல்யாணம்தானே!"

"நீ ரொம்ப பக்குவப்பட்டவ சரியா? இந்த சுதியை அடையப் போகும் பாக்கியசாலி யார்? ஒரு போட்டோவையாவது காட்டேன் சுதி."

"சொன்னா நம்பு ரவி. போட்டோ கூட எங்கிட்ட இல்ல. அப்பா போட்டோ கொடுத்தார்தான். அதை வாங்கி எங்கே வைத்தேன் என்றுதான் நினைவில்லை. உனக்கு காண்பிக்கலாம் என நேற்றிலிருந்து தேடுகிறேன். போட்டோ கிடைக்கவில்லை. மாலதிகூட உன்னைப் போலத்தான் கண்டபடி திட்டிக் கொண்டிருக்கிறாள். முன்கூட்டியே சொல்லவில்லை என்று. ஒரு விஷயத்திற்கு மட்டும் நான் உறுதி சொல்கிறேன். மாப்பிள்ளையை பார்த்து நீயெல்லாம் அசந்து போகப் போகிறாய். ஏனென்றால் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். மாப்பிள்ளை ரொம்ப அழகானவர். அவரோட பார்க்கும்போது சுதி கொஞ்சம் குறைந்துதான் தெரிவாள் என்று."

"எந்த விதத்திலும் நீ குறைவு என்று உன்னை படைத்தவனால் கூட சொல்ல முடியாது சுதி. எந்த பிறவியிலோ அந்த வசந்தகுமார் நிறைய புண்ணியம் சேர்த்திருக்க வேண்டும். உன்னைப் போல மனைவியை அடைய."

சொல்லும்போதே குரல் கரகரத்தது ரவிக்கு.

தோழனின் அன்பில் மனம் கரைந்து போனாள் சுதி. சில நிமிடங்களில் சமாளித்துக் கொண்டு சிரித்தவள். "இப்படி ஐஸ் வெச்சே ஏமாத்திடலாம்னு எண்ணமா? கிளம்புடா. முதலில் நம்ம ஹாஸ்பிட்டலில் எல்லோருக்கும் அழைப்பிதழ் கொடுக்க வேண்டும்."

சுதியின் கல்லூரி நண்பர்களால் மண்டபமே கலகலத்தது. சுதியை தெரிந்தவர்கள் அனைவரும் தம் வீட்டு கல்யாணம் போல் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். விஸ்வநாதனும் சரஸ்வதியும் பூரிப்புடன் வளைய வந்தனர். ரவியும் மாலதியும் நிற்க நேரமில்லாமல் வேலை பார்த்தனர். மணமகளுக்கான அறையில் பழக்கமில்லாத கனமான நகைகளும் புடவையுமாய் அவஸ்தையிலிருந்த சுதியை மாலதி கையைப் பிடித்து அழைத்துப் போய் ஜன்னலருகே நிறுத்தினாள். "மாப்பிள்ளை அழைப்பு மண்டபத்தை நெருங்குகிறது. இங்கிருந்தே மாப்பிள்ளையை பார்க்கலாம்."

காரை விட்டு இறங்கி மண்டப வாசலில் ஆரத்திக்காக நிறுத்தப்பட்ட குமாரைப் பார்த்த சுதி திகைத்துத்தான் போனாள். அடர்நீல நிற சூட்டில் சிவந்த நிறம் இன்னும் எடுப்பாய் தெரிய, கூர்மையான நாசியும், பளீரிடும் குமாரின் தோற்றம் அவளையும் வசீகரிக்கத்தான் செய்தது.

"ஏய்" என குத்தினாள் மாலதி. "சும்மா ஹிந்தி பட ஹீரோ மாதிரி இருக்கிறார் சுதி. மாப்பிள்ளையோட பர்ஸனாலிட்டியைப் பத்தி தெரிந்துதான் பார்க்கலேன்னா கூட பரவாயில்லைன்னு பந்தா காட்டினியா? நான் கூட இந்தக் காலத்துல பையனைக் கூட பார்க்காம கழுத்தை நீட்டறாளே இந்த பொண்ணு எவ்வளவு அப்பாவின்னு, கவலைப்பட்டு இருந்தேன். சரியான ஆள்டி நீ!" மாலதி பொய்யாய் கோபித்தாள். தொடர்ந்த திருமண நிகழ்ச்சிகளில் மாலதியின் கலாட்டாக்களுக்கு சின்ன சிரிப்புடன் உடன்படுவதும், தன்னிடம்



குழையாமல், எட்டியும் நிற்காமல் சகஜமாக நடந்து கொண்டதும் குமாரின் மேல் சுதிக்குப் பிடிப்பை ஏற்படுத்தியது. பெண் வீட்டார் அனைவரும் மாப்பிள்ளையின் கம்பீரத்தைப் புகழ்ந்து தள்ளி விட்டுப் போக ரவி பேச வாயின்றி அமர்ந்திருந்தான்.

தன் அறையிலிருந்து யாரிடமும் சொல்லாமல் கிளம்பிச் சென்ற ஒருவனை தன் தோழியின் கணவனாக மண மேடையில் சந்திப்போம் என்று கனவில்கூட ரவி நினைத்ததில்லை. நடக்கிற சம்பவங்கள் அவன் கற்பனைக்கும் எட்டாதவையாக இருந்தன. விதி என்பது இதுதானா? வாழ்வில் ஒவ்வொரு நிமிடங்களையும் பயனுள்ளதாய் செலவிட விரும்பும் சுதிக்கும், இவனது சோம்பலுக்கும் எப்படி பொருந்தும். உயர்ந்த லட்சியங்களை மனதில் கொண்டு அதை நிறைவேற்ற போராடுபவளுக்கும், வாழ்வில் எந்த ஒரு பிடிப்புமின்றி நிரந்தர வேலையின்றி இருக்கும் இவனுக்கும் எப்படி ஒத்துப் போகும்? விஸ்வநாதன், அழகையும் பகட்டையும் பார்த்து நீங்கள் கூட ஏமாந்து விட்டீர்களே! கிடைத்தற்கரிய அபூர்வ பூவை வரமாய் பெற்று அதை கடவுளிடம் சமர்ப்பிக்காமல் குரங்கின் கைகளில் ஒப்படைத்து விட்டீர்களே! புலம்பியது அவன் மனம்.

# 11

ரவியைப் பார்த்த குமாரியின் முகத்தில் எதிர்பாராமல் நண்பனை கண்ட வியப்போ ஆச்சரியமோ எதுவும் தெரியவில்லை. 'ஹாய்' என்றான் வழக்கம் போல.

"மணப்பெண் என் கல்லூரித் தோழி" என்றான் ரவி.

"அப்படியா?" என்பதற்கு மேல் பேச நேரமிருக்கவில்லை குமாருக்கு. அதற்கு மேல் சுதியைப் பார்க்கத் தேவையிராமல் அவள் அப்பா, அம்மாவிடமே போகும் போது விடைபெற்றுக் கொண்டு போனான் ரவி.

திருமணம், செய்முறைகள் எல்லாம் முடிந்து குமாரின் அப்பாவும் அம்மாவும் சம்பந்திகளிடம் விடைபெற்று ஊருக்குக் கிளம்பிச் சென்றனர்.

சுதியின் வீட்டில் புதுமணத் தம்பதிகள் ஒரு வாரம் விருந்து கொண்டாடினார்கள்.

குமாரைப் பற்றி எந்த முடிவுக்கும் வர முடியவில்லை சுதியால். சற்று வித்தியாசமானவனாகத் தெரிந்தான். நன்றாகப் பேசினான். பழகினான். மிகுந்த விஷய ஞானம் உள்ளவனாக இருந்தான். எந்த இடத்திலும் கணவன் என்ற உரிமையை எடுத்துக் கொள்ள அவன் தயங்கவேயில்லை.

சுதியிடம் அனுமதியும் கேட்கவில்லை. அதே சமயம் அவனிடம் எல்லாவற்றிலும் ஒரு அந்நிய தன்மை இருந்தது.

பத்து நாட்கள் விடுமுறை முடிந்ததும் ''நாளைக்கு நான் வேலைக்குப் போகணும் குமார். வாட் அபௌட் யு?'' என்றாள் சுதி.

அந்தச் சின்ன கேள்வி பெரிய கற்பாறையாய் மாறி குமாரை அழுத்தியது.

''நான் சொந்தமா பிஸினஸ் செய்யப் போகிறேன்'' என்றான் எங்கோ பார்த்துக் கொண்டு. ''ஓ.கே.'' என தலையாட்டியவளிடம் ''நமக்கு தனியாய் ஒரு வீடு பார்க்கலாம்னு இருக்கேன்'' என்றான்.

''உனக்கு இங்கு மாமனார் வீட்டுடன் இருப்பது நிச்சயம் தர்ம சங்கடமாய் இருக்கும். ஒன்றும் பிரச்னையில்லை. நாம தனி வீடு பாத்துக்கலாம்.''

இரண்டு நாள் கழித்து ''வீடு ஏதாவது பாத்தியா குமார்?'' என்றாள் சுதி.

''இல்லை'' என்று அவன் தலையாட்டவே. ''அப்பாவோட ஆபீசுக்காக கட்டின கெஸ்ட் ஹவுஸ் ஒன்று அண்ணா நகரில் இருக்கிறது. தற்காலிகமாய் அதில் தங்கிக் கொண்டு அப்புறமாய் வேண்டுமானால் நமக்கு ஏற்றாற்போல் பார்த்துக் கொள்ளலாம். உனக்கு ஓ.கே.வா?''

''சரி'' என குமார் தலையாட்டவே அடுத்த வாரத்தில் அவர்களது தனிக்குடித்தனம் தொடங்கியது.



சரஸ்வதி கிரைண்டரும், மிக்ஸியும், அடுப்பும், பாத்திரங்களும் தேடித் தேடி வாங்கினாள். அரிசியும், பருப்பும், மளிகைப் பொருட்களுமாய் சமையல் கட்டை நிறைத்தாள். விஸ்வநாதன் சோபாவும், கட்டிலும், ஷோகேசும் கொண்டு வந்து இறக்கினார். புது பெயிண்டில் சுவர்கள் பளபளத்தன. சுவர்களின் வண்ணத்திற்கு ஏற்றாற் போல் கர்ட்டன்களும், மிதியடிகளும், மெத்தை விரிப்புகளும் கண்ணைப் பறித்தன. வீட்டைப் பெருக்கித் துடைத்து சுற்று வேலை செய்து கொடுக்க ஒரு பெண்ணை அமர்த்தினாள் சரஸ்வதி. சமையல்கட்டிலேயே நுழைந்திராத பெண்ணுக்கு ஒத்தாசையாக பாலம்மாவை அனுப்பினாள். ''பாலம்மா, அங்கேயே இருக்கட்டும்மா. இத்தனை வருஷமா பழகின பாலம்மா இல்லாட்டி உங்களுக்கு சிரமமா இருக்கும்'' என்றாள் சுதி.

''அங்க நானும் அப்பாவும் ஒரு டம்ளர் அரிசியோ. நாலு கோதுமை தோசையோ செய்தால் எங்க வேலை முடிஞ்சிடும். நீ வேலை பாக்கப் போறவ. நேரத்துக்கு ரெடியாக வேண்டாமா? ரெண்டு குழம்பு, நாலு பொரியலாவது செய்யக் கத்துக்கோன்னு சொன்னப்ப கேட்கவேயில்ல. இப்ப என்ன செய்யப் போறியோ?''

''ஏம்மா கவலைப்படறீங்க?'' என்றாள் பாலம்மா. ''நாந்தான் பாப்பா கூடவே இருக்கிறேனே. ஒரு வேலை செய்ய விட்டுடுவேனா?''

மகளுக்கு பலவாறாக புத்திமதிகளும் ஆலோசனைகளும் சொல்லிவிட்டு, வழக்கமான கவலையுடன் திரும்பிப் போனார்கள் பெற்றோர்கள் இருவரும். தனக்கென ஒரு வீடு. அதில் புதிதாய் ஏதாவது செய்து பார்க்கிற, அல்லது கற்றுக் கொள்கிற ஆர்வத்தில் நாட்கள் சுவாரஸ்யமாய் நகர்ந்தது சுதிக்கு. அன்று அவசரமாய் கிளம்பிக் கொண்டிருந்தாள் சுதி. குக்கரை இறக்கி விட்டு, சட்னிக்கு தாளித்து கொட்டிவிட்டு, கோஸ் பொரியலை ஒரு கிளறு கிளறியவள் பாலம்மாவைக் கூப்பிட்டாள்.

"பாலம்மா தேங்காயைத் தூவி பொரியலை இறக்கிடுங்க. நான் போய் ரெடியாயிட்டு வருகிறேன்."

"போய் நிதானமா கிளம்பி வா கண்ணு. நா பாத்துக்கறேன்" என்றபடி துலக்கிக் கொண்டிருந்த பாத்திரத்தைக் கீழே வைத்து விட்டு கைகளை கழுவி துடைத்தபடி வந்தாள் பாலம்மா.

டிரஸ்ஸிங் டேபிளின் முன் அமர்ந்த சுதி வேகமாய் தலையை வாரினாள். முகத்தை கழுவித் துடைத்து சின்னதாய் பொட்டிட்டு உடையை மாற்றினாள்.

கழுத்திலிருந்த சங்கிலியை சுடிதாருக்குள் போட்டு வெள்ளைக் கோட்டை மேலே அணியும்போது தாலி உடம்பில் பட்டு குத்தியது. நடந்து முடிந்த திருமணத்தை நினைவு படுத்தும் விதமாக வெளியே எடுத்து துப்பட்டாவுடன் சேர்த்து பின் பண்ணியபடி திரும்பிப் பார்த்தாள். குமார் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான்.

சத்தமின்றி கிளம்பி கீழே வந்தவள், பாலம்மாவிடம் "ஐயா எழுந்தா டீ போட்டுக் கொடு" என்று சொல்லிவிட்டு அவசரமாய் காரைக் கிளப்பினாள். அன்று காலையில் ஒரு மேஜர் சர்ஜரி இருந்தது. சீனியருடன் சேர்ந்து அட்டெண்ட் செய்ய வேண்டும். எப்போதுமே அவர் ஆபரேஷன் தியேட்டரில் கண்டபடி திட்டுவார். தாமதமாகப் போனால் நோயாளிகள் முன்பே பேசிவிடக் கூடும். அதற்குள் போய்ச் சேர வேண்டும்.

காலையில் எவ்வளவு சீக்கிரமாய் எழுந்தாலும் நேரம் ஆகத்தான் செய்கிறது. பழக்கமற்ற சமையல் நேரத்தின் பெரும் பகுதியை எடுத்துக் கொள்கிறது. முதலில் பாலம்மா தான் சமைத்துக் கொண்டிருந்தாள். இருபத்தி ஐந்து வருடமாய் சரஸ்வதியின் பக்குவத்தில் சமைத்து பழகியிருந்த பாலம்மாவின் சமையல் குமாருக்கு ஏனோ பிடிக்கவில்லை. எனவே சுதியே சமையல் கட்டில் நிற்க வேண்டியதாயிற்று.



"கணவன் வயிற்றின் மூலமாகத்தான் மனசை அடைய முடியும். வேலைக்காரி என்னதான் வகை வகையா சமைச்சாலும் மனைவி கையால் ரசம் சாதம் சாப்பிடும் சுகமே தனி. அவருக்கு உன் கையால் சாப்பிட ஆசையாய் இருக்கும்" என்றாள் அம்மா.

"அம்மா என்னோட எந்த மருத்துவ புத்தகத்திலும் வயிற்றுக்கும் மனசுக்கும் உள்ள இந்த பாலத்தைப் பற்றி படிச்சதே இல்லையே" என்றாள் சுதி.

"அதெல்லாம் மருத்துவக் கல்லூரியில் படிக்க முடியாதுடி. அனுபவத்தில் தான் படிக்க வேண்டும்" என்றாள் சரஸ்வதி.

காரை அவசரமாக பார்க் பண்ணிவிட்டு வேகமாய் மருத்துவமனையின் உள்ளே நுழைந்தாள் சுதி. எதிரே யார் வருகிறார்கள் என்றுகூட பாராமல் ஓடினவளைப் பிடித்து நிறுத்தினான் ரவி.

"அவ்வளவு அவசரமா எங்க ஓடற சுதி? ட்ரீட்மெண்ட் கொடுக்கப் போறியா? அல்லது அட்மிஷன் ஆகப் போறியா? பாத்தியா லாபில உட்கார்ந்திருக்கவங்க எல்லாம் எமர்ஜென்ஸி வார்டிலிருந்து யாரோ பேஷண்ட் தப்பிச்சி ஓடறாங்கன்னு பாக்கறாங்க."

முறைத்தாள் சுதி. "உனக்கு விளையாட்டா இருக்கு? இன்னிக்கு ஒரு ஹார்ட் ஆபரேஷன் இருக்கு. பேஷண்டை ரெடி பண்ணணும்.

சீனியர் கண்ணுல படறதுக்குள்ள வார்டுக்குப் போகணும் நான்."

"இதுக்கா ஓடி வர்ற? நான் எல்லா வேலையும் முடிச்சாச்சி. சீனியர் இன்னும் மேலே வர அரை மணி நேரமாகும். நீ தியேட்டருக்கு போய் தயாராக்கு."

"ஓ தேங்க் யூ ரவி" அவன் கையைப் பிடித்து குலுக்கினாள் ஆசுவாசத்துடன். இருவரும் பேசியபடியே இரண்டாவது மாடிக்கு நடந்தனர்.

"என்னம்மா புதுப்பொண்ணு, திருமண வாழ்வு எப்படியிருக்கிறது?" என்றான் ரவி.

"நான் இப்போதான் உன்கிட்ட கல்யாணத்துக்கு சரி சொன்ன மாதிரி இருக்கு. எவ்வளவு சீக்கிரம் நடந்து முடிஞ் சிடிச்சி பாத்தியா? நம்பவே முடியல இல்ல?"

"எப்படி நம்ப முடியும்? ஒரு வருடமாய் என்னுடன் அறையை பகிர்ந்து கொண்ட ஒருவன் எதிர்பாராமல் என் தோழியின் கணவனாக வந்தால் என்னால் மட்டும் நம்ப முடியுமா என்ன?"

"என்ன குமாரை உனக்கு முன்பே தெரியுமா? சொல்லவே யில்ல நீ?"

"நீ கல்யாணத்துக்கு முந்தி மாப்பிள்ளையைப் பார்க்க எனக்கு சான்ஸே கொடுக்கல. அப்புறம் எப்படிச் சொல்ல முடியும்? கல்யாணத்தின்போது நமக்குப் பேச நேரமே இல்லை. மறுபடி உங்கிட்ட பேச இப்பதான் சந்தர்ப்பம் கிடைச் சிருக்கு."

"ஆனா குமார் கூட உன்னைத் தெரிஞ்ச மாதிரி சொல்லவே யில்லையே!" என்றாள் சுதி வியப்பாய்.

'அவன் எதைத்தான் சொன்னான். இதை சொல்வதற்கு!' தனக்குள் பேசிக் கொண்ட ரவி இரண்டாவது ப்ளோர் வரவே, சுதியிடம் பை சொல்லி குழந்தைகள் வார்டுக்குள் சென்றான்.

## 12

ஹாலில் டி.வி. பார்த்தபடி அமர்ந்திருந்தான் குமார். அப்போதுதான் மருத்துவமனையிலிருந்து திரும்பியிருந்த சுதி காபி கோப்பையுடன் வந்தாள். ஒரு கப்பை குமாரிடம் கொடுத்தவள், இன்னொரு கப் காபியுடன் எதிரில் அமர்ந் தாள். ஒரு வாய் குடித்தவள்.

"எப்படியிருக்கு குமார் என்னுடைய காபி?" என்றாள்.

"ம்." என்றான் ஒற்றை முணகலாய்.



"ரொம்ப சுமார்தான் இல்ல. உன்னோட லக் அவ்வளவு தான். பாவம், உன் பொண்டாட்டி சமையல்ல அவ்வளவு எக்ஸ்பர்ட் இல்ல."

பதில் பேசாது காபியை பருகினான் குமார்.

"உங்கப்பா நீ அமெரிக்கா போகிற ஐடியாவில் இருக்கிறதா சொன்னாரே அந்த விஷயம் என்னாச்சு குமார்?"

"போகலை."

"சரி அடுத்தது என்ன செய்யப் போற? எந்த மாதிரி தொழில் அல்லது பிஸினெஸ் உனக்குப் பிடிக்கும்? ஏதாவது ஐடியா வெச்சிருக்கியா? எப்ப தொடங்கலாம்னு இருக்க? பர்சனலா உனக்கு எந்தத் துறையில் ஈடுபாடு இருக்கிறது? நான் விபரம் தெரிஞ்சதிலிருந்தே ஸ்டெதஸ்கோப்பையும், சிரிஞ்சையும்தான் வெச்சி விளையாடி இருக்கிறேன். அந்த மாதிரி உனக்கும் எதிலாவது ஈடுபாடு இருக்குமில்ல?"

"யோசிக்கணும்."

மறுபடி குமாரின் ஒற்றை வார்த்தை பதிலில் சுதி ஏமாற்ற மானாள். "நீ ரொம்ப பேச மாட்டியா குமார்? ரொம்ப அமைதி யானவன்னு எல்லோரும் சொல்றாங்க. ஆனா எங்கிட்ட கூடவா அப்படி இருக்கணும்?"

வேகமாய் ஒவ்வொரு சேனலாய் மாற்றிக் கொண்டிருந் தான் குமார். காலியான காபி கோப்பையை டீபாய் மீது வைத்த சுதி எழுந்து வந்து குமாரின் சோபா கைப்பிடியின் மீது அமர்ந்தாள். "ரொம்ப பேசாதவங்க, அதிகமா கேட்பாங்கன்னு சொல்வாங்க. நீ அந்த மாதிரி கேட்கிற டைப்பா குமார்? ஆனா எனக்கு எப்பவும் யார்கிட்டயாவது பேசிட்டே இருக்கணும். சிரிச்சிட்டே இருக்கணும். ஏதாவது செஞ்சிகிட்டே இருக் கணும்."

"நீ எந்த ஆஸ்பிட்டலில் டாக்டராய் இருக்கிறாய்? கீழ்ப் பாக்கத்திலா?" என்றான் குமார்.

"கீழ்ப்பாக்கத்திலா?" என்ற சுதி மறு நிமிடம் குமாரின் தோளில் உரிமையுடன் தட்டிச் சிரித்தாள். "முதன் முதலா ஒரு ஜோக். அதை சிரிச்சிட்டே சொன்னா என்ன குமார்?" என்ற சுதி குமாரின் முகத்தைப் பற்றி திருப்பினார்.

"இவ்வளவு அழகான உதட்டையும், பளீரென்ற பற்களையும் வைத்துக் கொண்டு நீ சிரிக்கலைன்னா அது எவ்வளவு பெரிய அநியாயம் தெரியுமா? இருண்டு போன வீட்டிற்கு விளக்கேற்றினாற் போல் சிரிப்பு நம் முகத்துக்கு தனி ஒளியைத் தரும்."

"டின்னர் ரெடியா?" என்றான் குமார் பதிலுக்கு.

"ரெடியாயிடும் பத்து நிமிடத்தில்" என எழுந்து சமையல் கட்டுக்குச் செல்பவளை ஒரு நமைச்சலுடன் பார்த்தான்.

எதிர் வீட்டில் கார் ஹாரன் சத்தம் பலமாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து பெரிய சத்தத்துடன் கேட் திறக்கப்படும் சத்தமும் கேட்கவே தூங்கிக் கொண்டிருந்த சுதி லேசாய் தூக்கம் கலைந்து புரண்டு படுத்தாள்.

அருகில் தலையணை மட்டும் கிடக்க குமாரின் இடம் காலியாக இருந்தது. எழுந்து போய் பாத்ரூம் கதவைத் திறந்து பார்த்தாள். அது காலியாக இருக்கவே, பால்கனிக்கு வந்தாள். பால்கனியின் கைப்பிடி சுவரில் சாய்ந்த வண்ணம் குமார் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். நிலவின் மங்கிய ஒளியில் அந்த செதுக்கிய உடற்கட்டும், திருத்தமான முக வெட்டும் மனதை மயக்கியது. பின்பக்கமாய் நெருங்கியவள் கைகளை முன்னே செலுத்தி அவனை அணைத்தாள். "தூங்கலியா குமார்?" என்றாள் முகத்தைத் தோளில் புதைத்து.

பதில் வராமல் போகவே, "எதுக்கு இப்படி சிகரெட் குடிக்கற குமார்? நிகோடின் உடலை எப்படி பாதிக்கும்னு தெரியாத சின்ன பையனா நீ?" என்றாள்.

"சுதி நான் ஒண்ணு கேட்டா உண்மையைச் சொல்லு



"கேளேன்."

"என்னை உனக்குப் பிடிக்கலை இல்லையா?"

திகைத்தாள் சுதி. "ஏன் அப்படி நினைக்கற?"

"இல்ல பொதுவா பொண்ணுங்களுக்கு புருஷன் சினிமாவில் வர்ற ரொமான்டிக் ஹீரோ மாதிரி எப்பவும் சிரிச்சிகிட்டே பொண்டாட்டிய சுத்தி சுத்தி வரணும். ஒரே பாட்டில் தொழில் தொடங்கி அந்த பாட்டு முடியறதுக்குள்ள பணக்காரன் ஆயிடணும். அப்பதானே பிடிக்கும்?"

சிரித்தாள் சுதி. "இப்ப நீதான் அபத்தமா பேசறே. சினிமாவுக்கும் நிஜத்துக்கும் வித்தியாசம் தெரியாத பொண்ணாவா என்னை நினைக்கற? நான் சாயங்காலம் பேசினதை நினைச்சா இப்படி தூக்கம் வராம உட்கார்ந்திருக்க! நீ நீயாவே இரு. உன்னை நான் எதுவுமே கேட்க மாட்டேன். சிரி, பேசுன்னு சொல்லவே மாட்டேன். அமைதியா இருக்கறது உன் சுபாவம்னா இருந்துட்டுப் போ. உனக்கு எப்ப, என்ன தொழில் செய்யலாம்னு இருக்கோ செய். ஓ.கே.வா. இப்ப வந்து தூங்கு வா." இழுத்துப் போய் படுக்கையில் தள்ளி கழுத்து வரை போர்வையை இழுத்து விட்டு 'குட்நைட்' என்றாள் சுதி.

குமாருக்கு என்ன தொழில் செய்வது என்ற முடிவுக்கே வர முடியவில்லை. குழப்பமாக இருந்தது. யோசனைகளிலும், விசாரிப்புகளிலுமே சில மாதங்கள் ஓடிப் போயின. ஒரு வியாபாரியின் மகன் இன்னொரு வியாபாரத்தில் ஈடுபடுவது எளிதாய் இருக்கும். கிராமத்திலிருக்கும் விவசாயிக்கு பக்கத்திலுள்ள டவுனில் கடை வைக்க வேண்டுமென்ற ஆசை இருக்கும். அடித்தட்டு மக்களுக்கும் கூலிக்குப் போராடுபவர்களுக்கும் தங்கள் மக்கள் படித்து அரசாங்க வேலையில் வெள்ளைக் காலர் உத்யோகம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நடுத்தர குடும்பத்து மக்களுக்கு பட்ஜெட் போட்டு வாழும் வாழ்க்கை வெறுத்துப் போய் அடுத்த

தலைமுறை வெளிநாடு சென்று லட்சங்களில் புரள வேண்டும் என்ற லட்சியம் இருக்கும். குமார் மாதிரி பணக் கார குடும்பத்தில் பிறந்தும் கையில் பணம் புரளாத, படித் திருந்தும் வேலை பார்க்க விரும்பாத இளைஞனுக்கு தொழில் என்பது குழப்பமான விஷயமாகத்தானே இருக்கும்?

ஆயிரம் ரூபாய்க்கு சரக்கு வாங்கி ஆயிரத்து இருநூறுக்கு விற்று. இருநூறு ரூபாயில் வாடகை, ஆள்கூலி, கரண்ட் பில் என கணக்குப் போடும் வியாபாரங்கள், அவனுக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை. தொழிலோ, வியாபாரமோ அது எதுவாய் இருந்தாலும் ஏசி அறையும், காரும், கையில் புரளும் லட்சங் களுமாய் இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்று புதிது. புதிதாகத் திட்டம் போடுவதும், பிறகு அதை கைவிடுவதுமாய் இருந்தான்.

"ஏதாவது பிளான் போட்டு வெச்சிருக்கியா குமார்? எப்ப தொழில் தொடங்கலாம்னு இருக்க?" என்ற சுதியிடம் "ஏன் இவன் எப்படா வீட்டை விட்டு போவான்னு இருக்கா? சம்பாதிக்கிற திமிரா?" என எரிந்து விழுந்தான்.

ஒரு நிமிடம் திகைத்த சுதி. "ஸாரி குமார். நீயே அப்செட்ல இருக்க. நா வேற யோசிக்காம கேட்டுட்டேன்" என புன் னகைத்தாள்.

"இதென்ன எப்பவும் பல்லை காமிச்சிகிட்டு" என மனதுக் குள் எரிச்சலடைந்த குமார் "நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்" என சட்டையை மாட்டியபடி கிளம்பி னான். இரவு மணி பதினொன்று ஆகியிருந்தது. தூக்கம் வராமல் சிறிது தூரம் நடந்து விட்டு ஒரு டீ குடித்து விட்டு வருவது அவனது வழக்கம் என்பது இத்தனை நாளில் பழகியிருந்ததால் சுதி எதுவும் பேசாமல் தலையசைத்தாள்.

தெருமுனையிலிருந்த பூங்கா இந்நேரத்திற்கு பூட்டப் பட்டிருக்கவே அதன் நுழைவாயிலில் அமர்ந்தான் குமார். ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான். தெருவில் மக்களின்



நடமாட்டமே ஏறக்குறைய நின்று போயிருக்க, பூங்காவின் உயரமான மரங்கள் ஒரு அமானுஷ்ய அமைதியை தந்தன. சுற்றுப் புறத்தையே மறந்தவனாய் வழக்கம் போல் குருட்டு யோசனைகளில் மூழ்கி இருந்தான் குமார்.

"ஸார் மணி என்னாச்சு?"

"பதினொன்று ஐம்பது" என்றபடி திரும்பிப் பார்த்தவ னுக்கு எதிரில் நிற்பவனை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது.

"நீங்க?" என்றான் தயக்கத்துடன் தெருவிளக்கின் ஒளி யில் குமாரைப் பார்த்த அவன் "ஏய் வசந்தகுமார்!" என்றான் ஆச்சரியத்துடன். குமாருடன் பள்ளியிலும் கல்லூரியிலும் உடன் படித்த பிரசாத்,

"பிரசாத் இப்ப நீ எங்கே இருக்கிறாய்? என்ன செய் கிறாய்?" என்றான் குமார்.

"சென்னையில்தான் இருக்கிறேன். எக்ஸ்போர்ட், இம் போர்ட் பிஸினெஸ் பண்ணுகிறேன் நீ?" என்றான் பிரசாத் தாடியைத் தடவியபடி.

"நான் என்ன பிஸினெஸ் பண்றதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்."

"யோசிக்கவே வேண்டாம். எங்கூட சேர்ந்திடு" என்றான். பிரசாத். வெளிநாட்டிலிருந்து எனக்கு பொருட்கள் வரும். சில சமயம் கப்பலில், சில சமயம் விமானத்தில் வரும். அந்த பொருளை என்னுடைய ஏஜெண்டாய் நீ வாங்கி நான் தகவல் அனுப்பும் இடத்துக்கு கை மாற்றி விட்டால் போதும். கமிஷனே வருடத்துக்கு லட்சக் கணக்கில் வரும். தினமும் காலையிலிருந்து மாலை வரை பாடுபட வேண்டியதில்லை. வீட்டில் உட்கார்ந்து கொண்டே ஜாலியாக சம்பாதிக்கலாம்." ஆசை காட்டினான் பிரசாத். அனுபவ அறிவோ, ஆட்களை எடை போடும் திறமையோ இன்றி நாலு சுவற்றுக்குள் புத்தகங்களுடன் அடை பட்டு கிடந்த குமார் எளிதாக

வலையில் விழுந்தான். எந்தெந்த நாட்களில் பொருட்கள் வரும். அவற்றை எப்படிக் கையாளுவது என மேலும் சிறிது நேரம் பேசிய பின்னர் விடை பெற்றுப் பிரிந்தனர்.

இம்போர்ட் எக்ஸ்போர்ட் பிஸினெஸ் ஒண்ணு புதிதாய் தொடங்கியிருப்பதாக குமார் வீட்டில் அறிவித்தான்.

"என்னென்ன பொருட்களை இறக்குமதி பண்ணுகிறீர்கள்? எதை ஏற்றுமதி பண்ணுகிறீர்கள்? எவ்வளவு பணம் கொள்முதல் செய்யணும்" என்ற சுதியிடம்,

"ஏன் நீ பிச்சை போடப் போறீயா?" என எகிறினான்.

"ஆபீஸ் எங்கு தொடங்கியிருக்கிறீர்கள்? பொருட்களை ஸ்டாக் வைக்க கோடவுன் வேணுமே! என்ன செய்வீர்கள்! நான் இடம் பாத்து தரட்டுமா?" என்றார் விஸ்வநாதன்.

"என் நண்பனின் சைட்டிலேயே இப்போதைக்கு ஒரு கட்டிடம் எழுப்பியிருக்கோம். விரிவு படுத்தும் போது உங்களிடம் சொல்கிறேன்" என மழுப்பினான்.

நாலைந்து நாட்களுக்கு ஒரு முறை அவனுக்கு போன் வரும் சில சந்கேதக் குறிப்புகளுடன் அவன் காரில் சென்று அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பொருளை வாங்கி சொன்ன இடத்தில் ஒப்படைத்து விட்டு வருவான். அடுத்த முறை பிரசாத்தை சந்திக்கும்போது கேட்டான்.

"இந்த பார்சல்களில் என்ன இருக்கிறது பிரசாத்?"

"கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் பொருட்கள், செல்போன்கள், வி.சி.டி. ப்ளேயர்கள்தான் இருக்கிறது."

"அதை என் இவ்வளவு ஒளிவு மறைவாய் கொண்டு வர வேண்டும். நேரடியாகவே கொண்டு வரலாமே!"

"வரலாம்தான். கஸ்டம்ஸில் வரி நிறைய கட்டணுமே! அதை தவிர்க்கத்தான் இப்படி நம் மூலமாய் அனுப்புகிறார்கள்.



கூட வருமான வரி கட்டுவதில் ஏய்ப்பதில்லையா? நிலம் வாங்கும்போது வாங்கிய தொகையை குறைவாக மதிப்பிட்டு பத்திர பேப்பர் செலவை குறைப்பதில்லையா? அது போலத்தான் இதுவும்."

"ஒரு வேளை கஸ்டம்சில் நாம் மாட்டினால்?"

"சான்ஸே இல்லை. எல்லா இடத்திலும் நமக்கு ஆள் இருக்கு. அதுவும் உன்னுடைய கார் டாக்டர் கார் இல்லையா? அதனால் அவ்வளவாய் செக் பண்ண மாட்டார்கள். ஒரு வேளை எதிர்பாராம ஏதாவது பிரச்சனை வந்தா கூட பார்சலைத் தூக்கிப் போட்டுட்டு நாம வந்திட்டே இருக்க வேண்டியதுதான். எல்லா தொழிலிலும் ரிஸ்க் இருக்கத்தான் செய்கிறது குமார். தெரு கூட்டற வேலைக்குப் போனாக்கூட ரோட்ல போற வண்டில அடிபட்டு சாக நேரிடலாம். வீட்ல சும்மா படுத்துத் தூங்கினா கூட ஒரு பூகம்பம் வந்தால் வீடு இடிஞ்சி மேலே விழும். பிரச்சனைகளுக்கு பயந்தால் வாழவே முடியாது. நாட்ல தப்பு செய்யறவங்க எல்லாம் தைரியமா நடமாடறாங்க. நீ ஏன் ஒண்ணுமில்லாத விஷயத்துக்கு இப்படிக் குழப்பிக்கற? நான் இருக்கேன் குமார். எப்பவும் உன் கூட. எனக்குப் பசிக்குது. சாப்பிட போகலாம் வா" என அவனை இழுத்துக் கொண்டு நடந்தான் பிரசாத்.

அன்று வந்திருந்த கடிதங்களை பிரித்துக் கொண்டிருந்தாள் சுதி. மாலதியிடமிருந்து ஒரு பெரிய கடிதம் வந்திருந்தது. கண்டபடி திட்டி எழுதியிருந்தாள். "உன்னை போனில் பிடிக்கவே முடியவில்லை. மருத்துவமனைக்கு போன் செய்தால் ஓ.பி.யில் அல்லது ஆபரேஷன் தியேட்டரில் இருக்கிறாய் என்கிறார்கள். வீட்டிற்குப் போன் செய்தால் உன் கணவர் நீ இல்லை அல்லது தூங்கி விட்டாய் என்கிறார். செல்போன் என்று ஒன்றிருக்கிறதே. அதில் எப்படி பேசுவது என்பதை

சமீப காலமாய் நீ மறந்து போய் விட்டாய் என நினைக்கிறேன். அவ்வளவு பிஸியான ஆளா நீ? முன்கூட்டியே ஒரு தகவல் கூட இல்லாம கல்யாண பத்திரிகை அனுப்பின போதே உங்கூட பேசாம இருந்திருக்கணும். நம்ம சுதிதானேன்னு வந்து தலையை காட்டிட்டு வந்தேன். ஆனா கல்யாணமானதும் இப்படி என்னை எல்லாம் மறந்து விடுவாய் என நான் நினைக்கவேயில்லை. உனக்கு உன் கணவரை தவிர யாரையும் நினைவில் இல்லாத அம்னீஷியா வந்திருக்கிறது போலும். இங்கு நல்ல டாக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு முறை நீ வந்தாயானால் கணவரைத் தவிர மற்றவர்களையும் அடையாளம் காணும்படியாய் செய்து விடுவார்கள். வருகிறாயா சொல்? இக்கடிதத்தைப் பார்த்தவுடனே போனிலாவது பேசாவிட்டால் இனி நான் உன்னுடன் பேசவே போவதில்லை என வேடிக்கையும் கோபமுமாக எழுதியிருந்தாள்.

உண்மையில் திருமணமான பிறகு ஒரு முறை கூட மாலதியிடம் பேசவே இல்லை. அவளுக்கு திருமணமான புதிதில் வாராவாரம் கட்டாயம் பேசுவாள். இப்போது அவளுக்கு கோபம் வரத்தான் செய்யும். சோபாவில் வாகாக உட்கார்ந்து கொண்டு மாலதியின் நம்பரை டயல் செய்தாள். இரண்டாவது ரிங்கில் கதிரவன் போனை எடுத்தான். "அண்ணா எப்படியிருக்கீங்க?" என்றாள் சுதி.

அப்போதுதான் படியேறி மேலே வந்த குமார் எதிர் சோபாவில் அமர்ந்து பேப்பர் வெயிட்டை உருட்டத் தொடங்கினான்.

சுதியிடம் நலம் விசாரித்துவிட்டு, குமாருடன் ஒரு முறை வர வேண்டும் என்ற அழைப்புடன் மாலதியிடம் போனை கொடுத்து விட்டான் கதிரவன்.

"எங்கிட்ட பேசாதே என முதலில் கோபித்துக் கொண்டே மாலதி ஒரு வழியாய் சமாதானமாகி பேசத் தொடங்கியதில் நேரம் போனதே தெரியவில்லை. முன்னும் பின்னும் இரண்டு முறை நடந்த குமார் அதற்கு மேல் பொறுக்க



மாட்டாமல் அருகில் வந்து டெலிபோன் ஒயரை இழுத்து அறுத்து எறிந்தான்.

திடுக்கிட்ட சுதி "என்னாச்சு குமார்?" என்றாள்.

பதில் பேசாது கையிலிருந்த ஒயரை வீசினவனிடம் "எதுக்கு குமார் டெலிபோன் ஒயரை கட் பண்ணின?" என்றாள் மீண்டும்.

"நீ எப்பப் பார்த்தாலும் வேலைக்குப் போயிட்டு, உன் ப்ரண்ட்ஸ் கூட அரட்டை அடிச்சிட்டு இருந்தா. என்னை எப்ப கவனிக்கறது?"

"அதுக்காக டெலிபோன் ஒயரை கட் பண்ணணுமா? மாலதி என் க்ளோஸ் ப்ரண்ட். சொல்லியிருக்கேன் இல்ல! நம்ம கல்யாணத்துக்கு பிறகு அவகிட்ட பேசவேயில்லை. அதனாலதான் ரொம்ப நேரம் பேசினோம். நீ கூப்பிட்டிருந்தா அப்புறமா பேசலாம்னு நானே போனை வெச்சிருப்பேனே! இப்ப மறுபடி போன் வந்தா பேசணுமில்ல? எதுக்கு கட் பண்ணின?"

"எனக்குப் பசிக்குது" என்றான் குமார்.

அந்த ஒற்றை வார்த்தையில் சமாதானமான சுதி, "ஓ அதனாலதான் கோபம் வந்ததா? குழந்தையா நீ? பசிச்சா சொல்ல வேண்டாமா? இதோ ஒரு நிமிஷம்? என்று கீழே போன சுதி ஒரு தட்டில் இரண்டு சப்பாத்தியும் ஒரு இட்லியும், சட்னி, சாம்பார் கிண்ணங்களில் எடுத்து டேபிள் மீது வைத்து விட்டு குரல் கொடுத்தாள்.

"குமார் டின்னர் ரெடி."

"ஏன் பொண்டாட்டி டாக்டரா இருந்தா புருஷனுக்கு கையில சாப்பாடு கொண்டு வந்து கொடுக்கக் கூடாதா?"

ஒரு டிரேயில் தட்டையும் சாம்பார் கிண்ணங்களையும் வைத்து, கழுவிய துண்டாக்கிய பழங்களை இன்னொரு கப்பில் அழகாக அடுக்கிய சுதி 'எதையும் இவன் ஏன்

குத்தலாகவே பேச வேண்டும்' என நினைத்தவாறே அறைக்குச் சென்று டீபாய் மீது வைத்தாள். சேரை அருகில் எடுத்துப் போட்டு டம்ளரில் தண்ணீர் நிரப்பி வைத்தாள். குமார் தட்டை எடுத்துப் போய் கட்டிலில் அமர்ந்தான். உட்கார்ந்த வேகத்தில் சாம்பாரும் தண்ணீரும் வெள்ளை விரிப்பில் கொட்டி அதை மஞ்சளாக்கியது. டி.வி.யை ரிமோட்டால் ஆன் பண்ணிவிட்டு சாப்பிடத் தொடங்கினான்.

"அட்லீஸ்ட் சாப்பிடும்போதாவது கவனம் சாப்பாட்டில் இருக்க வேண்டாமா? இந்த எதுக்கு டி.வி. குமார் இன்னிக்கு சாம்பார்ல ஏதாவது வித்தியாசமா தெரியுதா? மேகஸின்ல ஒரு ரெசிப்பி படிச்சி அதே மாதிரி டிரை பண்ணினேன். நல்லா வந்திருக்கில்ல?"

பதில் பேசாது சாப்பிடுவதைத் தொடர்ந்தான்.

"நிச்சயமா நல்லா இருக்கு. இல்லேன்னா தட்டு காலியாகாதே! வாயைத் திறந்து சமையல் நல்லா இருக்குன்னு சொன்னா என்னவாம்! கஷ்டப்பட்டு சமையல் கத்துகிட்டு செய்யறவங்களுக்கு சந்தோஷமா இருக்குமில்லையா?" பேசியபடியே இடத்தை சுத்தப்படுத்திய சுதி. "இன்னும் சின்ன பசங்க மாதிரி பெட்ல கொட்டுவாங்களா சாப்பாட்டை?" என்றபடி கீழே போனாள்.

இரவு ஒரு சிக்கலான நோயாளியின் நோய் பற்றிய குறிப்புகளை இன்டர்நெட்டில் பார்த்துக் கொண்டிருந்தாள் சுதி. அவள் தேடிய தகவல் கிடைத்ததும் அந்த நோயாளியின் பரிசோதனை குறிப்புகள் அடங்கிய பைலை சரி பார்த்து தனித்தாளில் குறிப்பு எழுதிக் கொண்டிருந்தாள்.

"சுதி உங்கிட்ட பேசணும். எழுந்து வா" என்றான் குமார்.

"ஒரே நிமிஷம் குமார். இது கொஞ்சம் சிக்கலான கேஸ். நானே பர்சனல் இன்ட்ரஸ்ட் எடுத்து கவனிக்கறேன். நெட்டிலிருந்து சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. விட்டுப்



போனால் எல்லாமே குழப்பமாகி விடும். இதோ முடிந்து விட்டது. நிஜமாகவே ஒரு நிமிஷம் தான் ப்ளீஸ்." கம்ப்யூட்டரில் ஒரு கண்ணும் பைல்களில் ஒரு கண்ணுமாய் பதில் சொன்னாள் சுதி.

வேகமாய் அருகில் வந்த குமார் டேபிள் மீது கற்றையாய் இருந்த பேப்பர்களை விசிறி எறிந்தான். அவை பேன் காற்றில் மூலைக்கொன்றாய் பறந்தது. அவ்வளவு நேரமும் பட்ட சிரமம் வீணானதில் சுதி மிகுந்த எரிச்சலுற்றாள். யாரிடமும் சண்டை போட்டு பழகாததினால் சட்டெனத் திட்டவும் தோணவில்லை. திரும்ப எடுத்து இதையெல்லாம் அடுக்கவே எவ்வளவு நேரமாகும்? எப்போது வேலையை முடிப்பது என்ற அலுப்புடன் "நா வரேன்னு சொன்னேனில்ல, அதுக்குள்ள அப்படி என்ன அவசரம்?" என்றாள்.

"நான் கூப்பிட்ட உடனே வரலேன்னா, நீயெல்லாம் என்ன பொண்டாட்டி?"

'நான் பேசினால் நீ மட்டும் காது கொடுக்கிறாயா?' என்ற குமுறலை உள்ளே அடுக்கியபடி "சொல்லு குமார்" என்றாள் நிதானமாக.

"நீ போன்ல பேசறப்போ அண்ணா, அண்ணான்னு குழைஞ்சியே அவன் யார்?"

"எந்த போன்?" விழித்தாள் சுதி.

"எதிர்லயே உட்கார்ந்திருந்தேன். எங்கிட்டயே மறைக்கிற பாத்தியா? மாலதிக்கு பேசினியே அப்ப."

"அதுவா மாலதியின் கணவர் கதிரவன். எங்க சின்ன வயசிலிருந்தே அவரைத் தெரியும். மாலதிக்கு உறவினர் தான் அவர். எங்க எதிர் வீட்ல மாலா இருந்தபோது சேர்ந்து விளையாடியிருக்கிறோம்."

"அது அப்ப, இப்ப என்ன அவங்கிட்ட சிரிச்சிகிட்டே அரை மணி நேரம் பேசற? அப்படிப் பேச என்ன இருக்கு?"

இதுபோல அபத்தமான பேச்சுக்களை ஒரே பார்வையில் அலட்சியப்படுத்தி விடுகிற தன்னை கணவன் என்கிற உரிமையல்லவா பதில் சொல்ல வைக்கிறது என்ற வருத் தத்துடனே பதில் சொன்னாள் சுதி.

''அரை மணி நேரம் எல்லாம் பேசல குமார். அவர்தான் முதலில் போனை எடுத்தார். சம்பிரதாயமான நலம் விசாரிப் புக்குப் பிறகு போனை மாலதிகிட்ட கொடுத்துட்டார். என் தோழியின் கணவர் மற்றும் சின்ன வயசிலிருந்து பழகிய பிரியம். அதனால அண்ணான்னு கூப்பிடறேன். இதுல தப்பு என்ன இருக்கு?''

''கூட பிறந்த அண்ணன் தங்கச்சிகளையே இந்தக் காலத்துல நம்ப முடியல. நீ டாக்டருக்குப் படிச்சவதானே? உனக்குத் தெரியாது? தெரியலைன்னா பேப்பரை எடுத்துப் பார். இன்னிக்கு நடக்கிற பெரும்பாலான பாலியல் வன் முறைகள் குடும்பத்துக்குள் தான் நடக்கிறது. அப்பா, அண் ணன், மாமா, சித்தப்பா போன்ற நெருங்கிய உறவுகள்தான் பெண்களை பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்துகிறார் கள். அப்படியிருக்கையில் நீ எவனையோ அண்ணா என் கிறாய். அவன் அடி மனசிலும் உன்னை தங்கையாகத்தான் நினைக்கிறான் என்று உனக்கு எப்படித் தெரியும்? 'இந்த பெண் என் பேத்தியோட ப்ரண்ட் எனக்கும் பேத்தி மாதிரி' என்று சொல்லிக் கொண்டே அப்பெண்ணை அசிங்கமாய் தடவும் தாத்தாக்களை பார்த்திருக்கிறேன். என்னதான் நாக ரீகம்ங்கிற போர்வையில மறைச்சாலும் ஆண் மனசுல ஒரு மிருக இச்சை இருந்துகிட்டேதான் இருக்கும். அது எப்ப விழிச்சிக்கும்னு சொல்ல முடியாது. பெண்கள்தான் ஜாக் கிரதையா ஒதுங்கி இருக்கணும்.''

''ச்சீ... குமார் என்ன வார்த்தை பேசுகிறாய் நீ? உறவுகளை ரொம்பவும் கொச்சைப் படுத்துகிறாய். எல்லா உறவுகளும் காமத்தின் அடிப்படையிலேயே அமைவது என்றால் மனிதர் கள் சதை தின்னும் கழுகுகளாகத்தான் வாழ வேண்டும். இப்படி ஒரு விகாரமான மனோபாவம் உனக்கு எப்ப வந்தது?''



''நான் விகாரமானவன். நீ புனிதமானவள் அப்படித் தானே!''

''நான் அப்படிச் சொல்லவில்லை குமார். நீ சொன்ன மாதிரி சம்பவங்கள் சில நடந்திருக்கலாம். அவை வளரும் சூழ்நிலையாலும், மனோரீதியான கோளாறுகளாலும் தான் பெரும்பாலும் நடக்கும். விதி விலக்குகள் எப்போதுமே உதா ரணங்கள் ஆகாது. தயவு செய்து உன் பார்வை கண்ணோட் டத்த மாத்திக்க குமார்.''

''சுதி நான் கேக்கறதுக்கு மனசாட்சிப்படி பதில் சொல்லு. மருத்துவக் கல்லூரியில் உடற்கூறுகளை பாடமாகப் பயின்ற வள் நீ. உன்னுடன் படித்தவர்களோ, உன்னிடம் சிகிச்சைக்கு வரும் ஆண்களிடமோ தப்பான பார்வைகளை நீ சந்தித்ததே இல்லையா?''

''இதுக்கு உண்மையான பதில் வேணும்னா நீ முதலில் என்னைப் புரிஞ்சுக்கணும் குமார். மனைவி எப்படிப்பட்டவ ளாயினும் நேசிக்க வேண்டும் என்ற கடமை எல்லா ஆண் களுக்கும் உண்டு. எனவே என்னை கடமைக்காக நேசிப் பதை விட நண்பனாய் இருந்து புரிந்துகொள்ள முயற்சி செய் தால் நான் யார் என்பது உனக்கே புரியும். ஒரு நல்ல மருத்து வருக்கும் நோயாளிக்கும் உள்ள உறவு தெய்வீகமானது குமார். ஒரு பெண் கணவனிடம் கூட தயங்கித் தயங்கி கூச் சத்தை விடுவாள். பெற்ற மகனிடம் கூட ஒரு வயதுக்கு மேல் ஒதுங்கி நிற்பாள். ஆனால் முன்பின் அறிமுகமே இல்லாத மருத்துவரிடம் சற்றும் யோசிக்காமல் தன் உடலை காண் பிப்பாள். அதை யாருமே தவறாக நினைப்பதில்லை. ஏனென் றால் மருத்துவர் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர். கட வுளுக்கு சமம் என்று நினைக்கிறார்கள். எனவே அங்கே

தப்பான பார்வைகளுக்கு இடமே இல்லை'' சற்றே உணர்ச்சி வசப்பட்ட சுதி அதற்கு மேல் எதுவும் பேசாமல் இறைந்து கிடந்த பேப்பர்களை பொறுக்கத் தொடங்கினாள்.

## 13

அடுத்து வந்த நாட்களில் சுதி மிகவும் பிஸியாக இருந்தாள். இலவச மருத்துவமனை தொடங்குவதற்கான வேலைகளில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தாள். சாந்தி இல்லத்தில் பணிபுரியும் அவளது கிளாஸ் மேட் கிரி, ரவி, மற்றும் கிரியுடன் படித்த சம்பத், சம்பத்தின் உறவினன் சங்கர். சங்கரின் நண்பன் அன்வர் என ஆறு பேரும் சேர்ந்து ஒரு டிரஸ்ட் அமைத்தனர். விருப்பமுள்ளவர்கள் வரலாம் என கல்லூரி நண்பர்களிடம் தகவல் தெரிவித்தனர். மருத்துவமனைக்கான இடம் தோதாய் அமையாமல், அலைக்கழித்தது. தினமும் சுதி ஒரு பக்கம் ரவி ஒரு பக்கம் ஒவ்வொரு இடமாய் பார்த்து சலித்தனர். எதிர்பாராமல் விஸ்வநாதன் வாடகைக்கு விட்டிருந்த வீடு ஒன்று காலியாகியது. அதில் குடியிருந்தவர் டிரான்ஸ்பரில் போகவே அந்த வீட்டை மருத்துவமனைக்கு இலவசமாக பயன்படுத்திக் கொள்ள கொடுத்தார். கிரியின் சித்தப்பா டேபிள், கட்டில், பேன் முதலியவற்றை வாங்கிப் போட்டார். மனம் படைத்த ஒவ்வொருவரும் தாமாகவே முன் வந்து ஒவ்வொன்றாய் உதவி செய்ய ஒரு நல்ல நாளில் ஊரை அழைக்காமல், விருந்து வைக்காமல் சத்தமின்றி 'மதர் தெரஸா இலவச மருத்துவமனை' செயல்பட ஆரம்பித்தது. ஒவ்வொருவரின் வேலை நேரத்திற்கு தகுந்தபடி ஒரு அட்டவணை தயாரித்தார்கள். தினமும் ஒரு மணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் வரை வசதிக்கேற்றாற் போல் யாராவது ஒருவர் மாறி மாறி இருக்கும்படி தயாரித்துக் கொண்டனர். சுதிதான் திணறிப் போனாள். சாந்தி நிலையத்தின் முதியோர் பணி. இலவச மருத்துவ பணி. வீட்டு வேலைகளுக்கு நடுவே பிரகாசம் மருத்துவமனையின் வேலையையும் வருமானத்திற்



காக தொடர வேண்டியிருந்தது. குமாரின் வருமானம் என்ன? குடும்பத்தில் அவனது பங்களிப்பு என்ன என்பது தெரியாத நிலையில் பணத்திற்காக அப்பாவிடம் கூட கையேந்த அவளது தன்மானம் இடம் கொடுக்கவில்லை.

## 14

அன்று மாலை தெரஸா மருத்துவமனையில் வேலை முடிந்து கிளம்பும் நேரம் ஒரு பெண் வேகமாய் உள்ளே வந்தாள். ஆறு வயது குழந்தையை தோளில் சார்த்தியிருந்தாள். ''மூணு நாளா பையனுக்கு வயித்துல போகுதும்மா. கை வைத்தியம் செஞ்சு பார்த்தேன். கேக்கல. இப்ப பையன் பேச்சு மூச்சில்லாம கெடக்குதும்மா. எனக்குன்னு இருக்கறது இவன் ஒருத்தன் தாம்மா. எப்படியாவது காப்பாத்தி கொடுங்கம்மா'' என கதறினாள்.

கட்டிலில் கிடத்தப்பட்ட பையன் அசைவில்லாமல் கிடந்தான். தொடர்ந்த வயிற்றுப் போக்கினால் நீர்சத்து முழுவதுமாய் வெளியேறியிருந்தது. உடனடியாக டிரிப் போட ஏற்பாடு செய்துவிட்டு குழந்தை வைத்திய நிபுணரை வரவழைத்தாள். அவருடைய ஆலோசனைப்படி ஊசி மருந்து செலுத்தப்பட்டு மூன்று மணி நேர இடைவிடாத கவனிப்பிற்கு பிறகு பையனிடம் அசைவு தெரிந்தது. மேலும் அரை மணி நேரம் கழித்து காலில் கிள்ளியதும் 'அம்மா' என முணகினான்.

களைப்பு மிகுந்த சந்தோஷத்துடன் வெளியே வந்தாள் சுதி. அரை உயிராய் வாசலில் கிடந்து அரற்றிக் கொண்டிருந்த அவன் தாயிடம்,

''உன் பையன் உன்னைக் கூப்பிடறான். போய்ப் பார்'' என்றாள் சிரிப்புடன்.

''அம்மா நிசமாத்தான் சொல்றீங்களா?'' என்றாள் அவள் நம்ப முடியாமல்,

''என் பையன் பிழைச்சிட்டானா? இங்கு வர்றதுக்கு முன்ன கூட ஒரு டாக்டர் கிட்ட காட்டினேன். அவர் பையன் பிழைக்க

மாட்டான் சொந்தக்காரங்களுக்கு சொல்லியனுப்புன்னு சொல்லிட்டாங்களே'' என்றபடி உள்ளே ஓடினாள்.

இரண்டு நாள் மருத்துவமனையில் வைத்திருந்து கவனித்த பின்னர் க்ளுகோசும், விட்டமின் மாத்திரைகள், டானிக் என இலவசமாக கொடுத்து அனுப்பவும் பையனின் தாய் செல்லம்மா அழுது விட்டாள்.

''எங்க குலதெய்வம் அங்காள பரமேஸ்வரியை கோயிலில் தான் கும்புட்டு இருக்கேன். இப்பதான் தாயி நேர்ல பாக்கறேன். அவதான் உன் உருவத்துல வந்து என் பையனைக் காப்பாத்திக் கொடுத்திருக்கா. நான் தனிக்கட்டை. உனக்குக் கொடுக்க காசு பணம் எங்கிட்ட இல்ல. ஆஸ்பத்திரியிலயோ உன் வீட்லயோ எந்த வேலைன்னாலும் சொல்லு. நா வந்து செய்யறேன். ஏழைகளுக்கு கடவுள் இந்த உடம்பைக் கொடுத்ததே பாடுபடத்தானே!'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

அவள் கைகளை ஆதரவாய் பற்றினாள் சுதி. ''பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதே செல்லம்மா. ஒரு டாக்டரோட வேலையைத்தான் நான் செஞ்சேன். பையனை நன்றாக படிக்க வை. உன் புருஷன் எங்கே இருக்கிறார்?

''அதை ஏன் தாயி கேக்கற? அது ஒரு வீணா போன மனுஷன். ஒரு வேலைக்கும் போறதில்ல. வீட்ல சும்மா உக்காந்துட்டு நான் பாடுபட்டு கொண்டு வர்ற காசுல சாப்பிட்டுகிட்டு, கடைசியில எங்க போன, யாரோட போனன்னு என்னையே சந்தேகப்பட்டு தினம் ரகளை பண்ணினான்.

''நம்பின்வருக்கு நமச்சிவாயம்னு சின்ன வயசுல எங்கம்மா சொல்லுவா. நம்பாதவர்களுக்கு கல்லுதானே' என்னோட ஒழுக்கம் என மனசுல இருக்கு. நடத்தையில இருக்கு. அவனோட சந்தேகம் புத்தியில இருந்து பார்வையை மறைச்சுது. எவ்வளவோ குணமா சொல்லிப் பார்த்தேன். திருந்த சந்தர்ப்பமும் கொடுத்துப் பார்த்தேன். அவன் வழிக்கு வரல. நம்பாத உங்கிட்ட தீக்குளிச்சு என்னை நிரூபிக்க வேண்டிய



பையனோட வெளியே வந்துட்டேன்'' ஒட்டு மொத்த பெண்களின் பிரதிநிதியாய் செல்லம்மா பேசப் பேச தன் அந்தரங்கத்தை அவள் தொட்டுப் பார்ப்பதாய் சுதி கூசிப் போனாள். செல்லம்மா கிளம்பிப் போனதும் அங்கிருந்த டாக்டர் அன்வர் சொன்னான். ''எளிய மக்களின் முடிவுகள் கூட மிக சுலபமானது இல்லையா சுதி?''

''இன்னிக்கு உங்களுக்கு கேஸ் எதுவும் இல்லையா அன்வர்?'' பேச்சை மாற்றினாள் சுதி.

''அவசர கேஸ் எதுவுமில்லை. இன்னிக்கு சீக்கிரமா வீட்டுக்குப் போகணும். சினிமாவுக்குக் கூட்டிப் போகச் சொல்லி ஒரு வாரமாய் என் மனைவி தொல்லை செய்கிறாள்?''

''அதை ஏன் தொல்லை என்கிறீர்கள் அன்வர்? கணவனுடன் வெளியே போக. அவன் அண்மையிலிருக்க எந்தப் பெண்ணுக்குத்தான் ஆசை இருக்காது?''

''ஆசை அத்தோடு நிற்பதில்லை சுதி. வாரம் ஒரு சினிமா. மாதம் ஒரு புடவை. பக்கத்து வீட்டுப் பெண் புது டிசைனில் நகை போட்டிருந்தால் அதே மாதிரி வாங்க வேண்டும். அவங்க வீட்டிலிருந்து விருந்தாளி வந்து விட்டால் போதும். மாயாஜால், குயின்ஸ் லேண்ட், ஷாப்பிங் மால்கள் என சுற்றுவதில் பர்ஸ் முழுவதும் காலியாகி, கிரெடிட் கார்டும் ஃபுல் ஆகி விடும். மாதம் பூரா உழைச்சி சம்பாதித்ததை ஒரே நாளில் தீர்க்க வேண்டியிருக்கும். பத்தாததற்கு குழந்தைகளுக்கு ஸ்கூல் வேன் வரலேன்னா நாம கொண்டு போய் விடணும். இவங்க வெளியே போகும்போது டிரைவர் வேலை பார்க்கணும். வீட்டுக்கு கேஸ் வரலையா? ப்ளம்பர் வரலையா எல்லாத்தையும் நாம பார்க்கணும். ஆனா மாசமானா சம்பளகவரும் கைக்கு வரணும்னா அது எப்படி?

ஏன் சுதி, இந்த பொண்ணுங்க எல்லாம் கல்யாணத்துக்கு முந்தி ஏதேதோ ஆசைப்படறாங்க. கனவு காணறாங்க. அம்மா அப்பாவுக்கு பயந்து அதையெல்லாம் அடக்கி வெச்

சிக்கறாங்க. கல்யாணம் ஆனதுமே தங்களது ஆசைகளை நிறைவேற்ற ஒரு இளிச்சவாயன் கிடைச்சான்டான்னு அவனை ஒரு வழி பண்ணிடறாங்க.''

''அன்வர் நீங்க என்னவோ, ரொம்ப கடுமையா விமர்சனம் பண்ற மாதிரி தோணுது. உங்களுக்காக பாத்துப் பார்த்து சமைச்சி, உடம்பு சரியில்லைன்னா கவனிச்சி, உங்க குழந்தைகளை பாசத்தோட பராமரிச்சி, உங்களுக்காகவே வாழ்கிற மனைவிக்கு நீங்க கொஞ்சம் சிரமப்பட்டு வேலை செய்து கொடுத்தால்தான் என்ன?''

''சுதி உனக்கு என்னை மாதிரி நடுத்தரக் குடும்பங்களின் கதை முழுசா தெரியாது போலிருக்கு. எங்களுக்கு தினமும் கேண்டீனில் சாப்பிட பட்ஜெட் இடம் கொடுக்காது. சீரியல் பார்த்த நேரம் போக மீதி நேர சமையலில் பாதி நாள் ஆறிய சாதமும், மீந்து போன காய்கறிகளும்தான். கேட்டா, ''நீங்க எந்த நேரம் வர்றீங்கன்னே தெரியல. நினைச்சா போறீங்க. நினைச்ச நேரம் வந்து நிக்கறீங்க. எப்படி உங்களை எதிர் பார்த்து சமைக்கறதுன்னு சொல்றா. சமையலாவது பரவா யில்லை. இரவில் தாமதமாகப் போகும்போது விழித்திருந்து கதவு திறந்து விட்டு ஆறிப்போன சாதத்தை அவள் கையால் பரிமாறி கூட உட்கார்ந்து ப்ரிவாய் இரண்டு வார்த்தை பேசினாலே நம் அலுப்பெல்லாம் போய்விடும். ஆனால் நான் போகும்போது வீட்டை பூட்டிக் கொண்டு குழந்தைகளுடன் தூங்கப் போயிருப்பாள். என்னிடமுள்ள சாவியால் திறந்து யாரையும் எழுப்பாமல் திருடனைப் போல் சத்தமின்றி போய் படுக்கும்போது சலிப்பாகத்தான் இருக்கிறது. எங்கம்மா எனக்கு கல்யாணத்துக்கு டாக்டர் பொண்ணை பாத்தப்ப நான்தான் சொன்னேன். ரெண்டு பேரும் பிஸியா இருந்தா குடும்பத்தை கவனிக்க முடியாது. எனவே வேலைக்குப் போகிற பெண் வேண்டாம். வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டால் போதும் என்றேன். இப்ப தோணுது- டாக்டர் பொண்டாட்டியா இருந்திருந்தா என்னுடைய தொழி



லின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து கொண்டிருப்பாள். இருவருடைய வருமானத்திலும் குடும்பத்தை நல்லபடியாக நடத்தியிருக்கலாம்'' அலுப்புடன் பேசினான் அன்வர்.

''அன்வர் குடும்ப பாரம் என்பது கணவன் மனைவி இருவரும் சேர்ந்து சுமக்க வேண்டிய சுகமான சுமை. ஒருவரால் முடியாதபோது மற்றொருவர் அதை சரிக்கட்டிச் செல்ல முயற்சிக்க வேண்டுமே தவிர சலித்துக் கொள்வதால் என்ன பயன் சொல்லுங்கள்? கஷ்டத்தோடு சுமந்தால் கனம் இரட் டிப்பாய்த் தான் தெரியும். இப்ப டாக்டர் சம்பத் வந்ததும் நான் கிளம்பப் போறேன். நீங்க புறப்படுங்க அன்வர்!'' என்றாள் சுதி.

''என்ன இருந்தாலும் சுதி, நீ அதிர்ஷ்டசாலிதான். விஸ்வ நாதன் மாதிரி அப்பாவும், குமார் மாதிரி கணவரும் எல்லோருக் கும் கிடைப்பார்களா என்ன?'' என்றபடி அன்வர் கிளம்பிப் போனான். சுதி அவனையறியாமல் புன்முறுவல் பூத்தாள்.

# 15

ஒரு கையில் காய்கறி கூடையும், மறுகையில் திரட்டுப் பாலுமாய் காலிங் பெல்லை அழுத்தினாள் சரஸ்வதி. குமார் கதவைத் திறந்தான். கூச்சத்துடன் தோளை போர்த்தியபடி ''நல்லா இருக்கீங்களா? நம்ம வீட்டுப் பக்கம் வந்து நாளாச்சே!'' என மரியாதையுடன் மருமகனிடம் குசலம் விசாரித்தாள். அரை குறையாய் தலையாட்டியபடி வேகமாய் உள்ளே சென்று மறைந்தான் குமார்.

கிரைண்டரில் மாவு வழித்த கையுடன் எட்டிப் பார்த்தாள் சுதி. ''அடடா வியர்க்க, விறுக்க மார்க்கெட் போயிட்டு இங்க ஓடி வந்தியா? என்னம்மா இது? இந்த காலி பிளவரும் முட்ட கோசும் இங்க கிடைக்காதா என்ன?''

''கிடைக்கும்டி. நல்லா கிடைக்கும். சமைச்சி வெச்சதயே பாதி நாள் சாப்பிடாம ஓடிப் போறவ நீ. எங்க கறிகாய் பாத்து

பொறுக்கி எடுக்கப் போற? பாவம்மா வேற இன்னிக்கு வரல போலிருக்கே!''

''பாவம்மா. அவளுக்கு ரெண்டு நாளா நல்ல ஜுரம். மருந்து கொடுத்து ரெஸ்ட் எடுத்துட்டு நாளைக்கு வரச் சொல்லி அனுப்பியிருக்கிறேன்.''

ஒரு கிண்ணத்தில் திரட்டுப்பாலை வைத்து ''நீ சாப்பிட்டு மாப்பிள்ளைக்கும் கொண்டு போய் கொடு. நீ சமைக்கிற லட்சணம் அந்த மனுஷன் முகத்துல சுரத்தே இல்ல போ'' என்றபடி அடுக்களைக்குள் புகுந்தாள் சரஸ்வதி. அடுத்த ஒரு மணி நேரத்தில் மருமகனுக்கு சிக்கன் பிரியாணியும், முட்டை குருமாவும் மகளுக்குப் ப்ரைடு ரைஸ் பனீர் மசாலாவும் தயாரித்தாள். குமார் மேலேயே சாப்பிட்டுக் கொள்கிறேன் என்றான். தட்டு நிறைய மணக்க மணக்க எடுத்துப் போன பிரியாணி நிமிடங்களில் காலியானது. 'வெளிய காண்பிக்கலைன்னாலும் நல்ல சாப்பாட்டுக்கு ஏங்கி இருப்பார் போல' மனதுக்குள் பரிதாபப்பட்டபடி அம்மாவுடன் சாப்பிட அமர்ந்தாள். ''நான் செஞ்சா ப்ரைட் ரைஸ் குழைஞ்சு போகுதும்மா'' என சமையல் பக்குவத்தை கேட்டபடியே இருவரும் சாப்பிட்டார்கள்.

மாலை காபிக்காக குமார் கீழே வந்தபோது சரஸ்வதி மகளுக்கு எண்ணெய் வைத்து தலைவாரி விட்டுக் கொண்டிருந்தாள். சென்ற வாரம் தான் போயிருந்த உறவினர் வீட்டு திருமணத்தில் நடந்த ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி பற்றி விவரித்துக் கொண்டிருக்க, சுதி அம்மாவின் மடியில் சாய்ந்தவாறே சிரித்துக் கொண்டிருந்தாள். சிறு வயதில் விடுதியிலும், பிறகு தன் குடும்ப சூழ்நிலையிலும் தாய்க்கும் குழந்தைகளுக்குமான நெருக்கத்தை நேரில் பார்த்தறியாத குமாருக்கு திரும்பி அறைக்குப் போனான். விரும்பத்தகாத நிகழ்ச்சி எதையோ காண நேர்ந்தாற்போல் மனம் அலை பாய்ந்தது.



மாலையில் விஸ்வநாதன் வந்ததும் அவருடன் சரஸ்வதி கிளம்பிப் போனாள். இரவு சமையலை முடித்து விட்டு மேலே வந்தாள் சுதி. அறைக்கு வந்து விளக்கைப் போட்டவள் ஆச்சரியமானாள். ''நீங்க இவ்வளவு நேரம் இருட்டுல என்ன பண்றீங்க? நான் பயந்தே போயிட்டேன். கீழ கூட வராம தனியா இங்கு ஏன் உட்கார்ந்திருக்கணும்?''

சுதியை உற்றுப் பார்த்த குமாரின் கண்கள் இரைத் தேடும் புலியைப் போல் மின்னின. இனம் விளங்கா பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

''உங்கம்மா எதுக்கு இங்க வந்தாங்க?''

''இதென்ன கேள்வி? பொண்ணு வீட்டுக்கு அம்மா வர்றதுக்குக் காரணம் வேணுமா என்ன?''

''கண்டிப்பா காரணம் வேணும். இப்ப நீ அவங்க பெண் இல்ல. என் மனைவி. அதை நினைவு வெச்சுக்கோ. என் வீட்டுக்கு என்னை கேட்காம யாரும் வரக்கூடாது.''

குமார் ஒன்றுமில்லாத விஷயத்தை பிடித்துக் கொண்டு அதை நாள் கணக்கில் ஊதி, ஊதி பெரிதாக்குபவன் என்பது தெரிந்திருந்ததால் பிரச்சனைகளை வளர்க்க விரும்பாமல் ''சரி குமார், இனி அவங்க வர மாட்டாங்க. வாரம் ஒரு முறை நான் போய் பாத்துட்டு வர்றேன்.''

''நான் அவங்க தொடர்பே கூடாதுங்கறேன். நீ எதுக்குப் போற?''

''நான் ஆறு மாசமாதான் குமார் உன்னுடைய மனைவி. ஆனா இருபத்து நாலு வருஷமா அவங்க பெண். என்னை இந்த படிப்போட, உயிரோட, உடலோட உனக்குத் தந்ததே அவங்கதான்.''

''யார் தரச் சொன்னா? இருபத்து நாலு வருஷம் வளர்த்தேன்னு அவங்களே கூட வெச்சுக்க வேண்டியதுதானே! ரெண்டு பேரும் கொஞ்சிக்கறதும் மடில படுத்துக்கறதும்

அம்மா பொண்ணு மாதிரியா இருக்கு. சீச்சீ...'' அருவெறுப்பில் முகம் சுளித்தான் குமார்.

தன் காதுகளையே நம்ப மாட்டாமல் பார்த்தாள் சுதி.

''தாய்மை உனக்கு அருவெறுப்பான விஷயமா? நாளைக்கு நமக்குக் குழந்தை பிறந்தா கூட இதையே சொல்லுவியா குமார்?''

பக்கத்தில் வந்து பளீரென அறைந்தான் குமார்.

விபரம் தெரிந்ததிலிருந்து ஒரு சுடுசொல் கேட்டறியாத சுதி அதிர்ச்சியில் உறைந்தாள். நான் என்ன தப்பு செய்தேன்? எதற்கு அடித்தான்? அம்மா தான் என்ன செய்தாள்? எதற்கு அவர்களைச் சந்திக்கக் கூடாதென்கிறான்? எதற்கு இப்படி வித்தியாசமாய் நடந்து கொள்கிறான்? சுதிக்கு துக்கத்தை விட பயமே மிகுந்தது. மறுபடி ஏதாவது பேசி அவனை தூண்டிவிட வேண்டாம் என்று முடிவு செய்தவள் நேராய் சென்று படுக்கையில் விழுந்தாள். வெகு நேரம் புரண்டவள் லேசாய் கண்ணயர்ந்த நிமிடம் குமார் உலுக்கி எழுப்பினான்.

''ஏய் சொல்லு. உனக்கு நான் வேணுமா? இல்ல உங்க அம்மா அப்பா வேணுமா? அவங்கதான் வேணும்னா என்னை எதுக்குக் கல்யாணம் பண்ணிகிட்ட?''

''இந்த நேரத்தில் அதைப்பற்றி என்ன குமார்? காலைல பேசிக்கலாம். பக்கத்து வீடுகளுக்கு எல்லாம் சத்தம் கேட்கும்.''

''கேட்கட்டும். எனக்கு அதைப்பற்றி கவலையில்லை. நான் கேட்டதுக்கு பதில் சொல்.''

''பெத்தவங்க உறவுங்கறது வேறு. கணவன் மனைவி உறவு வேறு வகையானது. அவங்க மேல அன்பு இருக்குங்கிறதுக்காக உன்மேல இல்லைன்னு ஆயிடுமா? அவங்க என்னைப் பெத்தவங்க. அதனால் அவங்க மேல் பாசம் ஏற்படுவது இயல்பான விஷயமில்லையா?''

''அப்ப உனக்கு மத்த விஷயங்களுக்கு மட்டும் புருஷன் வேணுமாடீ?'' காதைப் பொத்திக் கொண்டாள் சுதி. அவன்



படிப்பிற்கும், பிறப்பிற்கும் தகுதியில்லாத வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து போனாள். இரவெல்லாம் தூங்காமல் உலவியவன், அவளையும் எழுப்பி சண்டையிட்டு, அறைந்து இறுதியில் களைத்துப் போய் அவன் உறங்கத் தொடங்கிய போது காலை ஐந்து மணி ஆகியிருந்தது.

உறங்கியவனை பார்த்த சுதிக்கு இவ்வளவு அழகான முகத்திற்குள் அவ்வளவு வக்கிரமான குணம் இருக்கிறதா என்பதை இன்னும் நம்பத்தான் முடியவில்லை. சத்தமிடாமல் கதவை சாத்திவிட்டு கீழே வந்து தோட்டத்தில் போய் அமர்ந்தாள். வீட்டு வேலைக்குக் கூட பழக்கப்பட்டிராத உடம்பு அவனது அடிகளைத் தாங்க முடியாமல் அணு அணுவாக வலித்தது. பிரம்பு சேரில் பின்னே சாய்ந்து கண்களை மூடினாள்.

இவன் ஏன் இப்படியிருக்கிறான்? சிறு வயதில் இயற்கையாக காட்டப்பட வேண்டிய பாசம் மறுக்கப்பட்டதால் வக்கரித்துப் போய் விட்டான் போலும். விடுதிகளிலேயே இளமைப் பருவம் கழிந்து போனதால் பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் உள்ள உறவு, பிணைப்பு எதுவும் தெரியவில்லை. முன்பு தனிமை உணர்ச்சியில் தவித்திருக்கிறான். அவன் வாழ்க்கையில் நான் நுழைந்தவுடன் ஒரு ஆதாரம் கிடைத்திருக்கிறது. தம் பொம்மையை பிடுங்கிக் கொள்வார்களோ என்ற பயத்தில் அந்நியரைப் பார்த்ததும் வீறிட்டு அழும் குழந்தையின் மனோபாவத்தில் இருக்கிறான். ஒரு டாக்டராய் இருந்து முதலில் நான் அவனுக்குப் பாதுகாப்பு உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். மனைவியும் ஒரு தாய் தானே! நானே தாயாய் மாறி அன்பால் அரவணைத்து அவனுக்கு உலகத்தைப் புரிய வைக்க வேண்டும். முடிவெடுத்த சுதி அப்போதே அதற்கான வேலைகளில் இறங்கினாள்.

அம்மாவிற்கு போன் செய்து, ''நாளையிலிருந்து டியூட்டி நேரம் மாறி மாறி வரும். வெளியூர் கேம்ப் கூட போக

வேண்டும். எனவே நேரம் கிடைக்கும் போது நானே வீட்டிற்கு வருகிறேன். நீங்க வரவேண்டாம்'' என்றாள். எதுவுமே நடக்காதது போல் வழக்கம் போல் இயல்பாக நடந்து கொண்டாள். முன்னிலும் அதிகமாக குமாரின் தேவைகளைப் பார்த்துப் பார்த்து கவனித்தாள். அவளுடைய ஆராய்ச்சி படிப்பை சற்று நிறுத்தி விட்டு சமையல் கலை புத்தகங்களைப் புரட்டத் தொடங்கினாள். தினம் புதிது புதிதாக சமைத்தாள். களைத்துப் போய் அறைக்கு வருபவள், தினமும் வீட்டிலேயே இருப்பதால் இரவில் தூக்கமின்றி சாய்ந்திருக்கும் அவன் அருகே போய் அமர்ந்து அவன் கால்களை இதமாகப் பிடித்து விடுவாள். ஒரு பயந்த குழந்தைகளுக்கு தேவைப்படும் அன்பையும், அரவணைப்பையும் அளித்து கவனித்துக் கொண்டாள். ஒரு வாரம் அமைதியாய் கழிந்ததும் நிம்மதியடைந்தாள்.

* * *

அன்று சாந்தி இல்லத்திற்குள் சுதி நுழையும் போதே வாயில் ஒரே கூட்டமாக இருந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போய் பார்த்தாள். ரங்கசாமி தாத்தா பெஞ்சில் படுக்க வைக்கப்பட்டிருந்தார். சுற்றியிருப்போரை விலகச் சொல்லி நாடியைப் பார்த்தாள் சுதி. மிக பலவீனமாய் இருந்தது. பக்கத்தில் நின்று கொண்டிருந்த டாக்டர் கிரி உதட்டை பிதுக்கி தலையை அசைத்தான். பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுதியின் கைப்பிடியிலிருந்த மணிக்கட்டு நழுவி கீழே விழ ஒரு வெள்ளைத் துணியில் முகத்தை மூடிவிட்டு கிரி நகர்ந்தான். சுற்றியிருந்த வயதான பெண்கள் அழுகையில் மௌனமாக குலுங்க ஆண்கள் வெறித்தபடி நின்றிருந்தார்கள். கிரியை தொடர்ந்து உள்ளே வந்த சுதி, ''அவங்க பையனுக்கு சொல்லியாச்சா'' என்றாள்.

''அவர் அமெரிக்காவிலிருந்து இதுக்காக வர முடியாதாம். அப்பா உயிரோடு இருந்தாலாவது பரவாயில்லை. இப்போ வந்து யாரை பார்ப்பது! அதனால் நீங்களே எல்லாம் செஞ்சிடுங்க. பணம் வேணா அனுப்பறேங்கறார்.''



''அவங்கப்பா உயிரோடு இருந்தப்ப கூட இதையேதான் சொன்னார்.''

வெறுப்புடன் கேட்டாள் சுதி.

சலிப்புடன் தலையைக் கோதினான் கிரி. ''இந்த பெத்தவங்க மேலயும் தப்பிருக்கு சுதி. சின்ன வயதிலிருந்து பையனை எங்கும் போகவிடாமல், சுற்றி நடக்கும் எதையுமே அவனிடம் விவாதிக்காமல் நீ படி. அது ஒண்ணுதான் உன்னோட லட்சியம் என பட்டை கட்டின குதிரையாய் செலுத்துவது. மேல் வர்க்க மக்கள் படிக்கும் பள்ளிகளில் படிக்க வைத்து அளவுக்கு மீறி ஆசையை வளர்ப்பது. படிப்பு செலவை சரிகட்ட குடும்பத்தில் இருவரும் வேலைக்குப் போய் மகனிடம் பாசம் காட்டக்கூட நேரமற்று போய் விடுவார்கள். மகன் பெரியவனானதும் ப்ளைட்டில் பறந்து, சென்டரலைஸ்டு ஏ.சி. அறையில் பணியாற்றும்போது அவனை பெற்றதற்கான பலன் கிடைத்துவிட்டதாக பூரித்துப் போவார்கள். வெளிநாட்டில் வேலை கிடைத்ததும் மகன் ஒரு முறை பெற்றோரை அழைத்துச் சென்று ஊரை சுற்றிக் காட்டுவான். நடுத்தர குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு முதன் முதலாய் மகன் மூலமாய் கிடைத்த விமான பயணத்திலும், வெளிநாட்டு அனுபவத்திலும் அங்குள்ள சுத்தமான சாலைகளில் நடந்தும் ஜென்ம சாபல்யமடைவார்கள். திரும்பி தாய்நாடு வந்ததும் கோட் அணிந்த தங்களது மகன் பெரிய காரில் வேகமாய் பயணிப்பதையும், சுகாதாரமான வகுப்பறைகளில் அமெரிக்க உச்சரிப்புடன் பேரக் குழந்தைகள் ஆங்கிலம் பேசும் அழகையும், எலக்ட்ரிக் ஓவன், டிஷ் வாஷர் சகிதம் மருமகள் வீட்டை நிர்வாகம் செய்யும் சமர்த்தையும் மனக்கண்ணில் கண்டபடி இங்கு தனிமையில் காலத்தை கழிக்கிறார்கள். கண்ணுக்கும் எட்டாத உயரத்தில் பறக்க விடப்பட்ட பட்டம் எப்படி கைக்கு வந்து சேரும். இழுத்து இழுத்து கை சோர்ந்து போகும். அல்லது நூல் அறுந்து

போகும். பட்டத்தை தொலைத்த சிறுவர்களாய் இன்று சந்ததிகளை தொலைத்த முதியவர்கள்.''

''இருந்தாலும் இது அநியாயம் இல்லையா கிரி?'' இளமையில் வறுமையில் முதுமையில் தனிமையும் கொடிது என்பார்கள். முதுமை புறக்கணிக்கப்படும்போது அங்கு தாய்மை அலட்சியப்படுத்தப் படுவதாகத்தானே பொருள். பணத்தில் புரள்பவர்கள் தங்களுக்கும் வீழ்ச்சி உண்டு என்று நினைப்பதில்லை. அது போல இளமையில் இருப்பவர்கள் தங்களது முதுமையைப் பற்றி சிந்திக்காததன் விளைவுதானே இத்தகைய இல்லங்கள்!'

'ஐ.டி. துறைகளும், அறிவியல் முன்னேற்றங்களும் நம் நாட்டின் வளர்ச்சி என்றால் முதியோர் இல்லங்களும், அநாதை விடுதிகளும், நம் கலாச்சாரத்தின் வீழ்ச்சி இல்லையா சுதி?''

# 16

ஹாலில் பஜனை பாடல்கள் கேட்கத் தொடங்கின. இறந்தவரின் உடலை சுற்றி எல்லோரும் அமர்ந்து அவர் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை பாடல்கள் பாடிக் கொண்டிருந்தனர். இறந்து போன ரங்கசாமி இறுதிவரை தன் ஆச்சாரத்தையும் அனுஷ்டானங்களையும் கடைபிடித்தவர். இந்து தர்மப்படி 'புத்' எனப்படும் நரகத்திலிருந்து மீட்பவனாகிய புத்திரன் கொள்ளி போட்டால்தான் சொர்க்கம் அடைய முடியும் என்பதில் நம்பிக்கையுள்ளவர். இந்தப் பாடல்களால் அவரது ஆன்மாவுக்கு அமைதி கிட்டுமா என்று தெரியவில்லை. நிர்வாகி கோபால் ஆம்புலன்சுடன் வந்ததும் இல்ல ஊழியர்கள் உடலை ஏற்றிச் சென்றனர். எஞ்சியிருந்த புதிய முகங்களில் தென்பட்ட சூன்யம் சுதியின் அடி வயிற்றைப் புரட்டியது.

அம்மாவும் அப்பாவும் மட்டுமே தனிமையில் வாழும் அவளது வீடும் இப்போது ஒரு முதியோர் இல்லம்தான்.



அவர்களது கண்களிலும் இந்த சூன்யம் தென்படுமா இப்போது? எதற்காக அவர்களுக்கு இந்த தனிமை தண்டனை. அப்பாவிற்கு ஒரு முறை மைல்டு அட்டாக் வந்திருக்கிறது. மறுபடி அவருக்கு உடம்புக்கு ஏதாவது வந்தால் என்னைப் பார்க்க துடிக்க மாட்டாரா? அப்பாவின் நிழலாய் வாழும் அம்மாவிற்கு தனியாய் ஒரு காரியம் செய்யத் தெரியாது. நானும் அவர்களுடன் இல்லாத சூழ்நிலையில் அப்பாவிற்கு ஏதாவது என்றால் அம்மா என்ன செய்வாள்? இத்தனை வருடமாய் அவர்களது பேச்சும் மூச்சும் நான் மட்டும்தான். இப்போது அவர்களது முதுமையில் துணை நிற்காத எனக்கும் ரங்கசாமி தாத்தா மகனுக்கும், என்ன வேறுபாடு?

''சுதி.. சுதி'' கிரி தோளை உலுக்கினான். ''டாக்டரா இருந்துட்டு இப்படி அழலாமா சுதி?''

கண்களிலிருந்து தாரையாய் வடிந்த நீர் உடையை நனைத்திருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள் சுதி.

''டாக்டரா இருந்தா உணர்ச்சிகள் இருக்கக் கூடாதா கிரி?''

''கண்டிப்பா இருக்கணும். இரக்கமும், கருணையும் இல்லைன்னா டாக்டராவே ஆக முடியாது. ஆனால் இப்படி உணர்ச்சிகளை வெளிக் காட்டக் கூடாது. தீர்க்க முடியாத நோயால் அவதிப்படும் நோயாளிகளுக்கு கூட நோயை எதிர்த்துப் போராடும் ஆன்ம பலத்தையும் எஞ்சிய நாட்களை மகிழ்ச்சியாய் கழிக்கும் மனமுதிர்ச்சியையும் நாம உருவாக்கணும். நாமே கலங்கிப் போனால் நம்மை நம்பி வரும் நோயாளியின் நிலை என்ன? முகத்தை கழுவிட்டு வா சுதி. ஒரு காபி குடிச்சிட்டுக் கிளம்பலாம்.''

காபி குடித்தபடி கிரி நேற்று பார்த்த ஒரு காமெடி படத்தைப் பற்றி நகைச்சுவையுடன் விமர்சனம் பண்ணினான். தன் பக்கத்து வீட்டு குட்டிப் பெண் பற்றி சொன்னான்.

"அந்தப் பெண் தினமும் எங்கிட்ட ஏதாவது ஒரு கேள்வி கேப்பா. ஆனா ஒரு நாள் கூட என்னால பதில் சொல்ல முடிஞ்சதில்ல தெரியுமா?"

"நிஜமாவா? அவ்வளவு புத்திசாலியா அந்த பெண்?"

"நிஜம்தான். ஒரு நாள் கேட்டாள். "அங்கிள் நமக்கு மூக்குல ஏன் சளி பிடிக்குதுன்னு?" இந்த பொண்ணுக்கு புரியற மாதிரி மருத்துவ வார்த்தைகளை எப்படி எளிமையாக்கிச் சொல்வதுன்னு நான் யோசிச்சிகிட்டு இருக்கும்போது "இது கூடத் தெரியலையா? நம்ம மூக்குக்கு மேலதான் ஐஸ் (Eyes) இருக்கேன்னா.""

புன்னகைத்தாள் சுதி.

"சரி இப்ப நீ சொல்லு சுதி. ஒரு பெரிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர். அங்கு நிறைய ரூம்ஸ் இருக்கு. அதுல ஒரு ரூமுக்கு மட்டும் கதவு இல்ல. அது எந்த ரூம்னு சொல்லு."

"ம்..." யோசித்தாள் சுதி. "தெரியலப்பா. நீயே சொல்லேன்."

"மஷ்ரூம்."

"நீயும் லூசாத்தான் போயிட்ட" என்றபடியே கிளம்பிய போது மனம் அமைதியடைந்திருந்தது. நண்பர்கள் நேரத்தை திருடும் திருடர்கள் என்பார்கள். நேரத்தை மட்டுமல்ல. கவலைகளையும் கூட திருடி விடுகிறார்கள். காதலுக்கும் நட்புக்கும் ஒரே இலக்கணம்தான். பார்க்கா விட்டால் பார்க்க நினைப்பது. பார்த்த பிறகு நேரத்தை மறப்பது. ஒருவர் துன்பத்தில் மற்றவர் துவள்வது என அத்தனை லட்சணமும் உண்டு. ஆனால் காதலுக்குள்ள கவர்ச்சியும், திருட்டுத்தனமும் இல்லாததால் காதலைவிட நட்பு எளிதாக அங்கீகரிக்கப்படுகிறது. காதலர்கள் கணவன் மனைவி ஆகும்போது அவர்களுக்கிடையே நட்பு காணாமல் போகிறது. நண்பர்களுக்கு திருமணமாகி வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தாலும் சாகிற வரை நட்பு மனதில் நிறைந்திருக்கிறது.



# 17

குமார் ஹாலுக்கும் வாசலுக்குமாய் நடைபயின்று கொண்டிருந்தான். மணி ஒன்பதை தாண்டியிருந்தது. கேட்டைத் திறந்து கொண்டு சுதி உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.

"எங்க போய் சுத்திட்டு வர்ற?" உறுமினான். ரத்த வாடை பிடித்த புலியைப் போல் கண்கள் வெறியில பளபளத்தன. வழக்கம் போலவே ஏனென்று புரியாத பயத்தில் அடிவயிறு சுருட்டியது.

"மருத்துவமனையிலிருந்துதான் வருகிறேன்" குரல் ஒட்டியது.

"எங்கிட்டயே பொய்யா? நான் போன் பண்ணினப்ப அஞ்சு மணிக்கே போய்ட்டதா சொன்னாங்களே?"

"ஆஸ்பத்திரி டியூட்டி முடிஞ்சி போச்சிதான். இன்னிக்கு புதன்கிழமை. புதனும் வெள்ளியும் நான் சாந்தி இல்லத்தில் வேலை பார்ப்பது தெரியும் தானே! இன்னிக்கு இல்லத்தில் ஒரு பெரியவர் இறந்துட்டார். அதனால நேரமாயிடிச்சு. டாக்டர் வேலை மத்த வேலை மாதிரி இல்லையே மணி அடிச்சதும் தூக்கிப் போட்டுட்டு வர. எத்தனை பேர் காத்திருக்கிறார்களோ. கடைசி நோயாளி வரை பாத்துட்டுதானே வரணும்."

"மதர் தெரஸாவுக்கு நேரடி வாரிசு நீதான்னு எனக்கு நல்லாவேத் தெரியும். முதியோர் பணிங்கிற பேர்ல நீ அங்க என்ன கூத்தடிக்கறதுங்கறது எனக்கு தெரியாதா என்ன?"
எட்டி முடியை கொத்தாகப் பிடித்தான் குமார். "ஏண்டி நீயும்
அந்த கிரியும்தான் வயசானவங்களுக்கு எல்லாம் காட்பாதரா?
அந்த ரவி சொல்றான். நானும் சுதியும் படிக்கறப்பே இருந்தே
நண்பர்கள்ன்னு. இந்த மாதிரி இன்னும் எத்தனை பேர் இருக்
காங்க உனக்கு? அந்த ரவி எப்பவும் துணியை தேய்க்கறதும்,
ரூமை பெருக்கறதுமாத்தான் இருப்பான். அவனை நினைச்
சிட்டுதான் என்னை குப்பையை கீழ போடாதே, பெட்ல சாப்
பாட்டை சிந்தாதேன்னு விரட்டற?"

"முடியை விடு குமார். நம் குடும்பத்திற்குள் பேசிக் கொள்கிற சாதாரண விஷயங்களுக்கு எல்லாம் ஏன் எல்லாத்தைப் பத்தியும் பேசற?"

"உனக்கு ஆஸ்பத்திரியில ஒருவன். முதியோர் இல்லத்துல ஒருவன். இலவச மருத்துவமனையில் நாலைந்து பேர். வீட்டுக்கு வந்தா நான். இன்னும் எத்தனை பேர் வேணும் உனக்கு? உண்மையைச் சொல்லு!" மீண்டும் எட்டிப் பிடித்தவனிடமிருந்து விலகி ஓடினாள். புடவை முந்தானை கைக்கு சிக்கவே தடுமாறி விழுந்தவளை காலில் எட்டி உதைத்தான். வலி தாங்க முடியாமல் 'அம்மா' என்ற கத்தல் அவளையறியாமல் வெளிவந்தது.

சத்தம் கேட்டு பாலம்மா ஓடி வந்தாள். வாரி மடியில் போட்டுக் கொண்டாள். "படுபாவி இந்த பொண்ணோட பொறப்பு எப்படி, வளர்ப்பு என்னன்னு தெரியுமாய்யா உனக்கு? கூட இருந்து பாத்தவய்யா நான். அவங்க அம்மா அப்பாவுக்குத் தெரிஞ்சா தாங்குவியா நீ? கொரங்கு கையில பூமாலை கொடுத்தாப்புல, எந்தங்கத்தை நெருப்புல போடறதுக்கா உனக்கு தாரை வார்த்தாங்க?"

அவளிடம் பதில் பேசாத குமார் சுதியை காலால் எத்தினான். "இங்க பார் நான் வெளியே போயிட்டு வர்றதுக்குள்ள இந்த வேலைக்காரி இங்க இருக்கக் கூடாது" கதவைத் திறந்து வெளியேறினான்.

"சுதி எழுந்து கௌம்பும்மா. நம்ம வீட்டுக்குப் போகலாம்."

"இல்ல பாலம்மா. நீ கிளம்பு. அம்மா அப்பாகிட்ட எதுவும் சொல்லக் கூடாது. அவங்களுக்கு சந்தோஷம் தரமோ இல்லையோ கஷ்டத்தை தரக்கூடாது. நீ கிளம்பு பாலம்மா."

"நான் போக மாட்டேன். உன்னை இந்த பாவிகிட்ட விட்டுட்டு நான் எப்படி போவேன்? நீ எங்கூட கிளம்பி வா. இல்ல யார் என்ன சொன்னாலும் நான் உன்னை விட்டுப் போக மாட்டேன்?



"பாலம்மா நான் உன்னை போகச் சொல்றது குமாருக்காக இல்லை. அம்மா அப்பாவுக்காக. தனியா அம்மா என்ன செய்வாங்கன்னு சாயங்காலம் கூட நான் கவலைப்பட்டுட்டு இருந்தேன். நீ கூட இருந்தா எனக்கு மனசுக்கு தெம்பா இருக்கும். குமார் நல்லவன்தான் பாலம்மா. எந்த கெட்டப் பழக்கமும் இல்லாதவன். எந்த அழகியையும் நிமிர்ந்து பார்க்காதவன். அவனுக்குள் ஏதோ அடி விழுந்திருக்கிறது. வளர்ந்த விதத்திலோ பழகிய இடங்களிலோ தப்பான நிகழ்வுகளை சந்தித்திருக்கலாம். அதனால் சராசரி விஷயங்கள் கூட தப்பாகவே படுகிறது. இதெல்லாம் உனக்குப் புரியாது. நீ கிளம்பு."

"அடி என் கண்ணே! உன் நிலைமை இப்படியா ஆகணும்! அம்மா பாத்தா உயிரையே விட்டுடுவாங்களே" கட்டிக் கொண்டு கதறினாள் பாலம்மா. சிறு வயதிலிருந்து வளர்த்தவளான பாலம்மாவின் அன்பு சுதியை நெகிழ்த்தியது. குமாரிடம் அடிபட்டும் கலங்காத கண் லேசாய் கலங்கியது.

"எதுக்கு பாலம்மா வருத்தப்படற? நான் மட்டும் ஒரு டாக்டராக இல்லாமல் சாதாரண பெண்ணாக இருந்திருந்தால் இப்பவே உன்னுடன் ஓடி வந்திருப்பேன். எத்தனையோ சவாலானா கேஸ்களையும் சிக்கலான சிகிச்சைகளையும் சிறப்பாக முடித்து சக டாக்டர்களிடம் பாராட்டு பெற்றிருக்கிறேன். அதுபோலத்தான் இதுவும். குமாரின் ஆர்ப்பாட்டங்களை சகித்து அவன் பிரச்சனையைக் கண்டறிந்து தீர்க்க வேண்டும். நீ போய் அம்மா அப்பாவை நல்லா பாத்துக்க" சிரித்தபடி விடை கொடுத்தவளை அதிசயமாகப் பார்த்தாள் பாலம்மா.

"நான் தூக்கி வளர்த்த பொண்ணா இது! அம்பாள் சொரூபமா இருக்கே! கொழந்தையா இருந்தவ எப்ப விஸ்வரூபம் எடுத்தா?" புலம்பியபடியே போய்ச் சேர்ந்தாள் பாலம்மா. எதிலும் நல்லதையே பார்த்துப் பழகிய சுதி பாலம்மா போனது கூட நல்லதுக்குத்தான் என ஆறுதல் பட்டாள்.

* * *

இரவு குமார் திரும்பி வந்தபோது வீடு அமைதியாய் இருக்கவே நேரமாய் மேல வந்தான். தலைவரைப் போர் வையை வழிய விட்டுக் கொண்டிருந்த சுதியை எழுப்பி னான். வீண் விவாதங்களை தவிர்க்க விரும்பிய சுதி கண் களைத் திறக்காமல் இருந்தாள். சிறிது நேரத்தில் சடாரென தண்ணீர் மேலே கொட்டப் பட்டதும் அலறி அடித்து எழுந்து அமர்ந்தாள்.

''பாலம்மா போயிட்டாளா?'' என்றான் குமார்.

''அதைக் கேட்கவா தண்ணீர் கொட்டினாய்?''

''நான் கூப்பிட்டதும் எழுந்திருக்காதது உன்னுடைய தப்பு. நீ ஏன் என்னை மறுபடி மறுபடி தப்பு பண்ண வைக்கிறாய்? அப்புறம், உன்னை உன் புருஷன் அடிச்சா அந்த வேலைக் காரிக்கு ஏன் கோபம் வருது?''

''நான் சின்னதுல இருந்து எங்க வீட்ல இருக்கறவ. என்னை வளர்த்தது அவளும் கூடத்தான்.''

''நீயென்ன கிருஷ்ண பரமாத்மாவா? ஊரே உன்னை வளர்க்க?''

''பாலம்மாதான் போயிட்டாளே! போனவளை பத்தி இந்நேரத்துக்கு என்ன பேச்சு?''

''அவள பேசினா உனக்கு ஏன் கோபம் வரணும்? ஒரு வேளை நீ இந்த ரவி, கிரி மாதிரி ஆளுங்க கூட சுத்தறதுக்கு இவ புரோக்கர் வேலை பாக்கறாளா?'' சலிப்புடன் எழுந்து போய் துணியை மாற்றிக் கொண்டு வந்தாள். படுக்கை முழுவதும் நனைந்திருக்க சோபாவில் அமர்ந்தாள். இரவு முழுவதும் இப்படியேதான் எனக்கு கழியப் போகிறது. மறு நாளைய வேலையை மனசுக்குள் திட்டமிட்டாள். காலையில் முதல் வேலையாய் அந்த அல்ஸர் கேசுக்கு டாக்டர் லட்சுமி நாராயணனிடம் அப்பாயின்மெண்ட் வாங்க வேண்டும். ஐ.சி.யு.விலிருந்த ஹார்ட் பேஷண்டை வார்டுக்கு மாற்ற வேண்டும்.



நர்ஸ் வசுமதி மாமியார் வந்திருப்பதாக லீவ் கேட்டுக் கொண்டிருந்தாள். இந்நேரம் டியூட்டிக்கு வந்திருப்பாளோ என்னவோ. சோபாவில் சாய்ந்தவள் லேசாய் கண்ணயர்ந்தாள்.

குமார் கறுவினான். ''நான் தூக்கம் வராம நைட் எல்லாம் உட்கார்ந்திருக்கேன். நீ மறுபடி தூங்கறியாடி?'' என்ன சொல்லி மறுபடி சண்டைக்கு இழுக்கலாம் என யோசிக்கத் தொடங்கினான். எப்போதுமே பெற்றோராலும் ஏன் வேலைக் காரர்களாலும் கூட புறக்கணிக்கப்பட்டே வளர்ந்த குமாருக்கு, அவனுக்காகவே சமைத்து, பரிமாறி, அவனுக்காக சம்பாதித்து அவனுக்காக வாழ்கிற ஈரமண்ணாய் சுதி கையில் கிடைத் தாள். அக்களிமண்ணில் உருவமோ, தெய்வ சிலையோ செய்யாமல் காலில் போட்டு மிதிக்கவே ஆசைப்பட்டான். எதிர்ப்பு தெரிவிக்காதவர்களிடம் வன்முறை செய்வது அவனுக்கு சுவாரஸ்யமாய் இருந்தது.

# 18

அடுத்து வந்த நாட்களிலும் எந்த மாற்றமும் இன்றி அவர்களது வாழ்க்கை ஒரே மாதிரி போய்க் கொண்டிருந்தது. சுதியின் பெருந்தன்மையான அணுகு முறை எந்தப் பலனை யும் தரவில்லை. குமாருக்கு மனிதர்களை கண்டாலே வெறுப்பாய் இருந்தது. பக்கத்து வீடுகள், பழகியவர், உறவினர்கள் யாரைக் கண்டாலும் காரணமற்ற துவேசம். உலகத்தையே அன்பால் நேசிப்பது சுதியின் சுபாவம் என்றால் வீட்டிலுள்ளவர்களையே வெறுப்பது குமாரின் குணமாக இருந்தது. பல நாள் யோசனைக்குப் பிறகு சுதி தனக்குத் தெரிந்தவரான மனோ தத்துவ நிபுணர் ரங்க பாஷ்யத்தை சந்தித்தாள். ''என் தோழி வீட்டில் நடந்த சம்பவம்'' என்று கூறிக் கொண்டு, குமாரின் சுபாவம் பற்றி முழுவதுமாகக் கூறினாள்.

''இந்த மாதிரி குணாதிசயமுள்ளவரிடம் எந்த மாதிரி அணுகுமுறை சரியானதாக இருக்கும் டாக்டர்?''

"சம்பந்தப்பட்ட பெண் உங்களுக்கு மிகவும் நெருக்கமானவரா மிஸஸ் சுதி?"

"என் நெருங்கிய தோழி. சுருக்கமாகச் சொன்னால் அவள்தான் நான். நான்தான் அவள் எனலாம்."

"அப்படின்னா நான் சொல்றதக் கேளுங்க சுதி. அந்த பொண்ணை பேசாம டிவோர்ஸ் பண்ணிடச் சொல்லுங்க."

"என்ன ஸார் இப்படிச் சொல்றீங்க?"

"சமூகத்தில் தன்னுடைய பர்சனாலிட்டியை அதாவது ஆளுமையை ஐடென்டிபை பண்ணத் தெரியல அந்த ஆளுக்கு. பர்ஸனாலிட்டி டிஸ் ஆர்டர். இப்ப நான்னு சொல்றோமே, நான்கிறது யார்? நான் டாக்டர் ரங்கபாஷ்யம். எனக்கு பச்சை நிறம் பிடிக்கும். கறுப்பு பிடிக்காது. என் இரண்டாம் வகுப்பு சரோஜா வாத்தியார் பிடிக்கும். ஹிஸ்டரி வாத்தியார் பிடிக்காது. எப்பவும் பேண்ட் சர்ட் போடுவது என் பழக்கம். வேகமாய் நடப்பேன். மிதமாய் பேசுவேன். உறவினரிடம் சற்று கூச்ச சுபாவம். இப்படித்தான் சமூகத்தில் சுட்டிக்காட்டப்படுவேன். சில நிகழ்வுகள் நம்மை கோபப்படுத்தலாம், குளிர வைக்கலாம். ஆனால் பொதுவான சுபாவம் மாறாது. ஆனால் சொல்ற பர்ஸனுக்கு அழுத்தமான எண்ணங்கள் இல்லை. எந்த நேரத்தில் எது பிடிக்கும், எந்த விஷயத்துக்கு எப்படி ரியாக்ட் செய்வான்னு அவனுக்கே தெரியாது. பிறப்பிலேயே வரும் விஷயம் இது. புத்திக்கும் இதுக்கும் சம்மந்தமே இல்லை. நன்றாகப் படிப்பவனாக இருக்கலாம். ஏன் விஞ்ஞானியா கூட ஆகலாம். ஆனால் அறிவு வேறு. ஆளுமை வேறு. உனக்குத் தெரியாததில்லை. இடையில் ஏற்பட்ட கோளாறுகளை சில நிகழ்வுகள், மருந்துகள் மூலம் குணப்படுத்த முடியும். ஆனால் பிறவியிலேயே ஏற்படும் கோளாறுகளுக்கு வாழ்நாள் முழுக்க மருந்து எடுத்துக் கொள்ள வேண்டியதிருக்கும். மருந்துகளின் பாதிப்பாய் சில சமயம் நரம்புத் தளர்ச்சி ஏற்படலாம். அதனால்தான் நான் சொன்னேன் உன் தோழியை டிவோர்ஸ் செய்யச் சொல்லி."



"இல்லை ஸார். கல்யாணம் குடும்ப வாழ்க்கை என்பது ஒரு முறை மனதில் பதிவான பிறகு அதிலிருந்து விலகுவது எல்லோருக்கும் எளிதான விஷயமில்லை."

"இல்லைதான். ஒண்ணு தெரியுமா சுதி? கோமா நிலையிலிருக்கும் தன்னுடைய கணவனை, குழந்தையை நேசிக்கும் அன்பு செலுத்தும் பெண்களை பார்த்து நானே வியந்திருக்கிறேன். அந்த அன்பில் ஒரு ஆத்மார்த்தமான அர்ப்பணிப்பு இருக்கும். அவர்களது அன்பு சம்பந்தப்பட்டவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனாலும் புனிதமடைந்து போகிறது. ஆனால் உன் தோழியின் அன்பு, அன்பு செலுத்தப்படும் நபராலேயே கொச்சைப்படுத்தப்படுகிறது. அதனால்தான் அப்படியொரு முடிவைச் சொன்னேன். மற்றபடி அவரவர் வாழ்க்கை அவரவர் கையில்தான் இல்லையா?" கைகளை விரித்தார் டாக்டர் ரங்கபாஷ்யம்.

"நன்றி ஸார்." கை குலுக்கி வெளியே வந்த சுதிக்கு மதியம் சாப்பிடவே தோன்றவில்லை. அப்பாவுக்காக செய்து கொண்ட திருமணம்தான். ஆனால் அதிலிருந்து விடுபட வேண்டும் என்று ஒரு முறை கூட தோணவில்லையே! குமாரின் அத்தனை மூர்க்கத்தனத்திற்கும் பின்னாலிருக்கும் ஆதரவற்ற நிலைமையை கண்டு பரிதாபப்படத்தானே தோன்றுகிறது! செல்லம்மாவைப் போல் என்னால் ஒரே நாளில் எல்லாவற்றையும் உதறி விட்டுப் போக முடியுமா? அம்மாவின் வளர்ப்பு முறை எனக்குள் அந்தளவு கலாச்சார தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறதா?

குமாருக்கு காலையிலிருந்து மாலை வரை ஒரு வேலையும், இரவு அடுத்த நாள் வேலைக்கான திட்டமிடுதலுமாக அவனது தொழில் அவனது நினைவுகளை ஆக்ரமித்திருக்க வேண்டும். ஆனால் குமார் நாள் பூராவும் வீட்டில் இருக்கிறான். திடீரென வேலை என முன்னறிவிப்பின்றி காரை எடுத்துக் கொண்டு போய் விடுகிறான். அவசரமாய் கிளம்பி

கீழே வருகையில் கார் இருக்காது. காலை நேர பிஸியில் ஆட்டோவும் கிடைக்காது. கொஞ்ச தூரம் ஷேர் ஆட்டோ, மீதி தூரம் நடை என வியர்க்க விறுவிறுக்கப் போய்ச் சேர வேண்டும். திரும்ப அதே போல் பயணித்து வீடு போய் சேரும்போது கார் ஷெட்டில் கூட விடப்படாமல் ரோடில் அநாதையாய் கிடக்க, குமார் அறையில் தூங்கிக் கொண்டிருப்பான். நல்லவேளை நம்மை கேள்வி கேட்க ஆளில்லை. இல்லை என்றால் உன் கணவருக்கு என்ன வேலை, எவ்வளவு சம்பளம் என்று கேட்டால் கூட பதில் தெரியாது விழிக்க வேண்டியிருக்கும். அன்று இரவு பணி முடிந்து வீட்டிற்குப் போய் குளித்து கீழே வருகையில் முன்னறையில் ரவியும் அவன் அம்மாவும் உட்கார்ந்திருந்தனர். எதிர்பாராமல் அவர்களைப் பார்த்ததில் மகிழ்ச்சியும், குமார் வீட்டில்தான் இருக்கிறான் என்ற சங்கட உணர்ச்சியுமாக ''வாங்கம்மா'' என்றாள்.

''என்ன ரவி, ஒரு போன் கூட பண்ணாம அம்மாவைக் கூட்டிட்டு வந்துருக்க?''

''உனக்கு நேத்து நைட் டியூட்டின்னு தெரியும் சுதி. காலைல வீட்லதான இருப்ப. எதுக்கு போன் பண்ணனும். சுதி வீட்டுக்குத்தானே போறோம்னு தோணிச்சி அதனால்தான்'' என்றான் ரவி.

''நம்ம வந்தனாவுக்கு கல்யாணம்மா. வர்ற பதினைந்தாம் தேதி. பத்திரிகை கொடுக்கலாம்னு வந்தோம். நீதான் முந்தி மாதிரி போன் பேசறதும் இல்ல. பார்க்கவும் முடியல'' என்றாள் ரவியின் அம்மா.

பத்திரிகையை பிரித்தபடி ''கல்யாணம் எங்கே வெச்சிருக்கீங்கம்மா?'' என்றாள் சுதி.

''இங்கதான் சென்னையில. ர்வி சொல்லலியா உங்க கிட்ட? பாவம் ஒருத்தனா அலையறான். மறந்திருப்பான். நீ ஒரு வாரம் முன்னாடியே வந்துடணும். இது நம்ம வீட்ல



முதல் கல்யாணமில்லையா? ரொம்ப நாளாய் எதிர்பார்த்த கல்யாணம் கூட. மாப்பிள்ளை எங்கம்மா? அவர் வீட்ல இல்லையா? அவர் கிட்டயும் சொல்லணும்'' என்றாள் அம்மா.

குமார் வருவதற்குள் கிளம்பினால் தேவலை என்ற தவிப்பை அடக்கியபடி,

''என்ன சாப்பிடறீங்கம்மா? காபி, டீயா? இல்ல கூல் ட்ரிங்ஸா'' என்றபடி உள்ளே நகர்ந்தாள் சுதி.

''நம்ம வீட்ல என்ன சாப்பிட்டா என்னம்மா? பாலம்மா உங்கூட இருக்கறதா சொன்னாங்க. எங்கே காணோம்'' என்றபடி சுதி பின் தொடர்ந்தாள்.

ஹாலில் ஹிண்டு பேப்பரை புரட்டிக் கொண்டிருந்த ரவியின் எதிரே சத்தமின்றி வந்து அமர்ந்தான் குமார்.

''ஹாய் குமார்'' எழுந்து கையைப் பற்றி குலுக்கினான் ரவி. ''எப்படியிருக்கே குமார். கேக்கவே வேண்டியதில்லை. பார்த்தாலே தெரியுதே. முன்னை விட ஆள் அம்சமா இருக்க. சுதி உன்னை ரொம்ப நல்லா கவனிச்சிக்கிறா போல. ரொம்ப சந்தோஷம்'' கையை விடாது நண்பனைப் பார்த்த சந்தோஷத்தில் பேசிக் கொண்டே போனான் ரவி.

மெதுவாய் கையை விடுவித்துக் கொண்ட குமார் எதிரில் அமர்ந்து ''என்ன விஷயம்?'' என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

'ஓ இவன் மாறவேயில்லை' என்பதை அந்த குரல் உணர்த்திவிட தங்கையின் கல்யாணம் பற்றி கூறினான் ரவி. பொதுவான விஷயங்களை தொட்டு தயங்கி பேச்சு நடந்தது. சுதியும் ரவியின் அம்மாவும் டீயுடன் ஹாலுக்கு வந்தனர்.

''டீ எனக்கெல்லாம் கிடையாதா?'' என்றான் குமார் கோணல் சிரிப்புடன்.

''இதோ எடுத்துக்க குமார்'' என்ற ரவி சொன்னதும் ''உன் கைக்கு வந்த டீதானா எனக்கு?'' என்றான் மறுபடி அதே சிரிப்புடன். மேலும் ரசாபாசமாகும் முன் ''இதோ கொண்டு

வருகிறேன்'' என அவசரமாய் உள்ளே போக, இறுக்கத்துடன் அமர்ந்திருந்த குமாரிடம் என்ன பேசுவதென்று புரியாமல் அவர்கள் சீக்கிரமே கிளம்பிச் சென்றனர்.

குமாரிடம் டீயை கொடுத்துவிட்டு, டீபாயை துடைத்து பேப்பரை மடித்து அடியில் வைக்கும்போது வாசலில் 'அம்மா' என்ற குரல் கேட்டது. போய்ப் பார்த்தாள் சுதி.

தெருவோரத்தில் வண்டியில் இஸ்திரி போடும் வேலு தலையை சொறிந்தபடி நின்று கொண்டிருந்தான்.

''நேத்தியிலிருந்து வயித்த நோவுதும்மா. ஏதாச்சும் மாத்திரை கொடுங்களேன்.''

''இரு வரேன்'' என்றபடி உள்ளே போய் மாத்திரையுடன் வந்தவள் சொன்னாள்.

''ஏற்கனவே இது மாதிரி நிறைய தடவை எங்கிட்ட மாத்திரை வாங்கி சாப்பிட்டிருக்க வேலு. வலி மாத்திரைகள் எல்லாம் தற்காலிக நிவாரணம் தான் தரும். உனக்கு அல்சர் இருக்கான்னு பார்க்கணும். நாளைக்கு காலையில பத்து மணிக்கு நம்ம இலவச மருத்துவமனைக்கு வா. டெஸ்ட் பண்ணி பார்க்கலாம். இப்ப இரவு மட்டும் இதை சாப்பிடு. நாளை வரணும் என்ன?''

''சரிங்கம்மா'' என பணிவுடன் வேலு போய்விட, சுதி உள்ளே திரும்பியபோது பின்னால் நின்று கொண்டிருந்த குமார் மீது மோதிக் கொண்டாள்.

அவள் புஜத்தை அழுத்தமாகப் பற்றிய குமார் கேட்டான். ''ஊர்ல எத்தனையோ பொண்ணுங்க டாக்டரா இருக்காங்க. ஆனா உன் கூட வேலை செய்யறவங்க நண்பர்கள், நோயாளிகள், எல்லோரும் ஆண்களாகவே இருக்கிறார்களே ஏன்?''

இந்த விதண்டாவாதத்திற்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்தாள் சுதி.

''சொல்லு நான் கேக்கறேனில்ல?''



''நோய்க்கும் மருந்துக்கும், மருத்துவர்களுக்கும் ஆண் பெண் வித்தியாசமே இல்லை. நோய் ஆணோ, பெண்ணோ யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். மருந்தும் ஆணுக்கு தனி, பெண்ணுக்கு தனி மருந்து என்றில்லை. மருத்துவரும் அப்படித்தான். ஆண் மருத்துவர், பெண் மருத்துவர் என்ற வேறுபாடு இல்லை. குறிப்பாக சொல்லப் போனால் பிரசவத்திற்கு மட்டும் தான் பெண் மருத்துவர் தேவைப்படுகிறார்கள். மற்றபடி எல்லாம் ஒன்றுதான். நோய்க்கு தான் மருந்து மருந்தைக் கொடுத்து நோய் தீர்ப்பவர் மருத்துவர். போதுமா விளக்கம்?''

''நோய்க்கு ஆண் பெண் வேறுபாடில்லை சரி. உனக்காவது கணவர்களுக்கும், நண்பர்களுக்கும் வேறுபாடு இருக்கிறதா? அல்லது எந்த வேறுபாடும் இல்லையா?'' பதில் சொல்லாது வெளியே வெறித்தாள் சுதி. மதியம் மருத்துவமனையில் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

* * *

டாக்டர் காந்திமதி அன்று ஒரு அவசர கேஸ் பார்த்துக் கொண்டிருந்ததால் அவள் நோயாளிகள் சிலரைப் பார்க்குமாறு சுதியை கேட்டுக் கொண்டாள். சுதியும் எல்லோரையும் பார்த்து முடிக்கும்போது கடைசியாய் ஒரு கணவனும் மனைவியும் வந்தார்கள். இருவருக்கும் மணமாகி நான்கு வருடங்கள் ஆகியிருந்தது. மனைவி அடிக்கடி வயிறு வலிக்கிறது என்றாள். குழந்தை வேண்டுமென்ற ஏக்கத்தை கணவன் வருத்தத்துடன் வெளிப்படுத்தினான். அந்த பெண்ணை சோதனைக்காக நர்ஸ் தனியே அழைத்துச் சென்றாள். சுதி அவளைப் பரிசோதிக்கும் போதே அலறினாள். கர்ப்பப்பையிலும் காயங்கள் தெரியவே அவளை விசாரித்தாள் சுதி. கதறி அழுத அவள் இந்த விஷயத்தை வெளியே சொன்னா நான் உயிரோடயே இருக்க மாட்டேன்'' என்றாள்.

உன் பர்சனல் விஷயம் எனக்குத் தேவையில்லாதது. ஆனால் கருப்பையிலுள்ள காயங்களைப் பார்த்தால் ஏற்

கனவே முரட்டுத்தனமாக கருக்கலைப்பு நடந்திருப்பது போலத் தெரிகிறது. உன் கணவர் ஒருமுறை கூட நீ கரு தரிக்கவில்லை என கவலைப்படுகிறார். அதனால்தான் கேட்டேன். மற்றபடி சொல்லுவதும் சொல்லாமல் இருப்பதும் உன் இஷ்டம்'' என்றாள் சுதி.

தலையை குனிந்தபடி அந்த பெண் சொன்னாள், தான் ஆறு வருடமாய் ஒருவனை காதலித்து கிட்டத்தட்ட ஒரு வருடமாய் அவனுடன் கணவன் மனைவி போல வாழ்க்கை நடத்தியதாகவும் இறுதியில் அவன் பெற்றோர் பார்த்த பெண்ணை மணந்து கொண்டு கைவிட்டு ஓடிவிட்டான் என்றும் கூறினாள். கொஞ்ச நாள் வருத்தத்திலேயே இருந்த நான் வேறு வழியின்றி என் பெற்றோர் வற்புறுத்தலுக்கிணங்க இவரை மணந்து கொண்டேன். என் கணவர் மிகவும் நல்லவர். என் மீது உயிரையே வைத்திருக்கிறார். சில சமயம் அவர் என் மீது அன்பைப் பொழியும்போது குற்ற உணர்ச்சி தோன்றத்தான் செய்கிறது. ஆனால் உண்மை தெரிந்தால் என் முகத்தில் கூட விழிக்க மாட்டார் என முகத்தைப் பொத்தியபடி அழுதாள்.

சுதி வெளியே வந்து அவள் கணவனிடம் ''உங்கள் மனைவியின் கருப்பை பலகீனமாக இருக்கிறது. டாக்டர் காந்திமதி வந்து வைட்டமின் மாத்திரைகள், டானிக் எல்லாம் எழுதித் தருவார்கள். பயப்பட வேண்டியதில்லை'' என்று சொன்னதும் அவன் முகத்தில் நிம்மதி வெளிப்படையாகத் தெரிந்தது.

''நல்லவேளை, நான் என்னவோ என்று பயந்து கொண்டிருந்தேன் டாக்டர். அவள் சரியாய் சாப்பிடுவதில்லை. அதனால் வந்த பலகீனமாய் இருக்கும். இனி சத்துள்ள உணவாக கொடுத்து பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறேன். இன்னும் கொஞ்ச நாளில் இங்கே பிரசவத்திற்கு வருவாள் பாருங்களேன்'' என்றபடி அவள் தோளை அணைத்து அழைத்துச் சென்றான்.



''டாக்டர் நான் உங்களை கடவுளுக்கு சமமா நினைக்கிறேன்'' என்று வணங்கிய அந்த பெண் திரும்பிப் பார்த்தபடியே கணவனுடன் சென்றாள்.

இப்போது யோசிக்கையில் குமார் மாதிரி ஆண்களுக்கு அப்படிப்பட்ட பெண் மனைவியாய் இருந்தால் எப்படியிருக்கும் என்று தோன்றியது. என்ன செய்வான் அப்போது? ஒருவேளை குமார் அமைதியடைந்திருந்தாலும் இருப்பான். தன் தவறை ஈடுகட்ட அந்த பெண் கணவனிடம் அளவுக்கு அதிகமாய் குழைவாள். அவனுக்காகவே பிறந்து, அவனுக்காகவே உயிர் வாழ்வதாய் பிரேமையை ஏற்படுத்துவாள். அவன் காலிலேயே விழுந்து கிடப்பாள். அவன் தவறு செய்தாலும் எதுவும் கேட்காமல், அவன் யாரையாவது திட்டினால் கூட சேர்ந்து திட்டி, பெரிய நாடகத்தையே அரங்கேற்றுவாள். அதில் இவனது ஈகோ திருப்தியடைய சத்தமில்லாமல் குடும்பம் நடந்திருக்கும். பளபளக்கும் சுத்தமான தரையில் அழுக்கு படிந்த காலை வைக்கக் கூசுவது போல அவனுடைய தாழ்வு மனப்பான்மை இயல்பாய் நிமிர்ந்து நிற்கும் என் முன் கூசிப் போகிறது. கூச்சத்தை மறைக்கத்தான் இத்தனை குத்தல், குதறல்கள்! மனசாட்சிக்கு பயந்து வாழும் சராசரி பெண்ணான என்னிடம் உனக்கு ஏன் இவ்வளவு துவேஷம்?

மனிதர்கள் சூழ்ந்த உலகில் சக மனிதனை வெறுத்து விட்டு வாழ முடியுமா உன்னால்? தூக்கி எறிவதற்கும், அணைத்துக் கொள்வதற்கும் ஒரு நிமிடம்தான் தேவை. நான் தூக்கி எறிய மாட்டேன் என்ற என் குணத்தின் மீது அசையாத நம்பிக்கை உனக்கு. அதனால்தான் சிறிதும் தயக்கமின்றி வார்த்தைகளை வீசிவிட்டு என் வாழ்க்கையை ஜீரணித்து விடுகிறாய்.

மாலையில் அப்பா போன் செய்து வந்தனா கல்யாணத்துக்கு நீ எப்போம்மா கிளம்பற?'' என்றார்.

''இன்னும் முடிவு பண்ணலப்பா. குமார்கிட்ட இன்னும் அதைப்பத்திப் பேசவே முடியமாட்டேங்குது'' என்றாள் சுதி.

"பேசக்கூட நேரமில்லைன்னா அது என்னம்மா தாம் பத்யம்? வேலைகளை குறைத்துக் கொண்டு தினம் சீக்கிரம் வீட்டிற்குக் கிளம்புவார். குடும்பமும் தொழிலும் இரு கண்கள் மாதிரி. ஒரு கண்ணுக்காக இன்னொரு கண்ணை இழக்கக் கூடாது. பொறுப்பும் கடமையும் வாழ்நாள் பூரா இருக்கத்தான் செய்யும். ஆனால் மண வாழ்வின் இனி மையை இளமையில் தான் அனுபவிக்க முடியும். எனவே இந்த வயதில் இப்படி இருக்கக் கூடாதும்மா" மேலும் ஐந்து நிமிடங்கள் புத்திமதி கூறிவிட்டுப் போனை வைத்தார் விஸ்வநாதன்.

வீட்டிலிருந்து தற்காலிகமாக எனக்குக் கிடைக்கும் புகலிடம் இந்த வேலை. இங்கிருப்பது சீக்கிரமாய் போகச் சொன்னால் எங்கே போவேன்?

எப்பவும் வீடு என்பது போர்க்களமாக இருந்தால் அதில் வசிப்பவர்கள் நிலை எப்படியிருக்கும் என்பது சம்பந்தப்பட்ட வர்களுக்குத்தான் தெரியும். இதுவரை தெளிந்த நீரோட்டம் போன்று சலனமில்லாத வாழ்வை எனக்கு தந்தது உங் களுடைய தப்புப்பா. இப்ப பாருங்க எதிர்பாராமல் வரும் புயலையும், மழையையும் சமாளிக்கத் திணறுகிறேன்.

கதவைத் தட்டிவிட்டு வேலுவும் அவன் மனைவியும் எட்டிப் பார்த்தார்கள். "வா வேலு" என்றாள் சுதி. "உன்னுடைய ரிப்போர்ட்ஸ் எல்லாம் வந்துவிட்டது. நான் சந்தேகப்பட்டபடி பெப்டிக் அல்சர் உனக்கு. மருந்து தருகிறேன். பயப்பட ஏதுமில்லை. காரம் சேர்க்காதே. சிகரெட், குடி எதுவும் கூடாது. சரியா?" என்றபடி மடமடவென்று மருந்துசீட்டில் எழுதத் தொடங்கினாள் சுதி.

"ரொம்ப குடிக்குதுங்கம்மா. சொன்னா கேக்க மாட்டேங் குது. பையனும் பொண்ணும் கல்யாணமாகி போய்ட்டாங்க. நாங்க ரெண்டுபேரும்தான் ஒருத்தொருக்கொருத்தர் ஆதர வுன்னு இருக்கோம். ஏதோ உடம்புக்கு ஒண்ணுமில்லாம



இருந்தா, சாகிறவரை கவலையில்லாம இருந்துட்டு போய் சேருவோம். இனிமே இறக்கப் போறோமே தவிர பொறக்கவா போறோம்? வாழ்கிறவரை நிம்மதியா இருந்தா அதுவே போதும்" என்றாள் அவன் மனைவி கண்கலங்க.

இந்த வேலு குடிகாரன். பலநாள் குடிபோதையில் வீட்டிற்கு போகாமல் தெருவிலேயே உருண்டு கிடப்பான். ஆனாலும் மற்ற நேரங்களில் இருவரும் வெற்றிலை பாக்கை மென்றபடி பேசி சிரிப்பதையும், அவன் தேய்க்கும் துணிகளை அவள் வீடுவீடாக சென்று கொடுத்துவிட்டு வருவதையும், மதியம் கரைத்த சாதத்தை கடையில் வாங்கிய ஊறுகாயுடன் மரத்துநிழலில் அமர்ந்து சிரித்தபடியே சாப்பிடுவதையும் சுதி பார்த்திருக்கிறாள். குடிப்பது அவனது பழக்கம். அன்பு செலுத்துவது அவனது சுபாவம். பழக்கத்திற்கும் சுபாவத்திற் குள்ள வித்தியாசத்தை புரிந்து கொண்டதால்தான் அவன் மனைவியால் மாறாத அன்பு செலுத்த முடிகிறது போலும்.

"கவலைப்படாதே. உன்னை நல்லா வெச்சிருக்கணும்னு வேலுவுக்கு ரொம்ப ஆசைதான். அதனால் இனிமேல் குடிக்க மாட்டான். என்ன வேலு, இனிமே குடிக்க மாட்டாய்தானே!" என்றாள் சுதி.

அவன் ஆமோதிப்பாய் தலையசைத்ததும் அவன் மனைவி முகம் மலர்ந்து போனது. "வர்றோம்மா" என மகிழ்ச்சியுடன் கிளம்பிப் போனார்கள்.

ரவி வீட்டு திருமணம் பற்றி மனதில் குடைந்து கொண்டே இருக்க வீட்டிற்கு போனதும் குமாரிடம் மெதுவாக ஆரம்பித்தாள் சுதி. "கல்யாணத்துக்கு நாம எப்பப் போறது குமார்?"

"எந்த கல்யாணம்?"

"ரவியின் தங்கை வந்தனா கல்யாணம்."

"அவளுக்கு கல்யாணமானா உனக்கென்ன?"

"என்ன குமார் இப்படி சொல்லிட்ட? ரவி எனக்கு ப்ரண்ட்
மட்டுமல்ல. உனக்கும் ரூம்மேட். அவன் வீட்டு திருமணத்
திற்கு எப்படி போகாம இருக்க முடியும்?"

"அவன் எனக்கு நண்பன்னு யார் சொன்னா? நான்
அவனை மனுசனாவே நினைச்சதில்ல. இதுல ரூம்மேட்
டாவது ஒண்ணாவது? தங்கச்சி கல்யாணம் அக்கா கல்
யாணம்னு சொல்லிகிட்டு குடும்பத்துக்குள் புகுந்து குழப்பம்
பண்றாங்க ராஸ்கல்ஸ். அவன் வீட்டு கல்யாணம்னா எம்
பொண்டாட்டிய அனுப்பணுமா நான்? அவன் பொண்
டாட்டியா இருந்தா இன்னொருத்தன் கூட அனுப்புவானா
அவன்? நீ ஊர்சுத்தியா இருக்கறதாலதான் உன்னை நாலு
நாள் முன்னாடியே அனுப்பி வைங்கிறான். எங்கிட்டயே
சொல்றான்னா, என்னை என்ன கேணப்பையன்னு நினைச்சி
கிட்டானா?"

"ஒரு கல்யாணத்துக்கு அழைப்பு கொடுத்தது அவ்வளவு
பெரிய தப்பா குமார்? நாலு நாள் முன்னாடி வாங்கறது எல்
லோரும் சொல்றதுதானே!"

"அவன் எதுக்குடி முதல்ல இங்க வரான்? நான் அவன்
சவகாசமே வேண்டாம்னு சொல்றேன். நீ எவ்வளவு திமிர்
இருந்தா அவன் வீட்டுக்கு போறதுக்கு என்னையே கூப்
பிடுவ? கல்யாணத்துக்கு முந்தி நீ எப்படி வேணா இருந்திருக்
கலாம். யார் கூட வேணா சுத்தியிருக்கலாம். ஆனா இப்ப
எனக்கு ஒழுக்கமான பொண்டாட்டியா நடந்துக்கப் பார்."

செல்போன் சிணுங்கவே போய் எடுத்தாள் சுதி.

ரவியின் தங்கை தான் பேசினாள். "சுதி கல்யாணத்துக்கு
இன்னும் இரண்டுநாள் தான் இருக்கு. தெரியுமில்ல? உங்க
கல்லூரி நண்பர்கள் எல்லாம் வேற வேற ஊர்ல இருந்து வந்
துட்டாங்க. உள்ளூர்லயே இருந்துட்டு நீங்க இன்னும் வர
லேன்னு எல்லோருக்கும் ரொம்ப கோபம்."



உங்க வீட்டுக்கே வந்து உங்களை இழுத்துட்டு வரலாம்னு
கிளம்பினாங்க. ரவிதான் வேண்டாம் என்று சொல்லிவிட்
டான். நீங்க ஏன் இன்னும் வராம இருக்கீங்க? எப்ப கிளம்பப்
போறீங்க? உங்க ப்ரண்ட்சை எல்லாம் மறுபடி சந்திக்க
இதுபோல சந்தர்ப்பம் திரும்ப வருமா சொல்லுங்க? எப்பவும்
அதிகம் பேசாத வந்தனா, மணப்பெண்ணுக்கே உரிய
கலகலப்புடன் உரிமையாய் பேசவும் என்ன சொல்வதென
யோசித்தாள் சுதி.

"சுதி கல்யாணத்துக்கு வந்தா இன்னும் ஒரு சர்ப்ரைஸ்
இருக்கு. அதை தெரிஞ்சிக்கணும்னா சீக்கிரம் வாங்க"
என்றாள் வந்தனா.

"என்ன சர்ப்ரைஸ்? சீக்கிரம் சொல்லேன்! அப்பதான்
உடனே வருவேன்" என பழைய சுதியாய் குதிக்காமல் "சரி
வந்தனா நான் வர்றப்ப போன் பண்ணிட்டு வர்றேன்" என்றாள்
சுதி தயக்கத்துடன்.

தன் ஆர்வத்தின் எதிரொளி சுதியிடம் தெரியாமையில்
வந்தனா ஏமாற்றமடைந்தாள். "உண்மையில் நான் பேசிட்டு
இருக்கறது சுதிகிட்டயா? எங்க போனாலும் எல்லா வேலை
களையும் இழுத்து போட்டுகிட்டு, சாதா சிரிச்சுகிட்டே,
ரீங்கரிச்சிட்டு இருக்கறதால சுதிபெட்டின்னு எல்லோரும்
உங்களை கூப்பிடுவாங்களே நினைவிருக்கா? உங்க
கல்யாணத்துக்கு உங்க நண்பர்கள் எல்லாம் எப்படி வேலை
பார்த்தாங்கன்னு மறந்துட்டீங்களா? உங்கப்பாவுக்கு அட்டாக்
வந்தப்ப கூட ஒருத்தர் மாத்தி ஒருத்தர் ஷிப்டு போட்டு கூட
இருந்தமே! அதுவும் மறந்துடுச்சி இல்ல?" என்றாள் வந்தனா
கோபத்துடன்.

"நான் எதையும், யாரையும் மறக்கல வந்தனா. நீ வீணா
எதையாவது நினைச்சி குழப்பிக்காதே. உன் வருங்கால
கணவர் எப்படி இருக்கிறார்? என்ன செய்கிறார்?" என்பது
போன்ற பொதுவான பேச்சுடன் போனை வைத்தாள் சுதி.

கல்யாணத்திற்கு போவது பற்றி என்ன முடிவெடுப்பது என்று சுதிக்கு தெரியவில்லை. வந்தனாவின் கோபத்தில் நியாயம் இருக்கிறது. அது என் மீதுள்ள அன்பால் வருவது. அந்த கோபத்தை மதித்துதான் ஆக வேண்டும். ஆனால் போய் வந்த பிறகு குமாருக்கு தெரியவந்தால் ஏற்கனவே நடக்காத விஷயங்களைப் பற்றி அவன் செய்து கொண்டிருக்கும் கற்பனைக்கு நானே உருவம் கொடுத்த மாதிரியாகி விடும்.

வீட்டில் சமையல் செய்வதும், சீரியல் பார்ப்பதுமாய் வெளி உலகமே தெரியாமல் வாழும் அம்மா மாதிரியான பெண்களுக்கு கூட பக்கத்து வீடு, அடுத்த வீடு, கோயிலில் பார்த்தவர், காய்கறிக் கடையில் பழகியவர் என பேசவும், பழகவும், போகவும் வேண்டியதிருக்கிறது. சமூகத்தில் ஒரு முக்கிய பணியாற்றும் எனக்கு நட்பு, சுற்றம், வேலை ரீதியான தொடர்புகள் என எத்தனை நிகழ்ச்சிகளுக்கு செல்ல வேண்டியதிருக்கும்! குறிப்பிட்ட யாரையாவது ஏதாவது காரணத்துக்காக குமாருக்கு பிடிக்கவில்லை என்றால் நாமும் அவர்களிடமிருந்து ஒதுங்கிக் கொள்ளலாம். ஆனால் அவனுக்கு யாரையுமே பிடிக்காது எனும்போது எத்தனை பேரை வெறுக்க முடியும் நம்மால்! என்ன செய்வதென்று புரியாத குழப்பத்தில் குமார் இல்லாதபோது ரவிக்கு போன் செய்தாள். "ரவி குமாருக்கு உடல்நிலை சரியில்லை. அதனால் வந்தனா திருமணத்திற்கு என்னால் முன்கூட்டியே வர முடியவில்லை. ரவி, நீ எனக்கு படிக்கும் போதிருந்தே எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறாய். மருத்துவமனையிலும், வீட்டில் ஏதாவது என்றாலும் சரி என் இன்னொரு கையாய் துணை நின்றிருக்கிறாய். இப்ப உங்க வீட்டு விசேஷத்திற்கு என்னால் எதுவும் செய்யமுடியலையேன்னு ரொம்ப வருத்தமா இருக்கு ரவி" பேசும் போதே குரல் தழைந்தது.

"இதுக்கு ஏன் கவலைப்படற சுதி? உன்னுடைய சூழ்நிலை புரியாதவனா நான்? ரொம்ப நாட்களுக்கு பிறகு நண்பர்கள் எல்லாம் சேர்ந்து இருக்கவும், நீயும் கூட இருந்தா நல்லா இருக்கும்னு நினைச்சோம். அவ்வளவுதான். நீ என்ன வேணும்னேயா வராம இருக்க? உன்னால முடிஞ்சா நான் கூப்பிடாமலேயே வந்திருக்கமாட்டியா? கல்யாணத்துக்கே நீ வரலேன்னா கூட நான் உன்னை தப்பா நினைக்க மாட்டேன். கஷ்டப்பட்டு வர்றது தான் நட்புன்னு இல்ல. இருந்த இடத்திலேயே மனப்பூர்வமாக வாழ்த்தவும் நண்பர்களால்தான் முடியும். அதனால உன் மனசுக்குள்ள எதை பத்தியும் நினைக்காம உன் வேலையைப் பார் சுதி" என்றான் ரவி.



அவனது பெருந்தன்மையான பதிலில் சுதி கரைந்து போனாள். எந்த சூழ்நிலையிலும் நண்பர்களை தவறாக நினைக்காத மனம். உண்மையில் ரவி மாதிரி ஆட்கள்தான் நட்புக்கு இலக்கணம் வகுக்கிறார்கள் என்று தோன்றியது. கேவலம் பாலியல் மாறுபாட்டால் குமார் அதை கொச்சைப் படுத்துவது மிகவும் அநியாயமானது.

திருமணத்திற்கு சுதி போகவேயில்லை. எனக்காக போக வில்லையா என்ற திருப்தியோ, பாவம் போகவில்லையா என்ற போலி கிண்டலோ, குமார் அமைதியாய் இருந்தான். பெரிய பிரச்சனையை தவிர்த்தோம் என தோன்றியது.

பால்கனியில் நின்று கொண்டிருந்தாள் சுதி. பக்கத்து வீட்டு பெண் தன் செல்லநாயுடன் கொஞ்சி விளையாடுவதை வேடிக்கைப் பார்த்தவள், செல்போன் சத்தம் கேட்டு உள்ளே விரைந்தாள். சரஸ்வதிதான் பேசினாள். "வந்தனா திருமணத்தை பற்றி சொன்னாள். அப்பா இல்லாத குடும்பம்னு உங்கப்பாவே முன்ன நின்னு எல்லாம் செஞ்சார் சுதி. நானும் பாலம்மாவும் இரவு வரவேற்புக்கு போனோம். மதிய விருந்து முடிந்து பெண் மாப்பிள்ளையை மண்டபத்திலிருந்து வழியனுப்பி வைத்துவிட்டுதான் வந்தோம். என்ன கூட்டங்கற? அப்பா இல்லாத குறையே தெரியாது, நல்ல மாப்பிள்ளை பாத்து, ரவி நல்லபடியா நடத்திட்டான். உன் ப்ரண்ட்ஸ்

எல்லாம் வந்திருந்தாங்க. எல்லாரும் உன்னைத்தான் கேட்டாங்க. உங்கூட படிக்கிறப்ப ஒல்லியா கண்ணாடி போட்டுகிட்டு உயரமா இருப்பாளே கலா, அவ இப்ப லேசா வெயிட் போட்டு ஆளே அழகா மாறிட்டா. அவ புருஷன் பிர்லா இன்ஸ்டிடியூட்ல விஞ்ஞானியாம். என்னை பாத்ததும் ஓடிவந்து கட்டி பிடிச்சிகிட்டா. ஹேமா பெங்களூர்ல இப்ப ஆர்தோ டாக்டராம். அவ புருஷன் கிட்ட என்னோட வத்த குழம்பு பற்றி ஒரு புராணமே பாடிட்டா. அந்த கொல்கத்தா பொண்ணு சுமாலினி சட்டர்ஜி ஒரு டின் நிறைய ரசகுல்லா கொண்டுவந்து கொடுத்தா. அப்புறம் படிக்கிறப்ப எப்பவும் சண்டை போட்டுட்டே இருப்பாங்களே ரமேஷும், சௌமியும். இப்ப அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிடிச்சி. காதல் கல்யாணம் வேறாம்? ரவியோட அம்மா ரொம்ப வருத்தப்பட்டாங்க. நீ வரலேன்னு. ம்.. இந்த சமயம் பாத்தா மாப்பிள்ளைக்கு உடம்புக்கு வரணும்? பாலம்மா போய் கல்யாணத்துக்கு ரொம்ப ஒத்தாசை பண்ணினா. அவளுக்கு கூட புடவை எடுத்துக் கொடுத்திருக்கான் ரவி.''

பிரச்சனைகளை தவிர்த்தோம் என ஆறுதல்பட்டது மாறி, இப்போது போக முடியாதது இழப்பாக தோன்றிவிட, ''சரிம்மா வைத்துவிடட்டுமா?'' என்றாள் சுதி.

''இரு, சுதி முக்கியமான விஷயம் சொல்லலியே நான்? நம்ம ரவிக்கு கூட கல்யாணத்துக்கு பொண்ணு ரெடி.''

''நிஜமாவா? எங்கிட்ட அந்த ராஸ்கல் சொல்லவேயில்ல? பொண்ணு யாராம்? வந்தனா என்கிட்ட கல்யாணத்துல உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ்னு சொன்னா. அது இதுதானா?'' ஆச்சரியத்தில் படபடத்தாள் சுதி.

''பெண் டாக்டராம். அதுவும் உங்க பிரகாசம் மருத்துவ மனையில் தான் வேலை செய்கிறாளாம்!''

''எங்க ஆஸ்பத்திரியில எனக்கு தெரியாம யார்? பெயர் என்னம்மா?''



''மறந்து போச்சுடி. ஏதோ சின்ன பெயர்தான். நாளைக்கு மருத்துவமனையில் பார்க்கும்போது நீயே கேட்டுக்க. டி.வி.யில எனக்கு பிடிச்ச சீரியல் வந்தாச்சு. நேத்து பாவம் அந்த கதாநாயகிக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடிச்சி. இன்னிக்கு என்னாச்சோ தெரியல. பாத்துட்டு அப்புறம் போன் பண்றேன். வெச்சுடவா?'' சீரியல் பார்க்கும் மும்முரத்தில் அம்மா பெண்ணின் பெயரை யோசிக்கக் கூட முயற்சி செய்யாமல் போனை வைத்துவிட்டாள். மருத்துவமனையில் திருமண மாகாத பெண் மருத்துவர்கள் நாலைந்துபேர் இருக்கிறார்கள். இதில் ரவி யாரை மணக்கப் போகிறான்? சுதி யோசிக்கத் தொடங்கினாள்.

தலைக்கு குளித்துவிட்டு தலையை துவட்டியபடியே ஜன்னலருகே நின்றாள் சுதி. மாலை நேரக் காற்று சிலுசிலுத்தது. காம்பவுண்டின் ஓரமாய் படர்ந்திருந்த மல்லிகை பந்தலிலிருந்து கும்மென்ற வாசம் நாசியை தாக்கியது. வேலு இஸ்திரி வண்டியை மூடிவிட்டு மனைவியுடன் டீ குடித்தபடி எப்.எம். ரேடியோவில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். ப.விஜய்யின் அந்த தன்னம்பிக்கையூட்டும் பாடல் வரிகள் உரத்து ஒலித்தன. சொற்களில் பிரமாதமான இலக்கியமோ கவிதை வடிவமோ இல்லாமல் எளிய மக்களுக்கும் புரியும் வண்ணம் பயன்படுத்தப்பட்ட நடையே பாடலின் வெற்றிக்கு காரணம் என்று தோன்றியது.

வேலு இப்போது சுத்தமாக குடிப்பதை நிறுத்தியிருந்தான். ஐம்பத்தைந்து வயதுக்கு பிறகு மனைவியுடன் அவனுக்கு மறுபடி ஒரு வாழ்க்கை தொடங்கியிருந்தது. பரந்து விரிந்த லான்களில் நெடிதுயர்ந்த பங்களாக்களில், குளிரூட்டப்பட்ட அறைகளில் மூச்சு திணறி வெந்து புழுங்குவதை விட, சாக்கையோரத்து பலகை மேல் வசித்துக் கொண்டு, மனைவியுடன் சுக துக்கங்களை பகிர்ந்து வாழும் வேலுவின் வாழ்க்கை நிச்சயமாக உயர்ந்ததுதான். அவர்களது பிரச்சனை

கள் அனைத்தும் அன்றாடம் உணவுடன் தீர்ந்துவிடக் கூடியவை. வேலுவின் மனைவி எதிர்ப்படும் போதெல்லாம் 'டாக்டரம்மா உங்க தயவால இவர் குடிக்கறதை நிறுத்திட்டார். இப்ப அவ்வளவா வயிற்றுவலி வருவதில்லை' என்பாள் வினயத்துடன்.

உன் கணவனுக்கு உடலில் மட்டுமே நோய். அதனால் எளிதாக குணப்படுத்த முடிந்தது. மனம் எப்போதும் நன்றாக இருந்தது உன் அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொள்வாள்.

தலையை வாரி பின்னலிடும் போது கை அசந்து போயிற்று. ஒரு வார காய்ச்சலில் உடம்பு ரொம்ப பலகீனமாய்த்தான் போய்விட்டது. உணவும் உண்ண முடியாமல், உடம்பும் கண்களும் நெருப்பாய் கொதிக்க தனக்குத்தானே வைத்தியம் பார்த்துக் கொண்டதில் மிகவும் திணறிப் போனாள். அவளுக்கு விபரம் தெரிந்தபின் வந்த முதல் ஜூரம் இது. இரவெல்லாம் டெம்ப்ரேச்சர் நூற்றுமூணு, நூற்றுநாலு என எகிற, தலைவலியும், குடைச்சலுமாய் அவதிப்பட்டாள். எழுந்து போய் கட்டிலில் படுக்க முடியாமல் சோபாவில் சுருண்டவளை குமார் எழுப்பி "எனக்கு சாப்பாடு எடுத்து வை" என்றான்.

"எனக்கு ரொம்ப ஜூரம் குமார். இரண்டு நாளா வேலைக்கு கூட போகல."

"ஜூரமா இருந்தா, நீ சும்மா கிடப்ப? நான் எதை சாப்பிடுவது? போய் எடுத்து வை."

"இன்னும் சமைக்கல குமார்."

"சீக்கிரம் சமையல் செய். எனக்கு பசிக்குது" என்றபடி மேலே போனான். பேசாமல் எழுந்துபோய் ஒரு சாதமும், சாம்பாரும், பொரியலும் செய்தாள். குமார் சாப்பிட்டு முடித்ததும் வெளியே கிளம்பிப் போனான். அவன் போனதும் அவனுக்கு போன் வந்தது. செல்லை மறந்து வைத்துவிட்டு



போய் இருந்தான். அவன் இல்லை என்று சொன்னதும் உடனே கட் பண்ணினார்கள். குமாருக்கு வருகிற போன் எல்லாம் அப்படித்தான் வரும். நீங்க யார் என்று கேட்டால் பதில் சொல்லமாட்டார்கள். இரவு வந்த குமார் எதுவும் பேசாமல் சாப்பிட்டுவிட்டு போய் படுத்துக் கொண்டான்.

இரண்டு நாளாய் படுக்கக் கூட முடியாமல் சமைப்பதும், சமையலறை சுத்தம் செய்வதும், காலிங்பெல், டெலிபோன் சத்தத்திற்கு ஓடுவதுமாய் களைத்துப் போனாள் சுதி. மூன்றாம் நாள் "என்னால முடியல குமார். இன்னிக்கு நீ ஹோட்டல்ல தான் சாப்பிட்டாகணும். வேறுவழியில்லை" என சுருண்டு விட்டாள். கடையில் சாப்பிட்டு விட்டு வந்து படுத்துக் கொண்டான் குமார். "நீ என்ன சாப்பிட்டாய்! உனக்கு வாங்கி வரட்டுமா? உடம்பு இப்போது எப்படியிருக்கிறது?" என்று சராசரி கேள்விகளை கூட கேட்காதது ரொம்ப ஆச்சரியமாய் இருந்தது.

தேவையில்லாத விஷயங்களுக்கு விடிய விடிய பேசி சண்டை போடுபவன் அவசியமான நேரங்களில் ஏன் பேசுவதில்லை? நான் அடிபட்டு துடிக்கும் போதும், காய்ச்சல் வந்து துவண்டு கிடக்கும் போதும் கண் எதிரே ஒரு மனிதனால் நன்றாக சாப்பிட்டு, நிம்மதியாக தூங்கி நடமாட முடிகிறது என்றால் என்ன மாதிரி குணம் அவனுடையது?. மனைவி என்ற பாசம் வேண்டாம். சக மனுஷி என்ற அனுதாபம் எங்கே போயிற்று? ஒரு போன் செய்தால் அம்மாவும் அப்பாவும் ஓடிவந்து விடுவார்கள். இங்கே மகளின் வாழ்வை பார்த்தால் ஒடிந்து போவார்கள். நான் அங்கே போய் தங்கினாலும் அதே நிலைதான். குமாருக்கு மனைவி வேண்டும். மனைவி மூலமாய் கிடைக்கும் அத்தனை சுகங்களும் வேண்டும். ஆனால் அவளது அப்பா அம்மா வேண்டாம், என்ற கொள்கையுடையவன். திருமணம் முடிந்து தனிக்குடித்தனம் வந்த பிறகு மாமியார் வீட்டிற்கு அவன் போகவேயில்லை.

சுதியையும் போகவிடமாட்டான். அப்படி போனாலும் வந்து பார்க்க மாட்டான். அம்மாவுக்கு தலைவலி என்றாலும் 'தைலம் தடவிக்கிறியா? மாத்திரை சாப்பிடறியா?' என அப்பா துடித்துப் போவார். அத்தகைய கவனிப்பிலேயே வாழ்ந்த அம்மாவால் குமாரின் பாராமுகத்தை தாங்கிக் கொள்ள முடியுமா? எனவே யாரிடமும் எதுவும் சொல்லாமல் இருந்தாள்.

அம்மா தினசரி வழக்கம் போல் போன் செய்து 'எப்படியிருக் கிறாய் கண்ணு?' என்றபோது கண்ணில் நீர் கட்டியது.

'நல்லா இருக்கேம்மா' என்றபோது பாசமுள்ள உறவுகள், சுற்றம், நட்பு எல்லாம் இருந்தும் சொந்த வீட்டிற்குள்ளயே அநாதையாவது தன்னைப் போல் ஒரு சிலருக்குத்தான் சாத்தியம் என்று தோன்றியது.

கஞ்சி போட்ட காட்டன்புடவை உடல் மெலிவை சற்று சமனப்படுத்திக் காட்ட வழக்கம் போல் மருத்துவமனைக்கு கிளம்பினாள் சுதி. என்றாலும் குழிவிழுந்த கண்களும், ஒட்டிய கன்னங்களும் சோர்வை பறைசாற்ற பார்த்தவர்கள் எல்லாம் உடம்பு சரியில்லையா என விசாரிக்கவே செய்தார் கள். தன் வழக்கமான சிரிப்பையே பதிலாய் தந்தபடி வேலைகளில் மூழ்கிப் போனாள் சுதி.

மதியம் டாக்டர் சுகுமாருக்கு ஒரு அறுவை சிகிச்சையில் உதவ வேண்டியது இருந்தது. அவரது வழக்கமான கோபம், கத்தல்கள் எல்லாவற்றையும் சமாளித்துவிட்டு வெளியே வரும்போது சிறிது நேரம் கண்மூடி உட்கார வேண்டும் போல ஆயாசமாக இருந்தது. நேராக மருத்துவர்கள் அறைக்கு சென்றாள். வழியில் எதிர்ப்பட்ட ஆயாவிடம் ஒரு டீ வாங்கி வரச்சொல்லி விட்டு பேனை ஓடவிட்டு சேரில் சாய்ந்தாள். சற்று நேரம் கண்களை மூடியிருந்தவள், ஆயா டீயுடன் வந்ததும் எழுந்து அமர்ந்தாள். டீயை குடித்தபடி டேபிள்



மீதிருந்த புத்தகத்தை புரட்டத் தொடங்கினாள். ஒரு கவிதை கண் முன்னே விரிந்தது.

*'அம்மா*
*அன்பு எனும் ஏட்டில்*
*பண்பு எனும் பாடமிட்டு*
*ஒழுக்கமெனும் பதிப்பிலிருந்து*
*பெண் எனும் புத்தகத்தை*
*வெளியிட்டாயே! எதற்காக?*
*அடுத்தவன் தாள்தாளாக*
*கிழித்துப் போடுவதற்கா?'*

எழுதியவர்கள் பெயர் கிழிந்திருந்தது. நியாயமான உணர்ச்சிதான் கவிதையில் வெளிப்பட்டிருக்கிறது. ஆனால் பெண்ணும் பேப்பரும் ஒன்றா? எதற்காக இந்த சுயபச்சா தாபம்? புலம்பல்கள் பிரச்சனைக்கு தீர்வாகுமா?

"ஹாய்" முகத்திற்கு எதிரே யாரோ கையை சொடுக்கினார் கள். ரவி நின்று கொண்டிருந்தான். புதிதாக சேர்ந்திருக்கும் டாக்டர் ரமா அருகில் நின்று கொண்டிருந்தாள்.

"விழித்துக் கொண்டே தூங்கறியா சுதி?" என்றான் ரவி.

"நீங்க வேற. மேடம் கனவு கண்டு கொண்டிருக்காங்க. அப்படித்தானே மேடம்?" என்றாள் ரமா.

சிரித்தபடி புத்தகத்தை மூடி வைத்த சுதிக்கு ஒரு நிமிடம் இருவரும் சிரித்த முகத்துடன் ஜோடியாய் நின்ற காட்சி இனிமையாய் மனதில் பதிந்தது. சொல்லாமலே, கேள்வி கேட்காமலே விஷயம் புரிந்து போக "நான் கனவு காண்பது இருக்கட்டும். இங்க யாரோ இரண்டு பேர் கனவு காண தயாராயிட்டாங்களாமே நிஜமா?" என்றாள்.

ரமாவின் சிவந்த கன்னங்கள் விஷயம் உண்மை என்பதை ஊர்ஜிதப்படுத்த ரவி அசடு வழிந்தான்.

''இதுக்குத்தான் தங்கச்சிக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணனும்னு துடிச்சியா? என்னால நம்பவே முடியலடா. கடைசியில நீ கூட காதல்ல விழுந்துட்டியா? கூடவே இருந்தும் என்னை சுற்றி நடந்த இவ்வளவு பெரிய ரொமான்ஸை நா எப்படி கண்டுக்காம விட்டேன்?''

''ஏன்னா நீ உன்னோட உலகத்துலயே வாழ்ந்துட்டிருக்கிற முட்டாள் பெண். இந்நேரம் பழைய சுதியா இருந்திருந்தா என் முகத்தை பார்த்தே கண்டுபிடிச்சிருப்பா.''

''பழசாவது, புதுசாவது! சுதி என்னிக்கும் சுதிதான் ரவி.''

ஒரு மௌன புன்னகையுடன் நின்று கொண்டிருந்த ரமாவின் கையை பற்றினாள் சுதி. நல்ல நிறம். நெடுநெடு வென்ற உயரம். குழந்தை முகம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் சுபாவம். நடுத்தர குடும்பம். ரவிக்கு ஏற்ற பெண்தான். திருப்தியுடன் அணைத்துக் கொண்டாள் சுதி.

''ரவி பொறுப்பான பையன் ரமா. ரொம்ப நல்லவனும் கூட. இதெல்லாம் இப்ப உனக்கே தெரிந்திருக்கும். தெரியாத ஒண்ணு சொல்லவா? வலிந்து உதவி செய்யும் குணம் உள்ளவன். எங்க நண்பர்கள் வட்டத்திலேயே பணமாகட்டும், பொருளாகட்டும், வேலையாகட்டும் வேறு எந்த உதவியானாலும் கேட்காமலே குறிப்பறிந்து செய்பவன். எங்க அம்மாவிற்கும் அப்பாவிற்கும் ரவி செல்லப் பிள்ளை. உண்மையில் நீ மிக நல்லவனைத்தான் வாழ்க்கை துணையாய் தேர்ந்தெடுத்திருக்கிறாய். இந்த மருத்துவமனைக்கு நீ வந்த நாளிலிருந்து உன் கள்ளங்கபடமற்ற சுபாவம் எனக்கு பிடித்திருந்தது. நீங்க இருவரும் சந்தோஷமாக வாழ்ந்தால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன்.''

''நன்றி மேடம்'' என்றாள் ரமா.

''மேடம் எல்லாம் வேண்டாம். சுதின்னே கூப்பிடு. கல்யாணம் எப்ப நிச்சயம் பண்ணி இருக்கீங்க?''



''இன்னும் நாள் குறிக்கல சுதி. இப்பதானே வந்தனா கல்யாணம் நடந்தது. இன்னும் கொஞ்சநாள் போகட்டும் என்கிறார் ரவி. எங்க வீட்டிலும் அப்பா வருமானம் குடும்பத்தை நடத்தவும் தம்பியை படிக்க வைக்கவுமே செலவாகும். எனவே என் சம்பளத்திலிருந்து தான் திருமணத்திற்கு சேமிக்கிறோம். எனவே இருவர் தரப்பிலும் சேமிப்பை உயர்த்திக் கொண்டு எளிமையாய் திருமணத்தை நடத்துவது என முடிவு செய்திருக்கோம்'' என்றாள் ரமா.

சிட்டுக் குருவி கூடு கட்டுவது போல் சிறுக சேகரிக்கும் இவர்களது வாழ்க்கையும் ஆனந்தமாய் இருக்கும் என்று பார்த்தாலே தெரிந்தது. ரமாவும் சுதியும் மேற்கொண்டு திருமண விஷயமாய் உற்சாகமாய் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வாட்ச்சைப் பார்த்தான் ரவி.

''ரமா எனக்கு ஓ.டி. வார்டுக்கு போக இன்னும் அரைமணி நேரம்தான் இருக்கு. சுதியிடம் நான் பேச வேண்டியதிருக்கிறது. நீ கிளம்பு. பிறகு பார்க்கலாம்'' என அவளை அனுப்பினான் ரவி.

''ரமாவுக்கு தெரியாம அப்படி என்ன ரகசியம்? நானும்தான் இப்ப கிளம்பணும். உட்கார் ரமா. சேர்ந்தே போகலாம்'' என்றாள் சுதி.

''இல்ல சுதி அவ போகட்டும்'' என்றான் ரவி.

''நோ ப்ராப்ளம். நீங்க பேசிட்டு வாங்க. எனக்கு இப்ப லேபர் வார்டில் டியூட்டி. போகணும்'' என சிரித்தபடி எழுந்து போனாள் ரமா.

''ஏன் ரவி ரமாவை போகச் சொன்ன? உன்னை கட்டிக்கப் போற பெண். அவளை தவிர்த்து விட்டு நீ அடுத்த பெண்ணிடம் அது தோழிதான் என்றாலும் தனிமையில் பேசும்போது அவள் மனம் சங்கடப்படாதா?''

''இதில் சங்கடப்பட என்ன இருக்கிறது சுதி? அவள் என் வருங்கால மனைவி. இறுதிவரை வாழ்வில் கூட வருபவள்.

ஆனால் நீ என் தோழி. சிறுவயதிலிருந்து என்னை அறிந்தவள் என்ற வகையில் நமக்குள் ரகசியங்களே இருக்கக் கூடாதா? அந்த அளவு கூட தெளிவில்லாத பெண்ணுடன் வாழ்நாள் பூரா எப்படி வாழ முடியும்?''

ரவி கொடுத்த விளக்கம் சரியாகவே இருந்தபோதும் அது ஒரு ஆணின் கண்ணோட்டமாய் பட்டது சுதிக்கு. இதே ரமா வேறொரு ஆண் நண்பனுடன் பேசிக் கொண்டிருந்தால் இந்த பெருந்தன்மையுடன் இவன் விலகிப் போவானா என்று தோன்றியது.

சே! ரவியை பற்றி ஏன் இப்படி நினைக்கிறேன். குமாரின் குதர்க்க பேச்சுக்களை கேட்டு கேட்டு, எல்லோரையும் மட்டமாய் எடை போடுமளவு என் புத்தி கூட வக்கரித்து போய் விட்டது போலும்.

''சொல்லு ரவி'' என்றாள் சுதி.

''நீ தான் சொல்லணும் சுதி.''

''நானா, நான் என்ன சொல்ல?''

''உன்னைப் பற்றி, உன் மணவாழ்க்கைப் பற்றி சொல். இப்படி இளைத்து கறுத்து கண்களில் சிரிப்பை தொலைத்த காரணம் என்னவென்று சொல்?''

''என்ன பெரிய காரணம்? பத்துநாள் வைரஸ் காய்ச்சலில் விழுந்தால் நீ மட்டும் புத்துணர்ச்சியுடன் இருப்பாயா என்ன?''

''அப்ப உன் சோர்வின் காரணம் காய்ச்சல் மட்டும்தான். அப்படித்தானே!'' அவள் கண்களை ஊடுருவினான் ரவி.

அவன் பார்வையை தவிர்க்க டேபிள் மீதிருந்த ஜக்கிலிருந்து ஒரு டம்ளர் நீரை சரித்து குடித்தாள் சுதி. பேனாவை மூடி கோட் பாக்கெட்டில் சொருகினாள்.

பேச்சற்ற சில நொடிகளுக்கு பிறகு ''உன் வீட்டிற்கு போயிருந்தேன் சுதி'' என்றான் ரவி.



''அப்பா எப்படியிருக்கார் ரவி? அம்மா என்னைக் கேட்டாங்களா?'' கேட்கும் போதே கண்கள் நிறைந்தன.

''வேற எப்படியிருப்பாங்க? பேச்சு மூச்சு எல்லாமே உன்னை பத்தித்தான். அஞ்சு நிமிஷம் பத்துநிமிஷம் ஆஸ்பத்திரிக்கு வர்ற வழியில எட்டிப்பாத்துட்டு போயிடறியாமே! எதுக்கு டாக்டருக்கு படிக்க வெச்சோம்னு இப்ப ரொம்ப கவலைப்படறாங்க. மகளை ஒருநாள்கூட வெச்சு சீராட்ட முடியல. மருமகனுக்கு விருந்து போடமுடியல. என்னதான் செய்யறாங்க சுதி வீட்டில் இருவரும்? அப்படின்னு கேக்கறாங்க. உனக்கு நிற்க நேரமில்லாத வேலையாம். வெளியூர் கேம்ப் எல்லாம் வேற போறியாம்! அது என்ன எங்களுக்கெல்லாம் இல்லாத கேம்ப். உனக்கு மட்டும்? சொல்லு சுதி?''

''அம்மாவுக்கு பேச ஆள் கிடைச்சா போதும். எதையாவது சொல்லி விடவே மாட்டாங்க. அதுவும் நீ அம்மாவுக்கு ஜால்ரா. சோ உங்க ரெண்டு பேருக்கும் என்னை திட்டறது தவிர வேறு என்ன வேலை? இந்த புத்தகத்தை படிச்சியா ரவி?'' டேபிள் மீதிருந்த புத்தகத்தை எடுத்தாள் சுதி.

அதை பிடுங்கி டேபிள்மீதே போட்டான் ரவி. ''என் பேச்சை திசை திருப்பறியா சுதி? பேச்சை மட்டுமா இல்ல உன் மனசையுமா? நீ வீட்ல இருக்கறவங்க கிட்ட மறைக்கலாம். வேலை பார்க்கும் இடத்தில் நடிக்கலாம். ஆனால் நண்பர்கள் கிட்ட முடியுமா? எனக்கு ஏதாவது பிரச்சனைன்னா உங்கிட்ட தானடி சொல்வேன். அதே உரிமையிலதான் இப்ப உன் விஷயம் பற்றியும் பேசறேன். சோ, என் விஷயத்தில் தலையிடாதேன்னு சொல்ல மாட்டேன்னு நம்பறேன். பாலம்மா ஒருநாள் எதேச்சையா பேசறப்ப எங்கிட்ட நடந்ததை சொல்லி அழுதாங்க. என்னால முதலில் நம்பவே முடியல. ஏன்னா இதுநாள்வரை கவலையின் நிழலை கூட உங்கிட்ட நான் பார்க்கலை. உன் வீட்டுக்கு

வந்த நிகழ்ச்சியை யோசிச்சி பாத்தப்பதான் பாலம்மா சொன்னதின் உண்மை புரிந்தது. குமார் ஒரு சாதாரண மனிதன் இல்லை என்று எனக்கு தெரியும். உனக்கு ஒரு தோழமை அவனிடமிருந்து கிடைக்காது என்று நினைத்தேன் தான். ஆனா அவனுக்குள்ள இவ்வளவு மூர்க்கத்தனம் இருக்குதாங்கிறது அதிர்ச்சியாத்தான் இருக்கிறது.

என்னுடைய ஆச்சரியம் என்னன்னா நீயேன் இப்படி இருக்க? அவனுடைய சாடிஸ பிடிவாதங்களுக்கு அடி பணிந்து போக வேண்டிய நிர்பந்தம் என்ன உனக்கு? சதா சிரிப்பு முகமூடியை போட்டுகிட்டு மத்தவங்களை ஏமாத் தறதா நினைச்சி உன்னை நீயே ஏமாத்திக்கற. ரொம்ப நாள் இது முடியாது சுதி. உணர்ச்சிகளின் அழுத்தத்தில் நாளடை வில் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு நீயே ஒரு நோயாளியாக மாறப் போகிறாய். குமாரின் கோபத்தை விட உன்னுடைய இந்த அமைதிதான் எனக்கு பயமாக இருக்கிறது?

"போடா முட்டாள்" கலகலவென சிரித்தாள் சுதி. "நீ ஏன் எதையோ நினைச்சி கவலைப்பட்டுட்டு இருக்க? மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரி இருந்தால் வாழ்க்கையும் ஒரே மாதிரி அமையும். மனிதர்கள் பல விதம். அதனால் வாழும் முறையும் பலவிதமானது. நான் எப்பவுமே பிரச்சனைகளுக்கு உள்ளே மூழ்கிப் போகாமல் விலகி நின்று பார்த்தே பழகி விட்டேன். எனவே என் வாழ்க்கையிலும் வெறும் பார்வை யாளராகவே நிற்கிறேன். மனிதனுக்கு தேவையான மிக சிறந்த குணம் எது தெரியுமா ரவி? உறுதிதான். மிக மோசமான உணர்ச்சி எது தெரியுமா? பகை.

மிக சிறந்த உறுதியை மிக மோசமான பகைமைக்காக பயன்படுத்தலாமா? என் மேல் உள்ள கோபத்தால் பகை கொண்டு அவன் அமைதியிழந்து தவிக்கிறான். அவன் மீதுள்ள இரக்கத்தால் நான் நிர்மலமாய் இருக்கிறேன்."



செல்போன் விடாது ஒலிக்கவே, கண்கள் பனித்ததை சுதி பார்க்கா வண்ணம் திரும்பி நின்று பேசத் தொடங்கினான் ரவி.

# 19

குமாரின் மாமா ஊரிலிருந்து வந்திருந்தார். திருமணமாகி இவ்வளவு நாளில் புகுந்த வீட்டிலிருந்து வந்திருக்கும் முதல் நபர். குமார் வீட்டிலிருந்து இதுவரை யாருமே வந்ததில்லை. சுதி அடிக்கடி மாமனார் மாமியாருக்கு போன் செய்து கூப்பிட்டுக் கொண்டே இருப்பாள். மாமனார் நேரம் கிடைக் கும் போது வருகிறேன் என்பார். மாமியார் மாமா வரும்போது கூட வருகிறேன் என்பாள். அத்துடன் இருவருமே அதை மறந்துவிடுவார்கள். குமாரின் குணத்திற்கு இவர்களின் விட்டேற்றியான போக்கும் காரணம் என்ற எரிச்சலில் சுதியும் கொஞ்ச நாட்களாக போன் பேசுவதை குறைத்து கொண்டு விட்டிருந்தாள்.

குமாரின் மாமா அவர்கள் குடும்பத்திலேயே இல்லாத விதமாக கலகலப்பாக இருந்தார். யாரையும் எதையும் விமர் சிக்காமல் எல்லாம் எனக்கு பழக்கம்தான் என்பது போல் நடந்து கொண்டார். அவரது தொழிற்சாலை பற்றிய பைல் ஒன்று தலைமை செயலகத்தில் கையெழுத்தாகாமல் நின் றது. அதற்காக வந்தவர் யாரையோ பார்ப்பதும் வருவதுமாய் இருந்தார்.

அன்று சுதிக்கு ஓய்வுநாளாக இருக்கவே அவசரமாக ஓட வேண்டி இல்லாமல் நிதானமாய் எழுந்து அமைதியாய் வேலைகளை செய்து கொண்டிருந்தாள். குமாரும் அவரும் டைனிங் டேபிளில் சாப்பிடவந்து அமர்ந்ததும் சுதி பரி மாறினாள். மெத்தென்ற சூடான இட்லியை, சட்னி தக்காளி சாம்பாருடன் குழைத்து சாப்பிட்டவரால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

"உண்மையிலேயே குமார் கொடுத்து வெச்சவன்தாம்மா. வேலைக்கு போகிற பெண்கள் நேரத்துக்கு சமைக்க முடியாம, வீட்டை பராமரிக்க முடியாம திண்டாடுவதை நானே பார்த்திருக்கிறேன். என் மருமக கூட வேலைக்கு போகிற பெண்தான். என் மகன் கூடவே உதவி செய்தாலும் கூட சோபாவில் இறைந்து கிடக்கும் துணிகளும், சிங்கில் எச்சில் பாத்திரங்களும், டேபிளில் பாதி சாப்பிட்டு காய்ந்து போன தட்டுமாய் கிடக்கும். ஒருநாள் வேலைக்காரி வரலேன்னா வீடே நாறிடும். இப்படி ருசியான உணவு, நறுவிசான வீடு, விசுவிசுன்னு காத்து, எப்பவும் சிரித்த முகத்துடன் மனைவி, யாருக்கு கிடைக்கும் இப்படியெல்லாம்?"

கைகழுவ எழுந்த குமார் சொன்னான். "இரண்டு இட்லி அதிகமா வெச்சதுக்கு இப்படி புகழ்றீங்களே அவளை, வாய்க்கு ருசியான சாப்பாடும் தங்க நல்ல இடமும் கிடைச்சவன் எல்லாம் குடுத்து வெச்சவன்னா, ஸ்டார் ஹோட்டல்ல தங்கறவங்கதான் கொடுத்துவச்சவங்க."

"என்ன குமார் இப்படி சொல்ற? வீட்டுக்கும் ஹோட்டலுக்கும் வித்தியாசம் இல்லையாப்பா?"

"ஒரே வித்தியாசம் மாமா. ஹோட்டலில் சாப்பிட்டவுடன் பணம் கொடுக்கணும். வீட்டில் ஒண்ணாம் தேதி கொடுத்தால் போதும்."

மேற்கொண்டு பேசாமல் குமார் மேலே சென்றுவிட சுதி சமையலறையை ஒழுங்குபடுத்துவதில் முனைந்தாள்.

இரவு வேலைகளை முடித்துவிட்டு கதவை தாளிட்டு விட்டு சுதி உள்ளே வந்தபோது குமார் வழக்கம் போல் பால்கனியில் சிகரெட்டு பிடித்தபடி உட்கார்ந்திருந்தான். நைட்டிக்கு மாறி வந்தவளை "இங்க வா" என்றான்.

அருகே சென்று அமர்ந்தவளிடம் "எங்க மாமாகிட்ட என்ன பேசின? என்னைப் பத்தி என்னவெல்லாம் சொன்ன?" என்றான்.



"நான் அவர்கிட்ட எதுவுமே பேசலியே குமார். அவர் ஏதோ வேலையா வெளியே போயிடறார். நானும் போயிடறேன். வீட்டிலிருப்பது நீதான். உனக்கு தெரியாம நான் என்ன பேசப் போகிறேன்?"

"நீ எதுவும் பேசாமயா அந்த ஆள் உன்னை பற்றி புகழ்ந்து தள்ளுகிறான்?"

"என்னவோ அவர் அபிப்ராயத்தை சொன்னார். வீட்டிற்கு வந்தவர்களை வருந்தி உபசரிப்பது வீட்டினரின் கடமை என்றால் உப்பில்லாத மோசமான சமையல் என்றாலும்கூட விருந்தளித்தவர்களுக்கு நன்றி செலுத்துவது விருந்தாளியின் கடமை அல்லவா? அந்த மாதிரி எண்ணத்தில் அவர் ஏதாவது சொல்லியிருக்கக் கூடும்."

"நீ அவரை வீட்டுக்கு வெளியே நிச்சயமாக சந்தித்திருக்கிறாய். என்னைப் பற்றி குறை சொல்லி புலம்பியிருக்கிறாய். பெண்கள் வருத்தப்பட்டால். அதுவும் அடுத்தவன் பொண்டாட்டி வருந்தினால் நம்ம ஊர் ஆண்களுக்கு மனசு தாங்காதே! மூன்றாவது மனிதனிடம் போய் வீட்டு விஷயங்களை பேசுவதற்கும் அவனை தனியாய் சந்திப்பதற்கும் உனக்கு வெட்கமாக இல்லை? சீ.." உறுமினான் குமார்.

"குமார் உண்மையை சொல்லட்டுமா? அவரிடம் நான் எதுவுமே பேசலைன்னு உனக்கு நல்லாவே தெரியும். அவர் என்னை பாராட்டுவதோ, நான் அவருக்கு பரிமாறுவதோ உனக்கு பிடிக்கவில்லை. இதற்கு காரணம் நீ என்மீது வைத்த அளவு கடந்த அன்பாக இருக்கலாம். அல்லது எல்லை மீறிய வெறுப்பாக இருக்கலாம். எதுவென்று நீதான் சொல்ல வேண்டும். வார்த்தைகளால் புரியவைக்கும் அன்பிலோ, காதலிலோ ஒரு காலத்தில் எனக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்தது. ஆனால் செய்கையாலோ, பார்வையாலோ கூட எதையும் வெளிப்படுத்தாத உன் உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அன்புதான் அனைத்திற்கும்

காரணம் என்றால் அந்த அன்பை விசாலப்படுத்திக் கொள். அனைவரையும் நேசி. வெறுப்புதான் காரணம் என்றால் சொல்? என்மீது என்ன வெறுப்பு உனக்கு?''

பதில் பேசாது முறைத்துவிட்டு மறுபடி ஒரு சிகரெட்டை பற்ற வைத்தான் குமார். தொடங்கிய விஷயத்தை விட விருப்பமில்லை சுதிக்கு. எப்படியாவது அவனுக்கு தன்னை புரிய வைத்துவிடும் துடிப்பில் அவன் முகவாயை கைகளில் ஏந்தினாள்.

''என் மேல் என்ன கோபம் உனக்கு? எதில் அதிருப்தி யடைந்திருக்கிறாய் நீ? என்னை பொறுத்தவரை எல்லா விஷ யத்திலும் உனக்கு பிடித்ததாக உன்னை சந்தோஷப்படுத்தக் கூடியதாக பார்த்து பார்த்துதான் செய்கிறேன். எனக்கென்று எந்த எதிர்பார்ப்பும் வைத்துக் கொள்வதில்லை. அதன்படி நட என்று உன்னை வற்புறுத்துவதில்லை. நீ ஏதாவது வரைமுறை வைத்திருக்கிறாயா? என் மனைவி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று. அதையாவது சொல்லு குமார். நமக்கு திருமணமாகி சில மாதங்கள்தான் ஆகின்றது. இன்னும் எத்தனையோ வருடங்கள் சேர்ந்து இருக்க வேண்டியவர்கள் நாம். இனிமேல்தான் நமக்கென்று ஒரு குழந்தை அதை சுற்றி ஒரு உலகம் உருவாக வேண்டும். நாம் ஒத்த மனதுடன் இருந்தால்தான் அதை நல்ல முறையில் வளர்க்க முடியும். பெற்றோரின் மாறுபட்ட குணங்களை பார்க்கும் பிள்ளை அதிர்ந்து போகும். அந்த மௌன அதிர்ச்சியில் அவன் உறைந்து போகலாம். அல்லது உலகத்தையே வெறுப்பவ னாக மாறலாம்.

சொல்லு குமார்? நம் இருவருக்கும் எதில் குறை? படிப்பா? பணமா? அழகா? ஆரோக்யமா? எதில் குறைந்து போனோம்? எய்ட்ஸ் நோயாளிகள், கான்ஸர் நோயாளிகளும் கூட சந்தோஷமான வாழ்வை வாழ முற்படும் போது நம்மால் ஏன் ஆரோக்யமான உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியாது?



கணவனோ, மனைவியோ ஒருவரின் ஜெராக்ஸ் காப்பியாக மற்றவர் வாழ முடியாதுதான். வேறுபாடுகளும் முரண்பாடு களும் இருக்கத்தான் செய்யும். முடிந்தவரை அனுசரித்து போகத்தானே இருவரும் முயற்சி செய்ய வேண்டும். எங்கிட்டயும் குறைகள் இருக்கலாம். ஒருவேளை நான் அதை உணராம கூட இருக்கலாம். உனக்கு வித்தியாசமாக பட்டால் சொல்லு திருத்திக் கொள்கிறேன்.''

பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டை சுண்டி எறிந்தான் குமார். அது தெறித்து சுதியின் நைட்டியில் பட்டு கீழே விழுந்தது. பட்ட இடத்தில் சூடுபட்டு உடை பொத்தலானது. காலில் வட்டமாய் சிவந்து எரிச்சல் கொடுத்தது. அதில் கவனம் செலுத்தாத குமார் எழுந்து நின்று கைகளை மடக்கி உதறினான்.

''உங்கிட்ட எது பிடிக்கலைன்னு கேட்டயில்ல? சொன்ன வுடன் மாத்திடுவாயா?''

''நிச்சயமா சொல்லு குமார்.''

''உன்னுடைய ப்ரண்ட்ஸ் யாரையுமே எனக்கு பிடிக்கல. அது ஆணோ, பெண்ணோ யாராயிருந்தாலும் சரிதான். உன் பெயரை சொல்லிட்டு நோயாளின்னும், ஆஸ்பத்திரி ஸ்டாப் னும் போன் பேசறது, ஏன் உனக்குன்னு ஒரு போன் கால் வர்றதே பிடிக்கல. உங்க வீட்டோட தொடர்பே இருக்க கூடாதுன்னு சொல்லியிருந்தேன். இப்பவும் எனக்கு தெரி யாம நீ உங்க வீட்டுக்கு போயிட்டு இருக்கேன்னு நினைக் கறேன். அது எனக்கு சுத்தமா பிடிக்கல. உனக்குன்னு வர்ற கடிதங்கள், நீ ஏதோ பெரிசா கண்டுபிடிச்சி இந்தியாவை காப்பாத்த போறவ மாதிரி படிக்கிற புத்தகங்கள், எதிர்ல இருக்கறவங்களை கவர்றதுக்காக எப்பவும் சிரிக்கிற சிரிப்பு இவை எதுமே பிடிக்கல. அத்தோட உன்னோடயே பிறந்த திமிர், அகங்காரம் எதுவும் பிடிக்கல.''

குறுக்கிடாமல் அவன் சொல்வதை கேட்டுக் கொண் டிருந்த சுதி.

"ஓ.கே. எங்கிட்ட என்னென்ன பிடிக்கலைன்னு சொன்ன சரி. என்ன விஷயம் பிடிச்சிதுன்னு சொல்லு குமார்."

குமார் பதில் பேசாது இருக்கவே. "சொல்லு குமார், மனு ஷன் முழுக்க நல்லவனுமில்லை. முழுக்கக் கெட்டவனும் இல்லை என்பார்கள். எங்கிட்ட இருக்கிற ஏதாவது ஒரு நல்ல குணம் உனக்கு பிடிச்சிருக்கான்னு சொல்லு குமார்."

உள்ளே போகத் திரும்பிய குமாரின் கைகளை பற்றினாள் சுதி.

"ஏனோ தெரியல குமார். மத்தவங்க எங்கிட்ட பிடிச் சிருக்குன்னு பாராட்டற விஷயங்கள் எல்லாமே உனக்கு வெறுப்பா இருக்கு. என் நண்பர்கள் பத்தி சொன்னயில்ல? நானா எனக்கு நண்பர்கள் வேணும்னு தேடிப் போய் யார் கிட்டயும் பழகல. உனக்கு தெரியாததில்லை. இரு பாலாரும் சேர்ந்து படிக்கும் கல்லூரியில் பணிபுரியும் இடங்களில் ஒருவருக்கொருவர் பழகுவது இயல்பான விஷயம். சில சமயம் தவிர்க்க முடியாததும் கூட. மாலதி என் எதிர்வீட்டில் இருந்த சிறுவயது தோழி. மற்றபடி தொழிலுக்கு வெளியே நான் யாருடனும் நட்பு பாராட்டியதில்லை. எமர்ஜென்ஸி கேஸ் வந்தாலோ, நோயாளிகள் பற்றிய விபரங்கள் வேண்டு மென்றாலோ. மருத்துவ உதவி வேண்டியோ மருத்துவ மனையிலிருந்து போன் வரும். சில சமயம் உடனே வர சொல்வது உண்டு. ஒரு வேளை அப்படி பேசியவர்கள் ஆண் டாக்டர்களாக கூட இருக்கலாம். அதற்காக அந்த வேலையை நான் தவிர்க்க முடியுமா சொல்? எனக்கு கதை புத்தகங்கள் படிக்க நேரமேயில்லை. மருத்துவ புத்தகங்கள் மட்டும்தான் படிப்பேன். என் தன்னம்பிக்கை உனக்கு திமிராகப் படுகிறது. பிரச்சனைகளை தவிர்க்க நான் ஒதுங்கி போகும் பெருந் தன்மை உனக்கு அகங்காரமாக தெரிகிறது. ஒரு சின்ன



சிரிப்பால உலகத்தையே ஜெயிக்க முடியும் என்ற கொள்கை உனக்கு கீழ்தரமாக தெரிகிறது. எது எப்படியிருந்தாலும் இதையெல்லாம் நான் மாற்றிக் கொள்ள முயற்சிக்கிறேன். ஆனால் இன்னொரு விஷயம் சொன்னாயே, எங்க வீட்டிற்கு போகக் கூடாது என்று. அது நியாயமா என்று நீயே யோசித் துப்பார். ஒரு கணவனுக்குள்ள எல்லா உரிமைகளையும் உன் மனைவியிடமிருந்து பெற உனக்கு அதிகாரம் உண்டு. ஆனால் ஒரு பெண்ணை அவள் பெற்றோரிடமிருந்து பிரிக்க உனக்கென்ன உரிமையிருக்கிறது? அவர்களுக்கு தண் டனை கொடுக்க நீ யார்? இத்தனை வருடம் உயிராய் வளர்த் தவர்களை கல்யாணம் என்ற கயிற்றால் இழுத்து கட்டி தனிமைபடுத்தி விட முடியுமா?

பொதுவாக நம் இந்திய திருமணங்கள் இரு குடும்பங் களையும் இணைப்பது அல்லவா? அதற்காகத்தானே பெரியவர்கள் பார்த்து முடிக்கும் திருமணங்களில் குடும்பம், குலம், கோத்திரம், பழக்கவழக்கம் என தங்களுக்கு ஒத்துப் போகக் கூடியதாக தேடுகிறார்கள். பிரித்து துண்டு போடுவது தான் திருமணம் என்றால் எந்த பெண்ணுமே திருமணம் செய்து கொள்ள மாட்டாள். இந்த உறவு சங்கிலி நாம் ஒரு தாய் தந்தைக்கு குழந்தையாக பிறக்கும்போது தொடங்கி, நாம் பெற்றோராகி, தாத்தா பாட்டியாகி இறக்கும் வரை தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். இது உலக இயல்பு. நான் என்ன இந்த உலகில் பிறந்த முதல் குழந்தையா, தாய் தந்தை இன்றி பிறக்க? அல்லது தூக்கி எறியப்பட்டேனா? அநாதை விடுதியிலிருந்து பிறப்பு அறியாமல் என்னை அழைத்து வந்தாயா? எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த நாம் இருவரும் திருமணம் எனும் பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு உயிராய் வாழ்கிறபோது, என்னை பெற்றவர் களிடம் எனக்கு இருக்கும் பிரியம் நியாயமானதில்லையா? யோசி குமார். உன்னை அவங்க மகனாத்தான் நினைக்

கறாங்க. உன்னை நல்லா கவனிச்சிக்கணும், விருந்து உபச்சாரம் செய்யணும்னு எவ்வளவு ஆசைப்படறாங்க தெரியுமா?''

''என்னடி சும்மா பேசிட்டே போற? நீ சொல்றதுக்கு எல்லாம் தலையாட்ட நானும் உன் இளிச்சவாய் நோயாளிகள்ல ஒருத்தன்னு நினைச்சியா? என் எதிர்க்க உட்காந்து இவ்வளவு பேசற தைரியம் உனக்கு எப்படி வந்தது? இதுவரை நீ இப்படி பேசினதில்லையே! இப்ப எங்க மாமா சொன்னானா? அவன் போயிட்டா உனக்கு யார் அடுத்து சிபாரிசுக்கு வருவா? பாவம் சொந்தக்காரனாச்சேன்னு உள்ள விட்டால் எம் பொண்டாட்டி மேலயே கையை வைக்கிறானா அவன்?'' அறைக்கதவை திறந்து கொண்டு வேகமாய் படிகளில் இறங்கினான் குமார்.

பின்னால் வந்த சுதி, ''குமார் ப்ளீஸ் உனக்கு பிடிக்கலேன்னா இனிமே நான் பேச மாட்டேன். அவருக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? இப்ப மணி இரவு ஒன்று. இந்த நேரத்தில் தூங்குகிறவரை எழுப்பினால் அவர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார். வேண்டாம் குமார்.'' அவன் கைகளை பற்றினாள்.

''அவர் என்னோட உறவினர். என்னவோ பேசுவேன், திட்டுவேன். விரட்டுவேன். என்னவேணா செய்வேன். உனக்கேன் பதறுது? ஏன் பின்னாடியே ஓடி வர்ற? உண்மையை சொல்லு என்ன நடந்தது உங்களுக்குள்? எதை மறைக்க இப்படி தவிக்கிறாய்? சொல்லு?'' மின்னிய அவன் கண்களை பார்க்க முடியாமல் சுதி பின்வாங்கி படிகளிலேயே நின்றுவிட்டாள். குமார் தயங்காமல் போய் மாமா படுத்திருந்த அறையின் கதவைத் தட்டினான்.

தூக்கத்தில் கண்ணை தேய்த்தபடி எழுந்து வந்தவர் ''என்னப்பா இந்த நேரத்தில்? யாருக்காவது உடம்பு சரியில்லையா?'' என பதறினார்.



''நாளைக்கு நான் வேலை விஷயமா வெளியூர் போகிறேன். சுதி அவங்கம்மா வீட்டிற்கு போகிறாளாம். அதனால் நீங்க காலையில் நேரமாய் ஊருக்கு கிளம்புங்க.'' என சொல்லிவிட்டு அவர் அதிர்ச்சியில் நிற்பதை கவனிக்காது மேலே போய் ஏ.சி.யை ஆன் பண்ணி தூங்கத் தொடங்கினான். சுதியின் புகுந்த வீட்டிலிருந்து கல்யாணத்துக்கு பிறகு வந்த ஒரே உறவும் அத்துடன் முடிந்து போனது.

## 20

பிரகாசம் மருத்துவமனையில் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. புதிது புதிதாக மருந்துகள் கண்டுபிடிக்கப்பட, நோய்களும் புதிதாக வரத் தொடங்கிவிட்டன. தினமும் ஒரு நோய் பற்றி அறிந்து கொள்ளுவதும், அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளுவதுமாய் புதிதாக தினம் கற்றுக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. அதனால் தான் டாக்டர் தொழிலை ப்ராக்டீஸ் என்கிறோம் போலும்.

அன்று ஏனோ டாக்டர் காந்திமதி வருவதற்கு மிக தாமதமாகிவிட்டிருந்தது. எனவே காந்திமதியின் நோயாளிகளையும் சேர்த்து சுதி பார்க்க வேண்டி இருந்தது. காந்திமதி மருத்துவத்துறையில் முப்பத்தி ஐந்து வருட அனுபவம் வாய்ந்தவர். சரியான நேரத்துக்கு வந்துவிடக் கூடியவர். கைராசியான டாக்டர் என்று பெயர் பெற்றவர். தலைவரான டாக்டர் சுகுமாரே மரியாதையுடன் நடத்துபவர். திறமையான சீனியர் டாக்டர் என்று மற்ற டாக்டர்கள் பார்க்கும்போது வணங்கினாலும் அவளது சிடுசிடுப்பான சுபாவத்தால் கொஞ்சம் ஒதுங்கியே இருப்பார்கள். யாரையும் அனுசரித்துப் போகும் குணத்தால் சுதி மட்டும் நட்பு பாராட்டுவாள். இத்தனை வருடங்களில் காலதாமதமோ, தேவையற்ற விடுமுறையோ, வம்பு பேச்சோ இன்றி 'ஒரு டாக்டர் எப்படியிருக்கணும்னு காந்திமதி மேடத்தை பாத்து கத்துக்கங்க' என இளம் டாக்டர்களுக்கு முன்னுதாரணமாய் சுட்டிக் காட்டபடுபவர். அப்படிப்பட்டவர் இன்று இன்னும் வந்திருக்க

வில்லை. காந்திமதியின் அசிஸ்டெண்ட் ரமாவை அழைத்து சுதி கேட்டாள்.

"மேடத்துக்கு என்னாச்சு ரமா? போனில் தகவல் ஏதும் சொன்னாங்களா?"

"எந்த தகவலும் இல்ல சுதி. செல்போன் அவுட் ஆப் ஆர்டரில் இருக்கு. மேடம் சார்ஜ் போட மறந்துபோய் விடுவார்கள் அடிக்கடி" என்றாள் ரமா.

ஒவ்வொரு பிரிவிலும் நோயாளிகள் வரிசை வெகுநேரமாய் நகராமல் நீண்டிருந்தது. காத்திருக்க முடியாமல் நோயின் அவஸ்தையில் நோயாளிகள் சச்சரவில் ஈடுபட்டனர். உதவிக்கு வெளியிலிருந்து யாராவது டாக்டரை கூப்பிட்டுக் கொள்ளலாமா என சீனியரை கேட்கலாம் என சுதி முடிவெடுத்த போதுதான் காந்திமதி பரபரப்புடன் உள்ளே நுழைந்தார். தங்களது ஷிப்டு முடிந்து கிளம்பிய மருத்துவர்கள், கூட்டத்தின் பொருட்டு அதிகப்படி வேலை செய்ய முன்வர சற்றுநேரத்தில் நிலமை சீரடைந்தது.

கிட்டத்தட்ட மாலைவரை அனைவருக்கும் மூச்சுவிட நேரமின்றி இருந்தது. காந்திமதி நர்ஸ்களிடம் எரிந்து விழுந்தபடி இருந்தார். ஜூனியர் டாக்டர்களிடம சிடுசிடுத்தார். அந்த சிடுசிடுப்பின் காரணமே கடமை உணர்வுதான் என்பது பழகியவர்களுக்கு மட்டுமே தெரியும். பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்ற துடிப்புதான் குறுக்கே வருபவர்கள் மீது கோபமாக மாறிவிடுகிறது. பிற்பகலுக்கு மேல் சாப்பிட உட்கார்ந்தபோது சுதி கேட்டாள்.

"இன்னிக்கு காலைல நீங்க வர நேரமாயிடிச்சு போலிருக்கே மேடம்? நான் இந்த மருத்துவமனைக்கு வந்ததிலிருந்து நீங்க வர தாமதமாகியதே இல்லை."

"என்ன செய்யறது சுதி? விதி விலக்குகள் எல்லோருக்கும் இருக்கத்தானே செய்கிறது!" அலுப்புடன் கூறினார்



காந்திமதி. இரண்டு வாய் சாதத்தை எங்கோ கவனமாக மென்றவர் மறுபடி பேசினார்.

"நான் ரொம்ப ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்தவள் சுதி. எங்கம்மா இருட்டு பிரியும் முன்பே எழுந்து குளித்து எட்டு முழ புடவை உடுத்தி சமையல் கட்டே கதி என்று கிடப்பாள். ஆண்கள் வெளிவராந்தாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டோ, சீட்டாடிக் கொண்டோ இருப்பார்கள். அப்பா நாலு காபி, இரண்டு சாப்பாடு என வெளியிலிருந்து குரல் கொடுப்பார். அம்மா இருட்டறையில் ஈரவிறகுடன் போராடி, காய்கறியுடன் சேர்ந்து அவளும் வெந்து போவாள். அப்பா தினமும் என்ன வேலை செய்கிறார்? எவ்வளவு வருமானம், குடும்பத்திற்கு மாத செலவு எவ்வளவாகிறது என்பது கூட தெரியாது அவளுக்கு. கணவன் எவ்வளவு குறைவாக கொடுத்தாலும் அதில் நிறைவாக குடும்பம் நடத்துகிற வித்தையை அவளுக்கு சின்ன வயதிலிருந்தே அவள் வீட்டில் கற்பித்திருந்தார்கள். வீட்டை விட்டு தனியே அவள் கால் வைத்ததே இல்லை. அவள் பாட்டி திருமணத்தின் போது சொல்லியனுப்பினாளாம். "புகுந்த வீட்டிலிருந்து பிறந்தகம் வந்தால் கணவனோடுதான் வர வேண்டும். தனியாக வர நேர்ந்தால் வரும் வழியில் ஆத்திலோ குளத்திலோ இறங்கி விடு" என்று. அந்த வார்த்தையை அம்மா வேதவாக்காக கடைசிவரை கடைபிடித்தாள். பெண் என்பதால் என்னையும் முதலில் உள்ளே தான் அடைத்து வைத்தார்கள். தெருவில் என் தம்பி சைக்கிள் விடும்போதும், அவன் நண்பர்களுடன் பந்து விளையாடும் போதும் எனக்கு விளையாட ஆசையாக இருக்கும். வளர்ந்ததும் எனக்கும் விறகு புகை படிந்த அந்த இருட்டு சமையலறை தான் கதியோ என்று பயந்தேன். அந்த சிறையிலிருந்து எப்படியாவது வெளிவர முயற்சித்தேன். படிப்பு ஒன்றுதான் இந்த சிறையின் கதவை உடைக்கும் கோடாலி என்று மனதில் அழுத்தமாக பதிந்து போனது. அந்த

வெறியுடனே படித்தேன். மருத்துவபடிப்பில் தங்கபதக்கம் வாங்கிய போது கட்டுகளை அறுத்துக் கொண்டுவிட்ட சந்தோஷத்தில் கூத்தாடினேன். இதோ இன்று வெளியே நின்று யோசிக்கிறேன்.

எதிலிருந்து விடுபட்டோம்? எதை சாதித்தோம்? எங்கே போகிறோம்?

முன்பு சாஸ்திரங்களால் கட்டு போடப்பட்டிருந்த கைகள் இன்று சம்பள சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றன. அலுவலகத்தில் தொலைபேசி அடிக்கும் போதெல்லாம் வீட்டில் ஆயாவிடம் விட்டுவிட்டு வந்த குழந்தையின் அழுகுரல் சத்தம்தான் கேட்கிறது. பேருந்து நிலையம் கார்கில் போர்கள் நடக்கும் யுத்த அரங்கமாய் இருக்கிறது. அதில் சண்டையிட்டு, போராடி, களைத்து வெளியே வந்து விழும்போது வைரமுத்து சொன்ன மாதிரி உலகமே ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாய் தெரிகிறது. இந்த பெண்கள் எல்லாம் தப்பு பண்ணிட்டோம் சுதி. ஆண்களுக்கு சமமா வேலைக்குப் போகத் தொடங்கினோமே, ஆண்களை போல முடிவெடுக்க முடிகிறதா நம்மால்? எங்கம்மா கால பெண்களுக்காவது வீட்டுப் பொறுப்பு மட்டும்தான் இருந்தது. இப்போ நம்முடைய சுதந்திரத்திற்காக வேலை பார்க்கத் தொடங்கி வீட்டுடன், அலுவலகத்தையும் சேர்த்து பொதிக்கு மேல் பொதியாக சுமக்க வேண்டியதிருக்கிறது. கைகளை கட்டியிருக்கும் கயிற்றிலிருந்து விடுபட செய்த முயற்சியில் கால்களையும் சேர்த்து கட்டிக் கொண்டோம் என்றிருக்கிறது.

''மேடம் இன்னிக்கு நீங்க ரொம்ப சோர்வா இருக்கற மாதிரி தெரியுது. ஜூஸ் ஏதாவது சாப்பிடுங்க'' என்ற சுதி, வார்டுபாயை அழைத்து ஒரு ஆரஞ்சுஜூஸ் கொண்டுவர சொன்னாள்.

பாதி சாப்பாட்டுடன் டிபன் பாக்ஸை மூடி வைத்தாள் காந்திமதி.



''இன்னிக்கு காலைல நான் சாப்பிடவேயில்ல சுதி. பெரியவன் அவனுடைய பரிட்சைக்கு தயாராகி கொண்டிருக்கிறான். வெளி உலகையே மறந்து படிப்பதும் எழுதுவதுமாய் இருக்கிறான். அம்மா நாளைக்கு எனக்கு எக்ஸாம். இன்னிக்கு எல்லாம் எதையாவது சமைச்சி கொடுங்கறான். சின்னவனுக்கு டைபாயிடு காய்ச்சல். 'அம்மா என்பக்கத்திலேயே இரு'ங்கறான். வேலைக்காரி வேற வரல. வீடு பூரா பேப்பரும் துணியுமா இறைஞ்சி கிடக்கு. என் கணவருக்கு நியூஸ் பேப்பர் படிப்பதையும் டி.வி. பார்ப்பதையும் தவிர எதன் மீதும் அக்கறையில்லை. வீட்டு செலவை மனைவியுடன் பகிர்ந்து கொள்ளும் கணவர்களில் எத்தனை பேர் வீட்டு பொறுப்பை பகிர்ந்து கொள்ள முன் வருகிறார்கள் என்று நினைக்கிறாய்? வருவதற்கு காலதமாதமானால் டாக்டரை திட்டும் நோயாளிகளில் எத்தனை பேர் மருத்துவரும் ஒரு மனிதன்தான் அவர்களுக்கும் பிரச்சனை உண்டு என்று நினைத்துப் பார்க்கிறார்கள்?''

சாதாரணமாக அதிகம் பேசாத காந்திமதி அன்று பேசுகிற மூடில் இருந்திருப்பார் போலும். கொண்டு வந்த ஆரஞ்சு ஜூஸை சுதியுடன் பகிர்ந்து கொண்டதும் சற்று அமைதியானார். ஐந்து நிமிட ஓய்வுக்கு பிறகு, ''மேடம் இன்னிக்கு வேணா நீங்க சீக்கிரம் கிளம்புங்களேன். நான் பாத்துக்கறேன்'' என்றாள் சுதி.

''எதுக்கு சீக்கிரம் கிளம்பணும்? இங்கு என்ன பொழுது போக்கவா வந்திருக்கோம்? ஆமா, இப்ப உனக்கு ஆறாம் நெம்பர் வார்டில்தானே வேலை? இன்னும் இங்கே என்ன செய்கிறாய்? இப்பயிருக்கிற யங்ஸ்ட்ரர்சுக்கு எல்லாம் கொஞ்சம் கூட பொறுப்பே இல்ல'' என சீனியர் டாக்டராய் அதட்டினாள். காந்திமதி சுதாரித்துக் கொண்டாள் என்ற திருப்தியுடன் ''ஸாரி மேடம். இதோ போகிறேன்'' என்று கிளம்பினாள்.

ஆறாவது வார்டில் செல்லம்மா பினைல் கலந்த நீரால் தரையை துடைத்துக் கொண்டிருந்தாள். சுதியின் சிபாரிசின் பேரில் அவள் இப்போது பிரகாசம் மருத்துவமனையில்தான் வேலை பார்க்கிறாள். சுதியை பார்த்ததும் பணிவுடன் ஒதுங்கி நின்றாள்.

''உன் மகன் நல்லா படிக்கிறானா செல்லம்மா?'' விசாரித்தாள் சுதி.

''நல்லா படிக்கறாம்மா. பஸ்ட் மார்க் வாங்கி ப்ரைஸ் எல்லாம் வாங்கிட்டு வந்துருக்கான். சாயங்காலம் வந்ததும் என்னை உட்கார சொல்லி இங்கிலீசுல பாட்டுப்பாடி காட்டறான். எனக்கு ஏ.பி.சி.டி எழுத சொல்லி தரான். கதையெல்லாம் சொல்றான்,'' என்றாள் பூரிப்புடன்.

''வெரி குட். அப்படின்னா நீ இங்கிலீஷ் படிக்க ஆரம்பிச்சேன்னு சொல்லு. இனி நாங்க எல்லாம் உங்கிட்ட தமிழ்ல பேச முடியாது இல்ல?''

''போங்கம்மா. என்னைய கேலி பண்ணிகிட்டு?'' நாணி கோணினாள் செல்லம்மா.

சிரித்தபடி சுதி நகர்ந்ததும், அருகில் நின்று இவர்களையே பார்த்துக் கொண்டிருந்த வார்டுபாய் ''பரவாயில்லையே. செல்லம்மா. வந்த கொஞ்ச நாள்லயே டாக்டரை காக்கா பிடிச்சிகிட்ட. பெரிய ஆள்தான் போ'' என்றான்.

''எடுபட்ட பயலே, என் குடும்பத்த விளங்க வெச்ச தெய்வம் அந்த அம்மா. சாகக் கிடந்த என் பையனை காப்பாத்தி, அவனுக்கு துணிமணி, புத்தகங்கள் வாங்கி கொடுத்து ஸ்கூல் பீசையும் சத்தமில்லாம கட்டிட்டு வர்றாங்க. அடுத்தவங்க வாயை பாக்காம, போய் வேலையைப்பாரு'' என்ற செல்லம்மா துடைக்கும் குச்சியை திருப்பி பிடித்ததும் வார்டுக்குள் சென்று மறைந்தான் அவன்.

சுதி வேலை முடிந்து மாலையில் வீட்டுக்கு கிளம்புகையில் கார்பார்க்கிங்கில் ரவியையும் ரமாவையும் பார்த்



தாள். இருவருக்கும் இரவு பணி போலும். கலகலவென எதையோ பேசி சிரித்தபடி பைக்கிலிருந்து இறங்கியவர்களை பார்த்ததும் தன்னையறியாமல் புன்னகை பூத்தது.

''அப்படி சிரிக்கும் படியாய் என்ன விஷயம்? சொன்னால் நானும் சிரிக்கிறேன்'' என்றாள் எதிரில் போய் நின்று.

''காதலர்களுக்குள் எவ்வளவோ இருக்கும். அதையெல்லாம் கேட்கலாமா?'' என்றான் ரவி.

''எவ்வளவோ இருப்பவர்கள் தனியாய் உட்கார்ந்து பேசவேண்டும். சிரிக்க வேண்டும். இப்படி எல்லார் முன்னாலும் சிரித்தால் கேட்கத்தான் கேட்போம்.''

''நாங்க தனியாத்தான் வந்தோம். உன்னை யார் குறுக்கே வரச் சொன்னது நந்தி மாதிரி.''

''நான் நந்தின்னா அப்ப நீ என்ன பன்னியாடா?''

''யார் பன்னின்னு கண்ணாடியை பார்த்தாலே தெரிஞ்சுடுமே!''

சுதி மறுபடி சொல்ல வாயெடுக்கவும் ரமா குறுக்கிட்டாள். ''ஐயோ இதென்ன சண்டை, சின்ன பசங்களை விட கேவலமா இருக்கு. நாங்க எதுக்கு சிரிச்சோம்னு தெரியணும் அவ்வளவுதானே. நான் சொல்றேன், சுதி நாங்க...?'' என தொடங்கவும்,

''வேண்டாம்மா, வேண்டாம். நீங்களுமாச்சு. உங்க காதலுமாச்சு. நீயே ஏதாவது சொல்லிட்டு, அப்புறம் நான் மேனர்ஸ் இல்லாம கேக்கறேன். அநாகரிகம் பிடித்தவள்னு ரவி சொல்லுவான்.''

கை தட்டி 'ஓ'வென சிரித்தான் ரவி. ''நீ அநாகரிகம் பிடிச்சவ. மேனர்ஸ் இல்லாதவன்னு நீயே ஒத்துக்கறயா? வெரி குட்.''

''ரமா உன் ஆளை வாயை மூடிட்டு இருக்கச் சொல்லு. இல்லாட்டி அவன் ஸ்கூல்ல படிக்கும் போது பக்கத்துவீட்டு

பஞ்சாபி பெண்ணை ஜொள்ளு விட்டது, கல்லூரியில் எங்க சீனியர் கோமதிக்கு ரூட் விட்டு அவ டோஸ் விட்டது எல்லாத்தையும் சொன்னாலும் சொல்லிவிடுவேன்."

"இனிமேதான் சொல்லப் போறியா? போடீ..." என ரவி துரத்த, ரமாவை பிடித்து அவன் மேல் தள்ளிவிட்டு ஓடி போய் காரை ஸ்டார்ட் செய்தாள். வாய்விட்டு சிரித்ததில் ரொம்ப நாளைக்கு பிறகு மனசு லேசாக இருந்தது. உடனே வீட்டிற்கு போய் அதை கெடுத்துக் கொள்ள பிடிக்காமல் பீச்சுக்கு போனாள். காரில் அமர்ந்தபடியே ஹரிஹரனின் பாடலை ஸி.டி.யில் சுழலவிட்டாள். காற்று முகத்தில் மோத, தூரத்தே தெரியும் நீலக்கடலை பார்க்க இனந்தெரியாத அமைதி ஏற்பட்டது.

அருகே கல்லூரி மாணவர்கள் கும்பலாய் பெரிய சத்தமும், அட்டகாச சிரிப்புமாய் இருந்தனர். குழந்தைகள் ஐஸ்கிரீமை விரல்களில் வழியவிட்டபடி, மணலில் வீடு கட்டிக் கொண்டிருந்தனர். வயதான தம்பதியர் சில பேரக் குழந்தைகள் கைகளை பிடித்தபடி கடந்து போயினர். சில தம்பதிகள் வீட்டு விஷயங்களை சாவகாசமாய் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இவர்களுக்கெல்லாம் பேசுவதற்கு என்ன இருக்கும் என்று ஆச்சரியமாக இருந்தது. குமாரும் அவளும் ஒரு நாளும் இப்படி உட்கார்ந்து பேசியதில்லை. திருமணமான புதிதில் எங்காவது செல்ல நேர்ந்த போது கூட அமைதியாய் உட்கார்ந்து, அமைதியாய் சாப்பிட்டு, அமைதியாய் திரும்பி வந்திருக்கிறார்கள். பகிர்தலற்ற வாழ்க்கை சுவையற்ற உணவு மாதிரித்தான் இருக்கிறது. ஒரே கூரையின் கீழ் வாழும் இரு தனித்தனி நபர்கள் தம்பதிகள் ஆக முடியுமா? மகிழ்ச்சியை சொல்லி சிரிப்பதும், வருத்தத்தை சொல்லி ஆறுதல் பெறுவதும், துக்கத்தில் தோள்சாய்ந்து அழுவதும் அல்லவா தாம்பத்யம்!

அப்பாவும் அம்மாவும் கூட நல்ல தம்பதிகள்தான். அம்மாவுக்கு வியாபார விஷயங்கள் புரியாத போதும் சொந்த



பந்தங்கள், சினிமா, கோவில் வழியில் பார்த்தவை, சொல்லிக் கேட்டவை என அவர்களுக்கு பகிர்ந்து கொள்ள பொதுவான விஷயங்கள் நிறைய இருந்தன. சில சமயம் அம்மா எதையாவது அப்பாவிடம் சொல்லிட்டு வாங்கி கட்டிக் கொள்ளும்போது சுதி கேட்பாள். "எதுக்குமா அப்பாகிட்ட இந்த விஷயத்தை சொன்ன?" என்று.

"நான் என்னடி செய்யட்டும்? இத்தனை வருஷமா அப்படியே பழகிடிச்சி. மறைக்கத் தோணல" என்பாள் அம்மா. இப்போது யோசிக்கையில் அவர்களது தாம்பத்தியம் ஒளிவு மறைவற்றதாக இருப்பதை உணர முடிகிறது. அப்பாவின் சில கத்தல்கள் கூட அம்மா மேலுள்ள அக்கறையில் என புரிகிறது.

லேசாக இருட்டத் தொடங்கவே போகலாம் என காரைக் கிளப்பினாள் சுதி. தூரத்தில் குமாரைப் போல ஒரு உருவம் தெரிந்தது. ஒரு பெரிய ஏர்பேக்குடன் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். சுதியை அவன் கவனிக்கவில்லை. இங்கே இந்த நேரத்தில் என்ன செய்கிறான்? எங்காவது ஊருக்கு போகப் போகிறானா? காலையில் கூட எங்கும் போகிற மாதிரி சொல்லவில்லையே! கூட நிற்பவன் யார்? முகம் சரியாய் தெரியவில்லை. அவனுக்கும் குமாருக்கும் என்ன சம்பந்தம்? நண்பர்களும் யாருமில்லையே அவனுக்கு! கொஞ்சம் முன்னால் போய் இடதுபுறம் திரும்பினால் கூட இருப்பவனின் முகத்தைப் பார்த்துவிடலாம். காரை இடது புறம் திரும்பும் போது, வழியில் சென்ற ஆட்டோவை நிறுத்தி அவனுடன் குமார் போய்விட்டிருந்தான். சென்னையின் நெரிசலில் நெம்பர் கூட தெரியாமல் ஒரு ஆட்டோவை பின்பற்றுவது சாத்தியமில்லாததால் சுதி வீடு திரும்பினாள்.

இரவு வீட்டிற்கு வந்த குமார் எதாவது சொல்வானா என சுதி எதிர்பார்த்தாள். அவன் வழக்கம் போல் இருக்கவும்,

"ஏன் குமார் இன்னிக்கு ஈவ்னிங் நீ எங்காவது வெளியே போனியா?" என்றாள் சுதி.

"எதுக்கு கேக்கற?"

"இல்ல உன்னை பெசன்ட் நகர் பீச் பக்கத்துல"... முடிக்கும் முன் குறுக்கிட்டான். "நீ தினமும் பீச்சுக்கு போய் சுத்திட்டுதான் வீட்டுக்கு வர்றியா?"

"இல்ல குமார். எங்க ஆஸ்பத்திரியில வேலை செய்யற ஷீலா சொன்னா?"

"உங்களுக்கெல்லாம் ஆஸ்பத்திரியில வேறு என்ன வேலை? எவன் எங்க போறான்? எவ கூட பேசறான். அவ புருஷன் அப்படி, இவ மாமியார் இப்படின்னு அரட்டை அடிக்கறதுதானே வேலை. யார் அது ஷீலா? இதுவரை கேள்விப்படாத பெயரா இருக்கு. புது ப்ரண்டா? எங்க வீடு? கல்யாணம் ஆனவளா? அவ தினம் பீச்சுக்கு யார் கூட சுத்தப் போவா? அவ புருஷன் அவளை எதுவுமே கேக்கமாட்டானா? அவ போன் நெம்பரை கொடு. நான் பேசிக்கறேன்" என அவளை குடைந்தெடுத்த விதத்தில் ஷீலா பெயரை இதில் எதற்கு இழுத்தோம் என சுதி நொந்து போனாள்.

"ம். சீக்கிரம் அவ நெம்பரை கொடு. இல்ல ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணி நானே பேசட்டுமா, அவ யோக்கிதையைப் பற்றி?"

அவனுடைய இந்த விரட்டலை எப்படி சமாளிப்பது, தான் பீச்சுக்கு போனது தெரிந்தால் இன்னும் என்னவெல்லாம் சொல்வான்? என்ற பதட்டத்தில் குமார் கையில் பேக்குடன் எங்கே போனான் என்பதை கேட்க மறந்துபோனாள் சுதி.

மறுநாள் காலையில் வேலைக்கு கிளம்பும்போது குமாருக்கு வயிறு சரியில்லாமல் இருந்தது. சாப்பிட எதுவும் வேண்டாம் என்றவன் மருந்து சாப்பிடவும் மறுத்துவிட்டான்.

"நான் வேணா லீவு போடட்டுமா குமார்?" என்றவளிடம் எரிந்து விழுந்தான்.

"எதுக்கு லீவு போடற? எனக்கு உடம்புக்கு ஏதாவது வந்து படுக்கணும். நீ சினிமா கதாநாயகி போல் எனக்கு பணிவிடை



செய்து நல்ல பெயர் சம்பாதிக்க ஆசைப்படுகிறாயா? உன் ஆசை நிறைவேறாது தெரியுமா? என் உடம்பு கல்லுமாதிரி" நெஞ்சில் கணீர் என அறைந்து காண்பித்தான். "புருஷனுக்கு நோய் வந்து படுக்கையில் கிடக்கணும்னு நினைக்கிறியே. நீயெல்லாம் ஒரு பொம்பளையா?"

வழக்கம் போல் பதில் பேசாது கிளம்பிப் போனாள் சுதி.

கனிவான உபசரிப்பு குமார் மாதிரி ஆட்களுக்கு பிடிக்காது போலும். துடிதுடித்து சாகும் போது கைதட்டி வேடிக்கை பார்ப்பவர்களை கெஞ்சி உயிர்பிழைத்தால்தான் உடம்பு சரியாகும் அவனுக்கு.

வேலையிலிருந்து திரும்பி வரும்போது வலியால் லேசாய் துவண்டு போயிருந்தான். பெரிதாய் ஒன்றும் தெரியவில்லை. அஜீரணமாகத்தான் இருக்க வேண்டும். சாதாரண அஜீரணமாத்திரையிலேயே சரியாகிவிடக் கூடியது. அவனது பிடிவாதத்தால் இழுத்துக் கொண்டிருந்தான். அவளது சிகிச்சைக்கு உடன்பட மறுத்து அட்டகாசம் செய்தான்.

'எப்படியோ போ' என ஒதுங்க முடியாமல் அவளையும் சும்மா விட மாட்டான்.

பசியோடு அவள் சாப்பிட உட்கார்ந்தால் அவனுக்கு நமைச்சல் எடுக்கும்.

"இங்க ஒருத்தன் சாப்பிட முடியாம அவஸ்தை படும்போது உனக்கு மட்டும் அப்படியென்ன நாக்கு ருசி கேக்குது?" என தட்டை பிடுங்குவான்.

பிடுங்கிய வேகத்தில் சூடான சாம்பாரும், சாதமும் முகத்தில் பட்டு எரிச்சல் எடுக்கும்.

குமாருக்கு சிறுவயதில் டைபாயிடு வந்தபோதும் மலேரியா காய்ச்சலின் போதும் கூட விடுதியின் இருட்டறையில் மருத்துவர் தந்த மருந்தை சாப்பிட்டுவிட்டு கவனிப்பாரற்று கிடந்த கோபம்.

வீட்டிலிருந்தாலும் உடம்பு சரியில்லாத போது அருகிருந்து கவனிக்காமல் அலட்சியப்படுத்திய பெற்றோரின் மீதுள்ள வெறுப்பு. அத்தனைக்கும் வடிகாலாய் கிடைத்த சுதியின் மேல் அவன் காரணமற்ற வெறுப்பை காட்டினான்.

"சாப்பிடு குமார்" என அவனுக்கு சாப்பாடு எடுத்து வந்து கொடுத்தாள் சுதி.

"எனக்கு வயித்து வலின்னு கிண்டல் பண்ண இதையெல்லாம் கொண்டு வந்து காமிக்கிறியா?" கத்தினான் குமார்.

பேசாமல் திரும்பி எடுத்து போனதும் ஹாலிலேயே வாந்தி எடுத்தான் குமார்.

திரும்பி வந்த சுதி "ஏன் குமார் இப்படி செய்யற" என்றாள்.

"உனக்கு வயித்துவலி தவிர உடம்புக்கு வேறு ஏதுமில்லையே, வெளியே போய் வாந்தி எடுக்கலாமில்லையா? தோட்டத்தில் சுற்றுகிறாய். மேலேயும் கீழேயும் பலமுறை ஏறி இறங்குகிறாய். ஆனால் வாந்தியும் எச்சிலும் வீட்டுக்குள்ளேயே ஏன் செய்கிறாய்? ஒருவேளை உன்னால எழுந்திருக்க முடியலேன்னா சொல், நான் பேஸின் கொண்டு வந்து தருகிறேன். ஒவ்வொரு முறையும் வீடுபூரா கழுவி, சோபா, கார்பெட் எல்லாம் என்னால் சுத்தம் பண்ண முடியல. நம்ம வீட்டை நாமே அசுத்தப்படுத்தலாமா குமார்?"

"நானே முடியாம இருக்கேன். உனக்கு வீடு அழுக்காயிடிச்சேன்னு கவலையா இருக்கா? மருத்துவமனையில் இருமுகிற நோயாளிகளையும் இரத்த காயங்களையும் தொட்டு வைத்தியம் பார்க்கிறவதானே நீ. புருஷன் துப்புனா மட்டும் அசுத்தமாயிடிச்சா? இல்ல நானும் காசு கொடுத்தாதான் செய்வியா?"

முன்பொருமுறை குமார் காய்ச்சலில் துவண்டு நடக்க முடியாமல் கால் தடுமாறி வீட்டில் அவனையறியாமல்



வாந்தி பண்ணிவிட்டதற்கு சொர்ணலட்சுமி பேசியதற்கு பழிவாங்கும் பொருட்டு வீட்டில் பலமுறை வாந்தியெடுத்து சுதியை பழி தீர்த்துக் கொண்டான் குமார்.

"உன் நோயாளிகளுக்கு செய்ய மாட்டியா?" என குத்தினான்.

'நோயாளிகள் யாரும் சாதாரண அஜீரணத்திற்கு இப்படி ஆர்ப்பாட்டம் பண்ண மாட்டார்கள்' என்று சொல்ல நினைத்ததை சொல்லாமல் ஐந்தாவது முறையாக வீட்டை சுத்தம் செய்ய ஆரம்பித்தாள் சுதி. அடுத்த இரண்டு நாளும் அவன் செய்த அட்டகாசத்தில் சோர்ந்து போனாள். எனக்கு காய்ச்சல் வந்த போது கவனிக்கவில்லையே என்று மறுகியதெல்லாம் மறந்து போய், இந்த வயிற்றுவலி எனக்கு வந்திருக்கக் கூடாதா? நான் பாட்டுக்கும் எங்காவது விழுந்து கிடந்திருப்பேனே என நினைக்கத் தொடங்கினாள். மூன்றாள் நாள் அவன் சரியான பிறகுதான் அவளால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

## 21

அன்று இரவு சரஸ்வதி வழக்கம் போல் போன் செய்தவள், மாலதி மசக்கைக்காக பிறந்த வீடு வந்திருப்பதாக சொன்னாள். "நீயும் இதே மாதிரி நல்ல செய்தியை சொல்லுவாய் என ஒவ்வொரு மாதமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் ஏக்கத்துடன்.

'நல்லவேளை அந்த நல்ல செய்தி வராமல் உன் முருகன் தான் என்னை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்' என்று நினைத்துக் கொண்டாள் சுதி.

அம்மா எல்லா அம்மாக்களையும் போலத்தான் ஆசைப்படுகிறாள். ஆனால் புதிதாய் பிறக்கும் குழந்தைக்கு என் வீட்டு அதிர்ச்சியைத்தான் அளிக்கும். சந்தோஷத்தையோ, தன்னம்பிக்கையோ தராது. முற்றிலும் வேறுபட்ட இரு மனிதர்

கள் வாழும் வீட்டில் அக்குழந்தை எந்த பக்கம் சாயும்? ஒரு பாவமும் அறியாத அக்குழந்தைக்கு மனோரீதியான பாதிப்பு எதுவும் ஏற்படுமானால் அதற்கு நான்தான் முதல் குற்றவாளி.

இன்னும் பல வருடங்கள் கழித்து குழந்தைகளில்லா வாழ்வில் ஒரு வெறுமை ஏற்படத்தான் செய்யும். அந்த சமயம் ஏதாவது அநாதை குழந்தையை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும். வேறு போக்கிடமற்ற, நிராதனவான சூழ்நிலையில் வளர்ந்த குழந்தைக்கு வேண்டுமானால் இவ்வீடு பாதுகாப்பானதாக தோன்றக் கூடும். எதிர் கேள்வி கேட்காமல் அன்பு செலுத்தக் கூடும்.

* * *

சாந்தி இல்லத்தில் வேலை முடிந்து கிளம்பும் நேரம் மாலதி போன் பண்ணினாள். "நான் சென்னை வந்து ஒருவாரமாச்சு தெரியுமா? நீ வருவாய் என தினமும் எதிர் பார்த்துக் கொண்டே இருந்தேன். உங்கம்மா கூட ஸ்வீட் எல்லாம் செஞ்சிட்டு வந்தாங்க. எங்கம்மா டாக்டர்கிட்ட போகலாம் என்று கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள் நான் உன் வீட்டுக்கு வரலாம் என்றிருக்கிறேன். அம்மாவுக்கு டாக்டரை பார்த்த மாதிரியும் ஆச்சு. எனக்கு என் ப்ரண்டை பாத்த மாதிரியும் ஆச்சு. ஒரே கல்லுல ரெண்டு மாங்கா. என்ன சொல்ற? எப்ப வரட்டும்?" கலகலவென சிரித்தாள் மாலா.

மாலதி வந்தால் குமாருக்கு பிடிக்காது. அவள் முன்னிலையில் ஏதாவது சொன்னாலோ, ஏறுமாறாக நடந்தாலோ மாலதி மிகவும் வருத்தப்படுவாள். பாவம் கர்ப்பிணி வேறு. முதல் முறையாக வீட்டிற்கு வருகிறேன் என்பவளை மறுக்கவும் சங்கடமாக இருந்தது.

"ஹலோ.. ஹலோ..." மாலதி படபடத்தாள். "என்ன வீட்டுக்கு வரேன்னு சொன்னதும் சத்தத்தையே காணோம்? எப்படி இவளுக்கு சாப்பாடு போடப் போறோம்னு பயமா இருக்கா?"



"இன்னிக்கு ஆஸ்பத்திரில நிறைய வேலை இருக்கு மாலதி. மாலை நான் வீட்டிற்கு போக ரொம்ப நேரமாகும். நாளை காலை நானே உன்னை வந்து பார்க்கிறேன்" என்று சொன்னபோது உண்மையானவர்களிடம் கூட பொய் பேச வேண்டியிருக்கிறதே என்று வருத்தமாக இருந்தது.

## 22

காலையில் மாலா வீட்டிற்கு போனபோது கதிரவன் அங்கேதான் இருந்தான். "வாழ்த்துகள் அண்ணா. அப்பா ஆகப் போறீங்க இல்ல?" என்றாள் சுதி.

"அப்ப உன்னையும்தான் வாழ்த்தணும். நீ கூட அத்தை ஆகப்போகிறாய். அண்ணனுடைய குழந்தைக்கு நீதானே அத்தை" என சிரித்தான் கதிரவன். நெகிழ்ச்சியுடன் தோழியை அணைத்துக் கொண்டாள் சுதி.

மாலதியின் தம்பி கணேஷ் அப்போதுதான் வெளியேயிருந்து வந்தவன் சுதியை பார்த்ததும் அவன் டூவீலரை நிறுத்திவிட்டு ஓடிவந்தான். "சுதிக்கா நல்லா இருக்கீங்களா? உங்க ப்ரண்டு இல்லைன்னா எங்களை எல்லாம் பார்க்க வரமாட்டீங்களா? நான் என்னோட டென்த் ரிசல்ட் சொல்ல உங்கவீட்டுக்கு ஸ்வீட்டோட வந்தேன். நீ வீட்ல இல்லேன்னு குமார் அண்ணா சொல்லிட்டார். ஆனா உன்னுடைய கார் போர்டிகோவில்தான் நின்று கொண்டிருந்தது. வழக்கமா நீ ஹாஸ்பிட்டலுக்கு கார்லதான போவ. அன்னிக்கு காரை கூட எடுக்காம அப்படி எங்க போயிருந்தே?"

"இதென்ன கேள்வி கணேஷ்? கார் ரிப்பேரா இருந்தா ஆட்டோவிலோ டாக்ஸியிலோ போகமாட்டாங்களா?" என்றாள் சுதி சமாளிப்புடன்.

"சரி நீ வந்தா கொடுக்க சொல்லி ஸ்வீட்பாக்சை குமார் அண்ணா கிட்ட கொடுத்துட்டு வந்தேன். இதுவரை நீ ஒரு போன் பண்ணியாவது வாழ்த்து சொன்னியா அக்கா?" என்றான் கோபத்துடன்.

அவன் வந்த விஷயத்தை குமாராவது சொல்வதாவது? ஏன் வந்தான் என்று சண்டை வேண்டுமானால் போட்டிருப் பான். ஆனால் சண்டை போடவில்லையே ஏன்?

நிஜமாவே மறந்து விட்டானா? ஆச்சரியம்தான்! என்று நினைத்த சுதி.

"ஸாரி கணேஷ். இரண்டு பேரும் பிஸியா இருந்ததுல எப்படியோ மிஸ்ஸாயிடிச்சின்னு நினைக்கிறேன். எனிவே லேட்டானாலும் லேட்டஸ்டா வாழ்த்தறேன்" என அவன் கைகளைப் பற்றி குலுக்கினாள்.

பதிலுக்கு ஒரு பெரிய ஸ்வீட்டை எடுத்து அவள் வாயில் திணித்தான் கணேஷ்.

காபியுடன் வந்த மாலதியின் அம்மா "பாத்துடா புரை ஏறிடப் போகுது" என கத்தினாள்.

சிறுவயதில் எதிர்வீட்டிலிருந்து தூக்கி விளையாடி கொஞ்சியிருந்ததில் சுதிக்கு கணேசிடம் ஒரு சகோதரனின் வாஞ்சை ஏற்பட்டிருந்தது. மாலதியிடம் சரிக்கு சரியாய் சண்டைக்கு நிற்கும் கணேஷ் சுதியின் அன்பான அணுகு முறைகளில் தழைந்து போவான்.

மாலதியே கூட "இவன் வீடு மாறி பிறந்துட்டான் சுதி. உன் வீட்டில் பிறந்திருக்க வேண்டியவன்" என கிண்டல் செய்திருக்கிறாள்.

அவனது பள்ளிக்கதைகளை பகிர்ந்து கொள்ள ஆளில் லாமல், சுதியையும் பார்க்க முடியாமல், மாலதியும் திருமண மாகி போய்விட்டதில் கணேஷ்தான் மிகவும் ஏங்கி போய் இருந்தான். இன்று இருவரையும் ஒன்றாக பார்த்ததும் உற் சாகம் தாங்கவில்லை அவனுக்கு. கேட்பதற்கும், பேசுவதற் கும், பகிர்ந்து கொள்வதற்கும் எல்லோருக்கும் நிறைய விஷயங்கள் இருந்தன. நேரம் போனதே தெரியாமல் போனது.



மாலதி லேசாய் பூசினாற் போல் மெருகேறியிருந்தாள். தாய்மையின் பொலிவும், திருமண வாழ்வின் இனிமையும் முகத்தில் தெரிந்தது. உடல் நிலை சரியில்லாதவரை கவனிப் பது போல அவளது ஒவ்வொரு அசைவுக்கும் கதிரவன் ஓடிவந்து விசாரித்தது வேடிக்கையாக இருந்தது.

"கதிர் அண்ணா நாளைக்கு நீங்க கிளம்பிப் போனப்புறம் உங்க மனைவியை யார் தாங்குவாங்களாம்?" என்றாள் சுதி கிண்டலாய்.

தம்பதிகள் இருவரும் ரகசிய புன்முறுவலை பரிமாறிக் கொள்ள, மாலதியின் அம்மா சொன்னாள். "கதிர் இப்ப சென்னை ஐகோர்ட்லயே ப்ராக்டீஸ் பண்றாப்ல. உனக்கு தெரியாதா சுதி?" என்றாள்.

"அப்படியா செய்தி? அப்ப மாலதி பிள்ளைப்பேறுக்கு கணவரை பிரிந்து போக வேண்டியதேயில்லை. அண்ணா பிரசவத்துக்காவது மனைவியை மருத்துவமனைக்கு அனுப்பு வாரா? அல்லது அதையும் அவரே பார்த்துக் கொள்வாரா?"

"கண்டிப்பா அனுப்புவார். ஏன்னா உன்னை மாதிரி டாக்டர்களுக்கும் பிழைப்பு நடக்கணுமே! அதனால போனா போகுதுன்னு அனுப்புவார். அப்படித்தானே கதிர்?" என்று மாலதி கேட்கவும்,

"சென்னை வந்தாச்சில்ல, இனி உன் வாயை அடக்க என்னால் முடியுமா?" என்று சிரித்தபடியே வெளியே கிளம் பியவன் சுதியிடம், "சுதி இன்னிக்கு நீ இங்கதான் தங்கப் போகிறாய் சரியா? குமாரையும் போன் பண்ணி வரச்சொல். நான் லஞ்சுக்கு வந்து சேர்ந்து கொள்கிறேன். வரட்டுமா?" என்றபடி கிளம்பிப் போனான்.

"இங்கேயே தங்கிவிடேன். உங்கிட்ட நிறைய பேசணும்" என மாலதி நச்சரிக்கத் தொடங்கினாள். "குமாரை அழைத்து வரச் சொல்லி அப்பாவை அனுப்பலாம்" என்றாள் அவள்

அம்மா. "சுதி அக்கா நீ முந்தி மாதிரி இல்ல மாறிட்ட" என குறைப்பட்டான் கணேஷ். அத்தனை பேருக்கும் பதில் சொல்வதற்குள் சுதி திணறிப் போனாள். அன்பு கூட ஒரு வகையில் தண்டனைதான் போலும். குமாரின் வெறுப்பை அலட்சியப்படுத்துவது போல் இந்த பிரியத்தை விலக்க முடியவில்லை.

"நம்ம வீட்ல தங்கறதுக்கு நீங்க எல்லாம் இவ்வளவு தூரம் சொல்லணுமா? எனக்கு முக்கியமான சில கேஸ்கள் பார்க்க வேண்டி இருக்கிறது. மருத்துவத்துறையில் ஒவ்வொரு நிமிஷமும் முக்கியமானது இல்லையா? அதனால் தேவை யின்றி தாமதமாக்கவோ, கவனிக்காமல் இருக்கவோ முடி யாது. அதனால் அடுத்த வாரம் நான் கொஞ்சம் ப்ரீயானதும் கண்டிப்பாய் வருகிறேன். கணேஷ் அக்கா மேல கோபம் இல்லையே?" என ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் பதில் அளித்தாள்.

சாப்பாடு முடிந்து சுதி கிளம்பும்போது வாயில்வரை தொடர்ந்து வந்த மாலதி, "சுதி இவ கூட இப்படி சொல்றா ளேன்னு நெனைச்சிக்காதே. நீ எதுக்காக இப்படி வேலை வேலைன்னு ஓடிட்டு இருக்க? அம்மா அப்பாவை போய் பார்க்க முடியாம? உன்னை கூட கவனிச்சிக்க முடியாம? புதிதாய் திருமணமான இளம் பெண்ணை போலவா நீ இருக்கிறாய்? என்னதான் நீ பக்குவப்பட்டவள் என்று சொல் லிக் கொண்டாலும், எந்த பெண்ணும் மணமான புதிதில் கணவனுடன் நேரத்தை அதிகமாய் செலவிட விரும்புவது தான் இயற்கை. என்ன இல்லை உனக்கு? பணம், புகழ், பதவி, அழகு, அந்தஸ்து எல்லாம் இருந்தும் வாழ்க்கையை அனுபவிக்காமல் எதை துரத்துகிறாய் நீ? உன் முகத்தை கண்ணாடியில் தினமும் பார்க்கிறாயா நீ? அல்லது அதற்கு கூட நேரமில்லையா? அடுத்த முறை நன்றாக பார் இது சுதிதானா என்று. என்னதான் நீ சிரித்து சிரித்து பேசினாலும் உன் முகத்தில் மலர்ச்சி தெரியவில்லை. உன்னை பார்க்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டேன். பார்த்ததும் ஏனோ தெரியவில்லை மனம் மிகவும் சங்கடமாக இருக்கிறது."

"யூ.. பூல்..." தோழியின் தோளை பற்றி அணைத்துக் கொண்டாள் சுதி.

"நான் நன்றாகத்தான் இருக்கிறேன். இந்த பத்து நாட் களாய்த்தான் கொஞ்சம் வேலை அதிகம். நீ இப்படி கலங்கிப் போகிற மாதிரி எதுவுமில்லை."

"நிஜமாகவே எதுவுமில்லையே! எங்கிட்ட மறைக்காதே சுதி."

"வீட்டிலிருப்பவர்கள் எல்லாம் உன்னை இப்படி தாங்கும் போது நீ ஒண்ணுமேயில்லாத ஒரு விஷயத்துக்கு இப்படி மனசை அலட்டிக்கலாமா? நீ உள்ளே போ மாலதி. நான் கிளம்புகிறேன்." என மாலதியின் கேள்விகளுக்கு முழுமை யாக விடைதராமலே விடைபெற்றாள் சுதி. மருத்துவ மனைக்கு வரும் வழியெல்லாம் மாலதியின் நினைவே மனதை ஆக்ரமித்திருந்தது. ரவி சொன்னது போல நண்பர் களிடம் எதையும் மறைக்க முடியாது போலும். சிறுவயதில் மருத்துவசேவை எனது லட்சியமாக இருந்தது. ஆனால் இன்று அது ஒரு புகலிடம். தற்காலிக பாதுகாப்பை தருகிற கூரை. எதற்காக இப்படி வேலை செய்கிறாய் என்கிறாள் மாலதி. இதிலிருந்து ஓய்வெடுக்க சென்றால் ஒடுங்கி ஓய்ந்து உருத்தெரியாமல் போய் விடுவேன். வீட்டிற்குள் யாரையும் குமார் அனுமதிக்காத நிலையில் நானும் வெளியே வராமல் இருந்திருந்தேனேயானால் மூச்சு முட்டியே செத்துப் போவேன். வெளியுலகை தினமும் பார்க்கும் வாய்ப்பை இந்த வேலை அல்லவா ஏற்படுத்தித் தருகிறது! அதுகூட இந்த வேலையால் வரும் வருமானம்தான் குடும்பச் செலவை பெருமளவு சரிகட்டி செல்கிறது என்பதால் குமார் பெரிய மனதுடன் அமைதியாய் இருக்கிறான்.

சுதியின் சிறுவயதில் அவர்கள் வசித்த தெருவில் ஒரு வயதான டாக்டர் இருப்பார். பெரிய கண்ணாடியுடன் எப்பவும் விறைத்த உடலும் கடுமையான முகமுமாய் இருப்பார். காய்ச்சலுக்கு அவரிடம் போகும் போது 'மழையில் நனைஞ்சியா! சாக்லேட் சாப்பிட்டியா'' என அவர் அதட்டும்போதே குழந்தைகள் அழ ஆரம்பித்து விடுவார்கள். ''மூச், அழுதால் ஊசி போட்டுவிடுவேன்'' என ஒரு பெரிய ஊசியை எடுத்து காண்பிப்பார். பயத்தில் அம்மாவை கட்டிக் கொள்ளும் குழந்தைகள். யாரும் அவர் சிரித்து பார்த்ததே இல்லை. 'உடம்புக்கு என்ன?' என்ற கேள்வியே மிரட்டலாகத்தான் வரும். நன்றாக பேசினால் டாக்டர் மேல் இருக்கும் பக்தி குறைந்துவிடும், விளக்கி சொன்னால் மருந்துகளின் வீரியம் குறைந்து போய்விடும் என்பது போல நடந்து கொள்வார். இரண்டு மாத்திரைகளை பொட்டலமாக மடித்து ''காலையில் ஒன்று, இரவு ஒன்று சாப்பிடு போ'' என விரட்டுவார். அந்த இரண்டு மாத்திரைகளுக்கு பிறகு மறுபடி டாக்டரிடம் வர தேவையில்லாதபடி பெரும்பாலும் அதிலேயே நோய் குணமாகிவிடும். 'அந்த டாக்டரை பார்க்கபயந்துட்டு நோய் கூட மறுபடி வராது' என்பாள் எதிர்வீட்டு பாட்டி. அவர் பெயர் யாருக்கும் சரியாய் நினைவிலிருக்காது. கடுவன் பூனை என்றால்தான்' தெரியும். இப்போதும் அப்பா சொல்லுவார், ''ஒரு சராசரி சளி காய்ச்சலுக்கு, எக்கச்சக்க பரிசோதனைகள், மருந்துகளின் பெரிய லிஸ்ட்டையே கொடுத்து ஆயிரக் கணக்கில் பணம் பறிக்கும் இன்றைய மருத்துவரை விட, அந்த கடுவன் பூஜை டாக்டர் தெய்வத்துக்கு சமம்'' என்பார். உண்மைதான் என்பாள் சுதி.

இருபத்து நாலு மணி நேரமும் தொழிலிலேயே கவனமாய் இருப்பவர்கள் உற்சாகமற்று போய்விடுவார்கள் என்பதை இன்றைய அனுபவம் பெற்ற சுதியால் உணர முடிகிறது. அந்த டாக்டரின் சுபாவத்தின் காரணம் அவருடைய தொழில்



அர்ப்பணிப்புதான் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இந்த நிலை இப்படியே தொடருமானால் இன்னும் சிறிது நாளில் நானும் ஒரு கடுவன் பூனை என்றுதான் பெயரெடுக்க வேண்டியிருக்கும் என்று நினைத்தபடி காரை மருத்துவமனை போர்டிகோவில் நிறுத்தினாள். வாட்ச்மேனிடம் சாவியை கொடுத்துவிட்டு உள்ளே போகும் போது ரவிக்கு போன் பண்ண வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

நாளை மாலை வீட்டிற்கு போகும்முன் அம்மாவை போய்ப் பார்த்து விட்டு போக வேண்டும். ரமாவோ, ரவியோ இருந்தால் அவர்களிடம் முன் கூட்டியே சொல்லிவிட்டு கிளம்பலாம். ரவியிடம் நாளை டியூட்டி எப்போது என்று கேட்க வேண்டும். தினமும் மருத்துவமனைக்கு போவதாக சீக்கிரமே கிளம்புவதும் வெளிவேலைகளை முடித்துக் கொண்டு திரும்புவதும் வழக்கமாகி விட்டது.

''நியாயமான விஷயங்கள் மறுக்கப்படும் போது போராட வேண்டுமே தவிர மறைமுகமாக நிறைவேற்றிக் கொள்வது நியாயமா?'' அதுவும் படித்து பண்பாடு கற்ற நான் அப்படி செய்யலாமா? என சுதிக்கு மனசாட்சி உறுத்தவே செய்யும். ஆனால் குமாரிடம் எதையும் சொல்லி புரிய வைக்க முடியாத நிலையில் என்னதான் செய்ய முடியும் என்று தெரியவில்லை. யாரையும் நெருங்கவிடாது ஒரு நெருப்பு வளையத்தினுள் இருப்பவனிடம் புரிய வைக்கப்போய் கருகிப்போவதை விட வெளியே நின்று தேவைப்படும் நேரத்தில் கை கொடுப்பது தான் நல்லது. வீண் விவாதங்கள், தேவையற்ற சர்ச்சைகள், இரவெல்லாம் தொடரும் சண்டைகள் முதலியவற்றை தவிர்க்க சில விஷயங்கள் மனதுடன் இருப்பதே நல்லது.

## 23

அன்று மாலையில் இரண்டு நோயாளிகள் டிஸ்சார்ஜ் ஆக வேண்டி இருந்தது. ஒருவர் டாக்டர் கனகசபையின் நோயாளி. அவர் அவசர அறுவை சிகிச்சையில் இருந்ததால்

அவர் முன்பே கொடுத்திருந்த இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் படி. அந்த நோயாளியை சுதிதான் டிஸ்சார்ஜ் பண்ண வேண்டியிருந்தது. ஒருவர் மூட்டுவலிக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். டாக்டர் சுகுமார் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்திருந்தார். அவர்கள் ஆயிரம் சந்தேகங்களுடன் 'சுதிக்காக காத்திருந்தார்கள்.

''இவருக்கு கண்டிப்பா ஆபரேஷன் செஞ்சாகணுமா டாக்டர்?'' என்றாள் அந்த பெரியவரின் மனைவி.

''ஆமாம். வலி நிவாரணிகளால் நோயைத் தீர்க்க முடியாது. அவை தற்காலிக நிவாரணத்தைத்தான் தரும். அது மட்டுமின்றி ரொம்ப நாட்கள் தொடர்ந்து வலிக்கான மருந்துகளை பயன்படுத்தி வந்தால் கிட்னியே செயலிழந்து போய்விடும் அபாயம் இருக்கிறது. எனவே அறுவை சிகிச்சைதான் சரியான தீர்வு.''

''அவருக்கு முட்டியில் என்ன கோளாறு டாக்டர்?'' மீண்டும் அவர் மனைவி கேட்டாள்.

''அவருக்கு மூட்டுகளில் நோயோ, குறைபாடோ எதுவும் இல்லை. மூட்டுகள் முற்றிலும் தேய்ந்து போயிருக்கின்றன. இது வயதாவதால். கால்சியம் குறைபாட்டால் ஏற்படுவதுதான். நம் மூட்டுகளுக்கிடையே சுரக்கும் ஒரு திரவம் நாளடைவில் வற்றிப் போவதால் எலும்புகளுக்கிடையே தேய்மானம் விரைவில் ஏற்படுகிறது. தேய்ந்த எலும்புகள், நடக்கும்போது ஒன்றோடு ஒன்று உராய்வதால் வலி ஏற்படுகிறது. அறுவை சிகிச்சையின் மூலம் செயற்கை மூட்டு பொருத்தப்பட்டு எளிதாக குணமடையலாம்.''

''இதற்கு என்ன செலவாகும் டாக்டர்? எவ்வளவு நாளில் நடக்க முடியும்?'' என்றார் பெரியவர்.

''அப்பாவுக்கு வயது அறுபதாகப் போகிறது. அறுவை சிகிச்சையை தாங்குவாரா?'' என்றான் மகன்.



''இதில் பயப்பட எதுவுமேயில்லை. வயதானவர்களுக்காகத்தான் இந்த அறுவை சிகிச்சையே செய்யப்படுகிறது. அவர்களுக்குத்தான் தேய்மானம் ஏற்படும். இளவயதினருக்கு மூட்டு தேய்வதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவு. உள்ளே பொருத்தப்படும் மூட்டுகளை பொறுத்து அதன் விலையும் மாறுபடும். வெளிநாட்டு மூட்டுகள் விலை அதிகம். ஆனால் பல வருடங்கள் உழைக்கக் கூடியவை. அவற்றை பொருத்தியபின் வழக்கம் போல் நடக்கலாம். மாடிப்படி ஏறலாம். இறங்கலாம். நடையில் கூட எந்த வித்தியாசமும் தெரியாது. இந்தியாவில் தயாரிக்கப்படும் மூட்டுகள் விலை குறைந்தவை. குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் உழைக்கக்கூடியவை. வெளிநாட்டு மூட்டுகள் பதினைந்து வருடங்கள் உழைக்கக் கூடியவை. உங்களது வசதியைப் பொறுத்து எந்த வகையான மூட்டு பொறுத்துவது என தீர்மானிக்கலாம். மேற்கொண்டு அவர்கள் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் அவர்களுக்கு புரியும் விதமாய் எளிமையாய் விளக்கினாள். அவர்கள் திருப்தியுடன் நன்றி கூறியதும் டாக்டர் கனகசபையின் ப்ரிஸ்கிரிப்ஷனை கொடுத்து டாக்டர் அறிவுறுத்தியபடி நடந்து கொள்ளும்படி அனுப்பி வைத்தாள்.

உண்மையில் இதுபோன்ற அறுவை சிகிச்சைகளுக்கு செலவு மிக அதிகமாகத்தான் ஆகிறது. இலவச மருத்துவமனைக்கு வருபவர்களுக்கு கூட ஸ்பான்ஸர்களை பிடிப்பது கடினமாக இருக்கிறது. மருத்துவர்கள் இலவசமாக செய்ய ஒப்புக்கொண்டால் கூட மூட்டுகளின் விலை அதிகம். அத்துடன் ஆபரேஷன் தியேட்டர் வாடகை, மருந்துகள் என நிறைய செலவாகத்தான் செய்யும். கண்மருத்துவ முகாம், சர்க்கரை நோயாளிகளுக்கான சிறப்பு முகாம் போன்று இதற்கான முகாம்களும் நடத்தப்பட்டால்நோயாளிகள் பயன்பெறலாம்.

கார்டியாலஜி பிரிவிலிருந்து வீட்டிற்கு செல்லும் அந்த பெண்ணுக்கு அவளுடைய டாக்டர் வழக்கமான செக்கப்பை

முடிக்கும் நேரம் ஐசியுவிலிருந்து அவசர அழைப்பு வந்தது. சுதியை அழைத்து கவனிக்குமாறு சொல்லிவிட்டு அவர் ஐ.சியுவிற்குள் சென்றார்.

அந்த பெண்ணிற்கு நாற்பத்தைந்து வயதுதான் இருக்கும். இன்றைய வேலை சுமை, பகிர்ந்து கொள்ள ஆளில்லாமையால் இளவயதினரைத்தான் மாரடைப்பு அதிகம் தாக்குகிறது. அதுவும் இன்றைய ஆண்களில் சிலருக்கு முப்பதிலிருந்து முப்பத்தைந்து வயதிற்குள்ளேயே மாரடைப்பு வந்துவிடுகிறது. அந்த பெண்ணிற்கு சாப்பிட வேண்டிய உணவு வகைகள் எழுதப்பட்ட லிஸ்ட்டையும், மருந்து சீட்டையும் கொடுத்தாள் சுதி. ''மாதம் ஒரு முறை செக்கப்பிற்கு வர வேண்டும். கண்டிப்பாய் எண்ணெய், கொழுப்பு கலந்த உணவு வகைகளை தவிர்த்து இந்த சீட்டில் எழுதியுள்ளபடி கடைபிடிக்க வேண்டும். டென்சன் இல்லாம மனசை அமைதியா வெச்சிக்கணும். அதுதான் முக்கியம். ஏதாவது யோகா, தியானம் பழகிக்குங்க'' என வழக்கமான அறிவுரைகளை கூறி அவர்களை அனுப்பி வைத்தாள்.

டீ கொண்டு வரச் சொல்லிவிட்டு. ஜன்னலருகே இருந்த வாஷ்பேஸினில் கைகளை சோப்பு போட்டு கழுவியபடி வெளியே பார்த்தாள்.

தெருவில் கார்களின் வரிசை குறைந்திருக்க, மருத்துவமனை காம்பவுண்டில் வெளிநோயாளிகள் கூட்டம் இல்லாமல் வராண்டா வெறிச்சோடியது. வாயில் கேட்டருகே ஒரு ஆட்டோ நின்றிருந்தது. சற்றுமுன் டிஸ்சார்ஜ் ஆன நோயாளிகளிடம், பணம் பறிக்கும் முயற்சியில் மருத்துவமனை பணியாளர்கள் மும்முரமாய் இருந்தார்கள். அதுவும் அந்த இதய நோயாளியான பெண்ணின் கணவர் பாவம். நடுநிசியில் திடீரென மனைவிக்கு மாரடைப்பு ஏற்படவே பதறிப் போய் அருகிலிருந்த இந்த மருத்துவமனையில் சேர்த்தார். ஒரு வாரமாய் ஐ.சி.யு மருந்துகள், மாத்திரை என பணம்



தண்ணீராய் செலவழிந்தது. அவர்களுக்கு கல்யாண வயதில் இரண்டு பெண்கள் இருந்தார்கள். நடுத்தர குடும்பத்தை சேர்ந்த அவர்கள் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி பெண்களின் திருமணத்திற்காக சேமித்த பணத்தில் கணிசமான தொகை மருத்துவமன பில்லாக மாறியது. ''நான் எல்லாம் அனுபவித்து முடித்தாயிற்று. எனக்காக பணத்தை வீணாக்காதீர்கள். குழந்தைகள் இனிமேல்தான் வாழவேண்டும். அவர்களை கரையேற்றுங்கள்'' என்று அந்த பெண் கணவனிடம் அழுத அழுகையில் மறுபடி ஹார்ட் அட்டாக் வராமலிருந்ததே பெரிய விஷயம். இப்போது அவர் மனைவியை அழைத்துக் கொண்டு போகையில் சுற்றி நின்று பிணம் தின்னும் கழுகுகளாய் பணம் பிடுங்குவதை காண சகிக்கவில்லை சுதிக்கு.

இவர் மட்டும்தான் என்றில்லை. கணவனுக்கு அடிபட்டதும் கையில் காசில்லாமல், வேறு வழியுமில்லாமல் தாலிக் கொடியையும் விற்று பணம் கட்டுபவர்கள், மகன் உயிர் போக கிடக்கற நிலையில் வீட்டையோ, நிலத்தையோ விற்று பணம் புரட்டுபவர்கள் என நோயாளி அனுபவிக்கும் வலியை விட குடும்பத்தினர் மிக மோசமான வலியை அனுபவிப்பார்கள். மகளுக்கு குழந்தை பிறந்திருக்கிறது என்ற சந்தோஷத்தை கூட மருத்துவமனை பில் தொகை அமுக்கி விடும். அவர்களிடமெல்லாம் ஐந்துக்கும் பத்துக்கும் பிச்சைக்காரர்களைப் போல் கையேந்த எப்படி மனம் வருகிறது? இத்தனைக்கும் மருத்துவமனை இவர்களுக்கெல்லாம் நல்ல சம்பளம் கொடுக்கிறது. அடுத்த டாக்டர்கள் கூட்டத்தில் சீனியரிடம் இதைப்பற்றி புகார் செய்யவேண்டும்.

## 24

ரவியின் தங்கை வீட்டில் விசேஷம் என்று அவன் கிளம்பிப் போயிருந்தான். எனவே சிறிது நேரத்தில் ரமா வந்ததும் அவளிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினாள் சுதி.

வீட்டிற்கு போகும்போது சிலுசிலுத்த காற்றில் காரை ஓட்டுவதே சுகமாக இருந்தது. கடற்கரை சாலையை கடக்கும்போது முன்பு ஒருமுறை குமாரை இங்கே பார்த்த நினைவு வந்தது. அன்று அவன் செய்த அட்டகாசத்தில் அதைப்பற்றி மறுபடி விசாரிக்கவே மறந்துபோனோம் என்று நினைத்தாள். அரசு மருத்துவமனை அருகே அவளது கல்லூரி பேராசிரியர் டாக்டர் அருணகிரியை பார்த்தாள் சுதி. காரை அவர் அருகே நிறுத்தியவள், ''வணக்கம் ஸார். வாங்க நான் டிராப் பண்றேன்'' என்றாள்.

எதிர்பாராமல் அவளை பார்த்ததும் முகம் மலர்ந்தவர், ''உன் கல்யாணத்துக்கு வந்தது. பிறகு இப்போதுதான் பார்க்கிறேன். கிரி ஒருநாள் சொன்னான். நீங்கள் தொடங்கியிருக்கும் இலவச மருத்துவமனை பற்றி. நம்முடைய மாணவர்கள் இவ்வளவு நல்ல விஷயம் செய்திருக்கிறார்கள் என்று மிக பெருமையாக இருந்தது'' என்றார்.

கல்லூரி நாட்களில் அவர் யாரையும் அவ்வளவு எளிதில் பாராட்டிவிட மாட்டார். கஷ்டப்பட்டு படித்ததுக்கு 'குட்' என்ற ஒரு வார்த்தைக்காக விழுந்து விழுந்து ப்ராக்டிக்கல்ஸ் சிறப்பாக செய்வது எல்லாம் சுதிக்கு நினைவு வந்தது. எதிர்பாராது கிடைத்த இந்த பாராட்டு உண்மையில் மனதை மகிழ்விக்கவே. ''எங்ககிட்ட ஏதாவது நல்ல விஷயம் இருந்தால் அது நீங்க சொல்லிக் கொடுத்ததுதான் ஸார்'' என்றாள் பணிவுடன்.

''உன்னுடைய ஆராய்ச்சி படிப்பு எந்த நிலையில் இருக்கிறது சுதி?'' என்றார் அருணகிரி.

மௌனமாய் சாலையில் கவனம் வைத்தாள் சுதி. என் கணவர் ஒரு பரிசோதனை கூடம். வித்யாசமான அவரது குணாதிசயங்கள் தான் நான் படிக்க முயற்சிக்கும் கஷ்டமான பாடம். அவருடன் நான் நடத்தும் வாழ்வே ஆராய்ச்சிக் [illegible] இதில் ஜெயிக்க முடிந்தால் ஆயிரம் டாக்டர்



அவளுடைய மௌனத்தைப் பார்த்த அருணகிரி ''என்னம்மா சுதி, படிப்பை தொடர முடியலேன்னு வருத்தப்படறியா? திருமணமான பெண்களுக்கு இது சகஜமான விஷயம்தான். நீ ஒரு அவுட்ஸ்டாண்டிங் ஸ்டூடண்டாக இருந்ததால் மருத்துவ உலகில் நிறைய சாதிக்கப் போகிறாய் என நாங்களெல்லாம் மிகவும் எதிர்பார்த்தோம். அதனால் என்ன?

இந்த மருத்துவத்துறையில் நம்மால் உயிர் பிழைத்த ஒவ்வொரு நோயாளியும் ஒரு சாதனைதான்'' என்றார்.

ஹிக்கின் பாதம்ஸுக்கு போக வேண்டும் என்று அருணகிரி சொன்னதால் அவரை மௌண்ட்ரோட்டில் இறக்கிவிட்டாள் சுதி. ''மருத்துவம் சம்பந்தமாக எந்த நேரத்தில் எந்த உதவி வேண்டுமென்றாலும் என்னை தயங்காமல் கேட்க வேண்டும்'' என்றபடி இறங்கிக் கொண்டார் அருணகிரி.

நேராய் சென்று அமெரிக்கன் அம்பஸியை கடக்கும்போது அங்கே நின்றிருந்த நீண்ட வரிசை எப்போதும் போலவே இப்பவும் சங்கடப்படுத்தியது. இவர்களின் எத்தனை பேர் தாய்நாட்டிற்கு திரும்பி வருவார்கள்? எத்தனையோ வெளி நாட்டு கம்பெனிகள் இங்கு தொடங்கப்பட்டும் கூட இங்கிருந்து வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை குறையாமல்தானே இருக்கிறது! படித்தவர்கள் எல்லாம் கிளம்பிப் போனால் அவர்களது இடத்தை இங்கே உள்ளவர்களால் முழுமையாக நிரப்ப முடியுமா? வறுமையால் ஏற்படும் பஞ்சம் இயற்கையானது. அதில் துக்கப்படலாமே தவிர வெட்கப்பட ஏதுமில்லை. ஆனால் திறமையான்வர்களை தகுந்தபடி பயன்படுத்திக் கொள்ள முடியாமல் சமூக, அரசியல் காரணங்களே தடையாய் இருக்குமானால் அதனால் ஏற்படும் வெற்றிடம் வெட்கப்படவேண்டிய ஒன்றுதான்.

சுதிக்கு அப்பாவின் நண்பர் ராமநாதனின் நினைவுதான் வந்தது. அவர் லண்டனில் வசிக்கிறார். இந்தியா வரும்போதெல்லாம் வீட்டிற்கு வராமல் போகமாட்டார். 'நான்

கிராமத்திலிருந்து வேலை பார்க்க நகரத்திற்கு வந்த முதல் தலைமுறை. இங்கு வந்து சம்பாதிக்க ஆரம்பித்ததும் சொந்த ஊரில் நிலம் வாங்கி வீடு கட்டினேன். பெற்றோரை இறுதிகாலத்தில் அழைத்து வந்து வைத்துக் கொண்டேன். என் மகன் வெளிநாட்டில் வேலை பார்க்கிறான். அவன் சம்பளம் வாங்கி இங்கே நிலம், வாங்கியிருக்கிறான். உலகமே ஒரு குளோபஸ் வில்லேஜ் என் கையில் எங்கே சம்பாதித்தால் என்ன? பிறந்த மண்ணின் மீதுள்ள பிரியத்தில் முதல் வருவாயை தாய்நாட்டில்தான் சேமிக்கிறோம் என்பார் பெருமையுடன். ஆனால் மகனை தொடர்ந்து ராமநாதனும் மகனுடனேயே சென்று விட்டதில் இங்கு பணம் அனுப்புவது நின்று போய்விட்டது. நாளடைவில் பராமரிக்க ஆளில்லாமல், இங்கிருந்த சொத்துக்களும் ஆக்ரமிப்புக்கு ஆளாகவே இந்தியாவிலிருந்தவற்றை விற்று விட்டு லண்டனிலேயே நிரந்தரமாய் செட்டில் ஆனார்கள். வாழ்த்துமடல்களிலும், அழைப்பிதழ்களிலும் அவ்வப்போது இந்தியாவிற்கும் அவருக்குமுள்ள தொடர்பை புதுப்பித்துக் கொள்வதோடு சரி.

காரை போர்டிகோவில் நிறுத்தி பூட்டிவிட்டு உள்ளே போகுழ்போது குமார் பால்கனியில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. ஒரு வரவேற்பான புன்முறுவலோ 'ஹலோ என்ற கையசைவோ எதுமின்றி, நீ இங்கு வந்தாலும் போனாலும் என்னை எதுவும் பாதிக்காது என்ற ரீதியில் அமர்ந்திருந்த அவனை பார்த்ததும் மனசுக்குள் ஒரு வெறுமை சூழ்ந்தது. வெளியே போய்விட்டு உள்ளே வரும்போதே அவளுக்கு பிடித்த உணவை செய்து வைத்து விட்டு சுடசுட பரிமாற காத்திருக்கும் அம்மாவும், அவளுடைய வேலை நேரத்தை பொறுத்து தன் வேலைகளையும் மாற்றியமைத்துக் கொண்டு வீட்டிலிருக்கும் நேரம் அருகே அமர்ந்து எதையாவது இதமாக பேசிக் கொண்டிருக்கும் அப்பாவும் அவளையறியாமல் நினைவுக்கு வந்தனர். இருவர் மட்டுமே இருக்கும் வீட்டில்



இரண்டு பேரும் வெவ்வேறு திசைகளாய் இருந்தால் எத்தனை நாள் சமாளிக்க முடியும்? குமார் அவளது வழக்கப்படி எப்போதும் எதையோ யோசித்தபடி இருப்பான். அல்லது ஒண்ணுமேயில்லாத விஷயத்தைப் பற்றிக் கொண்டு நாள் கணக்கில் சண்டை போடுவான். தனியாய் பிறந்திருந்தாலும் சுதி தனிமையில் இருந்ததே இல்லை. எப்பவும் வேலை, நண்பர்கள், பெற்றோர், உறவினர் என சிரிப்பும் விளையாட்டுமாய் வளைய வந்தவளுக்கு இந்த கட்டாய தனிமை பாரமாய் அழுத்திற்று.

## 25

உள்ளே போய் குளித்துவிட்டு குமாருக்கு டீயுடன் மேலே போகும் போது எதிர் வீட்டு பெண் வழக்கம் போல் தன் நாயுடன் பால்கனியில் அமர்ந்திருந்தாள். பார்வை குமாரையே சுற்றி வந்தது. குமார் பால்கனியில் அமர்ந்திருக்கும் சமயங்களில் அந்த பெண் எதிரில் அமர்ந்தபடி உரத்தகுரலில் பாடுவதும், வீட்டிலுள்ளவர்களை சத்தம் போட்டு கூப்பிடுவதுமாய் அவன் கவனத்தை கவர எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை சுதி பார்த்திருக்கிறாள். குமாரோ எதையுமே கவனியாமல் ஹிண்டு பேப்பரில் மூழ்கியிருந்தான். அவனது அலட்சியம்தான் அந்த பெண்ணை சீண்டுகிறது போலும். குமார் நிமிர்ந்து பார்த்து புன்முறுவலுடன் ஒரு 'ஹாய்' சொல்லியிருந்தால் ஒரு நட்பு மலர்ந்திருக்கும். அல்லது அந்த பெண்ணின் சுவாரஸ்யம் குறைந்து போயிருக்கும். குமாரின் பாராமுகம் தான் அந்த பெண்ணின் ஆர்வத்தை அதிகமாக்குகிறது. தனக்குள் சிரித்தபடி காலியான டீகப்புடன் கீழே போனாள் சுதி.

இரவு சமையலுக்கான வேலைகளில் இருந்தாள் சுதி. பக்கத்துவீட்டு ஸி.டி.யிலிருந்து பாடல் கசிந்து மெதுவாய் உள்ளே நுழைந்தது. அந்த வீட்டிலிருப்பவர்களுக்கு பாட்டில் பிரியம் போலும். எப்பவும் ஏதாவது பாடல் கேட்டுக் கொண்டே இருக்கும். சுதியின் அறையும் முன்பெல்லாம்

அப்படித்தான் இருக்கும். தேர்வு சமயங்களில் ஆழ்ந்து படிக்கும்போது கூட கவனத்தை சிதைக்காத மெல்லிய இசை ஒலித்துக் கொண்டிருக்கும். ஹிந்துஸ்தானி, காஜல், நாட்டுப்புறப்பாடல்கள், மெலடி என அத்தனையும் சேகரித்து வைத்திருப்பாள். குமாருக்கு இசையில் நாட்டம் இல்லை. 'இது என்ன வீடா? அல்லது சினிமா தியேட்டரா? பாட்டும், சிரிப்புமாய் என்ன கூத்து?' என கத்துவான். ஸி.டி. பிளேயரை தூக்கி எறிவான். எனவே டி.வி.யில் எப்பவும் நியூஸ் சேனல் மட்டுமே ஓடிக் கொண்டிருக்கும். அவற்றை ஆழ்ந்து கவனிக்கும் குமாரை பார்க்கையில் ஆச்சரியமாக இருக்கும். அருகிலுள்ள மனைவியையும், வீட்டிலுள்ளவர்களையும் புரிந்து கொள்ள முற்படாத இவன். உலகில் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் அதிசயங்களையும், அவலங்களையும் எப்படி உணர முடியும்? என்று தோன்றும்.

பக்கத்துவீட்டு சி.டி.யில் கேஸட் மாற்றப்பட்டிருக்க, 'என்ன தவம் செய்தனை யசோதா' என பாடல் ஆரம்பித்தது. சமையலை மறந்து, பசியை மறந்து சமையலறை சுவரில் சரிந்து அமர்ந்தாள் சுதி. இசையின் மென்மையில் பாடல் வரிகளில் மனம் கரைந்து கண்ணிலிருந்து நீர் வழிந்தது. அம்மா அடிக்கடி இந்த பாடலை பாடுவாள். அப்போதெல்லாம் இதற்கு ப்ரத்யேக அர்த்தம் எதுவும் தெரிந்ததில்லை. வீட்டினரின் திருப்திக்காக சுதி பூஜைகளில் பங்கெடுத்துக் கொள்வது தவிர, தானாய் ஒரு நாளும் கோயிலுக்கு போனதோ, வீட்டில் விளக்கேற்றி வணங்கியதோ கூட இல்லை. இன்று பாடலை கேட்ட மாத்திரத்தில் உடல் சிலிர்த்து எங்கோ கிளைப்பரப்பியிருக்கும் தன் வேர்களை தேடி மனம் ஓடியது. கலாச்சாரம் என்பது நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட விஷயம் போலும். நமக்கே தெரியாமல் உள்ளே கிளைப் பரப்பி சமயம் வரும்போது ஆளையே புரட்டிப் போட்டு விடுகிறது.



# 26

அடுத்த நாள் காலையில் விடுமுறை எடுத்துக் கொண்டு சுதி வீட்டில் இருந்தாள். மாலையில்தான் டியூட்டி என்று சொல்லி அம்மாவைப் பார்க்க கிளம்பும்போது, பின்னாலேயே வந்து பிடித்துக் கொள்வானோ என தன்னையறியாமல் படபடத்தது. தன் சொந்த வீட்டிற்கு இத்தனை பயத்துடன் திருட்டுத்தனமாக செல்ல வேண்டியிருக்கும் என்று முன்பு யாராவது சொல்லியிருந்தால் கிண்டல் செய்து சிரித்திருப்பாள்.

உள்ளே நுழையும் போது வீட்டின் அமைதி முகத்தில் அறைந்தது. சமையலறையில் பாலம்மாவின் குரல் கேட்கவில்லை. பூஜை அறையில் கந்த சஷ்டி கவசமோ, முன் ஹாலில் டி.வி.யில் அப்பா கிரிக்கெட் பார்க்கும் சத்தமோ இல்லாமல் அமைதியாக இருந்தது. அந்த அமைதியே ஒருவித பயத்தைத் தர வேகமாய் உள்ளே சென்றாள் சுதி. படுக்கை அறையில் சரஸ்வதி துவண்டுப் போய் படுத்திருந்தாள். செய்வதறியாது விஸ்வநாதன் மனைவியின் நெற்றியை தடவியபடி அருகிலேயே அமர்ந்திருந்தார். சுதி வந்ததைக் கூட கவனிக்காதவரின் அருகே போய் "அம்மாவுக்கு என்னப்பா?" என்றாள் சுதி.

சுதியைப் பார்த்ததும் அவர் கண்களில் ஒரு ஆறுதல் தெரிந்தது.

"நாலு நாளா ஜுரம்மா. குறையவே இல்லை. இங்கயே ஒரு டாக்டர்கிட்ட காட்டி மருந்து வாங்கி கொடுத்தேன். ஆனாலும் சரியாகல. ஒரு வாய் சாப்பிடல. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல்ல" சொல்லும்போதே குரல் கமறியது.

"என்னப்பா இது? அம்மாவுக்கு இப்படி முடியாம இருக்கு. எனக்கு ஒரு போனாவது செய்யக் கூடாதா? அம்மா தினமும் என்கிட்ட பேசுவாங்க. நாலுநாளா பேசலைன்னதும், நாமதான் வேலைல பிஸியா இருந்ததுல அட்டெண்ட் பண்ண முடியல போலிருக்கு. நேர்லயே போயிருக்கலாம்னு கொஞ்சம்

அசிரத்தையா இருந்துட்டேன். நீங்களாவது நம்ம ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு வந்திருக்கக் கூடாதாப்பா?'' சரஸ்வதியை பரிசோதித்தபடியே பேசினாள் சுதி.

''நீ என்னம்மா சொல்ற?'' குழப்பத்துடன் பார்த்தார் விஸ்வநாதன். ''நான் போன் செஞ்சப்ப நீ வெளியூர் கேம்ப் போயிருப்பதாக மாப்பிள்ளை சொன்னாரே?''

''ஓ! ஆமாம்ப்பா, மறந்துட்டேன்'' என்ற சுதியை விநோதமாய் பார்த்தார் விஸ்வநாதன். சரஸ்வதிக்கு ஒரு பாராசிட்டமால் இன்ஜெக்ஷன் கொடுத்ததும் ஜூரம் சற்று இறங்கியது. மகளை பார்த்ததும் முகம் மலர்ந்து போனது. ஆர்வத்துடன் கைகளைப் பற்றி கொண்டு ''நான் படுத்து கிடந்தாதான் பார்க்க வருவியா சுதி?'' என்றாள்.

''ஏம்மா, இப்படி பேசற?'' என்ற சுதிக்கு மேலே பேச முடியாமல் கண் கலங்கியது.

விஸ்வநாதன் சரஸ்வதியை அதட்டினார். ''எதுக்கு தேவையில்லாம ஏதேதோ பேசி உன் உடம்பையும் கெடுத்துக்கிட்டு அவளையும் சங்கடப்படுத்தற?''

''அம்மாவை ஒண்ணும் சொல்லாதீங்கப்பா'' என்ற சுதி ''இதோ வருகிறேன்'' என்று சமையலறைக்கு சென்றாள். அங்கு சமைத்தற்கான அடையாளமே தெரியவில்லை. மகளுக்கு உதவி செய்ய பின்னாடியே வந்த விஸ்வநாதனிடம் ''பாலம்மா கூட ஏம்ப்பா வரல?'' என்றாள்.

''அவ சொந்தத்துல கல்யாணமாம். கோயம்புத்தூர் போய்ட்டு பக்கத்துல பொள்ளாச்சி எல்லாம் போய்ட்டு வரேன்னு லீவு கேட்டா. இத்தனை வருஷமா நம்ம வீட்டை விட்டா அவ வீடுன்னு சென்னையையே தாண்டாதவ. சரி போயிட்டு வரட்டுமேன்னு அம்மா ஒரு வாரம் லீவும் பணமும் கொடுத்து அனுப்பி வெச்சா. இப்படி முடியாம போகும்னு யாருக்கு தெரியும்?''



உள்ளூரிலேயே மகள் இருந்தும் பெற்றவர்களுக்கு எதுவும் செய்ய முடியாத நிலையில் வேலைக்காரியை நம்பியிருக்கும் குடும்பத்தின் அவலம் மனசை அழுத்தியது. காய் நறுக்குவதும், அரிசிக்களைவதுமாய் விஸ்வநாதனும் சமையலறையிலேயே சுற்றிக் கொண்டிருந்தார்.

''நீங்க போய் உட்காருங்கப்பா. ஒரு சாதம், ரசம் வைக்க எத்தனை நேரம் வேணும்? நான் நிமிடத்தில் செய்து கொண்டு வருகிறேன். ஆனால், அப்பா நீங்க சமையல் கட்டுக்குள் வந்து இப்போதுதான் பார்க்கிறேன்.''

''என்னம்மா செய்யறது? முன்னெல்லாம் என் தங்கைகள் கல்யாணம் ஆகிறதுக்கு முந்தி கூட்டுகுடும்பமா இருந்தப்ப, உங்கம்மா தான் சமையல் வேலையெல்லாம் செய்வா. பொண்டாட்டிக்கு இதுதானே வேலைன்னு நான் என் வேலையைப் பாத்துட்டு இருந்தேன். இப்ப நீ உன் வீட்டுக்கும் மருத்துவமனைக்குமாய் ஓடி களைத்து போய் வந்திருக்கும் போது என்னால் எப்படி சும்மா உட்கார்ந்திருக்க முடியும்?''சுதி அதற்கு மேல் அவரை வற்புறுத்தாமல் சமையலை கவனித்தாள்.

சாப்பாடு விரைவில் தயாராகியது. சரஸ்வதிக்கு சாதத்தில் ரசம் விட்டு கரைத்துக் கொடுத்தாள். சாப்பிட்டதும் மகளை அருகே அமர்த்தி முகத்தை வருடினாள் சரஸ்வதி. ''இப்படி இளைச்சிப் போயிட்டியே கண்ணு! ஏதாவது விசேஷமா?''

சுதி ஒரு பலவீனமான புன்னகையை உதிர்க்கையில் விஸ்வநாதன் குறுக்கிட்டார். ''பாவம் குழந்தை பசியோட இருப்பா சரஸ்வதி. சாப்பிட்டு விட்டு வரட்டும். நான் உன் அருகில் இருக்கிறேன்'' என்றார்.

''நீங்களும் சரியாவே சாப்பிடறதில்லை. எங்கிட்ட யாரும் இருக்க வேண்டாம். இரண்டு பேரும் போய் நல்லா சாப்பிடுங்க. இந்த பொண்ணு வர்றதா ஒரு போன் பண்ணி

யிருந்தா ஏதாவது வாய்க்கு ருசியா சமைச்சிருப்பேனே!'' சற்றுமுன் காய்ச்சலில் கண் திறக்காமல் கிடந்ததையும் மறந்து சரஸ்வதியின் பெற்ற மனம் புலம்பியது.

''அம்மா, நீங்க அமைதியா ரெஸ்ட் எடுக்கணும். அப்பாவும் நானும் சாப்பிட்டுவிட்டு வருகிறோம். வாங்கப்பா'' என அவரை டேபிளில் உட்கார வைத்து சாதம் போட்டாள் சுதி.

''நீயும் உட்காரும்மா'' என்றதும் அருகே அமர்ந்து தன் தட்டிலும் பரிமாறிக் கொண்டாள். வேக வைத்த பருப்பையும், எண்ணெயில்லாத பீன்ஸ் பொரியலையும், ரசத்தையும் திரும்ப திரும்ப கேட்டு வாங்கி சாப்பிட்டார் விஸ்வநாதன்.

''சுதி இப்பதாம்மா முதன்முறையா உன் சமையலை சாப்பிடறேன். எவ்வளவு நல்லா சமைக்க கத்துக்கிட்ட நீ? எங்கம்மா கையால சாப்பிட்ட மாதிரி இருக்கு.''

அப்பாவின் பாராட்டு சமையலுக்காக இல்லை. அவரது பாசத்தின் வெளிப்பாடாக தெரிந்தது. நெருக்கமானவர்களிடம் அன்பைக் காட்ட சொல்லப்படும் அத்தனை வார்த்தைகளிலும் உயர்ந்தது அவர்களை தன் தாய் ஸ்தானத்தில் வைத்து பார்ப்பதுதான். வயிற்றுக்கும், பசிக்கும் இதமான உணவை தயாரித்து பரிவுடன் அருகிலிருந்து பரிமாறிய சுதியை அப்போதுதன் வளர்ந்து விட்ட பெண்ணாக பார்த்தார் விஸ்வநாதன்.

''இப்படி உன் கூட உட்காந்து சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சி சுதி? கல்யாணம்ங்கிற பேர்ல உன்னை எங்கேயோ தொலைத்து விட்டு தினமும் தேடிக் கொண்டிருக்கிறோம். ஒரு தகப்பனா இருந்து உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சி கொடுக்கற கடமையில் இருந்து தவறிட்டனோன்னு தோணுது. விருப்பமே இல்லாதவளுக்கு விலங்கு மாட்டி உள்ளே தள்ளிவிட்டுட்டேன்.''

இடது கையால் எட்டி அவர் கைகளை பிடித்தாள் சுதி.



''ஏம்பா இப்படியெல்லாம் நினைச்சிக்கிறீங்க? நான் சந்தோஷமாத்தான் இருக்கேன்.''

''அப்படின்னு உன் வாய்தான் சொல்லுது. கண்ணுல உண்மை தெரியுது. நீங்க எல்லாரையும் போல சராசரி வாழ்க்கை வாழவில்லை. என்னவோ பிரச்சனை இருக்கு. ஆனா அது என்னன்னுதான் தெரியல. குமார் யார்கிட்டயும் சரியா பேசறதில்ல. நீயும் சொல்ல மாட்டேங்கிற. சுதி, உன்னை பெத்தப்ப நாங்க ரொம்ப சந்தோஷப்பட்டோம். உன்னால் குணமடைந்தவர்களும், உன்னிடமிருந்து உதவி பெற்றவர்களும் உன்னை வாழ்த்தும் போது பெருமையடைந்தோம். உன் வளர்ச்சியை வெற்றியை உன் தோழர்களும், சீனியர் டாக்டர்களும் பாராட்டும்போது பூரித்தோம். ஆனா இப்ப வயசான காலத்துல உன்னை நினைச்சி நொந்து சாகணும்னு தலையெழுத்து போலிருக்கு'' விபரம் தெரிந்த நாளாய் பெரிதாய் துக்கம் எதையும் காண்பித்துக் கொள்ளாமல் கம்பீரமாய் வளைய வரும் அப்பா உடைந்து போவதை பார்க்க அதிர்ச்சியாய் இருந்தது.

''அப்பா என்ன இது? எனக்கும் அம்மாவுக்கும் உங்களை விட்டா யார் இருக்கா? நீங்களே இப்படி கலங்கி போனால் எங்களால் தாங்க முடியுமா சொல்லுங்க? அம்மா படுத்ததும் உங்க மனசு பலவீனமாயிடிச்சி. அம்மாவுக்கு சாதாரண காய்ச்சல்தான். பயப்பட எதுவுமே இல்லை. நாளைக்கு அவங்க ப்ழையபடி வேலை செய்ய ஆரம்பிச்சிடுவாங்க. நீங்கதான் அவங்களை தேற வைக்கணும்.''

என்னன்னும்மா தேத்தறது? இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்கும் போது மனசில் ஒரு வெறுமைதான் வருகிறது. உன் அம்மா புலம்புகிற மாதிரி பேரன் பேத்தி ஏதாவது இருந்தாலாவது எங்க வாழ்க்கை நிறைவடைஞ்ச மாதிரி இருக்கும்.

"அப்பா எங்கூட படிச்சவங்கள்ள பாதிபேர் வெளிநாட்டில் செட்டில் ஆயிட்டாங்க. அவங்க பெற்றோர்கள் இங்கதான் இருக்காங்க. அவங்களுக்கு பேரன் பிறந்தா கூட இன்டர் நெட்டிலும், ஈமெயிலிலும் தான் கொஞ்ச வேண்டும். டெலிபோனில் பேரக் குழந்தைகளின் அழுகையை கேட்டு, போனிலேயே சமாதானப்படுத்த வேண்டும். மூன்று மாதம் அல்லது ஆறு மாதம் வெளிநாடு போய் குழந்தைகளுடன் தங்கியிருந்து விட்டு வந்தாலும் கூட அந்த குழந்தைகள் வளர வளர தாய்மொழியை மறந்து, உடை, பழக்கவழக் கங்கள் எல்லாம் மாறி இருவருக்கும் இடையே ஒரு அந்நிய தன்மை வந்துவிடுகிறது. இருந்தாலும் கூட அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் ஒரு சிலர் வாழ்க்கையை எளிதாக்கிக் கொள்கிறார்கள். என் சின்ன வயசில் நாம் இருந்த தெருவில் ஒரு வயதான தம்பதிகள் இருந்தார்கள். நினை விருக்கிறதா? தீபாவளிக்கு அந்த மாமாவும் மாமியும் புதுஉடை உடுத்திக் கொண்டு வாசலில் நின்று பட்டாசு வெடிப்பார்கள். பொங்கலுக்கு மாமி மஞ்சள் குங்குமம் தலை நிறைய பூவுடன் சூரியன் பொங்கல் வைக்கும்போது மாமா பக்கத்திலேயே ஜரிகை கரை வேஷ்டி உடுத்தி அமர்ந்து கொண்டு அடுப்பை நன்றாக எரியவிடுவார். என்னையும் மாலதியையும் அடிக்கடி கூப்பிட்டு சாக்லேட் எல்லாம் கொடுப்பார்கள்.

"ஏது மாமி?" என்றால். "என் பையன் வெளிநாட்டி லிருந்து அனுப்பி இருந்தான்" என்பார்கள். "அவர் பண் டிகைக்கு வரலியா மாமி?" என்றால் "அவனுக்கு அங்கே நிறைய வேலை. அவ்வளவு தூரத்திலிருந்து அடிக்கடி வந்து போக முடியுமா?" என்பார் மாமா.

"அப்ப நீங்களாவது அங்கயே போயிடலாமே, ஏன் இங்க தனியாய் இருக்கீங்க?" என்பாள் மாலதி.

"எங்களுக்கு அங்க மனசு ஒட்டலை. அவா எல்லாம் வீட்டுக்குள்ளேயே உலகத்தை கொண்டு வந்துடறா. ஆனா



எங்களுக்கு இப்படி வாசல்ல நின்று பரந்தவெளியை அண்ணாந்து பாக்கணும். வாய் வலிக்க வம்பு பேசினாலும் தமிழ்ல பேசணும். ஆயிரத்தெட்டு குறை சொல்லிக்கிட் டாவது அடுத்தவா வீட்டு நல்லது கெட்டதுகளில் கலந்துக் கணும். விடியற்காலையில் எழுந்து வாசலில் போட்டிருக்கும் கோலங்களை மிதித்துக் கொண்டே கபாலீஸ்வரரையும் கற்பகாம்பாளையும் போய் பாத்துட்டு வரணும். செத்தப்புறம் கூட நான் பிறந்த மண்ணில் வாழும் புழுக்களுக்குத்தான் என் உடல் உணவாகணும்."

"அப்ப உங்க குழந்தைங்க கூட இல்லையேன்னு உங்களுக்கு வருத்தமே இல்லையா?"

அவங்க நினைவு எப்பவும் கூடவேதான் இருக்கு. ஆனா வருத்தமெல்லாம் இல்ல. அவங்க கஷ்டப்பட்டாதான் வருத்தம் வரும். அவங்க நல்லா இருக்காங்க. அவங்களுக்கு பிடித்த வேலையை செஞ்சிகிட்டு சந்தோஷமா இருக்காங்க. பிறகு ஏன் அவங்களை நினைச்சி நாங்க கஷ்டப்படணும்? எங்க வருத்தம் அவங்களுக்கு ஒரு சுமையா மாறிடக் கூடா தில்லையா? அதனால எங்க வாழ்க்கையை எங்களுக்கு பிடிச்ச மாதிரி நாங்க வாழறோம். சிறு வயதுகளில் ரொம்ப முன்கோபி இந்த மாமா. யாரும் கிட்ட போய் பேசவே பயப்படுவார்கள். இப்ப எப்படி மாறிட்டார் பாத்தியா? திரு மண வாழ்வில் முன்பாதி கோபம், வேகம், படபடப்பு, ஆர்வம் எல்லாம் இருக்கும். பின்பாதியில் அன்பும், அனுசரணையும் தான் மிகுதியாக இருக்கும். அதை அனுபவித்து வாழ பழகிக் கொள்ள வேண்டும்" என்றாள் பாட்டி. "நீங்களும் அவங்களை மாதிரி வாழ்க்கையை ஏன் எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது? உங்க பிரியத்தையும், எதிர்பார்ப்புகளையும் என்னை சுற்றி மட்டுமே வைத்து இருக்காமல் உங்க வாழ்வை இன்னும் பயனுள்ளதாக்க அல்லது சுவாரஸ்யமாக்க முயற்சி செய்யுங்கப்பா."

விஸ்வநாதனிடம் பலவிதமாக பேசி ஆசுவாசப்படுத்தினாள் சுதி.

இரவு மணி பதினொன்றாகவே குமாருக்கு போன் செய்து இன்று அம்மா வீட்டிலேயே தங்கப் போவ்தாக கூறிவிட்டு அவன் பதில் பேசுவதற்குள் போனை அணைத்தாள். குமார் நிச்சயம் இரவெல்லாம் தூங்கமாட்டான். அவனை துரத்தும் கற்பனைகளின் பயத்தில் அவன் அலை மோதுவதை நினைத்து வேடிக்கையாகக் கூட இருந்தது. திருமணமானதிலிருந்து முதன் முறையாக அவன் அனுமதியின்றி இங்கே தங்கியிருக்கிறாள். அனுமதி கேட்டாலும் அவன் கத்தப் போகிறானே தவிர, உதவி எதுவும் செய்யப் போவதில்லை.

ஒரு விஷயத்தை செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்த பின் எதற்கு வீணான வாதப்பிரதிவாதங்கள்? போனை பிறகு எதிர்கொள்ளலாம். முடிவெடுத்தவளாய் அம்மாவின் அறைக்கு சென்று டெம்ப்ரேச்சர் பார்த்தாள். நூற்று ஒன்று இருந்தது. அப்பாவிடம் எழுதிக் கொடுத்து மெடிக்கல்சிலிருந்து வாங்கி வந்த மாத்திரைகளை கொடுத்து விழுங்க செய்தாள். மாத்திரை சாப்பிட்டுவிட்டு படுத்த சிறிது நேரத்தில் வியர்க்கத் தொடங்கியது சரஸ்வதிக்கு. லேசாய் கண் அயர்ந்தாள். மனைவியின் முகத்தை துண்டால் ஒற்றியெடுத்த விஸ்வநாதன் "சுதி நீ மேல போய் உன் ரூம்ல படும்மா" என்றார்.

"இல்லப்பா நானும் இங்கேயே படுத்துக் கொள்கிறேன்" என சோபாவில் சரிந்தவளை எழுப்பி, "போம்மா, போய் வசதியா படுத்து தூங்கு. இரவு தேவைப்பட்டால் உன்னை கட்டாயம் எழுப்புகிறேன்" என வற்புறுத்தி அனுப்பினார் விஸ்வநாதன்.

மேலே தன் அறைக்கு வந்த சுதிக்கு அங்கே எதையோ



ஆராய்ந்தாள். அறையும் பொருட்களும் எப்போதும் போலவே சுத்தமாக இருந்தன. சுவர்களில் அவளுக்கு பிடித்த இள ரோஜா வண்ண டிஸ்டெம்பர். அதே நிறத்தில் பிராஸோ வேலைப்பாட்டில் திரைச்சீலைகள், பெட் விரிப்புகள், தலையணை உறைகள் எல்லாம் கண்ணை கவர்ந்தன. உலகத்திலேயே அவளுக்கு பிடித்த இடம் எது என்று கேட்டால் இந்த வீடும், அதில் இந்த அறையும்தான் என்று சொல்வாள். கான்கிரீட், சுவர்களும், பளிங்குதரையும் வீட்டை அழகுபடுத்துவதில்லை. இதை அவளுக்காக உருவாக்கி கொடுத்திருக்கும் அப்பாவின் மனசும், தொடர்ந்து பராமரிக்கும் அம்மாவின் அன்பும் அந்த அறையை மிக அழகானதாக்கியிருந்தன.

குமாரின் அருகில் வெறும் கூடாய் கிடக்கும் நிமிடங்களில் மனம் இந்த அறையை தஞ்சமடையும். சலவை மணம் கமழும் படுக்கையல் விழுந்து புரள வேண்டும். மெல்லிய இசை பின்னணியில் டேபிளில் அமர்ந்து படிக்க வேண்டும். மாலைக் காற்றில் பால்கனியில் அமர்ந்து டீ குடித்தபடி லானை பார்க்க வேண்டும். இரவில் ஜன்னல் கம்பிகளை பிடித்தபடி தோட்டத்தில் மலர்ந்திருக்கும் மல்லிகையின் மணத்தையும், மழைக்காலங்களில் மெல்லிதாய் படும் சாரலையும் ரசிக்க வேண்டும் என மிகவும் ஆசையாய் இருக்கும். இன்று அறையின் உள்ளே நிற்கையில். ஒவ்வொரு இடமாய் பார்க்கையில் எதற்கு ஆசைப்பட்டோம் என தோன்றியது? பால்கனியும், படுக்கை விரிப்பும், தோட்டத்து மலர்களும் அப்படியேதான் இருந்தன. ஆனால் என்னால் முன்பு மாதிரி நிச்சலனமாய் படுத்ததும் தூங்க முடியவில்லையே! இத்தனை நாள் குமாருடன் இருக்கையில் தான் ஏங்கியது இந்த வீட்டை நினைத்து அல்ல. தன் கடந்த காலத்தை தான் தேடியிருக்கிறோம் என்பது சட்டென புரிந்தது சுதிக்கு.

காலையில் கண்விழித்து கீழே போகும்போதே பாலம்மாவின் குரல் கேட்டது. "நான் இல்லாதப்ப பாத்து படுத்துட்டியேம்மா" என அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தாள். சுதியை பார்த்ததும் ஓடி வந்து, "நல்லா இருக்கியா தங்கம்?" என முகத்தை வருடினாள்.

"எனக்கு ஒரு டீ கிடைக்குமா பாலம்மா?" என்றதும் "இதோ" என உள்ளே ஓடினாள்.

சரஸ்வதிக்கு காய்ச்சல் குறைந்திருந்தாலும் உடல் வெதுவெதுப்பாக இருந்தது. சுதிக்கு காலையில் பிரகாசம் மருத்துவமனையில் முக்கிய கேஸ் ஒன்றிருந்தது. முன்னறிவிப்பின்றி விடுமுறை எடுத்தால் டாக்டர் சுகுமார் ரொம்ப கோபிப்பார். என்ன செய்யலாம் என யோசித்தபோது சரஸ்வதி சொன்னாள். "நான் நல்லா இருக்கேன் சுதி. இன்னும் ஒரு டோஸ் மருந்து சாப்பிட்டா இந்த வெதுவெதுப்பு கூட இருக்காது. உன்னை பாத்ததிலேயே பாதி குணமாயிடிச்சு. நீ கிளம்பு வேலைக்கு. அப்பா இருக்கார். பாலம்மா இருக்கா. பாத்துக்குவாங்க" என்றாள்.

வேறுவழியின்றி மருத்துவமனைக்கு சுதி புறப்பட்டு சென்றாள். மாலையில் அவள் போன் செய்தபோது அப்பாதான் பேசினார்.

"அம்மா தூங்கறாம்மா. காய்ச்சல் இல்லை. நீ வீணாய் இங்கும் அங்குமாய் அலையாதே. நேத்தே இங்கு சரியாய் தூங்கவில்லை. இன்னிக்கு மருத்துவமனையிலிருந்து நேராய் உன் வீட்டிற்கு போய் சாப்பிட்டு விட்டு சீக்கிரம் தூங்கு" என்றார்.

அம்மாவுக்கு குணமாகியிருக்குமா? நான் அலைய வேண்டாம் என்பதால் அப்பா சொல்கிறாரா? என யோசித்தபடியே வீட்டிற்கு போனாள் சுதி.

குமார் வாசலிலேயே உட்கார்ந்திருந்தான். இரவெல்லாம் தூங்காததால் சிவந்த கண்களும், வெறி பிடித்த பார்வையு



மாய் அவனை பார்த்தபோது ஒரு நிமிடம் உதறத்தான் செய்தது. வேகமாய் அவனை தாண்டிக் கொண்டு உள்ளே நுழையவும் பின்னாடியே வந்த அவன் "நில்லுடி. இது என்ன வீடா? இல்ல வேற தொழில் நடத்தற இடமா? இரவெல்லாம் வெளியே போய் சுத்திட்டு எவ்வளவு தைரியம் இருந்தா வீட்டிற்குள் வருவ?"

"நான்தான் போன் பண்ணி சொன்னேனே! எங்கம்மாவுக்கு காய்ச்சல்..." முடிக்கும் முன் குறுக்கிட்டான். "உங்கம்மா என்ன செத்தா போயிட்டா? கட்டிக் கொடுத்த பெண்ணை காய்ச்சல், தலைவலின்னு சொல்லி எப்ப பாரு வரச் சொல்றது எதுக்கு? உங்கப்பனுக்கு மட்டும் பொண்டாட்டி கூட இருக்கணும். ஆனா மகளை வாழ விடமாட்டானா?"

மனநோய் பிடித்த இவனது அநாகரீகமான வார்த்தைகளை பொருட்படுத்துவது அபத்தமானது என்பதை நினைவுபடுத்திக் கொண்டவளாய் "ஒரு நாளைக்கு ஏன் இந்த அட்டகாசம் பண்ற குமார்?" என்றாள் சுதி.

"ஒரு நாள்னு அவ்வளவு லேசா சொல்ற அளவுக்கு ஊர்மேயறது உனக்கு பழகிப் போயிடிச்சி இல்ல? உனக்கு சப்போர்ட்டுக்கு சுத்தி ஆள் இருக்கற திமிர்லதான இப்படியிருக்க. சுத்தமா அவங்க தொடர்பே இல்லைன்னாதான் நீ அடங்குவ. சொல்லு, ரவி கூட தங்கினியா இல்ல கிரிகூட போனியா? நீ மட்டுமா? இல்ல அந்த மாலதியும் வந்தாளா? அந்த புரோக்கர் பாலம்மாதான் கூட்டிட்டு போனாளா?" என அவனுக்கு தெரிந்த சுதியுடன் பழகிய அத்தனை பேரின் பெயர்களையும் அசிங்கத்தில் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தான். குமார் பேச பேச இரண்டு நாள்விடாத அலைச்சலில் உடம்பு அசத்தியது. 'அப்பா அம்மாவுக்கு இரவு மருந்து கொடுத்திருப்பார். காலையில் மறுபடி ஜுரம் இருந்தால் கண்டிப்பாய் ப்ளட் டெஸ்ட் எடுக்க வேண்டும்?' எண்ணங்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்க கண் தானாய் சொருகியது.

குமார் ரௌத்ரமானான். "ஏண்டீ, நான் பேசினா உனக்கு தூக்கம் வருதா? ஊர்ல இருக்கற எல்லா ஆம்பளைங்க கிட்டயும் சிரிச்சி சிரிச்சி பேசற. புருஷன் பேசினா மட்டும் கசக்குதா? ஒரு கையால் கழுத்தை இறுக்கிப் பிடித்தான். அதை எதிர்பாராத சுதி அவனிடமிருந்து விடுபட போராடி னாள். பிடி இறுகியதே தவிர தளரவில்லை. அவன் கைகளை அசைக்கவே முடியவில்லை. மூச்சு திணறத் தொடங்கியது. சுற்றிலும் கண்களை ஓட்டியவளின் கண்களில் டீபாய் மேலிருந்த பூச்சாடி பட்டது. மெதுவாய் காலில் டீபாயை நகர்த்தியதும் ஜாடி கைக்கெட்டும் தூரத்திற்கு வந்தது. எட்டி எடுத்தவள் பூச்சாடியை தூக்கி கதவின் மேல் வீசினாள். அது குறி தவறி ஜன்னலில் பட்டு கண்ணாடி உடைந்து சிதறியது. சத்தம் கேட்டு கூர்க்கா ஓடி வந்தான். வீட்டை சுற்றி தேடிப் பார்த்தவன் யாருமில்லாததால் வீட்டுக் கதவை. பலமாக தட்டினான். ஒரு நிமிடம் அசையாமல் நின்ற குமார் கதவு விடாமல் தட்டப்படவும் சுதியை விட்டுவிட்டுப் போய் கதவைத் திறந்தான்.

"ஸாப், கண்ணாடி உடைந்திருக்கிறது. வெளியே யாரும் போன மாதிரி தெரியவில்லை. உள்ளே யாராவது வந்தார் களா?" விசாரித்தான்.

"என்னய்யா அநியாயம் இது? எம் பொண்டாட்டிய நான் தொட்டா ஊர்ல இருக்கற அத்தனை பேரும் வந்துர்றீங்க. உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம் சொல்லு?"

"ஸாப்" பயந்து பின்வாங்கினான் கூர்க்கா.

சுதியிடம் திரும்பினான். "சொல்லுடி உன்னை அடிச்சா அவனுக்கு ஏன் வலிக்குது?"

பதில் சொல்லாது வெறித்தாள் சுதி. 'எதற்கு இத்தனை வெறி? எத்தனை வருஷத்து அழுத்தம் இது? யார் மீது உள்ள



தேடுகிறாய்? கணவன் முன் அப்பாவியாய் நடித்து, அவன் முதுக்கு பின் அவனை சேர்ந்தவர்களை துன்புறுத்தும் பெண்தான் பிடிக்குமா உனக்கு? நீ நீயாக இல்லை. அதனால்தான் நான் நானாக இருப்பதை உன்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நீ வெறி பிடித்து இப்படி ஆடும் போதெல்லாம் நான் பயந்து கலங்கி நீ பழி போடும் போது 'ஐயோ நான் எந்த பாவமும் அறியாதவள்' என உன் காலில் விழுந்து கதறி, உன் ஈகோவுக்கு தீனி போட வேண்டுமா? நான் சுதி குமார். உனக்காக உயிரையும் தருவேன். ஆனால் நான் என்னிலிருந்து விலக மாட்டேன். உனக்காக என் உடலையே செருப்பாக தைத்துப் போட்டாலும் அதில் குற்றவுணர்வு சிறிதுமின்றி ஒரு மகாராஜாவின் பெருந் தன்மையுடன்தான் அணிந்து கொள்வாய். என் எல்லை மீறிய சகிப்பு தன்மையை என் இயலாமையாக பாவிக்கிறாய். உன் பலவீனங்களை சுட்டிக்காட்டாத என் பெருந்தன்மையை உன் ஆண்மைக்கான அங்கீகாரமாய் பார்க்கிறாய். நான் என்ன செய்தாலும் எப்படி நடந்தாலும் உன்னை சந்தோஷபடுத்தி விட முடியாது. ஏதாவது ஒரு ஷாக் கொடுத்துதான் உன்னை சரியாக்க வேண்டும்.' முடிவெடுத்தவளாய் மேலே போனாள் சுதி.

நடு இரவில் அவளை எழுப்பி, "எனக்குதான் உங்க வீடே பிடிக்காதே அங்க எதுக்கு போன?" என்றான் குமார்.

எரிச்சலெடுத்த கண்களை தேய்த்துவிட்ட சுதி எழுந்து போய் தண்ணீர் குடித்துவிட்டு வந்து அமர்ந்தாள்.

"உனக்கு பிடிச்சது எதுன்னு சொல்லு குமார். அதை யாவது செய்யறேன். இதுவரை நீ எந்த விஷயத்தையுமே பிடிக்கலைன்னு சொல்லித்தான் கேட்டிருக்கிறேன். பிடிச்ச துன்னு இனிமேவாவது ஏதாவது சொல்லு. அந்த மாதிரி செய்ய பார்க்கிறேன். அட்லீஸ்ட் உங்கம்மாவையாவது உனக்கு பிடிக்குமா? அப்படியானால் வா அவங்களையாவது

பார்த்து விட்டு வரலாம். உலகில் உனக்கு பிடித்த யாராவது ஒருவர் பெயரை சொல். நான் அங்கே போகிறேன்'' என்றாள்.

பதில் சொல்லாத குமார். இரவெல்லாம் எழுப்பி திட்டுவதும், அடிப்பதும் அறைக்குள்ளே நடப்பதுமாய் இருந்தான். மனைவி என்பதை மறந்து போய் ஒரு மருத்துவராய் அவனை மனதுக்குள் பரிசீலிக்க முற்பட்டாள் சுதி.

* * *

ஒரு பார்வையாளரைப் போல் வீட்டில் நடப்பதை தூரப் பார்வையாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

காலையில் எழும்போது தலை கனத்து கண்கள் எரிந்தன. உடல் அணுஅணுவாய் வலித்தது. படி இறங்கி வரும்போது கால்கள் வெடவெடத்தன. சமையலறையில் இட்லிக்கு ஒரு அடுப்பில் வைத்துவிட்டு, பருப்பை குக்கரில் வைத்துவிட்டு, தனக்கு ஒரு டீயுடன் வந்து ஹாலில் அமர்ந்த போது அசத்தியது. மெதுவாய் டீயை பருகும்போது மஞ்சு அத்தையின் நினைவு வந்தது. விஸ்வநாதனின் தங்கை. உள்ளூரிலேயே வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவள் கணவர் மிகவும் முன்கோபி. ஆனால் வெகுளியும் கூட. கீழே ஒரு பொருள் கிடந்தால் பிடிக்காது. 'யார் கீழே போட்டது? பொறுப்பற்றவர்கள்' என தொடங்கி மனைவியை கண்டபடி கத்திய பிறகு தான் கீழே கிடக்கும் பொருள் என்னவென்று பார்ப்பார். அது சில சமயம் குப்பையாகக் கூட இருக்கும். பிறகு தானே எடுத்து கொண்டுபோய் வெளியே போட்டுவிட்டு வந்து ''மஞ்சுளா சாதம் போடறியா?'' என்பார் பணிவுடன்.

மஞ்சுளாவுக்கு அப்போதுதான் ரொம்பவும் கோபம் வரும். கண்ணை கசக்கியபடி ஆட்டோ பிடித்து நேராய் அண்ணன் வீட்டிற்கு வந்துவிடுவாள். அவள் கணவர் போன் பண்ணி கெஞ்சினாலும் போக மாட்டாள். சாதாரண ஊடல் என விஸ்வநாதன் அதை பொருட்படுத்தாமல் இருக்க, சரஸ்வதி நாத்தியை அருமையாய் கவனித்து, பதமாய் அறிவுரை சொல்லுவாள். சுதி கூட சில சமயம் கேட்டிருக்கிறாள்.



''ஏன் அத்தை மாமா குணம்தான் உனக்கு தெரியுமே! ஒரு நிமிஷம் அவர் கத்துகிற போது நீ காதில் விழாதமாதிரி விலகி போய்விடேன். அவர் கத்தியதும் டென்ஷன் குறைந்து நார்மலாகி விடுவார். இதற்காக ஏன் கண்ணை கசக்கிக் கொண்டிருக்கிறாய்?'' என்று.

''எனக்கு இரண்டு காதும் நன்றாய் கேட்கிறபோது நான் எப்படி காதே கேளாத மாதிரி இருக்க முடியும்? செவிடாய் இருந்தால்தான் உண்டு. காது கேட்கிற போது மனசு வருத்தப்படத்தான் செய்யும். மனசு வருந்தும் போது கண்கலங்கும். நீ சின்ன பொண்ணுதானே! நீயும் கல்யாணம் ஆன பிறகு அந்நிய ஆள் வந்து உன்னை அதிகாரம் பண்ணி அவன் ஆண் என்ற திமிரை காட்டினால் அப்போது தெரியும் என் கஷ்டம்'' என்று மேலும் அழுவாள் மஞ்சுளா. சரஸ்வதி அவளை அணைத்துக் கொண்டு, ''நீ ஏன் சுதி அத்தையை அழ வெக்கற?'' என லேசாய் கடிந்து கொள்வாள்.

மூன்றாள் நாள் மிகுந்த சங்கடத்துடன் விஸ்வநாதனை பார்க்க கூச்சப்பட்டுக் கொண்டு மாமா வருவார். ஏகப்பட்ட சமாதானம் சொல்லி மனைவியை அழைத்துப் போவார். ''அண்ணி உன் முகத்துக்காகத்தான் மறுபடி இந்த மனுஷனுடன் போகிறேன்'' என பிகுவுடன் சரஸ்வதியிடம் விடை பெற்று போவாள் மஞ்சுளா. இரவு சாப்பிட அமரும் அப்பா ''என்ன வீடு அமைதியா இருக்கு? மாப்பிள்ளை வெள்ளை கொடியுடன் வந்தாரா?'' என்று சிரிப்பார். இப்போது அத்தையின் பெண்ணுக்கு திருமணமாகி மாப்பிள்ளை வந்த பிறகும் கூட அத்தை மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிறந்த வீட்டிற்கு வருவது நிற்கவில்லை. சுதியின் திருமண சமயத்தில் கூட கணவனுடன் சண்டை என பதினைந்துநாள் இருந்தாள். சுதி அவளை கட்டிக்கொண்டு சொன்னாள். ''அத்தை என்னதான் நீ கல்யாணமாகிப் போனாலும் சாகிறவரை உனக்கு இது சொந்த வீடுதான். இந்த வீட்டில் எனக்கு இருக்கும் சொந்தமும் நெருக்கமும் உனக்கும் உண்டு.

எனவே உன் வீட்டிற்கு நீ சந்தோஷமாக வந்து போகலாம். நீ இங்கிருக்கும் நாட்களை நாம் எல்லோரும் சேர்ந்து மகிழ்ச்சியாய் கழிக்கலாம். மகிழ்ச்சியான நினைவுகளை கொண்டு சங்கடமான தருணங்களை கடக்க முடியாதா என்ன? எனவே சோதனைங்கிற ஆற்றைக் கடக்க, சந்தோஷமான நினைவுகளை படகாக்கி, நம்பிக்கையை துடுப்பாக பயன்படுத்து, அத்தை."

"என் செல்லம்?" என மருமகளின் முகத்தை வழித்தாள் மஞ்சுளா. என் அண்ணின் அறிவும், அண்ணியின் அன்பும் உங்கிட்ட அப்படியே இருக்கு, ஒத்தையா இருந்தாலும் வைரத்தை இல்ல பெத்துருக்காங்க" என்றாள் பெருமையுடன்.

அதற்கு பிறகு மஞ்சுளா கோபித்துக் கொண்டு பிறந்தகம் வந்ததாய் அம்மா சொல்லவேயில்லை. இப்போது யோசிக்கையில் அத்தைக்கும் மாமாவுக்கும் நடந்தது சண்டையே அல்ல. அது ஒரு ஊடல்தான் என புரிந்தது.

## 26

மாடிப்படியில் காலடி ஓசை கேட்டது. குமார் காலை டீக்காக கீழே வந்து கொண்டிருந்தான். குக்கரின் ஓசை பலமாக கேட்கவே உள்ளே விரைந்தாள் சுதி. குக்கரை இறக்கி டீ பாத்திரத்தை வைத்து விட்டு குழம்புக்கு தாளித்தாள். குமாருக்கு டீயை கொண்டுபோய் டேபிளில் வைத்தபோது அவன் பார்வை முகத்தை ஊடுருவியது. அவனையறியாமல் உடல் ஒருமுறை உதறி அடங்கியது. அவள் கன்னத்து வீக்கமும், கழுத்தில் தெரிந்த கீறல்களும், கண்களின் சிவப்பும் அவனை திருப்தி படுத்தியிருக்க முகத்தில் ஒரு புன்முறுவல் வந்தது.

அவனது முறுவல் சுதிக்கு விசித்திரமாய் இருந்தது. அவ்வளவு அழகான இதழ்களும், வரிசைப் பற்களும் ஏன் இப்படி விகாரமான சிரிப்பை தருகின்றன? ஒரு நகைச்சுவை படத்தைப்



பார்த்தால் கூட சிரிக்காதவன், கூட இருப்பவர் வேதனைப் படும் போது எப்படி சிரிக்கிறான்? டாக்டர் ரங்கபாஷ்யம் சொன்னதுபோல் இவனுக்கு அடிப்படையிலேயே கோளாறு. அதை சரி செய்ய நான் எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையுமா? மருத்துவத் துறையில் ஒரு சொல் வழக்கு நடைமுறையில் உண்டு. "ஆபரேஷன் சக்ஸஸ். நோயாளி இறந்து விட்டார்" என்று. அது போல என் முயற்சியும் பொறுமையும் பலனளித்து குமார் சரியாகும் சமயத்தில் நான் இருப்பேனா? இது போல அடிகளையும், பேச்சுகளையும், உழவு மாடாய் செய்யும் வேலையையும் எவ்வளவு நாளைக்கு தொடர முடியும் என்னால்? வேகமாய் வேலைகளை முடித்து கிளம்பி காரை எடுக்கும்போது மனசு வழக்கமான முகமூடியை போட்டுக் கொண்டது. மருத்துவமனைக்கு உள்ளே நுழையும்போதே அதன் பரபரப்பு தன்னிச்சையாய் பற்றிக் கொள்ள தன் பிரத்யேக சிரிப்புடன் நோயாளிகளை கவனிக்கப் போனாள் சுதி.

* * *

மாலையில் டியூட்டி முடிந்து மதர் தெரஸா இலவச மருத்துவமனைக்கு போகும்போது அம்மா போன் செய்தாள். "நான் நன்றாக இருக்கிறேன். உன்னை பார்த்ததும் என் காய்ச்சலுக்கு பயம். ஓடியே போய்விட்டது" என்று சிரித்தாள்.

"நல்லவேளை. என்னை கண்டு அதுவாவது பயப்படுகிறதே!" என்றாள் சுதி நிம்மதியுடன்.

"இன்னிக்கு வர்றியா சுதி? பால் பணியாரம் செய்து வைக்கிறேன் நீ சாப்பிட்டு விட்டு மாப்பிள்ளைக்கும் எடுத்துப் போ" என்றாள் சரஸ்வதி.

"இதுதானே வேண்டாங்கிறது. கொஞ்சம் ஜுரம் விட்ட உடனே சும்மா இருக்க முடியல பாத்தியாம்மா? நேத்தெல்லாம் நீ கண் திறக்காம கிடந்தப்ப நாங்க எவ்வளவு கவலைப் பட்டோம் தெரியுமா? அப்பா உடைந்து போய் அப்பதான் நான் பார்த்தேன். அம்மா உண்மையா சொல்றேன் அப்பா

மாதிரி ஒரு கணவர் கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும். எப்பவும் சுறுசுறுப்பாய் சுற்றிக் கொண்டிருக்கும் நீ ஓய்ந்து போய் படுத்ததும் அவரால் தாங்கவே முடியவில்லை'' என்றாள் சுதி உணர்ச்சியுடன்.

''உங்கப்பா சும்மா மிரட்டுவாரே தவிர குழந்தை மாதிரி மனசு சுதி. சின்ன விஷயத்துக்கும் பயந்துவிடுவார். நான் நன்றாக இருக்கிறேன். இன்னும் நல்லா ரெஸ்ட் எடுக்கறேன். சரியா? நீயும் கவலைப்படாமல் இரு'' என்ற சரஸ்வதி ''இதோ அப்பா வந்துட்டார் பேசு'' என போனை விஸ்வநாதனிடம் கொடுத்தாள்.

''ஹலோ அப்பா ஒரு விஷயம் கேள்விப்பட்டேன் நிஜமா?'' என்றாள் சுதி.

''என்ன விஷயம்மா?''

''உங்க பொண்டாட்டிக்கு உடம்பு குணமானதும் உங்களை கையில் பிடிக்க முடியவில்லையாமே! நிஜமா?''

''நான்கூட அதே மாதிரி ஒரு விஷயம் கேள்விப்பட்டேன் சுதி.''

''என்னப்பா?''

''ஊருக்கே வைத்தியம் பார்க்கிற டாக்டர் நேத்து சாதாரண காய்ச்சல் வந்த ஒரு நோயாளியைப் பார்த்து கலங்கி போனாங்களாமே நிஜமா?'' என்றார்.

சரஸ்வதி நார்மலானதும்தான் அவ்விருவராலும் மூச்சுவிட முடிந்தது. மனதிலுள்ள பாரம் குறையவே ஜாலியாக உரையாட முடிந்தது. தனக்குள் சிரித்தபடியே போனை அணைத்தாள் சுதி.

அன்று ஏதோ பண்டிகை தினமாதலால் தெரஸா மருத்துவமனையில் கூட்டம் குறைவாகவே இருந்தது. தன் கடைசி நோயாளியை அனுப்பிவிட்டு வந்து சுதியின் எதிரில் அமர்ந்தான் கிரி.



''சுதி உன் ஆராய்ச்சி மேற்படிப்பெல்லாம் எந்த நிலையில் இருக்கிறது? அடுத்த மாதம் டெல்லியில் நடக்கும் செமினாருக்கு நீ எதாவது தயாரித்து வைத்திருக்கிறாயா?'' என்றான்.

''இல்லை கிரி. என் படிப்பை கொஞ்சம் தள்ளிப் போட்டிருக்கிறேன்.''

''ஏன்? அடுத்து பேபிக்கான இஷ்யூவில் இருக்கிறீர்களா என்ன?''

''அதெல்லாம் இல்லை. கொஞ்சம் சவாலான ஒரு கேஸை குணமாக்க மனோரீதியாக என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு பிறகுதான் மற்றதெல்லாம்.''

''நம்முடைய வேலையே நோயை குணமாக்குவதுதான். அதற்கும் உன் குடும்ப வாழ்விற்கும், என்ன சம்பந்தம்? நோயாளியை குணப்படுத்த யாராவது குழந்தை பிறப்பை தள்ளிப் போடுவார்களா?''

அந்த நோயாளி கணவனாக இருக்கும் பட்சத்தில் தள்ளிப்போட்டுத்தான் ஆக வேண்டும் என மனதில் நினைத்து கொண்ட சுதி வாயிலை வெறித்தாள்.

ரவி அப்போதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். முகம் மலர்ந்து இருவரும் ஒரே குரலில் 'ஹாய்' என்றார்கள்.

''அடப்பாவி ரெண்டு பேரும் கூட்டத்தை சமாளிக்க முடியாம ரொம்ப கஷ்டபட்டுகிட்டு இருப்பீங்க. உதவி செய்யலாம்னு ஒரு டீ கூட குடிக்காம அவசரமாய் கிளம்பி வந்தேன். இப்படி அரட்டை அடிச்சிட்டு உக்காந்து இருக்கீங்க. உங்களுக்கே நல்லா இருக்கா?'' என்றான் ரவி.

''ஒரு நாள் நாங்க ப்ரீயா இருந்தா உனக்கு பொறுக்காதே! டீ வேணும்னா கேட்டு வாங்கி குடிச்சிக்க. அதுக்காக உதவிக்கு வந்தேன்னு அலட்டாதே. டாக்டர் ப்ரீயா இருக்கார்னா மக்கள் ஆரோக்யமா இருக்கறதா அர்த்தம்'' என்றான் கிரி.

மருத்துவமனையின் உள்ளே சென்று முகம், கை கால்களை கழுவி துடைத்தபடி வந்து அமர்ந்த ரவி, இன் பேஷண்ட் கூட யாரும் இல்லை. இந்த மாதிரி காலியாய் இதுவரை இருந்ததே இல்லை இல்லையா?'' என்றான் ஆச்சரியமாய்.

''என்ன கிரி இவன் இப்படியே பேசிட்டு இருக்கிறான்?'' என்றாள் சுதி.

''உனக்கு வேலை வேணுங்கிறதுக்காக நன்றாக இருக்கிற யாரையாவது பிடித்து நோயாளியாக்கி, பிறகு சிகிச்சை செய்ய வேண்டும் போலிருக்கு.''

''நிஜமாகவே நேற்று அப்படித்தான் நடந்தது சுதி'' என்றான் ரவி.

''என்ன விஷயம்?'' என்றார்கள் இருவரும்.

''நான் தங்கியிருக்கும் அறையின் கீழே மெஸ் வைத்திருக்கும் நாயருக்கு ரொம்ப நாளாய் தலைவலி இருந்திருக்கு. அருகிலுள்ள ஒரு டாக்டரிடம் போய் இருக்கிறார். அவர் தொடர்ந்து ஆறுமாதம் வலி நிவாரண மாத்திரைகளை கொடுத்துவிட்டு எதற்கும் ஒரு நரம்பியல் மருத்துவரை பாருங்கள் என சிபாரிசு செய்திருக்கிறார். நாயரும் அந்த நரம்பியல் மருத்துவரைப் பார்க்க போயிருக்கிறார். முதலில் கன்சல்டிங் பீஸாக ஒரு தொகையை பெற்றுக் கொண்டு அப்பாயின்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்த தேதிக்கு போனதும் ஜூனியர் டாக்டர் நாயரை உட்கார வைத்து அவரை பற்றிய குறிப்புகளை எழுதிக் கொண்டு எம்.ஆர்.ஐ, ஸ்கேன், எக்ஸரே, ப்ளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், என ஒரு பெரிய லிஸ்ட் கொடுத்திருக்கிறார். 'இங்கேயே இந்த டெஸ்ட் எடுத்துக் கொண்டு ரிசல்ட்டுடன் வாங்க' என்று. நாயரும் அந்த மருத்துவமனையிலுள்ள எல்லா உபகரணங்களுக்கும் வேலை கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்திருக்கிறார். திரும்ப அடுத்த வாரம் கிளம்பி ஆட்டோ பிடித்து



மருத்துவமனைக்கு போய் பரிசோதனை முடிவுகளை வாங்கிக் கொண்டு டாக்டரை பார்க்க போயிருக்கிறார். 'நாளைக்கு தான் டாக்டரை பார்க்க முடியும். இன்னிக்கு பணம் கட்டி அப்பாயின்ட்மெண்ட் வாங்கிட்டு போங்க' என்றிருக்கிறார்கள். பணம் கட்டிவிட்டு வீட்டிற்கு வந்து மறுபடி அடுத்த நாள் ஆட்டோவிற்கு செலவழித்து போய் டாக்டரை பார்த்த போது டாக்டர் ''உங்களுக்கு பயப்படும்படியாய் ஏதுமில்லை. டென்சனால் வரும் சாதாரண தலைவலிதான். யோகா செய்யுங்கள். ரொம்ப அலையாதீர்கள்'' என்று சொல்லியிருக்கிறார். தனக்கு வியாதி எதுவுமில்லை என்ற நிம்மதியை விட அதை தெரிந்து கொள்ள செலவழித்த பணம் கவலையைத் தர நெஞ்சைப் பற்றியபடி அங்கேயே சரிந்திருக்கிறார். ஹார்ட் அட்டாக் என ஐ.சி.யு.வில் இருக்கிறார். மருத்துவமனைக்கு லாபமாய் இன்னொரு நோயாளி கிடைத்தார். நாயருக்கோ தலைவலி என்று போய் நெஞ்சு வலியில் முடிந்திருக்கிறது. இவ்வளவிற்கும் இதுவரை என்னிடம் இதைப்பற்றி அவர் எதுவுமே கேட்டதில்லை. ரொம்ப நல்ல மனுஷன். ஒரு சாதாரண மெடிக்கல் அட்வைஸாவது கேட்டிருக்கலாம்'' ஆதங்கத்துடன் சொன்னான் ரவி.

''எந்த வியாபாரத்திலும் ஏமாற்றப்பட்டால் பொருள் நஷ்டமோ, பண நஷ்டமோ தான் ஏற்படும். ஆனால் மருத்துவத்துறையில் மட்டும் மருத்துவர் வியாபாரியானால் ஏற்படும் உயிர் நஷ்டம் ஈடுசெய்ய முடியாது. வரவர மருத்துவர்களிடம் மனப்பூர்வமான அர்ப்பணிப்பு என்பது குறைந்து கொண்டே வருகிறது'' என்றாள் சுதி வருத்தத்துடன்.

''டாக்டர்களிடம் டெடிகேஷன் இல்லைன்னு சொல்றோமே, நோயாளிகளுடம் மட்டும் சின்ஸியாரிட்டி இருக்கிறதா இப்போதெல்லாம் என்றான் கிரி. முன்பெல்லாம் மருத்துவர்கள் மண்ணை கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு போய்

நம்பிக்கையோடு கரைத்து குடித்தார்கள். இப்போது எழுதிக்
கொடுக்கும் ப்ரிஸ்கிரிப்ஷனை தேவைப்பட்டால் கன்ஸ்யூமர்
கோர்ட்டுக்கு போவதற்கு பத்திரப்படுத்துகிறார்கள். எங்கப்
பாவும் ஒரு டாக்டர் என்பது உங்களுக்கு தெரியுமில்லையா?
அவர் கூட இருந்து பார்த்த அனுபவத்தை சொல்கிறேன்.
எங்கப்பாவிடம் அடிக்கடி ஒரு நோயாளி வருவார். 'எனக்கு
நெஞ்சை அடைக்கிறது. மூச்சுவிட முடியவில்லை' என்பார்
ஒருநாள். 'காலை நீட்டவோ மடக்கவோ வரவில்லை'
என்பார் மற்றொரு நாள். வயிற்றுப் போக்கு, வாந்தி, தலை
சுத்தல் என தினம் ஒரு நோயாக சொல்லிக் கொண்டு
வருவார். எங்கப்பா அனுதாபத்துடன் அவருடன் அமர்ந்து
பேசி மருந்து எழுதிக் கொடுத்து, ரெஸ்ட் எடுத்துக் கொள்
ளுங்கள், சத்தான உணவு, காய்கறி, பழங்கள் சாப்பிடுங்கள்
என்று' கூறி அனுப்பி வைப்பார். அவரும் அடுத்த நாளே
வந்து நோய் குணமாகிவிட்டதாக நன்றி சொல்லிவிட்டு
போவார். ஒருநாள் எதேச்சையாக அப்பா அவருக்கு மருந்து
எழுதியிருந்த சீட்டைப் பார்க்க நேரிட்டது. பி காம்ளெக்ஸ்,
அயர்ன் சிரப் எல்லாம் எழுதியிருந்தது. ''என்னப்பா நோய்க்கு
இதுவா மருந்து?'' என்று கேட்டேன். ''எங்கப்பா சிரித்துக்
கொண்டே அவருக்கு நோயே இல்லை கிரி. அவர் தனக்கு
தானே நோய் இருப்பதாக நினைத்து கற்பனை வலியில்
ட்ரீட்மெண்டுக்கு வருகிறார். அவருக்கு அன்பான வார்த்தை
களையும், குணமாகிவிடும் என்ற நம்பிக்கையையும் நாம்
அளித்தால் போதுமானது. வைட்டமின் மாத்திரையை நோய்
குணப்படுத்தும் மருந்து என நம்பி அவர் விழுங்கியவுடன்
உண்மையிலேயே நோய் குணமடைந்து விட்டது பார்த்
தாயா? நோயை குணமாக்குவதில் மருத்துவத்துறையில்
மருந்துகளின் பங்கு பாதி என்றால் மீதி மருத்துவரின் பங்கு''
என்றார் அப்பா. என் அப்பாவை பார்த்துதான் மருத்துவப்பணி
புனிதமானது. நாமும் அதில் நம்மால் முடிந்ததை செய்ய
வேண்டும் என்ற எண்ணமே எனக்கு வந்தது. அப்படி



யிருந்தும் கூட போனவாரம் என்மேல் ஒரு கம்ப்ளைன்ட்
வந்தது தெரியுமா?'' என்றான் கிரி.

''என்ன கம்ப்ளைன்ட்? நீ சொல்லவேயில்லையே?''
என்றான் ரவி.

''சுதி சென்ற வாரத்தில் ஒருநாள் நான் வேலை பார்க்கும்
அருண் மருத்துவமனையிலிருந்து உனக்கு போன் செய்து
வரத் தாமதமாகும் என்று சொன்னேன் நினைவிருக்கிறதா?''

''ஆமாம்'' என்றாள் சுதி.

''அன்று உடம்பெல்லாம் அரிக்கிறது என்று சொல்லிக்
கொண்டு ஒரு பெரியவர் வந்தார். அவருடன் அவருடைய
மனைவி, இரண்டு மகன்கள், டிரைவர் என நிறைய பேர்
வந்தார்கள். பார்த்தவுடனே தெரிந்தது அவருக்கு சாதாரண
பூச்சி கடியால் அந்த அலர்ஜி என்று. அவருடைய வீடு
எங்கேயிருக்கிறது என்று கேட்டேன். ஆந்திராவில் நெல்லூர்
அருகே உள்ள கிராமத்தில் தோட்டத்தில் பெரிய வீடு
கட்டியிருப்பதாக சொன்னார்.

'இரவில் பறக்கும் ஒருவகை பூச்சிகளின் கடியால் வந்த
அரிப்புதான் இது. ஜன்னல்களுக்கு வலை அடித்து வையுங்
கள்' என்று சொல்லி அலர்ஜி மாத்திரை இரண்டு வேளைக்கு
எழுதிக் கொடுத்தேன். அந்த மாத்திரையின் விலை இரண்டு
ரூபாய்தான். ஆனால் அந்த பெரியவருக்கு வந்தது பார்
கோபம். ''அவ்வளவு தூரத்திலிருந்து காருக்கு பெட்ரோல்
செலவழித்துக் கொண்டு இத்தனை பேர் வந்திருக்கிறோம்
என்றால் எதற்கு? நீங்க நன்றாக கவனிப்பீர்கள் என்றுதானே!
ஆனா நீங்க என்னை எந்த டெஸ்டும் பண்ணவில்லை. ஒரு
ப்ளட் டெஸ்ட் கூட பாக்கலை. பி.பி. ஷுகர் செக் பண்ணல.
ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் கலர் மாத்திரை எங்க
ஊர் பஸ் ஸ்டாண்டிலேயே கடை போட்டு விற்பார்கள். அதை
கொடுக்கவா நீங்க படிச்சிட்டு வந்துருக்கீங்க?'' என்றவர்
நேராய் போய் நிர்வாகத்திடம் புகார் கொடுத்துவிட்டார்.

அதை சமாளிப்பதற்குள் நான் பட்ட பாடு..." என்று சிரித்த கிரியுடன் சேர்ந்து சிரித்தனர் சுதியும் ரவியும். மேலும் சில நிமிடங்கள் சுவாரஸ்யமான பேச்சில் கழிய, திடீரென நினைவு வந்தவனாக ரவி சொன்னான், "சுதி உனக்கு தெரியுமா? நம்ம இலவச மருத்துவமனைக்கு ஒரு கைனகால ஜிஸ்ட் கூட கிடைக்கப் போறாங்க?"

"அப்படியா? யார்? உனக்கு தெரிந்தவங்களா ரவி?"

"எனக்கு இல்லை. நம்ம கிரிக்கு ரொம்ப வேண்டியவங்க. டாக்டர் வனிதா. எம்.பி.பி.எஸ். டி.ஜி.ஓ. விரைவில் வனிதா கிரிதர் ஆகப் போறவங்க."

'வாவ்' "கிரி இவ்வளவு நேரம் வளவளத்தியே இந்த குட் நியூஸை முதலில் சொல்ல வேண்டாமா?" என்றாள் சுதி மகிழ்ச்சியுடன்.

"சொல்லலாம்னுதான் இருந்தேன். அதற்குள் ரவி வந்து என்னென்னவோ பேசி பேச்சை மாத்திட்டான்."

"ஆமாடா என்னை சொல்லு! நீ வனிதாவையே நினைச் சிட்டு தட்டுல சாதமே இல்லாம சாப்பிடறதும், பாத்ருமுக்கு போய் குளிக்காமயே வெளியில் வர்றதும், ஊசி போட வேண்டிய நோயாளிக்கு ஆபரேஷன் பண்றதும், நைட் மொட்டை மாடியில் படுத்து கனவு காணும்போது கூப்பிட வந்த வேலைக்காரனுடன் டூயட் பாடியதும் எனக்கு தெரி யாதுன்னா நினைக்கிற?" என்றான் ரவி.

"அடப்பாவி நீ ரமாவை நினைச்சிட்டு செஞ்சதையெல் லாம் நான் செஞ்சதா சொல்றியாடா?" என்றான் கிரி.

"நான் ஏன் உன்னை மாதிரி அலையப் போறேன்? ரமா என்னோட ஆஸ்பெட்டல்லதான வேலை பாக்கறா? அங்கயே பாத்துக்குவேன். ஒருவேளை டியூட்டி மாறிவந்தா கூட போன்லயோ இல்ல அவங்க வீட்டுக்கோ போய் பாத்து பேசிட்டு வந்துடுவேன். உன்னை மாதிரி அம்மா அப்பாவுக்கு



நல்ல பிள்ளையாய் தலையாட்டிட்டு, அப்புறம் எங்கடா பார்க்கலாம்னு உட்காந்து ஏங்கிட்டு இருக்க மாட்டேன்" ரவி விடாமல் கிண்டலடிக்க, கிரி அவனை தோளில் அடிக்க, நண்பர்களின் சண்டை சுவாரஸ்யமாக இருந்தது சுதிக்கு.

"வனிதாவின் ப்ராக்டீஸ் எங்கே கிரி?" என்றாள் சுதி.

"நம்ம ஜி.ஹெச்.சில்தான். ஒண்ணு செய்வோமா சுதி? நீ அந்த வழியாகத் தானே வீட்டிற்கு போவாய். இப்ப வனிதா விற்கு டியூட்டி முடியும் நேரம்தான். வாயேன். அறிமுகபடுத்தி வைக்கிறேன்" என்றான் கிரி.

"ஏண்டா பக்கத்து இலைக்கு பாயாசம் கேட்கற? உனக்கு அறிமுகப்படுத்தும் சாக்கில் நானும் கொஞ்சம் ஜொள்ளு விட்டுக்கறேன்னு நேரடியா சொல்ல வேண்டியதுதானே!" என்றான் ரவி.

"ஆமாம் என் பொண்டாட்டியாகப் போறவளை நான் ஜொள்ளு விட்டா இங்க யாருக்கு என்ன கஷ்டம்?"

"அப்படி போடு."

சிரித்தபடியே ஷட்டரை இழுத்து பூட்டி, வாட்ச்மேனிடம் சொல்லி விட்டு கிளம்பினார்கள்.

அரசு மருத்துவமனையின் கார் பார்கிங்கில் காரை நிறுத்திவிட்டு வந்தபோது கிரி சுதியின் கையைப் பற்றினான். "சுதி அங்க பார். எதிரே வராண்டாவில் அந்த பச்சை புடவை பக்கத்தில்..." முடிக்கும் முன் சுதி குறுக்கிட்டாள்.

"ஆரஞ்சு புடவையில் சாமந்தி பூ மாதிரி நடந்து வருவது தான் வனிதா. கரெக்டா?"

"கரெக்ட். எப்படி கண்டுபிடிச்ச?"

"இத புதுசா வேற கண்டு பிடிக்கணுமா? உன் மூஞ்சியில வழியற அசடை பார்த்தாலே தெரியுதே!"

"சுதி நீயும் இந்த ரவி கூட சேர்ந்துட்ட இல்ல? சரி வாங்க போகலாம்" என்றான் கிரி.

"எங்கப்பா?" என்றான் ரவி.

"உங்களை அறிமுகப்படுத்தி வைக்கத்தான்."

"இந்த கதையே வேண்டாம். எங்களை அறிமுகப்படுத்திக்க எங்களுக்கு தெரியும். உங்க காதல் கச்சேரிக்கு நாங்க என்ன பக்கவாத்தியமா? ஆளை காமிச்சிட்டே இல்ல. நாங்க பேசிக்கிறோம். நீ இங்கேயே உட்காந்திரு." என்ற ரவி கிரியின் செல்லையும் பிடுங்கிக் கொண்டு "வா சுதி" என்றபடி உள்ளே நடந்தான்.

"பாவம். அவனை ஏண்டா அழ வெக்கற?" என்றாள் சுதி.

"இதெல்லாம் ஸ்வீட் மெமரீஸ். எத்தனை வருஷமானாலும் ரெண்டு பேரும் நம்மை நினைவு வெச்சுக்குவாங்க பாரு. அதுவும் கல்யாண சமயத்துல நண்பர்களின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது சுதி." கிரியின் செல்போன் ஒலிக்கவே நம்பரைப் பார்த்துவிட்டு ஸ்விட்ச் ஆப் செய்தான் ரவி.

"கிரியோட செல்லை எதுக்கு பிடுங்கிட்டு வந்த? அவனுக்கு எதாவது முக்கியமான கால் வந்தாலும் வரும்" என்றாள் சுதி.

"அப்படி முக்கியமா கால் பண்றவங்க இன்னும் பத்து நிமிஷம் கழிச்சி பண்ணிட்டு போறாங்க. இப்ப செல் கிரிகிட்ட இருந்தா நாம அவங்க போறதுக்குள்ள வனிதாவுக்கு போன் பண்ணி என் ப்ரண்ட்ஸ் உன்னை பாக்கவறாங்கன்னு சஸ்பென்ஸை உடைச்சிடுவான். எப்படி என் ஐடியா?"

"எப்படி ரவி உனக்கு மட்டும் இப்படி ஒரு அறிவு பொங்கி வழியுது? எதுக்கும் தூங்கறப்ப ஒரு ரப்பர் ஷீட் விரிச்சிக்கோ. ஏன்னா அறிவு அதிகமாகி தலைக்கு வெளியே வந்து தலையணையை நனைச்சிட போவுது."

சிரித்தபடியே இருவரும் வனிதாவை நெருங்கி 'எக்ஸ்யூஸ்மி' என்றார்கள்.



'எஸ்' என்றபடி திரும்பிய வனிதாவிற்கு களையான முகம். சிரிக்கும் போது வரிசை தப்பிய ஒரு பல் கூடுதல் வசீகரத்தை தர "உங்களுக்கு யார் வேண்டும்? யாரை பார்க்கணும்?" என்றாள் சிரித்தபடி.

"நீங்கதான் வேண்டும். உங்களைத்தான் பார்க்கணும்" என்றனர் இருவரும்.

"என்னையா? நீங்க யார்? என்ன விஷயமா வந்துருக்கீங்கன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?"

"சொல்ல முடியாதுன்னா, என்ன பண்ணுவீங்க?" என்றான் ரவி.

வனிதா சற்றே குழப்பமாய் பார்க்கவும், "என் பெயர் சுதி. பிரகாசம் மருத்துவமனையில் டாக்டரா ப்ராக்டிஸ் பண்றேன். இவன் என் ப்ரண்ட் ரவி. இவனும் அங்கதான் டாக்டரா இருக்கான்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள் சுதி.

"அப்படியா? உங்களை மீட் பண்ணியதில் ரொம்ப சந்தோஷம்.

"என்னிடம் ஏதாவது நோயாளி பற்றி விபரம் கேட்டு வந்திருக்கிறீர்களா? அல்லது நான் எதாவது உங்களுக்கு செய்யக் கூடுமானால் சொல்லுங்கள்?"

"உங்க உதவியெல்லாம் எங்களுக்கு எதுக்கு? உங்களைப் பற்றி கம்ப்ளைண்ட் பண்ண வந்திருக்கிறோம்."

"என்ன கம்ப்ளைண்ட்?"

"நீங்க உங்க டியூட்டியை ஒழுங்கா செய்யறதில்லேன்னு புகார் வந்திருக்கு."

"நீங்க என்னவோ ஆள் மாத்தி வந்திருக்கீங்கன்னு நினைக்கிறேன்."

"நீங்கதானே மிஸ் வனிதா. கைனகாலஜிஸ்ட். இருப்பது எக்மோரில். அப்பா பெயர் சந்தானம். அம்மா மகேஸ்வரி. கரெக்டா?" என்றான் ரவி.

''ஆமாம் கரெக்ட்தான். இந்த விபரமெல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும்?''

''அதான் கம்ப்ளைன்டிலேயே எழுதியிருந்ததே'' என்றாள் சுதி.

''மை காட்'' தலையை பிடித்துக் கொண்டாள் வனிதா. ''சும்மா கம்ப்ளைன்ட் வந்ததுன்னு சொல்றீங்க. என்ன கம்ப்ளைன்ட் முதலில் சொல்லுங்க. அப்படியே இருந்தாலும் நான் அரசு மருத்துவமனை ஊழியர். என்னுடைய மேலதிகாரிகளுக்குத்தான் பதில் சொல்ல கடமைப்பட்டவளே தவிர, என்னை விசாரிக்க நீங்க யார்?''

''நீங்க வேலைபார்க்கும் இடத்தில் தப்பு செய்தால்தான் உங்க மேல் அதிகாரிகளுக்கு பதில் சொல்லணும். மருத்துவமனைக்கு வெளியே செய்யும் தவறுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இல்லையா ரவி?'' நமட்டுச் சிரிப்புடன் ரவியைப் பார்த்தாள் சுதி.

''ஆமாம். உங்களால் பாதிக்கப்பட்ட என் நண்பன் இப்ப பைத்தியமா அலையறான். அதாவது தெரியுமா உங்களுக்கு?'' ரவி தன் பங்குக்கு எரியவிட்டான்.

''நான் தனியா ப்ராக்டீஸ் எதுவும் செய்யறது கிடையாது. இங்கு மருத்துவமனை வேலையோடு சரி. நீங்க சொல்றது எதுவும் எனக்கு புரியல. கேஸ் ஹிஸ்ட்ரியை சொல்லுங்க. பேஷண்ட் யாருன்னு தெரியுதான்னு பார்க்கலாம்'' என்றாள் வனிதா இழுத்துப்பிடித்த பொறுமையுடன்.

''நான் சொல்றேன், இல்ல நான்தான் சொல்லுவேன்'' என்று இருவரும் சண்டை போட்டு வனிதாவின் பொறுமையை மேலும் சற்று சோதித்தப் பின் சுதி சொன்னாள். ''மிஸ் வனிதா சிசேரியன் ஆபரேஷன் பண்ணும்போது குழந்தையையும் தாயையும் நல்ல விதமாய் பிரிக்கிறது தானே உங்க வேலை. ஆனா என் நண்பனுக்கு மட்டும் உயிரோடு



இருக்கறப்பவே, உடலை மட்டும் விட்டுவிட்டு இதயத்தை பிரிச்சி எடுத்துட்டீங்களே நியாயமா?''

'வாவ்', கைதட்டினான் ரவி. ''இதை விட அழகா யாராலும் சொல்ல முடியாது சுதி.''

'சே! சரியான பைத்தியங்க கிட்ட மாட்டிக்கிட்டேன் போலிருக்கு!' தனக்குள் பேசியபடி நடக்க முற்பட்டவளை வழிமறித்த ரவி.

''நாங்க பைத்தியம் இல்லை. உங்க நினைவால கிரிதான் பைத்தியமா ஆயிட்டிருக்கான். ப்ளீஸ் அவனை காப்பாத்தறது உங்க கையிலதான் இருக்கு. முடியாதுன்னு மட்டும் சொல்லிடாதீங்க'' என்றான் நாடகத்தனமாய்.

கிரி என்ற ஒற்றை வார்த்தையில் முகம் ஒளிவிட, ''நீங்க கிரிக்கு என்னவாகணும்?'' என்றாள் வனிதா ஆர்வமாய்.

''பாத்தாலே தெரியல? இந்த மாதிரி பைத்தியங்கள் எல்லாம் ப்ரண்ட் இல்லாம, வேற யாராய் இருக்க முடியும்?'' சிரித்தபடியே ரவியை கை காட்டினாள் சுதி.

''இப்ப நீ மட்டும் ப்ரண்ட் இல்லாம, விரோதியாயிட்டியா? வனிதா பைத்தியம்னு திட்டியது உன்னையும் சேர்த்து தான். அப்படித்தானே வனிதா?''

வனிதா பதில் சொல்வதற்குள் ''நீ யார்? உன்னை இதுக்கு முந்தி நான் பாத்ததே இல்லியே! வனிதா இந்த பைத்தியத்தை உனக்கு தெரியுமா? இந்த மாதிரி ஆளுங்க கூடவெல்லாம் பழக்கம் வெச்சுக்காதே வனிதா. அப்புறம் நம்ம தகுதி என்னாகிறது?'' என சுதி வார,

''தகுதியை பத்தி நீ பேசறியா?'' என ரவி ஆரம்பிக்க, ''போதும் உங்க சண்டை'' வனிதா இருவரையும் அடக்கினாள். ''இது மருத்துவமனை. நீங்க டாக்டர்ஸ்.. நினைவிருக்கா?''

''சரி.. சரி.. வனிதா உனக்காக இவனை விடுகிறேன்'' சுதி பெருந்தன்மையாய் பின்வாங்க, ''வனிதா நானும் உனக்காகத்தான் பார்க்கிறேன்'' என்றான் ரவி.

''எனக்காக யாரும் பார்க்க வேண்டாம். முதல்ல கிரி எங்க இருக்கார்ன்னு சொல்லிட்டு உங்க சண்டைடைய கண்டினியூ பண்ணுங்க'' என்றாள் வனிதா முறுவலுடன்.

'ஹேய்' என ஆர்ப்பரித்த இருவரும் வனிதாவின் கைகளைப் பற்றியபடி கார் பார்க்கிங்கை நோக்கி ஓடினர். ''மெதுவா நடக்கலாம் சுதி. பேஷண்ட்ஸ் வேடிக்கைப் பார்க்கப் போறாங்க'' வனிதா தடுமாறினாள்.

''சரி நீ ஸ்லோமோஷன்ல வா. நா போய் கிரியையும் அதே மாதிரி வர சொல்றேன். எப்பவும் வேதனை குரலே கேட்டுப் பழக்கப்பட்ட இந்த மருத்துவமனையில் ஒரு டூயட்டாவது நடக்கட்டும். சுதி நீ உன் வெள்ளை கோட்டை அசைத்து லலல்லா பாடியபடி வனிதாவின் பின்னால் பறக்கிற மாதிரி வா. நான் கிரிக்கு பின்னால் வருகிறேன்'' ரவி விவரிக்க விழுந்து விழுந்து சிரித்தபடி காரில் அமர்ந்திருந்த கிரியிடம் போனார்கள். வனிதாவை பார்த்ததும் ஆர்வமும், நண்பர்களின் கேலிக்கு பயந்து கூச்சமுமாய் தடுமாறிய கிரி ''வனிதா இவங்க என் நண்பர்கள், சுதி இது வனிதா'' என பரஸ்பரம் அறிமுகம் செய்ய முற்பட்டான்.

நமட்டு சிரிப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்த மூவரும் ''அப்படியா?'' என்றார்கள் கோரஸாக.

''ஓ நீங்களே அறிமுகப்படுத்திக்கிட்டீங்க இல்ல?'' என்றான் கிரி வனிதாவையே பார்த்தபடி.

''உன் செல் இந்தா கிரி'' என செல்போனை ரவி கொடுக்க பார்வையை திருப்பாமல் போனை தவறவிட்டான். சிரித்தபடியே ''வா சுதி நாம இன்னும் இங்கேயே நின்னு யாருடைய கோபத்துக்கும் ஆளாக வேண்டாம்'' என்றபடி கிளம்பினான் ரவி. அவர்கள் பதிலே பேசாததோடு கார் கேட்டை தாண்டும்போது சுதி கை அசைத்ததையும் கூட கவனிக்காமல் தங்களுக்குள் மூழ்கி இருந்தனர்.



''ரவி நீ உன் ரூமுக்குதானே போகிறாய்'' என்றபடி பார்க் ஸ்டேஷனில் ப்ரிஜை தாண்டிய சுதி, ''கிரி பாரேன். வனிதாவை பார்த்ததும் கிரி நாம கூட வந்ததையே மறந்துட்டான். இத்தனைக்கும் காலேஜ்ல சாமியார்னு பேர் வாங்கினவன்'' என்றாள் ஆச்சரியமாய்.

''அதற்கு பெயர்தான் காதல் சுதி. தங்களை தவிர எல்லாரையும் மறக்க வைக்கும்.''

''சினிமா வசனம் மாதிரி இருக்கு. ஆனா, நீ கிரி எல்லாம் ரொம்ப முதிர்ச்சியடைந்த நிதானமான ஆட்கள். தப்பு செய்தால் கூட தடுமாறாமல் அதை தலைநிமிர்ந்து ஏற்றுக் கொள்பவர்கள். மனதுக்கு பிடித்த பெண் அருகிலிருந்தால் மட்டும் தடுமாறுவதும், தவிப்பதும் நம்பத்தான் முடியவில்லை.''

''இது இயற்கை சுதி. ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு காலகட்டத்தில் காதல் வயப்படவே செய்கிறான். கொடூர புத்தியுடையவன் மனதில் கூட எங்காவது ஒரு இளக்கம் தென்படுகிறதென்றால் அது காதலின் காரணமாகத்தான் இருக்கும். முரடனை மென்மையாக்கும். மென்மையானவனை படபடப்பாய் மாற்றும். கீழே உள்ளவனை மேலே உயரத் தூண்டும் ஏணியாகவும் காதல் இருக்கும். மேலே இருப்பவனை விழ வைக்கும் பள்ளமாகவும் மாறிவிடும். தனக்கு சற்றும் பொருத்தமில்லாத கணவனையும், நோயாளி மனைவியையும் திருமணம் செய்து கொண்டு சிலர் இறுதிவரை ஒற்றுமையாய் வாழ்கிறார்கள். குழந்தையில்லாதவர்களில் கூட ஒரு சிலர் இறுதிவரை ஒருவருக்காகவே இன்னொருவர் என்று வாழ்ந்து முடிக்கிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் காதல் இல்லையா?''

''எனக்கு தெரியல ரவி'' என்றாள் சுதி ஆயாசத்துடன்.

அவளை கூர்ந்து பார்த்த ரவியின் முகத்தில் வருத்தத்தின் நிழல் ஒன்று படர்ந்தது. ''சுதி காதல் கல்யாணங்கள்

முதலில் காதலிச்சிட்டு பிறகு கல்யாணம் பண்ணிக்குவாங்க. அரேஜ் மேரேஜ்ல முதல்ல கல்யாணம் பண்ணிக்கிட்டு அப்புறம் காதலிக்க ஆரம்பிப்பாங்க. அதனால்தான் பெற்றோர்களும் இளம் தம்பதிகளுக்கு தனிமையை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு ஒதுங்கி இருப்பாங்க. எப்படியிருந்தாலும் காதலில்லாத தாம்பத்யம் இருக்க முடியாது. இருந்தாலும் நிலைக்காது. நான் வெளிப்படையாகவே கேட்கிறேன் சுதி. குமார் நட்பு, அன்பு, பரிவு, அந்நியோன்யம் என்ற எல்லா உணர்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டவன். வார்த்தைகளாலோ, செயல்களாலோ பந்தத்தை ஏற்றுக் கொள்ளாதவன். யாருடைய நெருக்கத்தையும் விரும்பாதவன். என்றாவது இளகிய தருணங்களில் அவனது காதல் வெளிப்பட்டிருக்கிறதா சுதி?''

மனத்திற்குள் இதற்கு பதிலை தேடினாள் சுதி. ஆங்கிலத்தில் காதலும் காமமும் லவ் என்ற ஒரே பொருளில்தான் குறிப்பிடப்படுகிறது. அவர்களுக்கு காமம்தான் காதல். இரண்டும் வேறு வேறு அல்ல. இந்திய பண்பாடுதான் காதலை உடல், மனம் என தனியாக பிரித்து, காமத்தினும் உயர்ந்ததாக சித்தரிக்கிறது. குமாரிடம் வாழ்க்கை நடத்த ஒரே தகுதி சகிப்புத்தன்மை என்று ஆன பின் அந்த வாழ்க்கையை எப்படி தரம் பிரித்தால் என்ன? ஆங்கிலேயரின் கூற்றுப்படி காமமே காதலானால் குமார் என்னை காதலிக்கிறான் என்றுதான் கூறவேண்டும்.

ரவியின் அறைக்கு முன் காரை நிறுத்திய சுதி ''யெஸ் ஹி லவ்ஸ் மி'' என்றாள் தன் வழக்கமான புன்னகையுடன்.

# 27

அன்று மருத்துவமனையிலிருந்து நேரத்திலேயே கிளம்பி விட்டதால் சுதி வீட்டுக்குள் நுழையும்போது வழக்கத்தை விட பத்து நிமிடம்தான் தாமதமாகியிருந்தது. நண்பர்களுடன் பேசி சிரித்தபோது சகஜமாக இருந்த மனம் இப்போது குமாரை நினைக்கையில் அவனுக்கு பிடிக்காத விஷயத்தை



செய்திருக்கிறோம் என குற்ற உணர்வில் தவித்தது. திருமணமானதிலிருந்து ஒருமுறை கூட மனைவிக்காக விட்டுக் கொடுக்காத, அவள் விருப்பப்படி நடந்துகொள்ளாத குமாருக்கு தோன்றாத குற்ற உணர்வு நமக்கு தோன்றுவானேன்? இது வளர்ப்பு முறையில் ஏற்படும் கோளாறு போலும்.

வழக்கத்திற்கு மாறாக கதவு திறந்தே கிடந்தது. ஆளில்லாத ஹாலில் டி.வி. மட்டும் ஓடிக் கொண்டிருந்தது. குமாரைக் காணோம். சோபாவில் புத்தகங்கள் இறைந்து கிடக்க, பேன் காற்றில் வீடெங்கும் செய்தித்தாள்கள் பறந்து கொண்டிருந்தன. சமையலறையை எட்டிப் பார்த்தாள். பாத்திரங்கள் உருண்டு கிடக்க, குழம்பு சாதமும் தரையெங்கும் கொட்டியிருந்தது. சாமான்கள் வைக்கும் அலமாரியில் டப்பாக்கள் சரிந்து கிடந்தன. சர்க்கரையும் கடுகும் ஒன்றாக கலந்திருந்தது. மிளகாய்த் தூள், கோதுமை மாவு, உப்பு எல்லாம் ஒரே இடத்தில் சிதறிக் கிடக்க, கால் வைக்கும் இடமெல்லாம் கீழே சிந்தியிருந்த எண்ணெய் பிசுபிசுத்தது. மேலும் நடந்து போய் வீடெல்லாம் எண்ணெய்யாக்காமல் தோட்டத்து மண்ணில் கால்களை தேய்த்தாள் சுதி. ஏதாவது பூனையோ, நாயோ உள்ளே புகுந்திருக்கும் போலும். சமையலறையை உருட்டி தள்ளியிருக்கிறது. பொருள் வீணாவதுடன், தரையெல்லாம் பிசுபிசுப்பு போக கழுவி, டைல்ஸ்களை துடைப்பதற்கே எவ்வளவு நேரமாகும்? அவ்வளவு பெரிய கேட்டையும், சுற்றுமதில் சுவரையும், வாட்ச்மேனையும் தாண்டி நாய் உள்ளே வர வாய்ப்பில்லை. பூனையாய் இருக்குமோ? இத்தனை நாள் இல்லாமல் இன்று எப்படி வந்தது? யோசித்தபடி புடவையை மாற்ற மேலே போன சுதி அறையை பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டாள். வார்ட்ரோப்பிலிருந்த துணிகள் அறையெங்கும் மூலைக்கு ஒன்றாய் கிடந்தன. டிரஸ்சிங் டேபிளின் மேலிருந்த எண்ணெயும், கிரீமும் மெத்தை விரிப்பில் கொட்டிக்

கிடந்தது. மேஜை மேலிருந்த முக்கிய பைல்களும் கூட அதில் விழுந்து கிடந்தன. அறை சூறையாடப்பட்டிருக்கவே சுதி திகைத்துப் போனாள். நிச்சயம் யாரோ திருடர்கள்தான் உள்ளே புகுந்திருக்கிறார்கள்.நகைகள் பேங்க் லாக்கரில் இருக்கிறது. பணமும் எதுவும் பெரிதாக வீட்டில் வைக்கும் வழக்கம் இல்லையாதலால் எல்லாவற்றையும் கிளறிப் பார்த்துவிட்டு போய்விட்டார்கள் போலும்.இந்த தெருவிலுள்ள எல்லா வீடுகளிலும் வாட்ச்மேன் உண்டு. அப்படி இருக்கையில் யார் கண்ணிலும் படாமல் எப்படி நுழைந்தான்? பதட்டத்துடன் 'கூர்க்கா' என பால்கனியிலிருந்து சத்தம் போட்டாள்.

'கூர்க்காவுக்கு அப்படி என்ன வைத்திருக்கிறாய்?' என்ற குரல் கேட்டு திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். பால்கனி பிரம்புச் சேரில் சிகரெட்டை பிடித்தபடி குமார் அமர்ந்திருந்தான்.

"என்ன குமார் இப்படி நிதானமா உட்கார்ந்திருக்கிறாய்? வீடே போர்க்களமாய் கிடக்கிறது. யாரோ திருடன் உள்ளே புகுந்திருக்கிறான்."

"ஆமா உங்கப்பா வீடு பூரா சாமான்களுக்கு பதிலா கரன்ஸி நோட்டா அடுக்கி வைச்சிருக்கான். அதை திருட கூட்டம் கூட்டமா வர்றாங்க. போ. போய் எல்லாத்தையும் கிளீன் பண்ற வேலையைப்பார்."

"திருடன் இல்லைன்னா வீடு ஏன் இப்படி கிடக்குது?"

"நான் என் செல்போனை காணாமல் தேடினேன்."

தன்னையே நம்பமுடியாமல் வெறித்தாள் சுதி. "செல்போன் காணோம்னா கப்போர்ட்ல, கட்டில் டிராயர், மேஜை என தேடுவார்கள். பர்ப்யூம், பவுடர் எல்லாம் கொட்டிக் கிடக்கு சமையலறையில் எண்ணெய் டப்பாவில் குழம்பு பாத்திரத்தில் எல்லாமா போனை தேடுவார்கள்? வேணும்னே ஏன்



குமார் இப்படி செஞ்சிருக்க? இவ்வளவு பெரிய வீட்டை நான் என்னிக்கு சுத்தம் பண்ணி முடிக்கறது? நீ பண்றது உனக்கே நல்லா இருக்கா? அழுக்கான வீட்டைதான் சுத்தப்படுத்துவார்கள். சுத்தமான வீட்டை தாமே அழுக்காக்கி யாராவது மறுபடி சுத்தம் செய்வார்களா? வீட்டிற்கு வேலைக்கு ஆள் வைத்தாலும் உனக்கு பிடிக்கவில்லை. வெளியே வேலைக்கு போய்விட்டு வந்து, வீட்டு வேலைகளையும், சமையலையும் பார்ப்பதற்குள் நான் திணறிப் போய்விடுகிறேன்... போதாதற்கு எனக்கு எதற்கு இவ்வளவு பெரிய பனிஷ்மெண்ட் கொடுக்கிறாய் சொல்?"

குமாரின் கையிலிருந்த சிகரெட் பறந்தது. "ஊரிலேயே நீ ஒருத்திதான் வேலைக்கு போற மாதிரி அலட்டிக்கற? நானா உன்னை டாக்டருக்கு படி. வேலைக்கு போன்னு சொன்னேன்? போனா போகுதுன்னு உன்னை தினமும் ஊர் சுத்த விடறதே பெரிய விஷயம். வீட்டு வேலை செய்வது பொம்பளையோட கடமை. போய் புலம்பாமல் வேலையைப் பார்."

"கணவன் வெளியே சென்று சம்பாதித்து வரும்போது வீட்டு வேலை பெண்ணின் கடமையாகத்தான் இருந்தது. இப்போது பணம் சம்பாதிக்கும் வேலையை நாம் பகிர்ந்து கொள்ளும்போது வீட்டு வேலையையும் ஆண்கள் பகிர்ந்து கொள்வதுதானே நியாயம்" என்ற காந்திமதியின் குரல் சுதியின் காதில் ஒலித்தது. அந்த குரலுக்கு பதில் சொல்வதானால், காந்திமதியிடம்தான் சொல்ல வேண்டும். குமாரிடம் நின்று பதில் பேசினால் மிருகமாகிவிடுவான். யோசித்து, தயங்கி நேரத்தை வீணாக்குவதை விட வேலையாவது பார்க்கலாம் என சுதி கீழே இறங்கிச் சென்றாள். இரவு சமையலை முடித்து, குமார் சாப்பிட்ட பிறகு சமையலறையை சுத்தம் செய்து, கழுவி, பருப்பையும் அரிசியையும் பிரித்து தனி டப்பாக்களில் கொட்டி வைத்துவிட்டு நிமிரும்போது

மணி ஒன்றாகியிருந்தது. அறையில் கிடந்த சாமான்கள் அப்படியே கிடக்க குமார் படுக்கையின் ஓரத்தில் தூங்கிக் கொண்டிருந்தான். அசதியும் தூக்கமும் கண்களை அழுத் தவே சோபாவில் இறைந்துகிடக்கும் துணிகளின் மேலேயே சரிந்து உறங்கத் தொடங்கினாள் சுதி.

காலையில் எழுந்து சமையலை முடித்து கிளம்பத்தான் நேரம் சரியாக இருந்ததே தவிர அறை அப்படியே கிடந்தது. மாலையில் வந்து ஹாலை சுத்தம் செய்தாள். முழுதாக வீடு கிளீனாக நான்கு நாட்கள் ஆயிற்று. ஐந்தாம் நாள் வேலை முடிந்து வரும்போது மீண்டும் அறையெங்கும் பொருட்கள் சிதறிக் கிடக்க 'தீப்பெட்டியைத் தேடினேன்' என்றான் குமார்.

தலையைக் கோதியபடி அமர்ந்திருக்கும் அவனைப்பார்க் கையில் எரிச்சலாகவும் அதே சமயம் பாவமாகவும் இருந்தது சுதிக்கு. கவனிக்காமல் விடப்பட்ட குழந்தை பெற்றோரின் கவனத்தை ஈர்க்க அடாவடி செய்வது போல் இருந்தது. அடாவடியை கண்டுகொள்ளாமல் இருந்தால் ஈர்ப்புத் தன்மை குறையக் கூடும்.எனவே வீட்டை ஒழுங்குபடுத்த முயற்சிக்காமல் அவன் போக்கிலேயே விட்டாள். வீட்டில் கசக்கி எறியப்பட்ட காகிதங்களும், சிகரெட் துண்டுகளும், இறைந்து கிடக்கும் சாமான்களுமாய் எப்பவும் வீடு குப்பையாகவே இருந்தது. பிரகாசம் மருத்துவமனையில் கட்டணம்தான் அதிகமே தவிர சுத்தத்திற்கும் சுகாதாரத் திற்கும் பெயர் பெற்றது. அத்தனை நோயாளிகள் வந்து போகும் இடத்தில் சுவற்றில் ஒரு கீறலையோ, மருந்து வாசனையோ கூட இருக்காது. தினமும் மூன்று வேளை துடைக்கப்பட்டு தரை பளபளக்கும். ரப்பர் ஷீட்களும், பெட் பான்களும் கூட ஸ்டெரிலைஸ் செய்யப்பட்டிருக்கும். படுக்கையில் சலவை மணம் கமழும் வெள்ளைவிரிப்புகள் விரிக்கப்பட்டு, கறை படிந்தால் உடனே மாற்றப்படும். உடல் ... நோயாளிகளை கொண்ட அப்பெரிய



மருத்துவமனை மேல்தட்டு மக்களின் வீட்டைப் போல இருக்கும். ஆனால் குமார் வசிக்கும் வீடு சுகாதாரமற்ற அரசாங்க மருத்துவமனை போல் மாறிக் கொண்டிருந்தது. குளியலறையிலும், கழிவறையிலும் கூட சரியாக தண்ணீர் கூட உபயோகிக்கப் படாமல் துர்நாற்றம் வீசியது. ப்ளீச்சிங் பவுடரும், சோப்பும் கலந்து கழுவியபோது சுதிக்கு வயிற்றை புரட்டி வாந்தி வந்தது. சத்திய சோதனையில் தான் கழிவறை சுத்தம் செய்ததை எழுதிய மகாத்மா காந்தி வாந்தி எடுத்தாரா என்று குறிப்பிடவில்லை என்று தோன்றியது. அவருக்கும் பிறகு உணவு உண்ண பிடிக்காமல் போயிருக்குமா? என் னுடைய பொறுமையும் விடாமுயற்சியும் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்துகிறது என்றால் என்னிடமோ, என் செயல்களிலோ ஏதாவது குறையிருக்க வேண்டும். அது என்னவாயிருக்கும்? யோசிக்க முற்பட்டாள் சுதி.

குமாரின் அப்பாவிடம் போன் பண்ணி பேசினாள் சுதி. "நாங்க திருமணமானதிலிருந்து நீங்க இங்க ஒரு முறை கூட வரவேயில்லை. கண்டிப்பா வரணும்" என அவள் பலமுறை வற்புறுத்தி அழைத்ததற்கு "ஆகட்டும், பார்க்கலாம்" என ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்டார். மகனைப் பற்றி ஒரு வார்த்தை விசாரிக்காமல், ஒரே மருமகளிடம் ஒரு சம்பிரதாயமான நலம் விசாரிப்புகூட இல்லாமல் முடித்துக் கொண்டவருடன் மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியவில்லை. சொர்ணலட்சுமிக்கு ஒருமுறை போன் போட்டு "அத்தை நீங்களாவது ஒருமுறை வாங்க. உங்க மருமக கையால் நீங்க சாப்பிட்டு பார்க்க வேண்டாமா? நான் வேண்டுமானால் வந்து கூட்டிப் போகட்டுமா?" என்றாள்.

திருமணம் முடிந்ததும் தன் பொறுப்பு விட்டது என நிம்மதியாக இருக்கும் கணவனிடமோ, பிறந்ததிலிருந்தே ஒட்டாத மகனிடமோ மாட்டிக் கொள்ள விரும்பாத சொர்ணம் "வயலில் நெல் அறுப்பு முடிந்ததும் மாமாவோடு வரு

கிறேன்'' என்றாள் நழுவலாக. குமாருக்கு தாய் தந்தையிடம் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அப்பா, அம்மா, மனைவி அனைவரும் இணைந்து இருக்கும் சூழ்நிலை அவன் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும், என்று நினைத்தாள் சுதி. பல முறை வருந்தி அழைத்தும் அவர்கள் வராது போகவே குமாரிடம் கேட்டாள். ''குமார் நம்ம கல்யாணத்துக்கு பிறகு அவ்வளவா விடுமுறை எடுக்கவே இல்லை. ஒரு இரண்டு மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு நாம் இருவரும் உங்க ஊருக்கு போயிட்டு வரலாமா?''

''எங்க ஊர்ல இப்ப என்ன வேலை இருக்கு?'' என்றான் குமார் சிரத்தையின்றி.

''வேலைன்னு எதுவும் இல்ல குமார். கல்யாணத்துக்கு பிறகு உங்கம்மா, அப்பாவை, வீட்டை நான் பார்க்கவேயில்லை. அவங்களையும் பார்த்த மாதிரி இருக்கும். நமக்கும் வெளியூர் பயணம் ஒரு மாறுதலாய் இருக்கும் இல்லையா?''

பதில் பேசாமல் அமர்ந்திருந்தான் குமார்.

''என்ன குமார்,எப்ப போகலாம்? ட்ரைன் டிக்கெட் புக் பண்ணட்டுமா?'' அவளை வெறித்த குமார் முகவாயை கைகளால் பற்றி திருப்பி கண்களை உற்றுப் பார்த்தான். அந்த பார்வையில் வழக்கம் போலவே சுதிக்கு வயிறு துவண்டது. 'என்ன பார்வை இது? எத்தனை வெறி? பேய் படங்களில் வரும் உருவங்களைப் போல அமானுஷ்யமான பார்வை. கனிவையோ, காதலையோ ஏன் துக்கத்தையோ கூட காட்டாத கண்களில் இந்த வெறித்தனம் மட்டும் எங்கிருந்து வந்தது? சக்தி மட்டும் இருந்திருந்தால் இந்த பார்வையே அவளை குதறியிருக்கும்.

''என்னடீ பெரிசா ப்ளான் பண்ணியிருக்கியா? நைசா பேசி என்னை கொண்டு போய் ஊர்ல தள்ளிட்டு வந்து இங்க கூத்தடிக்கலாம்னு திட்டம் போட்டிருக்கியா? இல்ல உன்



பாய்ப்ரண்ட்ஸ் எவனையாவது பின் தொடர்ந்து வரச்சொல்லி என்னை தீர்த்துக் கட்ட போறீங்களா? உன்னுடைய திட்டம் எதுவும் இங்கு பலிக்காது தெரிஞ்சுக்கோ. என்னை இந்த வீட்டை விட்டு விரட்ட யாராலும் முடியாது.'' குமாரின் அபாண்டமான பேச்சுக்களை கேட்டு பழக்கப்பட்டு போன சுதிக்கு இது புதிதாய் தெரியவில்லை. உன்னை கொல்வதற்கு எதற்கு ஊருக்கு போகணும் குமார்? தினமும் என் கையில் தானே சாப்பிடுகிறாய்? ஒரு துளி விஷம். தூங்கும்போது ஒரு ஊசி போதுமே! என்று நினைத்த சுதிக்கு ஒரு விஷயம்மட்டும் வியப்பாகவே இருந்தது. எங்கே சுற்றியலைந்தாலும் குமார் வீட்டிற்கு வந்துதான் தினமும் சாப்பிடுவான். தூக்கம் வராமல் இரவெல்லாம் விழித்திருக்கும்போதும் சரி சுதியுடன் சண்டை போட்டு அவளை தூங்கவிடாமல் தொல்லை செய்யும் சமயங்களிலும் கூட 'போய் சாப்பாடு எடுத்து வா' என சுதியை விரட்டுவான். நம் நாட்டு தாலியின் மகிமையோ என்னமோ, தான் அடித்து இம்சிக்கும் மனைவி தன்னை கொன்றுவிடுவாளோ என ஒரு கணமும் அவன் யோசித்ததில்லை. வெளிநாட்டில் கன்னத்தில் அடித்த கணவனை திருப்பி கத்தியால் குத்திய மனைவிகள் உண்டு. நம் நாட்டில் தவறான நடத்தையால் சீரழிந்த சில பெண்கள் அப்படியிருக்கலாமே தவிர சராசரி குடும்ப வாழ்வில் எந்த பெண்ணும் அப்படி நடந்ததில்லை. குடி போதையில் மனைவியை அடிக்கும் கணவன் போதை தெளிந்ததும் அவள் அருகில் படுத்துறங்குவதும். தினம் ஒரு பெண்ணுக்காக சம்பாதித்த காசை எல்லாம் செலவழிப்பவனும் கூட வீட்டிற்கு வரும் போது நிச்சிந்தையாக இருக்க முடிகிறது. மனைவியின் நடத்தையில் சந்தேகப்படுபவன் கூட அவள் தன்னை ஏதாவது செய்துவிடுவாளோ என்று பயப்படுவதில்லை. இதற்கு காரணம் ஆண்களின் பெருந்தன்மையா? அல்லது பெண்களை பலவீனமானவர்களாக குறைத்து எடைபோடும் தன்மையா?

இரவு தூங்கியபின் சுதியை எழுப்பிய குமார், "எதுக்கு ங்க ஊருக்கு போகணும்னு சொன்ன? எங்க மாமா ஒருவர் இங்க வந்திருந்தாரே. அவரை பார்க்கவா? அந்த ஆள் போன் பண்ணி உன்னை வரச் சொன்னானா சொல்?" என்று உலுக்கினாள்.

"ஓ! தூக்கம் வராத இவனது இன்றைய இரவுக்கு நாமே ஒரு செய்தியை கொடுத்துவிட்டோம். இனி அவனது ஊரிலிருப்பவர்களை எல்லாம் சுதியுடன் இணைத்து கற்பனை பண்ண தொடங்குவான். சரி இந்த நாள் இவனுக்கு இப்படியே கழியட்டும் என்று நினைத்தபடியே சுதி தூக் கத்தை தொடர முற்பட்டாள்.

அன்று காலையிலிருந்தே கையில் காசில்லாமல் குமாருக்கு எரிச்சலாக இருந்தது. இரண்டு மாதமாக பிரசாத் வேலை எதுவும் கொடுக்கவில்லை. தேர்தல் சமயமாதலால் கெடுபிடிகள் அதிகம் என்று சொல்லியிருந்தான். உள்ளாட்சி தேர்தல்கள் முடிந்த பிறகுதான் பொருட்கள் அனுப்புவார்கள். பணத்தையும் பார்க்க முடியும். நம்மூரிலேயே வெளிநாட்டு கம்பெனிகள் கடைவிரித்திருக்கின்றன. பிராண்டட் உடை கள், காலணிகள், தோல் பொருட்கள், கணினி, டிவிக்களும் கிடைக்கின்றன. போதாதற்கு சிங்கப்பூர் மால், துபாய் பிளாஸாக்களிலும் அழகு சாதன பொருட்கள், பொம்மைகள், வாட்ச் என கொட்டிக் கிடக்கின்றன. இத்தனைக்கும் மேலாக பிரசாத் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரும் பொருட் களுக்கு டிமாண்ட் இருக்கிறது என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது-ஆனால் நிச்சயம் டிமாண்ட் உள்ள ஒரு பொருள் தான். அதனால்தான் நமக்கு இவ்வளவு கமிஷன் அவனால் கொடுக்க முடிகிறது.

பீரோவை திறந்து பார்த்தான் குமார்.

பணம் வைக்கும் பர்ஸில் பத்து ரூபாய் மட்டும் இருந்தது. ... சம்பள நாள். அதனால் இன்று ஏதுமில்லை



போலும். சம்பளம் வாங்கி வந்ததும் சுதி அலமாரியில் வைத்துவிடுவாள். மளிகை, கரண்ட் பில் என வீட்டு தேவை களுக்கு எடுத்து கொடுப்பாள். குமாருக்கு அவ்வப்போது தேவைப்பட்டால் எடுத்துக் கொள்வான். எடுத்த பணத்திற்கு கணக்கும் சொன்னதில்லை. யார் சம்பாதித்தாலும் இருவருக் கும் செலவழிக்க உரிமை உண்டு என்ற எண்ணத்தில் அவளும் அதை பொருட்படுத்தியதில்லை. இன்று மாச கடைசி என்பதால் இல்லை போலும். ஒரு சிகரெட்டிற்காவது காசு தேறுமா என அலமாரியை குடைந்து கொண்டிருந்தான் குமார். சிவப்பு கலரில் மூடி போட்ட வெல்வெட் டப்பா ஒன்று இருந்தது. திறந்து பார்த்தான். 'எஸ்' என்ற ஆங்கில எழுத்து டாலருடன் ஒரு செயின் இருந்தது. சுதியின் பெயரின் முதல் எழுத்தை கொண்டது. அப்பா கல்லூரி போகும்போது வாங்கி தந்தது என தினமும் அணிந்திருப்பாள். "நீ என்ன மிருகமா? உன் பெயரை எழுதி கழுத்தில் தொங்கவிட்டுக் கொள்ள?" என குமார் திட்டினாலும் சுடிதாருக்கு உள்ளே போட்டு வெளியே தெரியாதவாறு பின் பண்ணியிருப்பாள். இன்று ஏனோ மறந்துவிட்டாள் போலும். சரி, இன்னும் இரண்டு மாதம் இதை வைத்துதான். சமாளிக்க வேண்டும். நேராக சேட்டு கடைக்கு சென்று செயினை விற்ற குமார், அவன் கொடுத்த பணத்தை எண்ணிக் கூட பார்க்காமல் பாக்கெட் டில் போட்டபடி வீடு திரும்பினான். மதியம் சாப்பிட்டுவிட்டு நிம்மதியாய் தூங்கியவன் மாலையில் கிளம்பிப் போய் தெருமுனை பார்க்கில் அமர்ந்து இருட்டும் வரை வருவோர், போவோரைப் பார்க்கத் தொடங்கினான்.

அன்று சுதிக்கு விடுமுறை தினம். தாமதமாக எழுந்து குளித்து, சமையலை முடித்து நிதானமாக வேலை செய்து கொண்டிருந்தாள். தேவையற்ற பேப்பர்களை கட்டி எடுத்துவைத்தாள். பீரோவையும் திறந்து துணிகளை மடித்து வைத்தாள். உபயோகப்படுத்த பிடிக்காமல் போட்டு வைத்

திருந்த சில சேலைகளை ஒரு கவரில் போட்டாள். ஆஸ்பத்திரியில் செல்லம்மாவிடம் கொடுக்க தனியாக வைத்தாள். லாக்கரை திறந்தபோது எப்போதும் அணிந்திருக்கும் அந்த செயினை காணோம். கழற்றி வைத்த இடம் காலியாக இருந்தது. அமைதியாய் உட்கார்ந்து யோசித்துப் பார்த்தாள். எங்கே வைத்தோம்? ஒருவேளை கவனபிசகாய் எங்கவாவது கழட்டி வைத்திருப்போமா? இல்லையே? கொக்கி லூசாகி செயின் அடிக்கடி கழண்டு வந்தது. அப்புறமாய் அம்மாவிடம் கொடுத்து இறுக்க வேண்டும் என பீரோ லாக்கரில்தான் வைத்தாள். செயின் இருந்த சிவப்பு வெல்வெட் டப்பாவை பத்துமுறை தட்டி பார்ப்பதும் தனக்குள்ளே குழம்புவதுமாய் இருந்தாள். அவள் கல்லூரி போகும் போது அப்பாவும் அவளும் போய் அந்த செயினை வாங்கினார்கள். முன்பு அவளிடம் நீளமாய் கெட்டியாய் டாலர் வைத்து செயின்கள் இருந்தன. கல்லூரி போக மெல்லிசாய் வேண்டும் என சுதி கேட்டதால் விஸ்வநாதன் அப்பவே அவளை கடைக்கு கூட்டிப்போனார். அந்த கடையில் கொட்டி வைத்திருக்கும் நகைகளில் ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்ப்பதும் வைப்பதுமாய் சுதி இருந்தபோது விஸ்வநாதன் ஒரு செயினை தேர்ந்தெடுத்தாள். "சுதி உனக்கு பிடிச்சிருக்கா பார்?" என்று காட்டினார். மெல்லிசாய் அதே சமயம் அழுத்தமாய் இருந்தது அந்த செயின். அணிந்து பார்த்தபோது வழுவழுவென்று கொக்கி கூட உறுத்தாமல் கழுத்துடன் பொருந்தியது. சுதிக்கு மிகவும் பிடித்து விட அப்போதே அணிந்து கொள்ள சொல்லி பில்தொகையை கட்டினார் விஸ்வநாதன். சுதிக்கு ஆரமும், வைர அட்டிகையும் டஜன்கணக்கில் வளையலுமாய் சரஸ்வதி பார்த்து பார்த்து வாங்கி வைத்திருந்தாலும் விஸ்வநாதன் அழைத்துப்போய் வாங்கிக் கொடுத்த அந்த செயின் சுதிக்கு மிகவும் முக்கியமானது. மணப்பெண் அலங்காரத்தின் போது கூட கழட்ட மறுத்து மற்ற நகைகளோடு



வீட்டில் மற்ற பொருட்கள் அப்படியே இருக்க, இந்த நகை மட்டும் எப்படி போயிருக்கும்?

மதியம் சாப்பிடும்போது குமாரிடம் கேட்டாள் "குமார் நேற்றோ, அதற்கு முதல்நாளோ யாராவது வீட்டிற்கு வந்திருந்தார்களா?"

பதில் பேசாது இரண்டாம் முறையாக உருளைக்கிழங்கு வறுவலை தன் தட்டில் எடுத்துவைத்துக் கொண்டான் குமார்.

சற்று தயங்கி அதே கேள்வியை மறுபடி கேட்டாள் சுதி.

"ஏன் யாரையாவது வர சொல்லியிருந்தியா?" என்றான் குமார் எரிச்சலுடன்.

அவனது எரிச்சலை ஒதுக்கி,"பீரோவிலிருந்த என்னுடைய செயினை காணோம் குமார். லாக்கரில் அந்த சிவப்பு டப்பாவில்தான் வைத்தேன். நினைவிருக்கிறது. டப்பா இருக்கிறது. உள்ளேயிருந்த நகையை காணோம். வீடு பூரா தேடி சலித்து விட்டேன். எங்கே போச்சுன்னு தெரியல" என்றாள் சுதி கவலையுடன்.

உடனே எதுவும் சொல்லாமல் சாப்பிட்டு முடித்த குமார் கை கழுவும்போது சொன்னான் "நான்தான் அந்த செயினை எடுத்தேன்."

"நீதானா?" சுதி ஆறுதலாய் பெருமூச்சு விட்டாள். "நான் என்னென்னவோ நினைத்து குழம்பிக் கொண்டிருந்தேன். அந்த செயினின் கொக்கி லூசாக இருந்தது. சரி செய்ய வேண்டும். அப்புறமாய் எடுத்து தா. அல்லது நீயே ஏதாவது கடையில் கொடுத்து சரி பண்ணி கொடு குமார்."

பதில் சொல்லாது வழக்கம் போல் பேப்பருடன் மேலே போனான் குமார். நிம்மதியுடன் பாத்திரங்களை சுத்தம் செய்யத் தொடங்கினாள் சுதி.

மறுநாள் சுதி கிளம்பும்போது குமார் ஷேவிங்கில் இருந்தான். அவன் குளித்துவிட்டு வரும்வரை காத்திருந்த சுதி,

''குமார் அந்த செயினை தர்றியா? சரிப்பண்ணச் சொல்லி இப்ப கொடுத்துட்டு போனால் திரும்பி வரும்போது வாங் கிட்டு வந்துடுவேன்'' என்றாள் வாட்ச்சை பார்த்தபடி.

''செயினா? அதை நான் அன்னிக்கே வித்துட்டனே?'' என்றான் குமார் அலட்சியமாய்.

''என்னது? வித்துட்டியா? சுதி அதிர்ச்சியானாள்.'' எதுக்கு குமார் அந்த செயினை வித்த?''

''எனக்கு செலவுக்கு பணம் இல்லை. அதனால் வித்துட் டேன்.'' ''எவ்வளவு சாதாரணமா சொல்ற? செலவுக்கு பணம் இல்லைன்னா வீட்ல இருக்கிற பொருளை விப்பாங்களா? அப்படியென்ன பெரிய கஷ்டம் வந்தது நமக்கு? மாச கடைசிங்கறதால வீட்ல மூன்றுநாள் பணம் இல்லை. உனக்கு பெரிய செலவு ஏதுமில்லை. டீக்கும் சிகரெட்டுக்கும் மூணு நாளைக்கு மிஞ்சிப்போனா முந்நூறு ரூபாய் ஆகுமா? அதுக்குப்போயா நகையை வித்த? எங்கிட்ட கேட்டிருந்தா நான் சரி பண்ணி கொடுத்திருப்பேனே! எங்கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லாம எடுத்துட்டு போய் இப்படி செஞ் சிட்டியே! இந்த வீட்ல இருக்கறதே நாம ரெண்டு பேர்தான். நாம ஒருத்தருக்கு தெரியாம ஒரு விஷயம் செய்யலாமா குமார்?'' ஆதங்கத்துடன் கேட்டாள் சுதி.

தலை துவட்டிக் கொண்டிருந்த டவலை தூக்கி எறிந்தான் குமார்.

''ஒரு சின்ன செயினுக்கு என்ன நொய் நொய்ன்னு. பாய்ப் பார். எங்கப்பாகிட்ட இல்லாத நகையா? நியாயமா எங்க வீட்டுக்கு ஆண் வாரிசு நான். கல்யாணம் நடந்ததும் எங்கப்பனே என்னை கூப்பிட்டு அத்தனை நகையையும், சொத்தையும் எங்கிட்ட ஒப்படைச்சிருக்கணும். நானா இருக் கறதால போனா போகுதுன்னு பேசாம இருக்கேன்.'' ஸ்டூலை இழுத்துப்போட்டு அவளுக்கு எதிரே அமர்ந்தான். ''ஆமா எங்கப்பா, அம்மா ரெண்டு பேருக்கும் எதுக்கு அவ்வளவு



பெரிய வீடு? பேசாம அவங்களை வந்து இங்க ஒரு ரூம்ல இருக்கச் சொல். அந்த வீட்டை வாடகைக்கு விட்டா மாதம் ஒரு இருபதாயிரம் வராது? இன்னிக்கு நீ போய் சொல்.''

''அவங்களை பார்த்தாலே உனக்கு பிடிக்காது. இங்க வந்தா கூட பிடிக்காதுன்னு வர வேண்டாம்னு சொல்லிட்ட. இப்ப மட்டும் எப்படி குமார் இந்த வீட்டுக்கு கூப்பிடற?''

''என்ன செய்யறது? மாசம் இருபதாயிரம் வருமே!'' சற்றும் மனம் கூசாமல் பேசுபவனின் எதிரே நிற்கப் பிடிக்காமல் அவசரமாய் கீழே இறங்கி ஓடினாள் சுதி.

மாலையில் திரும்பி வந்ததும் குமார் மறுபடி துளைத் தெடுக்கப் போகிறான். இதுபோன்ற எண்ணம் அவனுக்கு எப்படி வந்தது? இப்போது இருக்கும் வீடே அப்பாவுடையது தான். அவர் வீட்டில் இருந்துகொண்டே அவர்களை வர வேண்டாம் என்பது. குடியிருக்கும் வீட்டை காலி பண்ண சொல்வது. இதற்கெல்லாம் என்ன உரிமையிருக்கிறது இவ னுக்கு? குமாரின் அப்பாவிடம் நான் இப்படி பேசமுடியுமா? அல்லது குமார் கூட இப்படி பேச தைர்யம் வருமா? ஒரு வேளை என் பேரில்தான் தவறா? எல்லா சராசரி பெண்களை யும் போல மணமானதிலிருந்து சினிமாவுக்கும், புடவைக்கும், நகைக்கும் புருஷனை தொல்லைப்படுத்தியிருக்க வேண் டுமா? பிறந்தகத்திலிருந்து கொண்டு வரும் ஒரு டம்ளரை யும் கூட என்னுடையது என எடுத்து வைத்திருக்க வேண் டுமா? ஐநூறு ரூபாய்க்கு அம்மா வீட்டில் வாங்கி தரும் புடவையை ஐயாயிரம் ரூபாய் என பெருமையடித்துக் கொண்டு, வார்த்தைக்கு வார்த்தை எங்க வீடு, எங்க வீடு என வறட்டு ஜம்பம் அடித்திருக்க வேண்டுமா? அப்பா வீடும், பொருளுமாய் வாங்கிப் போட, என்னுடைய வருமானத் திலும், உடல் உழைப்பிலும் சிறிதும் முணுமுணுப்பின்றி குடும்பத்தை கொண்டு சொல்வது குமாரிடம் அசூயையை ஏற்படுத்தியிருக்கிறது போலும். இதுவரை சுதியே கூட

அப்பாவிடம் பண விஷயம் பேசியதில்லை. விஸ்வநாதனாக சொத்து முதலீடு என பேச ஆரம்பித்தால் கூட "எதுக்குப்பா இப்படி அலையறீங்க? உடம்பை பாத்துக்கங்க" என்பாள். அதுவும் அவருக்கு ஒருமுறை அட்டாக் வந்ததிலிருந்து 'சம்பாதித்தது போதும். ஓய்வெடுங்கள்' என்பதுதான் சரஸ்வதிக்கும் சுதிக்கும் பேச்சாக இருந்தது. நேர்மையான வழியில் சம்பாதித்தவர் ஆனதால் எந்த ரகசியமுமின்றி நியாயமான முறையில் முதலீடு செய்திருந்தார் விஸ்வநாதன். சம்பாதிக்கும் ஒவ்வொரு பைசாவும் செலவழிக்கும் ஒவ்வொரு பைசாவும் மனைவிக்கும் மகளுக்கும் பிற்காலத் தில் எப்படி பயன்படக்கூடும் என்று யோசித்து செய்பவரிடம் குமார் பணத்திற்கு ஆசைப்பட்டு உரிமை கொண்டாடுவது எவ்வளவு அநியாயம்?

"ஏம்மா, கண்ணை பின்னாடி வெச்சிகிட்டா வண்டி ஓட்டற? சாவு கிராக்கி" ஆட்டோக்காரனின் கத்தலில் தடுமாறி பாதையில் கவனத்தை செலுத்தினாள் சுதி.

மருத்துவமனையினுள் நுழையும் போதே எதிர்பட்ட நர்ஸ் வசுமதி "குட்மார்னிங் டாக்டர்" என்றாள். பதில் குட்மார்னிங் சொல்லும்போது முகம் புன்னகையை பூசிக் கொண்டது. உடன் வந்த ரமா 'சுதி நீங்க கொஞ்சம் ஆபரேஷன் தியேட்டருக்கு வரணும்' என்றாள்.

"இன்னிக்கு சீனியர் எங்கிட்ட எதுவும் சொல்லியே, எதும் எமர்ஜென்ஸி கேஸ் இருக்கா ரமா?"

"எமர்ஜென்ஸி ஆபரேஷன்தான். ஆனா உங்களை கூப் பிடறது ஆபரேசனுக்கு உதவி செய்ய அல்ல. கரண்ட் போயிடிச் சாம். ஜெனரேட்டர் போட லேட்டுன்னு சீனியர் வாட்ச்மேனை கத்திக் கொண்டிருந்தார். அதனால்தான் உங்களைக் கூப் பிட்டேன்."

"ஏன் நான் வந்து ஸ்விட்ச் போட்டால்தான் ஜெனரேட்டர் ஓடுமா?"



"சேச்சே! - ஸ்விட்ச் எதுக்கு? நீங்க சிரிச்சா போதுமே. அந்த வெளிச்சத்திலேயே ஆபரேஷனை முடிச்சிடலாம். கரண்ட் செலவு, ஜெனரேட்டருக்கு கெரஸின் செலவு மிச்சம்." அப்பாவியாய் விவரித்த ரமாவின் முதுகில் ஓங்கி ஒன்று வைத்தாள் சுதி.

"எவ்வளவு அமைதின்னு உன்னை நான் நினைச்சுட்டு இருந்தேன் ரமா. ரவி கூட சேர்ந்து நீயும் கெட்டுப் போயிட்ட."

"நீங்க தப்பா நினைச்சதுக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும் சுதி?" சிரித்தபடியே வந்த இருவரும் டாக்டர் சுகுமார் எதிரே வருவதை கவனிக்கவேயில்லை.

"இது என்ன ஹாஸ்பெட்டலா? அல்லது ஹ்யூமரஸ் கிளப்பா? பொறுப்பான வேலையிலிருக்கும் இருவருக்கும் பேச்சிலும், நடந்து கொள்வதிலும் அந்த பொறுப்பு இருக்கணும். சின்ன பிள்ளைங்க மாதிரி நடந்து கொண்டால் நோயாளிகள் உங்களை எப்படி மதிப்பாங்க? எண்பது வயது ஆள் கூட இருபத்தி ஐந்து வயது டாக்டரை பார்த்ததும் எழுந்து நிற்கறான்னா அதுக்கு காரணம் உங்க மேல் இருக்கற மரியாதை இல்லை. உங்க தொழில் மேல் இருக்கற பக்தி."

"ஸாரி ஸார்" என்றார்கள் இருவரும் ஒரே குரலில்.

"சுதி ரமா மாதிரி ஜூனியர்களுக்கு டிஸிப்பிளின் கற்றுக் கொடுக்காமல் நீயே இப்படி பொறுப்பின்றி நடந்து கொள்ள லாமா? ஷேம்.. ஷேம்" என்றார் சுகுமார் எரிச்சலுடன்.

"ரமா இப்பதான் நீ ப்ராக்டீசை ஆரம்பித்திருக்கிறாய். ஆரம்பத்திலேயே பெயரைக் கெடுத்துக் கொண்டால் எப்படி மேலே போக முடியும்? நான்சென்ஸ்."

"இனி இப்படி நடக்காது என இருவரும் பலமுறை மன்னிப்பு கேட்டபிறகும் மேலும் சிறிதுநேரம் திட்டியபிறகே அவர்களை விட்டார். உள் நோயாளிகளை பார்க்க நேரமா கிட்டது என்ற அவசரத்தில் சுதி விரைந்தாள். கண்களில்

வழியும் நீரை துடைத்தபடி ரமா குழந்தைகள் வார்டிற்கு சென்றாள்.

## 28

மாலையில் டியூட்டி முடிந்து கிளம்பும்போது எதிர்ப்பட்ட ரவி, 'என்ன சுதி காலையில லட்சார்ச்சனை, பூஜை எல்லாம் நடந்துதாமே' என்று சிரித்தான்.

''எப்பவும் நடப்பதுதானே'' என்றாள் சுதி அலட்சியமாய்.

ரமாவின் டியூட்டியும் முடிந்து வெளிவந்தவள் நேராய் இவர்களிடம் வந்தாள். ''ஏன் சுதி நாம வேலை நேரத்தில் பேசி அரட்டை அடித்துக் கொண்டிருந்தோமா? அல்லது எந்த பேஷண்டையாவது கவனிக்காமல் இருந்தோமா? காலை யில் அப்போதான் உள்ளே நுழைகிறோம். பார்த்தவுடன் சீனியர் எப்படி திட்டுகிறார் பாரேன்! சே! என்ன மனுஷன்? எனக்கு இந்த மருத்துவமனையே பிடிக்கவில்லை.''

''நிஜமாவா?'' என்றாள் சுதி நம்பிக்கையின்றி. ''இதோ இவனை பார்த்த பிறகு கூடவா உனக்கு இந்த மருத்துவமனை பிடிக்கவில்லை?'' ரவியை சுட்டிக் காட்டினாள் சுதி.

அதற்குள் சுதாரித்துக் கொண்ட ரமா, ''முக்கியமா இவரை பார்த்ததால்தான் பிடிக்கவில்லை. இங்கே இருக்கும் டாக்டர் களில் ஆண்கள் எல்லாமே இப்படித்தான் போல'' என்றாள் குறும்புடன்.

''அடப்பாவி, சீனியர் பேசினதுக்கு இன்னிக்கு நான்தான் உங்களுக்கு கிடைச்சேனா?'' என்றான் ரவி சோகமாய்.

சிரித்தபடியே மூவரும் கேண்டீனில் டீக்கு சொல்லிவிட்டு அமர்ந்தனர்.

''ரமா நீ புதுசா இருக்கறதால உனக்கு கஷ்டமா இருக்கு. எங்களைப் பார். சீனியர் என்ன திட்டினாலும் எங்களுக்கு உறைக்கவே செய்யாது'' என்றாள் சுதி ரமாவிடம்.



''ஆமாம் ரமா. சீனியர் மருத்துவமனை நிர்வாகத்திற்கு வளைந்து கொடுத்துப் போவார் என்பதை தவிர மிக திறமை யான சர்ஜன் தெரியுமா? எவ்வளவு சிக்கலான அறுவை சிகிச்சைகளைக் கூட துணிந்து திறமையுடன் செய்துவெற்றி கரமாக்கி விடுவார். காலையில் ஆபரேஷன் தியேட்டரில் கரண்ட் போய், வாட்ச்மேனும் ஜெனரேட்டரை கவனிக் காமல் விட்டு, பேஷண்ட்டின் பி.பி. வேறு குறையவே, அந்த ஆபரேஷனை நாளைக்கு தள்ளி வைத்துவிட்டார். அந்த டென்ஷனில் உங்களை பார்த்ததும் கத்தியிருப்பார். எவ் வளவு சீக்கிரம் அவருக்கு கோபம் வருமோ அவ்வளவு சீக்கிரம் அது மறைந்தும் விடும்'' என்று ரமாவை சமாதானப்படுத் தினான் ரவி.

பேசாமல் தலையசைத்த ரமாவின் முகம் முழுசாக தெளியாததை பார்த்து ''வெளியே எங்காவது போகலாமா?'' என்றான் ரவி.

''சுதி இப்ப நீ ப்ரீதானே? வா பீச்சில் போய் ஒரு பத்து நிமிஷம் உட்கார்ந்து விட்டு போவோம்.''

சுதிக்கும் உடனே வீட்டிற்கு போவதற்கு ஆர்வம் எதுவும் ஏற்படவில்லை. போனதும் குமார் சண்டையை காலையில் விட்ட இடத்திலிருந்து தொடருவான். பேசாமல் அந்த செயின் எங்கோ தொலைந்து விட்டதாகவாவது பேசாமல் இருந்திருக்கலாம். அதை கேட்கப் போய்தான் குமார் புதிதாக ஒரு விஷயம் ஆரம்பித்திருக்கிறான். அது எங்கு போய் முடியும்? பல நூறு வருஷம் வாழ்ந்து முடிந்த மாதிரி சலிப்பேற்பட்டது நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டிருக்கும் குமாரின் விபரீத போக்கு இறுதியில் எப்படி முடியும் என்றிருந்தது.

''ஏய், சுதி'' ரமா உலுக்கினாள். ''பீச்சுக்கு போலாமான்னு கேட்டதுக்கு இவ்வளவு யோசிக்கிறீங்க? எங்களோடு வருவது அவ்வளவு யோசிக்கும் படியான விஷயமா என்ன?''

குமாரை அன்றொரு நாள் பார்த்த மாதிரி மறுபடி கடற் கரைப் பக்கம் சந்திக்க நேர்ந்தால் என்ன செய்வது என்று

யோசித்த சுதி. "நீங்க ரெண்டு பேரும் போறதுன்னு முடி வாயிட்டப்புறம் நான் எதுக்கு? உங்களுக்கு இடையூறாய்? என்றாள்.

"உன்னை போய் இடையூறாய் நினைப்பமா சுதி? ஏன் அப்படி சொல்கிறாய்?" ரவி வருத்தத்துடன் கேட்டான்.

"சும்மா விளையாட்டிற்கு சொன்னேன் ரவி. அதற்கு ஏன் இப்படி பீல் பண்ணுகிறாய்? நான் அம்மாவை பார்த்துட்டு வீட்டுக்கு போகலாம் என்றிருக்கிறேன்."

"சரி அப்ப இன்னும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு எல்லோரும் ஒன்றாகவே கிளம்புவோம், பீச்சுக்கு இன்னொரு நாள் போவோம" என்றாள் ரமா.

"என்ன ரமா, எனக்காக நீங்க ஏன் போகாம இருக்கணும்? கிளம்புங்க. நானும் இப்ப கிளம்பறேன்" என்று எழுந்தாள் சுதி.

"நம்ம கேண்டீன்ல இன்னிக்கு அதிசயமா வடை, கட் லெட் எல்லாம் போட்டிருக்காங்க சுதி. ரமா வாசம் பிடிச் சிட்டுதான் நைசா பின்வாங்கிட்டா பீச்சுக்கு போனா சுண்ட லோடு அனுப்பிடுவாங்க. இங்கேயே உட்காந்து பேசினால் ஓ.சி.யில ஒரு வெட்டு வெட்டலாம்னு முடிவு பண்ணிட்டா. உன்னை எதுக்கு இருக்க சொல்றான்னு நினைக்கற? பில் கொடுக்கத்தான்" என்று சிரித்தான் ரவி.

"போடா ரமாவையும் உன்னை மாதிரின்னு நினைச் சியா?" என சுதி ரமாவுக்கு வக்காலத்து வாங்க, "ஓ, ரவியை பத்தி நல்லா தெரிஞ்சி வெச்சிருக்கீங்க" என்று ரமா கிண்ட லடிக்க சிரித்தபடியே கட்லெட்டுக்கு ஆர்டர் கொடுத்தார்கள்.

மேலும் சிறிதுநேரம் பேச்சில் தான் வீடு மாற்ற விருப்பதாக ரமா சொன்னாள்.

"ஏன்? இந்த வீடு என்னாயிற்று?" என்றாள் சுதி.



"வாடகை அதிகம் கேட்கறாங்க சுதி. அதனால் கொஞ்சம் நகரத்தை விட்டு தள்ளி போகலாம்னு பார்க்கிறோம். இன்னும் தம்பி, தங்கைகளின் படிப்பு செலவு இருக்கில்லையா?"

"தள்ளிப் போனால் உனக்கு சிரமமாயிடும்" என்றான் ரவி.

"தேவையில்லாமல் பயணத்தில் இரண்டுமணி நேரம் கழிவதுடன் போக்குவரத்து செலவும் கணிசமாகத்தான் ஆகும். நோயாளிகளை பொறுத்து வேலை நேரம் தாமத மாகும் நமக்கு. அந்த சமயத்தில் நீ தனியாய் அகாலவேளை யில் செல்ல முடியாது. நானும் எப்பவும் கூட வரமுடியாது. என் வேலை நேரமும் மாறும். எல்லாவற்றையும் பார்த்துதான் வீடு மாறணும். அவசரப்படவேண்டாம்" என்றான்.

"இந்த மாத கடைசிக்குள் காலி செய்யணும். அல்லது வாடகை சேர்த்து தரணும்னு சொல்லியிருக்காங்க" என்றாள் ரமா.

"என்ன செய்யலாம்?" என்று யோசித்த ரவி, "ம் ரமா எங்க ப்ரண்ட் கிரிக்கு கல்யாணமாகப் போகுது. அவன் வசதிக்காக வேலை" பார்க்கும் மருத்துவமனை பக்கத்திலேயே தங்கி யிருந்தான். சொந்த ப்ளாட்தான் அது. இப்போ கல்யாண மானதும் அவங்க அப்பா, அம்மா கூட போய்விடுவான். இரண்டு பேரும் வேலைக்கு போறதுக்கு அதுதான் வசதி என்று சொல்லிக் கொண்டிருந்தான். அவன் அபார்ட்மென்ட் வீட்டை நான் கேட்டு பார்க்கிறேன். வாடகைக்கு தர ஐடியா இருந்தால் நீங்க அங்கே வந்து விடலாம்" என்றான் ரவி.

மேற்கொண்டு வாடகை, அட்வான்ஸ், குடும்ப செலவுகள் பற்றி பகிர்ந்து கொள்வதில் இருவரும் ஆழ்ந்து போயிருந் தனர். 'சிறுக கட்டி பெருக வாழ்' என்பதுபோல் சிறிது சிறிதாக சேர்த்து வைத்து நடத்தும் இவர்கள் இல்லறம் பெருமைக் குரியதாக இருக்கப்போகிறது என்று தோன்றியது சுதிக்கு. சின்ன சின்ன விஷயங்கள் கூட கணக்கிட்டு அலசப்படும் விதத்தில் ஒருவர் மீது மற்றவருக்கு உள்ள அக்கறை

தெளிவாக தெரிந்தது. இதுதானே இயற்கை! தன்னை சார்ந்துள்ளோரின் நலம் பேணுவதுதானே மனித இயல்பு! ஊரையே கொள்ளையடித்து சம்பாதிச்சவனும், ஏமாற்றுபவனும், கிரிமினல்களும் கூட தவறான வழியில் சம்பாதித்த பணத்தை தன் மனைவி மக்களுடன் பகிர்ந்து கொண்டு தானே வாழ்கிறார்கள். அல்லது, மது, மாது, நண்பர்கள் என உல்லாசமாக சுற்றுகிறார்கள். ஆனால் சொந்த வீட்டிலேயே கணவன் என்ற பெயரில் கொள்ளை அடித்து, தானும் உல்லாசமாய் அனுபவிக்காமல், வீட்டினருடனும் பகிர்ந்து கொள்ளாமல் இருக்கும் குமார் மாதிரி ஆட்கள் எங்கேனும் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. நோயாளி என்ற ரீதியில் பார்த்தாலும் கூட குமார் பிரகாசம் மருத்துவமனைக்கு சவாலான கேஸ்தான். புன்னகை அரும்பியது சுதிக்கு.

அவளை பார்த்த ரவி, "ரமா மூணுபேர் உட்காந்து பேசிட்டு இருக்கும் போது சம்பந்தமேயில்லாம ஒருத்தர் மட்டும் தனக்குதானே சிரிச்சிகிட்டா அந்த வியாதிக்கு பெயர் என்ன? நீ படிச்சிருக்கியா அதை பத்தி?" என்று ரமாவை கேட்டான்.

"மூணு பேர் பேசிட்டிருக்கும் போது இரண்டு பேர் கூட இருக்கும் ஒருத்தரை மறந்துட்டாங்கன்னா அது எந்த வகை மறதிநோய் ரமா? உனக்கு தெரியுமா?" என்றாள் சுதி பதிலுக்கு.

அதற்குள் பேரர் பில்லுடன் வரவே, "சுதி உனக்கு ஏதோ வந்திருக்கு. என்னன்னு பாரேன்" என அவ்வள் பக்கம் நகர்த்தினான் ரவி.

"வேண்டாம்ப்பா. எனக்கு எது வந்தாலும் நீயே வெச்சுக்க" என அவனிடம் பில்லை வைத்தாள் சுதி.

"நாங்க ரெண்டு பேரும் பேச்சிலர்ஸ், நீதான் குடும்பத் தலைவி, பொறுப்பான ஸ்தானத்தில் இருப்பவள். நீதான் பில்லை கொடுக்கணும்."



"ஒரு பில்லுக்காக என்னென்ன பேசறான்னு பாரு ரமா. சும்மா போனவளை நீங்கதான் கேண்டீனுக்கு கூப்பிட்டீங்க. சோ கூப்பிட்டவங்க தான் கட்டணும்." ஜாலியான சச்சரவுக்கிடையே ரமா பில்லை எடுத்துக் கொண்டதும் ஒடுவதை ஒருவர் பார்த்துக் கொண்ட சுதியும் ரவியும் பெரிதாக சிரிக்க ஆரம்பித்தனர்.

"எப்படியோ, உன்னை பில் கொடுக்க வெச்சிட்டோம் பாத்தியா?" ரவி மறுபடி சிரித்தான்.

"காலேஜ்லகூட இந்த மாதிரி நிறைய தடவை செய்திருக்கோம் ரமா. ப்ரண்ட்ஸ் கூட சாப்பிட போய்ட்டு நாங்க சண்டை போடத் தொடங்கியதும் கூட வந்தவர்கள் பில் தொகையை கொடுத்து எங்களை சமாதானம் செய்து அழைத்துப் போவார்கள். பில்லுக்குப் பணம் கொடுத்தது தெரிந்ததுமே அவர்களுக்கு பை சொல்லிட்டு நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து க்ளாசுக்கு ஓடி விடுவோம். என் க்ளாஸ்மேட் நிஷான்னு ஒரு பெண். அப்பாவி. பாவம் அவதான் எங்ககிட்ட அடிக்கடி மாட்டுவா. கிரி கூட ஆரம்பத்தில் ஏமாந்து போய் எங்க பில்லுக்குப் பணம் கட்டியிருக்கிறான். சும்மா ஜாலிக்காக செய்ததுதான். இப்ப ரொம்ப நாளைக்குப் பிறகு நீ எங்ககிட்ட மாட்டியிருக்கா" என விவரித்தாள் சுதி.

"நான் ஒண்ணும் மாட்டல. எங்கிட்ட இருக்கறதே முப்பது ரூபாதான். அதுல பஸ்சுக்கு மூன்று ரூபாய். ஒரு வேளை பஸ் கிடைக்கலைன்னா ஆட்டோவுக்கு என்றுதான் அவசரத்துக்கு மீதி இருபத்தி ஏழு ரூபாயும். சோ, எப்படியிருந்தாலும் நீங்க ரெண்டு பேரில் ஒருத்தர்தான் பில்லை கட்டணும்" குறும்புடன் கைகளை விரித்தாள் ரமா.

"அடிப்பாவி. ரொம்ப உஷாராத்தான் இருக்க" என சுதி வியக்க, "பர்ஸ்ல ஒரு நூறு ரூபா கூட இல்ல. நீயெல்லாம் எதுக்குடி கேண்டீன் பக்கம் வர்றா?" ரவி எகிறினான்.

"பாவம்னு உனக்கு கம்பெனி குடுக்க வந்தேன்" ரமா சொன்னதும் சிரித்தபடியே மூவரும் எழுந்தார்கள். கேஷ் கவுண்டரில் பணத்தை கட்டிய ரவி "நாம் சாப்பிட்டதுக்கு நாமளே பணம் கொடுக்கிற அளவுக்கு நிலைமை கேவலமாய் போயிடிச்சி" என விளையாட்டாய் புலம்பியபடி விடை பெற்றுப் போனான். ரமாவும் அவனுடன் சென்று வீட்டில் இறங்கிக் கொள்வதாய் போய்விட, சுதி காரை நோக்கி நடந்தாள்.

சுதி மணியைப் பார்த்தாள். ஆறு மணி ஆகிவிட்டிருந்தது. எந்த நேரம் போனாலும் குமார் சண்டைக்குத் தயாராய் காத்திருக்கையில் கொஞ்சம் தாமதமாகப் போனால்தான் என்ன? அம்மாவைப் பார்த்துவிட்டுப் போக வேண்டும். இந்த நேரம் அம்மா கோவிலுக்குப் போயிருந்தாலும் இருப்பாள் என்று நினைத்த சுதி, விஸ்வநாதனின் செல்லுக்குப் போன் பண்ணினாள்.

"அம்மா வீட்ல இருக்காங்களாப்பா?" என்றதும், "அவள் காலட்சேபம் கேட்கப் போயிருக்காம்மா. நம்ம தெரு முனை விஷ்ணு கோவிலில் கதை சொல்கிறவர் வந்திருக்கார். ஒரு வாரமாய் நம் தெருப் பெண்கள் யாரும் இந்த நேரத்துக்கு வீட்டிலிருப்பதில்லை" என்று சிரித்தார்.

"அப்படியாவது சற்று நேரம் டி.வி. சீரியல் அழுகையி லிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்கிறதே என்று சந்தோஷப்படுங்கள் அப்பா."

"நீ வேறம்மா. சீரியல் அழுகையை விடப் பெரிய அழுகை நமது புராணங்களில் ராமர் காட்டுக்குப் போனதையும், சீதையை இராவணன் சிறையெடுத்ததையும், பாரதத்தில் பாண்டவர்களின் கஷ்டத்தையும், கௌரவர்களின் துரோ கத்தையும், கர்ணனின் தியாகத்தையும் நினைத்து எத்தனை நூறு வருடங்களாக நாம் அழுது கொண்டிருக்கோம் பார்த் தாயா?"



"அழுவதற்கு காரணம் கதையல்ல அப்பா. வீரமும், சோக மும், காதலும், துரோகமுமாய் நம் கலாச்சாரத்தை பிரதிபலிப் பவை புராணங்கள். புராண காலத்திலுள்ள அத்தனை குணங்களுடன்தான் இன்றும் நாம் வாழ்ந்து வருகிறோம். என்ன, முன்பு தேவர், அசுரர், மனிதர், பாவம், புண்ணியம், நல்லது, கெட்டது என்று தரம் பிரித்துக் காண்பித்தார்கள்.

இன்றோ மனிதனுக்குள்ளேயே தேவனும், அசுரனும் இருக்கிறார்கள். நல்லவையும் தீமையும் அவனே செய்கிறான். அதற்கான பலனையும் அவனே அனுபவிக்கிறான். நம் உணர்வுகளை எதிரொளிப்பதால் தான் சில நூறு வருடங் களாக இந்த புராணங்களும் நம்மிடையே வாழ்கின்றன."

"என்ன இருந்தாலும் உனக்கு சரியா என்னால பேச முடியுமா சுதி?" என்றார் விஸ்வநாதன் பெருமையுடன்.

"சே! என்னப்பா உங்களுக்குத் தோணியதை சொன்னீங்க. என் மனசுல பட்டதை நான் சொன்னேன்" என்ற சுதி "நீங்க எங்கப்பா இருக்கீங்க?" என்றாள்.

"நான் ஆபீசுல இருக்கேம்மா."

"இப்ப டைம் என்ன தெரியுமாப்பா? ஆறு இருபது. இன்னும் உங்களுக்கு அலுவலகத்தில் என்ன வேலை?"

"நான் தொழிலாளியா இருந்தா மணியைப் பார்த்துட்டு கையை வீசிட்டுக் கிளம்பிடலாம். ஆனா முதலாளியா இருந்தா வேலை முடியும் மட்டும் இருந்துதானே ஆகணும்."

"அப்படி ஓடி ஓடி என்னப்பா சாதிக்கப் போறீங்க? உங் களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனபோதே இனிமேல் தொழிலை விரிவு படுத்த மாட்டேன் என எனக்கு ப்ராமிஸ் பண்ணிங்க நினைவிருக்காப்பா?" எரிச்சலுடன் கேட்டாள் சுதி.

"நான் எந்த வேலையும் செய்யல சுதி. ஆடிட்டர் வந் திருக்கார். அக்கவுண்ட்ஸ் செக் பண்ணிட்டு இருக்கோம்.

இன்னும் அரை மணி நேரத்தில் கிளம்பி விடுவேன். தொழிலை விரிவு படுத்தினாதான் வேலையா? இருப்பதை பராமரிக்க வேண்டாமா? சுதி, வாழ்க்கையில் கீழ் மட்டத்தில் இருக்கும்போது மேலே வர வேண்டும். கார் வாங்கணும், பங்களா கட்டணும். பேக்டரி கட்டணும்னு அசுரத்தனமா உழைக்க ஆரம்பிக்கிறோம். ஒரு வழியா முன்னேறி நினைச் சதை எல்லாம் வாங்கிய பிறகு, உழைப்பும் நம்மோட ஒரு அங்கமாவே மாறிப்போய்டுது. இனி எதையும் அடைய வேண்டிய இலக்கு இல்லை என்றாலும், சாப்பிடுவது, தூங்குவது, மூச்சு விடுவது மாதிரிதான் வேலை செய்வதும், உழைக்காமல் உண்பது யாருக்கும் சாத்தியம் இல்லை" என்றார் விஸ்வநாதன்.

"அப்பா சொல்வது உண்மைதான் என்று தோன்றியது சுதிக்கு. உலகில் எல்லா உயிர்களுமே தனக்கான உணவை உழைத்துதான் உண்கின்றன. இடத்தை விட்டு நகர முடியாத செடிகள் கூட தன் வேர்களை பரப்பி தனக்கான நீரையும், சத்தையும் உறிஞ்சிக் கொள்கிறது. ஆனால் மனிதன் மட்டும் தான் பிச்சையெடுத்தும், மிரட்டியும், அதிகாரம் பண்ணியும் வாழ்கிறான்."

"என்ன சுதி பேச்சையே காணோம்" அப்பா மேல கோப மாம்மா? நான் இதோ கிளம்பிட்டேம்மா" விஸ்வநாதனின் குரல் மகளின் மௌனத்தை தாங்க முடியாமல் தழைந்தது.

அப்பா பாவம் அவர் வேலையைப் பார்த்துக் கொண்டிருந் தார். வீணாய் போன் போட்டு அவரை வருத்தப்படுத்தி யிருக்கக் கூடாது. தன்னையே நொந்து கொண்ட சுதி, "எனக்கு கோபமெல்லாம் இல்லப்பா. உங்களை வருத்திக் கிறீங்கன்னு கவலைதான். உடம்பைப் பாத்துக்கங்கப்பா. மற்றபடி எதுவுமில்லை. நான் போய் அம்மாவை கோவில்ல பாத்துட்டு வீட்டுக்குப் போறேன். பை" என்றபடி போனை அணைத்தாள். காரில் ஏறி அமரும்போது செல்லம்மா



அவசரமாய் வெளியே போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. காரை அவள் அருகில் நிறுத்தி, "என்ன செல்லம்மா இவ்வளவு அவசரம்?" என்று விசாரித்தாள் சுதி.

திரும்பிப் பார்த்த செல்லம்மா "அவசரம்னு இல்லம்மா. இன்னிக்கு ரொம்ப தாமசமாயிடிச்சி. கிளம்பற நேரம் ஒரு டெலிவரி கேஸ் வந்தது. டாக்டர் காந்திமதி லேபர் ரூமில் கண்டிப்பா இருக்கணும்னு சொல்லிட்டாங்க. இப்பதான் குழந்தை பிறந்து வார்டுக்கு அனுப்பினப்புறம் ரூமை சுத்தம் செய்துட்டு கிளம்ப நேரமாயிடிச்சி. பையன் ஸ்கூல் விட்டு வந்து பசியோட வாசலில் உட்கார்ந்திருப்பான். பக்கத்து வீட்ல சாவி குடுத்துட்டு வருவேன். இன்னிக்குப் பக்கத்து வீட்ல அவங்க சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு வெளியூர் போயிட்டாங்க. பாவம் பையன் தனியா இருப்பானேன்னுதான் ஓடறேன்" சொல்லிவிட்டு அவசரமாய் நடக்க ஆரம்பித்தாள்.

"நான் எங்க அம்மாவைப் பார்க்கப் போறேன் செல்லம்மா. உன் வீட்டு வழியாகத்தான் போகணும். வா வழியில் இறக்கி விடுகிறேன்."

"அம்மா உங்களோட கார்லயா? எனக்கு அப்படியெல் லாம் போய் பழக்கம் இல்லம்மா. நீங்க போங்க?" மறுத்தாள் செல்லம்மா.

"உட்கார்ந்துட்டு வர்றதுக்கு பழக்கம் வேற வேணுமா? சும்மா உட்கார்." மறுபடி செல்லம்மா தயங்கவே, "செல்லம்மா உனக்காக நான் உன் வீட்டுக்கு போகல. நான் போகிற வழியில் தான் உன்னை இறக்கி விடுகிறேன். தெரியுதா?" என்றாள் சுதி கண்டிப்புடன்.

"அம்மா தப்பா நினைக்காதீங்க. நீங்கதான் என் கடவுள். நீங்க சொல்லி நான் மறுப்பேணா? ஆனா அம்மா ஒரு நாளைக்கு இப்படி அவசரம்னு பழகிட்டா அதுவே வழக்கமாயிடும். நீங்க வேற வழியில போறதா இருந்தா கூட கார்தான அம்மா நம்மளை இறக்கி விட்டு போனா என்னன்னு தோணும்.

அப்புறம் எங்க குப்பத்து முன்னாடி கார்ல போய் இறங்கினேன்னு வையுங்க. சனங்க எல்லாம் அதை ஒரு பெரிய விஷயமா பேச ஆரம்பிக்கும் செல்லம்மாவுக்கு என்ன கார்கார அம்மாவைப் பிடிச்சிக்கிட்டான்னு கிண்டல் பண்ணும். நம்ம ஆஸ்பத்திரிலேயே எங்க கூட வேலை செய்யறவங்க முதுகுக்குப் பின்னாடி பேசத்தான் செய்வாங்க. கஞ்சியோ, கூழோ என்னுடைய வருமானத்துல நானும் என் பையனும் நிம்மதியா இருக்கம். நான் கார்ல வர்றதை பாத்துட்டு அவனும் கார் ஏற அடம் பிடிச்சா என் நெலமை என்னாவும் சொல்லுங்க? அம்மா உங்களுக்கு உதவி பண்ணனும்னா ஆட்டோவுக்கு காசு கொடுங்க. நான் ஒரு ஆட்டோ பிடிச்சி போயிடறேன்.''

தயங்கித் தயங்கியே சொல்லி முடித்தாள் செல்லம்மா.

வழியில் இறங்கிக் கொள் என்றதற்கு இத்தனை விளக்கமா என்று நினைத்தாலும் செல்லம்மாவின் நேர்மை மனதை தொடவே மறு பேச்சின்றி ஆட்டோவிற்கு என ஒரு ஐம்பது ரூபாய் தாளை கொடுத்தாள் சுதி. ரோட்டை கடந்த ஆட்டோக்காரனிடம் பேரம் பேசி இருபது ரூபாய் என முடித்த செல்லம்மா மீதி முப்பது ரூபாயை சுதியிடம் வற்புறுத்திக் கொடுத்துவிட்டு நன்றியுடன் ஆட்டோவில் ஏறிப் போனாள். பின்னால் ஒலித்த ஹாரனின் சப்தத்திற்கு காரை எடுத்தாள் சுதி.

## 29

சுதி தெருமுனை விஷ்ணு கோவிலுக்குப் போய் சேரும் போது தெருவில் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. கோவில் சீரியல் பல்புகள், டியூப் லைட்டுகள் கட்டப்பட்டு வெளிச்சமாய் இருந்தது. வண்டியை ஓரமாய் நிறுத்தும்போதே மைக்கில் கதை சொல்பவரின் குரல் கேட்டது. அரிச்சந்திரன் கதை இறுதி கட்டத்தில் இருந்தது. செருப்பை காரிலேயே போட்டு கதவை பூட்டிவிட்டு இறங்கி உள்ளே போனாள் சுதி. நுழைவாயிலிருந்து வலதுபுறமுள்ள மேடையில் கதை



நடந்து கொண்டிருக்க சுற்றிலும்.. பெண்களும், வயதான பெரியவர்களும், குழந்தைகளுமாய் இருந்தனர். நின்ற இடத்திலிருந்து அம்மாவை கண்களால் தேடினாள் சுதி. மயான கட்டத்தில் சந்திரமதியிடம் மகனின் பிணத்தை எரிக்க பணம் கேட்டதை உருக்கமாய் உபாசகர் சொல்ல அமர்ந்திருந்தவர்கள் கண்ணீர் விட்டு அழலாயினர். தூணில் சாய்ந்து கண்களை துடைத்துக் கொண்டிருந்த சரஸ்வதி எதேச்சையாக திரும்பியவள் சுதியைப் பார்த்ததும் அதிர்ந்தாள். மற்றவர் கவனத்தை ஈர்க்கா வண்ணம் எழுந்து வந்தவள், ''என்ன சுதி திடுதிப்னு இங்க வந்து நிக்கற? உடம்புக்கு ஒண்ணுமில்லையே!'' என்றாள்.

''போம்மா, உன்னை பாக்கலாம்னு ஆசையா வந்தா எனக்கு உடம்புக்கு வரச் சொல்றியா?'' அம்மாவிடம் சிணுங்கினாள் சுதி.

''எதிர்பாராம உன்னைப் பாத்ததும் என்னவென்று நினைச்சிட்டேன் சுதி. சரி வா. வீட்டிற்கு போகலாம்'' என்றாள் சரஸ்வதி.

''இல்லம்மா நான் பத்து நிமிஷத்துல கிளம்பிடுவேன். வா இங்கேயே உட்கார்ந்துட்டு போறப்ப உன்னை வீட்ல இறக்கி விட்டுப் போறேன்.''

''ஆஸ்பத்திரியிலயிருந்து நேரா வர்ற போலிருக்கே. மதியம் சாப்பிட்டதுதான் இல்லையா? வீட்டுக்கு வா சுமதி. தோசை வார்த்து தருகிறேன்.''

சரஸ்வதி மகளின் வாடிய முகத்தைப் பார்க்க பொறுக்காமல் கூப்பிட்டாள்.

''ஆஸ்பத்திரி கேண்டீன்ல ரவி, ரமாவோட சாப்பிட்டு விட்டுதான் வந்தேன். இரும்மா உன் திருப்திக்கு இங்க பிரசாதம் சாப்பிடலாம்'' என சர்க்கரைப் பொங்கலும், புளியோதரையும் வாங்கிக் கொண்டு வந்து அம்மாவுடன் ஓரமாய் அமர்ந்தாள் சுதி.

ஒருவாய் பொங்கலை சுவைத்த சரஸ்வதி, "ஏதும் விசேஷமா சுதி?" என்றாள் ஆர்வத்துடன்.

சுதிக்கு அம்மாவைப் பார்க்க பாவமாய் இருந்தது. "விசேஷம் தாம்மா. இன்னிக்கு கோவில்ல காலட்சேபம் நடக்குதே" என்று சிரித்தாள்.

"நான் அதையா கேட்டேன்? நீ ஏதாவது உண்டாயிருக்கியான்னு கேட்டேன்."

"அதான் வாராவாரம் கேக்கிறயேம்மா. புதுசா ஏதாவது கேளேன்."

"புதுசா கேட்க எனக்கு என்ன சுதி தெரியும்? எனக்குத் தெரிந்தது எல்லாம் உங்கப்பா. நீ, நம்ம வீடு, இந்த கோவில்தான். ஒரு பேரனோ, பேத்தியோ மடியில் போட்டு கொஞ்சிட்டேன்னா போதும். இந்த ஜென்மம் நிறைவடைஞ்சுடும் எனக்கு." சரஸ்வதியின் குரல் உடைந்தது.

மேடையில் உபன்யாசம் செய்பவரின் குரல் உச்சஸ்தாயியில் கேட்டது.

கதை நிறைவடையப் போகிறது போலும். கதை சொல்றவர் நல்லா சொன்னாராம்மா? நம்ம வீட்லயே அரிச்சந்திரன் கதை இருக்கே. நீ படிச்சதில்லை?" அம்மாவின் மூடை மாற்றினாள் சுதி.

"படிச்சிருக்கேன் சுதி. ஆனா இவர் பாவத்தோட, சுலோகம் விளக்கம் எல்லாம் சொல்றப்ப நெஞ்சைப் பிழிகிறது. அரிச்சந்திரன் எவ்வளவு பெரிய சத்யவான். அவன் கதையை எத்தனை முறை கேட்டாலும்தான் என்ன? நம்மால் அந்த மாதிரி இருக்க முடிகிறதா என்ன? காலையில படுக்கையிலிருந்து வெளியே வரும்போது தொடங்கி, இரவு படுக்கப் போகும் வரை ஒரு நாளைக்குத் தேவையில்லாமலேயே எத்தனை பொய் சொல்கிறோம்? உங்கப்பா அவசரமா வெளியில போகணும். சாப்பாடு ரெடியாம்மா. இன்னும் ரெடியாக



லைன்னா சாப்பிடாமயே போயிடுவார்னு 'ஓ' ரெடி ஆயிடிச்சிங்க என்று சொல்லிக் கொண்டே அவசரமாய் செய்வேன். அவர் தயாராகிக் கீழே வரும்போது சாதமும், சாம்பாரும் டேபிளில் வைத்துவிட்டு, அடுப்பில் பொரியலுக்கு தாளித்து விடுவேன். அவர் சாம்பார் சாதம் சாப்பிடும் போது ரசம் ரெடியாகி விடும். ரசம் சாப்பிடும்போது பொரியலும் தயாராயிடும். எல்லாம் ஒண்ணா எடுத்து வையேன். எதுக்கு ஒவ்வொண்ணுக்கும் சமையலறைக்கு ஓடறேம்பார் உங்கப்பா. அதே மாதிரி தோட்டக்காரன் அடிக்கடி வந்து பையனுக்கு பீஸ் கட்டணும். பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை என காசு கேட்பான். அவனுக்கு சம்பளம், போனஸ் எல்லாம் ஒழுங்கா குடுக்கறதோட சரி. குடிப் பழக்கம் உள்ளவன். அதனால் மேற்கொண்டு எதுவும் தரக்கூடாது என்பார் அப்பா. 'அந்த குடிகாரன் தண்ணியை போட்டுகிட்டு பொண்டாட்டி கூட சண்டைம்மா. அவனுக்கு சாப்பாடு கூட போடக் கூடாது என்பாள் பாலம்மா. அவள் இருக்கும்போது தோட்டக்காரன் வீட்டுப் பக்கமே வரமாட்டான். யாரும் இல்லாத போது வந்து கெஞ்சுவான். ஒரு வேளை நிஜமாலுமே அவங்க வீட்ல யாருக்காவது உடம்பு சரியில்லைன்னா நாம பண்றது தப்பாச்சேன்னு தோணும். எனவே அவன் ஐம்பது ரூபா கேட்டால் முப்பது ரூபாயாவது கொடுத்து விடுவேன்.

நாள், கிழமைன்னு விரதம் இருக்கும்போது பட்டினி கிடக்காதீங்கன்னு நீ திட்டுவ. அதனால் அந்த சமயங்களில் நீ சாப்பிடக் கூப்பிட்டால் முன்பே சாப்பிட்டு விட்டதாகச் சொல்லியிருக்கிறேன் உன்னிடம். இந்த மாதிரி புருஷனுக்கும், மகளுக்கும், வேலைக்காரிக்கும் கூட தெரியாமல் தினமும் எத்தனை பொய்கள்? நம்மால அரிச்சந்திரனா வாழ முடியலைன்னாலும் அவன் கதையைக் கேட்டாவது பாவத்தைப் போக்கிக்கலாம்."

சுவரில் சாய்ந்து அமர்ந்திருக்கும் சரஸ்வதியின் தோள் மீது தலையை சாய்த்துக் கொண்டாள் சுதி.

"அம்மா நீ சொல்றதுக்கு பெயர் பொய் இல்லம்மா, உன்னுடன் இருப்பவர்களின் நலனில் நீ காட்டும் அக்கறை. பிறர்க்கு நன்மை செய்யுமானால் பொய்மையும் வாய்மையி னிடத்துன்னு வள்ளுவரே சொல்லியிருக்காரே!

அரிச்சந்திரனை விட நீதாம்மா நல்லவ. தன் ராஜ்யத்தை இழந்து அரண்மனையில் வளர்ந்த மனைவியையும், மகனையும் அடிமை வேலை செய்ய அனுப்பி, மகனைப் பறி கொடுத்து, மனைவி கதறும் அந்த நிலையிலும் தாலியை விற்கச் சொல்லி, அரிச்சந்திரன் தன்னையே நம்பியிருந்த மனைவியையும் மகனையும் கஷ்டத்துக்குள்ளாக்கினான். அதற்கு பதிலாய் யாருக்கும் கெடுதலற்ற ஒரு பொய்யையே சொல்லியிருக்கலாம். தன்னை அண்டியுள்ளோரை வாழ வைக்க சின்னச் சின்ன பொய்கள் சொல்லலாம். தப்பில்லை."

"வாய்மையின் சிறப்பை வலியுறுத்துவதற்காக படைக்கப் பட்டவன் அரிச்சந்திரன். அதை நீ இப்படி விமர்சனம் பண்ணாதே சுதி. உயர்ந்த நம்பிக்கைகளையும் கோட்பாடு களையும் எதிர் மறையாய் விமர்சனம் பண்ணுவது கூட மற்றவரை கஷ்டப்படுத்தும் செயல்தான். அதை நீ செய் யாதே" என்றாள் சரஸ்வதி மகளின் கையை வருடியபடி.

உடனே 'ஸாரிம்மா' என்றபடி எழுந்து அமர்ந்தாள் சுதி. கதை முடிந்து கூட்டம் எல்லாம் கலைந்து போயிருக்க. ஒரு சில பெரியவர்கள் மட்டும் சற்று தள்ளி அமர்ந்திருந்தனர். பிரசாத ஸ்டால் மூடப்பட்டிருந்தது. குருக்கள் கூட படிகளில் ஓய்வாக உட்கார்ந்திருந்தார்.

"போலாமா சுதி?" என்றபடி எழுந்த சரஸ்வதி கருவறைக்கு முன் சில நிமிடம் கண் மூடி நின்று விட்டு வெளியே நடந் தாள். வேறு வழியின்றி சுதியும் பின் தொடர்ந்தாள்.

"இன்னிக்கு இங்கயே தங்கிடு சுதி. மாப்பிள்ளைக்கும் போன் பண்ணி வரச் சொல்லேன். அவர் திருமணமான



புதிதில் ஒரு வாரம் தங்கியதுதான். பிறகு வரவேயில்லையே!" என்றபடி காரில் அமர்ந்தாள் சரஸ்வதி.

"இல்லம்மா நைட் அவர் வீட்டிற்கு வர லேட்டாகும். நான் போகிறேன். இன்னொரு நாள் வருகிறோம்."

"பாவம் அவரும் ரொம்ப பிஸியா இருக்கார். நீயும் வேலை வேலைன்னு ஓடறவ. அவருக்கு வாய்க்கு ருசியாவாவது சமைச்சிப் போடறியா சுதி?"

சரஸ்வதி அப்பாவியாய் மருமகனைப் பற்றிக் கவலைப் பட்டாள்.

விஸ்வநாதன் திருமணமானதிலிருந்தே பிஸியான ஆள். நிற்க நேரமில்லாதவர். எனவே சொந்த பந்தங்கள் வீட்டு விசேஷத்திற்கு சரஸ்வதிதான் சென்று வருவாள். எனவே மருமகன் தங்கள் வீட்டிற்கு அடிக்கடி வராதது அவளுக்கு வித்தியாசமாய் தோணவில்லை. அம்மாவை வீட்டில் இறக்கி விட்ட சுதி நேராய் தங்கள் வீட்டுக்கு செல்லும் பாதையில் வண்டியைத் திருப்பினாள். இவ்வளவு நேரம் ஒளிந்து கொண்டிருந்தாயிற்று. இப்போது பார்க்க வேண்டியவர் யாரும் இல்லை. எந்த வீட்டுக் கதவையும் இப்போது தட்ட முடியாது. குமாரை சந்தித்துதான் ஆக வேண்டும். ஒரு பெருமூச்சுடன் காரை வீட்டு போர்டிகோவில் நிறுத்தி பூட்டி விட்டு உள்ளே நுழைந்தாள். வீடு அமைதியாக இருந்தது. குமாரை கீழே காணவில்லை. சமையலறை வழியாக பின் பக்கம் போய் பைப்பைத் திறந்து கை கால்களை கழுவினாள். உள்ளே வரும்போது மேலே குமார் நடக்கும் சத்தம் தட் தட் என்று பலமாகக் கேட்டது. நான் வந்து விட்டதை பார்த் திருப்பானா என்று தெரியவில்லை. குமார் கீழே வருவதற்குள் சமைத்து விட்டு கீழே இருக்கும் அறையில் போய் தாளிட்டுக் கொள்ளலாம். இன்று இரவாவது நிம்மதியாய்த் தூங்கலாம். அவசரமாய் ஒரு உப்புமாவைக் கிளறி ஹாட் கேசில் வைத்து விட்டு, டம்ளரும் தண்ணீரும் அருகில் வைத்துவிட்டு

சமையலறையை விட்டு வெளியே வரும்போது குமார் எதிரில் வந்து நின்றான். தலை முதல் கால் வரை அவன் பார்வை ஊடுருவியது: தலையில் பூ இருப்பது அப்போது தான் நினைவு வந்தது. கோவிலில் சாமி மேலிருந்த பூவை குருக்கள் பிரசாதமாய் கொடுத்தார். அம்மா அவளுக்கு கொடுத்த பூவையும் சேர்த்து நீளமாய் சுதிக்குத் தலையில் வைத்து விட்டிருந்தாள். 'மருத்துவமனையில் வேலை முடிந்து வரும் கோலமா இது? நெற்றியில் குங்குமமும், தலையில் பூவுமாய் இவ்வளவு தாமதமாய் எங்கிருந்து வருகிறாய்?' என குமார் கேட்கப் போகும் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று சுதி யோசிக்கத் தொடங்கும்போதே "சாப்பாடு எடுத்து வை" என்றான் குமார்.

"உப்புமாதான் இன்னிக்கு" என்றபடி தட்டில் வைத்து கொடுத்து விட்டு பாலை சூடு பண்ணி பதமான சூட்டில் அருகில் வைத்தாள். அமைதியாய் சாப்பிட்டு பாலை குடித்த குமார் 'மேலே வா' என்றபடி படியேறிப் போனான்.

பார்த்தவுடன் ஏன் எதுவும் கேட்கவில்லை? பெரிதாக ஏதாவது காத்திருக்கிறது போலும். அதனால்தான் தாமதமாக வந்ததைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறான். "இன்னும் பத்து நிமிடம் குமார் கீழே வராமல் இருந்திருந்தால் மெதுவாய் கீழே இருக்கும் அறைக்குள் சென்றிருக்கலாம். காலையில் குமார் கேட்டால் அசதியாய் இருந்தது. படுத்தேன். அப்படியே தூங்கி விட்டேன் போலிருக்கு" என சமாளித்திருக்கலாம். இப்போது நழுவ முடியாது. நான் மேலே போகவில்லை எனில் குமார் கீழே இறங்கி வந்து விடுவான். தன் எண்ணங் களின் போக்கை நினைத்து சுதிக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. மணமான எந்த பெண்ணுமே தன் வேலை முடிந்ததும் சீக்கிரம் வீடு திரும்ப வேண்டுமென்று தான் விரும்புவாள். கணவன் வர சிறிது தாமதமானாலும் ஏன் லேட்டாகிறது என போன் பண்ணியோ, வந்த பிறகு நேரிலோ



துளைத்தெடுத்து விடுவாள். அதுவும் திருமணமான புதிதில் கணவன் வரும் நேரம் முகம் கழுவி, புடவை மாற்றி தன்னை அலங்கரித்துக் கொண்டு வாசலுக்கும் வீட்டிற்குமாய் நடந்து கொண்டிருப்பாள். ஆனால் தன் வீடே தனக்கு மிரட்சியாய், கணவனை தினம் சந்திப்பதே தவிர்க்கப்பட வேண்டிய விஷயமாய் மாறிப்போன வாழ்வின் விசித்திரத்தை சிந்தித்த படியே தங்கள் அறைக்குச் சென்று கதவைத் தாழிட்டாள் சுதி.

வழக்கம் போல் பால்கனியில் அமர்ந்திருந்த குமார் கதவு தாளிட்ட சத்தம் கேட்ட உள்ளே எழுந்து வந்தாள்.

"உங்கம்மா வீட்டிற்குப் போனியா?" என்றான்.

"வீட்டிற்குப் போகவில்லை. அம்மா கோவிலில் இருந் தார்கள். அப்பா அவருடைய ஆபீசில் இருந்தார். அப்பாவிடம் போனில் பேசிவிட்டு அம்மாவை கோவிலில் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்.'

"என்ன சொன்னார்கள் இருவரும்?"

"நன்றாக இருப்பதாகச் சொன்னார்கள். உன்னை ஒருமுறை வீட்டிற்கு வர சொன்னார்கள்."

"கொழுப்பா உனக்கு? நான் என்ன கேட்கிறேன்? நீ என்ன பதில் சொல்கிறாய்? காலையில் நான் சொன்ன விஷயம் பேசினாயா? அவங்க இங்கேயே வந்து விடுவதாகச் சொன் னார்களா? உங்கப்பா இங்கே வந்து விட்டால் அவருடைய அலுவலகத்தைக் கூட நானே பார்த்துக் கொள்வேன். இருவரும் நிம்மதியாக ரெஸ்ட் எடுக்கலாம்."

எங்கப்பாவுக்கு ரெஸ்ட் தேவையில்லைங்கிறார் குமார். அவர் மனசளவில் சுறுசுறுப்பாக இருக்கிறார். இன்னும் உழைக்கத் தயாராக இருக்கிறார். அவருக்கு தேவை நம் முடைய அன்பும் அனுசரணையும் தான். அவரால் ஒரு நாள் முழுசும் வீட்டில் சும்மா இருக்க முடியாது. முடிந்தவரை ஓடிக் கொண்டுதான் இருப்பார். பெற்ற மகளைப் போல, தான்

தொடங்கி வளர்த்த தொழில் மீதும் அவருக்குப் பாசம் அதிகம். என்னிக்காவது அவரால் முடியாதபோது நம்மைக் கூப்பிட்டால் அப்ப போய் உதவி செய்வோம். அதுவரை அவர் தொழிலை அவர் பார்க்கட்டும். நம்ம வேலையை நாம் பார்ப்போமே'' என்று சுதி தன்மையாக விளக்க முற்பட்டாள்.

குமாரின் கண்கள் சிவந்து நெருப்பாய் மின்னின. சுதியைப் பார்த்தாலே கடித்துக் குதற வேண்டும் போலிருந்தது அவனுக்கு. என்னதான் பணக்கார வீட்டில் பிறந்தாலும் அம்மாவின் அன்போ, அப்பாவின் பணமோ கிடைக்காமல், நிரந்தர வருமானமின்றி எப்பவும் பிச்சைக்காரனைப் போல் தான் வாழ்க்கையில் அன்பான அம்மா அப்பா. அவர்கள் அமைத்துக் கொடுத்த வளமான வாழ்க்கை, உயர்ந்த கல்வி, கௌரவமான தொழில். அதனால் கிடைக்கும் புகழ், அந்தஸ்து, உயிர் காக்கும் தோழமை என எல்லாவற்றிலும் குறையின்றி உயர்ந்து நிற்கும் சுதியை கீழே தள்ளி நசுக்க வேண்டும் போல் ஒரு ஆங்காரம் எழுந்தது. விஸ்வநாதனின் நிலை பெற்றுவிட்ட தொழிலிலிருந்து கிடைக்கும் சீரான வருமானமும் அந்த வருமானத்தை குடும்பத்தினருடன் பங்கிட்டுக் கொள்வதும், கஷ்டத்திலும், நஷ்டத்திலும் குடும்பத்திலுள்ள மற்ற இருவரும் அவருடன் துணை நிற்கச் செய்கிறது. அவரது தொழிலை பிடுங்கி ஐந்துக்கும் பத்துக்குமாய் அவர் என்னிடம் கையேந்த வேண்டும். எப்பவும் இந்த வீட்டிலேயே இருந்து கொண்டு என்னிடம் பெற்றோர் அவமானப்படுவதைப் பார்க்கும் சுதி தன் கம்பீரத்தை எல்லாம் இழந்து, கதறி அழுது சோகமாய் நடமாடுவதைப் பார்க்க வேண்டும். சதா சிரிக்கும் அந்த இதழ்களை நிரந்தரமாய் பூட்ட வேண்டும். தினமும் போனில் பேசுவதும், அம்மாவின் மேலே சாய்ந்து கொஞ்சுவதுமாய் சுதியும் அவள் அம்மாவும் அடிக்கும் கூத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தே ஆக வேண்டும் என்ற வெறியுடன் அவள் முகத்தைப் பற்றி வலிக்க திரும்பினான்.



''உங்க வீட்டு மருமகன் நான். உங்கப்பாவிற்கு அடுத்த வீட்டின் ஆண் வாரிசு நான்தான். நியாயமா கல்யாணம் நடந்ததும் உங்கப்பாவா எங்கிட்ட வந்து 'எனக்கப்புறம் இந்த வீடு சொத்துக்கள், அலுவலகம் எல்லாம் உங்க பொறுப்பு. நீங்கதான் பார்க்க வேண்டும்' என்று சொல்லி சாவியைக் கையில் கொடுத்திருக்கணும். வீட்டுக்கு மருமகன் வந்த பிறகும் டிப்டாப்பாய் உடையணிந்து ஆபீஸ் செல்வதும், மனைவியுடன் ஊர் சுற்றுவதுமாய் இருக்கிறான் உங்கப்பன். அட உனக்காவது தெரிய வேண்டாம்? எல்லாம் எங்க வீட்டுக்காரர் பாத்துக்குவார். நீங்க அமைதியா வீட்டோட உட்காருங்கன்னு சொல்ல வேண்டாம்? உனக்கென்ன, அவங்க தனியா இருந்தாதான எங்கம்மாவைப் பார்க்க போறேன்னு சொல்லிட்டு கண்ட பசங்களோட சுத்த முடியும்? இங்க பார் உங்கப்பா கிட்ட சொல்லி முதலில் அந்த பேக்டரியை எங்கிட்ட விட சொல். இல்ல நான் என்ன செய்வேன்னு எனக்கேத் தெரியாது?''

''இப்போது மட்டும் தெரிந்தா செய்கிறாய் என்று நினைத்த சுதி, ''எங்கப்பாகிட்ட எப்படி குமார் நாம கேட்க முடியும்? அவர் சுயமா சம்பாதித்த சொத்து அது. அதன் மேல் எனக்கே இல்லாத உரிமை உனக்கு எங்கிருந்து வந்தது?''

''என்னது, உங்கப்பன் சொத்துல உனக்கு உரிமையில்லையா? அப்ப நீ உங்கப்பனுக்கே பொறக்கலியா?'' கைத்தட்டிச் சத்தமாய் சிரித்தான் குமார். நெருப்பை வாரி இறைத்தாற்போல் துடித்துப் போனாள் சுதி. அம்மாவின் சாந்தமான முகம் நினைவுக்கு வந்தது. அவளைக் கூட ஒருவர் இந்த வார்த்தை சொல்ல முடியும் என கற்பனையில் கூட இதுவரை கண்டிராத சுதி அதிர்ந்தாள். இத்தனை நாட்களில் முதல் முறையாக குமாரிடம் கோபத்துடன் பேசினாள். ''என்ன பேசறோம்னு யோசித்துப் பேசு குமார். வார்த்தையைக் கொட்டி விட்டால் அள்ள முடியாது. எங்கம்மாவை எது

சொன்னாலும் அது உங்கம்மாவையே நீ சொல்லிக் கொண்ட மாதிரிதான். உங்கப்பாவிற்கு நீயும் ஒரே பையன்தான். அதுவும் எக்கச்சக்க சொத்து. அவரிடம் நீ ஏன் இதே கேள்வியைக் கேட்கக் கூடாது?''

பதில் சொல்ல முடியாத குமார் பளீரென்று அறைந்தான். ''யாரிடம் எப்ப எதை கேட்கணும்னு எனக்குத் தெரியும். நீ அதை சொல்லவேண்டியதில்லை. புருஷன் வார்த்தையை மதித்து நடக்கப் பார் முதலில்.''

''மதித்து நடக்க எப்பவும் நான் ரெடி குமார். ஆனால் எங்க அம்மாவையோ அப்பாவையோ கட்டுப்படுத்தவும் கட்டளையிடவும் உனக்கு என்ன உரிமையிருக்கு? ஒருவேளை உன் தொழிலுக்கு ஏதாவது பணம் தேவைப்பட்டால் மாமனாரிடம் உதவியாகவோ, கடனாகவோ கேட்கலாம். அதுதான் முறையே தவிர அவர்களது சொத்துக்களைப் பறித்துக் கொண்டு இங்கே கொண்டு வந்து சிறை வைக்க நினைப்பது அராஜகமில்லையா? எனக்கு தாத்தா சொத்துன்னு சொல்றதுக்கு எங்க பெரியவங்க எதையுமே சேர்த்து வெக்கல. என்னுடையதுன்னு எதுவுமே நான் சம்பாதித்து வாங்கவில்லை. இப்ப நாம இருக்கற வீடு கூட அப்பா வாங்கியதுதான். அவர் வீட்ல அவர் எங்க தங்கணும்னு நாம எப்படிச் சொல்ல முடியும்? வாழ்நாள் முழுதும் அவர் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை அவர் என்ன செய்யவும் உரிமை இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பே இந்த குடும்பத்திற்குள் வந்த நீ எப்படி அதைப் பற்றி பேசலாம்?''

அருகில் வந்து சுதியின் முடியைப் பற்றித் தூக்கினான் குமார்.

''எனக்கு இல்லாத உரிமை வேற யாருக்கு இருக்கு? திருமணமாகி சில மாதங்கள் சில நாட்களே ஆனாலும் கூட நான் உனக்கு புருஷன். ஊர் அறிய தாலி கட்டியவன். உன் கழுத்தைத் தொட்டுப் பார். அந்த தாலி சொல்லும் என் உரிமை என்னன்னு?''



உரிமையைப் பற்றி பேசும் குமார் கடமையை மறந்து போனது ஆச்சரியமாக இருந்தது. ஆதிகாலத்தில் மிருகங்களை வேட்டையாடி கொன்று அதன் பற்களை பிடுங்கி வந்து கயிற்றில் கோர்த்து தன் வீரத்தின் அடையாளமாய் காதலியின் கழுத்தில் கட்டியபோதே பெண்ணுக்கு தாலி அணியும் பழக்கம் தொடங்கியது. அப்போதே ஆணுக்கு பொருள் தேடும் கடமையும், தன் மனைவிக்கு உணவு, உறைவிடம் அளித்து பாதுகாக்கும் கடமையும் தொடங்கியது. மிருகப் பல்லை மரநாரில் கோர்த்து அணிந்த காலம் போயி, இன்று தங்க சரட்டில் பொன் மாங்கல்யம் மின்ன அணிந்தாலும் ஆணின் கடமையும் பெண்ணின் பொறுப்பும் மாறவேயில்லை. குடும்ப பொருளாதாரம் பெருமளவு ஆண்களை சார்ந்தே இருக்கிறது. இன்று பெண்களும் சம்பாதிக்கத் தொடங்கிய பிறகும் கூட மனைவியைவிட சில ஆயிரங்களாவது அதிகம் சம்பாதிக்கும் ஆண் மகன் மதிக்கப்படுகிறான். வீட்டிலிருந்தபடியே சமைத்துக் கொண்டு குழந்தைகளை கவனித்துக் கொண்டு இருக்கும் பெண்ணை யாரும் கேவலமாக நினைப்பதில்லை. நாகரீகமும், மக்களின் மனோபாவமும் மாறிவிட்ட இந்த காலத்தில் கூட ஒரு கணவன் வீட்டுப் பொறுப்பை கவனித்துக் கொள்வதும், மனைவி வேலைக்குப் போய் சம்பாதித்துக் கொண்டு வருவதும் கேவலமாகவே நினைக்கப் படுகிறது. எனவே அன்றைய காலத்தில் மிருகங்களை வேட்டையாட புறப்பட்ட ஆண் மகன் இன்றளவும் பணத்தை வேட்டையாடிக் கொண்டுதான் இருக்கிறான்.

''என்னடி பேசாம இருக்க! பதில் சொல்லு.'' உலுக்கினான் குமார். ''ஒழுங்கா என் மனைவியா வாழ பிரியப்பட்டால் நான் சொல்கிறபடி கேள். அல்லது நான் கட்டிய தாலியை இப்பவே கழட்டிக் கொடு. ஒரே பெண் வாழாவெட்டியாய் வாழ்நாள் பூரா கண் முன் இருந்தால் அப்ப தெரியும் உங்கப்பனுக்கு. ஒரே பெண். சொத்துக்கு ஒரே வாரிசு. தவிர பெண்ணும்

நிறைய சம்பாதிப்பதாக சொல்லித்தான் உன்னை எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். உங்கப்பன் நகை நிறைய போட்டான். அதையெல்லாம் லாக்கரில் வைத்து விட்டாய். கார் வாங்கிக் கொடுத்தான். அதை நீ தினமும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போய் விடுகிறாய். நீ சம்பாதிக்கிற பணத்தை எல்லாம் உப்பு புளி வாங்கினேன். கேஸ் வாங்கினேன். கரெண்ட் பில் கட்டினேன். கூர்க்கா சம்பளம் கொடுத்தேன். சோப்பு, சீப்பு, பெட்ரோல் போன் பில் என எல்லாத்துக்கும் கணக்கு காட்டி விடுகிறாய். அப்பாவும் சம்பாதிக்கிறார். நாமும் சம்பாதிக்கிறோம் புருஷனுக்கு அவன் கேட்கிற பணத்தை கொடுப்போம் என்று என்னிக்காவது தோணியிருக்கா உனக்கு? இந்த மாதிரி சுயநலம் பிடித்தவளுடன் இன்னும் எத்தனை நாள் வாழ்வது? உன் உறவே வேண்டாம். என் தாலியை கழட்டிக் கொடு. நான் போய்க்கிட்டே இருக்கேன்."

பதில் பேசாது சுவரை வெறித்தாள் சுதி.

"ம்... நான் பேசிட்டே இருக்கேன். சும்மா இருந்தால் என்ன அர்த்தம்? தாலியை கழட்டிக் கொடு."

ஒரு உணர்ச்சிகரமான தமிழ் சினிமாவின் இறுதி காட்சியை பார்ப்பது போல் இருந்தது சுதிக்கு. இப்போது தாலியை கையில் பிடித்தபடி கதறி அழுதால், என் உயிரை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் தாலியை தொட விட மாட்டேன் என வசனம் பேசினால் நாமும் கதாநாயகி ஆகி விடலாம். அப்படி ஆனால் குமாரின் எதிர்பார்ப்பும் நிறைவேறும். ஆனால் வாழ்க்கை மூன்று மணி நேரத்தில் முடிகிற விஷயமில்லையே கதாநாயகி ரோல் பண்ண. வாழ்நாள் முழுதும் பிரச்சனைகளை சமாளிக்க ப்ராக்டிகல் பெண்களால்தான் முடியும். எனவே தானும் நடைமுறைப் படியே நடப்பதென சுதி முடிவு செய்தாள்.

"ம்... *சீக்கிரம்*" தாலிக்காக கையை நீட்டினான் குமார்.



"ஏன் குமார் கேட்டா குடுக்க மாட்டேன்னு நினைச்சியா? இந்த தாலி என்ன கர்ணனின் கவச குண்டலம் போல நான் பிறக்கும் போதே கூடவா பிறந்தது? அல்லது நான் இறக்கும் போது கூடவே இறக்கப் போகிறதா? ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நடந்ததை சமூகத்தின் முன் அறிவிக்கும் அடையாள சின்னம்தான் தாலி. கிறிஸ்துவர்களும், முஸ்லீம்களும் இன்னும் பிற மதத்தில் கூட தாலி கட்டும் வழக்கம் இல்லை. அப்ப அந்த முறைப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க கணவன் மனைவி இல்லேன்னு ஆயிடுமா? எந்த நாட்டிலும் சரி, எந்த மதத்திலும் சரி இவன் என் கணவன். இவள் என் மனைவி மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் உறுதுணையாய் இருப்பேன் என்கிற உறுதிதான் முக்கியம். அந்த உறுதி தரும் நம்பிக்கையின் அடிப்படையில் தான் வாழ்க்கை அமைகிறது. ஆனால் உறுதி தளர்ந்து போகுமாயின் அடையாள சின்னங்கள் மதிப்பிழந்து போகின்றன. அது தாலியாக இருந்தாலும் சரி. மோதிரமாக இருந்தாலும் சரி, மோதிரமாக இருந்தாலும் சரி. என் அம்மாவிற்கு ஒரு முறை அடுப்பு அருகே சூடான எண்ணெய் தெறித்ததில் கழுத்தில் காயம் ஏற்பட்டது. மருந்து போட்டாலும் கூட அந்த புண்ணில் தாலிகொடி உரசி மேலும் ரணமானது. வலி தாங்காமல் அம்மா அவஸ்தை பட்டபோது அப்பாவே சொன்னார். "உனக்கு இந்த புண் சரியாகிற வரை கழுத்தில் எதுவும் போடாதே. நான்தான் அருகிலேயே இருக்கிறேனே. இன்னும் ஒரு வாரம் கழுத்தில் தாலி இல்லாட்டி என்ன?" என்று. அதை கேட்டதும் அம்மா கடகடவென கண்ணீர் விட்டாள். "உங்க வாயிலிருந்து இந்த வார்த்தை வரலாமா? இதையெல்லாம் கேட்டுக் கொண்டு நான் உயிரோடு இருக்கணுமா?" என அம்மா கலங்கியதைப் பார்த்து அப்பாவே, சொல்லக் கூடாத எதையோ சொல்லி விட்டோம் போலிருக்குன்னு பயந்துட்டார். எங்கம்மாவுக்கு அப்பாதான் உலகம். அப்பாவுக்கு காலையில் எழுந்ததும் அம்மா முகத்தைப்

பார்த்தால்தான் பொழுதே விடியும். இருவருக்கும் உள்ள அன்பின் காரணமாய் அவர்கள் வாழ்வில் இணைந்ததற்கு அடையாளம் கூறும் தாலியை அம்மா அப்பாவின் ஒரு பகுதியாகவே நினைக்கிறாள். தினமும் அதற்கு மஞ்சள் பூசுவதும், குங்குமம் வைப்பதும் நாள் கிழமை பார்த்து சரடு மாற்றுவதுமாய் ஏக உபசாரம் செய்வாள். திருமணத்தின் போது கயிறோ, செயினோ அதை கழுத்தில் போடுவதுடன் ஆண்களின் வேலை முடிந்து விடுகிறது. கழுத்தில் விழுந்ததை விருப்பமுடன் பெண் அங்கீகரித்தால் அது தாலி. அவள் விரும்பவில்லை எனில் அது வெறும் கயிறுதான். வேலை பார்க்க வரும்போது தாலியைக் கழற்றி வீட்டில் வைத்து விட்டு வரும் பல பெண்களை நான் பார்த்திருக் கிறேன். ''ஏதாவது நாள் கிழமைன்னா டிரடிசனலா போட் டுக்கலாம். நீ இயல்பா இரு'' என்று இன்றைய இளைஞர்கள் பலரும் சொல்லித்தான் செய்கிறார்கள். அதனால் நான் இதை கழற்றி விடுவதால் எதுவும் பிரச்சனை இல்லை. ஆனா குமார் இந்த தாலி மட்டும்தான் உங்க வீட்டில் மஞ்சள் கயிற்றில் கோர்த்து கட்டினார்கள். பின் என் அம்மா கொடுத்த செயி னில் சேர்த்துக் கட்டிக் கொண்டேன். சோ, செயின் எங்கம்மா கொடுத்தது. அதைத் தர மாட்டேன். கோர்த்திருக்கும் தாலியை வேண்டுமானால் கழற்றித் தருகிறேன். வைத்துக் கொள்.''

சுதி பேசி நிறுத்தியதும் நம்ப முடியாதவனாக பார்த்தான் குமார். அருகில் வந்தவன் பளீரென அறைந்தான். ''என்னடீ புதுமை பெண்ணுன்னு நினைப்பா? கல்யாணமான ஒரு பொம்பளை கட்டிய தாலியையே கழட்டி எறிய தயாரா இருந்தா, வேறு எதுக்கு துணிய மாட்ட நீ? எப்படா சான்ஸ் கிடைக்கும்? இவனை விட்டுட்டு ஓடலாம்னுதானே இவ் வளவு நாள் காத்திருந்த? நடக்காதுடி. நிச்சயம் நீ நினைக் கறது நடக்காது. சொல்லு? எந்த துணிச்சல்ல தாலியை கழட்டிக் கர துணிஞ்ச நீ? யார் கொடுத்த தைரியம் இது? உன்



புருஷன் தாலியை தூக்கி எறிஞ்சிட்டு வா நான் வெச்சிக் கறேன்னு அந்த ரவி சொன்னானா? அன்னிக்கு மாலதியோட புருஷன் ரோட்ல என்னை பாத்துட்டு 'சுதி எப்படியிருக் கா'ன்னு உரிமையோட கேட்டானே! அவங்கிட்ட போகப் போறியா நீ? சொல்லு! ஒரு குடும்பப் பெண் எப்படி இதற்கு துணிந்தாய்?'' குமாரின் கண்கள் வழக்கமான வெறியுடன் ஜொலிக்கவே சுதி மிக அமைதியானாள். இந்த சமயத்தில் அவனிடம் பதில் சொல்வது விபரீதத்திற்கு வழி வகுக்கும் என்று அனுபவத்தில் அறிந்திருந்ததால் தொடர்ந்த அவனது காட்டுக் கத்தல்களுக்கும், விழுந்த அடிகளுக்கும் பதிலே பேசவில்லை. 'இன்று இரவு நான் செவிடாகி விட்டேன். விடியும் வரை எனக்கு காது கேட்காது. வாயும் பேசாது' என தனக்குள் திரும்ப திரும்ப சொல்லத் தொடங்கினாள். வழக்கம் போல் விடியும் வரை திட்டுவதும், நடப்பதும் அறையிலிருப்பவற்றை தூக்கி எறிவதுமாய் இருந்த குமார் ஒருவழியாய் தானாய் சோர்ந்து போய் விழுந்து தூங்கத் தொடங்கிய போது சுதிக்கு மருத்துவமனைக்கு கிளம்பும் நேரம் ஆகிவிட்டிருந்தது. உட்கார்ந்திருந்த சோபாவிலிருந்து எழுந்து போய் குளித்து உடைமாற்றி கீழே வந்தபோது எதையும் சமைக்கக் கூட முடியாமல் சோர்வாக இருந்தது. டீயாவது குடிக்கலாம் என அடுப்பைப் பற்ற வைத்து டீ பாத்திரத்தை வைத்தாள். அதில் தண்ணீர் ஊற்ற மறந்து போய் கதவைத் திறந்து வெளியே கவரில் வாட்ச்மேன் வாங்கிப் போட்டிருந்த பால் பாக்கெட்டை எடுத்து வந்தாள். பாக்கெட்டை ப்ரிஜ்ஜில் வைத்தவளுக்கு டீ குடிக்க நினைத் தது மறந்து போனது. நியூஸ் பேப்பரை பிரித்து தலைப்பு செய்திகளை பார்க்கும் போது கருகிய நாற்றம் வந்தது. அவசரமாய் எழுந்து போய் பார்த்தாள். பால்பாத்திரம் கேஸ் அடுப்பின் நெருப்பில் உருகி உருக்குலைந்து போயிருந்தது. அடுப்பை நிறுத்திவிட்டு அவசரமாய் பாத்திரத்தை வெறும் கையால் இறக்கியவள் சூடு தாங்காமல் அலறினாள். சே! என்ன அப்படியொரு மறதி எனக்கு?

ஒரு டம்ளர் தண்ணீரை குடித்து விட்டு கிளம்பியவள் காரைப் பார்த்ததும் தயங்கினாள். சூடு பட்ட கை நெருப்பாய் எரிந்தது. இரவெல்லாம் தூங்காத கண்களும் அத்துடன் போட்டியிடவே, தன்னால் இன்று காரை ஓட்ட முடியுமா என்று தயக்கமாக இருந்தது. பேசாமல் ஆட்டோவில் போக லாம் என்று முடிவெடுத்து வாசலுக்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் இஸ்திரி போட்டுக் கொண்டிருந்த வேலு ஓடி வந்தான்.

''அம்மா ஆஸ்பத்திரிக்கு கிளம்பியாச்சா? காரை வெளியே எடுக்கலையே இன்னும்னு பாத்துட்டு இருந்தேன்.''

''இல்லே வேலு. இன்னிக்கு கார்ல போகல. ஆட்டோவில் போகலாம்னு பார்க்கிறேன். வாட்ச்மேன் இன்னிக்கு ஒரு கல்யாணத்துக்கு போய்விட்டுதான் வருவான். வேலு நீ போய் ஒரு ஆட்டோ கூட்டிட்டு வர்றியா?''

''ஆட்டோ எதுக்குங்கம்மா? இருங்கம்மா ஒரு போன் பண்ணிட்டு வரேன். என் மச்சினன் கால் டாக்ஸி டிரைவரா இருக்கான். கூப்புட்டா இப்பவே வந்துடுவான்'' என்று வேலு கிளம்பினான்.

''இரு வேலு, என் செல்லிலேயே பேசு'' என்று போனை கொடுத்தாள் சுதி.

'உடனே வருகிறேன்' என்று பதில் வந்ததும் ''நீ போய் உன் வேலையைப் பார் வேலு. டாக்ஸி வந்ததும் நான் பேசிறேன்'' என்றாள் சுதி.

''இதோ பத்து நிமிசத்துல என்னவாயிடப் போகுதும்மா? எம் பொஞ்சாதி சாப்பாடு செஞ்சி எடுத்துட்டு மெதுவாதான் வருவா. அவ இருந்தாலாவது உங்களுக்கு துணையாய் இருக் கும். நீங்க தனியா நிக்கறீங்களேம்மா? வண்டி வர்றவரை நான் இப்படி நிக்கறேம்மா.'' என்றபடி ஒரு மரியாதையான இடைவெளியில் தெருவையே பார்த்தபடி நின்றான்.



டாக்ஸி வந்ததும் சுதிக்கு பின் கதவை திறந்து விட்டு, அவள் அமர்ந்ததும் மூடினான். டிரைவர் சீட்டிலிருந்த அவன் மச்சானிடம் ''வண்டியை பாத்து கவனமா ஓட்டு. ஸ்பீடு போகாத. அம்மாவை பத்திரமாக கொண்டு போய் சேர்க்க ணும்'' என்றவாறு ஒதுங்கி நின்றான்.

பின்ஸீட்டில் தலைசாய்த்த சுதிக்கு ஆயாசமாக இருந்தது. இரவெல்லாம் தூங்காத கண்கள் தானாய் மூடின. வண்டி ஒவ்வொரு சிக்னலிலும் நின்று, ஒன்வே டிராபிக்கில் ஊர் முழுவதும் சுற்றி வழக்கத்தை விட மிகவும் தாமதமாக மருத் துவமனைக்கு வந்து சேர்ந்த போது சுதி ஒரு தூக்கம் தூங்கி முடித்திருந்தாள்.

'வாடகை எவ்வளவு?' என்றதும் டிரைவர் தலையை சொறிந்தான்.

''உங்ககிட்ட கேட்டு வாங்கினா வேலு மாமா திட்டும். நீங்களா கொடுக்கறத கொடுங்க'' என்றான்.

''எனக்கு மட்டும் காரை தண்ணீர் ஊற்றியா ஓட்ட முடி யும்? உங்க ஓனருக்கு நீ பதில் சொல்ல வேண்டாமா? சொல் லுப்பா, எவ்வளவு வாடகை?'' என்றாள் சுதி.

மறுபடி அவன் தயங்கிக் கொண்டிருக்கும் போதே மருத் துவமனை வாட்ச்மேன் ஓடி வந்தான். ஏதாவது பிரச்சினையா மேடம்?''

''இல்லை ஆறுமுகம். சும்மா தெரிந்த பையன்தான். நீ போ'' என்று சுதி பர்ஸை பிரித்து உத்தேசமாக ஒரு தொகையை அவன் கையில் திணித்து விட்டு உள்ளே போனாள்.

எதிர்ப்பட்ட நர்ஸ் வசுமதி, ''டாக்டர் இன்னிக்கு சுகுமார் ஸார் லீவுன்னு தெரிஞ்சதும் இவ்வளவு லேட்டா வர்றீங் களா?'' என்றாள் உரிமையுடன். சுதிக்கு நிம்மதியாக மூச்சு விட முடிந்தது. இன்னிக்கு சீனியர் இல்லை. ஒரு டீயை குடித்து விட்டு உள் நோயாளிகளை பார்க்கப் போகலாம்

என்று நினைத்த சுதி, 'வசுமதி வார்டுபாய் கிட்ட சொல்லி எங்க ரூமுக்கு ஒரு டீ கொண்டு வர சொல்லேன்' என்றபடி மருத்துவர்களின் ஓய்வறைக்கு சென்றாள். அந்த அறை காலையில் யாரும் இல்லாமல் வெறிச்சோடியது. லேசாய் முகத்தில் நீர் அடித்து கழுவி துடைத்துக் கொண்டு வந்ததும் டீ வந்தது. சூடான டீ உள்ளே இறங்கும் போது ஒரு புத்துணர்ச்சி வந்தது. உண்மையில் வேலுவுக்கு நன்றி சொல்ல வேண்டாம். காலையில் வீட்டை விட்டு கிளம்பும் போது எதை எங்கே வைத்தோம் என்று கூட புரியாத அசதியில் கிளம்பினாள். அந்த சோர்வோடு தெருமுனை வரை நடந்து போய் ஆட்டோ பிடித்து, ஆட்டோவின் குலுக்கலில் இவ்வளவு நேரம் பயணித்து இருந்தால் மருத்துவமனைக்குள் நோயாளியாகத்தான் வந்திருப்பாள். நல்லவேளை டாக்ஸியில் தூங்குவதற்கு கிடைத்த நேரத்தில் அசதி எல்லாம் போய்விட்டது. டாக்ஸி வரும்வரை இவளுடன் வேலு காத்திருந்தது மனதை தொட்டது. வேலுவின் அல்சருக்கு சுதி சிகிச்சை அளித்தாள் தான். அது அவளது கடமை. அதை செய்யத்தான் அவள் படித்திருக்கிறாள். அதற்கு வேலு காட்டும் விசுவாசம் அதிகம் என்று தோன்றியது. டீ டம்ளரை எடுத்து வாஷ்பேசினுக்கருகே வைத்து விட்டு ரவுண்ட்ஸ் கிளம்பினாள் சுதி. ஜெனரல் வார்டிலுள்ளவர்களை பார்த்து விட்டு முதல் மாடிக்கு செல்லும் போது வசுமதி வேகமாக வந்தாள். "என்ன வசுமதி, காலையிலிருந்து நான் போகிற வழியிலெல்லாம் எதிரே வருகிறாய். என்ன விஷயம்?" என்றாள். சுமதி சிரித்தபடி,

"டாக்டர் மூன்றாம் நெம்பர் ரூமில் ஒரு பெண் பாய்சன் கேஸ் என்று அட்மிட் ஆகியிருந்ததே! சீனியரின் உறவுக்காரப் பெண். அந்தப் பெண் இப்போ நார்மல். நாளைக்கு டிஸ்சார்ஜ் என்று டாக்டர் சுந்தரராமன் சொன்னார். இப்போ அந்த பெண் மறுபடி நிறைய மாத்திரைகளை சாப்பிட்டிருக்கிறாள். நீங்க வந்து பாருங்க டாக்டர்" என்றாள் பதட்டத்துடன்.



"சரி, நீ போய் டாக்டர் சுந்தரராமனுக்கு போன் பண்ணு" என்றபடி விரைந்தாள் சுதி.

"சுந்தரராமன் இன்னிக்கு ஊரில் இல்லை டாக்டர். அவர் வாராவாரம் வெள்ளிக்கிழமை மட்டும்தானே நம்ம ஹாஸ்பிட்டலுக்கு வருவார். நேத்துதான் இந்த பேஷண்டை பார்த்து விட்டு டிஸ்சார்ஜ் செய்ய சொல்லிவிட்டுப் போனார். இன்னிக்கு சுகுமார் ஸார் லீவ். ஆதலால் நிறைய டாக்டர்கள் லீவ் எடுத்திருக்கிறார்கள். ஒரு சிலர் தாமதமாக வருவார்கள்" பேசியபடியே கூட நடந்தாள் வசுமதி.

வசுமதி சுதிக்கு முன்பிருந்தே அந்த மருத்துவமனையில் பணி புரிபவள். மிகுந்த அனுபவம் உள்ளவளும் கூட. அவளிடம் பேஷண்ட் பற்றிய விபரங்களை கேட்டாள் சுதி.

"அந்த பெண்ணுக்கு சமீபத்தில்தான் திருமணமாகியிருக்கிறது. இருபத்தி இரண்டு வயதுதான் இருக்கும். மாமியார் வீட்டில் எதுவும் பிரச்சனை இருக்கிறமாதிரி தெரியவில்லை. வீட்டில் மாமியாரின் தூக்க மாத்திரைகளை எடுத்து விழுங்கியதாக சென்ற வாரம் கொண்டு வந்து அட்மிட் செய்தனர். டாக்டர் சுந்தரராமன் வயிறு சுத்தம் செய்து சிகிச்சை அளித்ததில் நன்றாகத்தான் இருந்தாள். சீனியர் தினமும் எங்களை கூப்பிட்டு விசாரிப்பார். இன்று டிஸ்சார்ஜ் என்பதால் அவங்க மாமியார் நேற்று இரவு வீட்டை சுத்தம் செய்து வைப்பதாக சொல்லிப் போய்விட்டார். அவள் கணவர் பேங்குக்கு போய்விட்டு பத்தரை மணிக்கு வருவதாக சொல்லிவிட்டு போனார். அவள் அம்மாவும் குளிக்கப் போன நேரத்தில் அந்த பெண் மறுபடி மாத்திரைகளை சாப்பிட்டு விட்டிருக்கிறாள். இங்கே அவளுக்கு தூக்க மாத்திரை கிடைக்க வழியில்லை. வேறு எந்த மாத்திரை சாப்பிட்டாளோ தெரியவில்லை." பேசியபடியே இருவரும் எமர்ஜென்ஸி வார்டுக்கு வந்திருந்தனர். ஸ்டெச்சரில் படுக்க வைக்கப்பட்டிருந்த அப்பெண் டியூட்டி டாக்டர்களின் சிகிச்சைக்கு உடன்பட

மறுத்து திமிறிக் கொண்டிருந்தாள். பார்த்தவுடன் பளிரென்று மனதை கவரும் அழகாய் இருந்தாள். இத்தனை அழகும், வசதியும் உள்ளவளுக்கு ஏன் இந்த நிலை என்று தோன்றியது. சுதி மெதுவாய் அவள் அருகே சென்று அமர்ந்தாள். கண்ணசைவில் டியூட்டி டாக்டர்கள் விலகிப் போக, வசுமதி ஓரமாய் நின்று கவனிக்கத் தொடங்கினாள்.

"இந்த புடவை உனக்கு ரொம்ப அழகா இருக்கு. எங்கே வாங்கினீங்க?" என்றாள் வசுமதி அவளிடம்.

இவள் ஏதோ ஜோக்கடிக்கிறாள் என்ற சந்தேகத்துடன் அந்த பெண் வசுமதியை பதில் சொல்லாமல் பார்த்தாள். புரிந்து கொண்ட வசுமதி சரளமாய் தொடர்ந்தாள். "இந்த ப்ளூ கலர் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனா பாருங்க நான் தேடறப்ப கிடைக்கவே கிடைக்காது. அல்லது கிடைத்தாலும் டிசைன் பிடிக்காது. ஆனா உங்க புடவை டிசைனும், கலரும் ரொம்ப நல்லா இருக்கு. இது ஜார்ஜெட் இல்ல? உங்க உடம்பு வாகுக்கும் கலருக்கும் கண்ணைப் பறிக்குது. எங்க வாங்கினீங்க? உண்மையாலுமே அந்த புடவை அவளுக்கு மிகவும் அழகாக இருந்தது. அத்துடன் புடவை விஷயத்தில் பெண்களுக்கே உள்ள இயல்பான ஆர்வத்துடன் "இந்த புடவை ஜெய்ப்பூரில் வாங்கினோம். ஹனிமூன் போன சமயம் எடுத்தது" என்று அந்த பெண் விபரம் சொன்னாள்.

"அதானே பார்த்தேன். இங்கெல்லாம் இந்த மாதிரி புடவை கிடைக்காதே! நமக்கு கிடைக்கலையேன்னு பார்த்தேன். ஆமாம் ஹனிமூனுக்கு யார் யாரெல்லாம் போனீங்க மிஸஸ்... சுதி தயங்கவே,

"பார்கவி" என்று தன் பெயரைச் சொன்னவள் மெதுவாய் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீங்க பார்கவி?"

"இல்ல டாக்டர் ஹனிமூனுக்கு யாரெல்லாம் போனீங்கன்னு கேட்டீங்களே! அதான் சிரிச்சேன். ஹனிமூனுக்கு யார் போவாங்களாம்? நானும் என் கணவரும் மட்டும்தான்."



"கணவனும், மனைவியும் மட்டும்தான் ஹனிமூன் போவாங்கன்னு உறுதியா சொல்ல முடியாது பார்கவி. என் ப்ரண்ட் கல்யாணத்துல என்னாச்சு தெரியுமா? அவள் கணவன் வீடு கூட்டு குடும்பம். ரொம்ப ஆச்சாரமானவங்க! இந்த ஹனிமூன் போகிற பழக்கம் எல்லாம் இல்லாதவங்க. என் தோழியின் கணவர் மனைவியுடன் ஹனிமூன் போகப் பிரியப்பட்டார். அதற்காக அவர் மிகவும் யோசித்து வீட்டில் அவங்கப்பா கிட்ட போய் அப்பா என் மனைவிக்கு கல்யாணமானதும் பழனிக்கு கோவிலுக்கு போகணும்னு வேண்டுதல் இருக்காம். நாங்க போய்விட்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு அவங்க அப்பா கோவிலுக்கு போவது நல்ல விஷயம்தானே. எல்லோரும் சேர்ந்தே போகலாம் என்று சொல்லிவிட வீட்டில் எல்லோரும் தயாரானார்கள். பக்கத்து வீடு, அடுத்த வீடு என்று இன்னும் ஒரு சிலரும் கூட சேரவே, பயந்து போன மாப்பிள்ளை 'எனக்கு ஆபீசில் அவசர வேலை' என்றிருக்கிறார். ஞாயிற்றுக் கிழமையில் போகலாம் என்றாள் என் தோழியின் மாமியார். 'எனக்கு ஞாயிற்றுக்கிழமையும் ஆடிட்டிங் இருக்கு' என அவர் நழுவவும், 'சரி உன் மனைவிக்குத்தானே வேண்டுதல் இருக்கு. கோவிலுக்கு கிளம்பிவிட்டு போகாதிருந்தால் அது அபசகுணம். அதனால் உன் மனைவியை அழைத்துக் கொண்டு நாங்கள் போய்வருகிறோம். நீ போய் ஆபீசில் வேலையைப் பார் என்று சொல்லிவிட்டார் அவர் அப்பா. ஆறுபடை வீடுகளுக்கும் போய் வருவதென அவர்கள் திட்டம் போட வீட்டில் கிடைத்த மனைவியுடனான சிலமணி நேர தனிமையும் கிடைக்காமல் போய்விட அவர் காற்று இறங்கிய பலூனாகி விட்டார். கணவனை விட்டுவிட்டு மாமனார், மாமியாருடன் ஹனிமூன் போனாள் என் தோழி." இல்லாத தோழிக்கு நடக்காத சம்பவங்களை உண்மை போலவே சுதி விவரித்து கூற, பார்கவி வயிற்றைப் பிடித்தபடி சிரிக்கத் தொடங்கினாள்.

"நீங்க சொல்ற மாதிரி இல்ல டாக்டர் எங்க வீட்டில். எங்க மாமனார் மாமியார் ரொம்ப நல்லவங்க. எங்க தனிமையில் குறுக்கிடவே மாட்டாங்க" என்றாள் புன்னகையுடன்.

"அப்ப கணவர்?"

"அவரும் நல்லவர்தான். ஆனால்..." மேற்கொண்டு பேச முடியாமல் மௌனமானாள்.

"பார்கவி என்னை உங்க உண்மையான தோழியா நினைச்சீங்க. எதுவாக இருந்தாலும் நாம் இருவரும் பேசும் விஷயம் வெளியே போகாது சரியா?"

திடீரென்று உலுக்கப்பட்டவள் போல் சுற்றிலும் பார்த்தாள் பார்கவி. அப்போதுதான் மருத்துவமனை சூழலை உணர்ந்து கொண்டாள். சுதியை பார்த்து முறைத்தவள், "நீங்க ஒரு டாக்டர் தானே? விஷம் சாப்பிட்ட நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதை விட்டுவிட்டு இப்படி கதை பேசிட்டு உட்கார்ந்துகிட்டிருக்கீங்க?" என்றாள் கோபமாய்.

பார்கவியின் கைகளைப் பற்றி மென்மையாய் வருடிய சுதி, "விஷம் சாப்பிட்டவங்களுக்குத்தானே சிகிச்சை தரணும்? உங்களுக்கு எதுக்கு?" என்றாள் மிருதுவான குரலில்.

பார்கவிக்கு கைகால்கள் வெடவெடத்தன. பென்சில் திருடிவிட்டு விழிக்கும் குழந்தையைப் போல் சுற்றிலும் பார்த்தாள்.

"நான் நிறைய மாத்திரை சாப்பிட்டிருக்கேன். இப்போ சாகப் போகிறேன். நான் சாகப்போகிறேன்." சத்தமாய் கத்தத் தொடங்கினாள். தலைக்கருகே இருந்த தலையணையை தூக்கி வீசினாள். அது சுதியின் நெற்றியில் பட்டு கீழே விழுந்தது. அருகே ஓடி வந்த வசுமதியை ஒரு கையசைப்பில் வெளியே போகச் சொனனாள் சுதி.

குற்ற உணர்வுடன் பார்கவி தலைகுனிந்து அமர்ந்திருக்க, தன் வழக்கமான சிரிப்புடன் அவளைப் பார்த்தாள் சுதி. "பார்கவி, உங்க அம்மா, அப்பா இரண்டு பேரில் யார் ரொம்ப அழகாய் இருப்பாங்க?" என்ற சுதியின் கேள்விக்கு புரியாமல் பார்த்தாள் பார்கவி.

"இல்ல நீங்க இவ்வளவு அழகா இருக்கீங்களே, யார்



திடீரென பார்கவி முகத்தை கைகளில் பொத்தியபடி அழத் தொடங்கினாள். சிறிது நேரம் அவளை அழவிட்ட சுதி, "பார்கவி நான் உங்களை வருத்தப்படுத்துகிற மாதிரி எதுவும் கேட்கலையே?" என்றாள்.

"இல்ல டாக்டர். எனக்கு ரொம்ப வருத்தமாய்த்தான் இருக்கிறது. திருமணத்திற்கு பின் என்னை அழகா இருக்கறதா சொன்ன ஒரே ஆள் நீங்கதான்."

"ஏன் உங்க கணவர் சொன்னதில்லையா என்ன?"

பார்கவி மறுபடி பெரிய குரலில் அழத் தொடங்கினாள். சுதி எதுவும் கேட்காமல் அவள் தலையை மென்மையாக வருடினாள். "நீங்க இப்ப தூங்கறீங்களா பார்கவி? நான் கிளம்பட்டுமா? உடலையும் மனதையும் அமைதிபடுத்திக் கொள்ளுங்கள் முதலில்" என்று சுதி எழுந்ததும், பார்கவி அவள் கைகளை பற்றிக் கொண்டாள்.

"டாக்டர் ப்ளீஸ். உட்காருங்க. உங்ககிட்ட பேசணும். எனக்கு ஒரு அஞ்சு நிமிஷம் இருப்பீங்களா டாக்டர்?"

மனதில் தோன்றிய வெற்றி முறுவலுடன் அருகில் அமர்ந்தாள் சுதி. "பார்கவி நான் உங்க ப்ரண்டுன்னு சொன்னேனே. அப்புறம் என்ன?"

"டாக்டர் என் கூட பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்கள். இரண்டு பசங்களுக்கு பிறகு பிறந்த ஒரே பெண் என்று வீட்டில் மிகவும் செல்லம். எனக்கு அதுவும் என் அண்ணன்கள் இருவரும் மாநிறம். நான் எங்கம்மா மாதிரி நல்ல நிறமாகவும், எங்கப்பாவின் லட்சணமான முகமும் அமைந்ததால் என் பெற்றோருக்கு ரொம்ப பெருமை. உள்ளங்கையில் வைத்து தாங்குவார்கள். பள்ளியிலும் ஆசிரியைகளுக்கு நான் பிரியமான மாணவி. கல்லூரியில் தோழிகள் எப்பவும் என் அழகை புகழ்ந்து கொண்டே இருப்பார்கள். கல்லூரியில் நடந்த அழகிப் போட்டியிலும் நான் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். எப்பவும் என் பின்னே ஆண்கள் சுற்றினார்கள். என்னை தேவதையாய் நினைத்து கடிதங்கள் எழுதினார்கள். ஆனால் நான் யாரையும் திரும்பிக் கூடப் பார்த்த

தில்லை. கல்யாணத்திற்கு என் அம்மாவும் அப்பாவும் எனக்
கேற்ற ராஜகுமாரனைத் தேடினார்கள். என் கணவர் ஸாப்ட்
வேர் இஞ்சினியராக இருக்கிறார். நிறைய சம்பாதிக்கிறார். என்
மாமனாரும் பணக்காரர்தான். அவர்களுக்கு இவர் ஒரே
பையன். பார்ப்பதற்கும் நன்றாக இருப்பார். நல்ல குடும்பம்
வேறு. எல்லாவிதத்திலும் பரஸ்பரம பிடித்துப் போய் திரு
மணம் நடந்தது. எதிர்பார்த்த மாதிரியே புகுந்த வீட்டில்
எல்லோரும் அன்பாக இருந்தார்கள்."

"சரி. இதில் நீங்க தற்கொலை செய்து கொள்கிற அள
வுக்கு பிரச்சனை எங்கிருந்து வந்தது?"

பதில் பேசாது சேலைத் தலைப்பை விரல்களில் சுற்று
வதும் பிரிப்பதுமாய் இருந்தாள் பார்கவி.

"சொல்லுங்க பார்கவி. நீங்க சொன்னாத்தானே தெரியும்?"

"என் கணவர் நல்லவர்தான். இதுவரை என்னிடம்
எதற்கும் கோபித்துக் கொண்டதில்லை. திட்டியதில்லை.
ஆனால் கொஞ்சியதும் இல்லை. அவராக கடைக்குப் போய்
எனக்கு ஒரு புடவையோ, நகையோ வாங்கி வந்ததில்லை.
ஆனால் நான் புடவை வேண்டும் என்று கேட்டால் முகம்
சுளிக்காமல் உடனே அழைத்துப் போய் வேண்டியதை
வாங்கித் தந்துவிடுவார். வாங்கி தந்ததை நான் அணிந்
திருக்கும் போது உனக்கு இது நன்றாக இருக்கிறது அல்லது
உனக்கு டிரஸ் சூட் ஆகவில்லை என்று எதுவுமே சொல்ல
மாட்டார். சொல்லக் கூட வேண்டாம். அவர் கண்களில்
ரசனை தெரிந்தால் கூட போதும். அதுகூட இருக்காது.
நானாகப் போய், இந்த உடை நன்றாக இருக்கிறதா? இன்று
நான்தான் சமைத்தேன் நன்றாக இருக்கிறதா என்றால் அது
எவ்வளவு மோசமாக இருந்தாலும் நன்றாக இருக்கிறது
என்றுதான் சொல்லுவார். எங்களுக்கான தனிப்பட்ட
நேரங்களில் கூட செல்ல சிணுங்கல்களோ, ஊடலோ இல்
லாமல் வாழ்க்கை வெறுமையாக இருக்கிறது. ஒரு பெண்மை
கணவனால் ஆராதிக்கப்படும்போதுதானே நிறைவடை
கிறது! எல்லோராலும் கொண்டாடப்பட்ட என் அழகு ஏன் என்



கணவரின் கண்களில் படவேயில்லை? சில சமயம் அவர்
என்னை எதற்காவது திட்டி அடித்தால் கூட பரவாயில்லை
என்று தோன்றும். இவர் சாப்பிடும் போது சாம்பாரில்
வேண்டுமென்றே உப்பு போட்டு வைப்பேன். காய்கறிகளில்
காரம் சேர்த்து வைப்பேன். குறையே சொல்லாமல் முடிந்த
வரை சாப்பிட்டு விட்டு எழுந்து போவார். படுக்கை அறை
யில் துணிகளையும் பொருட்களையும் இறைத்து வைப்பேன்.
எதுவுமே கேட்காமல் துணிகளை ஓரமாய் ஒதுக்கிவிட்டு
படுத்து விடுவார். எங்கே போயிருந்தீர்கள்? ஏன் இவ்வளவு
நேரம்? என்று நானாக ஏதாவது வம்பிழுத்தால் கூட இரண்
டொரு வார்த்தைகளில் பதில் சொல்லிவிட்டு அமைதியாகி
விடுவார். என்னை புறக்கணிப்பதாக எனக்கு ஆத்திரம் வரும்.
வெறுப்பிலும், விரக்தியிலும் நான் குமுறிக் கொண்டு
இருந்த போது ஒருநாள் எனக்கு உடல்நிலை சரியில்லாமல்
போனது. சாதாரண காய்ச்சல்தான். ஆனால் என் கணவர்
பதறிவிட்டார். ஒருநாள் விடுமுறை எடுத்துக் கொண்டு
என்னை விட்டு நகராமல் கூடவே இருந்தார். அடுத்த நாள்
காய்ச்சல் விட்டதும்தான் அலுவலகம் போனார். போனதும்,
மருந்து சாப்பிட்டாயா? சாப்பாடு சாப்பிட்டாயா? உடம்பு
எப்படியிருக்கு? என மாலையில் வரும்வரை அடிக்கடி போன்
செய்து கொண்டே இருந்தார். எனக்கு அப்போதுதான்
அவரின் பலவீனம் என்னவென்று தெரிந்தது. எனக்கு உடல்
நிலை சரியில்லை எனில் அவரால் தாங்க முடியாது என்று
புரிந்தது. சோ அடிக்கடி உடல்நிலை சரியில்லை என்று
சொல்லத் தொடங்கினேன். கை கால் வலி, தலைவலி,
வயிற்றுவலி என படுத்துக் கொள்ளத் தொடங்கினேன்.
தினமும் விடுமுறை எடுக்க முடியாதாகையால் உடம்பைப்
பார்த்துக் கொள் என்றபடி எனக்குத் தேவையானவற்றை
கவனித்துவிட்டு அவர் அலுவலகம் செல்லத் தொடங்கினார்.
நான் எரிச்சலடைந்தேன். மறுபடி அவர் கவனத்தை கவர என்ன
செய்யலாம் என்று யோசித்தேன். அவர் என்னை அருகில்
நின்று தாங்க வேண்டும் என்று நினைத்தேன். என் மாமியார்
தினமும் இரவில் தூக்க மாத்திரை சாப்பிடுவார். அவர்

இல்லாத சமயம் அதில் நாலைந்து மாத்திரைகளை எடுத்து விழுங்கி விட்டேன். மயங்கி விழுந்தவளை இங்கே கொண்டு வந்து அட்மிட் செய்து ஒரு வாரமாகிறது. என் கணவர் என்னை விட்டு நகரவேயில்லை. டாக்டர் சுகுமார் என் மாமியாரின் அண்ணன்தான். அவர் இன்று வீட்டுக்கு போய்விடலாம் என்று சொன்னார். வீட்டிற்கு போனதும் மறுபடி என் கணவர் வேலையைத் துரத்த தொடங்கிவிடுவார். நான் தனிமையிலும் வெறுமையிலும் தினமும் புழுங்க வேண்டும். என்னால் முடியவில்லை. இந்த உப்பு சப்பற்ற, எந்த ஒரு சுவாரஸ்யமும் இல்லாத வாழ்வை என்னால் தொடர முடியாது. அமைதியாய் இருப்பவர்களை திசை திருப்ப வேண்டுமெனில் அதிரடியாக ஏதாவது செய்துதான் ஆக வேண்டும்.''

தன் செயல் தவறில்லை என்ற ரீதியில் அதற்கான விளக்கத்தை பார்கவி சொல்லி முடிக்கவும் சுதி புன்னகையுடன் அவள் தோளைத் தட்டினாள்.

''உங்களுடைய எண்ணங்களிலோ, எதிர்பார்ப்புகளிலோ எந்த தவறும் இல்லை பார்கவி. எந்த பெண்ணும் கணவனிடம் நியாயமாய் எதிர்பார்க்கும் விஷயம்தான் இது. ஆனால் அதற்கான உங்க செயல்கள்தான் தவறு பார்கவி.''

''தவறு என்பதும் சரி என்பதும் அவரவர் மனோபாவத்தை பொறுத்தது டாக்டர்''

''உண்மைதான் பார்கவி. உன்னுடைய மனோபாவம் உன்மேல் அன்பு செலுத்துபவர்களுக்கு எந்த வருத்தத்தையும் தரக் கூடாது இல்லையா? உன்னிடம் பிரியமாய் இருக்கும் கணவரிடம் அவரது சுபாவத்தைப் பற்றி நீ மனம் விட்டு பேசியிருக்கலாம். உன்னுடைய எதிர்பார்ப்பை புரிய வைத்திருக்கலாம். அவருக்கு உடன்பிறந்தவர்கள் யாருமில்லாததாலும், கடினமான வேலை பளுவால் நண்பர்களை உருவாக்கி கொள்ள நேரமின்மையாலும் வெளியுலக எக்ஸ்போஷர் இன்றி வளர்ந்திருக்கலாம். வீடு, அலுவலகம் என்ற வட்டத்துக்குள்ளேயே பழகி விட்டவரால் காதலை



வார்த்தைகளில் வடிக்க தெரியவில்லை. மிகைப்படுத்தப்பட்ட வர்ணனைகளும், சின்ன சின்ன பொய்களும் கூட தாம்பத்ய வாழ்வை சுவாரஸ்யமாக்கும். ஊடலும் கூட காதல் உணர்வை அதிகரிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. அதை அவர் உணராத பட்சத்தில் நீங்களே கூட அவரிடம் ஜாலியாக சிரித்து பேசி வீட்டில் நடக்கும் சின்ன சின்ன விஷயங்களை கெடுதலற்ற பொய்கலந்து சுவாரஸ்யமாக்கி அவரிடம் பகிர்ந்து கொள்ளலாம். ஒரு நண்பனாக அவரை நினைத்து கலாய்க்கலாம். முதலில் உங்கள் பேச்சையும், சீண்டல்களையும் அமைதியாய் ஏற்றுக் கொள்பவர், பின் ரசிக்கத் தொடங்குவார். நாளடைவில் அவரும் பேசவும், ரகளை பண்ணவும் பழகிக் கொள்வார்.'' சுதியின் பேச்சில் குறுக்கிட்டாள் பார்கவி.

''டாக்டர் அவரது இயல்பான சுபாவமே இப்படித்தான் என்றால் எப்படி மாற்ற முடியும் சொல்லுங்கள்? இவ என்னவோ லூசு மாதிரி நடந்துக்கறான்னு அவர் கண்டுக்காம போனால்?''

''சரி அப்படி அவர் மாறலைன்னா கூட உன் எதிர்பார்ப்புகளின் வரம்பை நீ மாற்றியமைக்கலாம். இனிக்கப் பேசி பெண்களை வசியப்படுத்தும் ஆண்களில் பலர் நேர்மையானவர்களாக இருப்பதில்லை. மனைவியிடம் அன்பே, ஆருயிரே என்று வசனம் பேசிவிட்டு வெளியே மற்ற பெண்களிடம் தவறான பழக்கம் உள்ள எத்தனையோ ஆண்கள் இருக்கிறார்கள். செய்தித் தாள்களில் தினசரி எத்தனை செய்திகளை படிக்கிறோம்? ஒரே ஆள் பெயரை மாற்றி பல பெண்களை மணந்ததாக கேள்விப்படுகிறோம். சமீபத்தில் கூட பரவலாக பேசப்பட்டதே! ஒருவன் நூற்றுக்கணக்கான பெண்களை ஏமாற்றியதாக. சில பெண்களிடம் பழகியும், சிலரை மணந்தும், சிலரிடம் திருமண நிச்சயதார்த்தம் நடத்தியும் ஏமாற்றி பணத்தை பறித்துக் கொண்டு, சீரழித்தும் இருக்கிறான். படித்த பெரிய குடும்பத்து பெண்களே அவன் வார்த்தை ஜாலத்தில் மயங்கி ஏமாந்திருக்கிறார்கள்.

அழகான வார்த்தைகளை ஆயுதமாக்கி பெண்களை வீழ்த்தும் மிருகங்களுக்கு மத்தியில் மனைவியைத் தவிர

யாரையும் மனதால் கூட நினைக்காத உன் கணவர் எவ்வளவு உயர்ந்தவர்? மனைவியின் உழைப்பை மட்டும் உறிஞ்சிக் கொண்டு, அவள் உடல்நிலை மோசமான நிலையிலும் திரும்பிப் பார்க்காத கணவன்கள் எத்தனைப் பேர்? தினசரி காய்கறி, பால் போன்ற அத்யாவசிய பொருட்களுக்கே கணவனிடம் பிச்சைக்காரியை போல பல பெண்கள் கையேந்தி நிற்கத்தான் செய்கிறார்கள். மனைவி வேலைக்கு போய் சம்பாதித்த பணத்தை பிடுங்கி கொண்டு போய் விஸ்கியும் பிராந்தியுமாக குடிக்கும் ஆண்கள், மனைவியை தாய் வீட்டில் பணம் வாங்கி வரச் சொல்லி இம்சிக்கும் கணவர்கள், மனைவி வேலைக்காரனுடன் பேசினால் கூட சந்தேகப்படும் ஆண்கள் என ஆண்களில் எத்தனை விதம் உண்டு?

தொண்டையை செருமிக் கொண்டு தொடர்ந்தாள் சுதி. எனக்கு தெரிந்தவர்கள் குடும்பத்தில் நடந்த இன்னொரு உண்மை சம்பவத்தை சொல்கிறேன் கேள்.

''என்னுடைய சீனியர் எம்.எஸ். முடித்த பெண் டாக்டருக்கு மாப்பிள்ளை தேடினார்கள். அந்தப் பெண் மிகுந்த திறமைசாலி. புத்திசாலி என பெயரெடுத்தவள் அவளுக்கு சரியாய் படித்த மாப்பிள்ளை வேண்டும் என தேடினார்கள். இன்டர்நெட்டில் விளம்பரம் மூலமாய் வெளிநாட்டில் டாக்டர் மாப்பிள்ளையை தேர்ந்தெடுத்து திருமணம் செய்தார்கள். மணமான பத்து நாட்களிலேயே இருவரும் வெளிநாடு சென்று விட்டார்கள். அங்கு போன பிறகுதான் அவனுடைய சுயரூபம் தெரிய வந்தது. படுக்கை அறையில் ஒரு கேமராவை செட் பண்ணி வைத்திருந்தான். மனைவியையே ஆபாசமாய் படம் எடுத்து நெட்டில் உலவ விட்டிருக்கிறான். இது எதுவுமே தெரியாமல் தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருந்த அந்த பெண்ணிடம் ஒரு நாள் அவளுடன் பணிபுரியும் மருத்துவர் தயங்கியபடியே இந்த விஷயத்தை கேட்டிருக்கிறார். துடித்துப் போன அந்த பெண், இன்டர்நெட்டை ஆன் பண்ணி பார்த்திருக்கிறாள். தங்களுடைய படுக்கை அறையில் தன்னையே தான் இதுவரை பார்த்திராத கோணத்தில் பார்த்து அதிர்ச்சியிலும் அவமானத்திலும்



அரை உயிராய் மாறிவிட்டாள். யாரையும் பார்க்க கூசிப் போய்
அறைக்குள்ளே அடைந்து கிடக்கிறாள். விஷயம் தெரிந்த
துமே அவள் பெற்றோர் இங்கு அழைத்து வந்து விட்டனர்.
இப்போது கோர்ட்டில் விவாகரத்து கேஸ் நடந்து கொண்
டிருக்கிறது. பார்த்தாயா பார்கவி? ஆண்களில் எவ்வளவு
வக்கிரமானவர்களும் இருக்கிறார்கள் என்று?

சுதி பேசுவதை ஒரு யோசனையுடன் கேட்டவாறு அமர்ந்
திருந்தாள் பார்கவி.

''வா, பார்கவி நாம் உனக்கு கொடுத்திருக்கிற அறைக்கு
போகலாம். இந்த வார்டில் மற்ற நோயாளிகளுக்கு தொந்தர
வாக இருக்க வேண்டாம். சகஜமாக பேசியபடியே சுதி பார்
கவியின் கைகளைப் பற்றிக் கொள்ள பார்கவி தான் எதற்காக
இந்த எமர்ஜென்ஸி வார்டுக்கு கொண்டு வரப்பட்டோம்
என்பதையே மறந்து போனவளாக ஸ்ட்ரெச்சரிலிருந்து
இறங்கி சுதியுடன் பேசியபடியே நடந்து போனாள். வார்டி
லிருந்த மற்ற டாக்டர்களின் வியப்பை கண்டும் காணாத
வளாக சுதி பார்கவியின் அறைக்கு போனாள். அறையில்
யாருமில்லாமல் இருக்கவே, வார்டு நர்ஸை கூப்பிட்ட சுதி,
''இங்கிருந்த பார்கவியின் அம்மா எங்கே?'' என்று விசாரித்
தாள்.

''அந்த அம்மா ரொம்ப அழுது மயக்கம் போட்டு விழுந்
துட்டாங்க டாக்டர். அவங்க கணவர் பாலாவது வாங்கி
கொடுக்கலாம் என கேண்டீனுக்கு கூட்டிப் போயிருக்கிறார்.

அதைக் கேட்ட பார்கவியின் முகம் கலங்கியது. கண்
களில் நீர் வழிந்தது.

''சிஸ்டர் பார்கவியின் பெற்றோரிடம் அவள் வார்டுக்கு
வந்து விட்ட விபரத்தை தெரியப்படுத்துங்கள்'' என்று நர்சை
அனுப்பி வைத்த சுதி, பார்கவியிடம் திரும்பினாள்.

''உன் கணவரைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்
தாயே பார்கவி? உன் பெற்றோரைப் பற்றி நினைத்துப் பார்த்
தாயா? மணமான சில மாதங்களிலேயே மகள் தற்கொலைக்கு
முயன்றால் அவர்கள் மனம் என்ன பாடுபடும்? நீ சரியாகி

போன பிறகும் கூட புகுந்த வீட்டில் மகளுக்கு என்ன கொடுமையோ என்று தினம் தினம் மருகிக் கொண்டிருப்பார்களே! இரண்டாம் முறை நீ தற்கொலை முயற்சி செய்ததற்கே மயங்கி விழுந்த உங்க அம்மா இன்னொரு முறை நீங்க ஏதாவது செய்தால் உயிரோடு இருப்பார்களா? உன்னை சீராட்டி வளர்த்ததற்கு இதுதான் அவர்களுக்கு நீங்க செய்யும் நன்றிக் கடனா? உங்க மாமனார் மாமியாரை நினைத்துப் பார். பெட்ரோல் ஊற்றி எரித்த மாமியாரை இறக்கும் தருவாயில் கூட காட்டிக் கொடுக்காத எத்தனையோ முட்டாள் மருமகள் கள் உண்டு. நீ உன்னை மகளைப் போலப் பார்த்துக் கொண்ட மாமியாரை அவமானப்படுத்தும் வகையில் இப்படி நடந்து கொள்கிறோயே! இந்நேரம் நீ மருத்துவமனையில் இருப்பதற்கு எத்தனை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அவர்கள் பதில் சொல்லி சமாளிக்க வேண்டியிருக்கும்? இதனால் அவர்களுக்கு உங்கள் வெறுப்பு ஏற்படுமானால் இறுதி வரை தொடரப் போகும் உங்கள் குடும்ப உறவில் அது எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்று யோசித்தீர்களா பார்கவி?''

இதுவரை அத்தகைய கோணத்தில் சிந்தித்திராத பார்கவி மிரண்டு போனவளாய் அழத் தொடங்கினாள்.

கதவுக்கருகில் யாரோ நிற்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள் சுதி. சுமார் இருபத்தி ஆறு அல்லது ஏழு வயது மதிக்கத்தக்க இளைஞன் நின்றிருந்தான். முகத்தில் தெரிந்த களைப்பும் கவலையும் அவன்தான் பார்கவியின் கணவன் என்றது.

''நீங்க...'' என்று சுதி கேட்கத் தொடங்கியதை 'பார்கவியின் கணவன்' என முடித்து வைத்தான்.

''இப்ப கவி எப்படியிருக்கா டாக்டர்?''

முதன்முறையாய் அவள் பெயரை செல்லமாய் சுருக்கி குறிப்பிட்ட விதத்தில் பார்கவியும் அழுவதை மறந்து வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''நன்றாக இருப்பதாகத்தான் நினைக்கிறேன்'' என்றபடி பார்கவியை பார்த்த சுதி அறையை விட்டு வெளியே வந்தாள்.



மனைவியின் கலங்கிய கண்களைப் பார்த்தவன், சுதி அறையிலிருந்து வெளியே வரும் வரை பொறுமையற்று உள்ளே சென்று பார்கவியை அணைத்துக் கொண்டான். ''ஸாரி, ஸாரி'' என்ற பார்கவியின் அழுகை குரலும், சமாதானப் படுத்தும் அவனது மிருதுவான குரலும் கதவுக்கு வெளியே கேட்க புன்னகையுடன் ஓ.பி. வார்டுக்கு சென்றாள் சுதி.

காத்திருக்கும் நோயாளிகளின் பைல்களை டேபிளின் மீது வரிசையாக அடுக்கி வைத்த வசுமதி, ''வாழ்த்துக்கள் டாக்டர்'' என்றாள் சந்தோஷமாய்.

''எதற்கு வசுமதி?''

''ஒரு பாய்சன் கேசை மனோதத்துவ கேசாக மாற்றி அதையும் கேசே இல்லாமல் செய்ததற்கு.''

மனப்பக்குவம் இல்லாதவர்களுக்கு எதிர்பார்ப்பு நிறை வேறாத போது புத்தி வக்கரித்துக் கொள்கிறது. பார்கவியுடையது சின்ன பிரச்சனைதான். இன்னும் தீர்க்க முடியாத எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கிறது ஒவ்வொரு வீட்டிலும், ஒரு பெருமூச்சுடன் பார்க்க வேண்டிய முதல் பேஷண்ட்டிற்கான பெல்லை அழுத்தினாள் சுதி.

மதியம் கேண்டீனில் சாப்பிடும் போது குமாரின் நினைவு வந்தது. இப்போதுதான் தூங்கி விழித்திருப்பான். இன்று சமையல் எதுவும் செய்திருக்கவில்லை. எந்த நேரமானாலும் குமார் வீட்டில்தான் சாப்பிடுவான். இன்று ஹோட்டலுக்கு போயிருப்பானா? ப்ரிஜ்ஜில் பழம், பிஸ்கெட்ஸ் இருந்தது. அதை வைத்து சமாளித்திருப்பானா என்னவோ? தயிர் வீட்டில் இருந்தது. காலையில் ஒரு சாதமாவது வைத்து விட்டு வந்திருக்கலாம். யோசித்தபடியே சாப்பிட்டதில் புரை ஏறியது. தண்ணீரை எடுக்க கையை நீட்டியபோது தலையை யாரோ பலமாக தட்டினார்கள். ''சாப்பிடும் போது கவனம் சாப்பாட்டில் இருக்கணும். இல்லாவிட்டால் இப்படித்தான்'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

கிரியுடன் ரவியும் சற்றுத் தள்ளி ரமாவும் நின்று கொண்டிருந்தனர்.

"என்னப்பா, மூணு பேரும் சேர்ந்து ரவுண்டு கட்டி தலையில தட்டறீங்க? நான் பாவம் என்ன செய்தேன் உங்களை?"

"ரொம்ப பயந்துட்ட இல்ல?" ரவி சிரிக்க,

"ஆமாம் பின்னாடி வந்து நின்னா குழந்தை பயப்படாதா?" ரமா வார,

"என்ன உன் கணவர் நினைப்பில் சாப்பாடு உள்ளே போக மாட்டேங்குதா?" கிரி கலாய்க்க,

"இன்னிக்கு நான்தான் கிடைச்சேனா உங்களுக்கு?" என்றாள் சுதி தலையில் கையை வைத்தபடி.

சிரித்தபடியே மூவரும் எதிரே அமர்ந்தனர். "என்ன கிரி இன்னிக்கு உனக்கு லீவா? எதிர்பாராம இங்க வந்திருக்கியே, ஏதாவது விசேஷமா?"

சுதியின் கேள்விக்கு கிரி பதில் சொல்லுமுன் ரவி குறுக்கிட்டான்.

"ஏன் விசேஷம் இருந்தாதான் வரணுமா? எனக்கு கூட இன்னிக்கு லீவ்தான். நான் வரலையா என்ன?"

"கிரி என்ன உன்னை மாதிரியா ரவி? உருப்படியான ஆள் தெரியுமா?"

"ஏன் நாங்க உருப்படியானவங்க இல்லையா?"

"ரவி கேண்டீன்ல மசால்வடை வாசம் வந்தாலே நீ வார்டிலிருந்து வந்துடுவ. அதுவும் பில் கட்ட என்னை மாதிரி இளிச்சவாய் கிடைச்சா உன் ரூம்ல இருந்து பஸ்சை பிடிச்சே ஓடி வந்துடுவ. நீயெல்லாம் ஹாஸ்பெட்டல் வர காரணம் வேற வேணுமா?"

"நான் வடை சாப்பிடறதையே நிறுத்தி ரொம்ப நாளாச்சு. என்னவோ தினமும் எனக்கு வாங்கி தர்றமாதிரி என்ன அலட்டல் பாரேன் கிரி?" ரவி சொல்லிக் கொண்டிருக்கும் போதே பேரர் சுதியின் சாப்பாட்டிற்கான பில்லுடன் வந்தான். ரவியை பார்த்தவன் "சார் உங்களுக்கு பிடிச்ச மசால் வடை சூடா இருக்கு. கொண்டு வரவா சார்?" என்றான் பணிவுடன்.



ரவி வழிய மற்ற மூவரும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர்.

"இதுக்கு பேர்தான் வாயை குடுத்துட்டு வாங்கி கட்டிக் கறதா?" என்றாள் ரமா.

தொடர்ந்த சிரிப்புக்கிடையே பேரர் ஒரு ப்ளேட் வடையை கொண்டு வந்து வைத்து விட்டு போனான்.

"ரவி வேற வடை சாப்பிடறதையே நிறுத்திட்டான். இதை என்ன செய்யறது?" ரமாவிடம் கேட்டான் கிரி.

"பேசாம நீங்களே சாப்பிட்டிடுங்க கிரி" என்றாள் ரமா.

"உண்மையாலுமே எனக்கு வடை பிடிக்காது. நீ சாப்பிடு சுதி" சுதியிடம் ப்ளேட்டை நகர்த்தினான் கிரி.

"நான் இப்பதானே லஞ்ச் சாப்பிட்டேன். என்னால முடியாது" ரமாவிடம் தட்டை நகர்த்தினாள் சுதி.

"நான் கூட இப்பத்தான் டீ குடிச்சேன்" என்றாள் ரமா. ரவியை மையமாய் வைத்து வடை தட்டு டேபிளையே சுற்றி சுற்றி வந்தது.

"ம்... பாவம்... நம் கேண்டீனில் இன்றுடன் வடைக்கு கடைசி நாள்." சுதி சோகமாய் சொன்னாள்.

"ஏன்?"

"பின்னே இப்படி எல்லோரும் வடை சாப்பிடுவதை நிறுத்திவிட்டால், எப்படி வடை போடுவார்கள்?"

"சரி, இந்த வடையை போகிற வழியில் உட்கார்ந்திருக்கும் பிச்சைக்காரனுக்கு போட்டுவிடலாம்" என்றாள் ரமா.

ரவியின் மேல் ஒரு கண் வைத்திருந்த சுதி, "அதுதான் போட்டாச்சே!" என்றாள் சன்ன சிரிப்புடன்.

மற்ற இருவரும் திரும்பிப் பார்த்த போது ரவி வடையை காலி பண்ணிக் கொண்டிருந்தான். மீண்டும் சிரிப்பு அலையாய் எழுந்தது அங்கே.

ரவி கைகழுவிக் கொண்டு வந்ததும் கிரி சொன்னான். "சுதி என் கல்யாண பத்திரிகை கொடுக்கத்தான் இங்கே

வந்தேன். நான் உன் வீட்டுக்குத்தான் போகலாம் என்றேன். ரவி சொன்னான் இந்த நேரம் நீ இங்கே தான் டியூட்டி. இப்படியே கொடுத்து விட்டு ரமாவுக்கு இங்கேயே கொடுத்து விடலாம் என்றான். வீட்டுக்கு வராமல் இப்படி வழியில் பார்த்து கொடுப்பதாக நினைக்க மாட்டாயே!''

சுதி ரவியை நன்றியுடன் பார்த்தாள். குமாரைப் பற்றி சுதி ஒருமுறை கூட ரவியிடம் எதுவுமே சொன்னதில்லை. தன் வருத்தத்தை ஒரு பார்வையில் கூட காட்டிக் கொண்ட தில்லை. அப்படியும் அவன் குறிப்புணர்ந்து நடந்து கொள் வது ஆச்சரியமாகத்தான் இருந்தது. கிரி இன்விடேஷனை கொடுத்தான். சுதி இரண்டு நாள் முன்பே குமாருடன் கண்டிப்பாய் வந்து விட வேண்டும். நான் இப்போது வீட் டிற்கு போய் உங்க அப்பாவிடமும் அழைப்பிதழ் கொடுத்து விட்டு போகிறேன். சரியா?''

''சரிதான் கிரி. கல்யாண சமயம் ரொம்ப வெளியே சுத் தாதே. உன் அம்மா, அப்பாவை கேட்டதாக சொல்'' என்றாள் சுதி.

''நான் என்ன கேட்டதாக சொல்வது? இன்னும் நாலு நாளில் கல்யாணத்துக்கு வர போகிறாயே. நேரிலேயே சொல்லிக் கொள்'' என்ற கிரிக்கு வருத்தமான முறுவலுடன் தலையசைத்தாள் சுதி. இந்தத் திருமணத்திற்கும் குமார் போக விடமாட்டான். இவ்வளவு நாள் ஒன்றாக பழகி சேர்ந்து பணிபுரிந்தும் கூட திருமணத்திற்கு போகவில்லை எனில் கிரி நிச்சயம் கோபித்துக் கொள்வான். என்ன செய்வதென்று குழப்பமாக இருந்தது.

கிரியும், ரவியும் விடைபெற்று கிளம்ப, சுதி ரமாவுடன் மருத்துவமனைக்கு உள்ளே வந்தாள்.

''சுதி நம்ம சீனியரின் உறவு பெண் ஒருவர் இங்கு அட்மிட் ஆகி இருக்காங்களாமே! ரொம்ப ரகளையாம். டாக்டர்ஸ், நர்ஸ் யாரையும் அருகே விடுவதில்லையாம். ஆயாக்கள் கூட ரூமை சுத்தம் செய்யத் தயங்குகிறார்கள். இன்று மறுபடி



நீங்கதான் ரொம்ப நேரம் பேசி, ரூமுக்கு அழைத்து வந்தீர் களாம். என்ன விஷயம்?'' என்று விசாரித்தாள் ரமா.

''நம்ம சீனியரின் உறவினர் என்பதாலே செய்திகள் மிகைப்படுத்தப்படுகின்றன ரமா. அந்த பெண் நல்ல பெண்தான். சில குழப்பங்களில் தடுமாறிப் போய் இருக் கிறாள். இப்போது நன்றாக இருக்கிறாள். அநேகமாய் சரியாகி விடுவாள் என்று நினைக்கிறேன். அல்லது நம்ம சைக்ரி யாட்டிஸ்ட் ரங்கபாஷ்யம் ஸாரைத்தான் பார்க்க சொல்ல வேண்டும். சீனியர் நாளைக்கு வந்தப்புறம் கேட்டுவிட்டு முடிவு செய்ய வேண்டும். உனக்கு எந்த வார்டில் டியூட்டி ரமா?''

''சில்ரன் வார்டில்தான் என்று நினைக்கிறேன். இன்று எனக்கு நைட் டியூட்டி. ஈவினிங்தான் வர வேண்டியது. ரவி போன் பண்ணி, கிரி பத்திரிகை கொடுக்க வருவதாக ஹாஸ்பெட்டலுக்கு வர சொன்னதால் நேரத்திலேயே கிளம்பி வந்தேன். கல்யாணத்துக்கு பத்திரிகை கொடுக்கற வங்க, வீட்டிலிருப்பவளை ஹாஸ்பெட்டலுக்கு வரவழைத்தா கொடுப்பார்கள்? சுதி சொல்றேன்னு தப்பா நினைக்கக் கூடாது. உங்க ப்ரண்ட்ஸ் எல்லாருமே கொஞ்சம் க்ராக்தான்.''

''ரவியும் கூடவா ரமா?''

''இருக்கறதிலேயே பெரிய லூசு அவர்தான்.''

கலகலவென சிரித்தாள் சுதி. ''இரு, ரவிகிட்ட சொல்றேன்.''

''சொல்லுங்களேன்! உண்மையை யார் கிட்ட சொன்னா என்ன?''

மறுபடி சிரித்த சுதி, ''ரவி சாதா பைத்தியமில்ல ரமா. காரிய பைத்தியம். என் வீட்டுக்கு கிரியை அழைத்து வர முடியாத சூழ்நிலையில்,

கிரிக்கோ, யாருக்குமோ வித்தியாசமாய் தோணக் கூடாது என்று தான் உன்னையும் வரவழைத்து, உனக்கும் பத் திரிகை தரச் சொன்னான். உண்மையில் கிரி ஒரு போன் பண்ணியிருந்தால் கூட போதும். நண்பர்களுக்கிடையே

பார்மாலிட்டீஸ் எதுக்கு? ஆனால் கிரிதான் பத்து நாளாய் நீ எப்ப ப்ரீ? நேரில் இன்விடேஷன் கொடுக்கணும் என்று சொல்லிக் கொண்டே இருந்தான். அதனால்தான் வேறுவழியில்லாமல் ரவி இங்கே அழைத்து வந்திருக்கிறான்.''

ரமா எதுவும் பேசாமல் நடந்தாள். மருத்துவமனை காரிடாரில் நடந்து மருத்துவர்களின் ஓய்வறைக்கு திரும்பும் போது சுதி கேட்டாள். ''ஏன் ரமா அமைதியாயிட்ட?''

''இல்ல, சுதி. ஆச்சரியமாயிட்டேன். நானும் கூடவே இருந்தேன். ரவி உங்ககிட்ட எதுவுமே விளக்கம் சொல்லல. நீங்களும் எதுவும் விபரம் கேட்கல. உங்க சூழ்நிலையை ரவி புரிந்து கொள்வதும், கிரியை இங்கு அழைத்து வந்ததற்கான காரணத்தை நீங்க உணர்ந்து கொண்டதும் உண்மையிலே ஆச்சரியமா இருக்கு! ரத்த சம்பந்தம் உள்ளவர்கள் கூட இந்த அளவு புரிந்து கொள்ள முடியுமா என்று தெரியவில்லை.''

''இது நீ ஆச்சரியப்படும் அளவு பெரிய விஷயமில்லை ரமா. ரொம்ப சாதாரண விஷயம்தான். ஆனால் நீ சொன்ன மாதிரி நான், ரவி, மாலதி என எங்களுக்குள் ஒரு புரிதல் இருக்கிறது. எவ்வளவு பெரியவர்கள் ஆனாலும் ஒரு ஆணையோ பெண்ணையோ வீட்டில் உள்ளவர்கள், மகனாக, அண்ணனாக, தம்பியாகவோதான் பார்ப்பார்கள். அதனால் அவனும் அவர்களிடம் அதே போல நடந்து கொள்கிறான். வீட்டை விட்டு வெளியே கால் வைத்தவுடன் அவன் முழு மனிதனாகி விடுவான். நண்பர்கள் அவனை முழுமையான மனிதனாகவே புரிந்து கொள்கிறார்கள். ரத்த சம்பந்தம் உள்ளவர்களுக்கு கட்டுப்பட வேண்டியிருக்கும். நண்பர்களுக்கிடையே அந்த சம்பந்தம் எதுவும் இல்லாததாலேயே எதையும் சுதந்திரமாய் சொல்ல முடிகிறது. ரமா நான் ஒரு விஷயம் சொல்கிறேன் கேள். திருமணமான எண்பது சதம் பேருக்கு தங்கள் கணவனோ, மனைவியோ தன்னை விட நண்பர்களுக்கு முக்கியத்துவம் தருவது பிடிக்காது. பொஸசிவ் இருக்கும்.

ரவியை நீ திருமணம் செய்து கொண்டால் சட்டப்படி அவனுக்கு மனைவியாகி விடுவாய். நீங்கள் இருவரும்



காதலர்கள். ரவி ரொம்ப நல்லவனும் கூட. அதனால் காதலும், அன்பும் உங்களிடையே கண்டிப்பாய் இருக்கும். இதையெல்லாம் தாண்டி உங்களுக்கிடையே ஒரு பகிர்தலும், புரிந்து கொள்ளலும் கடைசி வரை இருக்க வேண்டுமானால் ரவியின் மனதில் நட்புக்கான இடத்தை நீ நிரப்ப முயற்சி செய். நான், என்னது என்ற உரிமை உணர்ச்சியை காட்டாமல் நண்பனாக அவனிடம் பழகிப் பார். அப்புறம் திருமணத்திற்கு பிறகு ரவி என்னை போன்ற நண்பர்களிடம் கவனம் செலுத்த மாட்டான்.''

சுதியின் கையை தோழமையுடன் பற்றிக் கொண்டாள் ரமா. ''நீங்க இப்படி சொல்றது ரொம்ப சந்தோஷமா இருக்கு சுதி. ஆனா எல்லாருடைய வாழ்விலும் தாய், தந்தை, சகோதரர்கள், மனைவி, நண்பர்கள் என எல்லாவற்றிற்கும் ஒரு இடம் உண்டுதானே? ரவி எனக்கு கணவனானால் யாருக்கும் நண்பனாய் இருக்கக் கூடாதா என்ன? ஏன் கண்டதையும் போட்டு குழப்பிக்கணும்? நீங்க ரவிக்கு தோழின்னா, எனக்கு சகோதரி மாதிரி. நாளைக்கே கல்யாணமாகி எங்க ரெண்டு பேருக்கும் சண்டை வந்தா நீங்கதான் நடுவில் வந்து உட்கார்ந்து சமாதானம் சொல்லணும்?'' சிரித்தபடியே ரமாவிடம் விடைபெற்று சுதி தன் வேலையை பார்க்க போனாள்.

மாலையில் வேலை முடிந்ததும் இன்று சாந்தி இல்லம் போக வேண்டும். கார் இல்லாமல் சிரமமாக இருந்தது. சாந்தி இல்லம் போய்விட்டு திருவான்மியூரிலிருந்து திரும்பி அண்ணா நகர் போக ஆட்டோவோ, டாக்ஸியோ கிடைப்பது சிரமம். காலையில் வந்த மாதிரி வேலுவுடைய மச்சானையே கூப்பிட வேண்டியதுதான். வேலு காலையில் செல்லிலிருந்துதான் அவன் மச்சானுக்கு போன் செய்து வரச் சொன்னான் என்பது நினைவு வரவே செல்லில் நெம்பரை தேடி போன் செய்தாள். சிறிது நேரத்தில் டாக்ஸியுடன் அவன் வந்து விடவே கிளம்பினாள். சாந்தி நிலையத்தில் முதியவர்களை செக்கப் பண்ணும்போதும், சிகிச்சை அளிக்கும்

போதும் எதிர்பட்டவர்களும் கூட "ஏன் டாக்டர் போன வாரம் நீங்க வரவில்லை?" என்றார்கள்.

"எனக்கு போன வாரம் முழுவதும் பிரகாசம் மருத்துவ மனையில் நிறைய வேலை. அதனாலதான் வர முடிய வில்லை. எனக்கு பதில் வேறு டாக்டர் வந்திருப்பாரே?"

"வந்தார்தான். எல்லாருடைய மருந்து சீட்டையும் வாங்கி பாத்துட்டு, என்ன உடம்புக்குன்னு கேட்டுட்டு, ஏதோ எழுதி கொடுத்துட்டு போய்ட்டார்" என்றார் பெரியவர் அப்புசாமி.

"உடம்புக்கு என்னன்னு கேட்டு மருந்து எழுதி தர்றது தானே தாத்தா ஒரு டாக்டரோட வேலை? அவர் அதைத்தானே செய்தார்?"

"நிஜம்தான். கடமைக்காக அவர் வந்து விசாரிச்சிட்டு போறது மறந்திருக்கிற எங்க நோயை நினைவு படுத்தற மாதிரி இருக்கு. இப்ப நீங்க வந்தா சகஜமா பேசறோம். ஒண்ணா உட்கார்ந்து டீ குடிக்கிறோம். எங்க ஒவ்வொருத்தரை பத்திய கதையும் உங்களுக்கு தெரியும். அதனால எங்க பொண்ணு மாதிரி இருக்கு. டாக்டர்னே தோணல."

"'ஆமாம்மா. நல்லா இருக்கீங்களா மாமி?'ன்னு கேட்டுட்டு சிரிச்சிட்டே நீ எதிர்ல வந்து நிக்கறப்ப சாட்சாத் மகாலட்சு மியே வந்த மாதிரி இருக்கு" என்றாள் கிரிஜா மாமி.

"மாமி உங்க மகாலட்சுமி பட்டுப்புடவை தானே கட்டி யிருப்பா. இந்த மாதிரி சுடிதார் போட்டிருப்பாளா?" என்று சிரித்தாள் சுதி.

"உடுப்பு எப்படியிருந்தா என்ன, மனசு தெய்வாம்சமா இருக்கே" என்று மாமி பதில் சொன்னதும், 'பரவாயில்லையே நல்லா சமாளிக்கிறீங்க' என்றபடி மற்றவர்களை கவனிக்கப் போனாள் சுதி.

கிளம்பும் போது அடுத்த முறை 'நீங்களே வாங்க' என்ற கோரிக்கையுடன் அனைவரும் விடை கொடுத்தனர்.

ரத்தம் சிந்தி பெற்ற குழந்தைகள் தங்கள் உழைப்பையும், வாழ்நாளையும் உறிஞ்சிப் போன பிறகு எஞ்சியிருக்கும் நாட்களில் இரத்த சம்பந்தமே இல்லாத தன்னிடம் மீதி யிருக்கும் பாசத்தை அவர்கள் கொட்ட துடிப்பது வேதனை யாக இருந்தது.



டாக்ஸியில் ஏறப் போகும்போது சாந்தி இல்லத்தின் நிர்வாகி மாலதியின் சித்தப்பா கோபால் வெளியே போயிருந் தவர் அப்போதுதான் வந்து இறங்கினார்.

"வணக்கம் அங்கிள். உங்களைப் பார்ப்பதே ரொம்ப அபூர்வமாக இருக்கிறது" என்றாள் சுதி.

அவர் முகத்தில் ஒரு வருத்தம் தோன்றியது. "உன் வேலை முடிஞ்சுதா சுதி?"

"ஆமாம் அங்கிள்."

"கிரிக்கு கல்யாணம் என்று சொன்னான். சந்தோஷம். ஆனால் மறுபடி அவன் இங்கே வருவது சந்தேகம் என்று நினைக்கிறேன்."

"ஏன் அங்கிள் அப்படி சொல்கிறீர்கள்?"

"கிரியின் அப்பாவை பார்த்தேன் சுதி. மகனுக்கு பெரிதாய் மருத்துவமனை கட்டித் தரும் எண்ணத்தில் இருக்கிறார். அவரும் டாக்டர். மகனும் வரப்போகிற மருமகளும் கூட டாக்டர்கள் எனும் போது அவரது எண்ணம் நியாயமானது தான். ஆனால் நமக்குத்தான் சிரமம். இது மட்டும் சிரம மில்லை சுதி. வரவர என்னால் சரியாக பராமரிக்க முடிய வில்லை. இந்த இடத்தை காலி பண்ண சொல்லி ஹவுஸ் ஓனர் தொல்லை கொடுக்கிறார். வேறு வீடு பார்த்துக் கொண்டிருக்கிறேன். மாடி வீடு என்றால் வயதானவர்களால் ஏற முடியாது. தனியான வீடு என்றால் நம்மால் கொடுக்க முடியாத அளவு வாடகை இருக்கிறது. அபார்ட்மென்ட் வீடுகளும் இடவசதி போதாது. எனக்கும் ஒருமுறை ஸ்ட்ரோக் வந்ததிலிருந்து முன்பு போல நடக்கவோ, அலையவோ முடியவில்லை. நானே ஒரு அநாதை. என்னையே நம்பி யிருக்கும் இத்தனை அநாதைகளை என்ன செய்வேன்?" என்றார் வருத்தத்துடன்.

அவர் பேசும்போதே யோசனையில் மூழ்கிவிட்ட சுதி, "நீங்க கவலைப்படாதீங்க அங்கிள். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதைப் பற்றி முடிவு செய்துவிட்டு வந்து நாளை சொல்கிறேன். நல்லவர்கள் சிரமப்படலாம். ஆனால் தோற்க மாட்டார்கள். நீங்க எதையும் நினைத்து வருந்தாதீர்கள்" என பலவாறு ஆறுதல் சொல்லிவிட்டு கிளம்பினாள் சுதி.

ஒருகையை மடக்கியபடி லேசாய் அவர் தடுமாறி நடப்பதை பார்க்க பாவமாக இருந்தது. வாழ்வு முழுதும் பிறர் நலனுக்காகவே உழைத்த அவருக்கு ஏன் ஸ்ட்ரோக் வர வேண்டும் என்று வருத்தமாக இருந்தது.

இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் இலவச மருத்துவமனையின் பின் பகுதியில் பெரிய ஷெட் ஒன்று இருக்கிறது. அப்பா அலுவலக சாமான்கள் போட்டு வைத்திருக்கிறார். அப்பாவிடம் கேட்டு அதை சரி செய்து, மருத்துவ மனையின் பின்புறமுள்ள இரண்டு அறைகளையும் அத்துடன் இணைத்தால் பெரிய இடமாகிவிடும். சாந்தி இல்லத்தை இங்கே மாற்றிக் கொள்ளலாம். அவர்களுக்கும் இடம் கிடைத்த மாதிரி இருக்கும். நமக்கும் இரண்டு இடத்திற்கு அலையும் வேலை மிச்சமாகும். டிரஸ்ட் மெம்பர்களிடமும் கலந்து பேச வேண்டும். யோசித்தபடி வீடு வந்து இறங்கிய போது குமார் வழக்கத்திற்கு மாறாய் கேட்டிற்கருகிலேயே நின்றிருந்தான். இரண்டு வீடுகளுக்கு முன்பே இறங்கி கொண்டு நடந்து போகலாம் என நினைத்திருந்த சுதி வேறுவழியின்றி வீட்டு வாயிலில் சென்று இறங்கினாள். காலையில் போலவே தயங்கிய டிரைவரிடம் வற்புறுத்தி பணத்தை கொடுத்து விட்டு உள்ளே நுழையும் போது 'இவன் தான் நீ புதுசாய் பிடித்திருக்கும் ஆளா? எங்கே மகாபலிபுரம் கூட்டி போனானா உன்னை?' வழக்கமான கோணல் சிரிப்புடன் விசாரித்தபடியே வழிவிட்டான் குமார். பிரைவர் திரும்பி பார்ப்பது போல் தோன்ற வேகமாய் உள்ளே போனாள் சுதி.

"ஏண்டி புருஷனுக்கு ஒரு வாய் சாப்பாடு செஞ்சி வெக்க முடியல. எவன்கூடவோ காலையில போய் ஊர் சுத்திட்டு இப்ப வர்ற. நீயெல்லாம் ஒரு பொம்பளையா?"



"குமார் நீயே பார்த்தாய். அது ஒரு கால்டாக்ஸி. அவன் டாக்ஸி டிரைவர். எதுக்கு அசிங்கமா பேசுகிறாய்?"

"நா அசிங்கமா பேசறனா? சரி நீயே சொல்லு. வீட்ல கார் நிக்குது. நல்ல கண்டிசன்ல இருக்கு. டேங்ல பெட்ரோலும் இருக்கு. நீயேன் டாக்ஸில போற?"

"காலையில நான் போறப்ப எனக்கு உடம்பு சரியில்லை குமார். அதனால்தான் காரை எடுக்கவில்லை."

"சரி உடம்பு சரியில்லைன்னா வீட்லதானே ரெஸ்ட் எடுக்கணும். எதுக்கு வேலைக்கு போன?"

............

"பதில் சொல்ல முடியாதே உன்னால? வேலைக்கு போனாதானே ஊர் சுத்த முடியும். கார் ஓட்ட முடியலேங்கிற சாக்குல இவனை சந்திக்க முடியும்."

"குமார் அவன் ஒரு டிரைவர்."

"டிரைவரா இருந்தா, அவன் ஆம்பிள்ளை இல்லையா? தனியா ஒரு பொண்ணு அவன் கூட வரும்போது அவனுக்கும் மட்டும் ஆசை வராதா?"

'சே!' தலையை திருப்பியபடி சமையலறைக்குள் சென்றாள் சுதி.

இரவு குமார் சாப்பிட்டு முடித்து ஹாலில் போய் அமர்ந்து டி.வியை ஆன் பண்ணியதும், சுதி டேபிளில் அமர்ந்து சாப்பிட தொடங்கினாள். குமாருக்கு ஹாலில் இருப்பு கொள்ளாமல் உள்ளே வந்து ஒரு சேரை இழுத்துப் போட்டு டைனிங் டேபிளில் கையை ஊன்றி அமர்ந்தான்.

"உங்கப்பா கிட்ட பேசினியா?"

..................

"நான் சொன்ன விஷயத்தை சொன்னியா?"

........................

'பேக்டரியை எங்கிட்ட ஒப்படைச்சிட்டு இங்கேயே வந்துவிட சொல்லி சொன்னியா?''

பதில் பேசாது ஹாட்பாக்சிலிருந்து ஒரு இட்லியை எடுத்து தட்டில் வைத்து சாம்பாரை கரண்டியில் எடுத்து ஊற்றிக் கொண்டாள் சுதி.

"உங்கப்பா, அம்மா இங்க வந்ததும் அந்த வீட்டை வாடகைக்கு விட வேண்டும். முழுதாய் அந்த பெரிய வீட்டிற்கு வாடகை அமைவது சிரமம். மாடியை தனியாக தடுத்து, கீழே இரண்டு பிரிவாய் பிரித்து மூன்று குடித்தனம் வைக்கலாம்."

சுதிக்கு இட்லி தொண்டைக்கு கீழ் இறங்காமல் முரண்டியது. அப்பாவின் அறையில், அம்மாவின் பூஜை அறையில் இன்னொருவரை நினைத்து கூட பார்க்க முடியாது நம்மால். இவன் எப்படி இவ்வளவு எளிதாக திட்டமிடுகிறான்?

"என்ன பதிலே பேசமாட்டேங்கற?"

...............................

"நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். அவ்வளவு திமிரா உனக்கு? அருகிலிருந்த தட்டை தூக்கி வீசினான் குமார். இட்லி தரையில் கொட்ட, தண்ணீரும், சாம்பாரும் சுதியின் முகத்தில் பட்டு சுவரில் தெறித்தது. முகத்தில் எந்த சலனமுமின்றி எழுந்த சுதி, நனைந்திருந்த உடையை மாற்றிக் கொண்டு வந்து தரையை சுத்தம் செய்யத் தொடங்கினாள்.

அருகில் வந்து அவளை உலுக்கினான் குமார். "கேட்கிறேனில்லையா, பதில் சொல்?"

இரவெல்லாம் தொடரப் போகும் சண்டையை நினைத்து அலுப்பாக இருந்தது. நாள் முழுவதும் சரியாக சாப்பிடாததில் உடல் அசத்தியது. அவளையும் அறியாமல் கண்கள் மூடின. உடலின் பலவீனத்தில் யாரோ எப்படியோ போகட்டும். இன்று முழுவதும் நன்றாக தூங்க முடிந்தால் போதும் என்று தோன்றியது. குமார் அமைதியாக தூங்கினால்தான் அவளும் தூங்க முடியும். அவன் பேசாமலிருக்க என்ன சொல்லலாம் என்று யோசித்தவள், "அப்பா இப்ப ரொம்ப வேலையாக இருக்கிறார். அவரிடம் பேசவே முடியவில்லை.இன்னும் இரண்டு நாள் கழித்து அவரிடம் பேசிவிட்டு சொல்கிறேன்" என்றாள்.

"இரண்டு நாளில் நிஜமாய் பேசுவாயா?' குமார் சந்தேகத்துடன் கேட்டான்.



'பேசுகிறேன்' என்ற சுதி தப்பித்துக் கொண்ட உணர்வுடன் மேலே ஓடிப் போய் படுக்கையில் விழுந்தாள்.

# 30

**கா**லையில் எழுந்து வழக்கம் போல் கிளம்பி போகும் வரை வீடு அமைதியாக இருந்தது. இன்னும் இரண்டு நாட்களுக்கு பிரச்சனை இல்லை என்ற நிம்மதியில் உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

இன்று சீனியர் வந்துவிட்டதால், நேற்று விடுமுறை எடுத்த மருத்துவர்கள் இன்று முன்னதாகவே வந்து தம் வேலையை தொடங்கி இருந்தனர். மதியம் வரை யாருக்கும் யாரிடமும் பேச நேரம் இருக்கவில்லை. மதிய உணவிற்கு பின் சுதி தன் அறையில் சற்று ஓய்வாக இருந்த போது கதவு மெதுவாக தட்டப்பட்டது. "யெஸ்" என்றதும், கதவை திறந்து கொண்டு 'மே ஐ, டிஸ்டபிஸ் யு டாக்டர்?' என்றபடி பார்கவியின் கணவன் உள்ளே வந்தான்.

"ப்ளீஸ் உட்காருங்க" என்றதும் எதிரில் அமர்ந்து, "பார்கவியை இன்னிக்கு வீட்டுக்கு கூட்டிப் போகிறோம் டாக்டர். அவள் இப்போது தெளிவாக இருக்கிறாள். கலகலப்பாக பேசுகிறாள். நன்றி டாக்டர்" என்றான்.

"உங்க பெயர் என்ன மிஸ்டர்......" என சுதி தொடங்கியதும்

"முரளிதரன்" என்றான் அவன்.

"மிஸ்டர் முரளிதரன் நீங்க படிக்கும் போது வகுப்பில் முதலாவது மாணவனாக இருந்தீர்களா?"

"ஆமாம்" என்றான் அவன் வியப்புடன்.

"அம்மா, அப்பாவுக்கு நல்ல பிள்ளையாக அவர்களை தொல்லைபடுத்தாமல் இருந்தீர்கள் இல்லையா?"

'ம்' தலையாட்டினான்.

"பெரும்பாலான டீன்ஏஜ்ஜினர் விழும் காதல் வலையில் நீங்க ஒருமுறை கூட விழுந்ததில்லை. மணமானபின் உங்க

மனைவியை தவிர யாரையும் மனதாலும் தொட்டதில்லை. கரெக்ட்டா?"

"டாக்டர் இதுவரை நீங்க என்னைப் பார்த்ததே இல்லை. எப்படி என்னைப் பற்றி இவ்வளவு கரெக்டாக சொல்கிறீர்கள்?"

"உங்க மனைவியின் பேச்சு மூலமாய் உங்களை பற்றி நான் அறிந்த விஷயம் இது. முரளிதரன் நான் கேட்கறதுக்கு உண்மையை சொல்லுங்க. உங்க மனைவியின் அழகை பார்த்துதானே நீங்க திருமணத்திற்கு சம்மதித்தீர்கள்?"

"நீங்க உண்மையை சொல்லுங்கன்னு கேட்டதால சொல்றேன். நான் திருமணத்திற்கு சரி சொன்னபோது என் மனைவியை பார்க்கவே இல்லை. என் பெற்றோர் நமக்கு ஏற்ற குடும்பத்திலிருந்து அருமையான பொண்ணை பார்த்திருக்கிறோம் என்றார்கள். ஒரு நாளில் பெரும்பான்மை நேரம் ஆண்கள் வெளியே போய் விடுகிறோம். நாள் முழுவதும் வீட்டில் சேர்ந்திருக்க வேண்டியவர்கள் பெண்கள். அதனால் அம்மாவுக்கு பிடிப்பதுதான் முக்கியம் என்று நினைத்தேன். அம்மாவுக்கு பிடித்து விட்டது என்றதுமே அவளை மணந்து கொள்ள சம்மதம் சொல்லி விட்டேன். பெண் பார்க்கும் சடங்கே பெண் என்னை பார்ப்பதற்காகத்தான் நடந்தது."

"சரி நீங்க எதிர்பார்க்காம அழகான பெண் உங்களுக்கு மனைவியாக கிடைத்தாள். அதைப் பற்றி பிறகு மகிழ்ச்சியடைந்திருக்கிறீர்களா? அவளை நேசிக்கத் தொடங்கினீர்களா?"

"மனைவி அழகாய் அமைந்ததில் எல்லோரையும் போல் எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் அவளை நேசிக்கக் காரணம் அழகல்ல. என் மனைவி என்பதால்தான். மனைவி எப்படிப் பட்டவளாய் இருப்பினும் அவளை நேசிப்பது இயல்பான விஷயம் இல்லையா? இதே பார்கவிக்கு விபத்தில் ஏதாவது நேர்ந்திருந்தாலும், வயதாகி தோல் சுருங்கி, தலைவெளுத்து நடை தள்ளாடும் சமயத்திலும் கூட என் மனைவியை என்னால் விரும்பாமல் இருக்க முடியாது."



"முரளிதரன் நீங்க ரொம்ப நல்லவர். நேர்மையானவர். ஒரு விஷயம் மட்டும் நன்றாக யோசித்து சொல்லுங்கள். நீங்கள் விரும்புவது உங்கள் மனைவியையா? அல்லது பார்கவியையா?"

குழப்பத்துடன் பார்த்தான் முரளிதரன். "இருவரும் ஒருவர்தானே டாக்டர்? என் மனைவிதானே பார்கவி?"

"இருவரும் ஒருவர்தான். ஆனால் வேறுபட்ட நிலை. பார்கவி பிறந்ததிலிருந்து கடைசி வரை பார்கவிதான். மாற முடியாது. ஆனால் உங்க மனைவி என்ற இடம், காலி அறையைப் போல. யார் வேண்டுமானாலும் உள்ளே வந்திருக்க கூடிய சாத்தியம் உண்டு. இப்போது நீங்க உங்க மனைவியைத்தான் விரும்புகிறீர்கள் என்றால், பார்கவி என்றில்லை வேறு எந்த பெண்ணாக இருந்தாலும் விரும்புவீர்கள். உங்களுக்கு பெண் யார் என்பது முக்கியம் அல்ல. அவள் உங்கள் மனைவியா என்பதுதான் முக்கியம். நீங்கள் மனைவி என்கிற சமூக அந்தஸ்தைத்தான் விரும்புகிறீர்கள். ஒரு மோசமான பொண்ணைக் கூட மனைவி என்ற காரணத்திற்காகவே அன்பு செலுத்துவீர்கள் என்று பொருள்.

அப்படியில்லாமல் பார்கவியை எனக்கு பிடித்திருக்கிறது. அவளை அவளுக்காகவே நேசிக்கிறேன் என்று சொன்னால் உங்கள் வாழ்வு இன்னும் அருமையாக இருக்கும். பார்கவி யார் என்று தெரியாது? எங்கே பிறந்தாள் என்று தெரியாது, என்ன படித்திருக்கிறாள், எது பிடிக்கும் பிடிக்காது என்று எதுவும் தெரியாது. ஆனால் அவளும் நானும் பார்த்துக் கொண்டது முதல் ஒருவருக்காகவே ஒருவர் பிறந்ததாய் உணர்ந்தோம் என்று சொல்வீர்களானால் உங்கள் அன்பில் உயிர்ப்பு இருக்கும். மனைவியை கடமைக்காக காதலிப்பதற்கும், அவளை அவளுக்காகவே காதலிப்பதற்கும் உள்ள வேறுபாடு இதுதான்."

முரளிதரன் யோசிக்கத் தொடங்கினான். சில நிமிடங்கள் அவனை யோசிக்க விட்ட சுதி, ஒரு டெலிபோன் அழைப்பிற்கு பதில் சொல்லிவிட்டு மறுபடி பேச்சைத் தொடர்ந்தாள்.

கணவர்கள் மனைவியை வீழ்த்துவது ரொம்ப சுலபம் முரளிதரன். மாலையில் நீங்க அலுவலகத்திலிருந்து வாங்கி வரும் ஒரு முழம் பூவோ, ஒரு ஸ்வீட்டோ கூட 'உன்னையே நினைத்து கொண்டிருந்தேன்' என்பதை அவளிடம் சொல்லி விடும். ஐநூறு ரூபாய்க்கு வாங்கி அவள் அணிந்திருக்கும் உடை கூட நீங்கள் ரசனையோட விமர்சிக்கும் போது ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ளதாக மாறி விடும். அவளுடைய நறுவிசையும், அழகுணர்ச்சியையும் நீங்கள் பாராட்டினால் அவள் தன்னையும் வீட்டையும் எப்போதும் அழகாக பராமரிக்கத் தொடங்குவாள். வரிசையான வெள்ளை பற்களையும், இனிமையான அவளது சிரிப்பையும் புகழ்ந்து பாருங்கள். தினமும் நீங்கள் வீட்டிற்கு வரும்போதே அழகான சிரிப்புடன், உங்களுக்கு பிடித்ததான உணவுடன் உங்களை வரவேற்க தயாராகிவிடுவாள். சின்ன சின்ன பொய்கள் தாம்பத்ய வாழ்வை சுவாரஸ்யமாக்கும். கணவன் மனைவி உறவை இனிமையாக்கும். பார்க்க சுமாரான பொண்ணைக் கூட அவள் கணவன் கூசாமல் புகழ்வது இதற்காகத்தான். ஆனால் உங்க விஷயத்தில் நீங்க சிரமப்பட்டு பொய் பேச வேண்டியதேயில்லை. பார்கவி இயற்கையாகவே ரொம்ப அழகானவங்க. அவங்களை நீங்க வெளிப்படையாய் ரசிக்கத் தொடங்கினால் போதும்.''

அறை கதவை மெதுவாய் தட்டிவிட்டு வசுமதி வேகமாய் உள்ளே வந்தாள்.

''என்ன வசுமதி?'' என்று சுதி கேட்டதும், ''டாக்டர் அந்த அப்பெண்டிஸ் பேஷண்டுக்கு டிரிப்ஸ் முடிந்து விட்டது. அப்புறம் ஐந்தாம் எண் அறையிலிருக்கும் பெண்ணுக்கு பிட்ஸ் வந்திருக்குது'' என்றாள் படபடப்புடன்.

அமைதியாய் அமர்ந்திருந்த முரளிதரனிடம் ஒரு தலையசைப்புடன் வசுமதியின் பின்னே விரைந்தாள் சுதி.

* * *

மதியம் சுதிக்கு இலவச மருத்துவமனைக்கு போக வேண்டியிருந்தது. அங்கு காத்திருந்த டிரஸ்ட் மெம்பர்களான மற்ற டாக்டர்களுடன் முதியோர் இல்லத்தை இங்கு



# 32

நேரம் நிமிடமாய் கரைந்தது. சீனியருக்கு அன்றைய அறுவை சிகிச்சைக்கு உதவி செய்து விட்டு வந்து அமர்ந்த சுதிக்கு மணி நான்காகியிருந்ததை பார்க்க வியப்பாக இருந்தது. நாட்களும், மாதங்களும், வருடங்களும் போகிற வேகத்தில் மருத்துவர்களுக்கு வயது கரைவதே தெரிவதில்லை என்று தோன்றியது. பெரும்பாலானோர் வேலை முடிந்து போயிருக்க மருத்துவர்கள் அறையில் ஒரு சிலர் மட்டுமே இருந்தனர்.

ரமா உள்ளே வரவும், சுதியின் எதிரில் அமர்ந்திருந்த இன்னொரு டாக்டர் சுமதி ''ரமா, அந்த டிவியை கொஞ்சம் ஆன் பண்ணேன்'' என்றாள். சத்தம் குறைவாக டி.வியை வைத்து விட்டு சுதியின் அருகே வந்து உட்கார்ந்த ரமா டிபன்பாக்ஸை பிரித்தாள்.

''என்ன ரமா, இப்போதான் உன் வேலை முடிஞ்சுதா?''

''ஆமாம். இன்னிக்கு ரொம்ப வேலை என்ற ரமா, ''சுதி இன்னிக்கு சாம்பார் சாதம் நான் செய்தேன். கொஞ்சம் டேஸ்ட் பண்ணி சொல்லுங்களேன்'' என சுதியிடம் டிபன் பாக்சை திறந்து கொடுத்தாள்.

''ரவிக்கு மட்டன் பிரியாணியும், சிக்கன் ப்ரையும்தானே பிடிக்கும்? வெறும் சாம்பார் சாதத்தை போட்டு அவனை ஏமாத்தப் போறியா?'' என்று சிரித்தபடி சாதத்தை அள்ளிய சுதியின் சிரிப்பு அப்படியே உறைந்தது. தொலைக்காட்சியின் செய்திகளில் குமாரைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

''இன்று கோடியக்கரையிலிருந்து வெளிநாட்டுக்கு கடத்த முயன்ற வெடி மருந்து படகை போலீசார் கைப்பற்றினார்கள். அதில் ஏராளமான வெடிமருந்து தயாரிக்க பயன்படும் ரசாயனங்கள் இருந்தன. [illegible] இருந்தவர்களை கைது செய்து தீவிரமாக விசா[illegible]யவன். அவனு[illegible] தகவலின் பேரில் சென்னையி[illegible]லீசாரால் இவன் தேடப் [illegible]ருக்கும் எப்படி பழக்கம்

செயல்பட்ட குமார் என்பவரை போலீசார் கைது செய்தனர். இவருடன் சம்பந்தப்பட்டவர்களை பிடிக்க போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகிறார்கள்.''

குமாரின் முகம் குளோசப்பில் திரை முழுவதும் தெரிய அறையில் கனமான நிசப்தம் நிலவியது. மூச்சுவிடவும் மறந்தவர்களாய் எல்லோரும் அமர்ந்திருக்க, கையிலிருந்த டிபன்பாக்ஸை மறந்து சுதி வேகமாய் எழுந்தாள். சாதம் சிதறி புடவையிலும் டேபிளிலும் இறைந்ததைப் பற்றி கவனமின்றி கைகழுவவும் மறந்து கீழே விரைந்தாள். நம்ப முடியாத அதிர்ச்சியில் எதையும் யோசிக்கக் கூட முடியவில்லை. பதட்டத்தில் கைகள் வெடவெடத்தன. மனசு பாரமாகி வயிறு துவண்டது. மருத்துவமனைக்கு வெளியே நின்றிருந்த ஒரு ஆட்டோவை அழைத்த போது அப்பா செல்லில் கூப்பிட்டார்.

''இப்போதுதான் நியூஸ் பார்த்தேன். சுதி. என்னம்மா இது?''

''எனக்கும் எதுவும் தெரியலப்பா. நானும் நியூஸ் பார்த்துட்டு இப்பதான் போலீஸ் ஸ்டேசன் போயிட்டு இருக்கேன்.''

''நீ ஆட்டோலேயே இரு சுதி. ஸ்டேசனுக்குள் போக வேண்டாம். ஸ்டேசன் அருகே வெயிட் பண்ணு. நான் நம்ம ...டு வருகிறேன்.''

அ... ...ந்திருந்த இருபது நிமிடங்களில் அப்பா லாயருடன் வந்து விட்டார். அவரது சிவந்த முகத்தையும் நனைந்திருந்த சட்டையையும் பார்த்ததும் தான் அவர் ஒரு ஹார்ட் பேஷண்ட் என்பது நினைவு வந்தது. சுதி தன் படபடப்பை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சாதாரணமாக அருகில் போய் நின்றாள். அவர்களை காரில் இருக்க சொல்லிவிட்டு வக்கீல் மட்டும் உள்ளே போய் போலீசிடம் பேசிவிட்டு வந்தார்.

''கேஸ் ரொம்ப சிக்கல்தாம்மா. குமாரை எங்க வெச்சிருக்காங்கன்னு கூட சொல்ல மாட்டேங்கறாங்க. நமக்கு தெரிஞ்ச டி.எஸ்.பி ஒருத்தர் இருக்கிறார். ஆனால் இப்போது ஊரில் இல்லை ...ருக்கிறார். வந்ததும் வரலாம். இப்ப ...யிருந்தது. அங்கு ... லாபமும் இல்லை'' என்றார். களான மற்ற டாக்டர்களுடன் முத...



வேறு வழியில்லாமல் வீட்டிற்கு வந்தனர். அம்மா தவிப்புடன் காத்திருந்தாள்.

''ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு வளர்த்தோமே, உனக்கு போயா இப்படி நடக்கணும்?'' மகளை அணைத்துக் கொண்டு அழுது தீர்த்தாள். தேய்த்துக் கொண்டிருந்த பாத்திரத்தை சுதியை பார்த்ததும் அப்படியே போட்டு விட்டு ஓடி வந்த பாலம்மா, ''எந்த பாவி கண்ணு பட்டுச்சோ. அவங்கண்ணை பிடுங்கி போக மாரியாத்தா'' என்று யாரை திட்டுகிறோம் என்று தெரியாமலே திட்டிக் கொண்டிருந்தாள். அடுத்து என்ன என்று யோசிக்கக் கூட அவகாசமின்றி அன்று முழுவதும் அம்மாவின் உறவினர், அப்பாவகை உறவு, நண்பர்களின் அழைப்பால் விடாது தொலைபேசி ஒலித்துக் கொண்டே இருந்தது. ரிசீவரை கீழே எடுத்து வைத்தாலும், செல்போனை ஆப் செய்தாலும் கூட நேரிலேயே புறப்பட்டு வந்தவர்களுக்கு பதில் சொல்லித்தான் தீர வேண்டி இருந்தது.

விடாது புலம்பி தேய்ந்த அம்மாவிடம் ''உன் மாப்பிள்ளைக்கு நேரம் சரியில்லம்மா. நம்ம ஜோதிடர் சொன்னார். சனிதிசை நடக்குதாம். இப்படி சிறைவாசம் ... கூட நல்லதுக்குத்தான். இல்லேன்னா உயிருக்கே ஆ...யிடும். இன்னும் ஒரு மாதத்தில் வரும் குருபெயா...யில் எல்லாம் சரியாகிவிடுமாம்'' என்று அவளுக்கு சமாதானமான பதிலை சொன்னாள்.

மாலை பேப்பரில் குமாரின் போட்டோ வந்திருந்தது. கூடவே கைது செய்ததாக வந்திருந்த பிரசாத்தின் போட்டோவை பார்த்த சுதி அதிர்ந்தாள். குறுந்தாடியும் பூனை கண்ணுமாய் இருந்த அவனை அவளுக்கு நன்றாக நினைவிருந்தது. முன்பு ஒருமுறை கத்தியால் குத்தப்பட்ட ஒருவனை கொண்டு வந்து மருத்துவமனையில் அட்மிட் செய்துவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடியவன். அவனுடைய கூட்டாளி மாட்டிக் கொள்ள போலீசாரால் இவன் தேடப்படுபவன். இவனுக்கும் குமாருக்கும் எப்படி பழக்கம்

ஏற்பட்டது? அன்று கடற்கரையில் நான் பார்த்தது இவனுடன் தானா? இறங்கி போயாவது குமாரின் கூட இருப்பது யார் என்று பார்த்திருந்தால் இன்று குமார் இப்படி ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கமாட்டான். பிரசாத் குற்றவாளி என நானே போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்திருக்கிறேன். அவனது கூட்டாளி குமார் நல்லவன் என்று சொன்னால், அதை போலீஸ் எப்படி நம்புவார்கள்? வெளியே யாரிடமும் எந்த வம்புக்கும் குமார் போகமாட்டான். சுதி ரவி மற்றும் வேலையாட்களிடம் பேசும்போது கூட அவளை ஆபாசமாய் திட்டுவான். அசிங்கமாய் நடந்து கொள்வானே தவிர சம்பந்தப்பட்டவர்களிடம் எதுவும் பேசாமல் ஒதுங்கிப் போய் விடுவான். அப்படிப்பட்டவன் குற்றவாளியான பிரசாத்திடம் எப்படி நெருங்கியிருப்பான்? நல்லவர்களிடம் ஒட்டிப் பழகாத குமாருக்கு கெட்டவர்களையும் அடையாளம் கண்டு ஒதுங்கிப் போக தெரியவில்லை போலும்.

எண்ணங்களின் தீவிரத்தில் தலை வெடித்து விடும் போலிருந்தது. எத்தனை முறை யோசித்தும் அடுத்து என்ன செய்வதென்று புரியவில்லை. தலையை பின்னால் சாய்த்து வானத்தை இலக்கின்றி வெறித்தாள். விஸ்வநாதன் வந்து மகளின் அருகே அமர்ந்தார். 'குமாரின் அப்பாகிட்ட பேசலாம்மா' என்றபடி அவரது எண்களை அழுத்தி தொடர்பு கொண்டார்.

ரகுநாதபூபதி மிகவும் கோபமாக பேசினார். ''நான் வெளியே தலை காட்ட முடியாதபடி பண்ணிட்டானே பாவி! என்ன குறை வெச்சேன் இவனுக்கு? எத்தனை பணத்தைக் கொட்டி எவ்வளவு பெரிய பள்ளியில் படிக்க வைத்தேன்? தேடி பிடித்து திருவிழா மாதிரி கல்யாணம் பண்ணினேன். அனுபவிச்சி வாழத் தெரியாத ஜென்மம். இனி நான் எப்படி மற்றவர் முகத்தில் விழிப்பேன்? இன்னியோட நான் அவனை தலைமுழுகியாச்சு. நீங்களும் முழுகிடுங்க. போலீசுல அடிபட்டா தானா புத்தி வரும்.

நீங்க போய் அவனைப் பார்க்க வேண்டாம். இனி அவனுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை'' என்றார் கறாராக.



''நீங்க வயதில் பெரியவர். அனுபவம் உள்ளவர். நீங்களே இப்படி சொன்னா எப்படி? ஏதோ கெட்ட நேரம். குமாருக்கு அனுபவிக்கணும்னு இருக்கு. நீங்க எல்லாத்தையும் மறந்துட்டு கிளம்பி வாங்க. உங்க மருமகள் கவலையுடன் இருக்கிறாள். அவள் உங்க வீட்டு பெண்தானே! அவளுக்காக வேனும் வாருங்கள். அடுத்து ஆக வேண்டியதை பார்ப் போம்!'' விஸ்வநாதன் நயமாய் சொன்னார்.

''எனக்கு ஒர பையன் இருந்தான். அவனும் இன்னியோட செத்துட்டான். இப்ப எனக்கு யாருமில்லை. உங்க பெண் வாழ்க்கைக்கு என்ன வழி உண்டோ நீங்க பாத்துக்குங்க.'' கத்தரித்து பேசிவிட்டு போனையும் கட் பண்ணினார் ரகுநாதபூபதி.

பிறகு பலமுறை விஸ்வநாதனும் சுதியும் தொடர்பு கொண்ட போதும் பேச மறுத்துவிட்டார்.

சுதி பொருமினாள். ''பாத்தீங்களாப்பா. கல்யாணமானதிலிருந்து ஒருமுறை கூட மகனையோ, மருமகளையோ வந்து பார்த்ததில்லை. அவராக போன் பண்ணி ஒரு வார்த்தை பேசியதில்லை. பிறந்ததிலிருந்தே குமார் கவனிப்பாரற்ற பிள்ளை. நல்லா படிக்கும் போது கொண்டாட தோணலை. தப்பு செய்யும் போது மட்டும் கண்டிக்க தோணுது. குமாரின் வித்தியாசமான நடத்தைக்கு இந்த நிலைக்கு தானும் ஒரு காரணம் என்ற குற்ற உணர்வு கூடவா ஒரு மனுஷனுக்கு இருக்காது?''

''அத்தோடவாம்மா! பையனை தலைமுழுகிட்டேன்னு சொல்றாரே, இதனால பாதிக்கப்படறது மகனோட வாழ்க்கை மட்டும்ல்ல ஒரு பெண்ணோட வாழ்க்கையும் வீணாகறதுக்கு நாமே வழி பண்ணிட்டோம்னு யோசித்தாரா சுதி? உங்க பொண்ணு வாழ்க்கைக்கு வழி பாத்துகுங்கன்னு சொல்றாரே, இனி என்ன வழி காட்ட முடியும் என்னால்?'' விஸ்வநாதன் சோகத்தில் அமைதியானார்.

''கிடக்கிறார் விடுங்கப்பா. அவர் மகனைப் பற்றியே கவலைப்படாதவர், இன்னொருவர் மகளைப் பற்றி நினைக்கப் போகிறாரா?'' தேற்றினாள் சுதி.

விஸ்வநாதன் பதில் சொல்லாமல் இருக்கவும் அவர் தோளில் கை வைத்து 'அப்பா' என்றாள் சுதி. "கஷ்டங்கள் வரும்போது அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும், ஒருநாள் மறைந்து போகத்தான் வேண்டும். அப்படி மறைந்து போனபின் இப்போதுள்ள பிரச்சனைகள் எல்லாம் தூசியாய் தெரியும். வாழ்வில் எல்லோருக்கும் இக்கட்டான நிலை என்று ஏதாவது ஒருசமயம் வரும். நமக்கு இப்ப வந்திருக்கு. அவ்வளவுதான். இதற்காக மனம் தளராதீர்கள். மனசு உடம்பை பாதிக்கும்படி விட்டுவிடக் கூடாது" என்றாள் சுதி.

விஸ்வநாதன் இதழ்களில் வறட்சியான புன்முறுவல் ஒன்று தோன்றியது. "எனக்கு மறுபடி அட்டாக் வந்துடுமோன்னு பயப்படறியாமா? நிச்சயம் வராது. கவலைப்படாதே. என் மகளுக்கு இப்போது இருக்கும் ஆதரவு நான் மட்டும்தான். இந்த சங்கடமான சூழ்நிலையில் அவளுக்கு துணை நிற்க என் உடல் ஆரோக்கியமாய் இருப்பது அவசியம். அதனால் கண்டிப்பாய் உடம்பைப் பார்த்துக் கொள்வேன்."

மறுநாள் வந்த வக்கீல் டி.எஸ்.பி. மூலமாய் குமாரை சந்திக்க செய்த முயற்சி பலனளிக்கவில்லை. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று சொன்னார். கேஸ் பைல் பண்ணினப்புறம் நடப்பதை வைத்து அடுத்து முடிவெடுக்கலாம் என்றார்.

விஸ்வநாதன் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு ஒரு முடிவெடுத்தவராய் லாயரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு மந்திரி மருதநாயகத்தைப் பார்க்கப் போனார். எப்போதும் போல் சரளமாக உள்ளே போக கால் தயங்கியது. சிறிது நேரம் காத்திருந்து அவரை பார்த்து குமாரைப் பற்றிப் பேசினார் விஸ்வநாதன்.

"நான் இதில் என்ன செய்ய முடியும் விஸ்வநாதன்?"

"குமாருக்கும் இந்த கடத்தல் கும்பலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை மருது. விஷயம் தெரியாமல் எப்படியோ போய்



மாட்டிக் கொண்டு இருக்கிறான். நீதான் எப்படியாவது முயற்சி செய்து வெளியே கொண்டு வர வேண்டும்."

முடியாதென தலையை அசைத்தார் மருதநாயகம். "பணத்திருட்டு கேசாகவோ, பைனான்ஸ் கம்பெனி விவகாரமாகவோ, ஏன் கொலையே பண்ணி இருந்தாலும் கூட நான் வெளியே கொண்டு வந்திருப்பேன். இது தேசிய குற்றம். இதில் குமாருக்கு ஆதரவாக ஒரு விஷயம் செய்தால், ஏன் குமார் என் நெருங்கிய உறவினன் என்று தெரிந்தால் கூட போதும் 'ஆயுத கடத்தல் கும்பலுடன் மந்திரிக்கு தொடர்பு' என பத்திரிகைகளில் செய்தி வந்துவிடும். எதிர்க்கட்சிகள் விமர்சிக்கத் தொடங்கினால் என் பதவி மட்டுமல்ல. ஆட்சியே கவிழக் கூடும். அதனால் இனி நீங்கள் இப்படி பார்க்க வருவது கூட வேண்டாம். தவறாக நினைக்க வேண்டாம். என் சூழ்நிலை அப்படி" என்றார் மருதநாயகம்.

பதில் பேசாது எழுந்து நின்ற விஸ்வநாதனின் கைகளை பற்றிய மருதநாயகம் 'விஸ்வநாதன் நான்தான் இந்த பையனை பற்றி சொல்லி இந்த கல்யாணத்தை முடித்து வைத்தேன். கௌரவமான குடும்பம் என்றுதான் நினைத்தேன். அவங்கப்பாவிடம் அவ்வளவு பணம் கொட்டிக் கிடக்கு. உங்களுக்கு மட்டும் வசதி குறைவா என்ன? இந்த பையன் ஏன் இப்படி ஒரு திசையில் போனான்? உண்மையிலேயே எனக்கு வருத்தமாக இருக்கிறது. இந்த கேசிலிருந்து வெளியே வருவது சாதாரண விஷயம் அல்ல. நான் சொல்வதை தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். சுதி சின்ன பெண்தான். மணமாகி இன்னும் ஒரு வருடம் கூட ஆகவில்லை. கர்ப்பமாகவும் இல்லை. கையில் நல்ல வேலையும் சொத்தும் இருக்கிறது. குமார் வெளியே வந்தாலும் தீவிரவாத முத்திரை அவனை விட்டுப் போகாது. இனி வாழ்நாள் முழுதும் அவன் சுதிக்கு ஒரு பாரமாகவே இருப்பான். அதனால் நீங்களும் சுதியும் அவனுக்காக அலைவதை விடுத்து குமாரை விவாகரத்து செய்யச் சொல்லுங்கள். சில மாதங்கள் கழித்து சுதிக்கு அவளைப் போலவே டாக்டர் மாப்பிள்ளை

யாய் நம் அருகிலேயே இருப்பவனாய் பார்த்து திருமணம் செய்து விடலாம். இந்த காலத்தில் சின்ன சின்ன காரணங்களுக்காக எல்லாம் விவாகரத்துக்கு கோர்ட்டுக்கு போகிறார்கள். அதனால் நீ தயங்கவே வேண்டாம். ரகுநாத பூபதியே மகனை கைகழுவி விட்டார். பெற்றவர், அவருக்கு இல்லாத அக்கறை உனக்கு எதுக்கு?'' என்றபடி விடை கொடுத்தார்.

## 33

வீட்டிற்கு வந்ததும் ''மருதநாயகம் என்ன சொன்னார்ப்பா?'' என்ற சுதியிடம் உதட்டை பிதுக்கி தலையை அசைத்தார் விஸ்வநாதன்.

''அதனால் என்ன வேறு வழி கிடைக்கும், பார்க்கலாம்.'' என்றாள் சுதி நம்பிக்கையுடன்.

சிறிது நேரத்தில் அந்த வழி தானாகவே கதிரவன் மாலதி உருவத்தில் தேடி வந்தது. நிறைமாத வயிற்றுடன் சுதியை அணைத்துக் கொண்ட மாலதி எதுவும் பேசத் தோன்றாமல் கண்கலங்கினாள்.

விஸ்வநாதனிடம் இதுவரை நடந்த விபரங்களை கேட்டுக் கொண்ட கதிரவன், ''சுதி அண்ணான்னு நீ கூப்பிடறது வெறும் வாய் வார்த்தைதான் போல. இவ்வளவு பிரச்சனை நடந்துட்டு இருக்கு. நானும் ஒரு வக்கீல்னு நினைவு வந்ததா உங்களுக்கு?'' என படபடத்தான். விஸ்வநாதன் சொன்னார். ''எங்களுக்கு என்ன பேசறது, என்ன செய்யறதுன்னு ஒண்ணுமே புரியலப்பா. என் கம்பெனி லாயர் சுப்பாராவ்தான் ஸ்டேசனில் விசாரித்து விட்டு வந்து கேஸ் சிக்கல். இப்ப குமாரைப் பார்ப்பது கஷ்டம் என்று சொன்னார். நான் எங்க உறவினர் மினிஸ்டர் மருதநாயகத்தைப் போய்ப் பார்த்தேன். அவரும் இதில் தலையிட விரும்பவில்லை. இனி யாரிடமும் உதவி கேட்கிற தைரியமும் போய்விட்டது.''

''அங்கிள் நீங்க எங்கிட்ட உதவி கேட்க எந்த சங்கடமும் படக்கூடாது. நான் புதிய ஆளா உங்களுக்கு? என்னை சின்ன



வயசுல இருந்து பார்க்கறீங்க இல்ல? சின்ன வயசுல யுடன் சுதியுடனும் விளையாடி, சாப்பிட்டு விட்டு இங்கேயே எத்தனை முறை தூங்கிப் போயிருக்கிறேன்! எனக்கு சுதி கூட பிறக்காவிட்டாலும் தங்கைதான். அவளுக்கு செய்யாமல் யாருக்கு செய்யப் போகிறேன்?'' என்றான் உணர்ச்சியுடன்.

விஸ்வநாதனும் சுதியும் சிலிர்த்துப் போனார்கள். எப்போதுமே அவன் மேல் உள்ள மதிப்பு இன்னும் அதிகரிக்க, சுதி பேசாமல் அமைதியாய் நின்றிருந்தாள்.

''அங்கிள் குமாரை பார்க்க முதலில் முயற்சி செய்கிறேன். கேஸ் விபரம் அப்புறம் பார்க்கலாம். நீங்க கவலைப் படாதீர்கள். நான் பேசிப் பார்த்து விட்டு உங்களுக்கு போன் பண்ணுகிறே '' என்றபடி மாலதியுடன் விடை பெற்று போனான் கதி வன். கதிரவன் வெளியே வரும்போது உள்ளே நுழைந்தான் ரவி. கேட் அருகே சந்தித்துக் கொண்ட இருவரும் குமார் பற்றிய விபரங்களை பரிமாறிக் கொண்டார்கள். பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த மாலதி சொன்னாள். ''குமார் கேஸ் என்னவாகும்? வெளியே வருவானா இல்லையா என்ற சிக்கல் ஒருபுறம். அதற்கான அலைச்சல், பணச்செலவு, மன கஷ்டம் மறுபுறம் என விஸ்வநாதன் அங்கிளைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. சுதியை நினைத்துப் பாருங்கள், அவளது பிரச்சனை இது மட்டுமல்ல. நம்மைப் போல எத்தனைப் பேரை தினமும் சந்தித்தாக வேண்டும்? தெரியாமல் கேட்பவர்களும், தெரிந்து கொண்டே வம்பு பேசுபவர்களையும் சமாளித்தாக வேண்டும். பத்திரிகை செய்திகளை படித்து விட்ட அக்கம் பக்கம் உள்ளவர்கள் பார்க்கும் பார்வையில் தானாக மனம் கூசி விடும். அவளுடைய நோயாளிகளுக்கே அவளிடம் மதிப்பு குறையக்கூடும். சுதியைப் போல எல்லாவகையிலும் நேர்மையான ஒரு பெண், வாழ்வில் தவறான ஒருவனுடன் இணைந்ததின் விளைவை எப்படி சமாளிக்கப் போகிறாள் என்று தெரியவில்லை. உண்மையான கவலையுடன் மாலதி சொன்னதும் அங்கே ஒரு புரிந்து கொண்ட மௌனம் நிலவியது.

கதிரவன் கிளம்பிப் போனதும் உள்ளே வந்த ரவி சம்பிரதாயமான ஆறுதல் வார்த்தைகள் எதுவும் சொல்லாமல், தெரிந்த விஷயத்தையே மறுபடி பேசி அவர்களை டென்சன் ஆக்காமல் அமைதியாக சுதியின் அருகே அமர்ந்திருந்தான். கிளம்பும் போது விஸ்வநாதனிடம் "அங்கிள் எந்த நேரமும், என்ன செய்ய வேண்டுமானாலும் என்னை கூப்பிடுங்கள். நான் நாளை ஒரு செமினாருக்கு டெல்லி போக வேண்டியிருந்தது. அதை கேன்சல் செய்து விட்டேன். அதனால் என்னை தொல்லை செய்ய தயங்காதீர்கள். எப்பவும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்பதை மறந்து விடாதீர்கள்" என வலியுறுத்திவிட்டு கவலையுடனேயே போனான்.

சுதி ஒருவாரம் மருத்துவமனைக்கு விடுப்பு சொல்லி விட்டு வீட்டில் இருந்தாள். நான்கு நாள் கழித்து கதிரவன் போன் செய்தான். "காவல்துறையில் தெரிந்தவர்களிடம் பேசிப் பார்த்தேன் சுதி. ஜாமீனில் வருவது இப்போதைக்கு கஷ்டம். ஆனால் பார்க்க அனுமதி வாங்கியிருக்கிறேன். நீயும் அப்பாவும் உங்க கம்பெனி வக்கீல் சுப்பாராவையே துணைக்கு அழைத்துக் கொண்டு போய்ப் பார்த்துட்டு வாருங்கள். எனக்கு இன்னிக்கு கோர்ட்ல முக்கியமான கேஸ் ஒண்ணு விசாரணைக்கு வருது. அதனால் என்னால் கூட வர முடியாது" என்றான்.

## 34

கதிருக்கு நன்றி சொல்லிவிட்டு வக்கீலுடன் கிளம்பினார்கள். போய் பார்மலிட்டீஸ் எல்லாம் முடிந்த பிறகு உள்ளேயிருந்து குமாரை அழைத்து வந்தார்கள். அவனை அடையாளம் கண்டு கொள்ளவே சிறிது நேரமாயிற்று அவர்களுக்கு. ஆளே மாறிப் போயிருந்தான். கன்னங்களின் செழுமை வற்றிப் போய் எலும்பு தெரிந்தது. ஆளை அசத்தும் பளீர்நிறம் மங்கிப்போய் முகத்தில் சுருக்கங்கள் தெரிந்தன. புலியைப் போல் மின்னும் கண்கள் யாரையும் பார்க்கும் துணிவின்றி எங்கோ வெறித்தன. நான்கு நாளில் நாப்பது



வயது அதிகமாகி தளர்ந்து போயிருந்த குமாரைப் பார்க்கையில் மனம் பதறியது சுதிக்கு. ஆதரவற்ற குழந்தையைப் போல் மிரட்சியுடன் நிற்கும் அவனைப் பார்க்கையில் மனைவி என்பதே மறந்து போய் தாயாய் மாறி அவனை அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

எண்ணங்களுக்கு சக்தி உண்டு என்பது உண்மைதான் போலும். கொஞ்ச நாட்கள் உன்னை பிரிய நினைத்தேன். என் நினைப்பில் ஏதோ இருந்திருக்க வேண்டும். என்னிடமிருந்து உன்னை பிரித்து இங்கே கொண்டு வந்து தள்ளிவிட்டதே! எப்போதும் குரோதத்துடன் என்னைப் பார்க்கும் உன் கண்கள் ஒருநாள் கனிவுடன் சிரிக்கும் என்று நம்பியிருந்தேன். இப்போது யாரையும் பார்க்காமல் தலைகுனிந்து நிற்க வேண்டியதாகி விட்டதே! எதைத் தேடி எங்கே ஓடி இங்கே வந்து நிற்கிறாய்? உனக்கு வாழ்வில் சகலத்தையும் தர நான் சித்தமாக இருக்கையில் எடுத்துக் கொள்ள தெரியாத முட்டாள் நீ. குமார் ஒரு கோல்டு மெடலிஸ்ட். ஜமீன் பரம்பரை வாரிசு. டாக்டரின் கணவன். இனி? எதிர்காலம் உனக்கு பெயரிடும்?

மனத்திற்குள்ளேயே புலம்பியபடி பார்வையை குமாரை விட்டு இம்மியும் நகர்த்தாமல் நின்று கொண்டிருந்தாள் சுதி.

விஸ்வநாதன் குமாரின் அருகே சென்று 'என்ன நடந்துதுன்னு நம்ம வக்கீல்கிட்ட விபரமா சொல்லுங்க. பயப்படாதீங்க' என்றார்.

வக்கீல் குமாரின் தோளைத் தட்டினார். "சொல்லுங்க தம்பி. எப்படி உங்களுக்கு அந்த சர்வதேச கும்பலுடன் தொடர்பு ஏற்பட்டது. என்னென்ன பொருள் கடத்துவாங்க? அவங்க ஆட்கள் எங்கே இருக்காங்க? அந்த பிரசாத்துடன் உங்களுக்கு எவ்வளவு நாளாய் பழக்கம்? உங்களுக்கு எவ்வளவு பணம் கொடுப்பாங்க? வழக்கமா எப்படி பொருளை பேக் பண்ணி கொண்டு போவீங்க? வக்கீல்கிட்டயும் டாக்டர்கிட்டயும் மட்டும் உண்மையைத்தான் சொல்லணும். எதுவானாலும் சொல்லுங்க."

பதில் பேசாது நின்றான் குமார்.

''தம்பி நாங்க உங்களுக்கு உதவி செய்யத்தான் வந்திரு கோம். நீங்க வாயைத் திறந்து சொன்னால்தான் எங்களா எதுவும் செய்ய முடியும்.''

விஸ்வநாதனும் வக்கீலும் எத்தனை வற்புறுத்தியும் குமா வாயே திறக்கவில்லை.

ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அதுவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வார்டன் சொன்னார். ''வந்தநி லிருந்து இப்படியேதான் இருக்கு. யார்கிட்டயும் ஒரு வார்த்தை பேசல. போலீஸ் எத்தனை கேட்டும் பதிலே சொல்லல. பெரிய இடத்து பையன். செஞ்ச தப்பு வெளிே தெரிஞ்சிடுச்சேன்னு அவமானம் போலிருக்கு. மான அவ மானத்துக்கு பயந்தவங்க தப்பு பண்ணக்கூடாது இல்லையா? செய்யறது எல்லாம் செஞ்சிட்டு இப்ப வருத்தப்பட்டு என்ன செய்யறது?'' அவர் முடிக்கும் முன் சுதி குறுக்கிட்டாள். ''என்ன ஸார் தப்பு செஞ்சதை நேர்ல பாத்த மாதிரியே பேசறீங்க! நீங்க பாத்தீங்களா அவர் கடத்தியதை? தான் என்ன வேலை செய்யறோம்னு தெரியாமயே யாரோ விரிச்ச வலையில் மாட்டிக்கிட்டார். குமாருக்கு கோபப்பட தெரியும். கத்தத் தெரியும். சண்டை போடத் தெரியும். ஆனா தப்பு பண்ண தெரியாது. துரோகம் செய்ய வராது. அந்த குணம் தெரிஞ்சுதான் பிரசாத் ஏமாற்றியிருக்கிறான். இன்னொரு முறை என் காதுபட குமாரை ஒரு வார்த்தை பேசக்கூடாது நீங்கள்'' வழக்கத்திற்கு மாறாய் சுதி கோபத்துடன் படபடக்க அங்கிருந்த அனைவரும் வாயடைத்துப் போய் நின்றனர்.

குமார் மெதுவாய் திரும்பினான். முதல்முறையாய் சுதியைப் பார்த்த கண்களில் இனம் விளங்காத உணர்ச்சி ஒன்று தோன்றி மறைந்தது. உயரமான ஜன்னல் வழியாய் வெய்யில் முகத்தில் பட அவன் கண்களில் ததும்பிய ஒரு சொட்டு நீர் சூரிய ஒளியில் வைரமாய் மினுமினுத்தது. சுதிக்கு உடல் ஒருமுறை சிலிர்த்து அடங்கியது. ஒரு நொடியில் உயிர் கூடுமாறி விட்டாற் போலிருந்தது.

ஓடி அவனருகே போய் 'நானிருக்கிறேன்' என்று ஒரு வார்த்தையேனும் சொல்ல வேண்டும் என அவனை நோக்கி



நகர்ந்த போது, குமார் திரும்பி உள்ளே நடந்தான். வக்கீலும், விஸ்வநாதனும் ''குமார்... குமார்...'' என சத்தியதை காதிலேயே வாங்காமல் வேகமாய் உள்ளே சென்று மறைந்தான்.

திரும்பி போகும்போது வக்கீல் ''குமாரின் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் நமக்கு இன்னும் சிரமம்'' என்றபடி இறங்கிக் கொள்ள மற்ற இருவரும் அமைதியாய் வீட்டிற்கு வந்தனர்.

# 35

சாப்பிட சொல்லி விடாது கெஞ்சிய சரஸ்வதிக்காக கையை நனைத்த இருவரும் அவரவர் அறைக்கு சென்று அடைந்து கொண்டனர். வீட்டில் பயங்கர மௌனம் நில வியது. கட்டிலில் தலையை சாய்த்த சுதிக்கு குமாரின் பார்வையே நினைவுக்கு வந்தது. என்ன பார்வை அது? என்ன இருந்தது அதில்? நன்றியுணர்ச்சியா? மன்னிப்பா, தாழ் வுணர்ச்சியா? காப்பாற்றேன் என்று அடைக்கலமா? எதுவா யினும் இன்று பார்த்த குமார் புதியவன். இதுவரை பார்க்காத வன் என்று தோன்றியது.

சரஸ்வதி ஒவ்வொரு கோவிலாக ஏறி இறங்கிக் கொண் டிருந்தாள். தினம் ஒரு யாகமும் பூஜையுமாக புரோகிதர்களால் வீடு அமர்க்களப்பட்டது. யார் புதிதாக என்ன விரதம் சொன் னாலும் அதை கடைபிடிக்க ஆரம்பித்தாள். முருகனுக்கு தினம் பாலும் தேனுமாய் அபிஷேகம் செய்தாள். ஜெயிலி லிருக்கும் மருமகனை அவர் கண்டிப்பாய் கை பிடித்து அழைத்து வந்து விடுவார் என்று உறுதியாக நம்பினாள். கோவிலும் பூஜையும் போக எஞ்சிய நேரங்களில் ஜோதிடர் களை கூட்டி வைத்து ராகுவும் கேதுவும் எப்போது வீடு மாறுவார்கள் என்று ஆலோசனை நடத்திக் கொண்டிருந் தாள். திருமணமானதிலிருந்து அதிகமாய் பேசியே அறியாத மருமகனிடம் இவளுக்கு இத்தனை பிடிப்பா? அல்லது பெண்ணின் வாழ்க்கை அவள் கணவன் கையில் தான் என்ற மரபில் ஊறிப் போனதாலா? என்று யோசித்தாள் சுதி.

விஸ்வநாதனும் கதிரும் ஸ்டேட் கவர்மெண்ட் மற்று
சென்ட்ரல் மினிஸ்டரியின் அத்தனை கதவுகளையும் தட்
ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தனர். மாலதியின் பிரசவ
நேரத்தையும் மறந்து கதிர் அவருடன் அலைந்து கொ
டிருந்தான். சுதி வழக்கம் போல் மருத்துவமனை வேலைக
எதையும் விடாமல் செய்து கொண்டிருந்தாள். முதல்நா
தயங்கிய அப்பாவிடம் ''என்னிக்கிருந்தாலும் நான் போயு
தானே ஆகணும். அது இன்னிக்கா இருக்கட்டுமே. வீட்
லேயே இருக்க முடியாதில்லையா?'' என்றாள்.

இந்த நிமிடம் வரையிலும் கலங்காமல், கண்ணீர் விட
மல், சுயபச்சாதாபத்தில் கரைந்து போகாமல் எல்லோருக்கு
தேறுதல் சொன்னபடி இருக்கும் மகளைப் பார்த்து அசந்து
போனார் விஸ்வநாதன். வழக்கம் போல் பெருமிதத்துடன்
பார்த்தவர் என் பார்வையே இப்போது சாபமாகிவிட்டது என
மனதிற்குள் கலங்கினார்.

மருத்துவமனையில் சுதி எப்போதும் போலவே சகஜமாக
இருந்துவந்தாள். முகம் கவலைக்காட்டவில்லை எனினும்
சிரிப்பும் விளையாட்டும் நின்று போயிருந்தது. அவளிடம்
எல்லோரும் குமார் பற்றிய பேச்சை கவனமாக தவிர்த்தனர்.
அந்த அதிகப்படி கவனம் தன் மீதுள்ள பிரியத்தால் என்
றுணர்ந்த போது சுதிக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. செல்
லம்மா தினம் ஒரு விபூதிப் பொட்டலம் மஞ்சள் குங்குமத்
துடன் வருவாள். 'காளியாத்தாளுக்கு வேண்டிக்கிட்டேன்.
மாரியம்மனுக்கு வேண்டியிருக்கேன்' என்பாள். அவள்
திருப்திக்காக திருநீரை அவைத்துக் கொள்ளும் சுதி, 'இந்த
திருநீரை விட செல்லம்மா நம்மேல் செலுத்தும் அபிமானத்
திற்கு சக்தி அதிகம்' என்று நினைத்துக் கொண்டாள். டாக்டர்
சுகுமார் கூட அவளிடம் தனது வழக்கமான கத்தல்களை
நிறுத்திவிட்டிருந்தார். பார்க்கும் போதெல்லாம் ஒரு அமைதி
யான தலையசைவுடன் எதிர்கொண்டார். மனிதர்களை புரிந்து
கொள்ளவும் வேளை வரவேண்டும் போலும்.

ரவி தினமும் வீட்டிற்கு வந்து போய்க் கொண்...



சரஸ்வதிக்கு ஆறுதலாகவும் விஸ்வநாதனிடம் குமாரின் கேஸ் பற்றிய விபரங்களையும் கேட்டுக் கொண்டிருப்பான்.

அன்று ரவியும், ரமாவும் மாலையில் வந்த போது சுதியும், விஸ்வநாதனும் லானில் அமர்ந்திருந்தனர். பைக்கிலிருந்து இறங்கிய இருவரும் இவர்களைப் பார்த்து விட்டு நேராய் லானுக்கு வந்தார்கள். சுதி டீக்காக உள்ளே செல்ல முற்பட்டதும் ரமா எழுந்தாள். ''நீங்க உட்கார்ந்து பேசிட்டு இருங்க சுதி. நான் உள்ளே போய் அம்மாவை பார்த்து பேசிட்டு டீ போட்டு கொண்டு வருகிறேன்'' என்று உள்ளே போனாள்.

''விஷயம் எந்த அளவில் இருக்கிறது?'' என்றான் ரவி இருவருக்கும் பொதுவாக.

''குமார் மேல தப்பில்லைங்கறது வரை தெரியுது. என்ன தான் தெளிவா தெரிஞ்சாலும் கோர்ட்டுக்கு ஆதாரங்கள் வேணுமே! போலீஸ் விசாரிக்கறது இல்லாம நாங்களும் விசாரணையில் இறங்கி இருக்கிறோம். பிரசாத் வாக்கு மூலத்தில் தான் கொடுத்த பார்சல்களில் உள்ள பொருள் பற்றிய விபரம் குமாருக்கு தெரியாது. நான் அவனை எனக்கு சாதகமாய் உபயோகித்துக் கொண்டேன் என்று உண்மையை சொன்னால் குமார் வெளியே வந்து விடலாம். கதிரவன் அவருக்கு தெரிந்த போலீஸ் அதிகாரிகள் மூலமாய் பிரசாத் திடமிருந்து உண்மையை வரவழைக்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறார்'' என்றாள் சுதி.

அலுப்புடன் சூள் கொட்டினார் விஸ்வநாதன். ''பிரசாத் இதையே தொழிலாக செய்யும் கிரிமினல் குற்றவாளி. அவனிடமிருந்து உண்மையை எப்படி எதிர்பார்க்க முடியும்? அப்படியே குமார் வெளியே வந்தாலும் அடுத்து அவனது நிலை என்ன? யார் நம்பிக்கையாய் வேலை தருவார்கள்? தொழிலோ அல்லது ஒரு பெட்டிக்கடை வைத்தாலும் கூட நம்பிக்கையும், நாணயமும் கெட்டுப் போனால் வியாபாரம் செய்ய முடியாது. போலீஸ் முத்திரையுடன் வெளியே வரும் குமார் இறுதிவரை உனக்கு பாரமாகத்தான் இருப்பான்.

இருபத்தி ஏழு வருடம் வளர்த்த பெற்றோரே சுமக்க இ படாத போது சில மாதங்கள் கூட இருந்த நீ வாழ்நாள் பூ சுமக்கப் போறியா?''

''அப்பா நீங்களா இப்படி பேசறீங்க?'' சுதியால் நம் முடியவில்லை.

''பின்ன என்னம்மா, நீ அவனை திருமணம் செய் கொண்டு என்ன சந்தோஷத்தை அனுபவித்தாய்? எங்கள யாவது ஒருநாள் மதித்து பேசியிருப்பானா? நீங்க இருவரு ஒன்றாக அமர்ந்து சிரித்து பேசி நாங்க யாரும் பார்த்த இல்லை. அன்பால் உலகத்தையே வெல்லலாம்னு செ வியே; அவனை வெல்ல முடிந்ததா உன்னால்? அன்னிக்கு ஜெயிலில் பார்க்க போனோமே உங்கிட்ட ஒரு வார்த்தை பேசின்னானா? நாங்க கேட்டதுக்குத்தான் பதில் சொன்னானா? அவனுக்காக நாம ஏன் முட்டி மோதி ரணப்படணும்?''

இத்தனை நாள் அலைந்த அலைச்சலில், மருமகனின் விட்டேறித்தனத்தில் விஸ்வநாதன் விரக்தியடைந்திருந்தார். தகுதியற்ற ஒருவனால் மகள் வாழ்வு வீணாவதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை அவரால்.

''அப்பா உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? குமார் அரஸ்ட் ஆகிற அன்னிக்கு காலையில நான் அவனை விட்டு கொஞ்ச நாள் விலக நினைச்சி பெட்டிய தூக்கிட்டு கிளம் பினவதான். ஆனா குமாரை ஜெயில்ல பார்த்தப்புறம் தான் அந்த தற்காலிக பிரிவு கூட தப்புன்னு தோணிப் போச்சு, குமாரை நான் ஜெயிக்க முடியலேங்கறதுதான் உங்க வருத்த மாப்பா? எனக்கு பிடிச்ச உணவையே அவனும் சாப்பிட்டா, எனக்கு பிடிச்ச மாதிரியே நடந்துகிட்டா நா அவனை ஜெயித்ததாய் அர்த்தம் இல்லை. எதிராளியின் கோபத்தை நம் பொறுமையால் வெல்லணும். அவர்களது வெறுப்பை நம் மன்னிப்பால் வெல்லனும். பலவீனத்தை தன் அன்பாலும், தப்பை தன் புன்னகையாலும் வெல்கிறவர்களுக்கு வாழ்வில் வருத்தம் என்பதே இல்லை. எதை தோல்வி என்று நினைக்கத்



தொடங்குகிறோமோ அங்கே சந்தோஷம் இருக்காது. தோல்வி மனிதனுக்கு எதன் மூலமாகவும் வரலாம். அது தீர்க்க முடியாத நோயாக இருக்கலாம். தடுக்க முடியாத கோபமாக இருக்க லாம். அவற்றை வென்று விட்டால் வாழ்க்கையில் என்றுமே திருப்திதான். அதிருப்தியே ஏற்படாது.''

விஸ்வநாதன் மகளின் பதிலில் அடிபட்ட பாவனையில் ரவியைப் பார்த்தார். நீ சொல்லேன் என்ற கெஞ்சல் அதில் தெரியவும், ரவி சுதியிடம் சொன்னான்.

''சுதி நீ தத்துவ வேதாந்த புத்தகங்களில் படித்த நெறிமுறைகளை எல்லாம் வகுத்துக் கொண்டு வாழ்க் கையை ரொம்ப சிக்கலாக்கிக்கற. எப்பவும் பிறருக்கு பயந்தே வாழ்ந்து பழக்கப்பட்ட நடுத்தர குடும்பங்களில் கூட பெண்கள் இப்ப சர்வ சாதாரணமா கோர்ட் படி ஏறுறாங்க. குமாரை உனக்கும் முன்பே எனக்கு தெரியும். உங்கிட்ட குமார் வாழ்ந்த வாழ்க்கையும் அப்பாவை விட எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் சொல்கிறேன். அர்த்தமற்ற தாம்பத்யத்தி லிருந்து விடுபடும் உரிமை உனக்கு கண்டிப்பாக உண்டு. இத்தனை வருட படிப்பு உனக்கு இந்த அடிப்படை உரி மையை கூடவா சொல்லித் தரல? உன்னுடைய எத் தனையோ முயற்சிகளுக்கும், பிரயத்தனங்களும் பதிலாக அவன் ஒருதரம் என் மனைவி என் மீதுள்ள அன்பால் இதை செய்கிறாள் என்று சொல்ல வேண்டாம், மனதில் நினைத்துப் பார்த்தால் கூட போதும். நீ செய்வது சரி என ஒத்துக் கொள்ள லாம். எந்த பண்புமின்றி வெறும் மூர்க்கத்தனம் மட்டுமே கொண்டவனிடம் எதை எதிர்பார்த்து இப்படியொரு அன்பு செலுத்துகிறாய்?

உனக்காக உன் பெற்றோரும், உன் கையால் குணமடைய எத்தனையோ நோயாளிகளும் காத்திருக்காங்க சுதி. பாய்ந்து வரும் நதி, வறண்ட நிலங்களை செழிப்படையச் செய்ய வேண்டுமே தவிர கடலில் கலப்பதால் யாருக்கு என்ன பயன்? நீ நதியைப் போன்றவள் சுதி. யாருக்கும் பயன்படாத குமார் மாதிரி கடலில் கலந்து நீயும் உப்பாகிவிடாதே. மனதை

கட்காமல் மூளையைக் கேட்டு அறிவின் சொற்களுக்கு காது கொடு.''

''ரவி நீயும், அப்பாவும் என் மீதுள்ள அபரிமிதமான அன்பால்தான் பேசுகிறீர்கள். எனக்கு தெரிகிறது. இதுவரை நான் படித்த படிப்பு எனக்கு அறிவை மட்டும்தான் தந்தது. திருமணத்திற்கு பின்னான என்னுடைய அனுபவங்கள் தான் என்னை பக்குவப்படுத்தின. நான் அன்பு செலுத்தறேன். நீ திரும்பி என் மீது அன்பாயிருங்கறது வியாபாரம் ரவி. நீ எப்படியோ தெரியாது. நான் உன் மீது உயிரையே வெச்சிருக் கேன்னு சொல்றதுதான் தாம்பத்யம். 'மனிதனின் தவறுகளை மன்னிக்க தெரிந்தவன்தான் காதலிக்கலாம்' என்றார் கலீல்ஜிப்ரான். பெண்ணியத்தின் இந்த மன்னிக்கும் பண்பே எந்த காதலுக்கும் அடிப்படை என்பது சிறையில் குமாரின் கண்களை சந்தித்த போதுதான் எனக்கு புரிந்தது. இத்தனை மாதங்களில் குமார் என் அருகில் நெருங்கும் சமயங்களில் ஏற்படாத சிலிர்ப்பு அன்று குமாரின் பார்வையில் ஏற்பட்டது. தான் எரிந்த சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போல குமார் தன் தவறுகளிலிருந்து மீண்டெழுந்து வரு வான். அதற்காக என்னோடு சேர்ந்து நீங்களும் உறுதுணை யாய் நிற்க வேண்டுமே தவிர''.... மேற்கொண்டு பேச முடியாமல் குரல் தழுதழுத்தது. கண்கள் பனிக்க விஸ்வ நாதன் சுதியை அணைத்துக் கொண்ட போது, ரவியின் கண்களும் கலங்க ஆரம்பித்தது.